# காந்தி பற்றி ஜெயமோகன்

எனக்கு காந்தி என்ற தலைவர் மீது மிகுந்த பிரமிப்பு உண்டு. அவரால் எப்படி ஒரு பெரும் ஜனக் கூட்டத்தை கட்டுப்படுத்த முடிந்தது? அவர் அந்த கூட்டத்துக்கு அவர் அப்படி என்ன கொடுத்துவிட்டார்? அவரால் கொடுக்க முடிந்தது எல்லாம் சிறைவாசம்; அவர்களது சவுகரியமான சமூக வாழ்வில் மாற்றம்; ஜாதி வித்தியாசம் பார்க்காதே, மலம் அள்ளு, கிராமத்துக்கு போய் சேவை செய், படிப்பை, நல்ல பணம் தரும் தொழிலை விடு என்ற கஷ்டமான உபதேசங்கள்; சாதாரண மனித இயல்பிலிருந்து மாறி நடக்க வேண்டிய கட்டாயம், அடித்தால் வாங்கிக் கொள் என்ற கோட்பாடு; இதை எல்லாம் செய்தால் உங்களுக்கு என்றாவது சுதந்திரம் கிடைக்கலாம் என்ற ஒரு மங்கலான கனவு. இதை வைத்து அவர் எப்படி பெரும் கூட்டத்திடம் உற்சாகத்தையும் சலிப்பில்லாமல் உழைப்பதையும் ஏற்படுத்தினார்? ((இந்த பிரமிப்பை பற்றி ராஜேந்திர பிரசாத் எழுதிய At the Feet of Mahatma Gandhi பதிவிலும் எழுதி இருக்கிறேன்.)

எனக்கு காந்தி என்ற சிந்தனையாளர் மீது மரியாதை உண்டு, ஆனால் அந்த சிந்தனையாளரைப் பற்றி அவ்வளவு தெரியாது . அஹிம்சை என்ற ஒரு கோட்பாடு ஒன்றே போதும் மரியாதை வர. அவர் கிராமங்கள் பற்றி சொன்னவை இன்று கொண்டாடப்படும் ஷூமாகர், ரேச்சல் கார்சன், ஃபுகுவோகா போன்றவர்களின் எண்ணங்களை ஓரளவு ஒத்திருக்கின்றன. அவரது பொருளாதார சிந்தனைகளை புரிந்து கொண்டவர் ஜே.சி. குமரப்பா ஒருவர்தான் என்று நினைக்கிறேன். குமரப்பா சுதந்திர இந்தியாவில் பொருட்படுத்தப்படவே இல்லை. அது சரி காந்தி சொன்னதையே ஒதுக்கிய பின், குமரப்பா எந்த மூலை?

காந்தியின் சிந்தனைகள் பற்றி தெரிந்துகொள்வதில் ஒரு பெரும் பிரச்சினை உண்டு. சாதாரணமாக கிடைக்கும் புத்தகங்கள், கட்டுரைகள் காந்தி என்ற தலைவரை மட்டுமே பேசுகின்றன. நீங்கள் காந்தியை பற்றி தெரிந்துகொள்ள விரும்பினால் சம்பரான், ரௌலட் சட்டம், ஜாலியன்வாலாபாக், ஒத்துழையாமை இயக்கம், சௌரி சௌரா, ஆக்கப் பணிகள், உப்பு சத்யாக்ரகம், வட்ட மேஜை மாநாடு, காங்கிரஸ் அரசுகள், வெள்ளையனே வெளியேறு, நவகாளி, பாகிஸ்தான், இறப்பு என்று ஒரு chronological படிமம் சுலபமாக கிடைத்துவிடுகிறது. அவரது சிந்தனைகளை பற்றி தெரிந்து கொள்ள விரும்பினால் அஹிம்சை, ஹரிஜன் இதை தாண்டி போவது கஷ்டம். அவரது unprocessed கட்டுரைகள் கிடைக்கலாம். அவருடன் ஓரளவு வேறுபட்ட அம்பேத்கார், பெரியார், கோல்வால்கர் சொன்னது மூலம் சில தகவல்கள் indirect ஆக கிடைக்கலாம். அவரது எண்ணங்களை, சிந்தனைகளை படிக்கிற மாதிரி process செய்து வெளியிட்ட புத்தகங்கள் அபூர்வம் என்றே நான் நினைக்கிறேன். ஒரு விதத்தில் இது ஒரு நூறு வருஷத்துக்கு உட்பட்ட ஓரளவு சிந்தித்த தலைவர்கள் எல்லாருக்குமே – காந்திஅம்பேத்கார், பெரியார், ராஜாஜி, நேரு எல்லாருக்குமே பொருந்தும்.

அந்த விதத்தில் ஜெயமோகன் சமீபத்தில் எழுதிய சில கட்டுரைகள் மிக உதவியாக இருக்கின்றன. குறிப்பாக காந்தியும் ஜாதியும், காந்தியும் தொழில் நுட்பமும், காந்தியும் ஹிந்தியும் என்ற இந்த பதிவுகள்.

காந்தியும் ஜாதியும் பதிவில் ஜாதியை பற்றிய காந்தியின் எண்ணங்கள் எப்படி மாறி இருக்கின்றன என்பதை ஜெயமோகன் எடுத்துக் காட்டுகிறார். காந்தி "வருணப் பிரிவு என்பது சமூகத்தில் ஓர் ஒழுங்கை உருவாக்கும் பொருட்டு இயல்பாக பரிணாமம் அடைந்துவந்த ஒன்று. அது சமூகத்தின் அமைப்பை கட்டுக்கோப்பாக வைத்திருக்கிறது. தந்தையரின் தொழிலை மகன் செய்யும்போது இயல்பாகவே அவனுக்கு அதில் திறமை உருவாகி வருகிறது. இந்திய சமூகம் உள்மோதல்களினால் அழியாமல் ஆக்கபூர்வமாகச் செயல்பட அது பலநூற்றாண்டுகளாக உதவி வந்திருக்கிறது." என்று நம்பி இருக்கிறார் என்று ஜெயமோகன் கூறுகிறார். கொஞ்சம் கொஞ்சமாக ஜாதியின் negative கூறுகள் அதன் positive கூறுகளை விட முக்கியமானவை என்பதை அவர் வலியுறுத்த ஆரம்பித்திருக்கிறார். இன்று ஜாதி இல்லை என்று நம்மில் பலரும் வாயளவிலாவது சொல்கிறோம் – அதற்கு முக்கிய காரணம் காந்திதான் என்று தோன்றுகிறதுமிக அருமையான கட்டுரை.

காந்தியும் ஹிந்தியும் பதிவில் ஜெயமோகன் சொல்வது இதுதான் – "காந்தி இந்தியை வலியுறுத்துவதன்

மூலம் பன்மைத்தன்மைக்கு எதிராக ஒற்றை மையத்தை வலியுறுத்தவில்லை. அவர் உருவகித்த பன்மைத்தன்மை மிக்க கிராம சுயராஜ்யத்தின் தேசிய அளவிலான பொதுஇணைப்புமொழியாக ஒரு நடைமுறை யதார்த்தமாக இந்தியை முன்வைத்தார்.'' இது எனக்கு சரியாகவே தோன்றுகிறது. அவர் இன்று இருந்திருந்தால் ஆங்கிலத்துக்கு இன்னும் முக்கியத்துவம் வேண்டும் என்று சொல்லி இருப்பார்.

இணையம் என்ற technology தெரியாதவர்கள் யாரும் என் இந்த பதிவை படிக்கப் போவதில்லை. ஆனால் காந்தி தொழில் நுட்பத்துக்கு எதிரானவர் என்று ஒரு கருத்து இருக்கிறது. ஏன் எனக்கும் அப்படித்தான் எண்ணம். அவர் பெரும் தொழில்களை விரும்பவில்லை, ஆலைகள் வேண்டாம், கை ராட்டினம் வேண்டும் என்று சொன்னவர்தான். ஜெயமோகனின் எண்ணத்தில் காந்தி appropriate technology வேண்டும் என்ற முன்னோடி. எனக்கு இந்த பதிவு காந்தியிடம் இன்றைய மதிப்பீடுகளை கொண்டு போய் பொருத்திக் கொள்கிறதோ என்று தோன்றுகிறது. காந்தி நவீன மருத்துவம் போன்றவற்றையும் நிராகரித்தவர். கஸ்தூரிபாவுக்கு இங்லிஷ் மருந்து கொடுத்திருந்தால் அவர் பிழைத்திருப்பார் என்று சொல்லி கேட்டிருக்கிறேன். நவீன மருத்துவம் மட்டுமே சரியான வழி என்று நான் சொல்ல வரவில்லை. நவீன மருத்துவம் ஒரு விஞ்ஞான முறை, அதை சோதனை செய்து பார்க்காமலேயே காந்தி நிராகரித்தார். மீண்டும் அந்த பதிவை ஆற அமர ஒரு முறை படித்து பார்க்க வேண்டும்.

சத்தியாகிரகத்தின் விதிகள் எவை என்று இந்த பதிவில் விளக்குகிறார். மனிதருடைய புரிதலும் சரி, அதை விளக்கும் திறமையும் சரி, அபாரமானவை.

காந்திக்கும் அம்பேத்காருக்கும் இருந்த பரஸ்பர சிந்தனைத் தாக்கம் இந்த பதிவில் விளக்கப்படுகிறது.

காந்தியை பற்றி சுந்தர ராமசாமியும் ஜெயமோகனும் விவாதித்தது இங்கே.

இனி குறிப்பிடும் பதிவுகள் காந்தியின் சிந்தனையை விளக்குபவை இல்லை. இருந்தாலும் முக்கியமானவை, சுவாரசியமானவை என்பதால் குறிப்பிடுகிறேன்.

காந்தியின் தவறுகள் என்று சொல்லப்படுவதை பற்றி இங்கே மிக சிறப்பான ஒரு பதிவு இருக்கிறது. நான் கூட சமீபத்தில் கிலாஃபத் இயக்கம் தவறு என்று நீங்கள் கருதவில்லையா என்று கேட்டு ஒரு அவருக்கு ஒரு மெயில் அனுப்பி இருந்தேன். அவர் ஏற்கனவே எழுதி இருப்பதை நான்தான் பார்க்கவில்லை. பல நூறு கட்டுரைகள் எழுதி இருக்கிறார், எங்கே எது இருக்கிறது என்று தெரிய மாட்டேன் என்கிறது!

கிலாஃபத் இயக்கத்தை பற்றி எனக்கு நிறைய விமர்சனங்கள் உண்டு. துருக்கியில் என்ன ஆட்சி முறை இருக்க வேண்டும் என்று இந்தியர்கள் போராடியது, அதற்கு காந்தியும் ஆதரவு தந்து கூட போராடியது, வெறும் அபத்தமாக இருக்கிறது. அரவிந்தன் நீலகண்டன் இதை பற்றி ஜெயமோகனுக்கு ஒரு அருமையான, ஆதாரங்கள் நிறைந்த ஒரு கடிதம் எழுதி இருக்கிறார். அ. நீலகண்டன் மௌலானா முகம்மது அலியின் பிரசித்தி பெற்ற காந்தி பற்றிய கருத்தை சுட்டிக் காட்டுகிறார் – அலி சொன்னது – ''ஆம் என் மார்க்கத்தின் படி ஒரு விபச்சாரம் செய்கிற ஒழுக்கமில்லாத முஸ்லீம் திருவாளர்.காந்தியைக்காட்டிலும் உயர்ந்தவர்தான்''. இதை காந்தி பெரிதுபடுத்தவில்லை. ஆனால் மௌலானா அளித்த விளக்கம் அவ்வளவாக பிரசித்தி பெறவில்லை. ஏறக்குறைய அவர் சொன்னது – ''ஐந்தடி உயர உத்தமர் ஆறடி உயர திருடனை விட குள்ளமானவரே.''

காந்தியின் தாக்கம் லாரி பேக்கரை எப்படி பாதித்தது என்று இங்கேயும் கிருஷ்ணம்மாள்-ஜெகன்னாதன் பற்றி இங்கேயும் எழுதி இருக்கிறார்.

தொடர்புடைய பதிவுகள் (எல்லாம் ஜெயமோகன் எழுதியவை)
காந்தியின் சிந்தனைகளை விளக்கும் பதிவுகள்:

- காந்தியும் ஜாதியும்
- காந்தியும் தொழில் நுட்பமும்
- காந்தியும் ஹிந்தியும்

- சத்தியாகிரகத்தின் விதிகள்
- காந்திக்கும் அம்பேத்காருக்கும் இருந்த பரஸ்பர சிந்தனைத் தாக்கம்
- காந்தியை பற்றி சுந்தர ராமசாமியும் ஜெயமோகனும் விவாதித்தது
- காந்தியின் எளிமையும், அதற்கு ஆன செலவும்

மற்றவை:

- காந்தியின் தவறுகள்
- கிலாஃபத் இயக்கம் பற்றி அரவிந்தன் நீலகண்டன் எழுதிய கடிதம்
- லாரி பேக்கர்
- கிருஷ்ணம்மாள்-ஜெகன்னாதன்

என் பதிவு:
ராஜேந்திர பிரசாதின் At the Feet of Mahatma Gandhi

---

காந்தி தன்னை ஒரு மகாத்மாவாகச் சொல்லிக்கொண்டவர் அல்ல. அனைத்துக்கும் இறுதித்தீர்வுகளைச் சொன்னவர் அல்ல. மாற்றமுடியாத அருள்வாக்குகளை 'இறக்கி' அருளியவரும் அல்ல. அவர் தன்னை விரிவான ஆய்வுகள் நடத்தி தன் முடிவை முன்வைத்த சமூக ஆய்வாளராகவோ, அல்லது நுண்ணிய விவாதங்கள் வழியாக மையத்தரிசனங்களுக்குச் சென்ற தத்துவவாதியாகவோ, காட்டிக்கொண்டதில்லை. முக்கியமான கருத்துக்கள் சொல்லும்போதெல்லாம் காந்தி தெளிவாகவே தன்னை நடைமுறை அனுபவங்கள் சார்ந்து பேசும் அரசியல்சிந்தனையாளராக வரையறை செய்துகொண்டுதான் மேலே பேசுகிறார்!

நான் காந்தியை 'மகாத்மா'வாக ஏற்றுக்கொண்டவன் அல்ல. நான் அச்சொல்லை ஒருபோதும் பயன்படுத்துபவனல்ல என்பதைக் கண்டிருப்பீர்கள். நான் அவரை ஒரு நடைமுறை அரசியல் சிந்தனையாளராகவும் , நவீனத்துவகாலத்தின் எல்லைகளைத் தாண்டிப்பார்க்கமுடிந்த தத்துவவாதியாகவும், அரசியலை தன் தளமாகக் கொண்ட கர்மயோகியாகவும்தான் பார்க்கிறேன்.

ஆகவே அவர் பிழைகள் செய்யாதவர் என்றோ எல்லாவற்றுக்கும் விடைகள் சொன்னவர் என்றோ எண்ண நான் தயாரல்ல. அவர் பாதிக்குப்பாதி தவறான விஷயங்களைச் சொல்லியிருந்தால்கூட அவற்றை நிராகரிக்கவும் சொல்லியவற்றில் முக்கியமானவற்றின் அடிப்படையில் அவரை மதிப்பிடவும் எனக்குத் தயக்கம் இல்லை. அதைத்தான் இக்கட்டுரை உட்பட எல்லாவற்றிலும் செய்கிறேன்.

இனி இந்திக்கு வருவோம். பலர் கவனத்தில் கொள்ளாத ஒருவிஷயம், காந்தி ஒரு இந்திக்காரர் அல்ல என்பதே. அவரது தாய்மொழி குஜராத்தி.. குஜராத்திமொழி மேல் தீவிரமான ஈடுபாடு கொண்டிருந்தார் காந்தி. குஜராத்தி மொழியில்தான் தன் எழுத்துக்களில் பெரும்பகுதியை அவர் எழுதினார்.

காந்திக்கு முன்னர் குஜராத்திமொழி பெரும்பாலும் பக்திக்குமட்டுமே பயன்படுத்தப்பட்டமையால் ஒருவகையான அடுக்குச்சொல்தன்மை, செய்யுள்தன்மை கொண்டதாக இருந்தது. நவீன ஆங்கிலத்துடன் அறிமுகம் உள்ளவரான காந்தி மக்களிடம் உரையாடும் தன் நோக்கத்துக்காக கச்சிதமான, சிறிய சொற்றொடர்களில் குஜராத்தியில் எழுதி நவீன குஜராத்தி உரைநடையை தொடங்கி வைத்தார். அரசியல், தத்துவக் கலைச்சொற்களை உருவாக்கினார். இன்றும் குஜராத்தி நவீன இலக்கியத்தின் பிதாமகராக எண்ணப்படுகிறார்!

இந்தி காந்திக்கும் அன்னிய மொழிதான். அவர் பிறந்துவளர்ந்த கத்தியவாரில் இந்தி எக்காலத்திலும் பேசப்பட்டதில்லை. தென்னாப்ரிக்காவில்தான் அவர் நன்றாக இந்தி பேசவும் எழுதவும் கற்றுக்கொண்டார். ஆகவே காந்தி தன் தாய்மொழியை பிறர் மேல் திணித்தார் என்று நினைத்தீர்கள் என்றால் அதைக் கைவிடுங்கள். அப்படி திணித்தால்தான் அதை அடிப்படைவாதம் என்று நீங்கள் சொல்ல முடியும்.

காந்தி மீண்டும் மீண்டும் தாய்மொழிக் கல்விக்காக வாதிடுவதை நீங்கள் அவரது எழுத்துக்களில் காணலாம். கல்வி ஆங்கிலத்தில் மட்டுமே சாத்தியம் என்று காந்தியின் சீடர்களில்கூட பெரும்பாலானவர்கள் நம்பிய காலகட்டத்தில், தாய்மொழியில் நவீனக் கல்வி என்பது அனேகமாக எங்குமே இல்லாமல் இருந்த காலகட்டத்தில், காந்தி அதைச் சொல்லிக்கொண்டிருந்தார். தாய்மொழியில் ஒரு குழந்தை கல்வி கற்க ஆரம்பித்தால் மட்டுமே அதனால் சுயசிந்தனையுடன் வளர முடியும் என காந்தி நம்பினார். தாய்மொழியிலேயே அதற்கு நவீன உயர்கல்வியை அளிக்க முடியும் என்று வாதிட்டார்.

காந்தியின் வழிகாட்டலில் இருந்த காங்கிரஸ் அரசு பிரிட்டிஷ் ஆட்சிக்குக் கீழே சுதேசி அரசுகளை அமைத்தபோதுதான் இந்தியாவில் தாய்மொழி வழிக்கல்விக்கான பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. அவையே இன்றைய தாய்மொழிக்கல்விக்கான அடித்தளங்கள். இப்பள்ளிகள் சுதேசிப்பள்ளிகள் என்று அழைக்கப்பட்டன. இவற்றுக்கு எதிராகச் சிந்தனைசெய்த ஆங்கில அனுதாபிகளும் காங்கிரஸில் இருந்தார்கள். காந்தி அவர்களிடமும் தொடர்ந்து விவாதித்தபடித்தான் இருந்தார்.

*ஆகவே காந்தி இந்திவழி கல்விக்காக வாதிட்டார் என்றும் எவரும் சொல்லிவிட முடியாது. இந்தியில் இந்தியாவெங்கும் கல்வி கற்றுக்கொடுக்கப்பட இந்திய அரசு முடிவெடுத்திருந்தால் அவர் அதை கடுமையாக எதிர்த்திருப்பார்.*

*அப்படியானால் காந்தி எதற்காக இந்தியை முன்வைத்தார்? அப்பட்டமான நடைமுறை அனுபவம் வழியாக அவர் அடைந்த விவேகம் அது. அவர் ஒரு மாபெரும் தேசிய இயக்கத்தை நடத்தியவர். காஷ்மீர் முதல் கன்யாகுமரிவரை பரந்த ஓர் இயக்கம். அதன் உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் படிப்பறிவில்லாதவர்கள். அவ்வியக்கத்தின் மொழியாக இயல்பிலேயே இந்தி இருப்பதை அவர் கண்டார். ஆகவே அவர் இந்தியை ஒரு தொடர்புமொழியாக வெற்றிகரமாகப் பயன்படுத்தினார். இந்தியாவுக்கான தொடர்புமொழியாக இயல்பிலேயே இந்திதான் இருக்க முடியும் என்ற முடிவுக்கு வந்தார்.*

*இந்தியை காந்தி முன்வைத்தமைக்கு அவர் நடைமுறைக் காரணங்களையே சொல்லிவந்தார். ஒன்று அது இந்தியாவில் பெரும்பாலானவர்களுக்குத் தெரிந்த மொழி. இரண்டாவதாக அது முஸ்லீம்களுக்கும் நெருக்கமான மொழி. ஏதாவது ஒரு இந்திய மொழியை இந்தியா அனைத்துக்கும் பொதுமொழியாக ஆக்கவேண்டும் என்றால் அது இந்தியாகவே இருக்க இயலும் என்பதை எவரும் உணரமுடியும்.*

*காந்தியின் காலகட்டத்தில் இந்தியாவெங்கும் பரவி மிக வெற்றிகரமாகச் செயல்பட்டுக்கொண்டிருந்த காங்கிரஸுக்கு இந்தியாவை இணைப்பதற்கு நடைமுறையில் இந்திதான் இணைப்பு ஒழியாக இருந்தது. எதிர்கால இந்தியாவுக்கு ஓர் இந்திய மொழி இணைப்புமொழியாக இருக்கவேண்டும் என காந்தி விரும்பினார். அது இந்தியர்களின் தன்னம்பிக்கைக்கு இன்றியமையாதது என நம்பினார். அந்த நடைமுறை ஞானத்தையே அவர் திடமாக முன்வைத்தார்.*

*அதேசமயம் அவர் பிடிவாதமாக இந்தியில் பேசி எழுதிக்கொண்டிருக்கவில்லை. தன் வாழ்நாளெல்லாம் ஆங்கிலத்தை தொடர்புமொழியாக பயன்படுத்திகொண்டுதான் இருந்தார். விடாப்பிடியாக இந்தியைப் பிடித்துக்கொண்டிருந்தால்கூட அவரை ஒருவகை முரட்டுநம்பிக்கையாளர் என்று சொல்லலாம். ஆங்கிலத்தின் இடத்தை அவர் நன்றாகவே அறிந்திருந்தார். காரணம் அவர் நடைமுறைவாதி.*

*எதிர்கால இந்தியாவின் இணைப்புமொழியாக ஆங்கிலம் இருக்கமுடியாது என காந்தி நிராகரித்தமைக்கு அவருக்கு இருந்த கிராமசுயராஜ்யம் குறித்த கனவுகளும் திட்டங்களும் ஒரு முக்கியமான காரணம். காந்தி தன் இளமைக்காலத்திலேயே அந்த கனவை தனக்குள் உருவாக்கிக் கொண்டிருந்தார். இந்தியா முழுக்க சுற்றி பல்லாயிரம் கிராமங்களை கண்ணால் கண்டறிந்து தன் கோட்பாடுகளை வலுப்படுத்திக்கொண்டார்.தன் வாழ்நாளின் கடைசிக்கணம் வரை காந்தி கிராமசுயராஜ்யம் என்ற கருத்துக்காக நேருவிடமும் பிறரிடமும் வாதாடினார்.*

*காந்தி உருவாக்க எண்ணிய இந்தியா பல்லாயிரக்கணக்கான தன்னிறைவுபெற்ற, கிட்டத்தட்ட தனியாட்சி கொண்ட கிராமசமூகங்களின் தொகை ஆகும். அக்கிராமங்களில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு அங்கேயே உற்பத்திசெய்யப்படும் பொருட்களினால் அவர்களின் வாழ்க்கை அமைந்திருக்கும். குறைவான விஷயங்களே அவர்களுக்கு வெளியே இருந்து வரும். ஆகவே ஒவ்வொரு கிராமமும் தனக்கே உரிய தனித்தன்மையான வாழ்க்கைமுறை கொண்டிருக்கும். அந்தத் தனித்தன்மையே அவற்றின் அடையாளமாகவும் அழகாகவும் இருக்கும்.*

*காந்தி உருவாக்க எண்ணிய கிராமசுயராஜ்யத்தில் கிராமங்கள் மேல் மைய அதிகாரத்தின் கட்டுப்பாடு மிகவும் குறைவாகவே இருக்கும். அந்தக் கிராமத்தின் எல்லைக்குள் உற்பத்தி நிகழ்வதனால் பெருந்தொழில்கள் இருக்காது. ஆகவே இயற்கைச்சூழல் கெடுக்கப்படாது. மக்களின் படைப்பூக்கத்தை பெருக்கும் தொழில்நுட்பம் இருக்கும், அவர்களை இயந்திரங்களாக ஆக்கும் தொழில்நுட்பம் இருக்காது. அவர்களின் தாய்மொழியிலேயே அவர்கள் அனைத்தையும் கற்பார்கள். அவர்கள் தேசிய அளவில் ஒருங்கிணைவதற்கே இந்தி ஊடகமாக இருக்கும்*

*இவ்வாறு தான் கனவுகண்ட கிராமசுயராஜ்யத்தின் இணைப்புமொழியாகத்தான் காந்தி இந்தியை முன்வைத்தார். ஏற்கனவே அக்கிராமங்களில் பெரும்பாலானவற்றுக்குச் சென்று சேர்ந்த மொழி இந்தி என்பதுதான் அவ்வாறு அவர் முன்வைக்க காரணம்.*

*காந்தியின் கிராமசுயராஜ்யக் கனவை நேரு ஒரு முட்டாள்தனமான இலட்சியவாதம் என்றே எண்ணினார். நேரு ஸ்டாலினின் மையப்படுத்தப்பட்ட அதிகாரம், பெருந்தொழில்கள் ஆகியவற்றைத்தான் தனக்கு முன்னுதாரணமாகக் கண்டுகொண்டிருந்தார்! நேரு உருவாக்கிய மைய அதிகார இந்தியாவில் மைய அதிகாரத்தின் மொழியாக இந்தி முன்வைக்கப்பட்டதற்கும் காந்தி கிராமசுயராஜ்யங்களின் இணைப்புமொழியாக இந்தி இருக்கவேண்டும் என்று சொன்னதற்கும் இடையே மிகப்பெரிய இடைவெளி உள்ளது.*

*தன் கிராமசுயராஜ்யத்துக்கான இணைப்புமொழியாக காந்தி ஏன் ஆங்கிலத்தை முன்வைக்கவில்லை? ஒன்று, அப்போதும் இந்தியாவில் மிகமிகக் குறைவானவர்களின் மொழியாகவே ஆங்கிலம் இருந்தது. அதுவும் உயர்வற்கத்தின் மொழி. அதில் சாமானியர்களுக்கு எந்த இடமும் இல்லை. காந்தி கனவுகண்ட கிராமசுயராஜ்யம் சாமானியர்களின் சமூகம். அதில் ஆங்கிலத்தை இணைப்புமொழியாக உருவகிப்பது சாத்தியமே அல்ல.*

*ஆங்கிலம் என்றும் இந்தியாவில் ஒரு உயர்வர்க்க மொழியாகவே இருக்கும் என்றும், அது ஒருபோதும் சமானியர்களின் மொழியாக ஆகமுடியாது என்றும் காந்தி எண்ணினார். ஆங்கிலத்தை முன்வைப்பது வழியாக உயர்குடிகளுக்குச் சாதகமான ஓர் அமைப்பே உருவாகும், புதிய உயர்குடிகளை அது உருவாக்கும், ஒருபோதும் அது சாமானிய இந்தியமக்கள் அனைவருக்குமான மொழியாக ஆகமுடியாது என்றார். இது அப்பட்டமான ஒரு நடைமுறை யதார்த்தமாக இன்றும் நீடிக்கிறது.*

*நேருவின் இந்தியாவில் காந்தியின் சுயராஜ்யக் கனவு நிராகரிக்கப்பட்டது. நேரு-அம்பேத்கார் கூட்டணி வலுவான மைய அதிகாரம் கொண்ட ஒரு அரசை உருவாக்கியது. அப்படி ஒரு அரசு உருவாக்கப்படும்போது அதன் மொழியாக ஒரு இந்திய*

மொழி இருப்பதென்பது அம்மொழி பேசாத பிற மக்கள் இரண்டாம்குடிகளாக ஆக வழிவகுக்கும். ஆகவேதான் நான் இந்தியை ஏற்றுக்கொள்ளவில்லை.

காந்தி இருந்திருந்தால் ஒருபோதும் மத்திய அரசின் அதிகாரமொழியாக இந்தி பிறர் மேல் திணிக்கப்படுவதை ஏற்றுக்கொண்டிருக்கமாட்டார் என்றே நான் எண்ணுகிறேன். எப்போதும் மைய அதிகாரத்துக்கு எதிராகவே காந்தி பேசியிருக்கிறார். கிராமசுயராஜ்யம் என்ற கருத்தின் மையத்தரிசனமே பன்மைத்தன்மைதான்.

சுதந்திரத்துக்குப் பின்னர் நாம் உருவாக்கியது நவீனத்துவ [modernist] சமூகம் ஒன்றை. மைய அதிகாரம், ஒருங்கிணைக்கப்பட்ட நிர்வாகம், தரப்படுத்தப்பட்ட கல்வி, பெருந்தொழில்கள், பெருமுதலீடு, அறிவியல்மீதான பக்தி ஆகியவை. நவீனத்துவத்தின் மொழி ஆங்கிலமே. ஆகவே சுதந்திரத்துக்குப் பின்னர் ஆங்கிலம் காந்தி கற்பனை செய்திருக்க முடியாத வேகத்தில் இந்தியாவில் பரவியது. [பலர் எண்ணுவது போல பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் ஆங்கிலம் மக்களிடையே பரவலாகவில்லை. சுதந்திர இந்தியாதான் ஆங்கிலத்தை மக்கள்மயமாக்கியது] இயல்பாகவே நவீனத்துவ இந்தியாவின் இணைப்புமொழியாக ஆங்கிலம் ஆகியது.

இன்றைய இந்தியா காந்தி கண்ட கனவுக்கு நேர் எதிரான திசையில் வெகுதூரம் வந்திருக்கிறது. இன்று காந்தி கனவு கண்ட தாய்மொழி வழிக்கல்வியே கிடையாது. அங்கும் ஆங்கிலம் அமர்ந்திருக்கிறது. காரணம் ஆங்கிலம் தொழில்நுட்பத்தின் மொழி. பூமியைத்தழுவி விரிந்திருக்கும் நவீனத்துவ புத்துலகின் மொழி. இன்று நாம் நவீனத்துவ உலகில் நமது பங்குக்காக போராடுகிறோம். ஆங்கிலம் அதற்கான கருவி.

இன்றையநவீனத்துவ இந்தியா ஆங்கிலத்துக்குப் பதிலாக இந்தியை இணைப்புமொழியாகக் கொள்ள வேண்டும் என்று சொல்பவர்கள் எந்தவிதமான புரிதலும் இல்லாமல் வெறும் மொழிவெறி காரணமாகவே அதைச் சொல்கிறார்கள். சம்பந்தமே இல்லாமல் அதற்கு காந்தியை உள்ளே கொண்டுவருகிறார்கள். காந்தி இந்த நவீனத்துவ யுகத்தில் இதன் மொழியாக இந்தி இருக்கவேண்டும் என்று சொன்னவரல்ல. நவீனத்துவத்துக்கு அப்பால்சென்று சிந்திக்க முயன்றவர் அவர்.

நவீனத்துவ இந்தியாவில் ஆங்கிலம் இணைப்புமொழியாக இயல்பாகவே அமைந்தது. ஆனால் அதில் உள்ள பிரச்சினைகளை நாம் பார்த்துத்தான் ஆகவேண்டும். அது தொழில்நுட்பம் அறிந்த, கல்வியையே அதிகாரமாகக் கொண்ட ஒரு புதிய ஆளும்வர்க்கத்தை உருவாக்கி இந்தியாவின் கோடானுகோடி மக்களின் தலைமீது நிறுவியிருக்கிறது. அவர்களை ஆங்கிலம் இங்குள்ள மக்களிடம் இருந்து முழுமையாகவே பிரித்துவிடுகிறது. ஆங்கிலம் இன்று ஒரு கண்கூடான அதிகாரமாக நம் சாமானிய மக்களை ஆட்கொண்டிருக்கிறது.

இந்திய மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் விஷயங்கள் இன்றும்கூட இந்தியமக்களில் தொண்ணூறு சதவீதம்பேருக்குப் புரியாதபடி விவாதித்து முடிவெடுக்கப்படுகின்றன. இந்திய வேளாண்மையைப் பற்றிய ஒரு விஷயத்தை இந்திய வேளாண்மைவிஞ்ஞானி இந்திய விவசாயிகளிடம் பேசமுடியாத நிலை இருக்கிறது. நமது சட்டங்கள்கூட நம் மக்களுக்குப் புரிவதில்லை!

ஏன் தொலைக்காட்சியில் வந்துபேசும் ஒரு மருத்துவ நிபுணரை கவனியுங்கள், அவர் நம் உடலைப்பற்றிப் பேசுகிறார். ஆனால் நமக்குப்புரிவதுபோல அவரால் நான்கு சொற்றொடர்கூட சொல்ல முடியவில்லை. 'டாக்டர் என் உடம்புக்கு என்ன?' என்று கேட்டால் அதற்குப் பதில் சொல்லத்தெரிந்த டாக்டர்களே இன்று இல்லாமலாகிவிட்டார்கள். அவரது கல்வியின் அதிகாரத்துக்குப் பணிந்து நம் உடலை நாம் அவர்களிடம் ஒப்படைக்கிறோம்.

காந்தி ஆங்கிலத்தை அஞ்சியது இதனாலேயே. இந்தியை அவர் முன்வைத்தது இந்திபேசும் கோடானுகோடி எளிய மக்களின் தரப்பில் நின்றபடி அவர் வரும்காலத்தை அவர் பார்த்தார் என்பதனாலேயே. நாம் மக்களுக்குச் சொல்வதைப்போல மக்களுக்கும் நம்மிடம் சொல்ல சில விஷயங்கள் இருக்கும், அதற்குத்தான் நமக்கு இணைப்புமொழி தேவை என்று உணர்ந்தமையாலேயே. நேருவின் வழி மாட்டுவைத்தியனின் சிகிழ்ச்சைபோல. மாட்டுக்கு என்ன பிரச்சினை என்று அதனிடம் கேட்பதில்லை.

அந்தப்போக்குதான் இன்றுவரை இந்தியாவில் நீடிக்கிறது. இன்றுவரை நம் அரசும் ,நம் வல்லுநர்களும், நம் அறிவுஜீவிகளும் மக்களிடம் சென்று அவர்களுக்கு என்ன பிரச்சினை என்று கேட்டதில்லை. அவர்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டதில்லை. 'எல்லாம் உன் நன்மைக்காகத்தான், கண்ணைமூடிக்கொண்டு சாப்பிடு' என மருந்தை வாயில் ஊற்றிக்கொண்டே இருக்கிறார்கள். அழிவு ஏற்பட்டாலும் அதற்கும் அம்மக்களையே பழிசாற்றுகிறார்கள். பசுமைப்புரட்சி முதல் சொட்டுமருந்து வரை எத்தனை உதாரணங்கள். நகரங்களில் வாழ்ந்து கொண்டு நாம் கிராமங்களை விவாதிக்கிறோம். கிராமங்களை ஆட்சி செய்கிறோம்.

அந்த நிலையை அஞ்சித்தான் காந்தி ஆங்கிலத்தை சந்தேகப்பட்டார். இந்தியை அவர் மக்களின் மொழியாகவே கண்டார். தன்னைச் சந்திக்க வந்த ஒவ்வொருவரிடமும் காந்தி கிராமிய இந்தியாவைச் சுற்றிப்பார்க்கும்படிச் சொன்னார். ஆனால் அவரது பிரதான சீடரான நேரு இந்தியக் கிராமங்களைச் சுற்றிப்பார்க்கவே இல்லை. ஒரு கிராம விவசாயி எப்படி சப்பாத்தி தட்டுவான் என கடைசிவரைக்கும் தெரியாமலேயே அவர் இந்தியாவை ஆண்டார்.

காந்தி இந்தியை முன்வைத்தது இந்த நவீனத்துவ அதிகாரத்தின்மீது அவருக்கு இருந்த ஆழமான ஐயம் காரணமாகத்தான். இக்கணம்வரை காந்தி என்னென்ன காரணத்துக்காக
ஆங்கிலத்தை ஐயப்பட்டாரோ அதே காரணங்கள் தொடர்கின்றன –மேலும் பிரம்மாண்டமாக

காந்தியின் கிராமசுயராஜ்யம் என்பது நேரு எண்ணியது போல ஒரு பழமையான கருத்துருவம் அல்ல. பின்நவீனத்துவ சமூகம் ஒன்றுக்கான வரைபடம் அதில் உள்ளது. அதை விரிவாக தனியாகவே பேசவேண்டும். மைய அதிகாரம் கொண்ட, பெருநகர் சார்ந்த, பெருந்தொழில் சார்ந்த நவீனத்துவ சமூக உருவகத்துக்கு மாற்றான ஒரு உருவகம் அது.

அச்சமூகம் ஓர் எதிர்காலச் சாத்தியம் என்றே நான் எண்ணுகிறேன். நவீனத்தொழில்நுட்பத்தின் வளர்ச்சியே நவீனத்துவத்தில் இருந்து காந்தி சொன்ன பின்நவீனத்துவ சமூகம் ஒன்றுக்கு நம்மைக் கூட்டிச்செல்ல முடியும். இப்போதே வளர்ந்த நாடுகளில் பெருநகரங்கள் தேவையற்றவையாக ஆகி வருகின்றன. நவீன தகவல்தொடர்பும் போக்குவரத்து வளர்ச்சியும் மக்கள் நெருக்கியடித்து வாழவேண்டிய தேவை இல்லாமல் செய்துகொண்டிருக்கின்றன. பின்நவீன கிராமசுயராஜ்யங்கள் வரக்கூடும்!

அந்தக் காலகட்டத்தில் இந்த இணைப்புமொழி மையமொழி போன்ற பிரச்சினைகளுக்கே இடமில்லை. காந்தி கனவுகண்டதுபோல தாய்மொழியே போதுமானதாக இருக்கும். பலர் எண்ணுவது போல எதிர்காலத்தில் ஆங்கிலம் முழுமுற்றான மேலாதிக்கம் செலுத்தும் என நான் நினைக்கவில்லை. சிந்தித்துப் பாருங்கள், ஆங்கிலத்தில் உள்ள எந்தநூலையும் கணிப்பொறியின் உதவியால் கனநேரத்தில் தமிழில் வாசிக்க முடியும் என்றால் ஏன் ஆங்கிலம் நீடிக்க வேண்டும்? எந்த மொழியில் இருந்தும் இன்னொரு மொழிக்கு கணநேர மொழியாக்கம் சாத்தியம் என்றால் எதற்காக இணைப்புமொழி?

மீண்டும் உங்கள் கேள்விக்கே வருகிறேன். காந்தி இந்தியை வலியுறுத்துவதன்மூலம் பன்மைத்தன்மைக்கு எதிராக ஒற்றைமையத்தை வலியுறுத்தவில்லை. அவர் உருவகித்த பன்மைத்தன்மை மிக்க கிராமசுயராஜ்யத்தின் தேசிய அளவிலான பொதுஇணைப்புமொழியாக ஒரு நடைமுறை யதார்த்தமாக இந்தியை முன்வைத்தார். வரும் காலங்களில் அந்த இணைப்புமொழி என்ற தேவை இருக்காது என நான் நினைக்கிறேன்.

ஜெ

[பி.கு. பொதுவாக இம்மாதிரி விவாதங்களில் ஈவேராவை இழுக்காதீர்கள். அவர் நின்றுபேசும் தளத்துக்கும் இத்தகைய விவாதங்களுக்கும் ஒரு பொருத்தமும் இல்லை. இருவரையும் ஒப்பிடுவதே சிந்தனைக்கு எதிரானது

காந்தியைப்பற்றி இப்படியெல்லாம் ஆழமாக முரண்பட்டு விவாதிப்பவர்கள் ஈவேரா போகிறபோக்கில் சொன்ன மட்டையடிகளுக்கெல்லாம் சப்பைக்கட்டு கட்டுவதற்காகவே முயல்கிறார்கள் என்பதைக் கண்டிருக்கிறேன். தாய்மொழிக்கல்வியே தேவையில்லை,ஆங்கிலம் மட்டுமே போதும், அதுதான் அறிவின் மொழி என்றார் ஈவேரா. தமிழர்கள் தங்கள் பண்டைய இலக்கியங்கள் அனைத்தையும் கொளுத்திவிட்டு ஆங்கிலம் வழியாக தொழில்நுட்பத்தை மட்டுமே கற்றுக்கொண்டால் போதும் என்றார்.

இவ்வாறு அவர் சொல்லிய எந்தக் கருத்துக்கும் பின்னால் எந்தவகையான பொதுவான தரிசனமும் திட்டமும் இருக்கவில்லை. வெறும் எதிர்வினைகள் மட்டும்தான் அவை. எவற்றுக்கும் அவர் பொறுப்பேற்றுக்கொண்டதில்லை. காரணம் அவர் தன் எதிரிகளிடம் விவாதிக்கவோ எவ்வகையிலேனும் தன்னை மாற்றிக்கொள்ளவோ வளரவோ இல்லை.

மாறாக காந்தியிடம் நடைமுறையில் இருந்து பெற்றுக்கொண்ட விவேகமும் ,ஒரு பெரிய இலட்சியக்கனவும், அவை இணையும்போது உருவாகும் தரிசனமும் இருந்தன. அந்தத் தரிசனத்தை முன்வைத்து தன் எதிர்தரப்புடன் தொடர்ந்து விவாதித்துக்கொண்டே இருந்தார். அந்த விவாதங்கள் வழியாக அவர் மாறினார், வளர்ந்தார்]

---

பொதுவாக பெரும்பாலான வீரநாயக பிம்பங்களை நாம் உணர்ச்சிகரமாகவே உருவகித்துக் கொள்கிறோம். மறுபரிசீலனை செய்வதில்லை. காரணம் நம்முடைய ஆழ்மனம் வீரவழிபாட்டு மரபைச் சேர்ந்ததுநாம் நம்மை ஒரு சாகசநிலையில் கற்பனைசெய்துகொள்ளவும் இவை உதவுகின்றன. நம்முடைய சலிப்பூட்டும் அன்றாட வாழ்க்கையில் இந்தவகையான சாகசச்செயல்கள் ஊட்டும் கனவு மிகவும் தேவையான ஒன்றாக இருக்கிறது.

ஆனால் முதிர்ச்சியடைந்த ஒரு மனதுக்கு இத்தகைய வீரவழிபாடு இருக்காது என்றே நான் நினைக்கிறேன். அறத்துக்கு மாற்றான சொல்லாம மறத்தை – வீரத்தைஉருவகித்த ஒரு மாபெரும் சிந்தனை மரபும் நமக்குண்டு. அதுவே நம் பண்பாட்டின் உச்சம். மகாவீரர் என்று அகிம்சையின் உச்சியில் நின்ற வர்த்தமானரைச் சொல்லும் பண்பாடே தமிழின் சாரமென நான் நம்புகிறேன்

வீரச்செயல் என்பது பிரச்சினைகளை மிக மிக எளிமைப்படுத்தி ஒற்றைப்படையானதாக ஆக்கியபின்னர் முன்வைக்கப்படும் தீர்வு. உண்மையில் வாழக்கையும் வரலாறும் எல்லாம் அவ்வாறு சாகசங்கள் மூலம் தீர்க்கப்படும் சிக்கல்கள் கொண்டவை அல்ல. அவை சீரான பொறுமையான வளர்ச்சிநிலைகள் மூலம் தாண்டிச்செல்லவேண்டியவை என்ற புரிதல் கொண்டவர்கள் வன்முறை சார்ந்த வீரத்தை முக்கியமான ஒன்றாக எண்ண மாட்டார்கள். தன் அகத்தை ஒருவன் வெல்வதே உண்மையான வீரமென அவர்கள் எண்ணுவார்கள்

சென்ற சில பதிற்றாண்டுகளாக பெரிதாக கட்டமைக்கப்பட்ட வீரபிம்பம் சே. ஆனால் இப்பிம்பத்தைச் சுமந்து கொண்டிருப்பவர்களில் எத்தனை பேர் சேவின் உண்மையான வாழ்க்கையையும் அவர் செயல்பட்ட வரலாற்றுத்தளங்களையும் அறிவார்கள் என்பது கேள்விக்குறியே. தமிழிலேயே கார்லோஸ் கஸ்நாடாவின் சேகுவேரா வாழ்க்கை வரலாறு வெளிவந்துள்ளது.[விடியல் பதிப்பகம். எஸ்பாலசந்திரன் மொழியாக்கம்] பெரிதும் வணக்கத்துடன் எழுதப்பட்டுள்ள அந்நூல் அளிக்கும் சேவின் பிம்பமேகூட நமக்கு பலவகையான திறப்புகளை அளிக்கக் கூடியதாகும்.

சே கருணையும் மனிதாபிமானமும் கொண்ட ஒருவர். இலக்கியத்திறனும் இலட்சியவாதமும் நிரைந்தவர். சாகசக்காரர். ஓர் இளைஞனாக மிக மிக மனதுக்கு நெருக்கமாக ஆக்ககூடிய ஆளுமை அவர். எனக்கும் அவரது ஆளுமை மேல் ஈடுபாடு உண்டு. அவர்மேல் பிரியமும் உண்டு.

ஆனால் சேவின் அரசியல் புரிதலும் சரி, வரலாற்றுப்புரிதலும் சரி, மிக மேலோட்டமான கற்பனாவாத இலட்சியத்தன்மை

கொண்டவை என்பதே உண்மை. அவருக்கு அவர் சார்ந்து செயல்பட்ட தளங்கள் குறித்து முற்றிலும் தவறான புரிதல்களே இருந்தன. அவரது தோல்வி அந்த பிழைபட்ட புரிதலில் இருந்தே எழுந்தது.

சே புரட்சியாளர். ஆயுதத்தில் நம்பிக்கை கொண்டவர். கியூபாவில் அவர் ஃபிடல் காஸ்ட்ரோவுடன் இணைந்து அடைந்த வெற்றி அவருடைய தன்னம்பிக்கையை வளர்த்து வரலாறு குறித்த மிகப்பிழையான ஒரு புரிதலைக் கொடுத்தது. அதை நாம் புரலட்டேரியனிசம் எனலாம். செயல்பாட்டாளரியம் என நண்பர் சோதிப்பிரகாசம் அச்சொல்லை மொழியாக்கம் செய்தார்.

அது ஒருவகை மேட்டிமைவாதம். ஒரு சமூகத்தில் இருந்து வரலாற்றுணர்வும் சமூகப்பொறுப்பும் கொண்ட சிலர் எழுந்துவந்து ஆயுதமேந்திப் போராடி, அந்தச் சமூகத்தின் அதிகாரத்தைக் கைப்பற்றி, அச்சமூகத்தை தங்கள் விருப்பப்படி மாற்றியமைத்துவிடலாம் என்னும் நம்பிக்கையே செயல்பாட்டாளரியம். இந்தச் சிலர் அச்சமூகத்தின் ஆகச்சிறந்த மனிதர்கள். அவர்களே அச்சமூகத்தின் சாரம். அவர்களே அச்சமூகத்தை தீர்மானிக்கும் தகுதி கொண்டவர்கள். மற்ற மக்களெல்லாம் அவர்களை 'தொழுதுண்டு பின்செல்ல' வேண்டியவர்கள் மட்டுமே.

இவர்களே புரட்சியாளர்கள். புரட்சியாளர்களினால் ஆனதே கட்சி. கட்சியே வரலாற்றை உருவாக்குகிறது. கவனிக்கவும் கட்சி வரலாற்றின் ஒரு பகுதி அல்ல அதுவே வரலாற்றை உருவாக்குகிறது. தன் விருப்பபடி சமூகத்தை மாற்றியமைக்கும் பொறுப்பும் தகுதியும் உரிமையும் அதற்கு உண்டு.

இந்த நம்பிக்கையானது வி.இ.லெனின் போல்ஷெவிக் புரட்சி வழியாக சோவியத் ரஷ்யாவில் அதிகாரத்தைக் கைப்பற்றியபோது உருவான ஒன்று. உண்மையில் போல்ஷெவிக் புரட்சி என்பது வரலாற்றில் மிக அபூர்வமாக நிகழும் ஒரு தற்செயல். அதன் பின்விளைவுகளை வைத்து பார்த்தால் ஒரு விபத்து அது. அதற்கும் மார்க்சியக் கோட்பாடுகளுக்கும் நேரடி உறவு ஏதுமில்லை என்பதே உண்மை. உற்பத்தி- வினியோக சக்திகளில் ஏற்படும் மாற்றத்தின் விளைவாக முதலாளித்துவ அமைப்பு சிதறி கம்யூனிசம் வரும் என்பதே மார்க்சியம். ஒரு செயலபாட்டாலர் குழு சட்டென்று அதிகாரத்தைக் கைப்பற்றி அமைப்பை கம்யூனிசமாக மாற்றியமைக்கலாம் என்பது லெனின் கொடுத்த சந்தர்ப்பவாத விளக்கம்

ஜார் ஆட்சி முதல் உலகப்போரினால் அதன் வரலாற்றிலேயே ஆகப்பலவீனமாக இருந்த காலகட்டத்தில் அந்த வரலாற்றுச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அங்கே ஜார் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. போரில் இருந்து திரும்பிவந்துகொண்டிருந்த துருப்புகள் போரில் சலித்திருந்தார்கள். சமாதானம் வரவேண்டுமென்றும் தாங்கள் ஊருக்கு திரும்ப வேண்டுமென்றும் விரும்பினார்கள். அந்த எண்ணத்தை புரிந்துகொள்ளாத ஜாரின் அரசு அவர்களை திரும்பவும் போர்முனைக்கே தள்ளியது.

அந்த உணர்ச்சிகளை புரிந்துகொண்ட லெனினும் டிராட்ஸ்கியும் உடனடியானப் போர்நிறுத்தம் என்னும் வாக்குறுதியை முன்வைத்து அந்த வீரர்களின் ஆதரவை சட்டென்று பெற்றார்கள். மார்க்சியக் கோட்பாட்டுக்குச் சற்றும் ஒத்துப்போகாத 'தந்தையர் நாடு' கோஷத்தை முன்வைத்தார் லெனின். புரட்சிநடந்தது. ஜார் ஆட்சி இறக்கப்பப்பட்ட பின் கேரென்ஸ்கி என்னும் பலவீனமான ஆட்சியாளரின் கீழே ருஷ்ய அரசு தடுமாறிக்கொண்டிருந்தபோது ஓர் அதிரடி மூலம் போல்ஷெவிக்குகள் அதிகாரத்தைக் கைப்பற்றினார்கள்.

போல்ஷெவிக்குகள் மக்களின் கருத்தை மாற்றியமைத்து சிவில் அதிகாரத்தை பிடித்து அதன் விளைவாக ஆட்சியை அடையவில்லை. ஆஅயுதம் ஏந்திய செயல்பாட்டாளர்க்கூட்டம் ஒன்றே அவர்களின் அதிகாரத்தின் ஊற்று. ஆகவேதான் உடனடியாகவே அனைத்து அதிகாரங்களும் அந்த செயல்பாட்டாளர்களின் கைகளுக்குச் சென்றது. 'அதிகாரம் அனைத்தும் சோவியத்துகலுக்கே' என்ற கோஷம் பிறந்தது. சோவியத் ருஷ்யாவின் அனைத்து அழிவுகளும் தொடங்கியது இங்குதான். பெரும்பான்மை மக்களுக்கு மேல் ஒரு சிறுகுழுவின் அதிகாரம் மூலம்.

அந்த சிறிபான்மை அதிகாரம் மக்களின் அடித்தள ஆதரவு இல்லாதது. செயற்கையானது. ஆகவே எப்போதும் மக்களை அஞ்சிக் கொண்டிருந்தது. விளைவாக அது மக்களை கொடுமையாக ஒடுக்கியது. லட்சக்கணக்கில் ஏழை எளிய மக்களை அது பலிகொண்டது. எந்த முறையில் தாங்கள் அதிகாரத்தை பிடித்தோமோ அதேபோல தங்கள் அதிகாரமும் பிடுங்கப்படும் என்ற சந்தேகம் அதை வாட்டியது. ஆகவே தலைமை தன் அணிகளையே சந்தேகப்பட்டது. தனக்குள்ளேயே கொன்றுகொண்டது. இருபது வருடங்களுக்குள்பொட்டுமொத்த புரட்சித்தலைமையும் ஒருவரை ஒருவர் கொன்று அழிந்தது.

கியூபவின் புரட்சியும் இதேபோன்ற ஒரு வரலாற்றுத்தற்செயல் மட்டுமே. சிலநூறுபேர் கொண்ட இளைஞர் குழு விளையாட்டாக, உற்சாகமாகக் கிளம்பி தலைநகரைக் கைப்பற்றி ஆட்சியமைத்தது. சோவியத் ருஷ்யாவின் துணை இருந்தமையால் அந்த ஆட்சி நீடித்தது. அந்த நிகழ்ச்சியை வரலாற்றின் பொன்விதி என புரிந்துகொண்டார் சே. அதை அப்படியே பிறநாடுகளிலும் செயல்படுத்த முயன்றார்.

ஒரு நாட்டில் ஒருசில புரட்சியாளர்களை திரட்டி அவர்களைக் கொண்டு அந்நாட்டின் மைய அதிகாரத்தை எதிர்பாராமல் தாக்கி அதிகாரத்தைக் கைப்பற்றிவிடுவதே அவரது அரசியல் திட்டம். அதன்பின்னர் அவர்கள் செய்யும் மக்கள்நல' சீர்திருத்தங்கள் மூலம் மக்கள் ஆதரவு கிடைக்கும் என்பது நம்பிக்கை. அந்தவழிமுறைப்படி காங்கோவில் ஆட்சியைப்பிடிக்க முயன்று அது படுதோல்வியடைவதைக் கண்டார். அதையே சலிக்காமல் மீண்டும் பொலிவியாவில் செயல்படுத்த முயன்றபோது விவசாயிகளாலேயே காட்டிக்கொடுக்கப்பட்டு கொல்லப்பட்டார். சேவின் மரணம் அவரது அபத்தமான வரலாற்றுப்புரிதலுக்கு கிடைத்த விலை. ஒரு தேசத்தின் லட்சக்கணக்கான மக்களின் கருத்துநிலையை அறவே உதாசீனப்படுத்திவிட்டு, புரட்சியாளர் என்னும் தேவதூதர்களின் அளவிலா அதிகாரத்தையும் வலிமையையும் நம்பிய மேட்டிமைவாதத்தின் விளைவு அது. சே உயிருடன் இருந்திருந்தால் அண்டோனியோ கிராம்ஷியின் நூல்களை முப்பதுமுறை பிரதிசெய்யவேண்டும் என்ற தண்டனையை அவருக்குக் கொடுக்கலாம். ஒரு சமூகத்தின் அதிகாரம் அதன் அரசில் இல்லை, அச்சமூகத்தின் மனத்தில் கருத்தியல் வடிவில் பரவியிருக்கிறது என அவர் புரிந்துகொண்டிருப்பார்

சேவின் வழிமுறைகளை நம்பி உலகமெங்கும் புரட்சியாளர் குழுக்கள் வன்முறைமூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற முயன்றன.

இளமையில் சேவின் கொள்கை அளவுக்கு நம்மை கவரும் எதுவும் இருப்பதில்லை. மக்களை ஒன்றும் தெரியாத மந்தைகளாகவும் நம்மை எல்லாம் தெரிந்த புரட்சியாளர்களாகவும் நாம் கற்பனைசெய்துகொள்கிறோம். நாம் மக்களை வழிநடத்திச்செல்ல விரும்புகிறோம். அதற்கு ஒப்புக்கொள்ளாத 'அறிவில்லாத' மக்களைக் கொல்லவும் நமக்கு தயக்கம் இருப்பதில்லை. அவ்வாறு உலகமெங்கும் தோன்றிய புரட்சிக்குழுக்கள் அனேகமாக அனைத்துமே கொடூரமாக ஒடுக்கப்பட்டன. பல லட்சம் இளைஞர்கள் உயிர் துறந்தார்கள்

இந்தியாவில் நகசலைட் இயக்கம் சேவின் முன்னுதாரணத்தை நம்பி எழுந்தது. சே அவர்களின் ஆதர்ச பிம்பம். நக்சலைட் இயக்கம் ஒடுக்கப்பட்டபோது வங்காளத்தில் மட்டும் 50000 இளைஞர்கள் கொல்லப்பட்டார்கள் இந்தியா முழுக்க கிட்டத்தட்ட 70000 பேர். ஆம் எழுபதாயிரம் படித்த துடிப்பான இளைஞர்கள். கனவுகளும் லட்சியங்களும் கொண்டவர்கள். மனிதாபிமானமும் அறவுணர்வும் கொண்டவர்கள். வரலாற்றுப்பிழையின் பலிகள். அவர்களில் கால்வாசிபெபெர்தான் நக்சலைட்டுகளாக இருப்பார்கள். மற்றவர்கள் நடுவே மாட்டிக்கொண்ட அப்பாவிகள்.

இலங்கையில் எழுபதுகளில் சே வை முன்னுதாரணமாகக் கொண்டு எழுந்த ஜனதா விமுக்தி பெருமுனே என்னும் சிங்கள மார்க்சிய அமைப்பு அந்த அரசால் வேருடன் பிடுங்கி அழிக்கப்பட்டது. கிட்டத்தட்ட எழுபதாயிரம் பேர் சிங்கள அரசால் கொல்லப்பட்டார்கள். அவர்களில் உண்மையான புரட்சியாளர்கள் அதிகம் போனால் பத்தாயிரம்பேர் இருப்பார்கள். மீதியெல்லாம் ஏழைச் சிங்கள இளைஞர்கள்.

சே குறைவான காலமே கியூபாவில் இருந்தார். அதற்குள் அவருக்கும் காஸ்டிரோவுக்கும் கடுமையான முரண்பாடுகள் உருவாகின. சே பொலிவியாவுக்குப் போய் சாவதற்கான காரணத்தை நாம் இங்குதான் தேடவேண்டும். கியூபாவிலேயே சே கொல்லப்படாமைக்குக் காரணமே அவர் கியூபாவின் அரசியலை முற்றாக கைவிட்டுவிட்டு பொலிவியாவுக்குப் போகத்தயாராக இருந்ததுதான்.

கியூபாவை கம்யூனிச நாடாக உருவாக்குவதில் சேவின் எல்லா திட்டங்களும் தோல்வியையே அடைந்தன. காரணம் மக்களை கொஞ்சம் கூட பொருட்படுத்தாமல் தானே எல்லாவற்றையும் தீர்மானிக்கும் 'அறிவொளி' பெற்ற செயல்பாட்டாளரின் பார்வைதான். நான் வரலாற்றை அறிந்த புரட்சியாளன் நான் சொல்லுவதுபோல மக்களும் வரலாறும் மாறவேண்டும் என்ற எண்ணம்.

சே தொடர்ந்து கியூபாவில் பதவியில் இருந்திருந்தால், அல்லது ஒரு வேளை வேறு நாட்டை வென்று ஆட்சியமைத்திருந்தால் மாவோ சே துங் சீனாவில் செய்தது போன்ற அதே பேரழிவை தானும் செய்திருப்பார். மாவோ சீனாவை 'முன்னேற்ற' தான் வைத்திருந்த திட்டங்களை மூர்க்கமாக அம்மக்கள் மேல் திணித்தார். அதை கலாச்சாரப் புரட்சி என்னும் பேரால் அழைத்தார். அதன் மூலம் லட்சக்கணக்கான மக்களை கொன்றொழித்தார் என்பது வரலாறு.

சே அதே மனநிலை கொண்டிருந்தார். அதாவது தன் மக்களுக்கு நல்லது என நினைத்து தனக்குப்பிடித்தவனுக்கு அவளை பலவந்தமாகக் கட்டிவைக்கும் தகப்பனின் மனநிலை. கியூபாவில் சே செய்த விவசாய சீர்திருத்தங்கள் விவசாயத்தைப்பற்றி ஒன்றுமே தெரியாத புத்தகப்புழு செய்த அபத்தமான முயற்சிகள். ஆனால் அதன்பொருட்டு மூன்று வருடம் சே கியூப விவசாயிகளை ரத்தம் பெருகச் செய்தார்.

சேயின் முன்னுதாரணத்தை நம்பி புரட்சியில் ஈடுபட்டு, அப்புரட்சி தோற்று, கொல்லப்பட்டவர்கள் பல லட்சம் . அதேபோல சே'யை முன்னுதாரணமாகக் கொண்டு புரட்சி செய்து ஆட்சியைப் பிடித்து அம்மக்களை தன் விருப்பபடி மாற்ற முயன்று, அடிமைகளாக ஆக்கி, லட்சக்கணக்கில் கொன்றவர்களும் பலர் உண்டு. இரண்டு உதாரணங்கள். ஒன்று கம்போடியாவின் இடதுசாரித்தலைவரான போல்பாட். எழுபதுகளில் அவர் கம்போடிய சே என்றே அழைக்கப்பட்டார். அவர் கொன்றழித்த மக்கள் முப்பது லட்சம். நாட்டின் மொத்த மக்களில் மூன்றில் ஒரு பகுதி. இன்னொருவர் வடகொரியாவின் கிம் இல் சுங். அவர் கொன்ற லட்சங்கள் இன்னும் கணக்கிடப்படவில்லை.

சே மாபெரும் மனிதாபிமானி. ஆனால் மனித குலத்துக்கு நன்மை செய்தவரல்ல. மக்களை நேசித்த, அம்மக்களிடம் இருந்து கற்றுக்கொண்ட காந்தியிடமும் நெல்சன் மண்டேலாவிடமும் அவரை ஒப்பிடுவது அபத்தமானது. கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கை என்பது ஒரு பெரும் பிரவாகம் என்றும், அதில் தன் சிந்தனையும் கனவும் அகங்காரமும் துளியினும் துளியே என்றும் உணர்ந்தவனே தலைவன். அவன் மக்களில் ஒருவராக நின்று மக்களை வழிநடத்துவான். மக்களுக்கு அப்பாற்பட்ட தெய்வ பீடத்தில் இருந்து கட்டளையிட மாட்டான். ஒருபோதும் ஒருபோதும் அவர்களை அழிவைநோக்கி கொண்டுசெல்லமாட்டான்.

---

இரு காந்திகள்.

தொண்ணூறுகளின் தொடக்கத்தில் தமிழகத்தில் இறால்மீன்பண்ணைகளுக்கு எதிரான போராட்டம் ஒரு முக்கியமான சமூக நிகழ்வாக இருந்தது. வளமான தஞ்சை நிலப்பகுதியில் கடலோரமாக அரசு இறால் பண்ணைகளை உருவாக்க அனுமதி கொடுத்தது. உண்மையில் அது நல்லெண்ணத்துடன் மயிலாடுதுறையைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் மணிசங்கர் அய்யரால் கொண்டுவரப்பட்டது. அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கும் திட்டம் என்று அது சொல்லப்பட்டது. மனிசங்கர் அய்யர் பழைய மஹாலானோபிஸ் காலகட்டத்து தொழில்மயமாக்க நினைவுகளில் வாழ்பவர். அவருக்கு அத்திட்டத்தின் சூழியல் சிக்கல்கள் சொல்லபட்டவில்லை. அல்லது சொன்னாலும் உறைக்கவில்லை.

கீழத்தஞ்சைப்பகுதியின் இய்ற்கை அமைப்பு தனித்தன்மை கொண்டது. கடலை ஒட்டிய வரை வயல்வெளிகள். கடலோரமாக ஆற்றுவண்டலால் உருவாகும் சதுப்புநிலமே கடலின் உப்புநீர் வயல்வெளிக்குள் ஊறிவராமல் தடுக்கிறது. இந்த சதுப்புநிலம் ஒரு வீண்நிலம் அல்ல. ஒருவகையான இயற்கைக் கோட்டை. இதை அழித்துவிட்டு இங்கே இறால் பண்ணைகள் கொண்டுவருவதே திட்டம்.

இதன்படி இச்சதுப்புநிலங்கள் நீண்டகாலக் குத்தைகைக்கு இறால்முதலாளிகளுக்கு வழங்கப்பட்டன. இதை ஒட்டிய வயல்பரப்புகளையும் அவர்கள் விலைக்கு வாங்கிக்கொண்டார்கள். இங்கே உப்பளம்போல பெரிய பாத்தி கட்டி அங்கே கடலின் உப்புநீரை தேக்கி அதில் இறால்களை வளர்த்தார்கள். உப்பு நீர் ஊறி அதற்குப்பின்னால் உள்ள வயல்வெளிகளின் மண்ணை முழுக்க உப்பாக்கியது.

இதற்கெதிராக தன்னிச்சையான விவசாயிகள் எதிர்ப்பு உருவாகியது. இறால் பண்ணைகளின் முதலாளிகள் அரசியல்வாதிகள் என்பதனால் அனேகமாக எந்த அரசியல் கட்சியும் அப்போராட்டத்தை பெரிதாக ஆதரிக்கவில்லை. இந்தியக்கம்யூனிஸ்டுக்கட்சியின் ஆதரவு இருந்தாலும் அது போராட்டத்தை முன்னெடுக்கவில்லை.

இந்நிலையில் இடதுசாரி தீவிர இயக்கங்கள் உள்ளே புகுந்தன. இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி ஊக்கமெடுக்காததன் இடைவெளியை பயன்படுத்துவதே அவர்களின் நோக்கம். தமிழகம் முழுக்க 'இறால் பண்ணை அழிப்பு போராட்டம்' என்று ஆளுயரத்திற்கு எழுதிப்போட்டார்கள். கூடவே பாராளுமன்றன் பன்றிகளின் தொழுவம், இந்தியதேசியம் ஒரு மாமாவேலை போன்ற வசைகள். தனித்தமிழ்நாட்டுக்கோரிக்கையையும் இறால்பண்ணை ஒழிப்பையும் இணைத்துக்கூட துண்டுபிரசுரங்களைக் கண்டிருக்கிறேன். ஆனால் ஒரு பெரிய வன்முறை வெடிக்கும் என்ற எண்ணம் சுவரெழுத்துக்கள் மூலம் உருவாக்கபப்ட்டது.

திருவாரூரில் அவர்கள் நடத்திய இறால்பண்ணை அழிப்பு போராட்ட நாளில் நான் அங்கே இருந்தேன். பதினேடு பேர் பேருந்து நிலையம் அருகில் இருந்து கிளம்பினார்கள். பல இடங்களிலும் தேடியபின் யாரோ கொண்டுவைத்திருந்த ஒரு மண்வெட்டியை ஒருவர் கையில் வாங்கிக்கொண்டார். கிளம்பி கோஷங்கள் போட்டபடி நடந்தார்கள். இந்தியாவே தமிழகத்துக்கு விடுதலைகொடு, காசுமீரத்தை நசுக்காதே, போன்ற பல கோஷங்கள் நடுவே இறால் பண்ணை பற்றியும் ஒலித்தது. இருநூறடி தூரத்துக்குள் அவர்களை போலீஸ் கைது செய்து வேனில் ஏற்றி கொண்டு சென்றுவிட்டார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு போலீஸ் இறால் பண்ணைகளுக்கு கடுமையான காவல் போட்டதுடன் அதற்கு எதிராகப் போராடிய விவசாயிகளை நக்சலைட் முத்திரை குத்தி கடுமையாக ஒடுக்கவும் ஆரம்பித்தது. இறால்பண்ணை எதிர்ப்புப் போராட்டம் நின்றது. இடதுசாரி தீவிர இயக்கங்கள் தமிழிசை கோரி இசை எதிர்ப்புப் போராட்டத்துக்கு சுடச்சுட நகர்ந்தார்கள்.

இந்நிலையில்தான் சர்வோதயத் தலைவரான ஜெகன்னாதனையும் கிருஷ்ணம்மாளையும் கண்டு விவசாயிகள் தங்களுக்கு உதவும்படி அழைத்தார்கள். ஜெகன்னாதன் அவர்களிடம் தன்னுடைய போராட்டத்தால் அவர்களுக்கு இழப்பு ஏதும் இருக்காது, ஆனால் பலன் பெற சற்றே தாமதமாகும் என்றார். அதுவரை கட்சி பேதம் இல்லாமல் மனம் சோர்வுறாமல் கூடவே நிற்க வேண்டும், முடியுமா என்றார். விவசாயிகளுக்கு வேறு வழியே இல்லை.

[Click for a larger view]

முதலில் கிராமம் கிராமமாகச் சென்று கூலித்தொழிலாளர்கள் பெண்கள் போன்றவர்களை திரட்டி அவர்களிடம் விஷயத்தை விளக்கினார் ஜெகன்னாதன். உண்மையில் அதை அன்றுவரை எவருமே செய்யவில்லை. போராட்டத்தில் பாதிக்கப்பட்ட அனைவருமே, குழந்தைகள் உட்பட, கலந்துகொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். அதற்கு அம்மக்களின் ஆயிரம் பிரச்சினைகளை அவர் பஞ்சாயத்து செய்து தீர்க்க வேண்டியிருந்தது.

அதன் பின் ஒட்டுமொத்தக் கோரிக்கைகளை உருவாக்கி அரசுக்கு அனுப்பினார். எல்லா அதிகார வாசல்களையும் முறைப்படி தட்டினார். கோரிக்கைகளுக்கு அரசும் அதிகார வர்க்கமும் குறைந்தபட்ச வாக்குறுதிகளையாவது அளிக்க வேண்டியிருந்தது. இந்திய ஜனநாயகம் அளித்த எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்திக்கொள்வது அவரது வழிமுறை. தங்களுக்கு ஆதரவான எல்லா சக்திகளையும் கூடவே சேர்த்துக் கொண்டார். குறிப்பாக இந்திய கம்யூனிஸ்டுக்கட்சி அவருக்கு உறுதுணையாக இருந்தது. ஊடகங்கள் அனைத்திலும் தொடர்ச்சியாக செய்திகள் வரச்செய்தார். உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார்.

அன்று நாடெங்கும் நடந்துவந்த சூழியல் போராட்டங்களுடன் தன் போராட்டத்தையும் இணைத்து அதற்கு ஒரு தேசிய முக்கியத்துவத்தை உருவாக்கினார். தஞ்சைக்கு வந்தனா சிவா, மேதாபட்கர், சுந்தர்லால் பகுகுணா போன்றவர்கள் வந்தார்கள். அதன் பின் முன்னைப்போல ஒரு மாவட்டப்போலீஸ் அதிகாரியோ ஆட்சியரோ அவரது விருப்பப்படி தீர்மானிக்கும் விஷயமாக அது இருக்கவில்லை

தொடர்ச்சியான மக்கள் போராட்டங்களை நிகழ்த்தினார் ஜெகன்னாதன். ஏராளமான மக்கள் குடும்பம் குடும்பமாக பங்கேற்கக் கூடிய முற்றிலும் வன்முறை இல்லாத போராட்டங்கள் அவை. அவற்றுக்கு வன்முறை முத்திரை குத்த அரசோ முதலாளிகளோ முடியாதவாறு பார்த்துக் கொண்டார். போராட்டம், பேச்சுவார்த்தை, வாக்குறுதிகளைப் பெறுதல், பெற்ற வாக்குறுதிகளுக்கு மேல் மீண்டும் போராட்டம் என்று விடாப்பிடியாக நிகழ்வது இப்போராட்டம்.

ஜெகன்னாதன் தொடுத்த வழக்கில் உச்ச நீதிமன்றம் 1996ல் இறால்பண்ணைகளுக்கு தடை விதித்தது. அந்த தீர்ப்பை விளக்கும் கூட்டத்துக்கு சென்னையில் நான் சென்றிருந்தேன். சுந்தர்லால் பகுகுணாவை அங்குதான் சந்தித்தேன். அந்தக் கூட்டம் பற்றி தினமணியில் ஒரு குறிப்பும் எழுதினேன். சுந்தர்லால் பகுகுணாவுடன் ஒரு பேட்டி எடுத்தேன். ஆனால் அதை எந்த இதழும் அப்போது பிரசுரிக்கவில்லை. ஒரு வார இதழ் சிறிய குறிப்பாக மாற்றி அச்சிட்டது, அவ்வளவுதான்.

வழக்கை அமுல்படுத்தக்கோரி மீண்டும் போராட்டம் நடத்தினார் ஜெகன்னாதன். நீதிமன்ற அவமதிப்பு வழக்கும் தொடுத்தார். அதற்குள் புதிய இறால்பண்ணைகளுக்கான பெரும் திட்டங்கள் கைவிடப்பட்டன. முதலீடுகள் செய்தவர்கள் வேறுவழியில்லாமல் சட்டத்தை பயன்படுத்தி போராடிக் கொண்டிருந்தாலும் இறால்பண்ணைகள் அனேகமாக நின்றுவிட்டன.

ஜனநாயகத்தில் எந்த ஒரு போராட்டமும் ஒரு சமரசம் மூலமே முடிய முடியும்.அந்த சமரசத்தின் விளைவு போராடுபவர்களுக்கு பெருமளவுக்குச் சாதகமாக இருந்தால் அதுவே வெற்றி. தஞ்சைப்பகுதி விவசாயிகள் இன்றும் நினைவுகூரும் ஒரு போராட்டம் அது என சென்ற வருடம் திருவாரூர் சென்றபோது உணர்ந்தேன்.

இந்தப் போராட்டகாலத்தில் நான் ஜெகன்னாதனைச் சந்திக்கச் சென்றேன். அப்போது அவர் திருத்துறைப்பூண்டி அருகே ஒரு சிற்றூரில் தங்கியிருந்தார். அப்போதே மூப்பின் தளர்ச்சிக்கு ஆளாகியிருந்தார். கிருஷ்ணம்மாள் என்னிடம் சுருக்கமாகப் பேசினார். 'போராட்டம்னு போயி அந்த ஜனங்கள் கையில வச்சிருக்கிறதை தொலைக்க விடப்பிடாதில்லியா? அவங்களுக்கு நெலம் வேணும். வெள்ளாமை செய்யணும். அதுக்குண்டானதை செய்ய வேண்டியதுதான்'

காந்தியப்போராட்டத்தின் மூன்று அடிப்படைகளைச் சுருக்கமான சொற்களில் கிருஷ்ணம்மாள் சொன்னார். ஒன்று ''நம்ம மறுதரப்புக்கும் அவனுக்கான நியாயங்களும் வாழ்க்கையும் எல்லாம் உண்டு. அவன் அழிஞ்சு நாம வாழவேண்டாம். நம்மளை அவன் அழிக்கவும் வேண்டாம். அவனுக்கு என்ன சொல்ல இருக்குன்னு கேப்போம்ஸ''

இரண்டு. ''காந்தியப்போராட்டம்னா பிடிவாதமா தொடர்ச்சியா போராடிக்கிட்டே இருக்கிறது. போராட்டம் பின்னாடிப்போறதுன்னா அப்ப நிப்பாட்டிக்கிடறது. பேச்சுவார்த்தைக்கு எந்த சந்தர்ப்பம் கெடைச்சாலும் அதை விடுறதில்லை.பேச்சுவார்த்தையும் போராட்டம்தாங்க''

மூன்று''சட்டபூர்வமாத்தாங்க எல்லாத்தையும் செய்யணும். அப்பதான் பேசுறதுக்கு எடம் இருக்கும். ஒரு சட்டத்தை எதுக்கறதா இருந்தா அதுகுண்டான காரணங்களை சொல்லிட்டு திட்டவட்டமா எதுக்கணும். அதையும் சட்டபூர்வமா செய்யலாம். சட்டத்தை மீறணுமானா அதையும் ஒரு மக்கள் போராட்டமாத்தான் செய்யணும்''

கிருஷ்ணம்மாள் சற்று கறாரான பேச்சும் கடுமையான சொற்களும் கொண்டவராக இருந்தார். ஜெகன்னாதனின் உடல்நிலை சார்ந்து அதிகமான கவனம் எடுத்துகொண்டார். அவரை பத்து நிமிடங்களுக்கு மேலாகப் பேசவிடவில்லை. என்னையும் அரைமணிநேரத்தில் கிளப்பிவிட்டுவிட்டார். ஜெகன்னாதனுக்கு இறைநம்பிக்கை இருந்ததா என்று ஊகிக்க முடியவில்லை. கிருஷ்ணம்மாள் அடிக்கடி கடவுளைப்பற்றிச் சொன்னார். ஏராளமானவர்களிடம் தினமும் பேசிபெசி மிக தேவையான விஷயங்களை மட்டும் ரத்தினச்சுருக்கமாக பேசி அடுத்த ஆளை நோக்கி சென்றுவிடும் வழக்கம் இருந்தது.

கிருஷ்ணம்மாளுக்கு அப்போதே கைகளும் தலையும் சற்று நடுங்க ஆரம்பித்திருந்தன. ஜெகன்னாதனுக்கு மறதியும் இருந்தது. அந்த முதிய தம்பதிகள் அதிகம் பேசிக்கொள்ளாமல்
ஒருவரோடொருவர் காட்டிய பிரியமும் அக்கறையும் — அதை
அவர்கள் இயல்பாக ஒருவருக்கொருவர் ஒத்திசைவுகொண்டு
வாழ்ந்த முறை என்று சொல்லலாம் — என்னை மிகவும் நெகிழச்செய்தன அவர்களின் மிக எளிமையான அன்றாட வாழ்க்கை காந்திக்கு உகக்கும் விதமாகவே இருந்தது. காந்தியத்தின் சமகால முக்கியத்துவத்தை நான் அறிந்தது அப்போராட்டங்கள் மூலமே.

கிருஷ்ணம்மாளுக்கு இப்போது 82 வயது. [1926] மாற்று நோபல் என்று அழைக்கப்படும் வாழ்வாதார உரிமைக்காப்பு விருது அவருக்கு இவ்வருடம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஏழை தலித் குடும்பத்தில் பிறந்த கிருஷ்ணம்மாளை அவரது பெற்றோர் 10 வயதில் காந்தியவாதியும் சர்வோதய தலைவருமான சௌந்தரம் ராமச்சந்திரனிடம் கொண்டுசென்று விட்டுவிட்டார்கள். அவர் காந்திய இயக்கங்களிலேயே வாழ்ந்தவர். காந்தி நடத்திய போராட்டங்களில் கலந்து கொண்டவர். காந்தியுடன் ஒரே கூட்டமேடையில் அமர்ந்து பேசியவர்.

1950 ல் சர்வோதய இயக்க போராளியான ஜெகன்னாதனை கிருஷ்ணம்மாள் திருமணம் செய்துகொண்டார். நிலமில்லா விவசாயிகளுக்காகப் போராடுவதகாக 'காந்தி அமைதி நிலையம்' என்ற அமைப்பை 1969 ல் அவர்கள் இருவரும் சேர்ந்து அமைத்தார்கள். அவர்களுக்கு உபரி நிலங்களைப் பெற்றுத்தருவதற்கான இயக்கமாக LAFTI [Land For The Tillers Freedom] என்ற அமைப்பை 1981 ல் ஆரம்பித்தார்கள். ஆக்ரமிப்பில் இருந்த பல ஆயிரம் பொது நிலங்களைக் கண்டடைந்து சட்டபூர்வமாகப் போராடி நிலமில்லா விவசாயிகளுக்குப் பெற்றுத்தந்திதிருக்கிறார்கள்.. கிட்டத்தட்ட 13000 ஏக்கர்.

சங்கரலிங்கம் ஜெகன்னாதனுக்கு இப்போது 95 வயது. நினைவாற்றல் பெரும்பாலும் இழந்த நிலையில் உள்ளது. செல்வந்தக் குடும்பத்தில் பிறந்த ஜெகன்னாதன் 1930 ல் காந்தியின் அறைகூவலை ஏற்று படிப்பை உதறி சுதந்திரப் போராட்டத்தில் குதித்தார்.உப்பு காய்ச்சும் போராட்டத்தில் ஈடுபட்டு சிறைசென்றார். பின்னர் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் சிறைசென்று சுதந்திரம் கிடைப்பதுவரை சிறையில் இருந்தார். சுதந்திரம் கிடைத்தபின்னரே திருமணம் செய்துகொள்வது என்ற எண்ணம் இருந்தமையால் 1950 ல் பூதான் இயக்கத்தில் இருந்த கிருஷ்ணம்மாளை மணம் புரிந்துகொண்டார். வினோபா பாவேயின் பூதான் இயக்கத்திலும் பின்னர் சர்வோதய இயக்கத்திலும் தொடர்ந்து எழுபதாண்டுகளாக சமூகப்பணியில் ஈடுபட்டிருக்கிறார்.

சோலை எழுதிய 'புரட்சியில் பூத்த மலர்கள்' என்ற வாழ்க்கை வரலாறு ஜெகன்னாதன் கிருஷ்ணம்மாள் தம்பதியின் சலியாத போராட்ட வாழ்க்கையைப்பற்றிய சிறந்த ஆவணம். 1987 ல் சுவாமி பிரணவானந்தா விருது, 1988 ல் ஜம்னாலால் பஜாஜ் விருது, 1989 ல் பத்மஸ்ரீ விருது, 1999 ல் சுவிட்சர்லாந்து காந்தி அமைதிவிருது ஆகியவற்றை இத்தம்பதியினர் பெற்றுளனர். வாஷிங்டன் சியாட்டில் பல்கலை ஓபஸ் விருது அறிவித்திருக்கிறது. கடைசியாக ஸ்வீடனின் பெருமைக்குரிய விருது. [Rightlivelihood Award] சோமாலிய சமூகப்பணியாளர் ஆஷா ஹாகி, அமெரிக்கச் செய்தியாளர் அமி, ஜெர்மனிய டாக்டர் மோனிகா ஆகியோருக்கு இவருடன் சேர்ந்து பகிர்ந்து அளிக்கப்படுகிறது.

எல்லா விருதுகளையும் தங்கள் சேவையிலேயே செலவிட்டிருக்கிறார்கள் இத்தம்பதியினர். மாற்று நோபல் பரிசு கிட்டத்தட்ட 34 லட்ச ரூபாய் அடங்கியது. அதைக்கொண்டு ஒரு இலவச வீடுகட்டும் இயக்கத்தை ஆரம்பிக்கவேண்டும் என்று

திட்டமிட்டிருக்கிறார் கிருஷ்ணம்மாள்.

என்ன காரணத்தால் காந்தி புத்தர் ஏசு வரிசைக்கு வைக்கப்படுகிறார்? என்னிடம் மறைந்த சிற்பி லாரி பேக்கர் சொன்னார் 'புத்தர் நிறைய புத்தர்களை உருவாக்கினார். ஏசு பல்லாயிரம் ஏசுக்களை உருவாக்கினார். காந்தி ஏராளமான காந்திகளை உருவாக்கியிருக்கிறார்' . லாரி பேக்கர் கூட காந்தி உருவாக்கிய ஒரு காந்திதான்.

நம் கண்முன் வாழும் இரு காந்திகள். காந்திக்கு மரணம் இல்லை.

http://www.rightlivelihood.org/jagannathan_pictures.html
http://www.rightlivelihood.org/jagannathan.html

---

காந்தியின் எளிமையின் செலவு
சமீபத்தில் ஒரு விவாதத்தில் நண்பர் ஒருவர் சொன்னார். ''காந்தியின் எளிமை மிகவும் செலவேறியது என்று சரோஜினி நாயிடு சொன்னதாகப் படித்தேன். ..''அவர் மூன்றாம் வகுப்பில்போகும் செலவில் ஐம்பதுபேர் முதல்வகுப்பில் போகலாமென்று சரோஜினி நாயிடு சொல்லியிருக்கிறார். அதற்கு ஒரு நாள் முன்புதான் அஜிதனிடம் அதைப்பற்றி பேசிக் கொண்டிருந்தேன் — காந்தியின் மூன்றாம் வகுப்புப் பயணம் பற்றிய சரோஜினி நாயுடுவின் கிண்டலை.

அதை வரலாற்றுரீதியாகப் பார்க்க வேண்டும். நமது ஆரம்பகால தேசத்தலைவர்களெல்லாம் அடிப்படையில் சாமானியர்கள். ஆனால் தொடர்ச்சியாக மகாராஜாக்களின், வைஸ்ராய்களின், வாழ்க்கையை பார்த்துக்கொண்டே இருந்திருக்கிறார்கள். ராஜரீகம் என்றால் அரசத்தோரணை என்பதை கண்டு கற்று வளர்ந்தவர்கள்தானே அவர்கள்? காந்தி அவர்களை கதர் துணியிலும் எளிமையிலும் கட்டிப்போட்டிருந்தார். உள்ளே அவர்களின் ஆத்மா ஏங்கிக் கொண்டிருந்தது. இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்ததுமே நமது காங்கிரஸ் தலைவர்கள் அனைவருமே வைஸ்ராய் ஆகும் கனவுகளை வளர்க்க ஆரம்பித்துவிட்டார்கள்.

அக்கால நம் தலைவர்களின் அந்தரங்கங்களைப்பற்றி எழுதிய அதிகாரமட்டத்தினர் அனைவருமே சொல்லியிருக்கும் ஒரு விஷயம் உண்டு— நேரு பட்டேல் உட்பட எவரும் 1946 வரைகூட இந்தியாவுக்கு முழுச் சுதந்திரம் கிடைக்கும் என்றும் அதில் தாங்கள் உயர்பதவி வகிக்க முடியும் என்றும் கனவு கண்டதில்லை. அந்த வாய்ப்பு வந்ததுமே அவர்களின் உச்சகட்ட கனவுகள் கூட கண்ணெதிரே வந்து நின்றன. கையெட்டும் தூரத்தில் ஒளிவிட்டன. அவர்கள் தடையாகக் கண்டது காந்தியைத்தான். ஆகவே அந்த கணமே காந்தியை உதறியும் விட்டார்கள். வட்டமேஜை மாநாட்டை சாணிமெழுகிய தரையில் அமர்ந்துகூட நடத்தலாம் என்றும் வைஸ்ராய் மாளிகையை மியூசியம் ஆக்கலாம் என்றும் சொன்னவர் கிழவர்.

ஆட்சி மாறியதும் தங்கள் மாளிகையை மறுசீரமைப்பு செய்யவே காங்கிரஸ் ஆட்சியாளர்கள் லட்சங்களை அள்ளியிறைத்தார்கள் என்பது வரலாறு. முதல் குடியரசுத்தலைவரான ராஜேந்திர பிரசாத் தனக்குரிய வேலையாட்கள் மற்றும் அலங்காரங்களுடன் வைஸ்ராய் மாளிகையை மேலும் அழகுபடுத்தி மேலும் பலநூறு வேலையாட்களை கொண்டுவந்தார். மாளிகையை கங்கை நீரில் கழுவி மாபெரும் வேள்விகளை செய்தார். சரோஜினி என்ற 'சூடோ போயட்' அவரது மகள் பத்மஜா நாயிடு வழியாக நேருவுடன் இருந்த உறவைபயன்படுத்தி பெரும் பதவிகளை பெற்றார். நேரு குடும்பமே ஒரு சக்ரவர்த்தி குடும்பத்தின் சொகுசுகளையும் பகட்டுகளையும் அனுபவிக்க ஆரம்பித்தது. குறிப்பாக விஜயலட்சுமி பண்டிட் எப்போதுமே தன்னை இந்தியப் பேரரசியாக எண்ணி வந்தவர்.

உத்தரபிரதேச கவர்னராக இருந்த சரோஜினி நாயிடு வைஸ்ராய்க்கு உரிய புகழ்பெற்ற ராஜரீக தனி ரயிலில் சிம்லா சென்றார். முழுக்க பொன்னாலும் பட்டாலும் ஆன அரண்மனை அது. அதைப்பற்றி கேரள இதழாளர் ஒருவரின் கேள்வி எழுந்தது, காந்தி மூன்றாம் வகுப்பில்தானே சென்றார் என்று. அதற்கு அம்மையார் சொன்ன பதில்தான் காந்தியைப்பற்றிய விமரிசனம். அது காந்திய அறக்கோட்பாடுகளை உதறத்துடித்த காங்கிரஸின் குரல். காங்கிரஸில் எவருமே காந்திக்காக வாதிடவில்லை — அவர்கள் சிம்லா ரயில்களை நியாயப்படுத்தியாகவேண்டிய நிலையில் இருந்தார்கள்.

காங்கிரசுக்கு காந்தி காலத்தில் கிட்டத்தட்ட நாலரை லட்சம் முழுநேர ஊழியர்கள் இருந்தார்கள். சம்பளம் பெறும் ஊழியர்கள். அவர்களுக்கு மாதம் எட்டணா ஊதியம் அளிக்கப்பட்டது. படுகேவலமான வறுமையில்தான் அவர்கள் வாழ்ந்தாக வேண்டும். வக்கீல்கள், ஜமீந்தார் பிள்ளைகள், பட்டதாரிகள் அந்த 'வருமானத்துக்குள்' வாழ்ந்து ஊர் ஊராகச் சென்று பணியாற்றினார்கள். வெறுந்தரையில் படுத்து இரந்து உண்டு கால்நடையாக அலைந்தார்கள். நவீன இந்தியாவின் எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள், புரட்சியாளர்கள் பெரும்பாலானவர்கள் இந்த நாலரைலட்சம் பேரிலிருந்துதான் வந்திருக்கிறார்கள். பிரேம்சந்த்,பஷீர்,பன்னலால் பட்டேல்,தாராசங்கர் பானர்ஜி, சிவராமக் காரந்த், விபூதிபூஷன் முதல் சி.சு.செல்லப்பா வரை முதல் தலைமுறை இலக்கியவாதிகள் அனைவருமே அந்த பராரிகளில் இருந்து எழுந்தவர்களே. அந்த எளிமையில் உள்ள அவர்களின் தியாகமே எளிய மக்களை காங்கிரஸை நோக்கி இழுத்தது.

எண்ணிப்பாருங்கள், காந்திவரும்வரை காங்கிரஸில் அந்தப் பண்பாடு இருந்ததா? சட்டமேதைகளும் பேராசிரியர்களும் முதல்வகுப்பில் சென்று கட்சிகட்டிய காலம் அது. வருடம்தோறும் மாநாடு போடுவதற்கு அல்லாமல் எதற்கும் காங்கிரஸ் கூடாமலிருந்த காலம். [உண்மையில் காங்கிரஸ் என்ற பேரே மாநாடு என்ற பொருளில் போடப்பட்டது. வெறுமெ கூட்டங்கள் நடத்துவதற்கு மேலாக காங்கிரஸை ஒருவெகுஜன இயக்கமாக ஆக்கும் நோக்கமேதும் முன்னோடிகளுக்கு இருந்ததில்லை.] எளிய மக்களுக்கும் அவர்களுக்கும் தொடர்பும் இல்லை. காந்தி எப்படி பலலட்சம் ஊழியர்களை கவர்ந்தார்? கோகலேயிடமும் திலகரிடமும் இல்லாத எது அவரிடம் இருந்தது? எளிமை. முன்னுதாரணமான எளிமை.

காந்தி உடுத்த எளிய உடை,சாப்பிட்ட அலுமினியத்தட்டு, தூங்கிய கோரைப்பாய், உடல் தேய்த்துக் குளித்த வெள்ளைக்கல் இவற்றுடன் அவர் வேறு எந்த பெட்டியில் பயணம் செய்ய முடியும்?தன் எளிமையை காந்தி ரகசியமாக வைத்திருக்கவில்லை. அது அவரது பிரகடனம். எளிமையாக இருப்பதை பிரகடனப்படுத்தியது வழியாக அவர் முன்வைக்கும் அறைகூவல்கள் ஏராளமானவை. மன்னர்களுக்கும் பிரபுக்களுக்கும் அது தெளிவாகவே ஒரு சொல்லைச் சொன்னது, அவர்களின் காலம் முடிந்துவிட்டது, எளியவர்களின் காலம் வந்துவிட்டது என்று. விக்டோரியா ராணிக்கே காந்தி தன் உடைமூலம் அந்தச் சேதியை தெள்ளத்தெளிவாகச் சொன்னார். எளிய கோமண உடையுடன் சக்ரவர்த்தினிக்குச் சமானமாகச் சென்று பேச்சு வார்த்தை மேஜைமுன் அமர்ந்தபடி!

இன்றுவரை நம்மைச்சூழ உள்ள நாடுகளில் ஜனநாயகம் இல்லை. ஏன்? சாமானியர்களை ஆட்சியாலர்களாக ஏற்க அங்குள்ள மக்களின் மனம் ஒப்பவில்லை. ஆர்.வெங்கட் ராமன் ஆப்ரிக்க நாடொன்றுக்கு சென்றபோது நடந்ததாக ஒரு வேடிக்கையைச் சொல்வார்கள். கம்பீரமான பாதுகாவலர் பின்னால் வர வெங்கட் ராமன் ஊர்வலமாகப் போனதைக் கண்டு ஆப்ரிக்க பெண்ணொருத்தி கேட்டாளாம் 'ஜனாதிபதி கம்பீர மாக இருக்கிறார். முன்னால் யாரது ஒரு குடுகுடு கிழவன்?'என்று. பல்லாயிரம் வருடத்து இந்து மரபு திருவுடை மன்னரை திருமாலாகவே கண்டது. திருமாலையே ராமன் ,கண்ணன் என மன்னர்களாக வணங்கியது. ஒரு மர்மமான வரலாற்றுக் கணத்தில் அது எளிய கோமணதாரியை மன்னர்களுக்கு மேலான அதிகாரத்துடன் அமர்த்தியது. அந்த நுண்ணிய புரிதலில் இருந்துதான் நமது அழியாத ஜனநாயகம் பிறந்தது. காந்தியின் உடையை புரிந்துகொண்ட சாமானிய விவசாயியில் , சமையற்கட்டுப் பெண்டிரில் உள்ளது இந்திய ஜனநாயகத்தின் அஸ்திவாரம்.

தென் திருவிதாங்கூரில் காந்தி வந்தபோது ராஜபக்தியில் ஊறிய என் பாட்டி சென்று பார்த்திருக்கிறார். '' ஒரு ஸாது சன்யாசி ! மகாராஜாவின் சர்க்கார் போயி. இனி சன்யாசியுடே சர்க்காராணு'' என்று புரிந்துகொண்டார். அந்தப்புரிதல்தான் சாதிய மன அமைப்பு கொண்ட அவரை 'இனி நாடாருடெ சர்க்காராணு.அவனாக்கும் நம்முடே ராஜாவ ஆளு பரம யோக்யன்ஸ' என்று உள்வாங்கச் செய்து கடைசிவரை காமராஜின் தீவிர ஆதரவாளராக ஆக்கியது. ஜீப்பில் இருந்து காமராஜ் மலையாளத்தில் 'லெட்சுமிக்குட்டியம்மே ஓட்டு போட்டிருங்க' என்று உரிமையுடன் ஆணையிட்டுவிட்டுச் செல்வார்.''பெண்ணுகெட்டு நாடாரே''என்று பாட்டி இங்கிருந்து கூவுவாள். பாட்டிக்கு காமராஜ் மேல் தீரா மனக்குறை அவ்விஷயத்தில்

காந்திக்கு அன்று அரசாங்கத் தொண்டர்களான ஜமீன்தார்களிடம் இருந்து கடுமையான எதிர்ப்பு இருந்தது. காந்தி அவர்களின் அதிகாரத்துக்குத்தான் வேட்டு வைக்கிறார் என்பதை அவர்கள் அறிவார்கள். இந்தியாவின்பெரும்பகுதி அவர்களின் ரவுடிக்கூட்டங்களால் ஆளபப்ட்ட காலம் அது. ஆகவே காங்கிரஸ் தொண்டர்களை காந்தி அறியாமல் காந்தியின் மூன்றாம் வகுப்பு பெட்டி முழுக்க ஏறி காவல் அளிக்க பட்டேல் ஏற்பாடு செய்தார். சரோஜினியின் அற்ப மனம் குறிப்பிடுவது இதையே. 'காந்தி மூன்றாம் வகுப்பில் சென்றதனால்தான் காங்கிரஸ் நடந்துசென்றது' அவ்வளவுதான் அவருக்கு ஒரு சிந்திக்கும் இந்தியன் அளிக்கும் பதிலாக இருக்க முடியும். அதைச் சொன்னவர் இ.எம்.எஸ் நம்பூதிரிப்பாடு. ஸ சரோஜினிகளும் நேருக்களும் காங்கிரஸை வழிநடத்தியிருந்தால் அதன் தொண்டர்கள் ரயில் இல்லாத ஊர்களுக்குச் சென்றிருக்க மாட்டார்கள். கொள்கைகளும் கோட்பாடுகளுமல்ல, தியாகமே இயக்கங்களை உருவாக்கும் ஆதா சக்தி.

இதைப்புரிந்துகொண்டவர்கள் கம்யூனிஸ்டுகள் மட்டுமே. இ.எம்.எஸ் நம்பூதிரிப்பாடு அவரது வீட்டில் ஒரே ஒரு படம்தான் வைத்திருந்தார் – காந்தியின் படம் அவர்தான் இ.எம்.எஸ்ஸுக்கு தனிவாழ்க்கையில் ஆதர்சம். கடைசிவரை தன் சட்டையை தானே துவைத்துப்போட்டு வாழ்ந்த காந்தியவாதி அவர். தலைவன் அப்படி இருந்ததனால்தான் தொண்டர்கள் சிங்கிள் டீ குடித்து கட்சி வேலை செய்தார்கள். காந்தி இறந்த மறுகணமே காங்கிரஸில் அந்த தொண்டர்பண்பாடு இல்லாமல் ஆயிற்று. காசு கொடுத்தால்தான் காங்கிரஸ் தொண்டன் கொடிபிடிக்க வருவான். தலைவர் வைஸ்ராய் ரயிலில் போகும்போது நடந்துபோக அவன் என்ன முட்டாளா?

நேற்று பார்வதிபுரம் சுவரெங்கும் சிபிஎம் ஃபுல் என்று எழுதிக்கொண்டிருப்பவர்களைப் பார்த்தேன். எல்லாரும் காலையில் ஊரைக்கூட்டும் காட்டுநாயக்கர்கள். தன்னார்வத் தொண்டர்கள். அருகிலேயே விஜய்காந்த் கட்சி , திமுக கட்சிகளின் மாபெரும் சுவரெழுத்துக்கள். அவை டெண்டர் போட்டு கட்டணம் அளித்து ஒரே பெருவிளம்பர நிறுவனத்தால் உயர்தர ஏஷியன் பெயிண்டால் வரையப்பட்டவை. அவற்றுக்கான பணம் பெருமுதலாளிகளால் கொடுக்கப்பட்டிருக்கும். கம்யூனிஸ்டுக் கட்சிக்கு காட்டுநாயக்கர்கள் ஏன் வரைகிறார்கள் என்றால் சற்று அப்பால் அவர்களின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வக்கில் பெல்லார்மினும் அதேபோல தார்குடுவையுடன் வேட்டியை மடித்துக்கட்டிக் கொண்டு நிற்பார் என்பதனால்தான். பால் வாங்கப்போகும்போது அதிகாலையில் சுவரெழுத்து வரையும் தொண்டர்கள் அருகே பீடி பிடித்தபடி ஜெ.ஹேமச்சந்திரன் என்ற பெருந்தலைவர் நிற்பதை சென்றவருடம் நானே கண்டிருக்கிறேன்.

மூன்றாம் வகுப்பில் செல்லும் கோமணாண்டியான காந்தி ஒரு உயிருள்ள பதாகை. அதன் பெயரே ஜனநாயகம் என்று புரிந்துகொள்ள மனசாட்சியோ வரலாற்றுப் பிரக்ஞையோ சற்றே திறந்திருந்தால் மட்டும் போதுமானது.

---

காந்தியும் சாதியும்
from jeyamohan.in by ஜெயமோகன்

திரு ஜெயமோகன்,

காந்தியாரைப்பற்றிய உங்கள் புகழ்மாலைகளை வாசித்துக்கொண்டிருக்கிறேன். காந்தியார் சாதியைப்பற்றி என்ன சொன்னார் என்று உங்களுக்கு தெரியுமா? தெரிந்தால் மழுப்பாமல் பதில்சொல்ல உங்களால் முடியுமா? வருணமும் சாதியும் இந்துமத்தை காத்தவை என்றுதானே அவர் சொன்னார்? சாதியமைப்பு இந்தியாவுக்கு தேவை என்று சொல்லவில்லை என்று நீங்கள்

சொல்ல முடியுமா?பைதோ நான் அனுப்பிய மேற்கோள்களை வாசியுங்கள். இன்னும் வேண்டுமென்றால் ஒரு நூறு பக்க மேற்கோள்களை உங்களுக்கு அனுப்புகிறேன்.

பூசைசெய்பவன் பூசைசெய்ய வேண்டும் , மலம் அள்ளுகிறவன் மலம் அள்ளவேண்டும் என்று சொன்னவர்தானே அந்த பனியா? அதற்காகத்தானே அவரை சாதி இந்துக்கள் மகாத்துமா என்று தூக்கி வைத்துக் கொண்டாடினார்கள்? இந்த உண்மையை மழுப்பிவிட்டு பூமாலைபோட்டு தெருவில் நிற்கவைத்தால் நம்புவதற்கு இன்னும் மக்கள் தயாராக இல்லை.

மனிதனை மனிதனாக மதிக்கத்தெரியாத ஒருவரை, மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே இருக்கும் ஒடுக்குமுறையை நியாயப்படுத்திய ஒருவரை மகாத்துமாவாக எப்படி ஏற்பது? நல்ல மனுஷனாகக்கூட ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு மோசடிப்பேர்வழியை அயோக்கியனை மகாத்துமாவாக ஆக்க நீங்கள் என்ன சப்பைக்கட்டு கட்டினாலும் தீராது.

சாதியை முன்வைத்து நியாயப்படுத்திய காந்தி இந்தியாவுக்கு என்ன நன்மை செய்தார். உங்களுக்கு நேர்மை இருந்தால் இதற்கு மட்டும் பதில் அளியுங்கள் பார்க்கலாம்

K.ஜெபமாணிக்கம்
**

அன்புள்ள ஜெபமாணிக்கம்,

காந்தியைப்பற்றிப் பேசும்போது சிற்பி லாரி பேக்கர் சொன்ன ஒருவரி என் நினைவில் நின்றது. அவர் சமகாலத்து காங்கிரஸ்தலைவர்கள் அனைவரையும்விட மேற்கத்தியர்களுக்கு நெருக்கமானவராகத் தோன்றினார் என்று. பேக்கரின் அந்த மனப்பிம்பத்தில் முக்கியமான ஓர் உண்மை மறைந்துள்ளது.

அந்த உண்மையை வேறு ஒரு கோணத்தில் சுந்தர ராமசாமி அவரது உரையாடலில் என்னிடம் சொன்னார். காந்தியின் மனம் என்பது ஒரு நவீன மேற்கத்திய மனம் என்று. கிட்டத்தட்ட ஓர் அறிவியலறிஞனின் மனம். காந்தி எல்லாவற்றையும் ‘சோதனை- விளைவுகளை அவதானித்தல்- பிழை திருத்தல்- மீண்டும் முயல்தல்’ என்ற தூய அறிவியல் நோக்கிலேயே செய்தார். இந்திய விடுதலைப்போராட்டம் முதல் தன் சொந்த மலக்குடலை சுத்தம்செய்வதுவரை.

ஆகவே காந்தியைச் சரிவரப்புரிந்துகொண்டவர்கள் மேலைநாட்டினரே என்று சுந்தர ராமசாமி வாதிட்டார். அது உண்மைதான் என நான் நினைக்கிறேன். காந்தி எப்போதும் எதையும் நடைமுறை சார்ந்துதான் புரிந்துகொள்ள முயன்றார். அவரே இந்தியகிராமங்கள் தோறும் அலைந்தார். மக்களின் வாழ்க்கையை அவரே கண்டார். அந்த வேறுபாடு அவரை பிற காங்கிரஸ், கம்யூனிஸ்டு தலைவர்கள் மற்றும் அறிவுஜீவிகளிடம் இருந்து பிரித்தது. அவர்கள் கட்சி ,அமைப்பு சார்ந்து பயணம் செய்திருப்பார்களே ஒழிய மக்களிடையே சென்றவர்கள் அல்ல. அவர் பேச்சைக்கேட்டு அவரைப்போல மக்களிடையே செல்ல துணிந்த அறிஞர்களில் மேலைநாட்டினரே அதிகம். லாரி பேக்கர் அவர்களில் ஒருவர்.

இன்னொரு விஷயத்தையும் நான் கவனித்தேன். அக்கால இந்திய அரசியல்வாதிகள் மற்றும் அறிவுஜீவிகளில் உள்ளூர வெள்ளையன்மீது தாழ்வுணர்ச்சி இல்லாத ஒரே மனிதரும் அவர்தான். காந்தியைத்தவிர பிறருக்கு வெள்ளையர்களின் பழக்கவழக்கங்களில், உடைகளில், அவர்களின் மொழியில், சிந்தனைகளில் இருந்த வெளிப்படையான பக்தியை நாம் சாதாரணமாகவே காணலாம். காந்தி அவற்றுக்கு அப்பாற்பட்டவர். அதனால்தான் பிற எவரையும் விட அவர் மேலைநாட்டினரைக் கவர்ந்தார்.

இந்தத் தாழ்வுணர்ச்சி இந்தியமறுமலர்ச்சியின்போதே உருவாகி இந்திய விடுதலைப்போராட்டகாலத்தில்கூட நம் சிந்தனைகளை ஆழமாகப்பாதிக்கும் அம்சமாக இருந்தது. மிகச்சிறந்த ஆரம்பகாலகட்ட உதாரணம் என்றால் பிரம்ம சமாஜத்தை தோற்றுவித்த ராஜா ராம் மோகன் ராயைத்தான் சொல்லவேண்டும். அவர் இந்தியமரபு சார்ந்த எல்லாவற்றையும் மேலைநாட்டினரின் பார்வையில்தான் பார்த்தார். அவர்கள் புரிந்துகொண்ட விதத்தையே பகுத்தறிவுமிக்க நவீன நோக்காக எண்ணி அதை அப்படியே தானும் ஏற்றுக்கொள்ள முயன்றார்.

மேலைநாட்டினருக்கு இந்தியாவில் பிரம்மம் என்ற கருத்துருவும் உபநிடதங்களும் ஏற்புடையதாக இருப்பதைக் கண்டு ராஜாராம் மோகன் ராய் அதை மட்டும் இந்திய மெய்ஞான மரபில் சிறந்த பகுதி என்றும் மையம் என்றும் என்று வகுத்துக்கொண்டார். அதன் அடிப்படையில் ஒரு புதிய இந்துமதத்தை கட்டி எழுப்ப எண்ணி பிரம்ம சமாஜத்தை உருவாக்கினார்.

பிரம்மசமாஜம் அப்படியே கிறித்தவர்களின் கூட்டுப்பிரார்த்தனை, பிரசங்கம் போன்ற மதவழிமுறைகளை பின்பற்றியது. பரிசுத்த ஆவியை அது பிரம்மம் என்றது, அவ்வளவுதான். ஆகவே வெள்ளையர்களுக்குப் பொதுவாக பிரம்மசமாஜம் மிகவும் அறிவார்ந்ததாக, நெருக்கமானதாக இருந்தது. இக்காரணத்தால் ஆங்கிலேயருடன் நெருங்க விரும்பிய கல்கத்தாவின் படித்தவர்கத்துக்கு பிரம்மசமாஜம் ஒரு அடையாளமாக ஆகியது. ஆங்கிலேயர் போனதும் அதுவும் போனது.

இந்தியாவை வெள்ளையரின் கண்ணால் பார்த்தல் என்பதையே நவீன நோக்காக கொள்ளுதல் என்பதை நாம் ஜவகர்லால் நேரு வரை மீண்டும் மீண்டும் காணலாம். அந்த நோக்கே அம்பேத்காரிலும் ஆரம்பத்தில் இருந்தது என்றாலும் தன் அபாரமான கல்வியால் சுயமான சிந்தனைக் கட்டுமானங்களை உருவாக்கிக் கொண்டு அம்பேத்கார் பின்னர் விலகிச்சென்று வளர்ந்தார்.

இவ்வாறு ஐரோப்பியரின் நோக்கை கடன்வாங்கித்தான் இந்தியாவின் தனித்தன்மைகளான சாதியமைப்பு, மத ஆசாரங்கள், பண்டைய இலக்கியங்கள், இந்திய மெய்யியல்மரபுகள் அனைத்தையும் நம் அறிவுஜீவிகள் ஆராய்ந்தார்கள். கோட்பாடுகளை மட்டுமல்ல தரவுகளைக்கூட ஐரோப்பியரின் நூல்களில் இருந்தே பெற்றுக்கொண்டார்கள். நேருவின் புகழ்பெற்ற நூல்களில் இவ்வியல்பைக் காணலாம். இன்றுவரை இந்திய அறிவுத்தளத்தில் நிகழ்ந்துகொண்டிருப்பதும் இதுவே.

இதன் விளைவாக ஓர் வியக்கத்தக்க நிகழ்வை நாம் இந்திய மறுமலர்ச்சிக்காலகட்டத்துச் சிந்தனைகளில் காணலாம். நூற்றாண்டுகளாக உருவாகிவந்து கோடானுகோடி மக்களின் வாழ்க்கையின் பகுதியாக இருந்துவந்த பல விஷயங்கள் அந்த மக்களின் அறிவுஜீவிகள் நடுவே எந்தவகையான விவாதமும் இல்லாமல் உடனடி நிராகரிப்புக்கு உள்ளாயின. சாதிமுறை அதில் ஒன்று.

சாதி என்ற அமைப்பு இந்திய சமூகத்தின் முக்கியமான ஒரு கூறு. அதன் வரலாற்றுப் பரிணாமம், சென்றகாலத்தில் அதன் சமூகப்பயன்பாடு, அதன் நிகழ்காலப்பணி எதைப்பற்றியும் எந்த ஆய்வும் இந்தியாவில் நடக்கவில்லை. இந்தியாவை நோக்கிய ஆங்கிலேயர் அதை இந்திய சமூகத்தைப் பீடித்திருக்கும் ஒரு நோய் என்று சொன்னார்கள். இந்திய படித்த வர்க்கம் அப்படியே ஏற்றுக்கொண்டு சொல்ல ஆரம்பித்தது. வெள்ளையனே சொல்லிவிட்டான் என்ற தாழ்வுமனப்பான்மையே காரணம்.

ஆனால் உண்மையில் இந்த நிராகரிப்பு என்பது நம் படித்தவர்கத்தின் நாக்குகளில் மட்டுமே இருந்தது. நெஞ்சில் நிகழவில்லை. இக்கணம் வரை அப்படித்தான். ஏன் என்றால் அவனுக்குள் சாதியைப்பற்றிய எந்த விவாதமும் நிகழவில்லை. அவ்வாறு விவாதம் நிகழ்ந்திருந்தால் சாதியின் சமூகப்பங்களிப்பு குறித்து அவன் சிந்தனை செய்திருப்பான். இப்போதும் சாதியைச் சுமக்க அவனுக்கு என்ன காரணங்கள், கட்டாயங்கள் உள்ளனவோ அந்தக் காரணங்கள் எல்லாமே விவாதத்துக்கு வந்திருக்கும். அவற்றை வேறு எவ்வகையில் தாண்டிச்செல்ல முடியும் என்று பார்த்திருப்பான். அந்த வழிமுறைகள் அவனுக்கு உதவியிருக்கும்.

காந்தியைப் பொறுத்தவரை அவர் அந்த தாழ்வுணர்ச்சி முற்றிலும் இல்லாதவர். இந்தியாவைப்பற்றிய மேலைநாட்டு நோக்கை அவர் எவ்வகையிலும் கடன் பெற்றவர் அல்ல. மேலைநாட்டின் தத்துவஞான மரபில்
அன்று மிகுந்த படைப்பூக்கத்துடன் உருவாகிவந்த ஒரு
தரப்புடன் அவருக்கு தீவிரமான உறவிருந்தது — தோரோ, ரஸ்கின், டால்ஸ்தோய் மரபில். ஆனால் அவர் சிந்தனைகளைக் கடன்கொண்டவரல்ல.

காந்தியின் தனித்தன்மை அவர் தன் சிந்தனைகளை நூல்களில் இருந்து பெறவில்லை என்பதே. அவர் தன் சொந்தச் சிந்தனைகளுக்கு தேவையான அளவுக்கு மட்டும் நூல்களை பயன்படுத்திக்கொண்டார். அவர் நடைமுறைவாதி. சமூகம் குறித்த தன் தரவுகளை தன் சொந்த அவதானிப்புகளில் இருந்தே அவர் பெற்றுக்கொண்டார். தன் பகுத்தறிவுக்கு ஒரு விஷயம் உண்மையிலேயே திருப்தி அளிக்காத வரை அவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

தன் தரப்பு முற்போக்காக, நவீனமாகக் கருதப்படுமா இல்லையா என்பதைப்பற்றி ஒருபோதும் கவலைப்பட்டவரல்ல காந்தி. எளிதாக ஒரு முற்போக்குக் கருத்தை வாயளவில் ஏற்றுக்கொண்டு அதைப்பற்றி சொந்தவாழ்க்கையில் கவலையே இல்லாமல் முன்னால்செல்வதும் அவருக்கு உடன்பாடான விஷயம் அல்ல. அவர் ஒருபோதும் தன் கருத்தில் பிடிவாதமாக இருக்கவில்லை. தன் கருத்துக்களை பிறர் மாற்றும்பொருட்டு எப்போதுமே திறந்துவைத்திருந்தார். தன் பகுத்தறிவு எப்போது திருப்தி அடைகிறதோ அப்போது ஒரு முன்னுதாரண அறிவியலாளன் போல தன்னை அவர் மாற்றிக்கொண்டார்.

*

இந்தக் கோணத்தில்தான் நாம் காந்தி சாதியைப் பற்றி என்ன நினைத்திருந்தார் என்று பார்க்க வேண்டும். காந்தி அக்காலத்தில் ஒரு இந்து சாதியைப்பற்றி இயல்பாக என்ன நம்பிக்கை கொண்டிருந்தாரோ அந்த நம்பிக்கையையே தானும் கொண்டிருந்தார். அவர் காலத்தில் ஐரோப்பியரை வழிமொழிந்து சாதிக்கு எதிராகப் பேசியவர்கள் அந்தரங்கத்தில் கொண்டிருந்த நம்பிக்கைதான் அது. காந்தியின் உண்மையுணர்ச்சியே அவரை அதை நேர்மையாக பதிவுசெய்ய வைத்தது.

காந்தியின் ஆரம்பகால எண்ணங்கள் இவை. வருணப்பிரிவு என்பது சமூகத்தில் ஓர் ஒழுங்கை உருவாக்கும்பொருட்டு இயல்பாக பரிணாமம் அடைந்துவந்த ஒன்று. அது சமூகத்தின் அமைப்பை கட்டுக்கோப்பாக வைத்திருக்கிறது. தந்தையரின் தொழிலை மகன் செய்யும்போது இயல்பாகவே அவனுக்கு அதில் திறமை உருவாகி வருகிறது. இந்திய சமூகம் உள்மோதல்களினால் அழியாமல் ஆக்கபூர்வமாகச் செயல்பட அது பலநூற்றாண்டுகளாக உதவி வந்திருக்கிறது.

இந்திய சமூகம் மீது நெடுங்காலமாக நிகழ்ந்த பல அன்னியத் தாக்குதல்களை வெல்லவும் தாக்குபிடிக்கவும் அது உதவியிருக்கிறது. மக்கள் பிறப்பின் அடிப்படையில் ஒரு தொழில்குழுவாகத் திரண்டு ,ஒரே உடலாக தங்களுக்கு வாழ்க்கை விடுத்த கடுமையான சவால்களை சமாளிக்க சாதியமைப்பு வழியமைக்கிறது. ஆகவே மையப்படுத்தப்பட்ட அரச அதிகாரத்தின் உதவி இல்லாமலேயே மக்கள் தங்களை சிறிய சுயநிர்வாக அமைப்புகளாக தொகுத்துக்கொண்டு தங்கள் வாழ்க்கையை தாங்களே அமைத்துக்கொள்ள சாதி உதவியிருக்கிறது. சாதியாசாரங்களும் சாதிவிதிகளும் அவ்வாறு உருவாகி வந்தவையே.

ஆகவே வர்ண அமைப்பும் அதில் இருந்து உருவாகி வந்த சாதியும் முழுக்க நிராகரிக்கத்தக்கவை அல்ல. அவை காலப்போக்கில் பல சிதைவுகளையும் திரிபுகளையும் அடைந்திருக்கலாம். அந்தத் திரிபுகளைக் களைந்து சாதி என்ற அமைப்பை தக்கவைத்துக்கொள்வதே முறை. சாதி உருவாக்கும் ஏற்றத்தாழ்வுகளைக் களையலாம். சாதிமோதல்களை இல்லாமல் ஆக்கலாம். ஆனால் இந்தியாவில் அதிகாரப்பரவலாக்கத்துக்குச் சாதி இன்றியமையாதது. சாதி என்பது மைய
அதிகாரங்களுக்கு எதிராக மக்கள் தங்களை தாங்களே
நிர்வகித்துக்கொள்ள உதவுகிறது – இவையெல்லாம்தான் காந்தியின் ஆரம்பகால எண்ணங்கள்

காந்தி 1908 ல் அவரது இளமைப்பருவத்தில் தென்னாப்ரிக்காவில் இருக்கும்போதே எழுதிய ‘ஹிந்த் ஸ்வராஜ்’ என்ற சிறிய நூலில் இந்தக் கருத்துக்களை முதலில் வெளிப்படுத்தியிருந்தார். அந்த முதல்நூலை காந்தி தன் தாய்மொழியான குஜராத்தியிலேயே எழுதியிருந்தார். அந்நூலில் காந்தி ஐரோப்பாவில் உருவாகி வந்த தொழில்புரட்சியையும் அதன் விளைவான நவீனத்துவத்தையும் ஆழமாக சந்தேகப்படுகிறார். அவை உலக வளங்களைச் சுரண்டி தேவையற்ற போட்டியை உருவாக்கி அழிவுக்கே வழிவகுக்கும் என்கிறார். வலிமையான மையஅதிகாரம் அற்ற ஒரு தேசத்தை உருவகிக்கிறார். அது சுயநிர்வாகம் செய்துகொள்ளும் தன்னிறைவுகொண்ட தொழில்கிராமங்களினால் ஆனதாக இருக்கும் என்றார்.

அதில் சொல்லியிருந்த சாதி குறித்த தன் அவதானிப்பை காந்தி தன் நேரடியான இந்திய அனுபவத்தில் இருந்தே பெற்றுக்கொண்டிருக்க வேண்டும். இயல்பாக அவருக்கு அவரது சூழல் அளித்த புரிதலை அவர் தன் அவதானிப்புகள் மூலம் நிறுவிக்கொண்டார். வெள்ளையர் சாதியமைப்பை இந்தியாவின் நோய் என்று சொல்லிவந்தாலும் நடைமுறையில் அது அப்படி இருக்கவில்லை என்று காந்தி கண்டறிந்திருப்பார். சாதியமைப்புக்கு இந்திய சமூகத்தில் மிக ஆக்கபூர்வமான ஒரு பங்களிப்பு இருப்பதை அவர் உணர்ந்திருப்பார். அந்த நடைமுறை அறிவையே அவர் முன்வைத்தார்.

இன்றைய இந்தியாவை வைத்தே அவர் கண்டதென்ன என்று நாம் ஊகிக்க முடியும். உயர்சாதியினர் மட்டுமல்ல ஏழை அடித்தள மக்களும்கூட தங்கள் சாதியடையாளத்தை மிகுந்த உணச்சிகரத்துடன் முன்னிறுத்துவதைக் காந்தி கண்டிருப்பார். அந்தச் சாதி அடையாளம் அவர்கள்மேல் திணிக்கப்பட்டதாக, அவர்கள் மேல் வைக்கப்பட்ட நுகமாக, இருந்திருந்தால் அவர்கள் அதை அவ்வாறு தழுவிக்கொண்டிருக்க மாட்டார்கள். மாறாக அது அவர்களின் தனித்தன்மையின் சின்னமாக, அவர்களுக்கு பாதுகாப்பளிக்கும் குழு அடையாளமாக உள்ளது.

சாதி என்பது மக்களை திரட்டி இயல்பான ஒரு கிராமசமூக அமைப்பை உருவாக்குகிறது என காந்தி அறிந்தார். அது அவர்களுக்கு சேர்ந்து பணியாற்றவும் சேர்ந்து போராடவும் இன்றியமையாததாக இருந்தது. சாதி பெரும்பாலும் இந்திய சமூகத்தில் தொழிற்குழுக்களாகவே இருந்தது. தொழிலில் உள்ள சவால்களை மக்கள் சாதியின்மூலமே சேர்ந்து எதிர்கொண்டார்கள். போர் காரணமாகவோ பஞ்சம் காரணமாகவோ இடம்பெயரும்போதுகூட ஒருசாதியாக, கூட்டமாகவே அவர்கள் இடம்பெயர்ந்தார்கள். சென்ற இடங்களில் போராடி வேரூன்ற சாதியின் ஒற்றுமையே உதவியது.

இன்றும்கூட நவீன இந்தியாவில் சாதி மக்களை இயல்பான, வலிமையான, குழுவாக திரட்டி அவர்களின் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கிறது. தொழில்களில் வணிகங்களில் ஈடுபடுவதற்கும் உரிமைகளுக்காக போராடுவதற்கும் ஜாதியாகத் திரள்வது அவர்களுக்கு உதவுகிறது. உதாரணமாக தமிழ்நாட்டில் கொங்குவேளாளரையும் நாடாரையும் சொல்லலாம். சுதந்திரத்துக்குப் பின் வந்த கல்வியும் நவீனமயமும் சாதியை மேலும் வலுவடையச்செய்தன. காரணம் சாதிக்கு சமூகத்தின் முன்னேற்றத்தில் மிகப்பெரிய பங்களிப்பு இருக்கிறது. அந்த பங்களிப்பு இருப்பது வரை சாதி அழியாது

ஆகவே சாதி வெள்ளையர் சொன்னதுபோல இந்திய சமூகத்தில் ஒரு முற்றிலும் எதிர்மறையான ஒரு கூறு அல்ல. மிக ஆக்கபூர்வமான பங்களிப்பை ஆற்றிய, ஆற்றி வருகிற ஓர் அமைப்பு. ஆகவேதான் சாமானிய இந்தியன் சாதியைக் கைவிடத் தயாராக இல்லை. இதுவே இன்றும் இந்தியாவின் யதார்த்தம் என்பதை வழக்கமான கோஷங்களை கொஞ்சம் ஒத்திவைத்துவிட்டு கொஞ்சம் திறந்தமனத்துடன் நோக்கினால் புரிந்துகொள்ள முடியும்.

கிராம சுயராஜ்யத்தைப் பற்றிப் பேசிய காந்தி இந்திய மக்கள் அவர்களின் நெருக்கடிகளை எல்லாம் தாண்டிவர உதவிய சாதி என்ற அமைப்பை தக்கவைத்துக்கொள்ள எண்ணியதில் என்ன பிழை இருக்கிறது? இன்று கொங்குவேளாளரும் நாடாரும் எப்படி ஒருங்கிணைந்து முன்னேறினார்களோ அப்படி எல்லா சாதியும் திரண்டு உழைத்து முன்னேறவேண்டும் என்றே அவர் கனவு கண்டார். காந்தி மக்களுக்குக் கற்றுக்கொடுக்க முற்பட்டவர் மட்டும் அல்ல, மக்களிடமிருந்தும் கற்றுக்கொண்டவர். சாதி அவர்களுக்கு உயிர்போன்றது என அவர் அறிந்திருந்தார்.

ஐரோப்பிய சிந்தனையை கடன்வாங்கிக்கொண்டு, இந்திய யதார்த்தத்தைப் பற்றி கொஞ்சம்கூட பிரக்ஞை இல்லாமல், தன்னிடம் விவாதிக்க வந்த அன்றைய ஆங்கில கற்ற முற்போக்கு வற்கத்திடம் காந்தி மீண்டும் மீண்டும் விவாதித்தார்.மக்களிடம் சென்று அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று பார்க்கச் சொன்னார். சாதியின் வரலாற்றுப்பங்களிப்பை, நடைமுறைத் தேவையை விளக்கினார்.

காந்தி சாதியைப்பற்றி பேசிய அந்நாட்களில் இந்திய சமூகத்தில் சாதி உருவாகி வந்த விதத்தைப் பற்றிய ஓர் அறிவியல்பூர்வமான ஆய்வே நடக்கவில்லை. இந்தியாவை மதவிழிப்பற்ற காட்டுமிராண்டி நாடாகச் சித்தரித்த கிறித்தவ மதப்பரப்புநர்கள் உருவாக்கிய சித்திரமே பிரபலமாக இருந்தது. அதன்படி சாதி என்பது இந்திய சமூகத்தில் இருக்கும் நூற்றுக்கணக்கான கொடிய வழக்கங்களில் ஒன்று. அது இந்து மதத்தாலும் பிராமணர்களாலும் அவர்களின் ஆதிக்கத்துக்காக ஒரு சதிவேலையாக உருவாக்கப்பட்டது. ஆகவே வேருடன் கெல்லி எறியப்பட வேண்டியது.

இன்றுவரை தமிழ்நாட்டில் அறிவுஜீவிகள் என்பவர்களிடையே பிரபலமாக இருப்பது இந்த ஒற்றைவரிப் புரிதல் மட்டுமே. இந்த மேலோட்டமான புரிதலை மக்களிடையே கொண்டுசெல்ல முடியாது, ஏனென்றால் அடிப்படையான ஒரு பயன்பாடு இருப்பதனால்தான் அவர்கள் சாதியை ஆரத்தழுவிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே சாதிநிராகரிப்பு என்பது மேடையில் செய்யப்படும் வெற்றுபாவனையாக நின்றுவிடுகிறது. நடைமுறை யதார்த்தத்துக்கும் அதற்கும் எந்த சம்பந்தமும் இருப்பதில்லை.

தமிழ்நாட்டு யதார்த்ததையே பார்ப்போம். இங்கே கொஞ்சமாவது சாதியை விட்டு வெளியே வந்தவர்கள் 'உயர்மட்ட' சாதியினரே. இன்றும் 'கீழ்மட்ட' சாதியினரிடம் சாதிப்பற்று என்பது ஆழமாக வேரோடி இருக்கிறது. சாதிமறுப்பை மேடையில் கக்குபவர்கள், சாதியை உருவாக்கிய உயர்சாதிச்சதியை எதிர்த்து பொங்குகிறவர்கள் அனைவருமே சாதிக்குள்தான் வசதியாக இருந்துகொண்டிருக்கிறார்கள்.

காந்தி இறந்தபின்னர், டிடிகோஸாம்பியைப் போன்ற மார்க்ஸிய ஆய்வாளர்கள் மார்க்ஸிய சமூக ஆய்வுச் சட்டகத்தை இந்தியச் சமூகம் மீது போட்டுப்பார்த்தபோதுதான் சாதியின் உருவாக்கத்தைப் பற்றிய முதல் அறிவியல்ரீதியான விளக்கம் இந்தியச் சூழலில் உருவாகி வந்தது. அந்த விளக்கத்தை ரத்தினச் சுருக்கமாக இப்படிச் சொல்லலாம்.

இந்திய நிலப்பகுதி வரலாற்றுக்கு முற்பட்ட காலகட்டத்தில் முற்றிலும் மாறுபட்ட வளர்ச்சிப்படிகளில் நின்ற பலவகையான மக்கள்கூட்டங்களினால் ஆனதாக இருந்தது. அந்நிலையில் நிலவளம் நீர்வளம் போன்ற காரணங்களினால் வளர்ச்சிபெற்ற மக்கள்கூட்டங்கள் பிற கூட்டங்களை வென்று தனக்குள் இழுத்துக்கொள்ள ஆரம்பித்தன. இவ்வாறு உள்ளிழுக்கும் போக்கின் விளைவாக உருவானதே சாதி என்ற அமைப்பு.

வெற்றிபெற்ற மக்கள்கூட்டமான ஆரியர்கள் தங்களை தொழிலின் அடிப்படையில் நான்கு வருணங்களாக பிரித்துக்கொண்டிருந்தார்கள். தன்னுடன் இணைத்துக்கொண்ட மக்கள்கூட்டங்களை அவர்களின் தொழில் மற்றும் வளர்ச்சியின் அடிப்படையில் தங்களில் ஏதேனும் ஒரு வர்ணத்துடன் இணைத்துக்கொண்டார்கள். இவ்வாறுதான் வர்ண அமைப்பு பலநூறு சாதிகளால் ஆனதாக மாறியது. சாதி என்பது பழங்குடி இனக்குழுக்களே.

ஆக, சாதிகள் என்பவை உண்மையில் ஒரு சமூகம் சிலரால் ஆதிக்க நோக்குடன் திட்டமிட்டு பலவாக பகுக்கப்பட்டு உருவானவை அல்ல. மாறாக, பலநூறு சிறிய இனக்குழுக்கள், பழங்குடிச்சமூகங்கள் ஒரு பொது சமூகமாக தொகுக்கப்பட்டதன் விளைவாக உருவானவை. ஒருசாதிக்குள் உபசாதிகள், உபசாதிக்குள் சிறிய குலக்குழுக்கள், குலக்குழுவுக்குள் கூட்டங்கள் என உள்பிரிவினைகள் இருப்பதை இவ்வாறுதான் புரிந்துகொள்ள முடியும்.

பல்வேறு மக்கள்கூட்டங்களை ஒன்றாகத் தொகுத்து ஒரே அமைப்புக்குள் கொண்டுவருவதன் வழியாகவே அரசுகள் உருவாயின. மேலும் மேலும் அதிக மக்கள் அந்தச் சமூக அமைப்புக்குள் வருவதன் விளைவாகவே அரசுகள் பேரரசுகள் ஆக முடியும். ஆகவே அந்த உள்ளிழுக்கும் போக்கு மன்னர்களால் ஊக்குவிக்கப்பட்டது. அந்தச் சாதித்தொகுப்புக்கு தத்துவ விளக்கமும் புனிதத்தன்மையும் அளிக்கப்பட்டது. அவ்வாறாக அச்சமூகத்தில் அனைவரும் அந்த சமூக அடுக்கை ஏற்றுக்கொள்ள வைக்கப்பட்டார்கள்.

கண்டிப்பாக இந்த அமைப்பு ஆதிக்க நோக்கம் கொண்டதே. நிலப்பிரபுத்துவ காலத்தில் உருவான இந்த அமைப்பு சமூகக் கூறுகளை கீழ் கீழாக அடுக்கி ஒரு ஆதிக்க கட்டுமானத்தை உருவாக்கியது. நிலப்பிரபுத்துவத்தின் அமைப்பு இது என்பதனால் யாருடம் நிலம் இருக்கிறதோ அவர்கள் மேலே இருந்தார்கள். யார் நிலமில்லாதவர்களோ அவர்கள் கீழே சென்றார்கள். நிலத்தை அடைந்த கீழ்சாதிகள் மேலே ச்ன்றமைக்கும் நிலமிழந்த மேல்சாதி கீழே வந்தமைக்கும் இந்தியாவில் உதாரணங்கள் பல உள்ளன.

இந்த சித்திரம் இந்தியாவின் எளிய மக்கள் ஏன் சாதியடையாளத்தை விட மறுக்கிறார்கள் என்பதற்கான விளக்கத்தை அளிக்கிறது. சாதி என்பது அம்மக்களின் புராதனமான குல அடையாளம். அது அவர்களுக்கு தனித்தன்மையை அளிக்கிறது. ஒரு குழுவாக உணரச்செய்கிறது. ஆகவே எந்நிலையிலும் அதை அவர்கள் இழக்க முடியாது. இன்று வரை இந்தியாவில் அது சாத்தியப்படவும் இல்லை.

இந்தக் கோணத்தில் பார்த்தால் காந்தி அவருக்கே உரிய நுண் அவதானிப்பால் சாதியின் சமூக முக்கியத்துவத்தையும் பங்களிப்பையும் கிட்டத்தட்ட இதே அளவுக்கு உணர்ந்துகொண்டிருப்பதை காணலாம். அவர் அக்காலத்தில் சாதியை தூக்கிப்பிடித்த இந்து சனாதனிகளின் குரலை எதிரொலிக்கவில்லை. பழைமைவாதத்தை பேசவும் இல்லை. அவர் மிக அறிவியல்பூர்வமாகவே சாதியை அணுகியிருக்கிறார்.

காந்தியின் காலகட்டத்தில் அறிவுஜீவிகள் சாதியமைப்பை உதறிவிட்டு ஐரோப்பாவில் இருந்ததுபோல வர்க்க அமைப்பை கொண்டுவரலாம் என்ற எண்ணம் கொண்டிருந்தார்கள். நேருகூட சாதி அமைப்பு பழையது, வர்க்க அமைப்பே நவீனமானது தவிர்க்கமுடியாதது என்று எண்ணினார். ஆனால் காந்தி அதை ஏற்கவில்லை. வர்க்க அமைப்புக்குச் சாதியமைப்பு எவ்வளவோ மேல் என்றார்.

காந்தியின் நோக்கில், வர்க்க அமைப்பு மக்களை தனியர்களாக்குகிறது. சாதியமைப்பு மனிதர்களுக்கு அளிக்கும் இயல்பான குழுத்தன்மையும் அதன் பாதுகாப்பும் இல்லாமல் ஆகிறது. பொருளாதார அளவீடு மட்டுமே மனிதர்களை மதிப்பிட பயன்படுவதனால் செல்வத்துக்கான கழுத்தறுக்கும் போட்டியே வாழ்க்கையாக ஆகிவிடும். அதன்மூலம் நெறிகள் இல்லாமலாகி மானுட உறவுகள் சீரழியும் என்றார் காந்தி. ஐரோப்பிய வர்க்கப்பிரிவினை சாதிப்பிரிவினையை விட சுரண்டல் மிக்கது என நேரில் கண்டவர் அவர்.

இன்றும் இந்த நிலை உள்ளதை நாம் காணலாம். நமது நகரங்களில் வர்க்க அடிப்படையில் பகுக்கப்பட்ட மனிதர்கள் வாழ்கிறார்கள். கிராமங்களில் சாதியடிப்படையில் பகுக்கப்பட்ட மனிதர்கள். நமது நகர மனிதனுக்கு இல்லாத சமூகப்பாதுகாப்பும் நாம் என்ற தன்னம்பிக்கையும் கிராமத்து மனிதனுக்கு இருக்கிறது.

மேலும் காந்தி உருவகித்த கிராமராஜ்யத்தில் பெரும் தொழில்நகரங்கள் இல்லை. ஆகவே அங்கே வர்க்க அடிபப்டையில் பிரிக்கப்பட்ட மக்களுக்கு இடமில்லை. மக்களுக்கிடையேயான பிரிவினை சாதியாகவே இருக்க இயலும்.

தான் உருவகித்த கிராமசுயராஜ்யத்தில் காந்தி ஏற்றதாழ்வு இல்லாத சாதியமைப்பு இருக்கலாம் என்று எண்ணினார். சாதி அந்தக் கிராம அமைப்பில் மக்கள் இயல்பான குழுக்களாக இயங்க உதவும் என நினைத்தார். இந்தியாவின் புராதனமான வளர்ச்சிப்போக்கு சாதியால் ஆனது என்பதனாலேயே அவர் அந்த முடிவுக்கு வந்தார்.

காந்தியின் அந்த முதல் நூல் எழுதப்பட்டு நூறுவருடம் ஆகிறது. ஆனால் அவரை அவர் சொல்வதென்ன என்று நோக்கி ஆராயும் போக்கு நம் நாட்டில் உருவாகவில்லை. அவரை ஐரோப்பியர்களின் கண்ணால் நோக்கி சாதிவெறியன் என்றோ மதவெறியன் என்றோ முத்திரை குத்தவே நாம் முயன்றிருக்கிறோம். அப்போது நமது சாதிப்பற்றை அப்போது சட்டைப்பைக்குள் உள்ளே தள்ளிக்கொள்கிறோம்

இன்று, அவரை அவர் சொன்னதென்ன என்று அவரது நூல்கள் வழியாக ஆராய்ந்து ஐரோப்பிய ஆய்வாளர்கள் எழுதும்போது அந்த நூல்களை வாசித்துவிட்டு நம்மில் சிலர் ‘ஆமாம், காந்தி பழமைவாதியல்ல பின் நவீனத்துவர், அவர் சொன்னது ஓர் அறிவியல்பூர்வமான ஆய்வின் ஒரு முடிவையே’ என்று அங்கீகரிக்கிறோம். நம் தாழ்வுணர்ச்சியில் இருந்து வெளிவர இன்னும் நம்மால் இன்னும் முடியவில்லை

*

காந்திய ஆய்வாளரான மார்க் லிண்ட்லே [Prof. Dr. Mark Lindley ] காந்தியைப்பற்றிய ஆய்வுகளைச் செய்த ஐரோப்பியர்களில் முக்கியமானவர். இசைஆய்வாளரும் இந்திய வரலாற்றாசிரியருமான மார்க் லிண்ட்லே அமெரிக்காவில் வாஷிங்டன் டிசியில் 1937 ல் பிறந்தார். ஹார்வார்ட் பல்கலையில் சமூகவியல் கற்றார். கொலம்பியா பல்கலையில் முனைவர் பட்டம் பெற்றார். பல்வேறு பல்கலைகளில் ஆய்வுப்பேராசிரியராக பணியாற்றினார்.

லிண்ட்லே காந்தியின் எழுத்துக்களை முழுமையாகத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார். Gandhi as We Have Known Him என்ற நூல் முக்கியமானது. ஜெ.சி.குமரப்பாவின் வாழ்க்கை வரலாற்றையும், கோராவின் வாழ்க்கை வரலாற்றையும் நூல்களாக எழுதியிருக்கிறார். ஒரு கட்டுரையில் லிண்ட்லே காந்தி சாதியைப்பற்றி கொண்டிருந்த கருத்துக்களை தொகுத்து முன்வைக்கிறார்.

1920 ல் காந்தி எழுதினார் :"சாதியமைப்பு இந்துமதத்தை அழிவிலிருந்து காப்பாற்றியது என நான் நினைக்கிறேன். ஆனால் எல்லா நிறுவனங்களையும்போல அதுவும் சீரழிந்துவிட்டது. நால்வருணம் என்ற பிரிவினை அடிப்படையானது இயல்பானது தேவையானது என்றே எண்ணுகிறேன். எண்ணிக்கையிலடங்காத துணைச்சாதிகள் சிலசமயம் வசதியானவை சிலசமயம் தடையாக ஆகின்றவை. அவை எந்த அளவு சீக்கிரம் இணையுமோ அந்த அளவுக்கு நல்லது.
 ஒருமுறை என்னைப் பேட்டிகண்ட ஒருவர் கேட்டார் நாம் இந்திய சாதியமைப்பை உதறிவிட்டு ஐரோப்பாவின் வர்க்க அமைப்பை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று "அதன்மூலம் சாதியமைப்பில் உள்ள பிறப்பு அடிப்படையை களையலாமென அவர் எண்ணுகிறார் என்று நான் ஊகிக்கிறேன் பிறப்பின் அடிப்படையிலான அடையாளம் என்பது எப்போதைக்கும் உரியது என்றும் அதை மாற்ற நினைப்பதென்பது பெரும் குழப்பத்துக்கே இட்டுச்செல்லும் என்றும் எனக்குப் படுகிறது." 1920 ல் காந்தி மேலும் எழுதினார். "சாதியமைப்பின் அழகு என்னவென்றால் அது செல்வத்தின் அடிப்படையில் அமைந்திருக்கவில்லை என்பதே. வரலாறு காட்டுவதைப்போல பணம் என்பது மிகப்பெரிய ஓர் அழிவுச்சக்திதான். சாதி என்பது குடும்பம் என்ற விதியின் நீட்சிதான். பாரம்பரியம் ரத்தஉறவு ஆகியவற்றின் அடிப்படையில் அவை நிர்வகிக்கப்படுகின்றன. மேலைநாட்டு அறிவியலறிஞர்கள் பாரம்பரியம் என்பது ஒரு பிரமைதான் என்றும் சூழல்தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கிறது என்றும் காட்ட கடுமையாக முயன்றுவருகிறார்கள். ஆனால் பலநாடுகளில் உள்ள அனுபவம் என்பது அந்த முடிவுகளுக்கு நேர் எதிரானதாகவே செல்கிறது. ஆனால் சூழலே எல்லாம் என்ற அவர்களின் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டாலும் கூட வர்க்க அமைப்பைவிட சாதியமைப்பில்தான் சூழலை பாதுகாப்பதும் மேம்படுத்துவதும் எளிது என்று சொல்லலாம்.

சமூக வாழ்க்கையில் மாற்றம் என்பது மிகமிக மெல்லத்தான் வரமுடியும் என நாம் அறிவோம். ஆகவே இன்றைய சமூக மாற்றங்களுக்கு ஏற்ப சாதியானது புதிய குழுவமைப்புகளாக தன்னை மாற்றிக்கொண்டுள்ளது. இந்த மாற்றங்கள் மேகங்களின் வடிவம் மாறுவதுபோல எளிதாகவும் இயல்பாகவும் நடைபெறுகின்றன. இதைவிட மேலான மானுட பரிணாமத்தை கற்பனை செய்வது கடினம்
 சாதியமைப்பு மேல் கீழ் என்ற பேதத்தைச் சுட்டுவதில்லை. அது வாழ்க்கைநோக்கில் உள்ள வேறுபாடுகளையும் அதற்குச் சமானமான வாழ்க்கை அமைப்புகளையும் அடையாளம் காட்டுகிறது அவ்வளவுதான். ஆனால் சாதியமைப்பில் ஒரு சமூக அடுக்குமுறை உருவாகி வந்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது. ஆனால் அது பிராமணர்களின் உருவாக்கம் என எவரும் சொல்லிவிட முடியாது. அனைவருக்கும் ஒரே வாழ்க்கை லட்சியம் உருவாகி வரும்போது ஒரு சமூகஅடுக்கு உருவாவது தடுக்கமுடியாத ஒன்று. காரணம் அந்த இலட்சியத்தை எல்லா சாதியும் ஒரே அளவில் உள்வாங்கிக்கொள்ள முடியாது"

இவ்வாறு காந்தி தன்னுடைய ஆரம்பகாலத்தில் சாதியை விளக்குகிறார். அதற்கு எதிரான கருத்துக்களுடன் வாதிடுகிறார். ஆனால் காந்தியின் குரல் மெல்ல மெல்ல மாறுபடுவதை மேற்கோள்கள் வழியாகவே மார்க் லிண்ட்லே காட்டுகிறார்.

1925 ல் காந்தி எழுதினார் " ஒருவர் பிற வருணத்தவர்களால் அவர்களின் பாரம்பரியமாக உருவாக்கப்பட்ட அறிவியல் கலை ஆகிய துறைகளின் அறிவை கற்றறிவதில் எந்த பிழையும் இல்லை. ஆனால் ஒருவன் அவனுடைய உயிர்வாழ்தலுக்கான தொழிலாக அவனது பெற்றோர் பாரம்பரியமாகச் செய்த அவனது வருணத்தின் அதே தொழிலையே செய்வதே நல்லது" 1925 ல் காந்தி மேலும் எழுதினார் "என்னைப்பொறுத்தவரை மேல் கீழ் என்ற பேச்சுக்கே இடமில்லை. தன்னை உயர்வாக எண்ணிக்கொண்டு பிற வருணத்தவரை குனிந்து நோக்கும் ஒரு பிராமணன் பிராமணனே அல்ல. அவன் முதலிடத்தில் இருக்கிறான் என்றால் ஆன்மீகமான சேவைக்கான உரிமை அவனுக்கு அதிகமாக இருக்கிறது என்பதனாலேயே"

இந்த மாற்றத்துக்கான காரணம் என்ன? காந்தி இந்தியாவுக்கு திரும்பிவந்தது இக்காலத்திலேயே. ரயிலில் இந்தியாவெங்கும் விரிவான ஒரு சுற்றுப்பயணம் செய்தார் அவர். இத்தருணத்தில் அவருக்கு ஒரு சமூகமாக இந்தியாவை தொகுக்கவேண்டியதன் அவசியம் புரிந்திருக்கக் கூடும். சாதி இந்தியாவை ஒன்றுடன் ஒன்று தொடர்பில்லாத தனி அறைகளாக பிரித்துவிடக்கூடும் என்று அவர் உணர்ந்தார் என தோன்றுகிறது. ஆகவே சாதி என்ற பிரிவினைக்கு மேலாக ஒரு பொதுவான சமத்துவத்தை உருவாக்கியாகவேண்டும் என்று அவருக்குப் பட்டிருக்கலாம்

மேலும் தன் இந்தியப் பயணங்களில் 1923 ல் காந்தி நாராயணகுருவைச் சந்தித்தார். காந்தி நாராயணகுருவுடனான தன் சந்திப்பைப் பற்றி புகழ்ந்து சொல்லியிருக்கிறார். சாதி தேவைதான் என்ற தன் கருத்தை காந்தி நாராயணகுருவிடம் சொல்ல நாராயணகுரு அதை திட்டவட்டமாக மறுத்து பேசியிருக்கிறார். அதன்பின் அவர்கள் நடுவே சற்று அந்தரங்கமான உரையாடல் நடந்திருக்கிறது. நாராயணகுருவின் கருத்தை தான் பரிசீலனைசெய்வதாக காந்தி சொல்லியிருக்கிறார்.

மேலும், நாராயணகுருவிடம் காந்தி தீண்டாமையை நியாயப்படுத்தி இந்து ஞானமரபின் மூலநூல்களில் ஏதேனும் சொல்லப்பட்டிருக்கின்றனவா என்று கேட்டபோது நீதி நூல்களான ஸ்மிருதிகள் காலம் தோறும் மாறக்கூடியவை, ஞானநூல்களான சுருதிகள் அழியாதவை. சுருதிகளில் அப்படி ஏதும் சொல்லப்படவில்லை என குரு பதில் சொல்லியிருக்கிறார். ஒரு தீண்டத்தகாத சாதியினனாகிய நாராயணகுருவின் அபாரமான சம்ஸ்கிருத பயிற்சியும் இந்து மெய்யியலில் உள்ள ஞானமும் காந்தியின் மனதை ஆழமாகப் பாதித்திருக்கலாம்.

1931 ல் காந்தி அம்பேத்காரைச் சந்திக்கிறார். காந்தியையும் அம்பேத்காரையும் ஒப்பிட்டு ஆராய்ந்த டிஆர்.நாகராஜ் காந்தியும் அம்பேத்காரும் ஒருவருக்கொருவர் முரண்பட்டு வாதிட்டு ஒருவரை ஒருவர் மாற்றியமைத்த இரு சக்திகளாக காண்கிறார். [The

Flaming Feet: A Study of the Dalit Movement, D R Nagaraj ] இந்த சிந்தனை இன்றைய ஆய்வாளர் நடுவே மிகவும் வலுப்பெற்று வரக்கூடிய ஒன்றாகும். மார்க் லிண்ட்லேயும் அவ்வாறே எண்ணுகிறார்.

காந்திக்கும் அம்பேத்காருக்கும் நடுவே காந்தியின் இறப்பு வரை 17 வருடம் ஓய்வில்லாமல் விவாதம் நடந்திருக்கிறது. சில சமயம் அம்பேத்கார் சினம் கொண்டு அத்து மீறி பேசியிருக்கிறார். ஆனால் அவ்வாறு சினம் கொள்வதற்கான தார்மீகமான ஒரு உரிமை அம்பேத்காருக்கு இருப்பதாகவே மீண்டும் மீண்டும் காந்தி எண்ணினார். ஆகவே காந்தியின் குரல் பொறுமையுடன் மீள மீள அம்பேத்காருடன் உரையாடுவதாகவே இருக்கிறது.

இங்கே ஒன்றைச் சொல்லவேண்டும். காந்தி பிடிவாதம் மிக்கவர் என்ற ஒரு நம்பிக்கை பலரிடம் உண்டு. அது உண்மை. சாதாரணமாக காந்தி தன் கருத்துக்களை மாற்றிக்கொள்பவரல்ல. ஏன் என்றால் மிக விரிவான ஆராய்ச்சிகள் மூலம் தனக்குத்தானே நிரூபித்துக்கொண்டவற்றை உறுதியாக நம்பக்கூடியவர் அவர். அவற்றை ஒரு ராஜதந்திரமாகவோ பிறர் என்ன நினைப்பார்கள் என்பதற்காகவோ மாற்றிக்கொள்ளக்கூடியவர் அல்ல. சொல்லப்போனால் பிறர் தன்னைப்பற்றி என்ன நினைக்கவேண்டும் என அவர் எப்போதுமே கவலைப்பட்டதில்லை.

ஆனால் காந்தி அவரது கருத்துக்களுடன் அவரளவுக்கே ஆற்றலுடன் மோதியவர்களை கூர்ந்து கவனித்தார். அவர்களுடன் நுட்பமாக விவாதித்தார். காந்தியைப் போன்ற ஒருவரிடம் விவாதிக்கும் மூளைத்திராணியும் ஆன்மபலமும் அம்பேத்காருக்கு இருந்தது. அது நேருவுக்கு இல்லை. ஆகவேதான் காந்தி நேருவால் கொஞ்சம்கூட மாற்றப்படவில்லை. அம்பேத்காரால் தலைகீழான மாற்றத்தை அடைந்தார்.குறிப்பாக சாதி விஷயத்தில்.

1931ல் காந்தி எழுதினார் '' நான் நவீன அர்த்தத்தில் சாதி அமைப்பில் நம்பிக்கை கொள்ளவில்லை. அது ஒரு சமூகத்தீங்கு, முன்னேற்றத்துக்கு தடை. மனிதர்கள் நடுவே உள்ள எவ்வகையான ஏற்றதாழ்வுகளையும் நான் நம்பவில்லை. நாமெல்லாம் முற்றிலும் சமம். சமத்துவம் என்பது ஆன்மாவிலே ஒழிய உடல்களில் அல்லஸபுறவயமாக தெரியும் இந்த சமமின்மைக்கு நடுவேதான் அந்த சமத்துவம் உள்ளது என்று நாம் புரிந்துகொள்ளவேண்டும். எந்த ஒரு மனிதனும் சகமனிதனைவிட மேலானவனாக எண்ணிக்கொண்டானென்றால் அது கடவுளுக்கு எதிரான குற்றமாகும். ஆகவே சாதியமைப்பானது மனிதர்களிடையே தரவேற்றுமைகளை சுட்டும்வரை அது ஒரு மாபெரும் தீமையே ஆகும்.

நான் பாரம்பரியமாக தொழில்களைப் பங்கீடு செய்யும் வருண அமைப்பிலும் நம்பிக்கைகொள்ளவில்லை. நான்கு வருணங்கள் என்பவை நான்கு பொதுவான மானுடச்செயல்பாடுகளைச் சுட்டுகின்றன. அறிவை அடைதல், எளியோரைக் காத்தல், தொழிலையும் வணிகத்தையும் செய்தல், உடலால் பிறருக்குச் சேவைசெய்தல். இந்த பணிகள் எல்லா மானுடருக்கும் பொதுவானவை. ஆனால் இந்துஞானம் அவற்றை நம்முடைய இருப்பின் ஆதார விதிகளாக அடையாளம் கண்டுகொண்டு சமூக உறவுகளையும் நடத்தைகளையும் ஒழுங்குபடுத்த பயன்படுத்திக்கொண்டதுஸ

ஸஆனால் என்னுடைய வரையறையின்படி இப்போதைய இந்துமரபில் வருணப்பிரிவினை செயல்படவில்லை. பிராமணர்கள் எனப்படுபவர்கள் அறிவை அடைதலை விட்டுவிட்டார்கள். பிறதொழில்களை அவர்கள் செய்கிறார்கள். எல்லா வர்ணத்துக்கும் கிட்டத்தட்ட இது பொருந்தும்''

1932ல் காந்தி எழுதினார் ''பண்டைய முறை எதுவாக இருந்தாலும் எந்த ஒரு மனிதனும் தன்னை உயர்குலத்தவன் என்று கூறிக்கொண்டு வாழ்ந்துவிடமுடியாது. சமூகம் அத்தகைய உரிமைபாராட்டல்களை இனிமேல் அங்கீகரிக்காது. உலகம் விழிப்புகொண்டுவிட்டதுஸ''

காந்திக்கும் அம்பேத்காருக்கும் இடையேயான உரையாடலே காந்தியை தொடர்ச்சியாக சாதியையும் வர்ணத்தையும் மறுபரிசீலனைசெய்ய வைத்தது. சாதி என்பது திட்டமிட்டு மேலாதிக்கத்துக்காக உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு என்பதை காந்தி ஏற்கவில்லை. சாதி அமைப்புக்கு அப்போதும் மக்களை சிறிய சமூக அமைப்பாக திரட்டி வலிமைப்படுத்தும் சக்தி உண்டு என்றே அவர் எண்ணினார். ஆனால் அந்த அமைப்பின் பிற தீமைகளை அவர் மேலதிக முக்கியத்துவம் கொடுத்துப் பார்க்க ஆரம்பித்தார்.

காந்தியின் இந்த மனமாற்றத்துடன் இணைத்துப் பார்க்க வேண்டிய ஒன்றுண்டு. காந்தி சாதியமைப்பின் சாதக அம்சங்களைக் கண்டபோது அவர் கிட்டத்தட்ட ஒரு சமூக அறிவியலாளனின் ஆய்வுப்பார்வையை மட்டுமே கொண்டிருந்தார். ஆனால் சாதியின் அடக்குமுறைக் குணத்தை அவர் அடையாளம் கண்டபோது கிட்டத்தட்ட காங்கிரஸ் அவரது கையில் இருந்தது. காங்கிரசுக்குள் இருந்த உயர்சாதிவெறியர்களை அவர் அன்றாடம் சந்தித்துவந்தார். காங்கிரசுக்குள் அவர்களே அவரது முக்கியமான எதிரிகளாக விளங்கினார்கள். சாதி என்பது எத்தனை சாதகமான பங்களிப்பு கொண்டதாக இருந்தாலும் அது ஓர் அடைக்குமுறைச் சாதனம் என்று காந்தி இக்காலத்தில்தான் தெளிவடைந்தார்.

சொல்லபோனால் காந்தி காங்கிரஸின் உயர்சாதிப்பின்புலத்துக்கு எதிராக அம்பேத்காரை நோக்கி நகர்ந்தார். அந்த நகர்வு அவரது முதுமையில் நிகழ்ந்ததை லிண்ட்லே ஆச்சரியத்துடன் குறிப்பிடுகிறார். பொதுவாக கருத்துக்கள் கெட்டிப்படும் காலம் அந்த வயது. ஆனால் காந்தி அவரது வாழ்நாள் முழுக்க அவர் கொண்டிருந்த கருத்துநிலையை தலைகீழாக மாற்றிக்கொண்டார்.

வருண – சாதி அமைப்பின் வரலாற்றுப்பணி என்னவாக இருந்தாலும் அது இப்போதும் முக்கியமான நிறுவனமாக இருந்தாலும் அது சென்ற காலகட்டத்தைச் சேர்ந்தது என்றும் நவீனகாலத்தில் அது சமத்துவத்துக்கு எதிரான உணர்ச்சிகளையே அதிகம் கொண்டிருக்கிறது என்றும் மக்களில் கணிசமானபேரை அது பிறருக்கு கீழே வைத்திருக்கிறது என்றும் காந்தி அறிந்தார். தான் உருவாக்க எண்ணிய கிராம சுயராஜ்யத்தில் அகிம்சை தழைக்க சமத்துவம் அவசியம் என்றும் அதற்கு சாதி அழியவேண்டும் என்றும் உணர்ந்தார். அவ்வாறு தர் தரப்பை மாற்றிக்கொள்வதென்பது காந்தியைப் பொறுத்தவரை தன் மொத்த வாழ்க்கையையும் அதற்கேற்ப மாற்றிக்கொள்வதே. மேடையில் ஒரு கருத்தை ஏற்றுக்கொள்ளும் மனிதர் அல்ல அவர். சற்றும் தயங்காமல் காந்தி தன் கருத்துக்களை எழுதினார். ஆனால் இக்காலத்திலும்கூட அம்பேத்கார்

மையப்படுத்தப்பட்ட நிர்வாகம், உயர்தொழில்நுட்பம் போன்ற நவீனத்துவ கருத்துக்கள் கொண்டிருந்ததை காந்தி திட்டவட்டமாக மறுத்தார்.
1935 ல் காந்தி எழுதினார் ''சாதி அழிய வேண்டும். நடைமுறையில் சாஸ்திரங்கள் சொல்லும் வருணாசிரம தர்மம் இப்போது எங்குமில்லை. இன்றைய சாதிமுறை என்பது சாஸ்திரங்கள் சொல்லும் இலட்சிய வருணாசிரமதர்மத்துக்கு நேர் எதிரான ஒன்று. எத்தனை வேகமாக பொதுமக்களின் பிரக்ஞையில் இருந்து அதை ஒழிக்க முடியுமோ அந்த அளவுக்கு அது நல்லது சாதியை அழிப்பதற்கு மிகச்சிறந்த மிகவேகமான தடையற்ற வழி என்னவென்றால் சீர்திருத்தவாதிகள் அதை தங்களிடமிருந்தே தொடங்குவதுதான். தேவையென்றால் அதற்காக அவர்கள் சமூகத்தின் புறக்கணிப்பைக்கூட ஏற்றுக்கொள்ளவேண்டும் .மாற்றம் படிப்படியாக ஆனால் உறுதியாக நிகழும்
சொன்னதை தானே செய்வதற்கும் காந்தி தயாரானார். மார்க் லிண்ட்லே கோராவுக்கும் காந்திக்கும் இடையேயான உறவைச் சுட்டிக்காட்டுகிறார். பிறப்பால் பிராமணரான கோரா தன் சாதியை துறந்தார்.அதற்காக அவர் வேலையை விட்டு துரத்தப்பட்டார். தலித் மக்கள் நடுவே சேவைசெய்த கோராவை 1944 ல் காந்தி தன் ஆசிரமத்துக்கு அழைத்து தன்னுடன் வைத்துக்கொண்டார். அவரை தன் வழித்தோன்றலாக எண்ணியது மட்டுமல்ல சாதி, வருண அமைப்பை முள்காடு என்று வருணித்த கோராவின் கருத்தை தானும் முழுமையாகவே ஏற்றுக்கொண்டார்

பின்னர் காந்தி அவரது பழைய கருத்தான கிராமசுயராஜ்யத்தின் சாதி அமைப்பை முழுக்க மாற்றிக்கொண்டார். இனிமேல் சாதி இல்லை. அது அடக்குமுறைக்கான கருவி. அது அழிய வேண்டும். வருணத்தைப்பொறுத்தவரை நவீன காலகட்டத்தில் ஒரே வருணம்தான் இருக்க வேண்டும், அது சூத்திர வருணம் மட்டுமே. ஒவ்வொருவரும் உடலால் உழைக்கும் சூத்திரனாக மாறியாக வேண்டும். எந்தவேலை செய்தாலும் ஒருவர் கண்டிப்பாக உடலுழைப்பில் ஈடுபட்டாகவேண்டும் என்றார் காந்தி. அவரது இலட்சிய கிராமசுயராஜ்யம் தங்களை உடலுழைப்பு மூலம் சூத்திரர்களாக ஆக்கிக்கொண்ட மக்களால் மட்டுமே ஆனதாக இருக்கும் என்றார்.

அத்தனைபேரும் உடலால் உழைத்தாகவேண்டும் என்ற காந்தியக் கோட்பாட்டை மேடை சோஷலிசம் பேசிய சொகுசுக்காரரான நேரு முதலியோர் எப்படி எடுத்துக்கொண்டிருப்பார்கள் என்று சொல்லவேண்டியதில்லை.

1946 ல் காந்தி ஒரு அமெரிக்க நிருபரிடம் வர்க்கமற்ற சாதியற்ற ஒரு இந்திய சமூகத்தை உருவாகக் முயல்வதாக்ச் சொன்னார். ஒரே சாதிமட்டும் இருக்கும் ஒரு நிலை வரவேண்டும் என்றும் பிராமணர்கள் தலித்துக்களை மணம்முடிக்கவேண்டும் என்றும் சொன்ன காந்தி சமத்துவமின்மை வன்முறையை உருவாக்கும். சமத்துவமே அகிம்சையை உருவாக்கும் என்றார். அந்தக் காலகட்டம் ஐம்பது வருடங்களுக்குள் வந்துவிடும் என்று தன் நம்பிக்கையை அவர் முன்வைத்தார்

ஆரம்பத்தில் கலப்புத்திருமணங்களை ஏற்க மறுத்த காந்தி பின்னர் கலப்புத்திருமணங்களை முழுக்க ஆதரித்தார். கடைசி காலத்தில் கலப்புத்திருமணங்களை மட்டுமே அவர் ஆதரித்தார். தன் ஆதரவாளர்கள் கலப்புத்திருமணம் செய்தாகவேண்டும் என்றும் அதன்மூலம் மட்டுமே சாதியை ஒழிக்க முடியும் என்றும் அவர் வலியுறுத்தினார். குறிப்பாக உயர்சாதியினர் தலித் சாதியினரை மணந்துகொள்வதை ஒரு முக்கியமான சமூகச்செயல்பாடாக காந்தி வலியுறுத்தினார்.

1945 ல் காந்தி எழுதினார். ''பெண்ணுக்கு எந்த தகுதி இருந்தாலும் திருமணம் ஒரே சாதிக்குள் என்றால் என் ஆசீர்வாதத்தை தயவுசெய்து கோராதீர்கள். அவள் வேறு சாதி என்றால் மட்டுமே நான் என் ஆசீர்வாதத்தை அனுப்புவேன்''
1946 ல் காந்தியிடம் பேட்டியாளர் கேட்டார். ''கல்விகற்ற ஹரிஜனப் பெண்கள் விரலால் எண்ணக்கூடிய அளவிலேயே இருக்கிறார்கள். அவர்கள் உயர்சாதி ஆண்களை திருமணம் செய்துகொண்டால் கண்டிப்பாக தங்கள் சாதியை விட்டு துண்டிக்கப்படுவார்கள். அவர்கள் தங்கள் சொந்த சாதிக்குச் சேவை செய்யமுடியாமல் ஆகும். அவ்வாறு திருமணம் செய்வதென்றால் அந்த ஜோடி தங்கள் வாழ்க்கையை ஹரிஜன மக்களுக்கான சேவைக்கே அர்ப்பணிக்கவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் செய்யலாம்

அதற்கு காந்தி பதில் அளித்தார். '' ஹரிஜனப்பெண்கள் உயர்சாதி ஆண்களை திருமணம் செய்துகொள்வது வரவேற்கத்தக்கது. ஆனால் அது சிறப்பானது என்று சொல்ல கொஞ்சம் தயங்குகிறேன். அது ஆண்களை விட பெண்கள் குறைவானவர்கள் என்று காட்டுவது போல ஆகிவிடும். இப்போதெல்லாம் அந்தவகையான தாழ்வுச்சிக்கல் இருப்பதை நான் அறிவேன். ஆகவே ஹரிஜன பெண் உயர்சாதி ஆணை மணம்செய்வதைவிட உயர்சாதி பெண் ஹரிஜன ஆணை மணம்செய்வது சிறந்தது என்று நான் எண்ணுகிறேன். என்னால் முடிந்தால் என் பேச்சைக்கேட்கும் எல்லா உயர்சாதிப்பெண்களையும் ஹரிஜன ஆண்களை திருமணம் செய்துகொள்ளும்படிச் சொல்வேன்.

தன் கொள்கையை திட்டவட்டமாக வெளியிட்டது மட்டுமல்ல அதை தீவிரமாக நடைமுறைப்படுத்தவும் செய்தார் காந்தி. காந்தியால் உந்தப்பட்ட ஹரிஜன- உயர்சாதி மணங்கள் அக்காலகட்டத்தில் ஏராளமாக நடைபெற்றன. தமிழகத்தின் புகழ்பெற்ற காந்தியவாதிகளான கிருஷ்ணம்மாள் ஜெகன்னாதன் தம்பதியினர்கூட அவ்வகையான தம்பதியினர்தான்.

கலப்புத்திருமணத்தை காங்கிரஸ் தன் முதன்மை சமூகத்திட்டமாக கொண்டுவருமா என்று 1946 ல் ஒரு நிருபரின் கேள்விக்கு தீண்டாமை ஒழிப்பு, சமபந்தி போஜனம், ஹரிஜனங்களுக்கு இட ஒதுக்கீடு போன்றவற்றில் காங்கிரஸ் ஒத்த கருத்து கொண்டிருக்கிறது என்றும் விரைவிலேயே கலப்புமணத்தை நோக்கியும் காங்கிரஸை கொண்டுவந்துவிடலாம் என்றும் காந்தி சொன்னார்.

அது காங்கிரஸை அவர் தவறாகப் புரிந்துகொண்டு சொன்னது. அப்போது இந்திய சுதந்திரம் நெருங்கிவிட்டிருந்தது. அதிகாரக் கனவுகள் ஆரம்பமாகிவிட்டிருந்தன. காந்தியின் சமூகத்திட்டங்கள் நேருவின் காங்கிரஸுக்கு உவப்பாக இருக்கவில்லை. காங்கிரஸ் அரசியல் கட்சியாகச் செயல்படக்கூடாது என்றும் கலப்புத்திருமணம் முதலிய சாதி ஒழிப்புச் செயல்பாடுகளில் அது ஈடுபடவேண்டும் என்றும் காந்தி வாதிட்டார். கிராம சுயராஜ்யம் அமைக்க வேண்டும் என்று கோரினார். நேரு காந்தியை சந்திப்பதையே தவிர்த்தார். காந்தி கொல்லப்படும் வரை.

ஒருவேளை மத ஒற்றுமைக்காக காந்தி உயிர்த்தியாகம் செய்யவில்லை என்றால் சாதி ஒழிப்புக்காக அவர் உயிர்தியாகம் செய்ய நேரிட்டிருக்கும். அவர் சென்றுகொண்டிருந்த திசை அது.

அன்புள்ள ஜெபமாணிக்கம், தயவுசெய்து யோசித்துப்பாருங்கள். இந்த வரலாற்றுப்பின்னணியில் நீங்கள் குறிப்பிட்ட ஆரம்பகாலகட்டத்து உதிரி மேற்கோள்கள் மூலம் காந்தியை ஒரு சாதி வெறியராக முத்திரை குத்துவதனால் யாருக்கு என்ன லாபம்? அந்தப்பொய்யை நாம் சுமந்துகொண்டு காழ்ப்பை வளர்த்துக்கொள்வதனால் நாம் அடைவது என்ன?

நம்மை இந்த குரூரமான , அநீதியான பொய்யை நம்பச்செய்யும் கும்பல்களுக்கு  அதனால் பெரும் லாபம் உள்ளது என உணருங்கள். காந்தி இந்த தேசத்தின் நீதியுணர்வின் அடையாளமாக நம் மனதில் இருக்கிறார். அந்த பிம்பத்தை இவ்வாறு திட்டமிட்டு உடைப்பதன் வழியாக இந்த தேசத்தின் அடித்தளமாக இருக்கும் இலட்சியங்கள் மேல் ஆழமான ஐயம் உருவாக்கப்படுகிறது. அதன் விளைவாக இந்த தேசம் பலவீனப்படுகிறது. சமூக மோதல்கள் உருவாகின்றன. நாம் போரிட்டு அழிய வாய்ப்பிருக்கிறது. அந்த உதிரத்தைக் குடிக்க எப்போதும் எங்கோ பலர் காத்திருக்கிறார்கள்.

இனிமேல் கவனியுங்கள், காந்தியை அவதூறுசெய்து வெளியிடப்படும் எந்த ஒரு ஆய்வேட்டுக்கு அல்லது நூலுக்குப் பின்னாலும் ஓர் அயல்நாட்டு பல்கலைக் கழகம் இருக்கும். அல்லது ஏதேனும் ஒரு கிறித்தவ மதப்பரப்பு நிறுவனத்தின் நிதியுதவி இருக்கும்.

காந்தியை நீங்கள் அவதூறுசெய்யும்போது சிலுவை ஏந்திச்சென்ற ஏசுவுக்குப் பின்னாலும் ஒரு பெரும்கூட்டம் அவரை கல்லால் அடித்து வசைபாடியபடி சென்றது என்பதை மறக்க வேண்டாம். நாம் சிந்தவைக்கும் நீதிமானின் ரத்தம் நம் ஆத்மாவை  இருளால் மூடிவிடும்.

நீதியுணர்வே கிறித்தவத்தின் சாரம் என நம்புகிறவன் நான், அந்த கிறித்தவ நீதியுணர்வை நோக்கி கேட்கிறேன். தயவுசெய்து சிந்தித்துப்பாருங்கள்.

ஜெ

---

**மோகன் தாஸும் மகாத்மாவும்**

அன்புள்ள ஜெ,
இங்கே ஒரு நண்பனிடம் நீங்கள் எழுதும் காந்தியக் கட்டுரைகளை காட்டினேன். அவன் ஒரு விஷயம் சொன்னான். என்னை மிகவும் பாதித்தது அது. இந்திய அரசியலில் காலில்விழும் கலாச்சாரத்தை காந்திதான் புகுத்தினார் என்றான். மகாத்மா என்று எண்ணி அவரது காலில் மக்கள் விழுந்ததை அவர் ஆதரித்தார், அந்த கலாச்சாரம் இன்றுவரை தொடர்கிறது என்று சொன்னான். என்னால் அதை மறுக்க முடியவில்லை. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?
சரவணன்
அன்புள்ள சரவணன்,

காந்தி தன்னை ஒரு மகாத்மாவாக எண்ணிக்கொண்டாரா? தன்னை ஒரு மகாத்மாவாக முன்வைத்தாரா? இரண்டும் வேறு வேறு கேள்விகள்.

காந்தி ஒரு நவீன மனிதர். ஐரோப்பியநவீனத்துவம் உருவாக்கிய பல விஷயங்களை தன் ஆதார இயல்பாகக் கொண்டவர். எதிலும் நடைமுறை அறிவியல் நோக்கு, நாசூக்கு என. அவரைச் சந்தித்த ஐரோப்பியர்கள் பழக்க வழக்கங்களில் அவர் மிகமிக ஐரோப்பியத்தனமானவர் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர் தன்னை ஒரு மகாத்மா என்று சொல்லிக்கொண்டிருப்பாரா என்பதே நாம் கேட்டுக்கொண்டாக வேண்டிய முதல் கேள்வி.

அதற்குப் பதிலாக நமக்குக் கிடைப்பது ஓர் உண்மை. காந்தி ஒரு தருணத்திலும் தன்னை மகாத்மா என்று சொல்லிக்கொண்டதில்லை. பிறர் அப்படிச் சொல்வதை ஊக்குவித்ததில்லை. தன்னிடம் அவ்வாறு பிறர் சொல்லும்போது அதை கேட்டுக்கொண்டதும் இல்லை. நேர் மாறாக தன்னை ஒரு சாமானியன் என்று சொல்லிக்கொள்ளவே அவர் ஆசைப்பட்டார்.

அதுகூட அவர் தன்னை மகாத்மாவாக எண்ணிக்கொண்டமையால் எடுத்த நிலைபாடாக இருக்கலாமல்லவா என்று கேட்கலாம். காந்தி தன்னை ஒரு ஞானியாக அல்லது அவதார புருஷராக அல்லது அசாதாரணமான மனிதராக எண்ணிக்கோண்டாரா? அவர் தன்னைப்பற்றிக்கொண்டிருந்த மன உருவகம் என்ன? காந்தி தன் வாழ்நாள் முழுக்க தன்னை எதுவாக ஆக்க முயன்றார்?

அதற்கு காந்தியின் மரபுக்கும் அவரது தனிப்பட்ட உளவியலுக்கும் நாம் சென்றாக வேண்டும். காந்தி குஜராத்தி வைணவ பக்தி மார்க்கத்தைச் சேர்ந்தவர். குஜராத்திய வைணவம் சமணத்தில் இருந்து தன் அடிப்படை மனநிலைகளைப் பெற்றுக்கொண்டது. காந்தியின் மனநிலை என்பது பல்லாயிரம் வருடங்களாக இந்த மண்ணில் சமணத்தால் உருவாக்கப்பட்டதே.

‘பவ்யம்’ என்ற சொல் வழியாக சமணம் அனைத்து மானுடமேன்மைகளையும் சொல்லிவிடும். பவ்யம் என்றால் எளிமை,சமர்ப்பணம் என்று சமணத்தில் பொருள்படும். மானுடனுக்கு சாத்தியமாகவேண்டிய உச்சகட்ட நிலை அதுவே. தன்னை எளிமைப்படுத்திக்கொள்வதன் வழியாகவே பாவங்களில் இருந்து விடுபட இயலும் என்றும் அதுவே முக்தி என்றும் சொல்கிறது சமணம்.

ஏனென்றால் ஒரு மனிதன் வென்றாகவேண்டிய எதிரி அவனே. அவனுடைய காமகுரோதமோகங்களே அவனை கீழிறக்கி கட்டுண்டு வாழச்செய்கின்றன. இந்த ஆசீவக– சமணக் கருத்து ஈராயிரம்

வருடத்து தமிழ்ச்சொற்களில் சொல்லப்பட்டிருக்கிறது. 'தீதும்நன்றும் பிறர்தர வாரா' என.
***ஆர்.கே.நாராயணனின் காந்தி கார்ட்டூன்: இந்த முகம்தான் அவரது 'சாமானியனின்' முகம்***

ஆகவே புலன்களை வெல்லுதல் [குறள் மொழியில் ஐந்தவித்தல்] சமணத்தின் முதல் நெறியாக எப்போதும் முன்வைக்கப்பட்டது. உலகிலிருந்து ஒடுங்குதலே ஆன்மீகமாக வளர்தல் என்ற கருத்து சமணத்தின் மையம். சமணம் விரதங்களையே நெறியாகக் கொண்ட மதம். அதிலிருந்து வைணவம் அதைப் பெற்றுக்கொண்டது. காந்தியின் இளமைப்பருவத்தைக் கவனித்தால் அவரது அம்மா அவருக்களித்த சிந்தனை என்பதே கடுமையான விரதங்கள்தான் என்பது தெரியவரும்.

தன் இளம் வயதிலேயே தன்னை ஒடுக்கிக்கொள்ள ஆரம்பித்தார் காந்தி. அவரது முதல்கட்ட சோதனைகள் லண்டனில் அவர் சைவ உணவுக்காக நடத்திய கடுமையான போராட்டங்களில் இருந்தன. பட்டினியால் தன்னை உச்சகட்ட வதைக்கு ஆளாக்கிக்கொண்டு விரதத்தை காத்துநின்றார். அப்படி காத்ததன்மூலம் தன் அகம் கூர்மை கொள்வதைக் கண்டார். தன் உடல்மீதும் மனம் மீதும் தான் கொள்ளும் கட்டுப்பாடு தன்னை வலிமைமிக்கவராக ஆக்குகிறது என்று கண்டடைந்தார். அதுவே அவரது தொடக்கம்.

அவரது சமண- வைணவ ஆழ்மனம் கண்டடைந்த கண்டுபிடிப்பில் இருந்து காந்தி தன் மதம்சார்ந்த தளங்களுக்கு நகரவில்லை. மாறாக, அதை அன்றைய ஐரோப்பிய நவீன ஆன்மீக சிந்தனைகளுடன்தான் பிணைத்துக்கொண்டார். அச்சிந்தனைகளை அவர் அங்கே வாசிக்க நேர்ந்த இயற்கைஉணவுநிபுணர்கள், இயற்கைமருத்துவநிபுணர்கள் ஆகியோரிடம் இருந்து பெற்றுக்கொண்டார். அவர்கள் வழியாக இயற்கைவழிபாட்டாளர்களுக்கு, தோரோவுக்கும் ரஸ்கினுக்கும் தல்ஸ்தோய்க்கும், சென்று சேர்ந்தார். இதுவே அவரது பயணம்.

அரசியலுக்கு வந்த காந்தி இத்தகைய ஐரோப்பிய மாற்று ஆன்மீகப் பயிற்சி கொண்ட மனிதராக இருந்தார். தியாகம் மூலம் வெல்வது என்பதே அவரது மெய்ஞானத்தின் சாரமான வாக்கியம்.இயற்கையுடன் இணைந்த வாழ்க்கை, நுகர்வு மறுப்பு, சுயகட்டுப்பாடு ஆகியவை அவரது வழிமுறைகளாக அமைந்தன. அவற்றில் இருந்து அவர் உருவாக்கிக்கொண்ட சத்யாகிரகப் போராட்ட வழிமுறை அவரது அரசியலை தீர்மானித்தது.

காந்தியை பின்னர் மகாத்மாவாக பிறருக்குக் காட்டிய இந்த அம்சங்களை அவர் எந்தவகையிலும் கவனிக்கப்படாதவராக இருந்த காலத்தில் மிகுந்த தீவிரத்துடன் தனக்காக வளர்த்தெடுத்துக்கொண்டார். தென்னாப்ரிக்காவிலேயே அவரது ஆளுமையின் கட்டுமானம் ஏறத்தாழ முழுமை அடைந்துவிட்டிருந்தது. தன் ஆளுமைச்சோதனைகளுக்காகவே அவர் தல்ஸ்தோய் பண்ணை என்ற ஒன்றை உருவாக்கி நடத்தினார்.

இக்காலகட்டத்தைப் பற்றி காந்தி விரிவாக எழுதியிருக்கிறார். இரு ஆசைகள் அவரை அலைக்கழித்தன. ஒன்று காமம், இன்னொன்று உணவு. இவ்விரு இச்சைகளையும் வெல்லாமல் தனக்கு தன்மீதான வெற்றி கைகூடாது என்று உணர்ந்த அவர் அவற்றை தீவிரமான விரதங்கள் மூலம் ஒடுக்கினார். நூற்றாண்டுகளாக சமணமுனிவர்கள் செய்து வந்த செயல்தான் அது. நாராயணகுருவின் சுயசரிதைப்பாடல்களில் கூட கிட்டத்தட்ட இதே மாதிரியான போராட்டமும் பரிணாமமும் காணப்படுகிறது.

ஒரு ஆளுமை எந்த அளவுக்கு வீரியம் உள்ளதாக இருக்கிறதோ அந்த அளவுக்கு அது காமமும் உணவில்ருசியும் கொண்டதாக இருக்கும் என ஊகிக்கலாம். அவை அடிப்படை இச்சைகள். அதேயளவுக்கு தன்மைய நோக்கும் நகைச்சுவை உணர்ச்சியும் அதற்கு இருக்கும் என்றும் சேர்த்துக்கொள்ளலாம்.

எந்த மனிதர் தன்மைய நோக்காலும் நகைச்சுவையாலும் அவ்விச்சைகளை விலக்கி சிதறும் தன் ஆளுமையை ஒருங்கிணைத்துக்கொள்கிறாரோ அவரே எங்கும் சாதனையாளனாகிறார். இதற்கு பெரிதாக ஒன்றும் உலகவரலாற்றைப் படிக்கவேண்டியதில்லை. பிளஸ்டூ தேர்வில் அதிக மதிப்பெண் எடுப்பதற்குக் கூட அந்த அளவில் புலன் ஒறுப்பு தேவை என்பதை நாம் அறிவோம்.

இந்திய அரசியலுக்குள் காந்தி நுழையும்போது இருதளங்களில் அவர் இடைவிடாத சோதனைகள் மூலம் தன்னை கண்டடைந்தவராக இருந்தார். ஒன்று, கடுமையான விரதங்கள்மூலம் தன் மீதான கட்டுப்பாட்டை அடைதல். இரண்டு, பொதுவாழ்க்கையில் விழுமியங்களை உண்மையுடன் முன்வைத்தல். இவ்விரு விஷயங்களையும் அவர் மிகுந்த புறவய நோக்குடன் நடைமுறைத்தளத்தில் சோதித்து அவற்றின் பயன்களைக் கண்டடைந்தவராக இருந்தார்.

இந்தியாவுக்கு திரும்பியபின்னரும் இந்த இரு தளங்களிலும் ஒரேசமயம் காந்தி ஈடுபட்டிருந்தார். சபர்மதி ஆசிரமத்தை நிறுவி அங்குதான் அவர் தன் மீதான தன் ஆற்றலை வளர்த்துக்கொண்டார். தன் உடல் மற்றும் மனம் மீதான சோதனைகள் மிக விரிவானவை. தன் உடலை அவர் கூர்ந்து கவனித்தார். அதற்கான உணவுகளையும் மருத்துவத்தையும் தானே உருவாக்கிக் கொள்ள முயன்றார். தான் நம்பிய எளிய இயற்கைவாழ்க்கையை, மானுடர்களுக்குள் பேதம் இல்லாத வாழ்க்கையை, நடைமுறைப்படுத்த முயன்றார்.

அத்துடன் அந்த விழுமியங்களை முன்வைத்து உருவாக்கிய ஒரு போராட்ட முறையை, சத்யாக்ரகத்தை, மிகவெற்றிகரமாக சம்பாரனில் நடத்தியும் காட்டினார். அந்தப்போராட்டத்தில் இருந்த நேர்மையும், துணிவும் எளிமையும் அவரை அது வரை இந்தியாவில் இல்லாதிருந்த ஒரு புதிய சக்தியாக அடையாளம் காட்டின.

இங்கேதான் இந்தியர்களால் காந்தி மகாத்மாவாக அடையாளம் காணப்பட்டார். அவரை அப்படி அடையாளம் கண்டது பல்லாயிரம் வருட பாரம்பரியம் கொண்ட இந்திய உளவியலே. காந்தி தன் ஆளுமைமேல் தன் முழுக்கட்டுப்பாட்டுக்காக செய்த சோதனைகளும், விரதங்களும், பொதுவாழ்க்கையில் அவர் முன்வைத்த விழுமியங்களும் அவற்றில் அவருக்கிருந்த அபாரமான பிடிவாதமும் இந்தியாவில் மிக எளிதாக ஒரு சமணத்துறவியுடன்தான் அவரை அடையாளம் காட்டும். அவரது

நோக்கு மேற்கத்திய சோதனைமுறையில் ஊறியது என்பதை அது கருத்தில்கொள்ளாது.

இந்தியவரலாற்றை அறிந்தவர்களுக்கு காந்தியின் போராட்டம்கூட இங்குள்ள மக்களுக்குப் புதியதல்ல என்று தெரிந்திருக்கும். நூற்றாண்டுகளாக சமணத்துறவிகள் கடைப்பிடித்த சாத்வீகமான போராட்டம்தான் அது. தமிழக வரலாற்றில் அஞ்சினான் புகலிடம் வகிக்கும் இடத்தைப் பார்த்தால் அதைப்புரிந்துகொள்ள முடியும்.

சமணத்துறவிகள் ஒரு நிலப்பரப்பை தங்கள் பகுதியாக அறிவிக்கிறார்கள். பீலியும்முக்குடையும் கொண்ட எல்லைக்கல் நாட்டப்படுகிறது. அந்த எல்லைக்குள் ஆயுதமெடுக்க எவரையும் அவர்கள் அனுமதிப்பதில்லை. உயிருக்கு அஞ்சி ஒருவன் அங்கே நுழைவான் என்றால் அவனுக்கு அந்த துறவிகளே காப்பு. அவனது எதிரி ஒரு மாமன்னனாக இருந்தால்கூட அவனை அங்கே நுழைந்து பிடிக்க முடியாது. அவ்வாறு பிடித்தான் என்றால் அம்மன்னனின் வாசலில் அத்தனை சமணத்துறவிகளும் உண்ணாநோன்பிருந்து உயிர்துறப்பார்கள். அந்தப்பெரும்பழிக்கு அஞ்சாத மன்னனே இந்தியாவில் இருந்ததில்லை. சமணத்துறவிகள் பொறுமைமூலம், சகிப்பதன் மூலம், உயிர்துறப்பதன் மூலம், தங்கள் தார்மீகத்தை ஆழமாக நிலைநாட்டிய போராட்டங்களை கண்டு உருவாகி வந்த ஒரு பண்பாட்டு மரபு எளிதில் காந்தியை அந்த தொடர்ச்சியில் வைத்துப் பார்த்ததை, அவரை மகாத்மா என்று சொன்னதை, புரிந்துகொள்வது ஒன்றும் கடினமானதல்ல.

காந்தியை முதன்முதலாக மகாத்மா என்று சொன்னவர் தாகூர் என்று ஒரு நம்பிக்கை உண்டு. ஆனால் 1920 ல் அவர் இந்தியாவுக்கு வந்து அரசியல் பணியாற்ற ஆரம்பித்த காலத்திலேயே மத்தியப்பிரதேசப் பழங்குடிகளான கோண்டுகள்தான் அவரை முதன்முதலாக மகாத்மா என்றார்கள். அப்படிச் சொல்வதை காந்தி 'வெறுப்புக்கும் கண்டனத்துக்கும் உரியது' என்றார். அப்படிசொல்பவர்களை அவர் அருகே விடவில்லை. ஆனால் அந்த எளியமனிதர்கள் அவ்வாறு கட்டுப்படுத்தப்படக்கூடியவர்கள் அல்ல.

மகாத்மா என்ற பட்டம் அவரைச் சங்கடப்படுத்தியது. காந்தியின் பேச்சுகளில் அவருக்கே உரிய மென்மையுடன் அவர் அந்தசொல்லை கிண்டல்செய்துகொண்டே இருப்பதைக் காணலாம். அவர் தன்னுடைய படத்தை ஒருவர் வைத்திருந்ததைக்கூட விரும்பவில்லை. கட்டாயப்படுத்தி அதை தூக்கிப்போடச் செய்தார் என்று அவருடனேயே இருந்து அவரை ஒவ்விருநாளும் கண்காணித்து அற்புதமான வரலாற்றை எழுதிய வின்செண்ட் ஷீன் சொல்கிறார் [Mahatma Gandhi- A great life in Brief. Vincent Sheen] அவரைக் கண்டமையால் தன் நோய் தீர்ந்தது என்று ஒருவர் சொல்லக்கேட்டு காந்தி அவமானமும் வருத்தமும் அடைந்தார்.

நீங்கள் ஏன் மகாத்மா என்று அழைக்கப்படுகிறீர்கள் என்ற கேள்விக்கு காந்தி சொன்னார் : ''மகாத்மா என்ற பட்டம் என்னை பலமுறை கடுமையான மனவலிக்குத் தள்ளியிருக்கிறது. எனக்கு இந்த உலகத்திடம் சொல்ல புதியதாக ஏதும் இல்லை. உண்மையும் அகிம்சையும் புராதனமான மலைகளைப்போன்றவை. என்னால் முடிந்தவரை நான் அவ்விரண்டையும் என் சொந்த வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த முயன்றேன் என்று மட்டுமே சொல்லமுடியும். ஆனால் நான் அச்சோதனைகள் மூலம் அடைந்த அனுபவங்களை விளக்குவதற்கு எப்போதுமே தயாராக இருப்பேன். அதன் மூலம் நான் அரசியலில் செயல்படுவதற்கான வலிமையை அடைதேன். ஏராளமான மனிதர்கள் என்னை மதிப்பதாகச் சொல்கிறார்கள் ஏனென்றால் நான் வேறு எவரையும் விட அவர்களை புரிந்துகொண்டிருக்கிறேன்..''

காந்தியின் மனம் அதன் மேல்தளக்கட்டுமானத்தை மேலைச்சிந்தனைகளைச் சார்ந்தே உருவாக்கிக் கொண்டது. தன் வாழ்நாளின் கடைசிக்கணம் வரை எப்போதுமே சுய எள்ளலுக்கு அவரிடம் இடமிருந்தது. தன்னையே நக்கல் செய்து வாய்விட்டு உற்சாகமாகச் சிரிக்கக்கூடியவர். லண்டன் தெருவில் ஒரு வெள்ளைச் சிறுவன் 'ஏய் காந்தி உன் டிரவுசர் எங்கே?'' என்று கேட்டபோது உற்சாகமாக வாய்விட்டு சிரித்து மகிழ்ந்த மனிதர் அவர் என வின்செண்ட் ஷீன் பதிவுசெய்கிறார்.

ஆனாலும் ஒரு தேசமே அவரது காலில் விழுந்து கிடந்தது. அவர் காலில் தொட்டுவணங்கியவர்களால் அவர் பாதங்கள் புண்ணாக ஆயின. அவரைக்கேட்டுப் புரிந்துகொண்டு அல்ல அவரை கண்டு உள்வாங்கியே கோடிக்கணக்கானவர்கள் அவர் பின்னால் சென்றார்கள். அவர் சொல்வது சரி என்று புரிந்துகொண்டதனால் அல்ல, அவர் சரியானவர் என்று புரிந்துகொண்டதனால் !

அந்த மாபெரும் விந்தையை என்றாவது எண்ணிப்பார்த்திருக்கிறீர்களா? ஒரு தொன்மையான தேசம். குறைந்தது முப்பது நூற்றாண்டுகளாக நிலப்பிரபுத்துவம் விளங்கிய பகுதி. முக்காற்பங்குக்குமேல் நிலத்தில் மன்னராட்சி அப்போதும் நிலவிய மண். அங்கே வெறும் பதினைந்து வருடங்களுக்குள் ஒரு தனிமனிதர் மொத்த சமூகத்தையே ஜனநாயக அரசியலுக்குக் கொண்டுவருகிறார்! காந்தியின் காங்கிரஸ்தான் இந்தியவரலாற்றிலேயே அதிகமான பெண்களை அரசியலுக்குக் கொண்டுவந்த இயக்கம் தெரியுமா? அதனுடன் ஒப்பிடும்போது கம்யூனிஸ்டு இயக்கத்திலும் திராவிட இயக்கத்திலுமெல்லாம் பெண்களின் பங்கேற்பு என்பது அனேகமாக எதுவுமே இல்லை. காந்தியை நம்பி லட்சக்கணக்கில் எளிய நடுத்தரவர்க்க மக்கள் அலையலையாகச் சிறைக்குச் சென்றார்கள். லட்சக்கணக்கான பெண்கள் சிறைக்குச் சென்றார்கள். வீட்டைவிட்டு வெளியே செல்வதே பெரும் பாவம் என விலக்கப்பட்டவர்களாக நூற்றாண்டுகளாக வாழ்ந்த பெண்கள்! அவர் சொன்னார் என்று அப்பட்டமான சாதிவெறிப்பின்னணியில் பிறந்து வளர்ந்த லட்சக்கணககனவர்கள் தாழ்த்தப்பட்டவர்களின் சேரிகளுக்குச் சென்று வாழ்ந்தார்கள். அவர்கள் கழிவறைகளைச் சுத்தம்செய்ய வந்தார்கள். இந்தியாவின் முதல் மக்களியக்கம் காந்தியின்

ஒத்துழையாமைப்போராட்டமே. அந்த அலைமூலம்தான் நிலப்பிரபுத்துவ மனநிலையில் அரசியலின்றி பல்லாயிரம் வருடங்களாக வாழ்ந்திருந்த இந்திய சமூகம் அரசியல்மயமாக்கப்பட்டது. அந்த அரசியலின் சில துண்டுகளையே கம்யூனிஸ்டுக் கட்சியும் திராவிட இயக்கங்களும் ஏன் முஸ்லீம் லீகும்கூட தங்களுக்காக வெட்டிக்கொண்டன. கேரள விடுதலைப்போர் குறித்த தனது நூலில் இ.எம்.எஸ்.நம்பூதிரிப்பாடு அதைப்பற்றி பேசுகிறார்.

அந்த அரசியல் எழுச்சியை உருவாக்கியது எது? இன்று தகவல்தொழில்நுட்ப அலையில்கூட இந்தியாவை முழுக்க தொடர்புகொள்வது பெரும் சவாலாக இருக்கிறது. அன்றைய இந்தியாவில் அச்சு ஊடகங்கள் மிகமிகக் குறைவு. வானொலி இன்னும் பரவலாக ஆகவில்லை. ஆயிரக்கணக்கான ஊர்களில் மின்சாரம் இல்லை, ஆகவே ஒலிப்பெருக்கி இல்லை. எப்படி காந்தி இந்த தேசத்துடன் பேசி அதை கருத்தியல் ரீதியாக ஒருங்கிணைத்தார்?

அவர் தன்னையே தன் செய்தியாக ஆக்கிக்கொண்டார். தன் வாழ்க்கையே தன் செய்தி என்று கூற ஒரு தலைவனுக்கு அபாரமான மனத்தைரியம் தேவை. என் தனி வாழ்க்கையில் ரகசியங்கள் இல்லை என்று அறிவிக்க, 'என்னை ஆய்வுசெய்துபார்' என வரலாற்றின் முன்பு வந்து நிற்க, தன்நேர்மைமேல் ஆணித்தரமான நம்பிக்கை தேவை. எல்லையற்ற ஆன்ம வல்லமை தேவை. இந்திய அரசியலின் நூறுவருட வரலாற்றில் ஒரே ஒரு மனிதனைத்தவிர எவருமே அப்படிச் சொல்ல முடியாது. சந்தேகமிருந்தால் நீங்கள் நம்பும் எந்த ஒரு தலைவனுடைய அந்தரங்க வாழ்க்கையையும் காந்தியின் அந்தரங்க வாழ்க்கை ஆராயப்பட்டதுபோல தோண்டித்துருவிப்பாருங்கள். அவரது ஆன்மா கதறும்!

தன்னைத்தான் காந்தி இந்தியா முழுக்கக் கொண்டுசென்றார். நூற்றுக்கணக்கான ரயில் நிலையங்களில் மூன்றாம் வகுப்புப் பெட்டியின் வாசலில் விரதத்தால் மெலிந்த கரிய உடலுடன் வந்து நின்று, தன் கருணைமிக்க கண்களில் நகைச்சுவை ஒளிரும் சிரிப்புடன் மக்களை நோக்கி கும்பிட்டார். அதுவே இந்தியா முழுக்க சென்று சேர்ந்த செய்தி. அதுவே இந்த நாட்டை ஒன்றாகத்திரட்டி ஜனநாயக அரசியலுக்குக் கொண்டுவந்த கருத்தியல் பேரலை. அந்த இடத்தை அவருக்கு அளித்தது அவரது மகாத்மா என்ற அடைமொழி.

இந்த தேசத்துக்கு அதற்கான ஒரு மெய்யியல்தர்க்கம் உள்ளது.கண்ணில் காணும் அனைத்து மேன்மைகளிலும் கடவுளைக் காணுதல் என அதைச் சொல்லலாம். ஆகவே ஒருநாய் சிங்கத்தை துரத்தியது என்றால் அதை தெய்வமாகக் கும்பிடுவதில் இந்திய மனத்துக்கு தடையே இல்லை. 'வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவனே' தெய்வம் என்று நம்பிய மரபு அவரை மகாத்மாவாக ஏற்றுக்கொண்டது. வழிபட்டது. அவர் அந்த மாபெரும் உணர்ச்சியலைமேல் மிகுந்த மனச்சங்கடத்துடன் அமர்ந்திருந்தார்.

காந்தியின் எளிமை ஒரு பாவனை என்று சொல்பவர்களிடம் அவர்கள் எளிமை என்று எதைத்தான் சொல்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன். காந்தியின் எளிமை அவர் வெளியே காட்டிக்கொண்டது அல்ல என்பதற்கு அவரது மொத்த வாழ்க்கையின் ஒவ்வொரு கணமும் சான்றாகும். காந்தி புலன்நிராகரிப்பையே தன் யோகமாகக் கொண்டவர். புலன்களுக்கு வசப்படுதல் என்பது அகவலிமையை இழத்தல் என்று எண்ணியவர். ஆகவே எப்போதும் எந்த ஒரு வசதியையும் ஆடம்பரத்தையும் நிராகரிப்பவராகவே காந்தி இருந்தார்

தனிப்பட்ட முறையில் இதில் காந்தியிடம் இருந்த தீவிரம் எனக்கு ஏற்புடையதல்ல. அவரது எளிமைவாதம் கலையை நிராகரிக்கும் இடத்துக்கு அவரைக் கொண்டுசென்றதைக் காணலாம். இசை, ஓவியம், நடனம் எல்லாமே அவருக்கு புலன்சார் ஆடம்பரங்களாகவே தோன்றின. அதாவது, இரண்டாயிரம் வருடங்களாக சமணமுனிகள் கொண்டிருந்த அதே எண்ணம்.

காந்தி மூன்றாம் வகுப்பில் பயணம் செய்தது விளம்பரம் என்று இன்று சொல்கிறார்கள். அவர் இந்தியாவுக்கு வந்த காலகட்டத்தில் அழுக்கும் பிசுக்கும் நிறைந்த மூன்றாம் வகுப்பில் எளிய மக்களுடன் இணைந்து மாதக்கணக்கில் இந்தியாவெங்கும் சுற்றியிருக்கிறார் என்பதையும், அப்படி இந்தியாவின் எளிய மக்களை நெருங்கி நோக்கிய ஒரே அரசியல் தலைவர் அவர் மட்டுமே என்பதையும், நேருவோ படேலோ, ஜின்னாவோ, அம்பேத்காரோ, ஏன் ஆரம்பகால கம்யூனிஸ்டுகளான எம்.என்.ராயோ, பி.சி.ஜோஷியோகூட அப்படி அம்மக்களை அறிந்தவர்கள் அல்ல என்பதையும் அவர்கள் கவனிப்பதில்லை.

சம்பாரன் போராட்டம் போன்றவை நடந்து காந்தி மகாத்மாவாக அறியப்பட்ட பின்னரும்கூட மூன்றாம் வகுப்பு பெட்டிகளில் பல்லாயிரம் கிலோமீட்டர் பயணம்செய்திருக்கிறார். அவரது முகம் அச்சு வழியாக அறியப்படாதிருந்தமையால் அவரை எவரும் அடையாளம் காணவில்லை. அன்றைய இந்திய மூன்றாம் வகுப்பு பெட்டி எப்படி இருந்திருக்குமென ஊகிக்கலாம். எந்தவிதமான சுகாதாரப்பயிற்சியும் இல்லாத மக்கள். அவர்களைப் பற்றிய கவலையே இல்லாத அரசு. காந்தி தன் பயணங்களில் பெட்டிகளை தானே சுத்தம் செய்திருக்கிறார். கழிப்பறைகளை சுத்தம்செய்திருக்கிறார். அவரால் அப்படிச் செய்யாமல் இருக்க இயலாது. அப்போது அவர் அருகே எவரும் நடந்து அவர் மகாத்மாவா இல்லையா என்று மதிப்பு போடவில்லை.

துறந்துகொண்டே வந்தார் காந்தி. அது அவரைப்பொறுத்தவரை முன்னேற்றம். ருசிக்கான உணவை, காமத்தை, வசதியான இல்லங்களை. ஒரு கட்டத்தில் அவர் வசதியான ஆடைகளை துறந்து எளிமையான ஆடைக்கு வந்ததும் அந்தப் பரிணாமத்தின் ஒரு கட்டமே. ஓர் இந்திய மனம் அடையும் இயல்பான வளர்ச்சி நிலை அது. இன்று பலரும் கவனிக்காத ஒன்றுண்டு, நேர்த்தியான உடைகள் மேல் அபாரமான பிரியம் கொண்டிருந்தவரும், அப்படி இந்தியாவெங்கும் அடையாளம்காணப்பட்டவருமான அம்பேத்கார் கூட அவரது வாழ்நாளின் மெய்ஞானம் கனிந்த இறுதிக்காலத்தில் எளிமையான உடைகளை நோக்கியே சென்றார்.

காந்தியின் உடை அவரை இந்தியாவின் கோடானுகோடி விவசாயிகளில் ஒருவராக அவர்களுக்குக் காட்டியது என்று சொல்லப்படுவதுண்டு. ஒலிப்பெருக்கி வசதி இல்லாத இடங்களில் தன்னைப்பார்க்கவந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு காந்தி வெறுமே காட்சி மட்டுமே அளித்தார். அவரது தோற்றமே அவரது செய்தி ஆயிற்று என்று காந்தியின் வரலாற்றை எழுதிய

லூயி ஃபிஷர் சொல்கிறார். [Life Of Mahatma Gandhi, Louis Fischer]

ஆனால் அது ஒரு மேலைநாட்டு நோக்கு. காந்தியின் அந்த உடை அவரை இந்தியாவின் பல்லாயிரம் மெய்ஞானிகளில் ஒருவராக அடையாளம் காட்டியது. ராமகிருஷ்ணபரமஹம்ஸரின், நாராயணகுருவின், ரமணரின், வள்ளாரின் தோற்றம் அல்லவா அது? காந்தி இந்தியக் கண்களுக்கு ஓர் அற்புதம் அல்ல. அவரைப்போன்ற ஆன்ம வல்லமைமிக்க பலர் அப்போது இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் உலகம்அறிந்தும் அறியப்படாமலும் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அவர்களுள் ஒருவர் அரசியலுக்கு வந்தார் என்பதே காந்தி.

எளிமையான இந்திய கிராமிய மனம் அத்தகைய ஒருவரை அற்புதங்கள் செய்பவராகவே எண்ணிக்கொள்ளும். அவரை தெய்வமாக வழிபடும். அவர்கள் மீண்டும் மீண்டும் தங்களை அப்படி வழிபடலாகாது என்றே சொல்வார்கள். அதையும் மீறி அவர்கள் வழிபடப்படுவார்கள். அந்த வழிபாட்டை அம்மகான்கள் உருவாக்கினார்கள் என்று சொல்வதற்குப் பெயர் அறியாமையே.

காந்தியைப்பற்றி லார்ட் இர்வின் அவரது வயதான காலத்தில் சொன்னதை ஒரு இடத்தில் வின்செண்ட் ஷீன் குறிப்பிடுகிறார். காந்தியின் அபாரமான வல்லமை என்பது அனைவரையும் தனக்கு முற்றிலும் சமானமாக நடத்துவதில்தான் இருந்தது என்றாராம் இர்வின். மிக எளிய மனிதர்களை மட்டுமல்ல மிகமிக வலிமையான மனிதர்களையும்கூட அவர் அவ்வாறுதான் நடத்தினார். பட்லர்களை, வைஸ்ராய்களை, சாம்ராஜ்யங்களின் மகாராணிகளைஎ ஒரு தருணத்திலும் காந்தி பிறரது பணிவை ஏற்றுக்கொண்டவரோ ஊக்குவித்தவரோ அல்ல. 'பெரியோரை வியத்தலும் இலமே சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே' என அவரது அந்த நிலையை நம் மொழியின் கவிஞன் சொல்லிவைத்திருக்கிறான்.
எண்ணிப்பார்த்திருக்கிறீர்களா? தான் வாழ்ந்த காலகட்டத்தில் காந்தி எத்தனை லட்சம்பேரை ஆழமாகப் பாதித்திருக்கிறார் என்று? அவர்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் அளவிலேயே ஒருவகை மகாத்மாக்கள் என்று தெரியுமா உங்களுக்கு? சிலர் அவரிடம் ஒருசில சொற்களே பேசியிருக்கிறார்கள். லாரி பேக்கர் போல. சிலர் அவரை பார்த்தார்கள் அவ்வளவுதான், வைக்கம் முகமது பஷீர்போல. அவர்களின் ஒட்டுமொத்த வாழ்க்கைத்தரிசனத்தையே அது மாற்றியமைத்திருக்கிறது. எத்தனை சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள்! அவர் வாழ்ந்த காலத்தின் மகத்தான மனங்களில் அவரது அழுத்தமான பாதிப்பில்லாதவர்கள் அனேகமாக எவருமே இல்லை. ஐன்ஸ்டீன் முதல் சார்லிசாப்ளின் வரை.

அத்தனைபேரையும் ஒரு குஜராத்தி பனியா கோவணம்கட்டி வேடம் போட்டு ஏமாற்றினார் என்றும், நீங்கள் அதிபுத்திசாலியானதனால் நீங்கள் 'உண்மை' யை உணர்ந்துகொண்டீர்கள் என்றும் எண்ணினீர்கள் என்றால் நாம் என்ன பேசுவது. நான் உங்களை ஒரு மகாத்மா என்று நம்பவேண்டும். அல்லது உங்களை நம்பவைத்தவரை அதிமகாத்மா என்று நம்ப வேண்டும். மன்னிக்கவும், அதைவிட காந்தியை நம்புவதற்கே அதிகமான ஆதாரங்கள் இருக்கின்றன.
காந்தியின் ஆகப்பெரிய பிரச்சினையே அவர் ஓர் அசாதாரண மனிதர் என்பது அவருக்குத் தெரியாது என்பதே என்கிறார் வின்செண்ட் ஷீன். அவர் தன்னை சாதாரண அறிவுத்திறனும் சாதாரணமான ஆன்மீக வல்லமையும் கொண்ட ஒருவர் என்றே எண்ணினார். தன்னாலேயே ஒரு விஷயத்தை செய்ய முடியும் என்னும்போது ஏன் எல்லாராலும் செய்ய முடியாது என்று கருதினார். அவரது குழந்தை வளர்ப்பின் பிரச்சினையே அவர் தன் நெறிகளை அவர்களும் சாதாரணமாக கடைப்பிடிக்கமுடியும் என நம்பி அவர்களை வளர்த்ததுதான். அவரது ஆசிரமங்களில் அந்தச் சிக்கல் எழுந்தபடியே இருந்தது. குறிப்பாக ஆண்பெண் உறவு விஷயங்களில்.

காந்தி அரசியலில் ஒரு வெற்றி அல்ல என்றே சொல்ல வேண்டும் என்கிறார் வின்செண்ட் ஷீன். இந்தியாவுக்கு ஓர் அரசியல் சுதந்திரத்தை வாங்குவது அவரது இலக்கு அல்ல. அவரது கனவுகள் மகத்தானவை. அவர் போரில்லாத ஓர் உலகத்தைப்பற்றி எண்ணினார். வளங்கள் சூறையாடப்படாத ஓர் வாழ்க்கைமுறையை கற்பனைசெய்தார். பேதங்கள் இல்லாத மானுடத்தைப்பற்றி உருவகித்துக்கொண்டார். அதற்கு புலன்கள் மேல் கட்டுப்பாடும் சகமனிதர்கள் மேல் பிரியமும் போதுமே என்று எண்ணினார். அவை எளியமக்களுக்கு மாபெரும் சவால்கள் என அவர் புரிந்துகொள்ளவே இல்லை. அவர் தன்னை ஒரு சாமானியனாக எண்ணிக்கொண்ட மகாத்மா என்பதே அவரது நடைமுறை தோல்வி என்று சொல்லும் வின்செண்ட் ஷீன் ஏசுவும் அத்தகைய ஒருவரே என்கிறார்

காந்தி அரசியலுக்கு வந்து சிலவருடங்களுக்குள், அவரது மாபெரும் சத்தியசோதனைப்போராட்டங்களை இந்தியா காண்பதற்குள்ளேயே, அவரது மகாத்மா பட்டம் உறுதிசெய்யப்பட்டுவிட்டது. அதை உறுதிசெய்தவர்கள் எளிய மக்கள், மாபெரும் கவிஞர்கள். தாகூர், பாரதி, வள்ளத்தோள், குவெம்புஎ அச்சொற்களை ஒரு நுண்ணுணர்வுள்ளவர் எளிதில் புறக்கணிக்க முடியும் என நான் நம்பவில்லை. அவர்களையெல்லாம் வெளிவேடம் கண்டு ஏமாறுபவர்கள் என்றும், நாம் மெய்யறியும் நுண்ணுணர்வாளர் என்றும் எண்ணிக்கொள்ளும் 'மேதமை' எனக்கு இல்லை என்பதற்காக உள்ளபடியே உவகையடைகிறேன். நான் காந்தியை மகாத்மா என்ற சொல்லால் சொல்வதில்லை. ஒரு மனிதரை நாம் அறிய முயலும்போது அவருக்கு அடைமொழிகள் போடுவதென்பது முன்முடிவுகளை நிறுவி அவரை நம்மிடமிருந்து மறைத்துவிடும் என்பதனால்தான் அது. காந்தி இந்திய மரபு வகுத்த ஞானமுறைகளில் ஒன்றை, கர்மயோகத்தை, தன் பாதையாகக் கொண்டவர். அதனூடாக கனிந்த ஞானி. ஆனால்எந்த அர்த்ததில் நாம் முழுமனிதர், மெய்ஞானி,பரமஹம்சர் என்று ஒருவரைச் சொல்கிறோமோ அந்த அர்த்தத்தில் காந்தியைச் சொல்லமுடியாது.

ஆனாலும் ''பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசம் தன்னை வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா நீ வாழ்க வாழ்க'' என என் மொழியின் நவகவிஞனுடன் சேர்ந்து கூத்தாடுவதற்கு எனக்குத் தயக்கமில்லை.

---

**காந்தியும் தலித் அரசியலும் 2**
**2.காந்தியின் வரலாற்றுப்பாத்திரம்**

பூனா ஒப்பந்தம் மற்றும் தலித் அரசியலைப்பற்றிபேசுவதற்கு முன்னர் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு பெரிய வரைவில் அந்த சந்தர்ப்பத்தைப் பொருத்திப் பார்க்கவேண்டும். இந்தியா என்ற பெருநிலத்தின் பற்பல பிரிவுகள் கொண்ட

பலகோடி மக்களின் நலன்களுடன் சம்பந்தப்பட்டதாகவும் வல்லமை வாய்ந்த ஒரு பேரரசின் மகத்தான ராஜதந்திர விளையாட்டுக்களுடன் சம்பந்தமுள்ளதாகவும் அச்சித்திரத்தை அணுக வேண்டும்.

**தலைவன் வருகை**

இந்திய சுதந்திரப்போராட்ட வரலாற்றைப் பார்த்தால் சுதந்திரம் குறித்த காங்கிரஸின் கருத்துக்கள் படிப்படியாக மாறிவருவதைப் பார்க்கலாம். 1885 ல் காங்கிரஸ் தொடங்கப்பட்டது இந்தியாவுக்கு சுதந்திரம் வேண்டும் என்பதற்காக அல்ல. மாறாக, இந்தியர்களுக்கு பிரிட்டிஷ் அரசில் உள்ள வேலைவாய்ப்புகள் மற்றும் பிற வணிக வாய்ப்புகளைப் பற்றி உருவாகிவரும் சிறிய அதிருப்திகளை பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்குத் தெரிவிக்க ஓர் அமைப்பு தேவை என்பதற்காகவே.

பின்னர் அந்த இந்தியசுதந்திரம் என்ற கருத்து மெல்ல மெல்ல வலுப்பெறலாயிற்று. இந்தியாவில் இந்தியர்களுக்கு அதிக உரிமைகள் தேவை என்றும் இந்திய மக்களின் அடிப்படைத்தேவைகளை பிரிட்டிஷ் அரசு கவனிக்கவேண்டும் என்றும் கோரிக்கை எழுந்தது. திலகர் போன்றவர்களின் தலைமையில் தீவிரவாத அணி ஒன்று தேசவிடுதலை என்ற கோணத்தில் சிந்திக்க, கோகலே போன்றவர்களின் தலைமையில் மிதவாத அணி மேலும் ஆட்சி உரிமைகள் என்ற கோணத்தில் சிந்தித்தது.

இக்கால காங்கிரஸ் இவ்விரு தரப்புக்கும் இடையேயான கடும் மோதல்களின் முரணியக்கம் மூலம் கொஞ்சம் கொஞ்சமாக கருத்துதளத்தில் முன்னகர்ந்தது என்று சொல்லலாம். காங்கிரஸ் பொதுவாக மிதவாதிகளின் கையிலேயெ இருந்தது. ஆனால் கருத்தியல் ரீதியாக தீவிரவாதிகள் காங்கிரஸை படிப்படியாக மேலே இட்டுச்சென்றார்கள்.

ஆனால் இக்காலகட்டத்தில் காங்கிரஸ் கிட்டத்தட்ட செயலிழந்தே இருந்தது. அதற்குக் காரணம் மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த மோதலே. உருப்படியாக ஒன்றுமே நிகழவில்லை. இந்திய சுதந்திரப்போராட்டத்தின் தயாரிப்புநிலைக் காலம் என்றே இதைச் சொல்ல முடியும்.

இந்த மோதலை உருவாக்கி நிலைநாட்டியதில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது என இன்று ஏராளமான ஆவணங்கள் வழியாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. மிதவாதிகளில் பலர் ரகசியமாக பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுடன் தொடர்புகொண்டிருந்தார்கள். பலர் பின்னர் பிரிட்டிஷ் ஆட்சியின் இலாபங்களை பெருமளவில் பெற்றார்கள். பாரதி உள்ளிட்ட தீவிரவாதிகள் இதையே காரணமாக காட்டி ஒட்டுமொத்த மிதவாதிகளையே நடிப்புச் சுதேசிகள் என்று வசைபாடினார்கள்.

இச்சூழலில்தான் 1915 ல் காந்தி காங்கிரஸுக்குள் வருகிறார். 1918 ல் சம்பாரன் சத்யாகிரகம் மூலமே அவரது பங்களிப்பு உருவாகிறது. காந்தியின் வருகை உருவாக்கிய நம்பிக்கையையும் அலையையும் பாரதி முதலிய தீவிரவாதிகள்கூட காந்தி கவனிக்கப்பட்ட இரண்டு வருடங்களுக்குள் 1920 லேயே அவரை 'வாழ்க நீ எம்மான்' என்று வாழ்த்தி வரவேற்றதில் இருந்தே புரிந்துகொள்ள முடியும்.

காந்திக்கான இடம் காங்கிரஸில் காலியாக இருந்தது என்றே சொல்லவேண்டும். ஒருபக்கம் பிரிட்டிஷ் அரசின் நல்லெண்ணத்தை இழக்காதவரும் அனைவரையும் ஒருங்கிணைத்துச் செல்பவரும் நிதானமானவருமான கோகலே. ஆனால் அவரால் மக்களை எழுச்சி கொள்ளச்செய்ய முடியாது. மறுபக்கம் தீவிரமான எண்ணங்கள் கொண்டவரும் பூசலிடுபவருமான திலகர். ஆனால் அவரே மக்கள்சக்தி. இவ்விரு ஆற்றல்களையும் இணைக்கும் மையமாக வந்தார் காந்தி

காந்தியிடம் அன்று இந்திய காங்கிரஸ் தேடிய அந்த அபூர்வமான இணைப்பு இருந்தது. இந்தியா போன்ற மாபெரும் தேசத்தை பிரதிநிதித்துவம் செய்த காங்கிரஸின் பலநூறு உட்பிரிவுகள்கொண்ட அமைப்பை இடைவெளி இல்லாத சமரசம் மூலம் முன்னெடுத்துச்செல்லும் நிதானமான அணுகுமுறை அவரிடம் இருந்தது. பிரிட்டிஷ் ராஜதந்திரத்துடன் உரையாடவும் அதை கையாளவும்கூடியவராக அவர் இருந்தார். மறுபக்கம் மிதவாதிகளைப்போல பிரிட்டிஷாரிடமிருந்து சில உரிமைகளை வாங்கினால் போதும் என அவர் எண்ணவில்லை.அவருக்கு இந்தியாவின் சுதந்திரம் குறித்த ஒரு கனவு இருந்தது. அதில் சமரசமற்றவராக அவர் இருந்தார்.

அதாவது காந்தி தீவிரவாதிகளின் சுதந்திரக் கனவை மிதவாதிகளின் ஜனநாயக வழிமுறைகள் மூலம் வென்றெடுக்க முனைந்தார். அந்த இணைப்பே அவரை தலைமைக்குக் கொண்டுவந்தது. அவர் வந்ததுமே காங்கிரஸ் சட்டென்று அபாரமான ஓர் ஒருங்கிணைவை அடைந்ததை வரலாறு காட்டுகிறது. அதன் வழியாக காங்கிரஸ் சம்பிரதாயமான கருத்தரங்குகளை நடத்தும் அமைப்பு என்ற நிலையில் இருந்து மீறி எழுந்து செயலூக்கம் கொண்ட ஒரு போராட்ட அமைப்பாக மாறியது. அவர் மையப்பொறுப்புக்குவந்த மூன்றுவருடங்களுக்குள், 1921 ல், காங்கிரஸ் சுயராஜ்யத்தை தன் அடிப்படை இலக்காக பிரகடனப்படுத்தியது.

காந்தி அரசியலுக்கு வந்தது சமநிலையிழந்து செயலற்றுக்கிடந்த ஒரு அமைப்புக்கு ஓர் அச்சு, ஒரு சமநிலைப்புள்ளி தேவையாக இருந்த காலகட்டத்தில். அவர் அந்த மையமாக இருந்தார், கடைசிவரை. **ஜனநாயகவாதியின் சிலுவை**

அம்பேத்காருடனான உரையாடலில் தன்னம்பிக்கையுடன் காந்தி சொனனர், ''**நான் என் முழுவாழ்க்கையிலும் ஜனநாயகவதியாகவே இருந்து வந்திருக்கிறேன். என் மரணத்துக்குப் பின்பு கங்கையில் என் சாம்பல் கரைந்தபின்பு ஜனநாயகவாதிகளில் தலையாயவன் நான் என்பதை இந்த உலகம் ஏற்றுக்கோள்ளும் நான் இதை பெருமைக்காகச் சொல்லவில்லை பணிவோடு சொல்கிறேன்ஸ்''**

கடைசிவரை காங்கிரஸுக்குள் மிதவாதி , தீவிரவாதி என்ற பிரிவினை இருந்துகொண்டுதான் இருந்தது. சுபாஷ் சந்திரபோசுக்கும் காந்திக்குமான முரண்பாட்டின் உள்ளுறைகூட அதுதான். ஆனால் அந்த வகையான உள்மோதல்கள் காங்கிரஸை ஸ்தம்பிக்க வைத்த காலம் முடிந்துவிட்டது. காங்கிரஸை காந்தி தன் தலைமையில் முழுக்கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார். அந்த அதிகாரம் அவருக்கு இருந்த அபாரமான மக்கள்செல்வாக்கால் உருவானது. அவர் வந்தபின் காங்கிரஸுக்குள் அவரன்றி எவருமே முக்கியமில்லை என்ற நிலையை மக்கள் உருவாக்கினார்கள்.

ஆனால் காந்தி அந்தச் செல்வாக்கை சர்வாதிகாரத்தனமாக உபயோகித்துக் கொள்ளவில்லை. காங்கிரஸின் அன்றைய வரலாற்றை வாசிக்கும் எவருக்குமே அது தெரியும். காந்தி அன்று காங்கிரஸில் இருந்த அத்தனை தலைவர்களையும் தூக்கி வீசியிருந்தால்கூட காங்கிரஸுக்கு ஒரு இழப்பும் ஏற்பட்டிருக்காது என்பதே உண்மை. காந்தியை எதிர்த்து வெளியே சென்ற ஒருவர் கூட பெயரளவுக்குகூட மக்களாதரவை திரட்டமுடியவில்லை. அவரது இறப்புவரை காந்தி என்றால் காங்கிரஸ்தான், காங்கிரஸ் என்றால் காந்தி தான். ஆனால் ஒருபோதும் எவரையும் இழக்க காந்தி தயாராக இருக்கவில்லை. எப்போதுமே முடிந்தவரை அணைத்துப்போகவே அவர் முயன்றிருக்கிறார்.

ஏன் என்றால் அவர்களின் மக்கள் செல்வாக்குக்காக அல்ல. இந்தியா என்ற மாபெரும் தேசத்தில் பலநூறு சமுகங்கள் பலவகையான கருத்தோட்டங்கள் உள்ளன என்று காந்தி உணர்ந்திருந்தார். அந்த எல்லா தரப்புக்கும் காங்கிரஸுக்குள் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என அவர் எண்ணினார். அப்போது மட்டுமே காங்கிரஸ் தேசத்தின் பிரதிநிதியாக நின்று தேசத்துக்காக போராட முடியும் என அவர் நம்பினார்.

ஆகவே மதன்மோகன் மாளவியா, புருஷோத்தம்தாஸ் டாண்டன், கோவிந்த வல்லப பந்த், கெஎம்முன்ஷி போன்ற மரபுவாதிகள் நேரு, சுபாஷ் சந்திர போஸ் போன்ற நவீனத்துவர்கள், மௌலானா அபுல்கலாம் ஆசாத், கான் அப்துல் காஃப்பார் கான் போன்ற இஸ்லாமியவாதிகள் ஆகிய அனைவருக்குமே இடமுள்ளதும் அவர்கள் அனைவருடைய அணுகுமுறைகளும் ஒன்றுடன் ஒன்று உரையாடி ஒரு பொதுத்தளத்தைச் சென்றடையக்கூடியதுமான ஒரு ஜனநாயகக் காங்கிரசையே அவர் கனவுகண்டார். எனவே சமரசம் செய்துகொண்டே இருந்தார்

காந்தியின் தொகுக்கப்பட்ட எழுத்துக்களை கூர்ந்து வாசிக்கும் ஒருவர் அவர் ஒன்றுடன் ஒன்று முரண்படும் பல்வேறு கருத்துநிலைகளை உரையாடச்செய்யவே தன் வாழ்நாளை முழுக்கச் செலவழித்தார் என்று புரிந்துகொள்வார். ஒருவரை ஒருவர் ஐயப்பட்ட, ஒருவர் நலன்களுடன் இன்னொருவர் நலன் முரண்பட்ட, பல்வேறு தரப்புகள் நடுவே ஒரு சமரச மையமாக அவர் இருந்துகொண்டே இருந்தார். அவர்களை தன் நிதானத்தாலும் மதிவன்மையாலும் கட்டுக்குள் வைத்திருந்தார். தேவையான போது அவர் உண்ணாவிரதம் போன்ற சுயதண்டனை முறைகள் மூலமும் அவர்களை கட்டுப்படுத்தினார்.

அவர்களில் ஒவ்வொருவருக்கும் அவர் மீது மனக்குறைகள் இருந்தன. பாரபட்சங்களை அவர்கள் கண்டடைந்தபடியே இருந்தார்கள். ஒரு அப்பத்தை ஒன்பது பசித்த குழந்தைகளுக்குப் பங்கிட்ட தந்தையாக இருந்தார் அவர். அவரை முழுமனத்துடன் ஏற்க எந்தக்குழுவின் தலைவராலும் இயலவில்லை. உண்மையிலேயே சில பாரபட்சங்கள் நடந்திருக்கலாம். ஏன் என்றால் இத்தகைய ஒரு பீடத்தில் இருப்பவர் ஒருநூறு தட்டுகள் கொண்ட ஒரு தராசின் மையமுள் போன்றவர். அவற்றின் ஒவ்வொரு கணமும் மாறிக்கொண்டிருக்கும் எடைச்சமநிலைகள் நடுவே ஒரு சமரசப்புள்ளியாகவே அவர் இருக்க முடியும்.

காங்கிரஸ் எக்காலத்திலும் உட்பூசல்களின் பெரும் தொகையாகவே இருந்திருக்கிறது. காங்கிரஸுக்குள் இருந்த பல்வேறு குழுக்கள் ஒவ்வொன்றும் இந்தியாவில் இருந்த அதிகாரமையங்களை பிரதிநிதித்துவம் செய்தன. வடக்கு தெற்கு பிரிவினை இருந்தது. அவற்றுக்குள் மாநிலவாரி, மொழிவாரி குழுக்கள். அவற்றுக்குள் சாதிவாரிக்குழுக்கள். காந்தி அவற்றுக்கு இடையே சமரசத்தை உருவாக்கிக்கொண்டே இருந்தார்.

இந்தச்சமரசத்தில் பிழைகள் இருந்தனவா? பலவகையிலும் அன்றாடப் பிழைகள் நிகழத்தான் செய்யும். பாரபட்சங்கள் நிகழ்ந்தனவா? நிகழாமலிருக்க வழியே இல்லை. வல்லமைகொண்ட ஒரு குழுவின் ஆதிக்கத்தை ஒரு ஜனநாயக அமைப்பு ஒருபோதும் தவிர்க்க முடியாது. குழுக்கள் இணைந்தும் பிரிந்தும் உருவாகும் அதிகாரச் சமவாக்கியங்கள் எந்த மேதையாலும் எந்த சக்ரவர்த்தியாலும் முற்றிலும் தன் கட்டுப்பாட்டுக்குள் நிறுத்தக்கூடியவை அல்ல. இந்தியாவின் மாபெரும் பேரரசுகளின் வரலாற்றிலேயே இதுதான் நிலை.

ஆக, ஒருவேளை அன்றைய காங்கிரஸ், அதன் தலைவராக இருந்த காந்தி ஏதேனும் ஒரு குழுவுக்கு அல்லது சாதிக்கு பாரபட்சம் இழைத்திருக்கக் கூடுமா? சாத்தியம் உண்டு. அவ்வாறு பல மனக்குறைகள் நீடிக்கின்றன. இந்திய அரசியலில் வங்கத்தின் மேலாண்மையை காந்தி திட்டமிட்டு ஒழித்தார் என்று இன்றும் பலநூறு வங்க அரசியலெழுத்தாளர்கள் சொல்கிறார்கள். வங்கம் தன்னை என்றுமே இந்தியாவின் தலைமைமாநிலமாக கற்பனை செய்துகொள்வது. எதிர்பார்ப்புகள் அதிகமாக இருக்கையில் ஏமாற்றமும், விளைவாக பாரபட்சம் காட்டப்பட்ட உணர்ச்சியும் எழுகிறது.

எந்த ஒரு தரப்பும் இத்தகைய சிக்கலான கூட்டமைப்புக்குள் தனக்கு சாதகமான முறையில் அனைத்தும் நிகழவேண்டும் என எதிர்பார்க்க இயலாது. தன் எதிர்பார்ப்புகள் நூறுவிழுக்காடு நிறைவேறவேண்டும் என சொல்ல முடியாது. சிலசமயம் ஏமாற்றங்கள் கடுமையாக இருக்கலாம். அந்த அதிகாரப்பகிர்வு ஆட்டத்தின் விதிகளை மட்டுமே குற்றம்சாட்ட இயலும். ஜனநாயகம் என்றுமே எண்ணிக்கையின் ஆட்டம். அதில் ஏமாற்றம் கொண்ட ஒரு தரப்பு மொத்த அமைப்புமே தனக்கு எதிராகச் சதி செய்தது என்று சொல்வதும் சரி, அதன் தலைமையை ஒரு அப்பட்டமான சதிகாரனாகவோ துரோகியாகவோ சித்தரிப்பதும் சரி வரலாற்றுக்குச் செய்யும் நியாயம் அல்ல.

காந்தியின் செயல்பாடுகளில் பிழைகளே நேரவில்லை என்று எவரும் சொல்ல முடியாது. இந்தியாவின் அரசியல் அத்தனைதூரம் சிடுக்கானது. ஆனால் அவரது நோக்கத்தையும் நேர்மையையும் ஐயப்படுவதற்கு வரலாறு ஆதாரம் அளிக்கவில்லை. அவரது தலைமையிலான சுதந்திரபோராட்டத்தில் அதன் பகுதியாக இருந்த அதிகாரப் பகிர்வில் ஏமாற்றம் கொண்ட எந்த தரப்புமே அவரை துரோகி என்று சொல்லலாம். அது அவர்களின் அரசியலே ஒழிய வரலாற்று உண்மை அல்ல.

இந்தியா போன்ற ஒரு தேசத்தில் எந்த ஒரு பெரும் மக்கள்அமைப்பை நடத்துவரும் அத்தகைய பழிகளைச் சுமக்க நேரும். ஒருவேளை அம்பேத்கார் இந்திய அளவில் ஒரு தலித் அமைப்பை நிறுவி அதை அனைத்து தலித்துக்களுக்கும் உரிய ஜனநாயக அமைப்பாக முன்னெடுத்திருந்தால் அவருக்கு எதிராகவும் இதே போன்ற குரல்கள் அதற்குள் இருந்து எழுந்திருக்கும். அந்த யதார்த்தத்திலிருந்தே நாம் சிந்திக்கவேண்டும்.

ஆச்சரியம் என்னவென்றால், தன்னை சாதாரணமாக எதிர்த்தவர்களைக்கூட கொன்றழித்த தலைவர்களை நியாயப்படுத்தி அவர்களின் வரலாற்று இடத்தை வலியுறுத்துபவர்கள்தான் காந்தியை சர்வாதிகாரி என்கிறார்கள். அவர் தன் கருத்தை பிறர்மேல் ஏற்றியது மாபெரும் குற்றம் என்கிறார்கள். இந்தியாவில் அரசியல் சிந்தனைகளில் உள்ள வேடிக்கைகளுக்கு அளவே கிடையாது! ஒரு ஜனநாயக அமைப்பில் ஜனநாயகத்தின் எல்லைகளுக்குள் முரண்பாடுகளை கட்டுப்படுத்திக்கொள்ளச்செய்ய அதன் தலைவன் செய்யக்கூடிய ஆகச்சிறந்த வழிமுறை காந்தி முன்வைத்த சுயத்தியாகம் அன்றி வேறல்ல

காந்தி தன் அமைப்புக்குள் எல்லா வகையான விவாதங்களையும் அங்கீகரித்தார். எப்போதுமே காங்கிரஸுக்குள் அவருக்கு எதிரான கடுமையான குரல் ஒலித்துக்கொண்டே இருந்தது. அதை அவர் ஊக்குவித்தார் என்றே சொல்லலாம். அவர் அவர்களுடன் சாத்வீகமாக உரையாடுபவராகவே இருந்தார். ஆனால் அவர்கள் எல்லை மீறுவார்கள் என்றால் அவர்களுக்கு ஆணித்தரமாக ஒன்றைச் சொன்னார், காங்கிரஸில் மக்கள் ஆதரவு அவருக்கே. அவர்தான் காங்கிரஸ். ஓர் உண்ணாவிரதம் சட்டென்று அந்தத் தலைவர்களுக்கு அதைச் சுட்டிக்காட்டிவிடும். அவர்கள் தங்கள் எல்லைகளை உணர்வார்கள்.

காந்தி ஒருங்கிணைக்கும் தலைவர். சமரசம் செய்யும் தலைவர். பேதங்கள் நடுவே மையக்கோடாக ஒரு இலட்சியத்தை நிலைநிறுத்த முனைந்தவர். அதேசமயம் தன் விழுமியங்களில் ஆழமான பிடிவாதத்துடன் இருந்தவர். அவ்விழுமியங்களுக்காக எந்நேரமும் உயிர்விடச் சித்தமாக வாழ்ந்தார். உயிர்விட்டவர்.

**உண்ணாவிரதம் , தலைவனின் ஆயுதம்**

காந்தி தன்னுடைய உண்ணாவிரதம் என்ற ஆயுதத்தை வெள்ளையருக்கு எதிரான போராட்டத்தில் பயன்படுத்தினார் என்று பலர் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். தன்னால் வழிநடத்தப்பட்ட அமைப்பினை தன்னுடைய தார்மீகமான பிடிக்குள்

வைத்திருக்கவே அவர் உண்ணாவிரதத்தை அதிகமும் பயன்படுத்தியிருக்கிறார் என்பதே உண்மை.

அவரது முதல் உண்ணாவிரதம் 1918 ல் அகம்மதாபாதில் நடந்தது. அவர் அம்பாலால் சாராபாயின் நெசவுஆலையில் தொழிலாளர்களைத் திரட்டி ஒரு வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்தினார். அப்போது இந்தியாவில் தொழிற்சங்கங்கள் ஏதும் உருவாகியிருக்கவில்லை. வேலைநிறுத்தம் போன்ற போராட்டங்கள் அப்போது எவருக்கும் பெரிதாக அறிமுகமும் இல்லை. போராட்டம் ஆரம்பித்த சில நாட்களிலேயே ஊழியர்களில் ஒருசாரார் முதலாளியின் வாக்குறுதிகளை நம்பி வேலைக்குத் திரும்பினர். அந்த 'கருங்காலி 'தனத்துக்கு எதிராகவே காந்தி அவரது உண்ணாவிரதப்போராட்டத்தை ஆரம்பித்தார்.

அதன்பின்னர் காந்தி மேற்கொண்ட முக்கியமான உண்ணாவிரதங்கள் ஐந்து. இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே நிலவிய மனக்கசப்புகளைக் களையும்பொருட்டும் காங்கிரஸுக்குள் இருந்த உட்பூசல்களைக் களையும்பொருட்டும் காந்தி முகமது அலியின் டெல்லி இல்லத்தில் 1924 ல் மூன்றுவார உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். 1932 ல் பூனா ஒப்பந்தத்தை எதிர்த்து நடத்திய ஆறுநாள் உண்ணாவிரதம் அடுத்தது. 1933 ல் தன்னுடைய ஹரிஜன இயக்கத்தை ஆரம்பிக்கும் முன்னர் தன்னை 'தூய்மைப்படுத்தி'க் கொள்வதற்காக அவர் நடத்திய 21 நாள் உண்ணாவிரதம். 1947 ல் மத ஒற்றுமையை கோரி அவர் நவ்காளியில் மேற்கொண்ட உண்ணாவிரதம். கடைசியாக 1948 ல் கஜானாவைப் பங்கிட்டு பாகிஸ்தானுக்குக் கொடுக்கவேண்டிய 550 கோடி ரூபாயைக் கொடுக்கச்சொல்லி நடத்திய கடைசி உண்ணாவிரதம்.

இந்த உண்ணாவிரதங்களில் மிக நீளமான மூன்று உண்ணாவிரதங்களும் சொந்தக் கட்சியான காங்கிரசை எதித்து அவர் மேற்கொண்டவை என்பதை கவனிக்கவேண்டும். இந்திய அரசியலில் அவர் நுழைந்தபோதே இங்கே மிண்டோ மார்லி சீர்திருத்தங்கள் போன்ற ராஜதந்திரங்கள்மூலம் இந்துமுஸ்லீம் காழ்ப்புக்கான ஆழமான விதை ஊன்றப்பட்டிருந்ததை உணர்ந்தார். அவரது முதல் கவலையே அதுவாக தான் இருந்தது.

சித்தரஞ்சன்தாஸ் மோதிலால்நேரு போன்றவர்கள் பிரிட்டிஷ் பிரித்தாளும் சதிக்குப் பலியானபோது காங்கிரசுக்கு எதிரான முதல் உண்ணாவிரதத்தை அவர் செய்தார். அதேபோல காங்கிரஸின் உயர்சாதிப்பெரும்பான்மையை தன்னுடைய ஹரிஜனசேவைத்திட்டத்துக்கு கொண்டுவரும்பொருட்டே காந்தி 1933 ல் தன் நீண்ட உண்ணாவிரத்தை நடத்தினார் என்பது வெளிப்படை.

சாதி, வர்ணம் குறித்த காந்தியின் கருத்துக்களில் வந்த மாற்றம் காங்கிரஸின் பழைமைவாதிகளால் ஒத்துக்கொள்ளக் கூடியதாக இருக்கவில்லை. ஆனால் அவர்களுக்கு வேறு வழி இருக்கவில்லை. கடும் சாதியவாதிகளான புருஷோத்தம்தாஸ் டான்டன் போன்றவர்கள்கூட காந்தியின் தார்மீக அதிகாரத்துக்கு முன் பணிந்தார்கள்.

அதேபோல பாகிஸ்தானுக்குரிய கஜானாப்பங்கைக் கொடுக்க காங்கிரஸ் எளிதில் ஒத்துக்கொள்ளவில்லை. அந்த பணம் பாகிஸ்தானால் இந்தியாவுக்கு எதிரான ராணுவநடவடிக்கைக்கே செலவழிக்கப்படும் என பட்டேல் அஞ்சினார், அது உண்மையும் ஆயிற்று. காஷ்மீர் மீதான படையெடுப்பு அதனால்தான் நிகழ்ந்தது. மௌண்ட் பேட்டனும் ஒப்புக்கொள்ளவில்லை. நேருவும் அப்படி பணம் கொடுத்தால் அதை இந்துமகாசபையும் ஆர்.எஸ்.எஸ் இயக்கமும் கடுமையாக எதிர்த்து பிரச்சாரம் செய்யும் என நினைத்தார்.

ஆனால் காந்தி வேறு வகையாகவே நினைத்தார். இந்தியா என்ற புதிய தேசம் ராஜதந்திர மோசடிகளின் மூலம் தன் தொடக்கத்தை நிகழ்த்தக் கூடாது என்று அவர் கருதினார். அழிவை நிகழ்த்தும் பிழையாகவே இருந்தாலும் தேசத்தின் தொடக்கம் அறத்தில் அமையவேண்டும் என விரும்பினார். பாகிஸ்தானுக்குக் குடிபெயர்ந்த பல லட்சம் மக்களுக்கு தேவையான உதவிகளைச் செய்வதற்கான பணம் அது என்று அவர் சொன்னார். அவரது தார்மீகமான அதிகாரம் வழக்கம்போல வென்றது. காங்கிரஸ் மட்டுமல்ல ஆர்.எஸ்.எஸ், இந்துமகாசபை இயக்கங்கள் கூட வன்முறைசார்ந்த போராட்டத்தை கைவிடுவதாக அவரிடம் உறுதி அளித்தார்கள்.

இதுவே காந்தியின் வழிமுறையாக இருந்தது. இந்த ஆயுதத்தை மிரட்டல் என்று முத்திரை குத்துபவர்கள் அவர் வேறென்ன செய்திருக்க வேண்டும் என்று சொல்ல வேண்டும். ஒரு தலைவன் தன் அமைப்பின் மீது தன் தார்மீகமான அதிகாரத்தை உணர்ச்சிகரமான செல்வாக்கைச் செலுத்துவதே இயல்பானது, நியாயமானது. கோடானுகோடி மக்களுக்கு அந்தத் தலைவன் மீதுள்ள பிடிப்பே அவனை தலைவனாக்குகிறது. ஒன்றுடன் ஒன்று முரண்படும் பல்வேறு தரப்புகளினால் ஆன ஒரு பேரமைப்பை முன்னோக்கி இட்டுச்செல்ல அவனுக்கு வேறு வழியே இல்லை.

**அகிம்சைப்போராட்டத்தின் விதிமுறைகள்**

காந்தி இந்திய சுதந்திரப்போராட்டத்தை அதுவரை முன்னுதாரணம் இல்லாத ஒரு வழியில் இட்டுச்சென்றார். அகிம்சைப்போராட்டம் என்று அவர் சொன்ன வழியை அவர் சிறு சிறு சோதனைகள் மூலம் படிப்படியாகச் செய்துபார்த்து, நடைமுறையில் உருவாகும் பிழைகளைக் கண்டடைந்து, அவற்றைச் சரிசெய்து முன்னகர்ந்தார். போராட்டமும் சமரசமும் ஒரு செயல்பாட்டின் இரு பக்கங்களாகவே அவர் கண்டார். கிடைத்த லாபங்களைத் தக்கவைத்துக்கொண்டு அந்த லாபங்களைப் பயன்படுத்தும்விதமாக நம்மை மேம்படுத்திக்கொண்டு மேலும் போராடுவதே அவரது வழி. 1918 ல் சம்பாரனில் தன் முதல் அகிம்சைப்போராட்டத்தைச் செய்து பார்த்தார் காந்தி. அது ஒரு வெற்றி. பிரிட்டிஷ் ஆட்சி என்பது அதன் மீது மக்கள் கொண்டிருக்கும் நல்லெண்ணத்தின் அடிப்படையிலேயே அமைந்திருக்கிறது என்றும், ஆகவே மக்கள் கருத்தை பிரிட்டிஷார் அஞ்சுகிறார்கள் என்றும் கண்டுகொண்டார். ஆகவே மக்களை பெருந்திரளாகத் திரட்டி அவர்களின் பொதுக்கருத்தை ஆயுதமாக பயன்படுத்தி செய்யப்படும் போராட்டவடிவத்தை காந்தி வடித்தெடுத்தார்

ஆனால் ஜாலியன் வாலாபாக் படுகொலை வழியாக பிரிட்டிஷ் ஆட்சியின் இன்னொரு முகத்தை காந்தி கண்டார். பிரிட்டிஷ் சிவில் ஆட்சி வேறு பிரிட்டிஷ் ராணுவம் வேறு என்ற ஆழமான புரிதல் அவருக்கு உருவாகியது. அதன்பின் காந்தி இந்தியச் சுதந்திரப்போர் பிரிட்டிஷ் சிவில் சிவில்அரசாங்கத்தின் கையில் இருந்து வெளியே போக விடவேயில்லை. மொத்தப்போராட்டமும் எந்நிலையிலும் ஒரு சிவில்செயல்பாடாகவே இருக்க வேண்டும் என்பதில் அபாரமான கவனம் கொண்டிருந்தார்

1922 ல் சௌரி சௌராவில் வன்முறை வெடித்தபோது உடனே அவர் அப்போராட்டத்தை வாபஸ் வாங்கிக் கொண்டார். காந்தி யாரெனத் தெரிந்தவர்களுக்கு அதன் காரணம் எளிதில் புரியும். ஒருபோதும் வன்முறையை ஆதரிக்கப்போவதில்லை என்றும் எந்நிலையிலும் போராட்டத்தை வாபஸ் வாங்கத் தயங்கமாட்டேன் என்றும் அவர் அதனூடாக திட்டவட்டமாக் அறிவுறுத்தினார்.

காந்தி போராட்டங்கள் வன்முறைநோக்கி அத்து மீறும்போதெல்லாம் வாபஸ் பெற்றதை குறைகூறும் ஒரு தரப்பு இன்றும் உண்டு. அவர்கள் பிரிட்டிஷாருக்குச் சாதகமாக மக்கள் போராட்டத்தை 'மழுப்பிய' துரோகியாக காந்தியைச் சித்தரிக்கிறார்கள். அவர் தன்னிச்சையான உருவான மக்கள் எழுச்சியை வெளியே இருந்து வந்து குளிர்விக்கவில்லை. மாறாக குளிர்ந்துகிடந்த

தேசத்தில் அந்த மக்கள் போராட்டத்தை அவரேதான் திட்டமிட்டு உருவாக்கினார். ஆகவே அதன் விளைவுகளை கட்டுப்படுத்த அவருக்கே முழு உரிமை உண்டு என்ற எளிய விஷயத்தை அவர்கள் காண்பதில்லை.

இப்படிச் சொல்பவர்களின் தரப்பு என்னவென்றால் ஒரு பெரும் அராஜகம் உருவாகி பல லட்சம்பேர் இறந்து நிலைமை கட்டுக்குள் நிற்காமல் சென்றிருந்தால் இந்தியாவைவிட்டு பிரிட்டிஷார் ஓடியிருப்பார்கள் என்பதே. தேசவிடுதலைக்காக 'கொஞ்சபேர்' இறந்தால் அதில் தவறில்லை என்று வாதிடுகிறார்கள். கம்யூனிசம் என்ற ஒரு கற்பனையான சமூக அமைப்புக்காக ஒருகோடிப்பேரை பலியிட்டு அதற்கான குற்றவுணர்ச்சியே இல்லாமல் 'கம்யூனிச அமலாக்கத்தில் ஒரு சிறு தவறு நடந்துவிட்டது' என்று சாதாரணமாக சொல்பவர்கள் அப்படித்தான் பார்ப்பார்கள்.

ஆனால் உலகை வென்ற பிரிட்டிஷ் ராணுவத்தின் வல்லமைக்கு முன் ஏழை இந்திய மக்களை தூண்டிவிட்டு பலிகொடுக்க காந்தி விரும்பவில்லை. இந்தியாவில் எப்போதெல்லாம் சிறிய அளவில் அராஜகம் எழுகிறதோ அப்போதெல்லாம் அது மக்கள் ஒருவரை ஒருவர் கொன்று குவிக்கும் கலவரமாகவே மாறும் என அவர் அறிந்திருந்தார். ஆகவே ஒருபோதும் நிலைமை சிவில் பிரசினை என்ற நிலைமையை மீறுவதை அவர் அனுமதித்ததில்லை. தன்னை நம்பிய எளிய மக்கள் மேல் ஒரு தலைவன் கொண்ட அபாரமான கருணையையே நாம் அதில் காண்கிறோம்

ஜாலியன் வாலாபாக் நிகழ்ச்சிக்கு எதிராக காந்தி தொடங்கிய மக்கள் இயக்கம் வன்முறைக்குத் திரும்பியபோது, பிரிட்டிஷ் ராணுவம் அதை கையாள ஆரம்பிப்பதற்கான முகாந்திரம் உருவாகிறதென தெரிந்ததுமே, அவர் அந்தப்போராட்டத்தை திரும்பப் பெற்றுக்கொண்டார். அந்தப்போராட்டத்துக்கு தெருவுக்கு வந்த மக்கள் எந்த ஒருங்கிணைப்பும் இல்லாத எளிய மக்கள்கூட்டம். இந்திய மக்கள் அறிந்ததெல்லாம் மன்னராட்சியும் கூட்டம் கூட்டமாகச் சென்று போராடிச் சாகும் களங்களும்தான். நிதானமான சிவில் போராட்டத்தை அவர்களுக்கு அவர் கற்பிக்க வேண்டியிருந்தது. அதற்கான ஆக்கபூர்வ முயற்சிகளில் காந்தி ஈடுபட்டார்.

இரண்டுவருடம் அந்த பயிற்சிப் பணியை தீவிரமாகவே செய்தார்.லட்சக்கணக்கான மக்களை காங்கிரஸ் உறுப்பினர்களாக்கினார். 'காலணா மெம்பர்' என அழைக்கப்பட்ட இந்த தொண்டர் படைக்கு பல்வெறு ஆசிரமங்கள் முகாம்கள் வழியாக எளிய வாழ்க்கை, ஒருங்கிணைந்த செயல்பாடு, எந்நிலையிலும் நிதானம் தவறாமல் இருக்கும் தன்மை ஆகியவை கற்பிக்கப்பட்டன. அந்த தொண்டர்படை காந்திக்கு பின்னர் வந்த போராட்டங்களில் பெரும் வல்லமையாக அமைந்தது.

காந்தி மக்களை கிளப்பிவிட்டு வரலாற்றழிவுகளை உருவாக்கி அவற்றின்மேல் பயணித்து அதிகாரத்தைக் கனவுகண்ட தலைவர் அல்ல. மாறாக அம்மக்களின் குறைகளைப் பற்றி அவர்களிடமே பேசியவர். அவர்கள் தங்களை மேம்படுத்திக்கொள்வதன் மூலமே உரிமைகளை அடைய முடியும் என்று கற்பித்தவர்.

காந்தியின் போராட்டம் மக்களை ஜனநாயகத்துக்கு பண்படுத்துவதாகவே இருந்தது. ஜனநாயக போராட்டத்தை, ஜனநாயக அமைப்புகளை கட்டி எழுப்புவதை, ஜனநாயக ஆட்சியை கற்றுக்கொள்வதன் மூலம் மட்டுமே உண்மையான சுதந்திரத்தை நோக்கி நகரமுடியும் என அவர் கற்பித்தார். ஓரேவரியில் சொன்னால், எந்த இயல்புகளால் இந்தியா வெள்ளையருக்கு அடிமையாகியதோ அந்த இயல்புகளை வென்று செல்லுவதையே உண்மையான விடுதலைப்போர் என்றார் அவர்.

**பிளவுபடுத்தலுக்கு எதிரான போர்**

1920 முதல் நடந்த காந்தியின் ஒத்துழையாமைப் போராட்டமே பிரிட்டிஷ் அரசு கண்ட இந்திய சிவில்சமூகத்தின் உண்மையான எதிர்ப்பு என்று சொல்லலாம். அதுவரை அவர்கள் உண்மையில் இந்திய தேசியப்போராட்டத்தை ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை. போராட்டத்தின் நோக்கமாக சுயராஜ்யக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது என்பது ஒரு பெரிய திருப்புமுனை. காந்தி கடுமையாக தண்டிக்கப்பட்டார். அவர் சிறையிருந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு காங்கிரஸை வெற்றிகரமாகப் பிளந்தது பிரிட்டிஷ் அரசு. 1922 ல் மாண்டேகு-செம்ஸ்போர்டு குழுவின் சிபாரிசுகளின்படி இந்தியர்களுக்கு மாகாணசபை தேர்தல்களில் போட்டியிடும் வாய்ப்பை வழங்கியது. அது ஒரு மாபெரும் தூண்டில். பதவியாசைமூலம் காங்கிரஸுக்கு எதிரான சக்திகளை தங்களுக்குச்சாதகமாக திரட்டினார்கள். காங்கிரஸின் மிதவாதிகளை சபலப்படுத்தினார்கள்.

காங்கிரஸில் இருந்த மோதிலால் நேரு போன்ற மூத்த தலைவர்கள் பதவிகளுக்கான ரகசிய ஏக்கத்துடன் இருந்தார்கள். சித்தரன்தாஸ் , மோதிலால் நேரு போன்றவர்கள் தேர்தலில் போட்டியிட விரும்பி காங்கிரஸை உடைத்து 'சுயராஜ்யா' என்ற கட்சியை நிறுவினார்கள்.அவர்கள் பிரிந்துசெல்வதை தடுக்க காந்தி நீண்ட பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார். அவர்கள் இசையவில்லை.

இந்தப்பிரிவினையைத் தவிர்க்க காந்தி வருடக்கணக்காக முயன்றார் என்பதை நாம் காணலாம். இக்காலகட்டத்தில்தான் காந்தி தீவிர அரசியலைவிட்டே ஒதுங்கி அகமதாபாத் அருகே சபர்மதி ஆசிரமத்தில் சென்று தங்கினார். இரு தரப்பினருக்கும் இடையே ஒற்றுமை உருவாக ஓயாமல் முயன்றார். சித்தரஞ்சன்தாஸும் மோதிலால் நேருவும் ஒன்றும் பெரிய தலைவர்கள் இல்லை. அவர்களை உதறிவிட்டு காந்தியால் எளிதில் கட்சியை கொண்டுசெல்ல முடியும். ஆனால் காந்தி காங்கிரஸுக்குள் பிளவை விரும்பவில்லை. இந்தியர்களின் குரல் ஒன்றாகவே ஒலிக்க வேண்டும் என்பதில் குறியாக இருந்தார். அதற்காக காங்கிரஸ் தலைமைப்பொறுப்பைகூட விட்டுக்கொடுக்க தயராகா இருந்தார்.

ஏன் என்றால் காந்திக்கு மிக நன்றாகவே பிரிட்டிஷாரை தெரியும். ஆப்ரிக்காவிலும் உலகமெங்கும் அவர்கள் எப்படி தேசங்களைப் பிடித்தார்கள் என்று தெரியும். சொல்லப்போனால் காந்தி தவிர எவருக்குமே அந்த பிரக்ஞை அன்று இருக்கவில்லை. இந்தியா, ஆப்ரிக்கா போன்ற நிலநடுக்கோட்டுப்பகுதிகள் செறிவான மக்கள்தொகை கொண்டவை. நெடுங்கால வரலாறு கொண்டவை. ஆகவே உள்பிரிவுகளும் பேதங்களும் நிரம்பியவை. இந்தபேதங்களே அவற்றை அடிமைகளாக்கிய பலவீனங்கள்.

தொழிற்புரட்சியின் விளைவாக தங்களை ஓர் இயந்திரம் போல ஒற்றைப்படையாக தொகுத்துக்கொண்ட ஐரோப்பிய நாடுகள் ஆசிய ஆப்ரிக்க நாடுகளின் மக்களுக்குள் இருந்த உட்பிரிவுகள் நடுவே ஐயத்தை ஊட்டி பிளவை உருவாக்கியே அவர்களை வென்றார்கள். பிளவுபடுத்தியே ஆண்டார்கள். முதன்முறையாக இந்தியாவில் ஒரு ஒருங்கிணைந்த எதிர்ப்பைச் சந்தித்த பிரிட்டிஷாரின் ஆகச்சிறந்த ஆயுதம் பிளவுபடுத்தலாகவே இருக்கும் என காந்தி மிக நன்றாகவே அறிந்திருந்தார். ஆகவே அதை எவ்விலை கொடுத்தும் தவிர்க்க முயன்றார்.

அதே காலகட்டத்தில்தான் காந்தி முஸ்லீம்களுக்கு இரட்டைவாக்குமுறை மூலம் பிரிட்டிஷார் இந்திய சமூகத்தில் உருவாக்கியிருந்த இந்துமுஸ்லீம் கசப்புக்கு எதிராக ஒருமைப்பாட்டை அடைய கடுமையாக முயன்றார். உண்ணாவிரதம் இருந்தார். கிலாபத் கூட்டங்களில் தேசம் முழுக்கச் சென்று பங்கெடுத்தார்.

அதன்பின்னர் காந்தி போராட்டக்களத்துக்கு வருவது 1928 ல் சைமன் கமிஷனின் சிபாரிசுகளுக்கு எதிராக. இக்காலகட்டத்தில்

காந்தி காங்கிரஸை மீண்டும் ஒற்றுமைப்படுத்துவதில் வெற்றிபெற்றார். அவ்வருடம் கூடிய கல்கத்தா காங்கிரஸில் காந்தி முழுச்சுதந்திரத்தை உடனடியான இலக்காக முன்வைத்து ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தார். இந்தியா பிரிட்டிஷ் ஆட்சிக்குக் கீழே டொமினியன் அந்தஸ்து உள்ள ஒரு நாடாக விளங்கவேண்டும் என்று கோரினார் காந்தி.

1930 ல் எதிர்கால இந்திய தேசத்தின் கொடி அறிவிக்கப்பட்டது. லாகூரில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் ஜனவரி 26 இந்தியாவின் சுதந்திரநாளாக அறிவிக்கப்பட்டு வருடம் தோறும் கொண்டாட முடிவெடுக்கப்பட்டது. அதேவருடம் காந்தி உப்புசத்யாகிரகத்தை ஆரம்பித்தார். அன்றைய உணர்ச்சிவேகம் காரணமாக அது ஒரு மாபெரும் மக்களியக்கமாக எழுச்சி கொண்டது. காந்தி நடத்திய போராட்டங்களிலேயே மிகப்பெரியது அதுதான்.

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி மிகமிக அஞ்சியது பொதுமக்களின் அதிருப்தியையே. ஏன் என்றால் மிகச்சிறுபான்மையினரான வெள்ளையர் இந்நாட்டை இங்குள்ள மக்களின் ஆதரவாலேயே ஆண்டிருந்தார்கள். ஆகவே பிரிட்டிஷ் அரசு இறங்கிவந்தது. 1931 ல் காந்தி-இர்வின் ஒப்பந்தம் உருவாகியது. அதைத்தொடர்ந்த பேச்சுவார்த்தைக்காக 1932 ல் லண்டனில் நடக்கும் வட்டமேஜை மாநாட்டில் காந்தி அழைக்கப்பட்டார்.

*

இந்த வரலாற்றுப் பரிணாமச் சந்தர்ப்பத்தில்தான் இரட்டை வாக்குரிமை பிரச்சினை உருவாகி வருகிறது என்பதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். காந்தி தலித் பிரச்சினையை எந்த வரலாற்றுத்தருணத்தில் வைத்துப் பார்த்தார் என்று உணர இந்த வரலாற்று நோக்கு அவசியம். இதுவரை சொல்லிவந்த பரிணாமகதியின் முக்கியமான கூறுகளை இவ்வகையில் தொகுத்துச் சொல்கிறேன்.

**1. இந்திய தேசிய காங்கிரஸ் காந்திக்கு முன்னர் மிதவாதிகளின் கையில் இருந்தது அவர்கள் பிரிட்டிஷாரிடம் சில உரிமைகளை கோரி பெற எண்ணியவர்கள் மட்டுமே. இந்தியாவுக்கு முழு விடுதலை கோரிய தீவிரவாதிகள் அவர்களை எதிர்த்தார்கள். இம்மோதலால் கிட்டத்தட்ட செயலிழந்து கிடந்தது காங்கிரஸ்**

**2. காந்தி காங்கிரஸின் இவ்விரு தரப்புகளையும் ஆக்கபூர்வமாக இணைத்தவர். தீவிரவாதிகளின் சுயராஜ்ய கனவை அவர் மிதவாதிகளின் வழியில் அடைய முயன்றார். காங்கிரஸை சட்டென்று செயலூக்கம் கொண்டவராக ஆக்கினார்**

**3. ஒன்றுடன் ஒன்று முரண்படும் பல கூறுகள் கொண்ட இந்திய தேசியத்தின் எல்லா கூறுகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சியாக காங்கிரஸ் இருக்கவேண்டும் என எண்ணினார் காந்தி. எல்லா உட்கூறுகளையும் தக்கவைத்துக்கொள்ளவும் அவை ஒன்றுடன் ஒன்று உரையாடச்செய்யவும் முயன்றார்**

**4. அதேசமயம் தன்னுடைய தார்மீகமான செல்வாக்கினால் அவற்றின் மோதலை கட்டுக்குள் வைத்திருந்தார். காங்கிரஸை தன்னுடைய இலட்சியம் நோக்கி கொண்டுசென்றார்.**

**5. காந்தி உண்ணாவிரதம் என்ற போராட்ட முறையை எப்போதும் பிளவுகளைத் தவிர்க்கவும், அவர் தவிர்க்கமுடியாதென்றும் உயர்வானதென்றும் கருதிய விழுமியங்களை பிறர் ஏற்கச் செய்யவுமே பயன்படுத்தினார்**

**6. இந்திய சுதந்திரப்போராட்டத்தை காந்தி தான் கொஞ்சம் கொஞ்சமாக சோதனை செய்து புரிந்துகொண்ட புதிய வழியான அகிசைப்போராட்டம் வழியாக நடத்தினார். முதலில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக மக்களைத் திரட்டினார். ஆனால் ஒருபோதும் அப்போராட்டத்தில் பிரிட்டிஷ் ராணுவம் நுழையும்படி நிகழலாகாது என எண்ணினார். ஆகவே வன்முறை உருவாவதை தடுக்க கவனமாக இருந்தார்**

**7. காந்தி உள்ளே வந்ததுமே இந்திய சுதந்திரப்போராட்டம் மக்கள் பங்களிப்புள்ள பெரும் இயக்கமாக மாறியது. பெரும் தொண்டர்படை சேர்க்கப்பட்டது 1918 ல் சுயராஜ்யக் கோரிக்கையை ஒரு கொள்கையாக மட்டும் முன்வைத்த காந்தி படிபப்டியாக அதை மக்கள் மனதிலே நிறுவுவதில் வெற்றி கண்டபின் 1930 ல் அதை ஒரு நடைமுறைபோராட்டமாக வளர்த்தெடுத்தார்.**

**8. பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான மிக வலிமையான போராட்டமாக ஒத்துழையாமை இயக்கமும் உப்புசத்யாகிரகமும் அமைந்தது காங்கிரஸின் மக்கள் ஆதரவைக் கண்டு பிரிட்டிஷ் ஆட்சி அஞ்சியது**

**9. காங்கிரஸின் ஆரம்பகாலம் முதலே பிரித்தாளும் சூழ்ச்சியை பிரிட்டிஷ் அரசு வெற்றிகரமாக மேற்கொண்டிருந்தது மிதவாதிகளில் பலரை அது தனக்காக பயன்படுத்தியது பின்னர் மாகாண அரசு அமைக்கும் வாக்குறுதியை மூத்த தலைவர்களுக்கு அளித்து காங்கிரஸை பிளந்து சுயராஜ்ய கட்சி உருவாக வழியமைத்தது**

**10. காந்தி மிக அதிகமாக அஞ்சியதும், எதிர்த்துப் போராடியதும் காங்கிரஸையும் இந்திய தேசியப்போராட்டத்தையும் பிளவுபடுத்தும் முயற்சிகளைத்தான். அதற்காகவே சுயராஜ்யகட்சிக்கு எதிராக 1924 ல் அவர் மூன்று வாரம் உண்ணாவிரதம் இருந்தார். கிட்டத்தட்ட ஐந்துவருடம் நடைமுறை அரசியலை விட்டே ஒதுங்கி சமரச முயற்சிகளில் ஈடுபட்டார். அந்த சமரசம் நிகழ்ந்தபின்னரே மீண்டும் அரசியலுக்கு வந்தார்.**

ஆக ,காந்தி உத்தேசித்த போராட்ட வடிவம் இது. பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவின் சிவில் சமூகத்தின் ஆதரவின் அடிப்படையிலேயே ஆட்சியில் இருந்தது. இந்திய மக்களுக்கு வரலாறு வழங்கியுள்ள பேதங்களை கரைத்து அவர்களை ஒரே சிவில் சமூகமாக ஆக்கி பிரிட்டிஷ் ஆட்சிக்கு அவர்கள் வழங்கிய அனுமதியை ரத்துசெய்வதும், அதை பிரிட்டிஷ் ராணுவத்தை பங்கெடுக்க வைக்காமல் செய்து முடிப்பதும் காந்தியின் திட்டம்.

ஆகவே கட்சிக்குள் வந்ததுமே காந்தி சுயராஜ்ய கோரிக்கையை ஏற்றாலும் அதை மக்கள் பரவலாக ஏற்கும் வரை பல்வேறு போராட்டங்கள் வழியாக அதை பிரச்சாரம் செய்தார். சத்யாகிரகம் போன்ற வழிமுறைகளை சோதனைசெய்து திருத்திக் கொண்டார். தொண்டர்படையை அமைத்தார். மாபெரும் சிவில் போராட்டங்களை அதன்பின்னரே உருவாக்கினார்.

அந்தப்போராட்டங்கள் விளைச்சலைத் தரும் காலகட்டத்தில் இந்திய சமூகத்தின் பேதங்களை முன்னிறுத்தி அவரது இயக்கத்தை உடைக்க முயன்றது ஆங்கில அரசு. அந்த முயற்சிகளை காந்தி தன் உயிரையே பணயமாக வைத்து எதிர்த்தார். இந்திய சமூகத்தின் சாதி,மத, இன பேதங்களை தவிர்ப்பதில் பெருமளவு அவர் வென்றார், மதப்பிரிவினை பேரழிவை உருவாக்கியதை மட்டும் அவரால் தவிர்க்கமுடியவில்லை. தன் வாழ்நாள் தோல்வியாக அதைக் கருதிய காந்தி மனமுடைந்த நிலையில் மரணம் அடைந்தார்

[மேலும்]

---

**6. இறந்தகாலத்தை மாற்றி எழுதுதல்**

தலித்துக்கள் இன்று ஓர் அரசியல் சக்தியாக திரள்வதற்கு அச்சமுகத்தின் உள்ளே உள்ள பலநூறு சாதி ஏற்றத்தாழ்வுகளும் பேதங்களுமே காரணமாக இருக்கின்றன. அத்துடன் அரசியலில் இன்று உருவாகியிருக்கும் ஊழல் என்ற மாபெரும் தொற்றுநோய். ஆகவே அவர்கள் எண்ணும் இலக்குகள் வெகுதூரத்திலேயே உள்ளன.

தங்கள் இன்றைய நிலைக்குக் காரணமாக இறந்தகாலத்தில் வந்து நழுவிய ஒரு வாய்ப்பைச் சொல்லி ஆறுதல் செய்துகொள்வதற்காகவே பூனா ஒப்பந்தம் இன்று மிகைப்படுத்தப்படுகிறது. அந்த நோக்கத்துக்காக மொத்த இறந்தகாலமும் காலயந்திரப் பயணம் மூலம் தலைகீழாக மாற்றிக் கட்டப்படுகிறது. தங்களை பின்னிழுக்கும் ஆயிரம் சிக்கல்களை களைவதற்கான அரசியலியக்கத்துக்குப் பதிலாக இந்த  இறந்தகால நிகழ்வு குத்திக் குத்தி புண்ணாக்கபப்டுகிறது. ஒரு பொது எதிரியைக் கொண்டு தங்களை தொகுத்துக்கொள்ளலாம் என்ற திட்டமன்றி வேறல்ல.

தங்கத்தட்டில் ஒரு விடுதலை வாக்குறுதி

ஒரு பேச்சுக்காக பூனா ஒப்பந்தம் நிறைவேறவே இல்லை என்று வைத்துக்கொள்வோம். பிரிட்டிஷ் அரசு அம்பேத்காருக்கு அளித்த வாக்குறுதியின்படி இரட்டை வாக்குரிமையை அளித்து 1932 ல் தேர்தல்களை நடத்தியிருந்தது என்றால் இந்தியாவில் என்ன நடந்திருக்கும்? இன்றைய தலித் சிந்தனையாளர்களில் ஒருசாரார் சொல்வதை வைத்துப்பார்த்தால் தலித்துக்களின் வாழ்க்கை பரிபூரண விடுதலை பெற்றிருக்கும்! அதை உண்மையிலேயே ஒருவர் நம்பிச் சொல்கிறார் என்றால் அத்தகைய தலைவர்களைப் பெற்றமைக்காக தலித்துக்களை எண்ணி பரிதாபப் படுவதல்லாமல் வேறு வழி இல்லை.

1932 ல் தாழ்த்தப்பட்டவர்களின் பிரச்சினைகள் அப்போதுதான் அரசியல் பிரச்சினையாக உருமாற ஆரம்பித்தன.அன்றுவரை அது ஒரு சமூகப்பிரச்சினையே. இந்தியாவெங்கும் உள்ள தாழ்த்தப்பட்ட சாதிகளில் அரசியல் அறிமுகம் பெற்றவை மிகமிகச்சிலவே. அச்சாதிகளுக்குள் ஓர் ஒற்றுமையை உருவாக்குவதற்கான பணி ஆரம்பிக்கப்படவே இல்லை. பின்னர் அம்பேத்கார் புகழும் அதிகாரமும் பெற்ற பிறகும்கூட அவரால் தலித் ஒற்றுமையையும் அரசியல்மயமாக்கத்தையும் நிகழ்த்த முடியவில்லை. அரைநூற்றாண்டுகழிந்து எண்பதுகளில் தலித் இயக்கங்கள் மூலமும் பகுஜன் சமாஜ் போன்ற அரசியலியக்கங்கள் மூலமும் அந்த பணி உயர்வேகத்தில் ஆரம்பித்தும்கூட இன்றும் சொல்லும்படியாக ஏதும் நிகழவில்லை.

ஏனென்றால் அது அத்தனை எளிய விஷயமல்ல. இந்திய சமூகத்தின் அபாரமான பன்மைத்தன்மையை ஒருகுறிப்பிட்ட தளத்தில் ஒருங்கிணைப்பதற்கு உத்வேகமான இலட்சியவாதமும், பொதுவானதும் நடைமுறைச்சாத்தியமானதுமான ஒரு கோட்பாட்டுத்தளமும் ,அதை அடிமட்டம் வரைக் கோண்டுசெல்லக்கூடிய நெடுநாள் உழைப்பும் தேவை. படிப்படியாகவே அது நிகழமுடியும்.

ஆகவே அப்போதே இப்போதுள்ள தலித்தியர் சிலர் சொல்வதுபோல தங்கத்தட்டில் பிரிட்டிஷார் அள்ளிவழங்கிய இரட்டை வாக்குரிமையை எந்தவிதமான தடையும் இல்லாமல் அடைந்து, தேர்தல்களில் வென்று, ஒரு நூறு தலித் உறுப்பினர்கள் பிரிட்டிஷாரின் மேலதிகாரத்துக்கு கீழே இருந்த மத்தியசபையில் சென்றமர்ந்திருந்தால் என்ன நடந்திருக்கும்? தாழ்த்தப்பட்டவர்களிலேயே கல்வியோ நிலமோ உள்ளவர்களுக்கு மட்டுமே வாக்களிக்கும் வாய்ப்பு என்ற நிலையில் தலித்துக்களுக்குள்ளேயே யார் அதிகாரத்துக்குச் சென்றிருப்பார்கள்?

அம்பேத்காரும், எம் சி ராஜாவும், ரெட்டைமலைசீனிவாசனும் சில பதவிகளை அடைந்திருப்பார்கள். மத்திய சபையில் ஆவேசமாகப் பேசியிருப்பார்கள். இவர்கள் அனைவருமே தலித்துக்களுக்குள் மேல்சாதி. தலித்துக்களுக்குள் உயர்வற்கமாகத் திகழ்ந்தவர்கள். இவர்கள் அறிவுஜீவிகளான, பார்லிமெண்டேரியன்களே ஒழிய நேரடியாக மக்களிடையே சென்று பணியாற்றிய மக்கள்தலைவர்கள் அல்ல. அதை அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் இருந்தே உணர முடியும்.

அவர்களின் பேச்சையும் கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்டு மளமளவென சட்டங்கள் நிறைவேற்றி ஒட்டுமொத்த தாழ்த்தப்பட்டவர்களையும் பொருளியல் அரசியல் தளங்களில் முழுமைபெறச்செய்யும் நடவடிக்கைகளில் பிரிட்டிஷ் அரசு உடனடியாக ஈடுபட ஆரம்பித்திருக்குமா என்ன? இருநூறாண்டுகள் அவர்கள் கண்களுக்குப் படாத யதார்த்ததை இவர்கள் சொன்னதுமே உணர்ந்துகொண்டு மனிதாபிமானம் பீரிட கிளம்பியிருப்பார்களா என்ன?

தங்கள் ஆட்சியின் வேர்களாக இருந்த சமஸ்தான மன்னர்களையும் ஜமீந்தார்களையும் கடைசிவரைக் கைவிட பிரிட்டிஷார் தயாராக இருக்கவில்லை என்பதே வரலாறு. அவர்கள் பெரும்பாலும் அனைவருமே சாதியில் ஊறியவர்களாக தாழ்த்தப்பட்டோருக்கான விடுதலையை கடைசிவரை தடுப்பவர்களாக இருந்தார்கள் என்பதும் உண்மை. 1947 ல் அரசியல்சட்ட வரைவுக்குழுவும் அதை ஆவேசமாகப் பேசிய அம்பேத்கார் அந்த அதிகார மையங்கள் எந்த வகையிலும் நீடிக்க விடக்கூடாது என்று வாதாடியிருக்கிறார். பிரிட்டிஷாரிடம் அவர் அதற்காக கோரியிருக்கவேண்டியதுதானே?

நேர்மாறாக இரண்டாம் வட்டமேஜைமாநாட்டில் அம்பேத்கார் அந்த குறுநில மன்னர்கள் திவான்கள் மற்றும் நிலப்பிரபுக்களுடன் இணைந்து ஒரே அணியாக பிரிட்டிஷ் ஆதரவாளராகவே செயலாற்றினார். காந்தியை அங்கே தனிமைப்படுத்தினார் என்பதே வரலாறு. அந்த மன்னர்களில் பலர் வயதுவந்தோருக்கு வாக்குரிமை போன்ற கோரிக்கைகளுக்கு எதிராக மிகக் கடுமையான நிலைபாடு கொண்டவர்கள்.

1932 ல் அளிக்கப்பட்ட இரட்டை வாக்குரிமை என்பது ஒரு போலி அதிகாரத்தை மட்டுமே உருவாக்கியிருக்கும் என்பதைக் காண நுண்ணோக்கு ஒன்றும் தேவை கிடையாது. தாழ்த்தப்பட்டோருக்கான விடுதலை என்பது அம்மக்கள் அனைவரையும் அடித்தளம் வரை ஊடுருவிச்சென்று அவர்களின் கருத்தியலில் மாற்றத்தை உண்டுபண்ணும் மக்களியக்கங்களினாலேயே சாத்தியமாகியிருக்கும். அவர்களை அடிமைப்படுத்தியிருக்கும் சமூகக் கட்டுமானத்தையும் எதிர்மனநிலைகளையும் பலவீனப்படுத்துவதன் மூலமே சாத்தியமாகியிருக்கும். ஆனால் அம்பேத்கார் அரசியலதிகாரத்தின்மூலம் மேலிருந்து அதைச் செய்யமுடியுமென எண்ணினார்.

ஒரு ஜனநாயக அமைப்பில் மேலிடஅதிகாரமேகூட மக்களியக்கம் மூலமே உண்மையில் கையில்வரும். தாழ்த்தப்பட்டவர்களுக்கான அதிகாரம் என்பது இந்திய சமூகத்தின் ஒட்டு மொத்தத்தை எதிர்த்தும் சமரசம் செய்தும் தாழ்த்தப்பட்டவர்கள் கைப்பற்றிக்கொள்வதாகவே இருக்க முடியும். இன்று உத்தரபிரதேசத்தில் நடப்பது கிட்டத்தட்ட அதுவே. அம்பேத்கார் அதை ஓர் அன்னிய அடக்குமுறை அமைப்பின் தயவால் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம் என்றே எண்ணினார். அது ஒருபோதும் சாத்தியமாகியிருக்காது.

ஆம், எந்த ஒரு அரசியல் அதிகாரமும் ஒரு நீண்ட சமூக முரணியக்கம் மூலமே சாத்தியமாகும். அதிகாரச் சதிகள் மூலமோ, சம்பந்தப்படாத ஒருவர் பரிந்தளிப்பதன் மூலமோ பழுத்து மடியில் விழாது. போராட்டமும் சமரசமும் அந்த முரணியக்கத்தின் படிநிலைகளாக மாறி வரும். இந்த விஷயத்தை ஆரம்பம் முதலே இந்திய இடதுசாரிகள் சொல்லிவந்தார்கள்.மக்கள் பங்கேற்பு மூலமும் நெடுங்கால போராட்டம் மூலமும் மட்டுமே சமூகவிடுதலை சாத்தியம், அதை ஏகாதிபத்தியம் பிச்சைபோடமுடியாது என.

தாழ்த்தப்பட்டவர்களுக்கான உண்மையான அதிகாரத்தை அவர்கள் ஈட்டிக்கொள்வதற்கான மக்களியக்கமாக நிகழ்ந்தது காந்தியின் ஹரிஜன இயக்கமே. ஒருபக்கம் அது இந்தியா முழுக்க தாழ்த்தப்பட்ட எளிய மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வை அளித்தது. மறுபக்கம் அவர்களின் நிலையைப்பற்றிய பிரக்ஞையையும் அதில் பிறருக்கு உருவாகவேண்டிய பொறுப்புணர்ச்சியையும் பிற மக்களில் ஏற்படுத்தியது.அ ம்பேத்கார் செய்திருக்கவேண்டிய, காந்தி செய்த, பெரும்பணி அது.

தெலுங்கானா முதலிய பல இடங்களில் இடதுசாரி இயக்கங்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் உரிமைகளுக்காக பிற ஒடுக்கப்பட்ட மக்களுடன் இணைந்து நேரடியாக எதிர்ப்பைத்தெரிவித்துப் போராடுவதற்கான வழிமுறையைக் காட்டின. கேரளத்திலும் தமிழகத்திலும் தலித்துகளுக்கான நில உரிமைப்போர்களை கம்யுனிஸ்டுக்கட்சி முன்னின்று நடத்தியது. இன்றுவரை தலித் அரசியலின் அடித்தளமாக இருப்பது இவைபோன்ற மக்களியக்கங்களே.

பிரிட்டிஷாரின் இலவசமாக இரட்டை வாக்குரிமையைப் பெற்று அரசியலதிகாரத்தையே தாழ்த்தப்பட்டவர்கள் அடைந்தார்கள் என்று கொள்வோம், அது எத்தனைநாளுக்கு நீடித்திருக்கும்? 1932ல் அப்போதே இந்தியாவின் எல்லா சமூகங்களும் அரசியல் விழிப்பு கொள்ள ஆரம்பித்துவிட்டிருந்தன. சுதந்திரப் போராட்டத்தின் இறுதிநாட்களில் காங்கிரஸின் கட்டுமானத்தில் பிற்பட்டோரின் இடம் வலுவாக நிகழ ஆரம்பித்து விட்டிருந்தது.
எண்ணிக்கையே ஜனநாயகத்தின் முதல்பலம் என்றநிலையில் சுதந்திரத்துக்குப் பின் காங்கிரஸ் உருவாக்கிய வயதுவந்தோர் ஓட்டுரிமை அதுவரையிலான அரசியல் சமநிலைகளை எல்லாமே தலகீழாகத்திருப்பிவிடவிருந்தது. விளைவாக மேலும் சில வருடங்களில் இந்தியாவின் சமூக அதிகாரம் என்பது ஒட்டுமொத்தமாகவே பிற்படுத்தப்பட்ட சமூகங்களின் கைக்குச் செல்லவிருந்தது. அவர்கள் அந்த இரட்டைவாக்குரிமைச் சலுகையை தாங்களும் அங்கீகரித்து அப்படியே தூக்கிக் கொடுத்துவிடுவார்களா என்ன?

இந்தியசமூகத்தின் பலநூறு ஒடுக்கப்பட்ட சாதிகள் அதிகாரத்துக்காக முண்டியடிக்கும் ஒரு சூழலில் ஒரு தரப்பு மட்டும் பிரிட்டிஷாருடன் சமரசம் செய்துகொண்டு பெறும் ஓர் அரசியலதிகாரம் எந்த அளவுக்குச் செல்லுபடியாகும்? எத்தனை காலம் செல்லுபடியாகும்? அந்த சமூகப்பேரமைப்பை ஒரு பொருட்டாகவே எண்ணாமல், அதற்கெதிராக இந்திய அளவிலான ஒரு சிறிய மக்களியக்கத்தைக்கூட கட்ட முடியாமல், வெறுமே அதிகாரப்பேரம் மூலமே அம்பேத்கார் அடைய முற்பட்ட அந்த இரட்டை வாக்குரிமையினால் என்ன நடைமுறைப்பயன் விளைந்திருக்கும்?

பிரிட்டிஷ் சலுகையாகிய இரட்டைவாக்குரிமை இருந்து, அதன் மூலம் ஒரு அதிகாரத்தையும் தாழ்த்தப்பட்டோர் அடைந்திருந்து,அந்நிலையில் இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்து மெல்ல அதிகாரம் பிற்படுத்தப்பட்டோர் கைக்குச் சென்றிருந்தால் என்ன நடந்திருக்கும்? பிற்பட்டோரின் அதிகாரம் அவர்கள் பிரிட்டிஷ் அரசை வென்று அடைந்தது. தாழ்த்தப்பட்டோர் அதிகாரம் அந்தப்போராட்டத்தை எதிர்த்து பிரிட்டிஷாருடன் ஒத்துழைத்து அடையப்பெற்றது. அந்நிலையில் அந்த தாழ்த்தப்பட்டோர் அதிகாரம் எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டிருக்கும்? ஒட்டுமொத்த தலித் அரசியலும் பிற்படுத்தப்பட்டோரின் மாபெரும் எண்ணிக்கை பலத்தால் குப்பைக்கூடைக்குத் தூக்கி வீசப்பட்டிருக்கும். இதனை இன்றைய இந்திய அரசியலைக் கொஞ்சம் கவனிக்கும் எவருமே உணர முடியும்.

அப்படி நிகழாது போனது காந்தி தலைமை வகித்த காங்கிரஸுடன் அம்பேத்கார் நடத்திய பேச்சுவார்த்தைகள் மூலமே. அப்போது காங்கிரஸ் ஒத்துக்கொண்ட விஷயங்கள் மூலமே. அதுமட்டுமே தாழ்த்தப்பட்டோர் உண்மையிலேயே ஈட்டிய வெற்றி. அந்த வெற்றியை அடைய தாழ்த்தப்பட்டோர் கையில் இருந்த ஆயுதம் அவர்கள் தரப்பில் இருந்த நியாயம். அதனை பிரம்மாண்டமான வரலாற்றுப்பிரக்ஞையுடன், வன்மையான சொற்களில் தீவிரமாக முன்வைத்த அம்பேத்கார் போன்ற ஒரு மாபெரும் அறிவுஜீவி. அத்துடன் மறுமுனையில் தன் மூளைக்குப் பதில் மனசாட்சியை வைத்து விவாதிக்க வந்த ஒரு மகத்தான தலைவன்.

அவனுடைய மனசாட்சியின் வல்லமையாலேயே இந்திய சமூகம் தாழ்த்தப்பட்டோருக்கான சலுகைகளை அவர்களின் உரிமைகளாக புரிந்துகொண்டது.இன்று இந்தியா காங்கிரஸும் காந்தியும் ஒன்றும் செய்யவில்லை என்று சொல்பவர்களிடம் தாழ்த்தப்பட்டோருக்கான ஒதுக்கீடுகளை அவர்கள் எவ்வகையிலும் ஒத்துக்கொள்ளவில்லை என்றால் யார் என்ன செய்திருக்க முடியும் என்ற எளிமையான கேள்வியை கேட்க முடியும். அவர்களுக்கிருந்த மாபெரும் மக்கள்செல்வாக்கை வைத்து அந்தக்கோரிக்கைகளை அப்படியே தூக்கி வீசியிருந்தால் ஒருபாராளுமன்றத்தேர்தலில் கூட ஜெயிக்கமுடியாத இவர்கள் என்ன செய்திருப்பார்கள்?

உலகின் எத்தனையோ நாடுகளில் அன்று அதுதான் நடந்தது. ஒடுக்கப்பட்ட சிறுபான்மையினர் தங்கள் உயிரையும் வாழ்க்கையையும் அர்ப்பணித்துப் போராடி மிகப்பெரிய தியாகங்களின் விலையாகத்தான் சிறிய அளவிலேனும் உரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள். அரசியலதிகாரம் என்பது ஈவிரக்கமில்லா பேரங்கள் வழியாக இம்மி இம்மியாகவே அடையப்படுகிறது.

ஆனால் இந்தியாவில் நிகழ்ந்தது அதுவல்ல. இந்தியாவின் அதிகாரத்தை அடைந்த பெரும்பான்மையின் மனசாட்சியே தலித்துக்களுக்கான அதிகாரமாக ஆகியது. அந்த அப்பட்டமான வரலாற்று உண்மைமேல்தான் இந்தப் பொய்கள் மூலம் சாயம் பூசிக்கொண்டே இருக்கிறார்கள்.

*காந்தி ஏன் இரட்டை வாக்குரிமையை எதிர்த்தார்?*

இந்தியாவில் தனித்தொகுதி ஒதுக்கீடு என்பது புதியவிஷயமல்ல. 1909 லேயே மிண்டோ –மார்லி இந்திய அரசினர் சட்டம் [Government of India Act 1909] மூலம் இஸ்லாமியர்களுக்கும் சீக்கியர்களுக்கும் தனித்தொகுதி மற்றும் இட ஒதுக்கீட்டை கொண்டுவந்திருந்தது. அதன் பின்னர் பிரிட்டிஷ் ஆதரவுள்ள அரசுகள் அமைத்த மாகாண அரசுகளில் பல கோணங்களில் தேவைக்கேற்ப இட ஒதுகீடுகள் உருவாக்கப்பட்டிருந்தன.

இந்த இட ஒதுக்கீடுகளின் அரசியல் என்பது அக்காலச் சூழலில் வைத்து பார்க்கும்போது மிகவும் சிக்கலான ஒன்று. இரு அடிப்படைகளிலேயே அந்த இட ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன. தங்கள் ஆதிக்கத்துடன் ஒத்துப்போகும் வகுப்புகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. சீக்கியர்கள் என்றுமே பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் பின்புலச் சக்தியாக இருந்தார்கள். இந்தியாவில் மட்டுமல்ல பிரிட்டனின் ராணுவத்திலும், ஆஸ்திரேலிய ராணுவத்திலும்கூட அவர்கள் பெரும்பங்காற்றினர். அதற்குப் பிரதியுபகாரமாக அவர்களுக்கு ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

அதேபோல் இஸ்லாமியருக்கான இட ஒதுக்கீடும் அம்மக்களின் உயர்மட்டத்தினர் பிரிட்டிஷ் ஆட்சிக்கு வழங்கிய ஆதரவிற்குப் பதிலாகவே வழங்கப்பட்டது. 1857ல் நடந்த சிப்பாய்க்கலவரத்தில் இஸ்லாமிய உயர்குடிகள் மற்றும் பத்தானியர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு அனுசரணையாக இருந்து அந்தச் சலுகைகளை பெற்றார்கள். அவர்களை இந்திய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல, அன்னியர்கள் என்று அடையாளாபப்டுத்தி தனித்தேசமாக கண்டு அந்தச் சலுகைகள் அளிக்கப்பட்டன.

அன்று தாழ்த்தப்பட்டோரின் சில அமைப்புகள் உட்பட ஏராளமான சிறிய சமூகக்குழுக்கள் தாங்களும் பிரிட்டனுக்கு விசுவாசமானவர்களே என்று அறிவித்து, காங்கிரஸுக்கு எதிரானவர்களாக நடந்துகொண்டு, பிரிட்டிஷார் அச்சலுகைகளை தங்களுக்கும் அளிக்கவேண்டும் என்று கோரிவந்தார்கள். அக்காலத்தில் நடைபெற்ற விவாதங்களை இன்று வாசிக்கும்போது மிகவும் ஆச்சரியமும் வருத்தமும் உருவாகும். ஆப்ரிக்காவிலும் அரேபியாவிலும் சமீப காலம் வரை வெள்ளையர் செய்துவந்த அப்பட்டமான பிரித்தாளும் சூழ்ச்சி மட்டுமே அது. அந்த எளிய தந்திரங்களைக்கூட புரிந்துகொள்ள முடியாதவர்களாக நம்மவர் இருந்திருக்கிறார்கள்.

ஆங்கிலேயர்களின் செயல்பாடு பல படிகள் கொண்டது. முதலில், காங்கிரஸ் அமைப்பு உயர்சாதி அமைப்பு அல்லது இந்து அமைப்பு என்றும் அவர்கள் பிறருக்கு நியாயம் வழங்க மாட்டார்கள் என்றும் ஆங்கில அரசும் அதன் அறிவுஜீவிகளும் பிரச்சாரம் செய்வார்கள். அதன் பின்னர் ஒரு சமூகத்தில் பிரிட்டிஷ் அரசுக்குச் சாதகமான மனநிலை கொண்ட உயர்மட்டத் தலைவர்கள் சிலர் தனிச்சமூகமாக தங்களை அறிவிக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பார்கள். அதை 'ஆழமாக'ப் பரிசீலனை செய்து ஆங்கில அரசு அதை அனுமதிக்கும். அதன்மூலம் அந்த உயர்மட்டத்தவருக்கு மட்டுமே ஏதேனும் லாபம் இருக்கும்.

அந்த இட ஒதுக்கீடு பெரும்பாலான நேரங்களில் பிற சாதியினரைச் சீண்டுவதாக, அவர்களின் அடிப்படை உரிமைகளை மறுப்பதாக இருக்கும். அதற்கு எதிராக அம்மக்கள் சினம் கொள்ளும்போது சமூகம் இரண்டாகப் பிரியும். பதற்றம் தொடர்ந்து நீடிக்கும். சீக்கியர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் அளிக்கப்பட்ட இட ஒதுக்கீடுகள் மூலம் அம்மக்களின் பெரும்பாலாரான அடித்தளத்தினருக்கு எவ்வகையான உரிமைகளும் வாய்ப்புகளும் கிடைக்கவில்லை. அவர்களின் வாழ்க்கையில் சிறு மாற்றம்கூட நிகழவில்லை. மாறாக அவர்களுக்கும் பிற வகுப்பினருக்கும் இடையே ஆறாத கசப்புகள் உருவாயின. அக்கசப்புகள் பல தளங்களில் தொட்டுத்தொட்டு வளர்ந்தன. அவற்றை சமரசம்செய்வது சாதாரணமான செயலாக இருக்கவில்லை.

உண்மையிலேயே அம்மக்களின் அடித்தட்டுக்கு ஏதேனும் நன்மை செய்யவிரும்பியிருந்தால் பிரிட்டிஷார் வயதுவந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை அளித்திருப்பார்கள். அதை அவர்கள் செய்யவில்லை. அதை செய்தது காங்கிரஸ். அக்காலத்திலேயே மிண்டோ-மார்லி சீர்திருத்தத்தின் பிரிவினைஅரசியலை இந்திய மனங்களில் கூர்ந்தவை கண்டுகொண்டிருக்கின்றன. 'களங்கமுறும் மார்லிநடம்' என்று பாரதி அதைப்பற்றிப் பாடினார். காந்தி பின்னர் பிரிட்டிஷார் உருவாக்கிய பிரிவினைகளை கூர்ந்து ஆராய்ந்திருக்கிறார்.

இந்திய அரசியலில் 1915 வாக்கில் நுழையும்போதே காந்தி முஸ்லீம் சமூகமும் சீக்கிய சமூகமும் இந்திய மையஓட்டத்தில் இருந்து பெருமளவுக்கு பிரிக்கப்பட்டுவிட்டன என்று உணர்ந்தார். குறிப்பாக 1908ல் மிண்டோ-மார்லி சீர்திருத்தம் குறித்த விவாதங்களில் இஸ்லாமியர்களுக்கான இட ஒதுக்கீடு அளிப்பது குறித்து நடந்த பொதுவிவாதங்களை அக்கால இதழ்களில் இன்று வாசிக்கும்போது கசப்புகள் பொங்கிவழிவதையே காணமுடிகிறது.

அந்த மனக்கசப்பு என்பது ஒரு வரலாற்றுப் பூதத்தை புட்டியில் இருந்து வெளியே திறந்து விடுகிறது என்பதைக் கண்டார். இன்று அந்த விவாதங்களை வாசிக்கையில் 1947 ன் ரத்த ஆறுக்கான விதை போடப்பட்டுவிட்டது என்பதை தெள்ளத்தெளிவாகவே காணமுடிகிறது. காந்தி இந்திய அரசியலில் நுழைந்த 1918 லேயே இந்த விஷயத்தைப்பற்றி உணர்ச்சிபூர்வமாகப் பேசியிருக்கிறார். அவரது அரசியலின் முதல் செயல்திட்டமே இஸ்லாமியரை மைய ஓட்டத்துக்குக் கொண்டுவருவதாகவே இருந்தது.

சீக்கியர்களுக்கான இட ஒதுக்கீட்டிலும் அதேபோல ஒரு வரலாற்றுப்பூதம் எழுப்பப்பட்டது. சீக்கியர் இந்தியாவில் ஒடுக்கப்பட்டவர்கள் அல்ல. அவர்களுக்குள்ளேயே தலித்துக்கள் உண்டு. அவர்கள் கீழ்நிலையில்தான் இருந்தார்கள். ஆனால் ஒட்டு மொத்த சீக்கியர்களையும் ஒரு தனி வகுப்பாக கண்டு இரட்டைவாக்குரிமை சலுகை அளித்தது பிரிட்டிஷ் அரசு. அவர்களின் தனியடையாளவிருப்பு எதிர்காலத்தில் ஒரு மாபெரும் பிளவாக ஆகும் என அது கணித்தது.

ஒரு தனி வகுப்பாக கணிக்கப்பட்டு சலுகை அளிக்கப்படும் சமூகம் அந்தச் சலுகைக்காகவே தன்னை தனியாகப் பிரித்துக்கொள்ளும். பிற சமுகங்களுடன் போராடும். அதன் விளைவாக உருவாகும் கசப்புகள் ஒருபோதும் மறையாது. சீக்கியர்களின் இந்த மனநிலையை ஒரு வரலாற்றுத்தொடராகவே இன்று பார்க்கலாம். அவர்கள் தங்களை சலுகைபெற்ற தனிக்குழுவாகவே எப்போதும் உணர்ந்தார்கள், உணர்கிறார்கள் இரட்டை வாக்குரிமை அளிக்கப்பட்ட முப்பது வருடங்களுக்குள் அவர்கள் தங்களை ஒரு தனித்தேசமாக உணர ஆரம்பித்துவிட்டார்கள்.1942 லேயே காலிஸ்தான் கோஷம் ஆரம்பித்துவிட்டது.

இந்தியவிடுதலையின்போது சீக்கியரைக் கவர பல தனி வாக்குறுதிகளை அளித்தார் நேரு. அதனால் பிற சமுகங்கள் கசப்படைந்தன. அக்கசப்பின் விளைவாக உருவான பிளவு மீண்டும் மீண்டும் பல்வேறு அதிகாரப் பகிர்வுப்பிரச்சினைகளால் , வளப்பகிர்வுப்பிரச்சினைகளால் முற்றி பஞ்சாப் பிரச்சினை வரை வந்து குருதிகொப்பளிக்கச் செய்தது.

வகுப்புபேதங்களின் வெடிமருந்து புதைக்கப்பட்ட நிலம் இந்தியா. அதை காந்தி அளவுக்கு எவரேனும் உணர்ந்திருந்தார்களா என்ற ஆச்சரியம் ஏற்படுகிறது. மீண்டும் மீண்டும் பிரிவினை நோக்குக்கு எதிரான சமரசம் குறித்து காந்தி பேசியது இதற்காகவே. மிண்டோ மார்லி இட ஒதுக்கீடுகள் மூலம் உருவான வகுப்புவாத மனக்கசப்பை வெல்லவே காந்தி 1920 ல் கிலாஃபத் இயக்கத்தை ஆதரிக்க முற்பட்டார்.

காந்தி கிலாஃபத் இயக்கம் மூலம் முஸ்லீம்களுடன் உருவான பேதங்களை சரிசெய்ய முயன்றார். சலுகைகளைப் பெற்றுக்கொண்டு பிரிட்டிஷாருக்கு விசுவாசமாக இருந்த இஸ்லாமிய ஆளும் வர்க்கத்துக்கு எதிராக உருவாகி வந்த ஒரு மக்களியக்கமாகவே அவர் கிலாஃபத் இயக்கத்தைக் கண்டார். அதன்மூலம் அன்று வலுவாக உருத்திரண்டுவந்த மனக்கசப்பை வெற்றிகொள்ள முடியும் என எண்ணினார். அவரது முயற்சிகளுக்கு எதிராக காங்கிரஸில் இருந்த மனக்கசப்புகளை வெல்ல மாபெரும் உண்ணாவிரதத்தை நிகழ்த்தினார்.

காந்தியின் கனவு சாத்தியமாகவில்லை என்பதும் கிலாஃபத் இயக்கம் மெல்ல மத அடிப்படைவாதிகள் கைக்குச் சென்று அழிவுசக்தியாக ஆகியது என்பது துயரமான வரலாறே. கிலாஃபத் இயக்கம் தற்காலிகமாகத்தான் ஒரு இந்து முஸ்லீம் ஒற்றுமையை உருவாக்கியது. முஸ்லீம்களுக்கு தனி வாக்குரிமை அளித்து பிரித்து நாட்டுக்குள் ஒருநாடாக இயங்கச்செய்த வெள்ளையர் அதை இருநாடு கோரிக்கையாக ஆக்குவதில் வெற்றி பெற்றனர். 1930 ல் 'இந்தியா இருநாடு' என்ற கோஷம் வலுப்பெற ஆரம்பிதது. பாகிஸ்தான் என்ற சொல் பிறந்துவிட்டது.

அந்த வரலாற்று பேரபாயத்துக்கு எதிராக காந்தி போராடிக்கொண்டிருந்த தருணத்தில்தான் 1932 ல் மாண்டேகு செம்ஸ்போர்டு பரிந்துரையின்படி தாழ்த்தப்பட்டவர்களுக்கு இரட்டைவாக்குரிமை மூலம் தனிப்பிரதிநிதித்துவம் என்ற திட்டம் முன்வைக்கப்படுகிறது. இந்திய சமூகத்துடன் எந்த உறவும் இல்லாமல் அவர்கள் நாட்டுக்குள் ஒருநாடு போல ஓட்டுபோட்டு தங்கள் பிரதிநிதிகளை பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைக்கலாம் என்று உரிமை அளிக்கப்பட்டது.

எந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவம் பிளவையும் பேரழிவையும் உருவாக்கும் என்று காந்தி எண்ணினாரோ, எதற்கு எதிராக தன் நெடும்போராட்டத்தை மேற்கொண்டிருந்தாரோ, அதற்கு எதிராக அவர் தன் உயிரையே பணயம் வைத்துப் போராடியதில் என்ன தவறிருக்க முடியும்? அப்படி அவர் செய்யவில்லை என்றால்தான் அது மாபெரும் முரண்பாடு.

இன்று காந்தியைப்பற்றி சொல்லப்படும் ஓர் அவதூறு, அவர் இஸ்லாமியர்களுக்கும் சீக்கியர்களுக்கும் அளிக்கப்பட்ட தனித்தொகுதிமுறையை ஆதரித்தார், தலித்துக்களுக்கு அளிக்கப்பட்ட உரிமையை எதிர்த்தார் என்பது. அப்பட்டமான திரிபல்லாமல் வேறல்ல இது. காந்தி சொன்னது முஸ்லீம்களுயும் சீக்கியர்களும் அவர்களின் சொந்த மத அடையாளத்தால் தனித்தவர்களாக கருதப்படுகிறார்கள், தாழ்த்தப்பட்டவர்கள் பிறர் அவர்களை இழிவுசெய்வதனால் அப்படி கருதப்படுகிறார்கள், அதை அப்படியே நீடிக்க விடலாமா என்றே

"தீண்டப்படாதார் என்ற தனி வகுப்பாக பிரிப்பதை நான் விரும்பவில்லை. சீக்கியர் சீக்கியராக நிரந்தரமாக இருக்கலாம். அப்படி முஸ்லீம்களும் கிறித்தவர்களும் இருக்கலாம். தீண்டப்படாதோரும் அப்படியே தீண்டப்படாதாராக எக்காலமும் நீடித்திருக்க வேண்டுமா என்ன? தீண்டாமை அப்படி நிரந்தரமாக இருக்கும் என்றால் இந்துமரபே அழியட்டும் என்றே நான் சொல்வேன்" என்று வட்டமேஜை மாநாட்டுக்கான உபகுழுவில் காந்தி பேசினார்.

விவேகத்தின் உச்சத்தில் நின்ற அரசியல்ஞானியின் வினா இது. தீண்டப்படாதவர்களை தனிச்சமூகமாக்கும்போது தீண்டப்படாதவர்களாக இருத்தல் என்பதே அரசியல் அடையாளம் ஆகிறது. தீண்டப்படாதவர்களாக இருக்கும்போது மட்டுமே உரிமைகளும் சலுகைகளும் உள்ளன. அப்படியானால் என்றாவது தீண்டாமை ஒழியுமா? தீண்டாமையையும் சாதி இழிவையும் ஒழிப்பதுதான் முக்கியமே ஒழிய அவர்களை அப்படியே வைத்திருந்து தீண்டாமைக்கு விலையாக அவர்களுக்குச் சலுகைகளை அளிப்பதல்ல என்றார் காந்தி.

இதைச் சொல்பவர்கள் காந்தி இஸ்லாமியர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளை எதிர்த்தார், அதற்கு எதிராகச் சதி செய்தார் என்று பாகிஸ்தானிய பாடபுத்தகங்களும் இந்திய இஸ்லாமிய இதழ்களும் எழுதுவதற்குத்தான் பதில் சொல்லவேண்டும். சீக்கியர்களின் தனியுரிமையை காந்தி அழித்தார் என்று சொல்லும் அகாலிகளுக்குப் பதில் சொல்லவேண்டும்.

தாழ்த்தப்பட்டோருகு இரட்டை வாக்குரிமை அவர்களை இந்துக்களிடமிருந்து பிரிக்கும் என்ற நோக்கில் அதை ஆதரித்த, அதேசமயம் தங்கள் மதத்துக்குள் இருந்த தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு எந்த வித தனியுரிமையும் சலுகையும் [ இன்று வரை] அளிக்காத, முஸ்லீம்லீகிடம் இது தான் உங்கள் தீர்க்கதரிசி கூறிய அடிப்படை அறமா என்று கேட்டார் காந்தி. [முஸ்லீம் சமூகத்திற்குள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இல்லை என்பவர்கள் அம்பேத்காரின் ஆதாரம் மிக்க கட்டுரைகளை புரட்டிபபர்க்கலாம்]

அதேதான் சீக்கியர்களிலும். முதல் உலகப்போரில் பிரிட்டிஷ் ராணுவத்துக்குச் செய்த சேவைகளின் கூலியாக, குறிப்பாக நியூசிலாந்தில் பழங்குடிகளை ஒடுக்குவதில் உதவியதற்குக் கைமாற்றாக, இரட்டை வாக்குரிமைச் சலுகையைப் பெற்ற சீக்கியர்கள் இன்றுவரை அவர்களுக்குள் உள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்கு எளிய தனிச்சலுகைகளைக்கூட அனுமதித்ததில்லை. அது சமூகத்தை பிளக்கும் என்றார்கள். அதேசமயம் இந்துதலித்துக்கள் தனித்தேசம் என்று வாதிட்டார்கள்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்ட இரட்டை வாக்குரிமை மூலம் என்ன நடக்கிறது என்றால் அவர்கள் தனித்துவிடப்படுகிறார்கள். அவர்கள் பிரச்சினைகளில் பிறர் ஈடுபடும் வாய்ப்பு முற்றாகத்தவிர்க்கப்படுகிறது. அன்று ஒரு முஸ்லீம் இந்துவுக்கு வாக்களிக்க முடியாது, இந்து முஸ்லீமுக்கும் வாக்களிக்கமுடியாது. சிறுபான்மையினர் நலனை மேம்படுத்த பிரிட்டிஷ் அரசு கண்டுபிடித்த வழிமுறை அது. அதையே தாழ்த்தப்பட்டோருக்கும் அது பரிந்துரைத்தது. காந்தி அஞ்சியது அந்த பிரிவினைப்போக்கையே.

அந்த அடிப்படையிலேயே காந்தி இரட்டை வாக்குரிமையை எதிர்த்தார். வட்டமேஜை மாநாட்டுக்கு போவதற்கு முன்னர் காந்தி அம்பேத்காரையும் சிறுபான்மையினரின் பிரதிநிதிகளையும் கண்டு பேசினார்.ஆனால் இக்காலகட்டத்தில் அம்பேத்காரின் நிலைபாடுகள் கடினமடைந்தபடியே சென்றன. இரட்டை வாக்குரிமையில் இருந்து இறங்க அவர் தயாராக இல்லை.

1932 ஆகஸ்ட் 17 அன்று பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மக்டொனால்டின் வகுப்புவாரி அளிக்கை வந்தது. கொடிய ஒடுக்குமுறைகளை காங்கிரஸ் சந்தித்த காலம் அது. அன்றிருந்த 24 மாகாணங்களில் மொத்தமாக தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்ட இடங்கள் 71. தாழ்த்தப்பட்டவர்கள் இரட்டை வாக்குகளை அளிக்கலாம். ஒரு வாக்கு பொதுவேட்பாளருக்கு இன்னொரு வாக்கு தாழ்த்தப்பட்ட வேட்பாளருக்கு. ஆனால் சொத்தோ கல்வியோ உள்ளவர்கள் மட்டுமே வாக்களிக்க முடியும்.

அப்போது மீண்டும் மீண்டும் பிரிட்டிஷ் பிரதம்ருக்கு காந்தி கடிதம் எழுதினார் “ ஒடுக்கப்பட்டோர் கூடுதல் பிரதிநிதித்துவம் பெறுவதை நான் எதிர்க்கமாட்டேன்ஸஅவர்கள் அரசியல் சாசனரீதியாக பிரிக்கப்படுவதை மட்டும்தான் நான் எதிர்க்கிறேன். உங்கள் முடிவு அரசியல் சாசனத்தில் ஏற்றப்படுமேயானால் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் தங்கள் ஒடுக்கப்பட்ட சகோதரர்களை மேம்படுத்த இந்து சீர்திருத்தவாதிகள் செய்து வரும் அற்புதமான பணியை தடுத்துவிடும் என்று நீங்கள் உணர்கிறீர்களா?”

அந்த யதார்த்தத்தைப் பற்றி எவருமே இங்கு பேசுவதில்லை. காந்தி அதைச் சொல்லும்போது இந்தியாவில் ராமகிருஷண மடம், ஆரியசமாஜத்தைச்சேர்ந்த பல ஆயிரம் தொண்டர்கள் தாழ்த்தப்பட்ட மக்களிடையே பணியாற்றிக்கொண்டிருந்தார்கள். நாராயணகுருவின் இயக்கத்தைச்சேர்ந்த ஆயிரம்பேர் சேரிகளில் சேவைசெய்தனர், அவர்களில் அத்வைத மடம் சார்ந்து சென்னையில் பணியாற்றிய நடராஜகுருவும் ஒருவர். அவர்கள் அனைவரையுமே அன்னியர்களாக ஆக்குகிறது அந்த இரட்டை வாக்குரிமை என்றார் காந்தி.

காந்தி அந்த பிளவுபடுத்தும் போக்குக்கு எதிராகவே உண்ணாவிரதம் இருந்தார். தான் தன்னை தாழ்த்தப்பட்டோரின் ஒருவராகவே உணர்கிறேன் என்று காந்தி எரவாடா சிறையில் இருந்து அரசாங்கத்துக்கு எழுதினார் “சட்டச்சபைகளில் அவர்களது பிரதிந்தித்துவத்தை நான் எதிர்க்கவில்லை. அவர்களில் வயது வந்த ஆண் பெண் இருபாலரும் கல்வி மற்றும் சொத்துத் தகுதி இன்றியே வாக்காளர்களாக பதிவுசெய்யப்படவேண்டும். பிறருக்குக் கூட வாக்குரிமை கட்டுப்படுத்தப்படலாம். அவர்களுக்குக் கூடாது” என்று எழுதி ஆனால் இந்துக்களில் உள்ள ஒவ்வொரு சாதியும் ஒருவரை ஒருவர் சார்ந்து ஒரே இடங்களில் வாழக்கூடியவர்கள் என்றும் பிரிவினை போக்கு பேராபத்தை விளைவிக்கும் என்றும் வாதாடினார்.

தன்னுடைய உண்ணாவிரதம் இந்து சமூகத்தை பிளக்கும் பிரிட்டிஷ் சூழ்ச்சிக்கு எதிரானது மட்டுமல்ல இந்துசமூகத்தின் ஆறிலொருபங்கு மக்களை தாழ்த்தப்பட்டோராக எண்ணும் தன் கட்சியைச்சேர்ந்த உயர்சாதியினருக்கும்கூடத்தான் என்று காந்தி அறிவித்தார். உண்ணாவிரதம் முடிந்தபின் இரட்டை வாக்குரிமையை ரத்துசெய்துவிட்டதாக எண்ணி காங்கிரசார் தங்கள் கடமையில் இருந்து வழுவி தூஙகப்போய்விடக்கூடாது என்றும் அந்தக் கடமை தாழ்த்தப்பட்ட மக்களுடன் இணைந்து அவர்களின் முன்னேற்றத்திற்காக உழைப்பதே என்றும் சொன்னார்.

விளைவாகவே பூனா ஒப்பந்தம் கையெழுத்தாகியது. பூனா ஒப்பந்தம் அம்பேத்காரின் கோரிக்கைகள் அனைத்தையும் ஒத்துக்கொண்டது, காந்தியின் கோரிக்கை இந்துசமூகம் பிளவுபடலாகாது என்பது மட்டுமே. மெக்டொனால்டின் வகுப்புவாரி அளிக்கை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளித்தது 71 இடங்கள். பூனா ஒப்பந்தம் அளித்தது 148 இடங்கள். அதன்பின் வெளியேவந்த காந்தி தன் ஹரிஜன இயக்கத்தை ஆரம்பித்தார். தாழ்த்தப்பட்டோருக்கான பணிகளை அதற்கு முன்னரும் காங்கிரஸ் செய்துவந்தது. ஜமுனாலால் பஜாஜ் தலைமையில் அதற்கான கமிட்டியும் இருந்தது. காந்தியின் முதல் திட்டமாக இருந்தது தேச சுதந்திரமே. ஆனால் அந்த முதல் திட்டத்தை முற்றிலும் நிறுத்திவிட்டு வெளிப்படையாகவும் திட்டவட்டமாகவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான சேவையாக ஹரிஜன இயக்கத்தை ஆரம்பித்தார்.

கடும் பொருளியல் மந்தம் நிலவிய சூழலில் எட்டு லட்ச ரூபாயை அவர் அதற்காக வசூல் செய்தார். ஹரிஜன சேரிகளில் மட்டும் ஏறத்தாழ முப்பதாயிரம் கதர்நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு லட்சக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கப்பட்டது. கோயில்களையும் பொதுஇடங்களையும் தாழ்த்தப்பட்டோருக்குத் திறந்துவிடும் இயக்கங்கள் நாடெங்கும் தொடங்கின. இந்த மாற்றங்களை எதிர்ப்பியக்கங்களாக காந்தி நடத்தவில்லை. மாறாக இந்து சமூகத்தின் சுய சுத்தீகரிப்பு இயக்கமாகவே நடத்தினார்.

அம்பேத்காரின் தரப்பைச் சேர்ந்த ஒருவர் சற்றே சமநிலையுடன் காந்தியின் தரப்பையும் பார்த்தார் என்றால் அது எத்தனை பெரிய தீர்க்கதரிசனம் என்று தெரியும். சீக்கியர் என்றுமே இந்தியாவில் மதிக்கப்படும் சமூகம். இஸ்லாமியர்கள் மீது ஒரு வரலாற்றுக் கசப்பு இந்துக்கள் மத்தியில் இருந்தது என்றாலும் அவர்கள் இந்தியாவில் அஞ்சப்பட்டவர்களும்கூட. அவர்கள்

மீதான கசப்புகளே இந்திய சமூகத்தில் ஆபத்தான பிளவை உருவாக்கின

ஆனால் தாழ்த்தப்பட்டவர்கள் அப்போது இந்திய சமூகத்தால் மதிக்கப்படவில்லை. வெறுத்து கீழ்நிலையில் வைக்கப்பட்டிருந்தார்கள். மேலும் சீக்கியர்களையும் இஸ்லாமியர்களையும்போல தாழ்த்தப்பட்ட மக்கள் இந்தியாவில் சில பகுதிகளில் பெரும்பான்மை கொண்டு வாழவில்லை. இந்திய சமூகத்திற்கு உள்ளே வாழ்ந்தார்கள் அவர்கள். அவர்களின் வாழ்க்கையும் பிற சாதியினரின் வாழ்க்கையும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவை. அவர்கள் அதிகாரப்பகிர்வின் பூசல் மூலம் அன்னியப்படுத்தப்பட்டு கசப்புகளுக்கு ஆளாகியிருந்தால் அதன் விளைவுகள் சாதாரணமானவை அல்ல.எத்தனை முறை காந்தி அவருக்கே உரித்தான நாசுக்குடன் அதைச் சொல்கிறார் என்றுபாருங்கள்

அம்பேத்காரே அவரது கட்டுரைகளில் பல இடங்களில் சொல்வதுபோல இரட்டை வாக்குரிமைக்கு எதிராக இருந்தவர்கள் காங்கிரஸும் காந்தியும் மட்டுமல்ல. உண்மையிலேயே எதிர்த்தவர்கள் பிற்படுத்தப்பட்ட சாதிக்குழுவினர், இஸ்லாமிய மேட்டிமைவாதிகள், சீக்கியர்கள் அனைவரும்தான். அத்தனைபேரையும் எதிர்த்து தான் இரட்டைவாக்குரிமையை அடைந்ததாக அம்பேதார் சொல்கிறார். தன் செல்வாக்கான ஆதரவாளர்களான அத்தனைபேரையும் பகைத்துக்கொண்டு அதை பிரிட்டிஷ் ஆதிக்க அரசு ஏன் வழங்கவேண்டும் என்ற வினாவே எஞ்சி நிற்கிறது.

ஆகவேதான் இன்னொரு பிளவுக்கும் கசப்புக்கும் இடம்தர முடியாது என்று காந்தி உறுதியாக இருந்தார். அப்படி நிகழுமென்றால் அது தன் மரணத்துக்குச் சமம் என எண்ணினார். அம்பேத்காருடன் அவர் நிகழ்த்திய பேச்சுவார்த்தைகளிலும் பிற்பாடு நிகழ்ந்த உரையாடல்களிலும் காந்தி அதை மீண்டும் மீண்டும் சொல்கிறார்.

அத்தனை எதிர்ப்புக்கும் உள்ளான அந்த சலுகைகளில் இரட்டைவாக்குரிமை என்ற பிளவுபடுத்தும் அம்சத்தை தவிர பிற அனைத்துக்கோரிக்கைகளையும் காங்கிரஸ் சார்பாக காந்தி ஏற்றுக்கொள்கிறார். அவ்வெதிர்ப்புகளை முழுக்க தன்னுடைய இணையற்ற மக்கள்செல்வாக்கைக்கொண்டே அவர் மழுங்கடித்து தாழ்த்தப்பட்டோருக்கான உரிமைப்போராட்டத்தின் பாதையை சுமுகமாக்கினார். சலுகைகள் பெறும் மக்கள் மேல் பிறருக்கு உருவாகும் கசப்புகளை காந்தி இல்லையேல் தடுத்திருக்க முடியுமா என்ன?

ஆகவேதான் தாழ்த்தப்பட்ட மக்களை இந்திய மையச் சமூகத்திற்குள்ளேயே நிறுத்திக்கொண்டு அவர்களுக்கான சலுகைகளை அவர்கள் அடையவேண்டும் என அவர் சொன்னார். தாழ்த்தப்பட்டோரால் தேர்வு செய்யப்பட்டு பாராளுமன்றம் செல்லும் ஒரு தாழ்த்தப்பட்டவர்களின்பிரதிநிதி அந்த தொகுதியின் அனைத்து மக்களின் பிரதிநிதியாகச் செல்லட்டுமே என்றார். அதற்கான மனநிலைகளை உருவாக்க பிற சமூகத்தினரின் மனசாட்சியைத் தீண்டி அவர்களையும் அந்தப்போராட்டத்தில் ஈடுபடுத்த அவர் ஹரிஜன் இயக்கம் மூலம் முயன்றார். அவர் கண்முன்னால் கண்ட ஒரு மாபெரும் சமூகப் பிளவை தவிர்க்க அவர் கண்டடைந்த ஆகச்சிறந்த வழி அதுவே.

என்ன நடந்தது இரண்டாம் வட்டமேஜை மாநாட்டில்?

இரண்டாம் வட்டமேஜை மாநாட்டில் அம்பேத்காரை பிரிட்டிஷார் திறம்பட பயன்படுத்திக்கொண்டு அதற்கு ஊதியமாகவே இரட்டை வாக்குரிமை என்ற போலிச்சலுகையை அளித்தார்கள் என்று ஏற்கனவே சொன்னேன். அந்த மாநாட்டின் விரிவான சித்திரத்தை இதுவரை பேசியவற்றின் வெளிச்சத்தில் விரிவாகவே பார்க்கவேண்டும்.

அந்த வட்டமேஜை மாநாட்டில் இந்தியாவின் கோடிக்கணக்கான மக்களை பிரதிநிதித்துவம் செய்பவராக, ஒரு மாபெரும் போராட்டத்துக்குப் பின்னர் சமரசப் பேச்சுவார்த்தைக்காக காந்தி சென்றிருந்தார். ஆனால் அந்த மாநாட்டுக்கு பிரிட்டிஷ் அரசு வகுப்புவாரி பிரதிநிதித்துவப்படி அழைப்பதாகச் சொல்லி பல்வேறு சமூகங்களில் இருந்து பிரிட்டிஷ் அரசை ஆதரிப்பவர்களை அழைத்திருந்தது. அம்பேத்காரும் அவர்களில் ஒருவர்.

மிக மிக ஆச்சரியகரமான விஷயம் அந்த மாநாட்டில் பிரிட்டிஷாரை எதிர்த்துப்போராடிய அமைப்பைச்சேர்ந்த ஒரே ஒருவர் மட்டுமே வந்திருந்தார், அவர்தான் காந்தி. பிற அத்தனைபேருமே பிரிட்டிஷாரை ஆதரித்தவர்கள். இந்தியாவின் இயல்பான ஆட்சியாளர்களாக பிரிட்டிஷாரைக் கண்டவர்கள். ஜின்னா உட்பட முஸ்லீம்லீக் பிரதிநிதிகள். இந்துமகாசபையின் பிரதிநிதியான டாக்டர் மூஞ்சே.சீக்கியப் பிரதிநிதியான சர்தார் உஜ்ஜல்சிங். மகாராஜாக்கள், திவான்கள்.

இதில் மிகவும் கவனிக்கத்தக்க ஒன்றுண்டு. இந்துமகாசபையின் ஆரம்பத்தலைவரான டாக்டர் மூஞ்சே ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் பிதாமகர்களில் ஒருவரும்கூட. முதல் வட்டமேஜைமாநாட்டில் அவர் இந்துக்களின் பிரதிநிதியாக பிரிட்டிஷாரால் அழைக்கப்பட்டார். அவர் பிரிட்டிஷாருக்கு ஆதரவானவராக இருந்தார், காங்கிரஸ் எதிர்ப்பாளர் என்பது மட்டுமே ஒரே காரணம். இரண்டாம் வட்டமேஜைமாநாட்டிலும் அவர் கலந்து கொண்டார். உப்புசத்யாக்கிரகம் உட்பட எல்லா தேசிய போராட்டத்துக்கும் எதிர்நிலை எடுத்த அவர், மகாராஷ்டிரத்துக்கு வெளியெ பெயர்கூட தெரியாத அவர், இந்தியாவின் கோடானுகோடி இந்துக்களின் பிரதிநிதி எனப்பட்டார்.

அதாவது அம்பேத்கார் தாழ்த்தப்பட்டோர் பிரதிநிதி . ஜின்னா முஸ்லீம்கலின் பிரதிநிதி. உஜ்ஜல்சிங் சீக்கியர் பித்திநிதி. மூஞ்சே இந்துக்களின் பிரதிநிதி. காந்தி? அவர் காங்கிரஸின் பிரதிநிதி மட்டுமே. இதுதான் வட்டமேஜைமாநாட்டில் பிரிட்டிஷாரின் நிலைபாடு. வட்டமேஜைமாநாட்டில் டாக்டர் மூஞ்சேயும் அம்பேத்காரும் இணைந்தே காந்திக்கு எதிராகச் செயல்பட்டார்கள் ஒருவரை ஒருவர் ஆதரித்தார்கள். மாநாட்டின் விரிவான ஆவணப்பதிவை இன்று எவரும் ஆராயலாம். மேலும் பல சந்தர்ப்பங்களில் காங்கிரஸுக்கு எதிரான அரசியலில் இந்துமகாசபையும் அம்பேத்காரும் ஒத்துப்போனார்கள், பேரம்பேசிக்கொண்டு சேர்ந்து செயல்பட்டார்கள்!அவையெல்லாமே வெளிப்படையான வரலாறுகள்.

அந்த மாநாட்டில் தாழ்த்தப்பட்டவர்களுக்காக அம்பேத்கார் மட்டும் இரட்டை வாக்குரிமை கோரவில்லை. பார்ஸிகள், கூர்க்காக்கள் உட்பட எட்டு ‘தேசிய சிறுபான்மையின’ருக்கும் முஸ்லீம்களுக்கும் சீக்கியர்களுக்கும் அளிக்கப்பட்டதைப்போல

தனிவாக்குரிமை வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டது. அத்தனை பேரும் சூழ்ந்துகொண்டு காந்தியை தாக்கினார்கள் என்று பிரிட்டிஷ் நிருபர்கள் அன்று எழுதியிருக்கிறார்கள். அவர்களில் ஒருவராகவே அங்கே அம்பேத்காரின் குரல் ஒலித்தது

அந்த மாநாட்டில் நூற்றுக்கணக்கான சாதிகளைச்சேர்ந்த கோடிக்கணக்கான இந்தியர்களின் பிரதிநிதியான, இந்தியாவைவே இணைத்திருந்த காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவரான காந்தியின் குரலே ஒலிக்கவிடவில்லை. அவரது தரப்பை அவர் சொல்லவே முடியவில்லை. அவரது காங்கிரஸ் இந்தியாவை பிரதிநிதிகரிக்கவில்லை என்றும், தங்கள் சாதிகளையும் வகுப்புகளையும் பிரதிநிதிகரிப்பவர்கள் தாங்கள்தான் என்றும், அங்கே வந்திருந்தவர்கள் வாதாடினார்கள். அவர்களில் ஜின்னா தவிர எவருக்குமே எந்தவிதமான மக்களியக்கத்தின் பின்புலமும் இருக்கவில்லை. பிரிட்டிஷாரின் நல்லெண்ணம் மட்டுமே அவர்கள் அங்கே வருவதற்கான தகுதியை அளித்திருந்தது. அன்று, அம்பேத்காரும் அப்படிப்பட்டவராகவே இருந்தார்.

வட்டமேஜை மாநாட்டில் பெரும்பாலான நேரங்களில் காந்தி சோர்வுடன் கண்களை மூடிக்கொண்டு இருந்தார். அவர் தூங்குவதுபோலக்கூட தோன்றியது என லண்டன் டைம்ஸ் நிருபர் எழுதினார். மாநாட்டில் காந்தி திரும்பத்திரும்ப ஒன்றைச் சொனனர், கோடிக்கணக்கான இந்தியர்களின் பிரதிநிதியாக, ஒரு மாபெரும் மக்களியக்கத்தின் விளைவாக, தான் வந்திருப்பதை வலியுறுத்தினார். சாதிமதபேதமில்லாத அந்த இந்தியாவின் பிரதிநிதியாகிய தன் குரலையே இந்தியாவின் குரலாக ஏற்கவேண்டும் என்றார். அது பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக போராடும் இந்திய தேசியத்தின் குரல் என்றார்.

அதற்கு மாறாக பிரிட்டிஷார் அழைத்து அங்கே அமரச்செய்திருக்கும் பிரதிநிதிகள் உண்மையில் இந்திய மக்களை ஜனநாயக அடிப்படையில் பிரதிநிதிகரிக்கவில்லை என்றார் காந்தி . அவர்கள் சமூகத்தின் உயர்மட்டத்தில் வாழ்பவர்கள். தங்கள் சமூகத்தின் ஏழைகளைக்கூட அவர்கள் பிரதிநிதிகரிக்கவில்லை. அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் இந்தியாவை துண்டுபோடவேண்டாம் என்றார். இன்று எந்த நடுநிலையாளனும் உணரும் அந்த மாநாட்டின் அப்பட்டமான யதார்த்தம் அதுவே.

அதை காந்தி பிதற்றினார் என்றும், காழ்ப்பைக் கொட்டினார் என்றும் அம்பேத்கார் கசப்புடன் எழுதி வைத்திருக்கிறார். அதையே இன்றும் சிலர் சொல்கிறார்கள். ஜின்னாவும் ஆகாகானும் எந்த இஸ்லாமிய ஏழையின் பிரதிநிதிகள்? அவர்கள் இஸ்லாமியர்களுள் உள்ள எளிய, தாழ்த்தபட்டோரை பொருட்படுத்தியவர்களே அல்ல என்று அம்பேத்காரே பின்னர் எழுதியிருக்கிறார்.

வட்டமேஜைக்குழு சொன்னதுபோல தென்னக மக்களை 'ரைட் ஆனரபில்' சீனிவாச சாஸ்திரி பிரதிநிதிகரித்தாரா என்ன? மகாராஷ்டிரர்களை மூஞ்சே பிரதிநிதிகரித்தாரா? ஏதாவது ஒரு தேர்தலில் அடுத்த முப்பது வருடங்களிலாவது இவர்கள் சொல்லும்படியான ஏதேனும் மக்களாதவைப் பெற்றார்களா? ஏன், ஜின்னாவின் முஸ்லீம்லீக் ஒருமுறைகூட மொத்த பாகிஸ்தானிலும் ஒட்டுமொத்த பெரும்பான்மை பெற்றதில்லை என்ற எளிய உண்மையே வரலாற்றில் இருக்கிறது.

ஒரு மக்கள் அமைப்பு போராடி அதன் உரிமைகளுக்காக பேச்சுவார்த்தைமேஜையில் அமர்ந்திருக்கும்போது அந்த உரிமைகளைப் பங்குபோட வந்தவர்களின் குரலாகவே அவர்கள் அந்த மாநாட்டில் ஒலித்தார்கள். அதைத்தான் வருத்தத்துடன் காந்தி சுட்டிக்காட்டினார். இதுவே வரலாற்று யதார்த்தம்.

**காந்தி காட்டிய வழி**

இரண்டாம் வட்ட மேஜை மாநாட்டில் காந்தி கடைசியாக கேட்ட எளிய கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. காந்தி ஏமாற்றத்துடன் திரும்பியதுமே பிரிட்டிஷ் பிரதமர் ராம்ஸே மக்டொனால்ட் வகுப்புவாரிஅளிக்கையை [communal award]அறிவித்தார். தாழ்த்தப்பட்டவர்கள் இந்தியாவின் சிறுபான்மை சமூகமாகவும் இந்துக்களோடு தொடர்பற்றவர்களாகவும் அது சொன்னது. அவர்களுக்கு இரட்டை வாக்குரிமையை அளித்தது

அன்று ஏற்கனவே இரட்டை வாக்குரிமை அளிக்கப்பட்ட இஸ்லாமியரும் சீக்கியரும் மிகவிரைவிலேயே தனிநாடு கோரிக்கைக்கு வந்துசேர்ந்தார்கள். பலரும் அறியாத ஒன்று, 1945 லேயே காலிஸ்தான் கோரிக்கையும் உருவாகிவிட்டது என்பது. இவ்விரு 'தேச' உருவகங்களே இந்தியப்பிரிவினையின்போது ஒருவரோடு ஒருவர் மோதிக்கொண்டு ரத்த ஆற்றை ஓடவிட்டார்கள். காந்தியின் உண்ணாவிரதம் மூலம் வங்கத்தில் அமைதி திரும்பியபோதுகூட சீக்கியர் அவர் குரலுக்குச் செவி சாய்க்கவில்லை.

இதில் மேலும் திட்டவட்டமாகச் சொல்லவேண்டிய விஷயம் காந்தி உயர்சாதியின் பிரதிநிதியாக அப்போது இருந்தார் என்ற அப்பட்டமான பொய்யைப் பற்றித்தான். காங்கிரஸ் அன்று இந்தியாவின் பல்லாயிரம் சாதியைசேர்ந்த பலகோடி மக்களின் கட்சி. இந்திய பிற்படுத்தப்பட்டவர்கள் 'தாழ்த்தப்பட்டவர்கள் அடைந்த உரிமையைக்கண்டு தாழ்த்தப்பட்டவர்கள்மேல் கொண்ட காழ்ப்பால்' காந்தியுடன் இருந்தார்கள் என்று அம்பேத்காரே சொல்கிறார். ஏன், இந்திய தாழ்த்தப்பட்டவர்களில்கூட பெரும்பாலானவர்கள் அன்று காங்கிரஸுடனும் காந்தியுடனும்தான் இருந்தார்கள். இன்றும்கூட அப்படித்தான்.

மிக எளிமையாகவே இதைக் காணலாம். இந்தியாவின் தாழ்த்தப்பட்ட மக்களின் அமைப்புகளில் மிகச்சிலவே அம்பேத்காருடன் இருந்தன. தமிழகத்தில் சில அமைப்புகளைக் குறிப்பாகச் சொல்லலாம். ஆனால் தாழ்த்தப்பட்டோருக்காகப் போராடிய சுவாமி சகஜானந்தா, சுவாமி ஆத்மானந்தா கேரளத்தின் அய்யன் காளி போன்ற எத்தனையோபேர் காந்தியின் காங்கிரஸ் சார்பாகவே இருந்தார்கள்.

ஆகவே தாழ்த்தப்பட்டவர்களின் தலைவர் என அம்பேத்கார் எவ்வாறு தன்னைச்சொல்லிக்கொண்டாரோ அதைவிட அதிகமாகவே காந்தி தன்னை தாழ்த்தப்பட்டவர்களின் தலைவர் என்று சொல்லிக்கொள்ள முடியும். தன்னை தலைவராக ஏற்ற அந்த எளிய தாழ்த்தப்பட்ட மக்களின் குரலாகவும் காந்தி அம்பேத்காருடனான உரையாடலில் பேசுகிறார்.

*மேலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கான இரட்டை வாக்குரிமை அங்கேயே நிற்காது என காந்தி அறிவார். மேலும் ஏழு கோரிக்கைகள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கோரிக்கைமேஜைமேல் வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்றான சூர்க்கா கோரிக்கை, பின்னர் வன்முறையை உருவாக்கியது என்றும் பார்க்கும்போது காந்தியின் தீர்க்கதரிசனம் வியப்பூட்டுகிறது. அவை ஏற்கப்பட்டிருந்தால் இந்தியாவின் மற்ற சாதிகள் சும்மா இருக்குமா என்ன? இந்தியாவில் அப்படியானால் எத்தனை தனி வாக்குரிமை இருக்கும்?*

*எண்ணிப்பாருங்கள், இன்றிருக்கும் தேர்தல் முறைக்குப் பதிலாக நாடார் நாடார்பிரதிநிதிகளையும் கவுண்டர்கள் கவுண்டர் பிரதிநிதிகளையும் தேர்வுசெய்யவேண்டுமென நீங்கள் சொல்வீர்களா என்ன? கிட்டத்தட்ட மூவாயிரத்து ஐநூறு சாதிகள் தங்கள் பிரதிநிதிகளை பிறருடன் சம்பந்தமில்லாமல் தாங்களே தேர்வுசெய்தால் எத்தனை பிரதிநிதிகள் பாராளுமன்றத்துக்கு வருவார்கள்? அவர்கள் கூடி எப்படி பிரதமரைத் தேர்வுசெய்வார்கள்?*

*சரி, அப்படியே சாதிக்கொரு தேர்தல் என்றாலும்கூட இந்திய சாதிகளைப்பற்றி தெரிந்தவர்கள் அதில் எத்தனை உபசாதிகளை, குலக்குழுக்களைக் காண்பார்கள். தேவருக்கு தனி இருக்கை என்றால் அதில் மறவருக்கும் கள்ளருக்கும் அகமுடையாருக்கும் பிறமலைக்கள்ளருக்கும் தனியாகப் பிரிப்பார்களா என்ன? என்ன வகையான ஜனநாயகம் அது? இந்தியாவின் எந்த ஒரு பிரிவினையும் ரத்த ஆறாக ஆகக்கூடும் என்னும்போது என்ன வகையான எதிர்காலத்தை அது நமக்கு அளிக்கவிருந்தது? போகட்டும், இந்திய தலித்துக்களேகூட ஒரே சாதியா என்ன? இக்கணம் வரை பறையர்களும், பள்ளர்களும், சக்கிலியரும் சேர்ந்து அமர்ந்து பேசும்நிலை உருவாகவில்லையே. ஆக, வகுப்புவாரிபிரதிநிதித்துவம் பின்னர் சாதிவாரி பிரதிநிதித்துவமாகி, உபசாதி பிரதிநிதித்துவமாகி, உள்சண்டையாகி சீரழியும் ஒரு ஜனநாயகத்தையல்லவா நம்மில் சிலர் பிரிட்டிஷாரின் மகத்தான வாக்குறுதி என்று இன்றும் சொல்லிக்கொண்டிருக்கிறோம்!*

*அனைத்துக்கும் அப்பால் ஒரு கேள்வி உள்ளது. இந்த வினாவை இன்றுவரை எவருமே விவாதித்ததாகத் தெரியவில்லை. பிரிட்டிஷார் அளித்த இந்த 'சலுகை'கள் அனைத்துமே அவரகள் நேரடியாக ஆண்ட நிலப்பகுதிக்கு மட்டுமே.சம்ஸ்தானங்களில் இவை எதுவும் இதேவடிவில் அமலாக்கப்படவில்லை. குறிப்பாக திருவிதாங்கூரையே எடுத்துக்கொள்வோம். இந்திய சம்ஸ்தானங்களில் மிக முற்போக்கானது என்று சொல்லபப்ட்ட திருவிதாங்கூர் மன்னருக்கான ஆலோசனைச் சபையில் தாழ்த்தபப்ட்டவர்களுக்கு சில நியமன இடங்களை அளிப்பதற்கு மட்டுமே ஒத்துக்கொண்டது.*

*இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுத்துச்செல்லும்போது பிரிட்டிஷார் இந்திய சமஸ்தானங்களுக்குத்தான் சுதந்திரம் கொடுத்துச் சென்றார்கள். ஒவ்வொரு சம்ஸ்தானத்துக்கு தனியாக போகவேண்டுமென விரும்பினால் அவ்வாறே செய்ய உரிமை உண்டு என்றார்கள். அந்த மன்னர்கள் எலலருமே பழைமையில் ஊறிய, சாதிவெறி கொண்ட, ஆசாரமான ஆட்சியாளர்கள் என்னும்போது அம்பேத்கார் 'பெற்ற' சலுகைகளுக்கு என்ன மதிப்பு இருந்திருக்க முடியும்? அப்படியானால் பிரிட்டிஷாரின் சலுகைகளுக்குப் பின்னால் உள்ள நல்லெண்ணம் என்ன?*

*ஆனால் காந்தி பூனா ஒப்பந்தம் மூலம் அலித்த சலுகை அப்படிபட்டதல்ல. முக்கால் நூற்றாண்டுக்குமேல் இன்றுவரை காங்கிரஸைக் அக்ட்டுபப்டுத்தும் வாக்குறுதி அது. இந்திய அரசியல் நிர்ணய சபை வயதுவந்தோர் வாக்குரிமை வழங்கியபோது பிரிட்டிஷார் வயதுவந்தோர் வாக்குரிமைக்குப் பதிலாக வழங்கிய எல்லா தேர்தல் சலுகைகலும் ரத்தாயின, ஆனால் காந்தி கொடுத்த வாக்குறுதி என்பதற்காக மட்டுமே தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டும் தேர்தல் சலுகைகல் நிலைநிறுத்தப்பட்டன. அச்சொல் அழியலாகாது என நேரு எண்ணினார். அதை எதிர்த்த காங்கிரஸாரிடம் அது காந்தியின் வாக்கு என்று சொல்லி அதை நிலைநாட்டினார்.*

*எந்த ஒரு காழ்ப்பும் உடனடி வன்முறையாக வெடிக்கும் தன்மை கொண்டது இந்தியப்பெருநிலம். அதிக மக்கள்தொகையும் குறைவான வளங்களும் கொண்ட எந்த நாட்டிலும் இருக்கும் நிலைமைதான் இது. ஆனால் இந்திய சமுகத்தில் இஸ்லாமியர் மேல் நிகழ்ந்தது போன்ற ஒருங்கிணைக்கப்பட்ட சமுக வன்முறை என்பது தலித்துக்கள்மேல் நிகழவேயில்லை — எண்பதுகளில் பிற்படுத்தப்பட்டோர் அரசியல் வலுப்பெறும் . அதற்குக் காரணம் காந்தியின் ஹரிஜன் இயக்கம் உருவாக்கிய கருத்துப்பதிவே.*

*பிளவுபடுத்தும் உரிமை அரசியலுக்குப் பதிலாக ஒன்றுபடுத்தும் ஜனநாயகத்தைக் கோரியதுதானா காந்திசெய்த மாபெரும் துரோகம்? ஆதிக்க அரசிடம் கெஞ்சிவாங்கும் சலுகைக்குப் பதிலாக சகசமுகத்தினரிடம் பேசிப் பெறும் உரிமையை அளித்ததுதானா காந்திசெய்த அநீதி? என்ன வகையான ஜனநாயக மனப்பான்மையில் இருந்து உதிக்கின்றன இந்த வரலாற்றுக் காழ்ப்புகள்?*

*காந்தி சொன்ன வழியே நவீன ஜனநாயகத்தின் வழி. அனைத்து மக்களுக்கும் குரல் இருக்கக்கூடிய அமைப்புள். ஒவ்வொரு அமைப்புக்குள்ளும் முரண்படும் தரப்புகள் நடுவே இணக்கமான முரணியக்கம். ஒவ்வொரு அமைப்புகள் நடுவேயும் இணக்கமான முரணியக்கம். வன்முறையும் அழிவும் தேவையில்லை என்றால் இதைத்தவிர வேறு வழியே இல்லை.*

*முக்கால் நூற்றாண்டுக்கு முன்பு நடந்த ஒரு விஷயத்தின் பல்வேறு தரப்புப்பேச்சுகளும் சில தரவுகளும் மட்டுமே இன்று கிடைக்கின்றன. அன்றைய உணர்ச்சிகளை இன்று உணர்வதே கடினமானது. இது காங்கிரஸில் நடந்த எல்லா விஷயங்களுக்கும் பொருந்தும். பகத்சிங் தூக்கு, சுபாஷ் சந்திர போஸின் வெளியேற்றம் என எத்தனையோ விஷயங்களில் இக்குழப்பம் நீடிக்கிறது.*

*இத்தகைய சூழலில் வரலாற்றுக்குள் இன்றைய உணர்ச்சிகளை செலுத்தாமல் அது அதிகாரசக்திகளின் முரணியக்கத்தால், உரிமைக்கோரிகைகளின் முரணியக்கத்தால் நிகழும் சிக்கலான ஒரு கூட்டு நகர்வு என்று புரிந்துகொள்ளும் ஆய்வாளனால் மட்டுமே ஏதேனும் ஓர் உண்மைக்குள் செல்லமுடியும். பூனா ஒப்பந்தம் குறித்த விஷயத்தில் மட்டும் பலருடைய தரப்புகளும்*

உணர்ச்சிகளும் பத்துவருடங்களுக்கு ஒருமுறை மாறியிருக்கின்றன.

இன்றைய அரசியல் தேவைக்காக கால யந்திரத்தில் புகுந்து நேற்றைய யதார்த்தத்தையும் நேற்றைய உணர்ச்சிகளையும் விருப்பப்படி மாற்றும் செயல் என்பது மிகமிக அபாயகரமானது. ஒரு தேசத்துக்கு வரலாறு என வெறும் பரஸ்பர அவதூறுகள் மட்டுமே இருக்கும் என்றால் அந்த சமூகம் வெடிமருந்துமீது நின்றுகொண்டிருக்கிறது என்றே பொருள். அதை உருவாக்குவதைத்தான் காழ்ப்பையே சிந்திப்பதற்கான விசையாகக் கொண்ட நம் அறிவுஜீவிகள் செய்துவருகிறார்கள். தலித்துகளுக்குள் இருந்து வரலாற்றுரீதியாக, மனசாட்சியின் அடிப்படையில் எண்ணிப்பார்க்கும் சிலராவது இனியேனும் வரவேண்டும். இந்திய தேசத்துக்குள் இஸ்லாமியர் போல சீக்கியர் போல ஒரு சமுகப் பிளவு நிகழாமல் தடுத்தமைக்காக ஒவ்வொரு இந்தியனும் காந்திக்குக் கடமைப்பட்டிருக்கிறார். வன்முறை இல்லாமல் தங்கள் அடிப்படை உரிமைகளை பெற்றுத்தந்தமைக்காக காந்திக்கு ஒவ்வொரு தலித்தும் சிறப்பாக கடமைப்பட்டிருக்கிறார்.

[மேலும்]

---

**காந்திய மருத்துவம்**

அன்புள்ள ஜெ,
காந்தியைப் பற்றி எழுதும்போது நீங்கள் காந்தியின் மருத்துவச் சோதனைகளைப் பற்றி எழுதுவீர்கள் என எதிர்பார்த்தேன். உங்களுக்கு மாற்று மருத்துவத்தில் ஆர்வம் உண்டு என்பதனால் இந்த எதிர்பார்ப்பு. காந்தியின் மருத்துவக்கோட்பாடுகள் எந்த அளவுக்கு இயற்கை மருத்துவத்துடன் ஒத்துப்போகின்றன? அவரை ஒரு முன்னோடி என்று சொல்ல முடியுமா? நான் இயற்கை மருத்துவத்தில் ஈடுபாடு கொண்டவன். குறிப்பாக நீர் மருத்துவத்தை நான் வெற்றிகரமாக செய்து என்னுடைய நெடுநாள் ஆஸ்துமாவை குணப்படுத்திக்கொண்டேன்.

ராஜாராமன் அனந்தராமன்

அன்புள்ள ராஜாராமன்,

காந்தியின் மருத்துவச் சோதனைகள் மேல் எனக்கு தனிப்பட்டமுறையில் ஈடுபாடுண்டு. 'அறிவுஜீவி என்பவன் கண்டிப்பாக தன் உடலை கூர்ந்து அவதானிப்பவனாக இருப்பான்' என்றார் காந்தி. தேசத்தை கூர்ந்து கவனித்த அளவுக்கே தன் மலக்குடலையும் கூர்ந்து கவனித்தார் என்பதே நான் காந்தியிடம் கண்ட சிறப்பு.

சுந்தர ராமசாமியின் நண்பரான டாக்டர்.பத்மநாபன் என்னிடம் காந்தியின் இயற்கை மருத்துவ ஆர்வத்துக்கு இந்தியாவில் வேர் இல்லை, அது முழுக்க முழுக்க மேலைநாட்டில் உருவான கருத்து என்று ஒருமுறை சொன்னார். அது கிட்டத்தட்ட உண்மை. அதாவது காந்தியின் வைஷ்ணவ மரபில் மருத்துவம்சார்ந்த சில நம்பிக்கைகளும் ஆசாரங்களும் இருந்தன. ஆனால் இயற்கை மருத்துவத்துக்கான கருதுகோள்களை, தர்க்கங்களை காந்தி மேலைநாட்டில் இருந்தே எடுத்துக்கொண்டார்.

காந்தி லண்டனில் இருந்த காலத்தை புரிந்துகொண்டால்தான் அவரை நாம் புரிந்துகொள்ள முடியும். அது தொழிற்புரட்சியின் பொற்காலம். தொழில்நுட்பம் மீது பெரும் மோகம் உருவாகி உலக அறிவுஜீவிகளை எல்லாம ஆட்கொண்ட காலம். அதே சமயம் அதுதான் தொழில்நுட்பத்துக்கு எதிரான ஐயங்கள் உருவான காலம். ஒரு நூறாண்டுக்கு முன்னர் உருவான ஐரோப்பிய இயற்கைவாதம் அதன் உச்சகட்ட தீவிரத்துடன் பல அறிவுத்துறைகளில் படர்ந்தேறிய காலம். காந்தியில் இக்காலகட்டத்தின் முரணியக்கம் எப்போதும் செயல்பட்டது

ஐரோப்பிய இயற்கைவாதம் இயற்கையை மானுடனை ஆளும் மகாவல்லமையாக உருவகித்தது. மனிதன் அதன் சிறு துளியே ஒழிய அவன் அதன் எஜமானன் அல்ல. இயற்கை கடவுளின் இடத்தில் வைக்கப்பட்டது. இயற்கைக்கு மனிதனைப்பற்றிய திட்டங்கள் உண்டு. மனிதனை அது வழிநடத்துகிறது. ஆகவே இயற்கைக்கு ஒத்திசைந்து வாழ்தலே மிகச்சிறந்த வாழ்க்கை. இயற்கையில் மனிதன் உணர்ந்தாகவேண்டிய எல்லா ஞானங்களும் உறைகின்றன. இவையெல்லாம்தான் இயற்கைவாதத்தின் கொள்கைகள். பதினெட்டாம் நூற்றாண்டில் தொடங்கி பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை ரூஸோ, வால்டேர், ரஸ்கின்,எமர்சன், தோரோ போன்ற அறிஞர்கள் நவீன காலகட்டத்திற்குரிய ஒரு சிந்தனையாக இயற்கைவாதத்தை வளர்த்தெடுத்தார்கள்.

லூயிஸ் குஷ்னே

இந்த இயற்கைவாதத்தில் இருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டில் உருவான மருத்துவ அணுகுமுறையே இயற்கைமருத்துவம் எனலாம். ஜெர்மனியில்தான் இயற்கைமருத்துவம் பிறந்தது. ஃபாதர் செபாஸ்டியன் நீப் டாக்டர் பெஞ்சமின் லஸ்ட்[ Dr Benjamin Lus ]லூயிஸ் குஷ்னே ஆகியோரை [Louis Kuhne 1835-1901] இயற்கைமருத்துவத்தின் முன்னோடிகளாகச் சொல்வது வழக்கம். இதன் முதல் சித்தாந்தி என்று லூயிஸ் குஷ்னெ கருதப்படுகிறார். அவரது குணப்படுத்தல் குறித்த புதிய அறிவியல் [Neo Naturopathy: The New Science Of Healing Or The Doctrine Of Unity Of Diseases] என்ற நூல் ஒரு புதிய வழிமுறையை முன்வைத்தது.

இந்நூலை இன்று வாசித்தால் ஒரு புது மதத்தை நிறுவும் நூல் போன்று தீவிரமான நம்பிக்கையை முன்வைப்பது இது என்ற எண்ணம் ஏற்படுகிறது. இயற்கை என்ற தெய்வத்திடம் சரணடைதல் என்பதையே ஒரு சிகிழ்ச்சைமுறையாகக் கொண்டது என்று சொல்லலாம். ஒரு மதத்தை தழுவிக்கொண்டவர் தன் மனமாற்றத்தயும் உய்வையும் சொல்வதைப்போல இந்நூலின் முகப்புக்கட்டுரையில் குஷ்னே தனக்கு எப்படி குடல் புற்றுநோய் வந்தது எவ்வாறு அதிலிருந்து இயற்கை மருத்துவம் மூலம் வெளியே வந்தேன் என்று சொல்கிறார். ஏன் ஏசுவால் மரணத்தில் இருந்து மீட்கபப்ட்ட லாசரஸுடன் தன்னை ஒப்பிடுகிறார்.

குஷ்னேயின் இயற்கை மருத்துவ வழிகளை மேலும் முன்னெடுத்தவர் என்று ஜெர்மானிய அறிஞர் அடால்ப் ஜஸ்ட் [ Adolph Just 1838-1936] சொல்லப்படுகிறார். , அவரது புகழ்பெற்ற நூல் 'இயற்கைக்குத் திரும்புதல்' [Return to Nature] காந்தி இதன் ஆங்கில மொழிபெயர்ப்பை மிக விரும்பி மீண்டும் மீண்டும் வாசித்திருக்கிறார். இவ்விரு நூல்களின் மொழியாக்கங்களும் மலையாளத்தில் கிடைக்கின்றன. தமிழில் அடால்ப் ஜஸ்டின் இயற்கைக்குத் திரும்புதல் நூலின் ஒரு மொழியாக்கம் வந்துள்ளது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஜெர்மானிய இயற்கை மருத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் இவை.

**1. இயற்கையின் ஒரு பகுதிதான் மனிதன். ஆகவே இயற்கையோடு இணைந்த நிலையே மனிதனின் இயல்பான ஆரோக்கியமான நிலை. நோய் என்பது அந்த இயல்பானநிலையில் இருந்து வழுவுதல்**

**2. இயற்கையில் இருந்து விலகியதனால் வரும் நோயை இயற்கைக்குத் திரும்புதல் வழியாகவே தீர்க்க முடியும்**

**3. நோய் என்பது மனித உடலில் கழிவுகள் தேங்குவதனால் உருவாவது கழிவுகள் என்பவை இயர்கையுடன் ஒவ்வாத பொருட்கள். அவற்றை வெளியேற்றுவதே சிகிழ்ச்சை**

**4 மனித உடல் ஐந்து அடிப்படைப்பூதங்களால் ஆனது. மனித உடலின் நோய்கலை அந்த பருப்பொருட்களை வைத்தே குணப்படுத்த முடியும்.**

காந்தியின் மருத்துவக் கொள்கைகள் இந்த மரபைச் சார்ந்தவை. காந்தி இந்த மரபில் இருந்து பெற்றுக்கொண்ட கொள்கைகளை தனக்கே உரிய முறையில் தன் உடலில் பரிசோதனைசெய்து பார்த்தார்.

காந்தியின் மருத்துவச் சோதனைகள் பெரும்பாலும் உணவு-கழிவு ஆகியவற்றைச் சார்ந்தவையாக இருப்பதைக் காணலாம். உள்ளே செல்லும் உணவை கண்கானித்துக்கொண்டே இருந்தார். காந்தியின் உணவு குறித்த கொள்கைகள் சில அவரது எழுத்துக்கள் வழியாக தெரிகின்றன

**1.மிகக்குறைந்த உணவே மனிதனுக்குப் போதுமானது போதுமான உணவுக்கு மேல் உண்ணக்கூடாது**

**2 ருசி என்பது ஒரு மனபழக்கம்தான். ஆகவே ருசிக்காக உண்ணக்கூடாது நல்ல உணவில் ருசியை உருவாக்கிக் கொள்ள வேண்டும்**

**3 இயற்கையில் இருந்து வரும் உணவே நல்ல உணவு அவை பழங்கள் காய்கறிகள் தேன் பால் முதலியன. ரசாயன உணவுகள் விஷம்.**

**4 மாமிச உணவு மனிதனுக்கு தேவையற்றது பிற உயிர்களைக் கொல்வதனால் அது கருணை இல்லாத உணவும்கூட**

**5 .பட்டினி என்பது மனித உடலுக்கு இயறகை விதித்த ஒரு நெறி. ஆகவே பட்டினி விரதம் உடலின் சமநிலையை நிலைநாட்ட உதவியானது**

இவற்றை வாழ்க்கையில் செயல்படுத்திப்பார்த்த காந்தி தன் சோதனைகளின் விளைவுகளை பதிவும்செய்தார். உணவிற்கும் உடலுக்குமான உறவு என்பது மலத்தில் தெரியும் என்று எண்ணினார்.

ஆனால் காந்தியின் சோதனைகளில் கொஞ்சம் ஒவ்வாததாக இரு விஷயங்கள் உள்ளன. உப்புநீரால் எனிமா கொடுத்துக்கொள்வதை காந்தி பரிந்துரைக்கிறார். அது மிகவும் இயற்கையானது என்று அவர் நினைத்தார். அதை குஷ்னே பரிந்துரைக்கிறார் என்பதே காரணம். அது இயற்கையானதல்ல என்பதையும் அது மனிதனுக்குச் செயற்கையான ஒரு வழக்கத்தை அளிக்கிறது என்பதையும் காந்தி கருத்தில் கொள்ளவில்லை.

காய்ச்சல் இருக்கும்போது மலம் இறுகிவிடக்கூடும். அப்போது உடற்கழிவை வெளியேற்றியாகவேண்டிய நிலையில் எனிமா கொடுப்பது உதவலாம். பலசூழல்களி,குறிப்பாக முதுமையில், குடற்சிக்கல்களினாலும் எனிமா தேவைப்படலாம். ஆனால் காந்தி அனேகமாக தனக்கு தினமும் எனிமா கொடுத்துக்கொண்டார். காந்திய சிகிழ்ச்சையின் மிகத்தவறான வழிமுறை இது என நான் நினைக்கிறேன்.

இரண்டாவதாக, பால். மனிதன் இன்னொரு மிருகத்தின் பாலை உண்பதென்பதும் இயற்கைக்கு மாறானதே. இன்றைய இயற்கை உணவுநிபுணர்கள் அதை ஒத்துக்கொள்வதில்லை. பாலில் குட்டிகள் விரைவாக வளர்வதற்கு தேவையான அதிகளவுச் சத்துக்கள் உள்ளன. அவை வளர்ந்த மனிதனுக்குத் தேவையில்லை என்பதுடன் தீங்கானவையும்கூட

ஆனால் காந்தி ஆட்டுப்பாலை பெரிதும் விரும்பி அருந்தியதுடன் அதை சாத்வீக உணவாக தொடர்ந்து பரிந்துரை செய்கிறார். தேவையான புரோட்டீனுக்கு பால் இன்றியமையாதது என அவர் நினைத்தார். அவரது ஓய்வில்லாத சுறுசுறுப்பால்தான் அவர் அந்தப்பாலை செரித்துக்கொண்டார். எளிமையான சாதாரண வாழ்க்கையை அவர் வாழ்ந்திருந்தால அந்தப்பால் அவரது அடிவயிற்றை பருக்கசெய்து நோயை விளைவிக்க ஆரம்பித்திருக்கும். இதுவும் காந்திய சிகிழ்ச்சையின் தவறான அம்சம்.

இயற்கைப்பொருட்களைக் கொண்டு சிகிழ்ச்சை அளிப்பதை காந்தி நம்பி செயற்படுத்திப் பார்த்தார். நீர்ச்சிகிழ்ச்சை, மண்சிகிழ்ச்சை ஆகிய இரண்டும் அவருக்கு பலசமயம் கைகொடுத்திருக்கின்றன. இதமான வெப்பம் கொண்ட நீரை அதிகளவில் உள்ளே செலுத்துவதன் வழியாக கழிவுகளை வெளியேற்றுதல். நீரில் குளிப்பதன் வழியாக உடலின் சமநிலையை பேணுதல் ஈரப்போர்வையை போர்த்திக்கொண்டு உடல்வெப்பத்தை தணித்தல் போன்றவற்றை அவர் செய்து பார்த்திருக்கிறார். அதேபோல உடலில் களிமண்ணைப் பொத்திக்கொண்டு செய்யும் மண்சிகிழ்சையையும் அவர் செய்து

நோக்கியிருக்கிறார்.

காந்தியின் சிகிழ்ச்சைமுறை அவர் செய்து பார்த்த சோதனைகளைச் சார்ந்த சில கருத்துக்களே ஒழிய அது ஒரு தனியான மருத்துவ நோக்கு அல்ல. அவர் பரவலாகப் பிறருக்கு அச்சிகிழ்ச்சையைச் செய்து பார்க்கவில்லை. ஒட்டுமொத்தமாக ஒரு நோக்கை உருவாக்கிக்கொள்ளும் அளவுக்கு அவரிடம் தரவுகள் இல்லை

காந்தியின் உலகப்பார்வை இயற்கையை ஒட்டிய ஒரு வாழ்க்கையை கற்பனை செய்வது. அந்த பார்வைக்கு உகந்த முறையில் ஒரு மருத்துவத்துக்காக அவர் முயன்றார். அவரது முறைகளை பின்னர் காந்தியர்கள் பெரிய அளவில் முன்னெடுக்கவில்லை.

காந்தியின் முறை இயற்கை சிகிழ்சைதான். இயற்கை சிகிழ்ச்சை என்பது உண்மையில் நோய்குணமாக்கல் அல்ல. நோயைத்தவிர்த்தல். நோயில்லாத வாழ்க்கையை நடைமுறையாக்கிக் கொள்ளுதல். அதைத்தான் காந்தியும் சொல்கிறார்.

காந்தியின் சிகிழ்ச்சை முறை என்பது விஷமொறுத்தல் மட்டுமே என்று சொல்லவேண்டும். [Detoxication] மேலைநாட்டு இயற்கைச்சிகிழ்ச்சைமுறையில் இது அலோபதியில் இருந்து கடன்பெற்றது. அவர்கள் பழைய ரசவாதிகளிடம் இருந்து பெற்றார்கள். உடலில் தேங்கிய விஷத்தைக் களைய நரம்புகளைவெட்டி ரத்தத்தை பெருகவிடுதல் அவர்களின் வழி. அதையே கொஞ்சம் சாந்தமான முறையில் இயற்கைவாதிகள் செய்தார்கள். அதன் அடிபப்டை எப்படியோ காந்திமனதில் ஏறிவிட்டது. அதையே செய்துகோண்டிருந்தார்

கழிவகற்றல் என்பது மிகமுக்கியமான ஒரு நோய்தீர்ப்புமுறையே. ஆனால் அதுவே எல்லாம் அல்ல. காந்தி அதை ஆழமாக நம்பினார். நீர் சிகிழ்ச்சை மண்சிகிழ்ச்சைமூலம் எல்லா உடல்விஷங்களையும் அகற்றி உடலைத் தூய்மை செய்துவிடலாம் என்று எப்போதும் செய்துகொண்டிருந்தார். என்ன விசித்திரம் என்றால் அது அவருக்குச் சரியாகவே வேலைசெய்தது. ஆகவே அதை விதியாக ஆக்கினார்.

அலோபதி நுண்ணுயிர்கள் – உடலின் எதிர்ப்பு என்ற இருமை சார்ந்து சிகிழ்ச்சையை வரையறை செய்கிறதுஆயுர்வேதம் வாதபித்தகபம் என்னும் மூன்று நிலைகளின் சமநிலையாக மும்மை சார்ந்து சிகிழ்ச்சையை வரையறை செய்கிறது. இவை முரணியக்கம் கொண்டவை ஆதலினால் மிகவும் சிக்கலாக வளரும் தன்மை கொண்டவை. நவீன இயற்கைச்சிகிழ்ச்சையும் இன்று உடலுக்கும் வெளியே உள்ள இயற்கைக்குமான உரையாடலாக சிகிழ்சையை உருவகித்துக்கொள்கிறது. காந்தியின் முறை மிக ஆரம்பகட்டத்திலேயே நின்றுவிட்ட ஒன்று.

அத்துடன் காந்தி இயற்கை சிகிழ்ச்சையின் அடிப்படையாகக் கருதப்படும் சில விஷயங்களை கருத்தில் கொள்ளவில்லை. ஒன்று மனம். அமைதியான மனம் என்பது நோயற்ற வாழ்க்கையின் அடிப்படையான தேவை. அதற்கான மனநிலைகளை உருவாக்கிக் கொள்வதும் மனப்பயிற்சிகள் மூலம் மனதை சீராக்குவதும் இயற்கை சிகிழ்ச்சையின் அடிப்படை.

காந்தி இயற்கைசிகிழ்ச்சையில் சமைக்காத உணவுக்குள்ள இடத்தை புரிந்துகொள்ளவில்லை. கூடுமானவரை சமைக்காத உணவு அல்லது முற்றிலும் சமைக்காத உணவு என்பது இயற்கை உணவும் இயற்கை சிகிழ்ச்சையும் பிரிக்க முடியாதவை. உப்பு, சீனி, வேகவைத்த மாவுப்பொருள் ஆகிய மூன்றும் மூன்று வெள்ளை அரக்கர்கள் என்றே இயற்கை உணவு கூறும். தூயநீரே மனிதனுக்கு ஆகச்சிறந்த பானம். காந்தி சமைத்த உணவை அதிகம் உண்டிருக்கிறார்.

தேன் கூட இயற்கை உணவில் தவறான ஒன்றே. அது இயற்கையில் வேறு நோக்கத்துக்காக உருவாக்கபப்ட்ட ஒன்று. அந்த அளவுக்கு செறிவூட்டப்பட்ட ஒன்று மனிதனுக்கு தேவையில்லாதது. ஆனால் காந்தி தேனை விரும்பி உண்டிருக்கிறார்

ஆனாலும் இயற்கை உணவை இன்று உலகமெங்கும் கைகொள்பவர்களுக்கு காந்தி ஒரு முக்கியமான முன்னுதாரணம் என்பதை மறுப்பதற்கில்லை. பல துறைகளில் காந்தி முக்கியமான தொடக்கங்களை உருவாக்கியிருக்கிறார். இந்தியாவைப் பொறுத்தவரை இயற்கை மருத்துவத்தை தொடங்கி வைத்தவர் அவரே

ஜெ

குஷ்னே யின் நூல் முழுமையாக

ஜஸ்டின் நூல் முழுமையாக: http://www.soilandhealth.org/02/0201hyglibcat/020162.Just.pdf

---

**உலகம் போற்றும் உத்தமர் - த. ஸ்டாலின் குணசேகரன்**

அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா சமீபத்தில் அங்குள்ள "ஆர்லிங்டன்' மாநிலத்தில் "வேக்பீல்டு ஹைஸ்கூல்' என்ற பள்ளிக்கு உரை நிகழ்த்தச் சென்றார். தனது சொற்பொழிவைத் தொடங்கும் முன், அப்பள்ளி மாணவர்களைச் சந்தித்துப் பேசினார். அம்மாணவர்களில் சிலர் ஒபாமாவிடம் சில கேள்விகளைக் கேட்டனர்.

லில்லி என்ற மாணவி, ஒபாமாவிடம், ""நீங்கள் யாருடனாவது அமர்ந்து சாப்பிட விரும்பினால் அது யாராக இருக்கும்?'' என்று கேட்டதோடு, ""அவ்வாறு நீங்கள் உடனிருந்து உணவருந்த விரும்பும் மனிதர் உயிரோடு இருப்பவராகவும் இருக்கலாம்; இறந்து விட்டவராகவும் இருக்கலாம்'' என்ற விளக்கத்துடன் அக்கேள்வியை எழுப்பினார்.

"அப்படி நான் உடன் உட்கார்ந்து உணவருந்த விரும்பும் மனிதர்கள் பட்டியல் என்று எடுத்துக் கொண்டால் அது ஒரு நீண்ட பட்டியலாக அமையும்'' என்று சொன்ன ஒபாமா, ""நான் நினைக்கிறேன்...நான் காந்தியுடன் அமர்ந்து சாப்பிடவே விரும்புவேன்'' என்று சொல்லிக் கொண்டே ""ஏனென்றால் அவர்தான் என்னுடைய உண்மையான நாயகன்'' என்றார்.

"காந்தியுடனான உணவுவேளை சந்திப்பு என்பது மிகக்குறைவான நேரத்தில் முடிந்துவிடும். ஏனெனில் காந்தி மிக எளிய



உணவை மிகக்குறைவான அளவில் உண்பவர்'' என்று மாணவர்களிடம் வேடிக்கையாகச் சிரித்துக்கொண்டே கூறிய ஒபாமா, ""எனக்குள் ஒரு பெரும் தாக்கத்தை உருவாக்கியவர் அவர்தான். டாக்டர் மார்டின் லூதர்கிங்கிற்கும் ஆதர்சம் காந்திதான். இந்தியாவில் வன்முறையற்ற அகிம்சா வழி சத்தியாக்கிரகப் போராட்டம் நடைபெற்றிருக்காவிட்டால், இங்கு அமெரிக்காவிலும் சிவில் உரிமைகளுக்கான சத்தியாக்கிரகப் போராட்டம் நடைபெற்றிருக்காது'' என்று அழுத்தமாகக் குறிப்பிட்டார்.

குடியரசுத் தலைவராகத் தேர்வு செய்யப்படுவதற்கு முன்பே செனட் உறுப்பினராக விளங்கிய ஒபாமா, ""தொடக்கத்திலிருந்தே காந்தியின் தாக்கம் எனக்குள் இருந்து கொண்டே இருக்கிறது. இதன் காரணமாகத்தான் என்னுடைய செனட் அலுவலகத்தில் எப்போதும் காந்தியின் படத்தை என் பார்வையில் படுமாறு வைத்துள்ளேன். அப்படம் எனக்கு மக்களிடமிருந்துதான் உண்மை விளைவுகள் கிடைக்கும் என்பதை நினைவூட்டிக் கொண்டே இருக்கிறது'' என்று சில ஆண்டுகளுக்கு முன்பே குறிப்பிட்டது இச்சூழலில் நினைவுகூரத்தக்கதாகும்.

1937-ம் ஆண்டு அமெரிக்கக் கறுப்பு இனத் தலைவர்கள் சிலர் இந்தியாவுக்கு வந்து காந்தியடிகளைச் சந்தித்தனர். அந்நாட்டில் கறுப்பு இன மக்களுக்கு எதிராக ஏவிவிடப்படும் கடும் அடக்குமுறை நடவடிக்கைகள் அனைத்தையும் காந்தியடிகளிடம் விளக்கிக் கூறினர். ""தாங்கள் அமெரிக்காவுக்கு வந்து எங்களுக்கு வழிகாட்ட வேண்டும்'' என்று வேண்டினர். ""என்னுடைய போராட்டம் இந்தியாவில் வெற்றிபெற்ற பிறகுதான் உங்களுக்கு நான் உதவி செய்ய இயலும்'' என்று சொல்லிவிட்டு ""அப்பழுக்கற்ற அகிம்சைச் செய்தி உங்கள் நாட்டுக் கறுப்பு இன மக்கள் மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கும்'' என்ற வாழ்த்துச் செய்தியைத் தெரிவித்து, அமெரிக்க கறுப்பு இனத் தலைவர்களுக்கு விடை கொடுத்தார் காந்தியடிகள்.

அடிமைப்பட்டுக் கிடந்த அமெரிக்கக் கறுப்பு இன மக்களுக்குப் பிற்காலத்தில் தலைமையேற்ற மார்ட்டின் லூதர்கிங், இறையியல் கல்லூரி மாணவராக இருந்தபோது, டாக்டர் மொர்டெகாய் ஜான்சன் என்பவர் அக்கல்லூரியில் உரை நிகழ்த்தினார். அவரது உரையின் ஊடே காந்தியடிகளின் வாழ்க்கை குறித்தும், அவரது சமூகவியல் சிந்தனைகள் குறித்தும் விளக்கமாகவும் உருக்கமாகவும் எடுத்துச் சொன்னார்.

"அவருடைய பேச்சு புதுமையாகவும், சிந்தனையைத் தூண்டுவதாகவும் இருந்தது. நான் உடனே ஒரு புத்தகக் கடைக்குச் சென்று மகாத்மா காந்தியைப்பற்றி அரை டஜன் புத்தகங்களை வாங்கிப் படித்தேன்'' என்று தனது போராட்ட அனுபவம் குறித்து குறிப்பிட்டுள்ளார் மார்ட்டின் லூதர்கிங்.

"காந்தியின் தலைமையில் நடைபெற்ற அகிம்சைப் போராட்டங்கள் என்னை ஈர்த்தன. காந்தியின் தத்துவத்தை ஆழமாகப் படித்தபோது அன்பின் வலிமையைப்பற்றி என்னிடமிருந்த அவநம்பிக்கை படிப்படியாகக் குறைந்தது. விடுதலைக்குப் போராடுகின்ற ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, காந்தியின் அகிம்சைதான் மிகவும் வன்மையான ஆயுதம் என்பதை நான் புரிந்து கொண்டேன்'' என்று பிற்காலத்தில் மார்ட்டின் லூதர்கிங் எழுதியுள்ளார்.

1959-ம் ஆண்டு மார்ட்டின் லூதர்கிங்கும், அவரது மனைவியும் இந்தியா வந்திருந்தபோது, இந்தியாவில் காந்தியின் வாழ்க்கை தொடர்புள்ள இடங்களுக்கும், காந்தி ஆசிரமங்களுக்கும் நேரில் சென்று பார்த்தனர். தமிழகத்திற்கும் வந்து பல இடங்களைப் பார்த்துச் சென்ற லூதர்கிங் தம்பதியருக்கு, நிறைவாக தில்லியில் வரவேற்பளிக்கப்பட்டது. அப்போது உரையாற்றிய லூதர்கிங், ""நான் ஏசுநாதரிடமிருந்து ஊக்கத்தையும், மகாத்மா காந்தியிடமிருந்து போராட்ட முறையையும் பெற்றேன்'' என்று உணர்ச்சிகரமாகக் கூறினார்.

1969-ம் ஆண்டு ஏப்ரல் 4-ம் தேதி தனது முப்பத்தொன்பதாவது வயதில் கொடியவன் ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார் அமெரிக்க கறுப்பு இன மக்களின் விடிவெள்ளியாகத் திகழ்ந்த மார்ட்டின் லூதர்கிங். சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற லூதர்கிங், காந்தியடிகளின் வழியிலேயே மரணத்தையும் அடைந்தார்.

பிரெஞ்சு நாட்டைச் சார்ந்த புகழ்மிக்க வரலாற்றியல் ஆய்வாளரும், கீர்த்திமிக்க எழுத்தாளருமான ரோமெய்ன் ரோலந்து, காந்தியடிகளை நேரில் சந்தித்ததோடு, உலகின் பல பாகங்களுக்குச் சுற்றித்திரிந்து ஆதாரங்களைத் திரட்டி காந்தியடிகளின் முழுமையான வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்றை எழுதியுள்ளார்.

"இந்திய தேசிய வரலாறு பிற்காலத்தில் எழுதப்படுகின்றபோது, மகாத்மா காந்தி ஒரு தேசிய வீரராக மட்டும் போற்றப்பட மாட்டார். இந்த யுகத்தின் வரலாற்றில் அவருடைய புகழ்மிக்க வாழ்க்கையும் போற்றப்படும். அவர் இந்திய மக்களின் ஒற்றுமை உணர்ச்சியையும், அவர்களுடைய சக்தியையும், சுதந்திர தாகத்தையும் பிரதிபலிக்கிறார். அத்துடன் மேலைநாட்டினர் மறந்துவிட்ட அல்லது கைவிட்ட ஏசுநாதருடைய உபதேசத்தை அவர் மீண்டும் புதுப்பிக்கிறார். மனித குலத்தின் ஞானிகள், புனிதர்களின் வரிசையில் அவருடைய பெயர் இடம்பெற்றிருக்கிறது. உலகத்தின் எல்லா நாடுகளிலும் அவருடைய பெயர் இடம்பெற்றிருக்கிறது. அனைத்து நாடுகளிலும் அவரது ஒளி பரவியிருக்கிறது'' என்று ரோமெய்ன் ரோலந்து காந்தியடிகளைப் பற்றிய தனது வரையரையை வெளியிட்டுள்ளார்.

காந்தியடிகளைப் "புனிதப் போராளி' என்று நெகிழ்ச்சியோடு குறிப்பிடுகிறார் தென்னாப்பிரிக்காவின் விடுதலைப் போராட்டத் தலைவர் நெல்சன் மண்டேலா.

"காந்தியைப் பெற்றெடுத்த நாடு இந்தியா; தத்தெடுத்த நாடு தென்னாப்பிரிக்கா'' என்று காந்தியடிகளை உரிமை கொண்டாடும் நெல்சன் மண்டேலா, ""ஆப்பிரிக்கக் கண்டத்தில் நடைபெற்ற விடுதலைப் போராட்டத்தில் காந்தி ஒரு பெரும் செல்வாக்கைச் செலுத்தினார். காந்தியின் போராட்ட முறையை என்னால் எந்த அளவுக்கு அதிகபட்சம் பயன்படுத்த முடியுமோ-அந்த அளவுக்கு முழுமையாகப் பயன்படுத்தினேன். ஆனாலும் எங்களை எதிர்த்துத் தாக்கியவர்களின் தாக்குதலைக்

கொஞ்சமும் சமாளிக்க முடியாத ஒருகட்டம் வந்தபோது, அகிம்சை வழியில் மட்டும் போரிட முடியாத நிர்பந்தம் எங்களுக்கு ஏற்பட்டுவிட்டது'' என்று கூறிய மண்டேலா, "தாக்குதல்' என்ற ஒரே மொழிதான் ஏகாதிபத்திய வெறியர்களின் காதுகளுக்குக் கேட்கிறது. எந்த ஒரு நாடும் கொஞ்சநஞ்ச தாக்குதல்கூட இல்லாமல் விடுதலைப் போராட்டத்தில் வெற்றி பெறவில்லை'' என்று 1962-ம் ஆண்டு நடைபெற்ற ஒரு மாநாட்டில் நெல்சன் மண்டேலா தனது உரையில் குறிப்பிட்டார்.

"பெரும் பகுதி மக்கள் பட்டினி கிடக்கையில் சிலர் மட்டும் சாப்பிட வழிவகை செய்யும் சமுதாயத்தைப் பார்க்கிறபோது, வேலையின்றித் தவிக்க வைக்கும் பொருளாதாரச் சூழலைக் கவனிக்கிறபோது உலகமயமாக்கலுக்கு மாற்றாக காந்திய மாற்று பற்றி சிந்திக்கத் தூண்டுகிறது எங்களது நிலைமை'' என்று இக்காலச் சூழல் குறித்து நெல்சன் மண்டேலா கருத்துத் தெரிவித்துள்ளது மிகவும் கவனிக்கத்தக்கதாகும்.

லியோ டால்ஸ்டாய் உலகப்புகழ் பெற்ற ரஷிய எழுத்தாளர். இலக்கியத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டபோது அவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. எழுத்தாளர் என்ற வட்டத்தையும் தாண்டி, உலகெங்கும் உள்ள பல்துறைச் சான்றோர்களால் ஒரு ஞானியாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்.

1909-ம் ஆண்டே டால்ஸ்டாய்க்கும், காந்தியடிகளுக்குமிடையில் கடிதப் போக்குவரத்து நடைபெற்றது. இளம் வயதிலேயே மூத்த அறிஞராக விளங்கிய டால்ஸ்டாயின் நன்மதிப்பிற்குரியவராக விளங்கிய காந்திக்கு தனது கடிதத்தில் டால்ஸ்டாய், ""நீங்கள் முக்கியமான விஷயங்களைப்பற்றி எழுதியிருப்பதால் அதிகமான அக்கறையுடன் அந்தப் புத்தகத்தைப் படித்தேன். சாத்வீகமான எதிர்ப்பு மிகவும் முக்கியமான பிரச்னை. இது இந்தியாவுக்கு மட்டுமல்ல, மனித சமூகத்துக்கே!'' என்று குறிப்பிட்டுள்ளார்.

தென்னாப்பிரிக்க வாழ்க்கையில் டால்ஸ்டாய் பெயரில் பண்ணைகளை அமைத்து, சத்தியாக்கிரகப் போராட்டத்தின் பயிற்சிக் களமாக அப்பண்ணைகளைப் பயன்படுத்தினார் காந்தியடிகள்.

உலகத்தின் கவனத்தை தனது நகைச்சுவை ததும்பிய நடிப்பாற்றலாலும், நல்ல கருத்துகளை நானிலமெங்கும் உள்ள மக்கள் நெஞ்சங்களில் தனது அளப்பரிய ஆற்றலினால் விதைத்ததாலும் புகழ்பெற்று விளங்கிய நடிகர் சார்லி சாப்ளின், பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சிலை நேரில் சந்தித்து, காந்தியடிகள் கைது செய்யப்பட்டது குறித்து நேருக்குநேர் ஆழமாக விவாதித்தார்.

அப்போது காந்தியடிகள் கைது செய்யப்பட்டது குறித்து தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்ததோடு, ""ஒரு காந்தியைக் கைது செய்தால் பலநூறு காந்திகள் முளைப்பார்கள்'' என்று சர்ச்சிலின் முன்னிலையில் முகத்திற்கு முகம் தெரிவித்தார் சார்லி சாப்ளின்.

இத்தகைய சாப்ளின், இரண்டாவது வட்டமேஜை மாநாட்டுக்காக 1931-ல் லண்டனுக்கு காந்தியடிகள் சென்றிருந்தபோது, மகாத்மாவைச் சந்திக்க மிகுந்த சிரத்தையெடுத்து, லண்டனிலிருந்த சரோஜினிநாயுடு மூலமாக நேரம் ஒதுக்கித் தரப்பெற்றார். காந்தியடிகளின் நோக்கம், லட்சியப் பயணம் குறித்த பல கேள்விகளை பேட்டி வடிவில் கேட்டு, விளக்கம் பெற்று பெரும் திருப்தியடைந்தார் சாப்ளின்.

உலகம் முழுவதும் உள்ள மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் மகாத்மா காந்தியடிகளின் பிறந்த நாளாம் அக்டோபர் 2-ம் தேதியை ஆண்டுதோறும் "சர்வதேச வன்முறை மறுப்புதின'மாகக் கொண்டாட ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச்சபை 2007-ம் ஆண்டு ஜூன் மாதம் 15-ம் தேதி முடிவெடுத்துள்ளது. ஆம்... நம் தேசப்பிதாவை உலகமே ஒப்புக்கொண்டிருக்கிறது.

---

**காந்தியம் வறட்டுச் சித்தாந்தமில்லை தமிழருவி மணியன்**
**"எனக்கு மட்டும் அதிகாரம் இருக்குமானால் வகுப்புவாதத்தையும் மதவெறியையும் வெறுப்புணர்வையும் பகையையும் வளர்க்கக்கூடிய எல்லா எழுத்துகளையும் தீண்டத்தகாதவையாக அறிவிப்பேன**

என்னைப் பொறுத்தவரை கடவுள் என்பது வாய்மையும் அன்பும்தான். கடவுள் என்பது ஒழுக்கநெறியும் அறவழியும்தான். கடவுள் என்பது அச்சமின்மைதான். வெளிச்சத்திற்கும் வாழ்க்கைக்குமான மூல ஊற்றே கடவுள். நான் ஒரு சர்வாதிகாரியாக இருந்தால், மதமும் அரசியலும் தனித்தனியாகவே இயங்கும். என் மதத்திற்காக நான் உயிரையும் தருவேன். ஆனால், அது என் சொந்த விவகாரம். அதில் அரசுக்கு எந்தவொரு வேலையும் இல்லை' என்று பிரகடனம் செய்தவர் நம் தேசப்பிதா.

"பலாத்காரத்திலும், பொருளியல் செல்வத்திலும் மேலை நாடுகள் அசைக்க முடியாத ஆழமான நம்பிக்கை கொண்டுள்ளன. அவை உலக அமைதிக்காகவும், யுத்தக் கருவிகளை ஒழிப்பதற்காகவும் எவ்வளவு உரக்கக் கூவினாலும் அவற்றுக்கு மாறான சக்திகளின் குரலே ஓங்கி ஒலிக்கும்.

மிருகபலத்தைவிட ஆன்மிக சக்தியே அதிக வலிமை வாய்ந்தது என்பதை ஆயுதமற்ற மக்களால்தான் நிரூபிக்க முடியும். மிருக பலமற்ற மேன்மையான மனிதன், எவ்வித ஆயுதமும் இல்லாமலே உலகைத் தன்வசமாக்க முடியும் என்பதை உறுதிப்படுத்தும் நாள் விரைவில் வரத்தான் போகிறது' என்று ஆழ்ந்த நம்பிக்கையுடன் அகிலத்திற்கு அகிம்சையைப் போதித்தவர் நம் அண்ணல்.

"உலகில் தீண்டத்தகாதவர்கள் என்று எவருமே இல்லை. ஒரே நெருப்பின் சுடரொளிதான் ஒவ்வொருவரும். மனிதராய்ப் பிறந்த எவரையும் தீண்டத்தகாதவரென்று ஒதுக்கிவைப்பது மாபெரும் தவறு என்ற மகாத்மாவிடம் ஒரு வெளிநாட்டுப் பத்திரிகையாளர், "இந்தியாவின் சர்வாதிகாரியாக உங்களை ஒரேயொரு நாள் மட்டும் நியமித்தால் என்ன செய்வீர்கள்?' என்று கேட்டார். "தில்லி வைசிராய் மாளிகையின் குதிரை லாயத்தைவிட மோசமாக இருக்கும் அரிஜனக் காலனியின் குடிசைகளைச் சுத்தம் செய்வதில் அந்த நாளை நான் செலவழிப்பேன்' என்றார் காந்தியடிகள்.

பிர்லா ஒருமுறை காந்தியிடம், "மனிதன் உண்டு, உடுத்து, இன்பமாய் இந்த மண்ணில் வாழ எவ்வளவு பணம் தேவைப்படும்?' என்று கேட்டபோது, "எவ்வளவுக்குள் சுகமாகவும், நலமாகவும் வாழ முடியுமோ, அவ்வளவு இருந்தால் போதும்' என்று பதிலளித்தார்.

"நிறையச் சம்பாதித்து, அதிகமாகச் செலவழிப்பதை நீங்கள் ஏன் எதிர்க்கிறீர்கள்?' என்றார் பிர்லா. "இயற்கை அன்னை ஒவ்வொருவருக்கும் சாதாரண இன்ப வாழ்வுக்கு வேண்டிய பொருள்களைத்தான் உற்பத்தி செய்கிறாள். மனிதன் விரயமாக்குவதற்காக அவள் எதையும் தருவதில்லை. யாராவது ஒருவன் தன்னுடைய தேவைக்கு மேல் பயன்படுத்தினால், அடுத்தவனுக்கு அது இல்லாமல் போய்விடும். தேவைக்கு மேல் பயன்படுத்துபவன் என்னளவில் ஒரு கொள்ளைக்காரன்' என்று தார்மிக ஆவேசத்துடன் பதில் தந்தார் காந்தி.

காரல் மார்க்ஸ் காண விரும்பிய சமத்துவமும், காந்தி சமைக்கத் துடித்த சர்வோதயமும் வர்க்கபேதங்களற்ற வாழ்க்கை முறைதான். எந்த மாற்றமும் வன்முறையால் வரக்கூடாது என்று வலியுறுத்திய மகாத்மா, "நான் வன்முறை தவிர்த்த ஒரு கம்யூனிஸ்ட்' என்றார். ஏழை எளியவர்களின் நலன் காக்கும் தர்மகர்த்தாக்களாக ஒவ்வொரு பணக்காரரும் பரிணமிக்க வேண்டும் என்பது காந்தியக் கனவு. ஆனால் அவருடைய மேலான கனவு இன்றுவரை நிறைவேறாத கனவாகவே நீடிப்பதுதான் வேதனைக்குரியது.

"ஒரு விஷயம் மட்டும் மிக நிச்சயம். காந்தியின் ஆன்மிக சக்தி உறுதியாக ஒருநாள் வெற்றிபெறும். மறுபடியும் மறுபடியும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தோன்றியதைப் போன்று புதிதாக, இயேசுவாக அந்த சக்தி மீண்டும் தோன்றிக் கொண்டே இருக்கும். புதிய சமுதாயத்துக்கு, புதியதோர் பாதைக்கு அந்த அருள்சக்தி நம்மை அழைத்துச் செல்லும்' என்று நிறம் மாறாத நிஜமான நம்பிக்கையுடன் அழுத்தம் திருத்தமாக ஆருடம் சொன்னவர் பிரெஞ்சுப் பேரறிஞர் ரோமன் ரோலண்ட். அவர்தான் மகாத்மாவை "சிலுவை இல்லாத இயேசு' என்று மனம் நெகிழ்ந்து வருணித்தவர்.

ரோமன் ரோலண்டுக்கு நம் மகாத்மாவின் வாழ்க்கை முறையில் இருந்த ஆழமான நம்பிக்கை, இந்தியர்களாகிய நமக்கு இல்லாமல் போனதுதான் இந்த மண்ணின் மிக மோசமான சாபம். காந்தியப் பாதையில் கால் பதித்து நடப்பது கடினமான காரியம் என்ற முடிவுக்கு நாம் எப்போதோ வந்தாயிற்று. வாழ்க்கையின் உன்னதமான விழுமியங்களின் மீதிருந்த பிடிப்பும் பற்றும் மேலைநாட்டுக் கலாசாரப் பாதிப்பால் நம்மிடமிருந்து முற்றாகப் பறிபோய்விட்டன. பணத் தேட்டமும், உடல் சார்ந்த இன்ப நாட்டமும்தான் நம் வாழ்வின் அடிப்படை நோக்கங்களாகச் சரிந்துவிட்டன.

திருக்குறள் போன்ற நீதிநூல்களைக்கூட நாம் அழகாகப் பேசவும், எழுதவும் மட்டுமே பயன்படுத்துகிறோம். அவற்றைப் பின்பற்றும் எண்ணம் நமக்கு எள் மூக்கின் முனையளவும் இல்லை. நம்மை நெறிப்படுத்தத் தூண்டும் எந்த நற்செய்தியையும் நாம் செவிகொடுத்துக் கேட்கவும் தயாராக இல்லை. தற்சோதனை முயற்சிகளில் ஈடுபட இன்று யாருக்கும் நேரமில்லை. எளிமையும், நேர்மையும், தூய்மையும் துவங்க மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து மறைந்த மனிதர்களுக்கு "மகாத்மா' பட்டமளித்து, அவர்களுடைய உருவப்படத்தைச் சட்டத்தில் சிறைவைத்துக் கற்பூரம் காட்டுவதோடு நாம் கதையை முடித்துவிடுகிறோம். "நாமெல்லாம் தவறு செய்யும் சாதாரண ஆத்மாக்கள். நம்மால் எப்படி மகாத்மாக்களாக மாற முடியும்?' என்று நமக்கு நாமே நியாயம் கண்டு நிறைவடைகிறோம். எந்த இழப்பும் வலியும் இல்லாமல் பெருக்கெடுத்துப் பாயும் நீராய், கட்டறுந்து வீசும் காற்றாய் மனம் போன போக்கில் நாம் வாழப் பழகிவிட்டோம்.

"என்னுடைய வாழ்க்கையே உலகுக்கு நான் வழங்கும் என் செய்தி' என்று சொன்ன மகாத்மாவிடம் நாம் எளிதாகப் பின்பற்றுவதற்கான எந்தச் செய்தியும் இல்லையா? "காமத்தோடும், கடவுளோடும் ஒரே நேரத்தில் நாம் கைகோர்த்து நடக்க முடியாது' என்ற காந்தி, "சகமனிதர்களுக்குத் தொண்டாற்றுவதே சமயத்தின் சாரம்' என்று விளக்கிய அண்ணல், தன் மனைவி பக்கத்தில் இருந்தபோதே, தன்னுடைய முப்பத்தேழாவது வயதிலிருந்து பெண்ணின்பம் துறந்து புலனடக்கம் காத்தவர். அவரைப்போல் நாமும் பெண்ணின்பம் துறத்தல் சிரமந்தான். ஆனால், அவரைப்போல் தூய்மையான அகவாழ்வும், நேர்மையான பொதுவாழ்வும் நடத்த நம்மால் இயலாதா?

"காந்தியம் என்று ஒன்றில்லை. எனக்குப் பின்னால் எந்தவொரு தனித்துவத்தையும் விட்டுச் செல்ல நான் விரும்பவில்லை. எந்தப் புதிய கொள்கையையோ, கோட்பாட்டையோ உருவாக்கியதாக ஒருநாளும் நான் கூறவில்லை. நித்தியமான சத்தியத்தை நம் அன்றாட வாழ்க்கைச் சிக்கல்களில் இணைக்க என்னுடைய வழியில் முயன்றதுதான் நான் செய்தது' என்று அளவற்ற அடக்கத்துடன் சொன்னவர் அண்ணல்.

வெறுப்புக்கு மாற்றாக அன்பு, போட்டிக்குப் பதில் ஒத்துழைப்பு, தன்னலத்திற்கு எதிராகத் தியாகம், புற ஆரவாரத்திற்கு இடமில்லாத அகநாகரிகம் என்பவைதான் காந்திய வாழ்க்கை நெறிகள். மனித நேயம், ஒழுக்கம், சமூக அன்பு ஆகியவை காந்திய லட்சியங்கள். சத்தியம், அகிம்சை, பிரம்மசரியம், திருடாமை, சமயநல்லிணக்கம், சுதேசி, தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு ஆகியவை காந்திய விரதங்கள். இந்த விரதங்களுள் பிரம்மசரியம் போற்றுவதும், உடைமையற்று வாழ்வதும் சாதாரண மனிதர்களுக்கு இயலாமற் போகலாம். ஆனால், ஒருத்தியோடு வாழ்வதும், அவசியத் தேவைகளுக்கேற்ப அளவோடு பொருள் சேர்ப்பதும் ஒருவர் இன்பமாய் இருக்கப் போதாதா?

பொதுவாழ்வில் நிர்மலமான நேர்மையே மகாத்மாவின் முக்கிய இலக்கு. அரசியல் தலைமை ஏற்பவர்கள் உறவுகளின் பிடியிலிருந்து விலகி நிற்க வேண்டும் என்பதைத் தன் வாழ்வின் மூலம் உலகிற்கு உணர்த்தியவர் அவர். அதனால்தான் அவர் வழி நடந்த பெருந்தலைவர், பெற்ற தாயைக்கூடப் பக்கத்தில் வைத்துப் பராமரிக்கவில்லை. உடைமையற்றவனிடம்தான் உண்மையான அன்பு பிரவாகமாகப் பெருக்கெடுக்கும் என்பது காந்திய நம்பிக்கை.

கள்ளுண்ணாமை குறித்து வள்ளுவன் வலியுறுத்தியதும், மதுவிலக்கிற்காக மகாத்மா கொடி பிடித்ததும் இன்று அர்த்தமற்றுப் போய்விட்டன. காந்தி-இர்வின் ஒப்பந்தம் மூலம் சட்டமறுப்பு இயக்கம் நிறுத்தப்பட்டபோதும், மதுக்கடைகளின் முன்பு மறியல் நடப்பது மட்டும் நிற்காது என்று அறிவித்தவர் மகாத்மா. மதுவின் பிடியிலிருந்து விடுபட்டாலொழிய, மக்கள் வறுமையிலிருந்து

மீள முடியாது என்ற உண்மையைச் செல்லுமிடமெல்லாம் கொண்டு சேர்த்தவர் அண்ணல்.

ஆனால், இன்று மதுவை "ராஜ திரவம்' என்றும், "மகாகவிகளின் தாய்ப்பால்' என்றும் வாழ்த்தும் கூட்டம் வளர்ந்துவிட்டது. நம் மாநில அரசின் மொத்த வருவாயில் நான்கில் ஒரு பங்கு மதுக்கடைகளிலிருந்துதான் வந்து சேர்கிறது. பாரத தேசத்தின் மாநில அரசுகள் அனைத்தும் தவறுகளுக்கு நியாயம் கற்பித்து, ஒழுக்கக்கேடுகளுக்கு ஒப்பனை செய்கின்றன. நம் மண்ணுக்குச் சொந்தமான மரபார்ந்த ஒழுக்கங்களை அவை வருவாய்க்காக இழக்கச் சம்மதிக்கின்றன. தெருவெங்கும் மதுக்கடைகள் திறந்து மகாத்மாவின் நினைவுக்கு நல்லஞ்சலி(!) செலுத்தும் மாநில அரசுகள், வருவாய்ப் பெருக்கத்துக்காக விலை மகளிர் விடுதிகளை நடத்தாமல் விட்டதே பெரிய புண்ணியம்.

"சபி பூமி கோபால்கி, எல்லா நிலங்களும் ஆண்டவனுடையது. அதனால் அவன் அளித்த அனைத்து உடைமைகளும் அனைவருக்கும் பொதுவானது. தன் தேவைக்கு மேல் ஒருவன் சேர்த்திருந்தால், அதை அவன் தேவையுள்ளவர்களுக்குத் தானாகவே முன்வந்து பகிர்ந்தளிக்க வேண்டும். போதுமென்ற நல்லுணர்வு நம்மிடையே பெருக வேண்டும். சொத்துடைமை ஓரெல்லைக்குள் கட்டுப்பட்டால்தான் ஏழைகளுக்கு எளிதில் உணவு கிடைக்கும்' என்ற காந்தியின் "தர்மகர்த்தா கொள்கை' மனிதர்களின் நல்லியல்பிலும், சமுகத்தின் உயர்நெறிகளிலும் நம்பிக்கை வைத்தது. ஆனால், அந்த நம்பிக்கை இன்று அடியோடு பொய்த்துப் போனது.

தேவைகளைக் குறைத்து எளிமையாக வாழ்வது ஓர் உன்னதமான தவம். மகாத்மாவைப் போல் மண் குடிசையில் நாம் அரை நிர்வாண ஆடையில் வாழவேண்டிய அவசியமில்லை. தேவையற்ற ஆடம்பரங்களைத் தவிர்த்தாலே போதும். ஆசை வலையில் அன்றாடம் சிக்கிச் சீரழியும் சிலந்திகள் நாம். நமக்கு எவ்வளவு கிடைத்தாலும் நிறைவு வராது. அதனால்தான், காந்தியம் கவைக்கு உதவாது என்று கை கழுவிவிட்டோம்.

அதிகாரப் பரவல், கிராமப் பொருளாதாரம், சிறுதொழில் வளர்ச்சி, சர்வோதய அரசு, தாய்மொழிக்கல்வி என்ற காந்தியக் கட்டுமானங்கள் அனைத்தும் காலநடையில் தகர்ந்துவிட்டன. "எனக்குப் பின்னால் என் மொழியில் நேரு பேசுவார்' என்று நம்பிக்கையோடு பிரகடனம் செய்தார் நம் தேசப்பிதா. மகாத்மா நினைத்தபடி நேரு, காந்தியப் பாதையில் தடம் பதிக்கவில்லை. காந்தியின் அரசியல் வாரிசே காந்தியத்தைக் கை கழுவிய பின்பு, அவருடைய மொழியில் இன்று யார் பேசப்போகிறார்கள்?

காந்தியம் என்பது ஒரு வறட்டுச் சித்தாந்தமில்லை. அது ஓர் உயர்ந்த வாழ்க்கை முறை. அது உடல்பலத்தைவிட ஆன்மபலத்தில் அதிக நம்பிக்கை கொண்ட வாழ்வியல் நெறி. வாழ்க்கை முழுவதும் உண்மையாய் இருப்பதும், எல்லா உயிர்களிடத்தும் அன்பாய் இருப்பதும்தான் காந்தியத்தின் அடித்தளம்.

எவரிடத்தும் பகைமை பாராட்டாத இதயம் இருப்பவர்தான் காந்தியவாதியாக இருக்க முடியும். வசதிகள் குவிந்த போலியான வாழ்க்கைத் தரத்தைவிட, அடிப்படைத் தேவைகளில் மன நிறைவு கொள்ளும் வாழ்வியல் தரமே காந்தியத்தின் ஜீவநாடி. கடையனுக்கும் கடைத்தேற்றம் தரும் சர்வோதய சமத்துவ சமுதாயமே காந்தியத்தின் ஜீவலட்சியம். இன்று காந்தியும் இல்லை; காந்தி வழி நடந்த காமராஜும் இல்லை. காலம் மீண்டும் ஒரு காந்தியையும், காமராஜையும் நிச்சயம் காட்டும்.

---

**காணாமல்போன காந்தி**
**வாஸந்தி**

மஹாத்மா காந்தி என்ற மாமனிதர் திடீரென்று இன்று உலகத்தின் பார்வையில் இருக்கிறார். அமெரிக்க அதிபர் பாராக் ஒபாமாவுக்கு நன்றி. இனிமேல் நமது இளைஞர்களுக்கும், பள்ளிச் சிறுவர் சிறுமியருக்கும் அவர் யார் என்று அறியும் ஆவல் ஏற்படலாம். சென்ற மாதம் அமெரிக்காவின் ஆர்லிங்டன் வர்ஜீனியாவில் உள்ள வேக்பீல்ட் உயர்நிலைப் பள்ளியில் ஒரு மாணவி அதிபர் ஒபாமாவை ஒரு விசித்திரமான கேள்வி கேட்டாள். " ஹாய்! என் பெயர் லிலி. உங்களுக்கு யாருடனாவது டின்னர் சாப்பிட விருப்பம் என்றிருந்தால், உயிருடன் இருப்பவரோ இறந்தவரோ, அது யாருடன் இருக்கும்?" ஒபாமா யோசித்தார். அது பெரிய லிஸ்டாக இருக்குமே? "என்று சிரித்தார். ஆனால் அடுத்த நிமிடம் மிக சீரியஸ்ஸாகச் சொன்னார். " அது காந்தியாக இருக்கும் என்று நினைக்கிறேன். அவர்தான் எனது நிஜமான ஹீரோ". கூடவே சிரிப்புக்கிடையே சொன்னார்." ஆனால் அது மிக எளிய குறைந்த உணவாக இருக்கும். ஏனென்றால் அவர் நிறைய சாப்பிடமாட்டார்."

ஒபாமா அப்படிச் சொன்னது வெறும் வேடிக்கைப் பேச்சல்ல என்பது அவர் சமீபத்தில் பேசியது விளக்குகிறது. உலக அஹிம்சை தினமாகக் கொண்டாடப்படும் காந்தியின் பிறந்தநாளான அக்டோபர் 2-ஆம் தேதியன்று வாஷிங்டனில் சொன்னது அதிக ஆழம் கொண்டது. மஹாத்மா காந்தியின் இந்தியாவில் இன்றைய அமெரிக்காவின் வேர்கள் இருக்கின்றன" என்றார். " 1959-ஆம் ஆண்டு மார்டின் லூதர் கிங் [ஜூனியர்] இந்தியாவுக்குப் புனிதப்பயணம் செய்தபோது, காந்தியின் உபதேசங்களாலும் கொள்கைகளாலும் வசீகரிக்கப்பட்டார். அதன் காரணமாய் அவர் துவங்கிய ஸிவில் உரிமை இயக்கம் அமெரிக்க சமூகத்தையே மாற்றியது. அமெரிக்கர்கள் மஹாத்மா காந்திக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறார்கள்." காந்தி இப்போது இந்தியர்களுக்கு வெறும் ஒரு சரித்திரம் என்று அவர் அறிந்திருப்பார். நமக்கு நினைவு படுத்துவதுபோல இருந்தது அவர் மேற்கொண்டு சொன்னது. " உலகம் முழுவதிலும் அரசியல் இயக்கங்களுக்கும் மனிதர்களுக்கும் தொடர்ந்து ஊக்கமும் உத்வேகமும் அளித்துவரும் அவரது அஹிம்சாவாதத்தைப்பற்றி நாம் சிந்திக்கவேண்டிய மிக முக்கியமான தருணம் இது. அஹிம்சை முறை எதிர்ப்பின் மூலம் மாறுதல் ஏற்படுத்திய, தர்மத்தை நிலைநாட்டுவதற்காகவே வாழ்ந்த , எல்லா இனத்தையும் அரவணைத்த அந்த மகானின் பிறந்தநாளைக் கொண்டாடும் இந்திய மக்களுடன் அமெரிக்க மக்களும் இணைகிறார்கள். காந்தியின் கொள்கைகளைக் கடைப்பிடிக்கவும் மானுட கண்ணியத்தைக் கொண்டாடவும் உறுதி பூணுவோம்".

அக்டோபர் 2-ஆம் தேதி காந்தி ஜெயந்தி என்று தேசிய விடுமுறை நாளாக அறிவித்ததில் காந்தியின் நினைவுநாள் அன்று இந்தியர்களின் எண்ணங்களில் அன்று காந்தி இடம்பெறுவதுகூட இல்லை. சினிமா பார்ப்பதற்கும் அல்லது பிக்னிக் போவதற்கும் அல்லது சும்மா சோம்பிப் படுப்பதற்கு மட்டுமே பயன்படுவதாக, மாறிப்போனது. எப்பேர்பட்ட ஒரு மாமனிதர் இந்த மண்ணில் வாழ்ந்தார் என்பதை வெளிநாட்டவர் பிரமிப்புடன் பேசும்போது கூட நமக்கு அதன் முழு தாத்பர்யமும் அதன்



பரிணாமமும் விளங்குமா என்பது சந்தேகம். ட்விட்டர் ப்ளாக் மூலம் சர்ச்சையில் சிக்கிய சசி தாரூர் இந்த விடுமுறை அளிப்பது பற்றி சொன்னது கவனத்திற்குரியது. " அன்று ஏன் விடுமுறை அளிக்கப்படவேண்டும்?" என்று கேட்கிறார் அவர். "காந்திக்கு உண்மையான அஞ்சலி செலுத்த வேண்டுமென்றால் அவருக்கு சந்தோஷம் அளிக்கும் வகையில் நாம் அன்று அதிகமாக உழைக்கவேண்டும். உழைப்பு என்பது வழிபாடு என்று சொன்னவர் காந்தி. அன்று ஏன் மக்கள் சோம்பி வீட்டில் உட்காரவேண்டும்?" வெளிநாடுகளிலும் ஐநாவிலுமே இதுவரை பணியாற்றியிருக்கும் சசி தரூருக்கு இந்தியர்கள் அனுபவிக்கும் அதிக பட்ச விடுமுறை நாட்கள் ஆச்சரியமாக இருக்கிறது. வருடத்தில் பாதி நாட்களே நாம் வேலை செய்கிறோம் என்கிறார். மதரீதியான விடுமுறைகளை அவர் குறிப்பிடவில்லை. தலைவர்களின் பெயரில் வரும் விடுமுறைகள் அனாவசியம் மட்டுமல்ல அந்த நாட்களை வீணாகக் கழிப்பதில் எந்த அர்த்தமும் இல்லை என்கிறார். அப்படிக் கழிப்பது அத்தலைவர்களை அவமானப்படுத்துவது போல என்று அவர் சொல்லாமல் சொன்னார். எனக்குக் காலம் சென்ற குன்றக்குடி அடிகளார் நினைவு வருகிறது. மிக முற்போக்கு எண்ணங்கள் கொண்ட மடாதிபதி அவர். மதரீதியான விழாக்களைக் கூட அர்த்தமுள்ளவையாக அவர் மாற்றினார். பிட்டுக்கு மண்சுமந்த ஈசனின் விளையாட்டைக் கொண்டாடும் திருவிழாவில் ஊர் மக்களை ரோடு செப்பனிடுவது, தூர் வாறுவது போன்ற பணிகளைச் செய்யச் சொல்வார். அந்தக் கதையின் உள் அர்த்தம் அதுதான் என்று விளக்குவார். அதே போல முளைப்பாறித் திருவிழா உழவுக்கு வந்தனை செய்வதுபோல நடக்கும்.

தமிழ் நாட்டில் அண்ணாவின் பெயரைச் சொல்லி , பெரியார் பெயரைச் சொல்லி பல மாதங்கள் நடந்த விழாக்கள், கொடுக்கப்பட்ட விருதுகள், அதற்காகச் செலவழிக்கப்பட்ட பணம், நேரம் இவையெல்லாம் உண்மையிலேயே அண்ணாவுக்கும் பெரியாருக்கும் எந்த வகையில் அதிகப் புகழைத் தந்தன என்று பாமரனுக்குப் புரிந்திராது. மேடையில் இருப்பவரெல்லாம் பேசிய பேச்சும் சூட்டிய புகழாரங்களும் அண்ணாவுக்கோ பெரியாருக்கோ அல்ல என்பதால் யாருக்கான விழா அது என்று கூட அவனுக்குப் புரிந்திராது. மேடை நாயகர்கள் போட்டிப் போட்டுக்கொண்டு சவரன் விற்கிற விலையில் நூறு சவரனிலும் அறுபது [அதற்கு மேலோ] சவரனிலும் சங்கிலியோ வேறு எதுவோ பரிமாறிக்கொண்டது இன்னும் குழப்பத்தை அளித்திருக்கும். முதல்வருக்கே கூட அது அண்ணாவுக்கான விழா என்று மறந்துபோனது போல இருந்தது.

அண்ணாவின் பெயரைச் சொல்வதும் பெரியார் பெயரைச் சொல்வதும் இப்போது ஒரு சடங்கு.

'நமச்சிவாய வாழ்க' என்பது போல 'அண்ணா நாமம் வாழ்க'. ஜெயலலிதாவும் தனது தேர்தல் பிரச்சாரப் பேச்சுக்களை அப்படித்தான் முடிப்பார்.

அதுபோல இப்போது தேச பிதா காந்தியும் வெறும் அடையாளமாகிப் போனார். பள்ளிக்குழந்தைகளுக்கு ஷாருக்கானையும் ரஜனி காந்தையும் தெரிந்த அளவுக்கு காந்தியைப் பற்றித் தெரியாது. ஒவ்வொரு மாநிலத்திலும் மாநிலத் தலைவர் அல்லது சிவாஜி போன்ற வரலாற்று நாயகர் யாரேனும் முக்கியமாகப் படுகிறார்கள். ஒரு மாபெரும் வல்லரசை, 200 ஆண்டுகளுக்கு மேல் நம்மை அடிமைபடுத்திவைத்திருந்த ஒரு சாம்ராஜ்யத்தை அஹிம்சை எதிர்ப்பு மூலமே மண்டியிடவைக்கலாம் என்று நினைத்த ஒரு மனிதர் எத்தனை மனோ வலிமை படைத்தவராக இருந்திருக்க வேண்டும் என்று யாரும் இன்று பிரமிப்பதாகக் காணோம். அவர் நினைத்தது மட்டுமல்ல, ஏழ்மையும் கல்வியற்ற சூன்யமும் கொண்ட மாபெரும் மக்கள் சமூகத்தை தனது ஆன்மீக பலத்தால் ஆட்கொண்டார். அது சாத்தியம் என்று நம்பவைத்தார். பாராக் ஒபாமா "YES WE CAN!" என்று சொன்ன மந்திரம் என்றோ காந்தி சொன்னது. கத்தியின்றி, துப்பாக்கி இன்றி, ரத்தமின்றி எப்படி விடுதலை சாத்தியம் என்று அவர் நம்பினார்? அவர் அழைத்ததும் அதுவரை படிதாண்டாமல் இருந்த எத்தனை எத்தனை பெண்கள் உத்வேகத்துடன் வந்தே மாதரம் என்று குரலெழுப்பி ஆண்களுக்கு சமமாக சுதந்திர வேள்வியில் புகுந்தார்கள்! அரை வயிறு உண்டு , மேல் ஆடை இல்லாமல் முழங்கால் வரை உடுத்திய வேஷ்டியும் கைத்தடியும் பொக்கை வாயும் ஏழை இந்தியனுடன் அவரை ஐக்கியப் படுத்திற்று. தன்னை வாழ்விக்க வந்தவர் என்று நம்பவைத்தது. லண்டனில் நடந்த வட்ட மேஜை கூட்டத்திற்கும் அப்படித்தான் சென்றார். அன்றைய பிரபல பிரிட்டிஷ் தலைவர் வின்ஸ்டன் சர்ச்சில் அவரை 'அரை நிர்வாண பக்கிரி' என்று இகழும் அளவுக்கு. சர்ச்சில் மிகக் கடுமையாக காந்தியின் விடுதலைக் கோரிக்கையை எதிர்த்தும், காந்தி உறுதியுடன் நின்று வென்றார். நினைக்க நினைக்க நம்ப முடியவில்லை அப்படிப்பட்ட ஒரு மனிதர் இந்த மண்ணில் வாழ்ந்தார் என்று.

உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் காந்தி இறந்த போது எழுதிய அஞ்சலி மிக சத்தியமானது. " இப்படிப்பட்ட ஒரு மாமனிதர் ரத்தமும் சதையுமாக இந்தப் புவியில் நடந்தார் என்பதை வரப்போகும் தலைமுறைகள் உணரமாட்டார்கள்."

*நமது தலை முறையே*

*உணரவில்லை. வன்முறையினால் எந்த நோக்கத்தையும் அடையமுடியாது என்பது திரும்பத்திரும்ப நிரூபிக்கப்பட்டு வருகிறது. இருந்தும் காந்தியின் வழியைப் பின்பற்றும் பொறுமையோ விவேகமோ யாருக்கும் இல்லை. அதைப் பற்றி சிந்திப்பதற்குக்கூட நமக்கு நேரமில்லை. ஏனென்றால் அது சிக்கலான பாதை. ஆன்மீகமும் மனித நேயமும் கலந்த பார்வை. நாம் சுவாசிக்கும் காற்று கெட்டுவிட்டது. ஒரு கன்னத்தை அடித்தால் மறு கன்னத்தைக் காண்பி என்று சொல்வது நமக்குக் கோழையின் அடையாளம். அந்தப் பொடியன் சஞ்சை காந்தி சொன்னானே, அடித்தவன் கையை வெட்டுவேன் என்று, அது தான் இன்று*

*பௌருஷத்தின் அடையாளம். கைத்தட்டல் பெறுவது. வன்முறை நமது எண்ணங்களில் இருக்கிறது, செயல்பாடுகளில் இருக்கிறது. நவராத்திரி ஆயுத பூஜையின் போது நரேந்திர மோடி கனரகத் துப்பாக்கிகள் , கைத்துப்பாக்கிகள், ஏகே 47, 57 என்று கொலுவைப்பது போல துப்பாக்கிகளை வைத்துப் பூஜை செய்தாராம். உலகம் முழுவதும், முக்கியமாக உலகத்தின் மிக வலிமை மிக்க நாட்டின் அதிபர் காந்தியின் அஹிம்சைக் கொள்கைகளைப் போற்றிப் பேசும் நேரத்தில் பீகாரில் நக்சலைட்டுகள் ஒரு கிராமத்தில் புகுந்து அப்பாவிகளை-அதில் பல குழந்தைகள்- கொன்று குவித்தார்கள். அவர்களது தலைவர் ஒருவரை காவல்துறை கைது செய்ததற்காக. தமிழக மீனவர்களை சிங்கள கப்பற்படை சுடுகிறது என்று புதிய தமிழகம் செயல்வீரர்கள் தில்லி சாணக்யபுரியில் உள்ள ஸ்ரீ லங்கா ஹை கமிஷன் கட்டடத்துக்குள் அடாவடியாக நுழைந்து கற்கள் வீசி சேதம் செய்திருக்கிறார்கள். அவர்கள் செய்வதை வேடிக்கை பார்த்தபடி தெரு ஓரத்தில் ஒரு வாகனத்தில் புதிய தமிழகம் தலைவர் கிருஷ்ணசாமி அமர்ந்திருந்தார் என்று செய்தி. கலாட்டா செய்தவர்களைக் காவலர்கள் பிடிப்பதற்குள் , வண்டியில் ஏறித் தப்பிவிட்டார்கள். இவர்கள் சாதித்தது என்ன? தங்கள் கட்சியின் பெயர் இப்படியாவது செய்தியில் அடிபடட்டும் என்பதா?*

*வன்முறை காலோச்சிய காலமும் அதன் தாக்கமும் நம்பமுடியாத விளைவுகளை உலகத்தின் முக்கியமான பகுதிகளில் சந்திக்கின்றன. இரும்புத்திரை என்று வர்ணிக்கப்பட்ட ருஷ்யாவில் முன்னாள் அதிபர் புட்டின் பழைய ஆட்சியின் அதிகார துஷ்பிரயோகத்தின் சுவடுகளை அழிக்கப் பார்க்கிறார். க்ரெம்லின் செய்த அக்கிரமங்கள் பற்றி எழுத இப்போது தடைகள் இல்லை. தான் ஒரு சராசரி மனிதன் என்பதைக்காட்ட டால்பின்களுடன் நீச்சல் அடிக்கிறார். அமெரிக்காவில் போர் வெறி கொண்ட புஷ் அகற்றப்பட்டு அறிவு ஜீவி ஒபாமா அதிபராகியிருக்கிறார். அஹிம்சாவாதி காந்தியே எனது ஹீரோ என்கிறார். பலவீனமான பிரதமர் என்று அத்வானியால் காட்டமாக விமர்சிக்கப்பட்ட மன்மோகன் சிங் பாரதத்தின் பிரதமாரகியிருக்கிறார். வெறுப்பை வளர்ப்பதே தனது அரசியலாகக் கொண்ட பாரதிய ஜனதா கட்சி சுருண்டுவிட்டது. வன்முறையை எண்ணங்களிலிருந்து அகற்றினாலேயே பிரச்சினைகளின் தீர்வுக்குப் பாதை தெரியும். அது பௌருஷம் அல்ல. பலவீனம். அதை காந்தி உணர்ந்ததே அவரது பலம்.*

*" நீங்கள் உங்கள் செயல்பாடுகளின் மூலம் காண்பித்திருக்கிறீர்கள்- வன்முறையைக் கைவிடாதவர்களைக்கூட வன்முறையற்ற வழிகளினால் வெல்லமுடியும் என்று" என்று ஐன்ஸ்டீன் காந்திக்கு எழுதிய ஒரு கடிதத்தில் குறிப்பிட்டார். "உங்களுடைய உதாரணம் உங்கள் நாட்டின் எல்லைகளைத் தாண்டி உலகத்துக்குப் பரவி யுத்தத்திற்கு பதில் சமாதானத்தைப் பரப்பும் என்று நான் நம்புகிறேன்."*

பிறந்த நாட்டிலேயே காணாமல் போய்விட்ட காந்தியைத் தேடிப் பிடித்து தூசு தட்டிப் பார்க்கவேண்டிய அதி முக்கியமான தருணம் இது. உலகச் சந்தையின் புகழ் பெற்ற நிறுவனமான Mont Blanc காந்தியின் வாசகத்தை- 'அஹிம்சையின் மூலமே சத்தியத்தை உணரமுடியும்' - என்ற வாசகத்தை, தனது மிக விலை உயர்ந்த பேனாக்களின் விற்பனைக்கு விளம்பரமாக உபயோகிப்பதற்கும் நமக்கும் சம்பந்தமில்லை. தங்கப் பேனா முனையில் காந்தியின் உருவம் செதுக்கப் பட்டிருக்கிறது. நமக்கு வெறும் அடையாளம் தேவை இல்லை. அந்த வாசகத்தை மீள் பார்வை பார்ப்பதே , அதை உள்வாங்கிக் கொள்வதே நமது தலைமுறையின் கடமை. புவியைக் காக்கும் மந்திரச் சொற்கள் அவை.

---

## காந்தி [அல்லது வெற்றிகரமாகச் சுடப்படுவது எப்படி?]

*October 11, 2009 — 12:08 am*

அரசாங்க ஆவணங்களில் மகாத்மா என்றும் மற்றவர்களால் மோகன்தாஸ் என்றும் அழைக்கப்படும் காந்தி பிற்பாடுவந்த பல காந்திகளில் காந்தி அல்லாதவர்களை வடிகட்டிவிட்டால் எஞ்சுபவர். வாசிக்கும் பழக்கம் இல்லாதவராதலால் இவர் ஏராளமாக எழுதி சிந்தனையாளராக ஆனார். இந்தியாவுக்குச் சுதந்திரம் பெறுவதற்காக முப்பதாண்டுக்காலம் பலவகையிலும் போராடி சம்பந்தமில்லாத வேறு ஒருவகை சுதந்திரத்தைப் பெற்று சம்பந்தமில்லாதவர்களின் கையில் கொடுத்தமையால் இவரை தேசப்பிதா என்றும் அழைக்கிறார்கள்.

இவர் தேசியவிடுமுறைநாளான அக்டோபர் இரண்டாம் தேதியன்று குஜராத்தில் போர்பந்தர் ஊரில் ஒரு பனியா குடும்பத்தில் 1822.ல் பிறக்க நேர்ந்தது. இவர்களின் குடும்பத்தில் சமணத்தாக்கம் இருந்தமையால் சின்ன வயதில் இவர் யாரொ சமணத்துறவியை சாகும்நிலையில் கண்டதாகவும் அவர் மிகவும் கஷ்டப்படுவதனால் அவர் மகாத்மாதான் என்று சொல்லிக்கேள்விப்பட்டதாகவும் அன்றிலிருந்து அவர் தானும் ஒரு மகாத்மாவாக ஆவதற்காக மிஞ்சின வாழ்நாள் முழுக்க அல்லும்பகலும் பாடுபட்டதாகவும் தெரியவருகிறது.

சிறுவயதில் இவர் அதற்கான பரிசோதனைகளை ஆரம்பித்துவிட்டார். கெட்டில் என்ற சொல்லை தப்பாக எழுதி காதைப்பிடித்து திருகும் கலையில் வல்லவரான ஆசிரியரிடம் சிலேட்டைக் காட்டியது இவர் செய்த முதல் சோதனை. வேகாத ஆட்டிறைச்சியை தின்று அஜீர்ணத்தில் சிரமப்பட்டிருக்கிறார். மனைவிக்கு எழுத்தறிவித்தல்கூட சிறந்த வழிதான் என்று உணர்ந்தாலும் அதை இவரால் அதிக நாள் நீட்டிக்க முடியவில்லை. கல்விக்கும் மகாத்மாக்களுக்கும் நேரடித் தொடர்பு இல்லை

அதன்பின்னர்தான் லண்டன் தன் சோதனைகளுக்கு மிகச்சிறந்த ஊர் என்று கேள்விப்பட்டு கிளம்பிச்சென்றார். லண்டனின் கடும் குளிரில் இவர் தினமும் காலையில் கொஞ்சம் கொஞ்சமாக மகாத்மாவாக மாறுவதை உணர்ந்து கொண்டிருந்தார். அதற்கேற்ப இவரது அன்னையிடம் கிளம்பும்போதே இரு சத்தியங்களை அளித்திருந்தார். மாமிச உணவை தொடுவதில்லை என்பது முதல் சத்தியம். இது இவர் மகாத்மாவாக ஆவதற்காக. பிறபெண்டிரை தீண்டுவதில்லை என்பது இரண்டாவது சத்தியம், இது அவர்களும் மகாத்மாக்களாக ஆவதை தடுப்பதற்காக.

லண்டனில் இவர் சைவ உணவுகளில் ஆராய்ச்சிகள் செய்தார். உணவை எந்த அளவுக்கு சகிக்க முடியாததாகச் செய்கிறோமோ அந்த அளவுக்கு அது ஆன்ம விடுதலையை அளிக்கிறது என்று இவர் கண்டுபிடித்தார். ' 1/உணவின்சுவை = ஆன்மீக விடுதலை' என்ற இவரது தேற்றம் காந்தித்தேற்றம் எனப்படுகிறது. இது பின்னர் ரயில்வே கேண்டீன்களின் விதியாக அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

பலவகையான சோதனைகளுக்குப் பின்னர் 'மகாத்மா இன் மேக்கிங்' ஆக இவர் இந்தியா திரும்பி பம்பாயில் வாடகை வீடு பிடித்தார். அப்போது அது இன்றைபோல மகாத்மா ஆவதற்கான வழியாக அமையவில்லை. அதன்பின்னர் நீதிமன்றங்களுக்குச் சென்று சிவில் வழக்குகளைக் கவனித்து, ஆவணங்களை வாசித்து, பலவகையான கடும் ஆன்ம சோதனைகளுக்கு தன்னை ஆளாக்கிக்கொண்டார். தான் மேற்கொண்ட எல்லா வழக்குகளிலும் இவர் மகாத்மாச் சோதனைகளைச் செய்தாலும்கூட அவை நீதிமன்றங்களில் வெற்றிபெற்றன.இதை மகாத்மாக்களுக்கு இறைவன் கொடுக்கும் சோதனை என்றுதான் சொல்லவேண்டும்.

ஆகவே இவர் இந்திய வழக்கறிஞர்கள் தாக்கப்படும் நிகழ்ச்சிகள் நிறைந்த தென்னாப்ரிக்காவுக்கு சென்று சேர்ந்தார். அங்கும் வழக்குகள் இவரது ஆன்ம முன்னேற்றத்துக்கு உதவவில்லை. இந்நிலையில் இவர் கறுப்பர்களுக்கு தடைசெய்யப்பட்ட முதல்வகுப்பில் இவர் ஏறி அமர்ந்திருந்தார். டிக்கெட் பரிசோதகரிடம் இவர் அந்த ஸ்டேஷனின் பெயரான Pietermaritzburg என்பதை குஜராத்தி உச்சரிப்பில் சொல்லி அவரை வன்கொடுமைக்கு ஆளாக்கியமையால் தூக்கி ஸ்டேஷனில் கடாசப்பட்டார். அங்கே அமர்ந்து காந்தி ஆனந்தக் கண்ணீர்விட்டார். எப்படியும் மகாத்மா ஆகிவிடுவோம் என்பது அங்கேதான் அவருக்கு உறுதிப்பட்டது.

அடிவாங்கி அமரர் ஆவதற்கான போராட்டமுறையாக இவர் சத்யாக்கிரகம் என்ற போராட்ட முறையை உருவாக்கினார். சத்யம் என்றால் உண்மை. மகாத்மா ஆவதே அவரது உண்மையான ஆசை என நாம் அறிந்திருக்கிறோம். ஆக்ரகம் என்பது ஆசை. மேற்படி ஆசையுடன் இவர் ஆயுதப்படைகள் முன் வெறுங்கைகளை வீசிக்கொண்டு சென்றார். ஆனால் பிரிட்டிஷ் ஆட்சிமரபு என்பது எது முன்னுதாரணமோ அதைச் செய்வதாகும். முன்னுதாரணம் இல்லாத விஷயம் முன்னால் வந்தால் பிரிட்டிஷ் அரசு இயந்திரம் ஸ்தம்பித்துவிடும். இது சத்யாக்கிரகத்தின் பெரும் வெற்றியாகக் கொண்டாடப்பட்டது.

மேலும் இக்காலகட்டத்தில் காந்தி ஒரு பனியாவை பிறர் கழுவேற்றுவதற்கு தேவையான காரணங்களான எல்லாவற்றையும் செய்தார். தானே செருப்பு தைத்தார்,முடிவெட்டினார். உயிர்த்தியாகத் துணிவுடன் பிறருக்கும் இவர் முடிவெட்டிவிட்டதாகத் தெரிகிறது. தாழ்ந்த சாதிகளை தன்னுடன் சேர்ந்து தங்கவைத்தார். அவர்களின் மலத்தை அள்ளுமாறு மனைவியிடம் சொல்லிப்பார்த்தார். விளைவு நிகழவில்லை, அந்த அம்மையார் ஒரு அப்புராணி.

பெரும்புகழுடன் காந்தி இந்தியாவுக்கு திரும்பிவந்தார். காங்கிரஸ் மாநாட்டில் மதியச்சாப்பாட்டுக்குப் பின்னர் சுகமாக தாம்பூலம் மென்று மல்லாந்திருந்த பிரதிநிதிகள் நடுவே அவர்கள் ஏன் கக்கூஸ் கழுவக்கூடாது என்று அவர் பேசினார். அவர் எதிர்பார்த்ததுபோல அவரை மகாத்மாவாக ஆக்காமல் அவர்கள் திகைத்து வாய்பிளந்து நின்றுவிட்டார்கள். ஏன் என்றால் அவர்களெல்லாம் பிரிட்டிஷ் கைடு புத்தகங்களை வாசித்து தேர்வு எழுதி ஜெயித்தவர்கள். கைடுபுத்தகத்தில் இல்லாத விஷயங்களை அவர்கள் கேட்டால் வாய் திறந்து கண் பிதுங்கிவிடும்.

அக்காலத்தில் கடுமையான பஞ்சத்தால் கிராமவாசிகள் கஷ்டப்பட்டுகொண்டிருந்தார்கள். எங்கும் சாப்பாடு இல்லை. பிரிட்டிஷார் அவர்களுக்கு மேலும் வரிகளை விதித்தார்கள். ஆகவே காந்தி அங்கே சென்று அவர்களுக்கு உண்ணாவிரதப்போராட்டத்தை கற்பித்தார். அவர்கள் மிக எளிதாக அதைக் கற்றுக்கொண்டு போராடியபோதிலும் அவர்கள் போராடுகிறார்களா இல்லை வழக்கமான பட்டினியா என்பது அரசுக்கு தெரியவில்லை.

ஆகவே அரசுக்கு அவர்கள் கிளர்ந்து எழுந்துவிட்டார்கள் என்பதை தெரிவிப்பதற்காக காந்தி ஒரு போராட்டவழியை மேற்கொண்டார். அவர்கள் தங்கள் தெருக்களில் வீட்டருகே மலம் கழிக்கும் வழக்கத்தை நிறுத்திவிட்டு கக்கூஸ்களை தோண்டி அதிலே மலம் கழிக்கச் செய்தார். மாறுதலை தெற்றென உணர்ந்த அரசு சமூக ஒழுங்கைக் குலைப்பதாகச் சொல்லி காந்தியை வலுக்கட்டாயமாக வெளியேற்றியது.

காந்தி அதை மறுத்து சிறைக்குப்போனார். அங்கே அவர் தனக்குத்தானே எனிமா கொடுத்துக்கொள்வதைக் கண்ட அரசு அஞ்சி அவருடன் பேச்சுவார்த்தைக்கு சம்மதித்தது. போராட்டம் வெற்றிபெற்றதும் காந்தியை அம்மக்கள் மகாத்மா என்று அழைக்கத்தலைப்பட்டார்கள். காந்தி உடனே அங்கிருந்து நேராக இமயமலைக்குப் போவதற்காக தயாரானார்.

அப்போது அவரைச் சந்தித்த ஒரு காங்கிரஸ்காரர் அவரை வெறுமே காந்தி என்று அழைத்ததாகவும் ஆகவே பயணத்தை ஒத்திபோட்டுவிட்டு மிச்சபேரையும் மகாத்மா என்று அழைக்க வைப்பதற்காக அவர் ஒத்துழையாமைப்போராட்டத்தை ஆரம்பித்ததாகவும் சொல்லப்படுகிறது. சர்க்கார் சொல்வதில் முக்கியமில்லாத விஷயங்களைச் செய்ய மறுப்பதே ஒத்துழையாமைப் போராட்டமாகும். அதாவது ரயிலில் ஏறலாம், அரசாங்கவேலைக்குப் போகக்கூடாது.

காந்தி அன்னியத்துணிகளை தீயிலே போடும்படிச் சொன்னார். தீ கட்டுக்கடங்காமல் போகுமென்றால் அதை அணைப்பதற்காக கதர் என்ற துணிவகையை இவர் கண்டுபிடித்தார். அதை உற்பத்திசெய்ய அனைவரும் சர்க்காவை சுற்றவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இக்காலகட்டத்தில் பல்வேறு நபர்கள் பல்வேறு வழிகளில் சுதந்திரப்போராட்டத்தை நடத்த முன் வந்தார்கள். நேருவும் அவரது நண்பர் கிருஷ்ணமேனனும் நாட்டுஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றினால் வெள்ளையன் ஓடாமல் இருக்கமாட்டான் என்றார்கள். சுபாஷ் சந்திரபோஸ் வீட்டுக் கறிகாய்கத்தியால் துரையின் குஞ்சாமணியை நறுக்குவது ஒரு நல்ல வழிமுறை என்றார். சந்திரசேகர ஆசாத் பகத்சிங் போன்றவர்கள் ரயில் தண்டவாளத்தை பெயர்க்கலாம், வெள்ளைக்காரந்தானே ரயிலை

விட்டது என்று வாதாடினார்கள்.

அவர்கள் முறையே ஜனநாயக சோஷலிசம், புரட்சிகர சோஷலிசம், புரட்சிகரபுரட்சிகரம் போன்ற பெரிய விஷயங்களைப் பேசியபோது மகாத்மா ஆவதற்கு இதுவே தருணம் என்று கண்ட காந்தி உப்புதான் உயிர்பிரச்சினை என்று சொல்லி 'எல்லாரும் போய் ஆளுக்கொரு உப்பு அள்ளுங்கப்பு' என்றார். யாராவது ஒரு தரப்பு தன்னை போட்டுத்தள்ளும் என எதிர்பார்த்தார். அவர்கள் பிரிட்டிஷ் அரசு அதை செய்யட்டும் என்றார்கள். பிரிட்டிஷ் அரசு அவர்களே செய்வார்கள் என்று நினைத்தார்கள்.அதன் விளைவாக யாரும் ஒன்றும் செய்யாமல் உப்புசத்யாக்கிரகம் வெற்றிபெற்றது.

காந்தியும் இர்வினும் ஒப்பந்தம் போட்டுக்கொண்டார்கள். அதன்படி இர்வின் காந்தியை மகாத்மா என்றும், காந்தி இர்வினை இர்வின் என்றும் ஒப்புக்கொண்டார்கள். வட்டமேஜைமாநாட்டுக்கு காந்தி கடும் குளிரில் சட்டையில்லாமல் சென்று, காலரா பரவியிருந்த வண்ணார்காலனியில் தங்கி, கோவணத்துடன் மகாராணியைப் பார்க்கச்சென்று, அவர்களின் விருந்தில் சாப்பிட்டு பல கோணங்களில் முயற்சிசெய்தும் அவரது மகாத்மா நோக்கம் நிறைவேறவில்லை.

ஆகவே அவர் அம்பேத்காருடன் போரில் ஈடுபட்டார். அம்பேத்கார் இந்தியச் சாதிமுறையினால் ஒடுக்கப்பட்டவர். ஒடுக்கியவர்கள் எங்கே என்று ஆவேசமாகத் தேடியபோது அவர்கள் செத்துப்போய் இருபது நூற்றாண்டு ஆகிவிட்டது என்ற தகவல்தெரிந்து கடுப்பில் இருந்தார். காந்தி நான் அவனே என்று அவர் முன் காட்சியளித்து மகாத்மாவாக முயன்றார். அம்பேத்கார் அதற்குத் தயங்கியபோது அவர் வந்து ஊட்டிவிட்டால்தான் சாப்பிடுவேன் என்று உட்கார்ந்தும் பார்த்தார். அம்பேத்கார் ஊட்டி விடவும் தயாரானதனால் அந்த முயற்சியும் பாழ்பட்டது

காந்தி பலமுறை உண்ணாவிரதம் இருந்திருக்கிறார். நடக்காத விஷயங்கள் நடக்கும்வரை சாப்பிடமாட்டேன் என்று சொல்வது அவரது பாணி. ஆனால் அவரது உண்ணாவிரதங்களை திட்டமிட்டு பிறர் முறியடித்து அவரை பழரசம் அருந்த வைத்திருக்கிறார்கள். 'நாநூறுவழிகளில் பிறரைக் கடுப்பேற்றுவது எப்படி' என்ற நூல் இவரது சுயசரிதையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதுதான். தன்னைச் சந்திக்க வருபவர்களிடம் சர்க்கார் வேலையை விட்டுவிடும்படிச் சொல்வதும் அதன் பின் அவர்கள் மனைவியரிடம் கூப்பிட்டு நலம் விசாரிப்பதும் இவரது பாணி. மூவாயிரம் ரூபாய் கணக்குவழக்கில் மூன்று பைசாவுக்கு மூன்றுமணிநேரம் கணக்கு கோருவதும் உண்டு.

உண்ணாவிரதத்துக்கு முன்னால் எனிமா கொடுப்பதும் கொஞ்சம் மூத்திரம் அருந்துவதும் இவரது வழக்கம். பிறரும் மூத்திரம் அருந்தலாம் என்று இவர் சொன்னாலும் அதை காங்கிரஸ் காரியக்கமிட்டி முறைப்படி ஏற்கவில்லை. ராஜேந்திரபிரசாத்துக்கு அந்தச்சுவை பிடிக்கவில்லை என்று சொல்லப்பட்டது. தொழுநோய்க்கு தண்ணீர்விட்டு கழுவுதல், காசநோய்க்கு தண்ணீர் விட்டு வாயைக் கழுவுதல், காலராவுக்கு தண்ணீரில் உப்பு போட்டு ஆசனவாயைக் கழுவுதல் போன்ற சிகிழ்ச்சை முறைகளை இவர் அந்நோய்கள் தனக்கு இல்லாதபோது தனக்கே வெற்றிகரமாக செய்து பலன் கண்டார். இவை காந்திய சிகிழ்ச்சை எனப்படுகின்றன.

காமத்தைப்பற்றி இவர் மகாத்மாத்தனமான கொள்கைகளைக் கொண்டிருந்தார். ஆணும்பெண்ணும் கடவுளை மனதில் நினைத்துக்கொண்டே அகிம்சை வழியில் கலவியில் ஈடுபட வேண்டும் என்று இவர் சொன்னார். அப்போது பெண்கள் ரகுபதி ராகவ ராஜாராம், வைஷ்ணவ ஜனதோ போன்ற பாடல்களை பாடுவதும் நல்லது. வருடத்திற்கு ஒருமுறை உறவு கொண்டால் போதும். அதை அரை அரையாக ஆறுமாதத்துக்கு ஒருமுறை செய்யலாம்.
காமத்தை நினைவூட்டும் எதையுமே செய்யக்கூடாது என்று காந்தி சொன்னார். ஆகவே இசை, ஆடல், பாடல், ஓவியங்கள்,நாடகம், சினிமா போன்ற எல்லா நுண்கலைகளையும் இவர் விலக்கினார். ஏப்பம் விடுவது சாப்பாட்டை நினைவூட்டுவதனால் அதுவும் இவரால் தடைசெய்யப்பட்டது. உண்ணாவிரதத்தை சிறந்த காட்சிக்கலையாகவும் எனிமாகொடுத்தலை நிகழ்த்துகலையாகவும் இவர் கண்டதாக வரலாற்றாசிரியர்கள் தெரிவிக்கிறார்கள்.

தான் அம்பேத்காரால் ஊட்டப்பட்டதை மேல் ஜாதியினர் எதிர்க்கிறார்கள் என்று கண்டதும் இவர் உற்சாகம் அடைந்து சாதியை ஒழிக்க வேண்டும் என்று சொன்னதோடல்லாமல் மேல்சாதியினர் வாழும் இடங்களுக்கு மூன்றாம்வகுப்பு ரயிலில் பயணம் வேறுசெய்து பார்த்தார். அவர் மேல் குண்டுகள் வீசப்பட்டன. ஆனாலும் பயன் கிடைக்கவில்லை.

இந்நிலையில் ஜின்னா என்பவர் உயர்சாதி முஸ்லீம்களுக்காக ஒருநாடு தேவை என்று நினைத்து பாகிஸ்தான் கோரிக்கையை எழுப்பினார். ஆகவே வழக்கம்போல தென்னாட்டை சேர்ந்த கீழ்சாதி முஸ்லீம்கள் அதை ஆதரித்து ஓட்டுபோட்டார்கள். நேரடி நடவடிக்கை அல்லது மறைமுக ஜிகாத் என்ற செயல்மூலம் அவர் பாகிஸ்தானை கொடுக்காவிட்டால் இந்தியா பாகிஸ்தான் ஆகும் என்று தெளிவாகக் காட்டினார். காந்தி அகிம்சை சத்தியம் தர்மம் என்றெல்லாம் பேசி ஜின்னாவை கொடுமைசெய்தாலும் அவரும் மகாத்மாநிலையை நோக்கி இவரை உயர்த்துமளவுக்கு துணியவில்லை

காந்தி 'சர்க்கா சர்க்கா' என்று சொன்னதை 'சர்க்கார் சர்க்கார்' என்று புரிந்துகொண்டு மக்கள் ரகளைகளில் இறங்கவே தொல்லை தாங்கமுடியாமல் வெள்ளைக்காரர்கள் ஊரைவிட்டுப் போக முடிவுசெய்தார்கள். இந்தியாவில் இருந்த எல்லா ஜமீன்தார்களையும் கூப்பிட்டு 'நாட்டை வைச்சுக்கங்கஜாலியா சமர்த்தா சண்டை போடணும் என்ன?' என்று சொல்லிவிட்டு கிளம்பினார்கள்.

இந்துக்களும் முஸ்லீம்களும் சண்டைபோட ஆரம்பித்தபோது கிட்டத்தட்ட காந்தி இங்கேதான் தனக்கு வாய்ப்பு என முடிவு கட்டினார். முஸ்லீம்கள் இந்துக்களைக் கொல்லும் இடத்துக்குப் போய் அகிம்சை பிரச்சாரம் செய்தால் முஸ்லீம்கள் மட்டுமே எதிரியாவார்கள், இந்துக்கள் ஆதரிப்பார்கள். இந்துக்கள் முஸ்லீம்களைக் கொல்லும் இடங்களுக்குப் போய் அகிம்சை பிரச்சாரம் செய்தால் இந்துக்கள் எதிரியாவார்கள், முஸ்லீம்களும் எதிரிகளாவார்கள் என்று உணர்ந்து நவகாளி என்ற ஊருக்குப்போய் அகிம்சை உபதேசம் செய்தார்.

நினைத்தது மாதிரியே இந்துக்கள் கடுப்பானார்கள். வினாயக் நாதுராம் கோட்ஸே என்பவர் விதியால் இதற்காக

அனுப்பபட்டிருந்தார். இவர் பெண்கள் சம்பந்தமாக கட்டைப்பிரம்மசாரி. பிராமணர். ஆகவே காந்தியை கொல்ல இவர் துப்பாக்கியுடன் வந்து பிரார்த்தனை மண்டபத்தில் காத்திருந்தார். காந்தி கும்பிட்டபடி வந்ததும் இவர் திருப்பிக் கும்பிட்டுவிட்டு சுட்டார்.

காந்தி 'ஹேராம்' என்று சொல்லிக்கொண்டே இறந்தார். இல்லை 'ஹராம்' என்றுதான் சொன்னார் என்று மதச்சார்பின்மை வாதிகளும் 'அராம்' என்றுதான் சொன்னார் என்று இந்திவாதிகளும் உண்மையில் அவர் 'யாராம்?' என்றுதான் கேட்டார் என்று தேவைநியாயப் பாவாணர் அவர்களும் சொன்னார்கள். எதுவாக இருந்தாலும் அவர் உடனடியாக மகாத்மாவாக ஆகி ரூபாய் நோட்டிலே சிரிக்கலானார்.

கிட்டத்தட்ட எழுபது வருடங்கள் கடுமையாக முயற்சி செய்து மகாத்மாவாக ஆன காந்தியின் கதை இளைய சமூகத்துக்கு முன்னுதாரணமாக ஆகத்தக்கது. முயற்சி திருவினை ஆக்கும் என செந்நாப்போதார் சொன்ன மொழிக்கு அண்ணல் அவர்களின் வாழ்க்கையே சிறந்த உதாரணம்.

---

**காந்தி என்ற பனியா 1**

காந்திமீது வைக்கப்படும் குற்றச்சாட்டுகளில் எல்லாம் அவர் ஒரு பனியா என்பது மீண்டும் மீண்டும் வருகிறது. அவரது செயல்களை விமரிசிக்கும்போது பனியாப்புத்தி என்று சொல்கிறார்கள். தமிழிலேயே இந்தியதேசியத்தைப் பற்றிப் பேசும்போதெல்லாம் பார்ப்பன-பனியா ஆதிக்கம் என்று அவரை மனதில் கொண்டுதான் பேசுகிறார்கள். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? காந்தி பனியாப்புத்தியைத்தான் அரசியலிலே காட்டினாரா?
சிவராம் சௌந்தரராஜன்

அன்புள்ள ஜெயமோகன்,
நான் உங்கள் காந்தியைப்பற்றிய கட்டுரைகளை ஆழமாக வாசித்து வருகிறேன். நான் இவற்றைப்பற்றி பேசிக்கொண்டிருக்கும்போது என்னுடைய ஒரு மூத்த நண்பர் காந்தியில் ஈடுபாடு வந்தால் வியாபாரம் படுத்துவிடும் என்று சொன்னார். நான் கிரைண்டர் பாகங்கள் வியாபாரம் செய்கிறேன். அது உண்மையா என்ற சந்தேகம் எனக்கு வந்தது. காந்தியமும் வியாபாரமும் சேர்ந்து போகாதா? உங்கள் கருத்தை அறிய விரும்புகிறேன்
சந்திரசேகர்

அன்புள்ள சிவராம்,சந்திரசேகர்,

சமீபத்தில் காந்தியைப்பற்றி வந்த கட்டுரைகள் அளவுக்கு பரபரப்பாக எதுவுமே என் இணையதளத்தில் வாசிக்கப்பட்டதில்லை. கட்டுரைகள் மீது கடிதங்கள் வந்து குவிகின்றன. நீண்டபதில் என்றால் பலருக்கு சேர்த்து ஒரே கடிதமாக எழுதிவிடுகிறேன்.

நீங்கள் கேட்டபடி காந்தி பனியாப்புத்தியைத்தான் அரசியலில் காட்டினாரா? ஆமாம். அவரது அணுகுமுறை பனியா அணுகுமுறைதான்.இரண்டாவது கேள்விக்கான விடையும் அதுவே. ஒரு மிகவெற்றிகரமான மூத்த பனியா அளவுக்கு உங்களுக்கு வணிகத்தில் வழிகாட்டியாக இருக்கக்கூடியவர் வேறு யார்?
காந்தியை பனியா என வசைபாடுகிறவர்களை நான் இந்த விவாதத்தில் கணக்கில் கொள்ள மாட்டேன். அவர்களில் மிகப்பெரும்பாலானவர்கள் அப்பட்டமான சாதியவாதிகள். அவர்களால் தங்கள் சாதியடையாளத்தையோ, சாதிப்பார்வையையோ கொஞ்சமும் துறக்க முடிந்ததில்லை. ஆகவே ஒவ்வொவரும் தங்கள் சாதிக்குள்தான் இருக்கிறார்கள் என்று அவர்கள் நம்புகிறார்கள். ஆகவே ஒருவரை வசைபாட வேண்டுமென்றால் முதலில் அவர் சாதியைப்பற்றித்தான் பேசவேண்டும் என்று எண்ணுகிறார்கள். காந்தியைப் பற்றிய ஒரு விவாதத்தின் தரப்பாக ஆகும் தகுதியெல்லாம் அவர்களுக்கு இல்லை.

இந்தவிஷயத்தை உண்மையான அக்கறையுடன் ஆராய உங்களுக்கு ஆர்வமிருக்குமென்றால் சில விஷயங்களைக் கருத்தில்கொண்டு நாம் யோசிக்கலாம். ஒன்று ஒருவருடைய சாதி அவரது குணத்திலும் ஆளுமையிலும் என்ன வகையான விளைவுகளை , சாதகமாகவும் பாதகமாகவும், உருவாக்கும் என்பது. இரண்டு, சாதிக்கு ஏதாவது சமூகப்பங்களிப்பு உண்டா என்பது. மூன்றாவதாக, இந்திய வரலாற்றில் பனியா பண்பாடு என்பதற்கான வரலாற்றுப்பின்புலம் என்ன என்பது.

**ஒருவருடைய சாதி அவர் பிறந்துவிழுந்ததுமே அவரைச் சூழ்ந்து கொள்கிறது சாதியை எந்தவிதமான சமூகவியல் ஆராய்ச்சிமுறைமையும் இல்லாமல், அது ஒருசாராரால் இன்னொரு சாரார் மேல் திணிக்கப்பட்ட ஒரு அமைப்பு என்றும் அது ஒரு ஒடுக்குமுறைக் கருவி மட்டுமே என்றும் சொல்லிக்கொண்டிருக்கும் பழைய வாய்ப்பாடுகளுக்கு இந்த விவாதத்தில் இடமே இல்லை. அது இந்தியசமூகத்தில் மக்களுடைய பழங்குடி அடையாளத்தில் இருந்து உருவாகி வந்தது, நிலப்பிரபுத்துவம் உருவான**

**காலத்தில் ஒன்றுக்கு மேல் ஒன்றாக அடுக்கப்பட்டு அதிகார அமைப்பாக ஆகியது**

*இந்தியாவில் உள்ள கோடானுகோடி மக்களுக்கு அவர்களின் பாரம்பரிய அடையாளம் சாதி. அவர்களின் சுயத்தைத் தீர்மானிக்கும் முக்கியமான பண்பாட்டுக்கூறு அது. ஒருசாதி எந்த சமூகப்படிநிலையில் நின்றாலும் சரி, அந்த மக்களுக்கு அந்த அடையாளம் அவர்களின் பெருமைக்குரிய பாரம்பரியத்தின் வடிவம்தான். அதனால்தான் அதை இழக்க அவர்கள் சம்மதிப்பதேயில்லை. நடைமுறையில் சாதியாகவே அம்மக்கள் திரளமுடிகிறது. சாதிகளாகவே அவர்கள் இணைந்து செயலாற்ற முடிகிறது.*

*நம் நாட்டில் சாதியும் தொழிலும் பின்னிப்பிணைந்தவை. ஒவ்வொரு சாதியும் அவர்களுக்கான தொழில்களங்களைக் கொண்டிருக்கிறது. இவ்வாறு பல்லாயிரம் வருடங்களாக ஒரே இனக்குழுவாக இணைந்து செயலாற்றி வருவதன் மூலம் ஒவ்வொரு சாதிக்கும் அவர்களுக்கான தனித்திறமைகளும் குணாதிசயங்கள் உருவாகி வருகின்றன. மூவாயிரம் வருடம் போர்புரிந்த சாதிக்கு ஒருகுணம் உருவாகிவருகிறது. மூவாயிரம் வருடம் வணிகம் புரிந்த சாதிக்கு ஒரு குணம் உருவாகி வருகிறது.*

***முன்னோர்கள் அனுபவத்தின் வழியாக கற்றவை அச்சாதியில் சமூக ஏற்பாடுகளாக, ஆசாரங்களாக, நம்பிக்கைகளாக, மரபுகளாக பேணப்படுகின்றன. அவை அதற்கான மனநிலைகளை மெல்ல மெல்ல உருவாக்குகின்றன. அந்த மனநிலை அச்சாதியின் பொதுமனநிலையாக மெல்ல மெல்ல வடிவம் கொள்கிறது. அச்சாதியின் மொழியில், குலதெய்வம் விரதங்கள் பண்டிகைகள் போன்ற அச்சாதியின் படிமங்களில் அது உறைகிறது. அந்த மனநிலைக்குள் பிறந்து விழுந்த குழந்தை அந்த மனநிலையையே தன் ஆழ்மனதின் இயல்பாக கொண்டுவளர்கிறது.***

*அக்குழந்தையின் தனிப்பட்ட ஆளுமை பல திசைகளில் வளரலாம். ஒருவன் தான் பிறந்த சாதிக்குள் மட்டுமே சிந்திக்க முடியும் என்றும், அதற்கு அப்பால் அவனுக்கு ஆளுமை இல்லை என்றும் சொல்வது பழமைவாதம். அதை விதியாக ஆக்குவது ஃபாசிஸம். ஆனால் மனிதனை அந்தப் பாரம்பரிய அடையாளத்தில் இருந்து முற்றாகத் துண்டித்துப்பார்க்க முடியும் என்று எண்ணுவது வெறும் பகற்கனவு. மனிதனின் ஆளுமை என்பது இந்த இரு நிர்ணயிக்கும் சக்திகளின் முரணியக்கம் மூலம் உருவாகி வருவது.*

*உதாரணமாக நான் நாயர். போரிடும் சாதி. நிலவுடைமை சாதி. அந்தச் சாதியடையாளத்தை மீறிசெல்லவே என் வாழ்நாள் முழுக்க முயன்று வருகிறேன். என் மணவாழ்க்கை, என் நட்புகள் எதிலும் சாதி இல்லை,. என் சாதி நாநூறு வருடங்களுக்கு முன்னரே செவ்வியல் கலைகளுக்கும் செவ்வியல் இலக்கியத்துக்குள்ளும் வந்துவிட்டது. நிலப்பிரபுத்துவ உயர்பண்பாட்டை அடைந்தும் விட்டது. மிஷனரிகளின் தயவால் நவீனக்கல்விக்கு நூறு வருடங்களுக்கு முன்னரே வந்துவிட்டது.*

*இன்றைய நாயர்கள் வலுவான இனக்குழுக்கள் அல்ல. பெரும்பாலான நாயர் குடும்பங்களில் பலசாதிகளில் மணம்புரிந்து மருமகன்களும் மருமக்களும் பேரக்குழந்தைகளும் இருப்பார்கள். சமீபமாக வெள்ளை, மஞ்சள் இனத்திலும் சாதாரணமாக மணம் நடக்கிறது. நாயர்களுக்கு இன்று பணம் மூலம் வரும் அந்தஸ்து மட்டுமே அளவுகோல். ஆனால் அந்த அம்சங்களை மீறி அவர்களின் அந்த தனிக்குணமும் நீடிக்கத்தான் செய்கிறது.*

*ஆகவே 'சாதிப்புத்தி' என்பது ஓர் நடைமுறை உண்மை. அதை முழுக்க முழுக்க எதிர்மறையான கோணத்தில் பார்க்கவேண்டியதில்லை. நூற்றாண்டுகளாக சேர்த்துக்கொண்ட திறமைகள் பாரம்பரிய இயல்பாக ஆதல் என்று சொல்லலாம். இந்த இயல்புகளில் கண்டிப்பாக சிறந்தவையும் உண்டு, அல்லவையும் உண்டு. எந்த ஒரு சாதிக்கும் மேன்மைகளை மட்டுமே உரிமைகொண்டாட இயலாது, எவருக்கும் இழிவை மட்டுமே பொறுப்பளிக்கவும் இயலாது.*

*இந்தியாவின் பல தொழில்களில் குறிப்பாக ஆசாரிமார், சிற்பிகள் போன்றவர்களில் இது மிகச்சிறப்பான விளைவை உருவாக்கியிருக்கிறது.*

*ஆனால் என்னுடையது போன்ற போர்த்தொழில் சாதிகள் பாரம்பரியமாக அடைந்த இயல்புகள் பெரும்பாலானவற்றுக்கு எந்த மதிப்பும் இன்று இல்லை என்றே நான் நினைக்கிறேன். தொழில்சார்ந்த சாதகமான நுண்ணுணர்வுகளே முக்கியமானவை. காந்தியில் அவரது பனியா சாதி நூற்றாண்டுகளாக சேர்த்துக்கொண்ட பல விஷயங்கள் நம்பிக்கைகளாகவும் பழக்க வழக்கங்களாகவும் நுண்ணுணர்வுகளாகவும் செயல்பட்டிருக்கக்கூடும் என்றே நான் நினைக்கிறேன்.*

***இந்தியாவில் மட்டுமல்ல உலகம் முழுக்கவே ஒரு விஷயத்தை கவனிக்கமுடிகிறது. வரண்ட , பாலைநில மக்களே பெரும்பாலும் சிறந்த வணிகர்கள். அம்மக்களுக்கு வேறு வழியே இல்லை என்பது ஒரு காரணம். அவர்கள் உயிர்வாழ்வதற்காக வளர்த்தெடுத்துக்கொண்ட பல இயல்புகள் வணிகத்துக்கு மிகப்பொருத்தமானவையாக இருப்பது இன்னொரு காரணம். ஒவ்வொரு காசிலும் சிக்கனமாக இருப்பது, பொறுமையாக நெடுநாள் காத்திருப்பது, வெற்றிகொண்டே ஆகவேண்டுமென்ற வேகம், உறுதியான குழுக்களாகச் சேர்ந்து  செயல்படும்தன்மை ஆகியவையே அவை.***

*இந்தியநிலத்தில் நாமறியும் ஆரம்பகாலம் முதலே ராஜஸ்தான் மற்றும் குஜராத் பகுதிகளைச் சேர்ந்தவர்களே சிறந்த வணிகர்கள். மிகத்தொன்மையான காலத்திலேயே வணிகர்கள் துவாரகையில் இருந்து வந்தார்கள் என்ற குறிப்புகளை நாம் இலக்கியங்களில் காண்கிறோம். இவர்களின் இயல்புகள் வணிகம் மூலமே உருவாகிவந்தவை.*

*இந்தியாவில் சமணம் மிகுந்தசெல்வாக்குபெற்ற நிலப்பகுதி இது. இன்றும் சமணம் இங்கேதான் ஒப்புநோக்க வலுவாக இருக்கிறது. சமணம் இந்தியாவில் இன்றைக்கு இரண்டாயிரத்தைநூறு வருடம் முன்பு உருவாகியது. சமணம் அதன் அடிப்படைத்தரிசனங்களை அதற்கு முன்பிருந்த லோகாயத [நாத்திகவாதம், பொருள்முதல்வாதம்]  பாரம்பரியத்தில் இருந்து எடுத்துக்கொண்டது. ஆகவே சாராம்சத்தில் இந்துஞானமரபின் மைய ஓட்டமாக அமைந்த வைதிக மரபுக்கு நேர் எதிரானது சமணம்.*

இவ்வாறு சுருக்கமாகச் சொல்லலாம். இந்துமெய்ஞான மரபின் மைய ஓட்டமாகிய வேதஞானம் இந்த பிரபஞ்சவெளி நாம் அறிய முடியாத ஒரு மையநோக்கம் அல்லது மையத்திட்டம் அல்லது மைய ஆற்றல் கொண்டது என்று நம்புகிறது. அந்த மையமே உண்மை, நாம் காண்பதெல்லாம் அதன் மாறுபட்ட தோற்றங்களையே என வாதிடுகிறது. அந்த பிரபஞ்ச சாரத்தை அது பிரம்மம் என்று வகுக்கிறது. பார்ப்பவையெல்லாமே பிரம்மத்தின் வடிவங்கள் என்று சொல்கிறது.

இதிலிருந்து உருவானதே வேதஞானத்தின் விடுதலைக் கோட்பாடு. இந்த உலகச்செயல்களில் ஈடுபடும்போதே இது ஒரு பெரும் மாயை என்ற பிரக்ஞையுடன் இருப்பதே அது சொல்லும் வழி. செயல்களை திறம்பட ஆற்ற அந்த விலகல்நிலை உதவும். இறுதியில் இந்த மாயை முற்றாக விலகி இப்பிரபஞ்சத்தின் உண்மையாக எது உள்ளதோ அதை அறிந்து அதாக தன்னை உணர்தலே வேதஞானம் கூறும் மீட்புநிலை, முக்தி நிலை.

இந்தமையத்துக்கு எதிராகப்பேசிய புராதனமான தரிசனங்கள் பல இருந்தன. அவற்றின் சாராம்சங்களை எடுத்துக்கொண்டு விரிவான தத்துவ அடிப்படையை உருவாக்கிக் கொண்டு உருவானது சமணம். அதன் உலகநோக்கு அனைத்திருப்புவாதம் [சர்வாஸ்திவாதம்] எனப்படுகிறது. பிரபஞ்சத்தில் நாம் அறியும் எல்லாமே உண்மையானவை என்பதே அதன் பொருள். எதுவுமே மாயை அல்ல, பொய்த்தோற்றமும் அல்ல. ஆகவே இந்த உலகின் சாராம்சத்தை இந்த உலகுக்கு அப்பால் சென்று தேடவேண்டியதில்லை.

இதன் நீட்சியாகவே சமணர்கள் அனைத்துச்சார வாதம் [சர்வாத்ம வாதம்] என்ற கொள்கையை உருவாக்கினார்கள். பிரபஞ்சத்தில் உள்ள எல்லாவற்றுக்கும் , உயிர்களுக்கும் பொருள்களுக்கும்கூட, ஆன்மா உள்ளது. ஆன்மா என்றால் சமணத்தைப்பொறுத்தவரை சாராம்சமான கருத்துநிலை என்றே பொருள். ஒரு கல்லை கல்லாக வைத்திருப்பது அதன் ஆன்மாதான். அதாவது இப்பிரபஞ்சத்தில் உள்ள கோடானுகோடி ஆன்மாக்களில் ஒன்று மட்டுமே நாம். நாயைப்போல, செடியைப்போல, பாக்டீரியாவைப்போல, மலையைப்போல, கூழாங்கல்லைப்போல. அதற்குமேல் ஏதுமில்லை.

இதில் இருந்து சமணர்கள் வந்துசேர்ந்த அடிப்படைத்தரிசனம் என்பது ஒருமைமறுப்புவாதம் [அனேகாந்தவாதம்] எனப்படுகிறது. உண்மை என்பது உச்சநிலையிலும்சரி அடித்தளத்திலும் சரி பன்மையாகவே மனிதனுக்கு கிடைக்கும் என்பதே அதன் சாரம். ஒருபோதும் முழுமுதல் உண்மை ஒரு மனித மனத்துக்கு தட்டுப்பட்டுவிடமுடியாது. மனிதன் அந்த அளவுக்குச் சிறியவன், உண்மை அந்த அளவுக்குப் பிரம்மாண்டமானது.

எனவே ஒரே உண்மையின் பல முகங்கள் பல கோணங்களினாலான பார்வைகள் எப்போதும் இருக்கும், எல்லாம் உண்மையே அதேசமயம் எல்லாமே தவறும்கூட. முழு உண்மை என்பது பலநூறு பல்லாயிரம் கோடி தனி உண்மைகளின் ஒட்டுமொத்தமாகவே நம்மால் அறியப்பட இயலும். இந்த உண்மையை விளக்க சமணர்கள் கூறிய உதாரணமே யானையை தொட்டுப்பார்த்த ஐந்து குருடர்களின்கதை

ஒருமைமறுப்புவாதம் காந்தியை பெரிதும் கவர்ந்திருக்கிறது. '' உண்மையின் பன்மைத்தன்மை என்னை மிகவும் கவர்ந்த கொள்கை. இந்த கொள்கையை வைத்தே ஓர் இஸ்லாமியரை அவரது பார்வையிலும் கிறிஸ்தவரை அவரது பார்வையிலு நான் புரிந்துகொள்கிறேன். ஆரம்பகாலத்தில் நான் என் எதிர்தரப்பினரின் அறியாமையை எண்ணி பொறுமை இழந்திருக்கிறேன். இப்போது என்னால் அவர்களையும் நேசிக்க முடிகிறது. ஏனென்றால் இப்போது அவர்கள் என்னைப்பார்க்கும் கோணத்திலும் என்னை என்னால் பார்க்கமுடிகிறது. என்னுடைய ஒருமைமறுப்புவாதம் என்பது சத்தியம் அகிம்சை என்ற இரட்டைக்கொள்கையின் விளைவாக உருவாகிவந்தது''

இதன் நீட்சியாக உருவானதே சமணர்களின் அடுத்த மையக்கொள்கையான ஆனால்வாதம் [சியாத்வாதம்] என்பது. நாம் நம்மைச்சுற்றி உள்ளவற்றைப்பற்றி அறியும் எந்த அறிவும் முழுமையானதல்ல, எல்லாமே சார்புநிலை உள்ளதே. புராதன கிரேக்க அவநம்பிக்கைவாதம் [Sceptisim] எதுவுமே தீர்மானமானவையல்ல எல்லாமே ஒப்பீடானவை [Nothing is absolute everything is relative] என்ற நவீன இயற்பியல் கோட்பாடு ஆகியவற்றுக்கு மிக நெருக்கமான சிந்தனை இது.

இந்நான்கு பிரபஞ்சதரிசனங்களின் அடிப்படையில் சமணம் உலகியல்வாழ்க்கையை வகுத்துக்கொள்கிறது. இந்த உலகம் உண்மையானது. இதன் துயரங்களும் இன்பங்களும் உண்மையானவை. இதில் உள்ள எல்லாவற்றுக்கும் சாராம்சமும் சுயமான வாழ்க்கையும் உள்ளது. அந்த சாராம்சத்தையும் நோக்கத்தையும் நம்மால் முழுமையாக அறிந்துகொள்ளவே இயலாது. ஆகவே நாம் நமக்களித்துள்ள வாழ்க்கையை நம்முடைய ஆன்மா நிறைவுறும்படியாக வாழ்வதே முழுமைநிலை என்பது.

அவ்வாறு வாழ்வதற்கு அவசியமான முதல் விதி என்பது அகிம்சையே. ஒவ்வொரு உயிருக்கும் ஒவ்வொரு பொருளுக்கும் ஆன்மா உண்டு என்னும்போது பிறிதை அழிக்காமலிருப்பதே உயர்வான விழுமியம் ஆகிறது. ஒவ்வொன்றுடனும் கொள்ளும் மிகச்சிறந்த உறவே உண்மையான வாழ்க்கை ஆகிறது. அதுவே அகிம்சை.

அகிம்சை ஒருவனை தன்னைச்சார்ந்த எல்லாவற்றுடனும் உண்மையுடன் இருக்கச் செய்கிறது. ஒவ்வொன்றுடனும் கருணையுடன் இருக்கச் செய்கிறது. தன் வாழ்க்கையை அமைத்தபின் அதற்குமேல் ஏதும் தேவையில்லை என்ற நிலையை

இறுதியாக அடையச்செய்கிறது. உண்மை, கருணை, துறவு ஆகிய விழுமியங்களே அகிம்சையின் நடைமுறைநிலைகள். அவற்றின் வழியாக தன் வாழ்க்கையை நடத்திச் செல்பவன் ‘வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்’, அவனே தெய்வநிலையை அடைந்தவன். இதுவே சமணம் கூறும் முழுமைநிலை அல்லது முக்தி. கிட்டத்தட்ட இந்தக் கொள்கைகள் அனைத்தையுமே திருக்குறளில் காணலாம்.



வேதஞானம் பிராமணர்களுக்கும் ஷத்ரியர்களுக்கும் உவப்பானதாக இருந்தது. அவர்கள்தான் ஆரம்பகாலத்தில் இந்திய சமூகத்தை உருவாக்கி தொகுத்து தக்கவைக்கும் மைய ஆற்றல்களாக இருந்தார்கள். பிரம்மம் என்ற மையக்கருத்து ஒரு மாலையின் சரடுபோல பல்வேறு இனக்குழுக்களின் மதங்களையும் ஆசாரங்களையும் இணைத்து அவர்களை ஒரே சமூகக் கட்டுமானத்துக்குள் கொண்டுவரவும், அவர்களைமேல் கீழாக அடுக்கி ஒரு நிலப்பிரபுத்துவ அரசமைப்பை நிறுவவும் உதவியாக இருந்தது. அதன் விளைவே இந்துமதம். அதன் விளைவே ஆரம்பகாலப் பேரரசுகள்.

இந்திய சமூக உருவாக்கத்தின் அடுத்த கட்டத்தில் வைசியர்களின் பங்களிப்பு முக்கியத்துவம் பெற்றது. இந்தியா முழுக்க நிலவழிகள் மற்றும் கடல்வழிகள் கண்டடையப்பட்டன. இந்தியாவின் விரிந்த நிலப்பகுதிகளை இணைக்கும் நரம்புப்பின்னலாக அவை அமைந்தன. அவற்றினூடாகச் சென்ற வணிகர்கள் இந்தியாவின் பல்வேறு சமூகவளர்ச்சிப்படிநிலைகளில் வாழ்ந்த பல்லாயிரம் சமூகங்களை வணிகம் மூலம் ஒன்றுடன் ஒன்று தொடுக்க ஆரம்பித்தார்கள். நாமறியும் இன்றைய இந்தியா இவ்வாறாக இன்றைக்கு இரண்டாயிரத்தைநூறு வருடம் முன்பு உருவானதே.

அந்த இணைப்புப் போக்கில் மெல்லமெல்ல வணிகர்கள் பலம் மிக்க சக்திகளாக எழுந்து வந்தார்கள். பிராமண- சத்ரிய அதிகாரத்துக்கு எதிராக ஒரு வைசிய சக்தி எழுந்தது என இதை ஆய்வாளர் சொல்கிறார்கள். வணிகர்கள் செல்வம் மூலம் அதிகாரம் கொண்டவர்களாக ஆனார்கள். பிறகு ஏறத்தாழ ஆயிரம் வருடம் வைசியர்களுக்கும் பிராமண-ஷத்ரியர்களுக்குமான முரணியக்கம் நம் சமூகத்தில் நீடித்தது.

அர்த்த சாஸ்திரத்தில் சாணக்கியன் மன்னர் எப்படி வணிகர்களைக் கட்டுக்குள் வைத்திருக்கவேண்டும் என்று விரிவாகப் பேசுகிறார். முத்ரா ராட்சஸம் போன்ற நாடகங்களில் வணிகர்கள் எப்படியெல்லாம் அதிகார ஆட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள் என்று காணமுடிகிறது. கதாசரித சகரம் போன்ற புராதன நூல்கள் வணிகர்களின் அதிகாரம் செல்வம் ஆகியவற்றைப் பற்றியே பேசுகின்றன.

இந்தப் பரிணாமப்போக்கில் வணிகர்களுக்கான மதம் ஒன்று தேவைப்பட்டது. அதிகார அடுக்கை உருவாக்குவதற்குப் பதில் சமூக உரையாடலை நிகழ்த்தும் மதம். வெவ்வேறு படிநிலைகளில் இருக்கும் பல்லாயிரம் சமூகங்களை பொதுவான சில விழுமியங்களுக்குள் கொண்டுவரும் வல்லமை கொண்ட மதம்.ஆயுதபலத்தை நம்பாமல் அதற்கிணையான இன்னொரு ஆயுதத்தை அளிக்கக்கூடிய மதம். அவ்வாறாக சமணம் வணிகர்களின் மதமாகக் கண்டடையப்பட்டது. பின்னர் முந்நூறு வருடம் கழித்து பௌத்தமும் அதேபோல உருவாக்கப்பட்டது.

சமணம் பெருவணிகர்களின் ஆதரவால் இந்தியா முழுக்க பரவிய மதம். உலகவரலாற்றின் முதல் ‘மிஷனரி’ மதம் அதுதான். திட்டமிட்டு அர்ப்பணிப்புள்ள மதப்பரப்புநர்கள் எல்லா திசைகளுக்கும் அனுப்பப்பட்டார்கள். அவர்கள் மெல்லமெல்ல தாங்கள் சென்ற இடங்களின் வாழ்க்கையிலும் பண்பாட்டிலும் கரைந்து அங்கே தங்கள் கருத்துக்களை நிறுவினார்கள். வணிகர்களின் நிதியுதவி சமணமதத்தின் பரவலுக்கு பெரிய அடித்தளத்தை அமைத்தமையால் மிகவேகமாக அந்த மதம் இந்தியாவை ஆட்கொண்டது.

சமணம் பரவிய வழியை நீர் சென்ற தடம்போல இந்தியாவின் மத்திய நிலப்பகுதியில் இப்போதும் காணலாம். ராஜஸ்தானில் இருந்து குஜராத்தின் அகமதாபாத் வழியாக மத்தியபிரதேசத்துக்குள் புகுந்து, போபால் வழியாக ஆந்திரத்தில் ராயலசீமா வழியாக கர்நாடகாவில் சிவரணபௌகொலா வழியாக தமிழ்நாட்டுக்குள் நுழைந்து, கன்யாகுமரி சிதறால் வரை வந்தது அது. இவ்விடங்களில் இன்றும் முக்கியமான சமணபீடங்கள் வரிசையாக உள்ளன. அதேசமயம் அன்றைய இன்னொரு முக்கியமான வணிகப்பாதையான தஞ்சைமுதல் வங்கம் வரையிலான கடற்பாதையில் சமணத்தின் பாதிப்பு இல்லை.

சமணம் கல்வியையும் மருத்துவத்தையுமே தன் ஆயுதமாகக் கொண்டது. தமிழ் உட்பட எல்லா இந்திய மொழிகளிலும் முக்கியமான இலக்கணநூல்களையும் நீதி நூல்களையும் சமணர்கள் எழுதியிருக்கிறார்கள். ஆயுர்வேத மருத்துவத்தை அவர்களே நாடெங்கும் கொண்டுசென்றார்கள். கல்வியும் மருத்துவமும் அளிக்கப்பட்ட தர்மசாலாக்கள் வழியாக அவர்கள்




எளிய மக்களுக்குள் ஊடுருவி பெரும்செல்வாக்கை செலுத்தினார்கள்.

வணிகர்கள் ஏன் சமணத்தை ஆதரித்தார்கள் என்றால் அது வணிகத்துக்குச் சாதகமான விழுமியங்களை பரப்பியது என்பதனால்தான். அன்றைய இந்தியப்பெருநிலம் எப்படி இருந்திருக்கும் என்று எவரும் எளிதில் ஊகிக்கலாம். பல்லாயிரம் பழங்குடிகள் ஒருவரோடொருவர் இடைவெளியில்லாத போரில் ஈடுபட்டிருந்திருப்பார்கள். சமணம் அவர்கள் நடுவே ஒரு மாபெரும் சமரச மனநிலையை உருவாக்கியது. அதன் அகிம்சை என்பது போர்களே வாழ்க்கையாக இருந்த ஒரு நிலத்துக்கு மிகப்பெரிய ஒரு வரமாக அமைந்திருக்கவேண்டும். அகிம்சையை அவர்கள் கல்வியுடன் கலந்து கொண்டுசென்றார்கள். இந்தியாவெங்கும் பொதுமொழியாக சம்ஸ்கிருதத்தைக் கொண்டுசென்றவர்களும் அவர்களே. இந்திய பழங்குடிமொழிகளும் தொல்மொழிகளும் சம்ஸ்கிருதம் மூலம் ஒன்றுடன் ஒன்று உரையாட வழிசெய்தார்கள்.

சமரசம் உரையாடல் ஆகியவை மூலம் சமணர்கள் உருவாக்கியதே இந்தியப்பண்பாட்டின் பொதுக்கட்டுமானம் என்று சொல்லலாம். முன்னரே வேதமதம் இந்தியாவெங்கும் பரந்திருந்தது. பல்லாயிரம் பழங்குடிகளை புராணம் மூலம் இணைத்து அவர்களின் ஆதிக்கத்தின் அளவை அடிப்படையாகக் கொண்டு மேல்கீழாக அடுக்கி ஓர் அதிகாரக் கட்டுமானத்தை அது உருவாக்கியிருந்தது. ஆனால் அந்த அமைப்புக்குள் ஒவ்வொரு கூறும் ஒன்றுடன் ஒன்று போரிட்டுக்கொண்டே இருந்தன. போருக்குப் பதில் சமரசத்தையும் உரையாடலையும் கல்விமூலம் உருவாக்கிய சமணம் அக்கால மன்னர்களுக்கும் உகந்ததாக இருக்கவே அது அரசமதமாகவும் ஆகியது.

பௌத்தம் சமணத்தின் பின்னால் அதே வழியாக வந்தது. அவை இரண்டையுமே ஒரே மதமாக நோக்கும் அணுகுமுறை நம் மரபில் இருந்துள்ளது. பற்பல நூற்றாண்டுக்காலம் இந்திய சமூகத்தின் பண்பாட்டுக்கும் சிந்தனைக்கும் அம்மதங்கள் ஆற்றிய பங்களிப்பு முக்கியமானது. அவை இரண்டுமே வணிகர்களின் மதங்கள். இந்தியாவில் உள்ள எல்லா வணிகசாதிகளும் சமணர்களாகவோ பௌத்தர்களாகவோ இருந்தவர்களே.

சமண ஆதிக்கம் அடுத்த கட்டத்தில் உருவான பக்தி இயக்கத்தால் ரத்துசெய்யப்பட்டது என்று சொல்லும் வரலாற்றாய்வாளர் உண்டு. அவை பக்தி இயக்கத்தால் உள்வாங்கப்பட்டன, அவற்றின் சாராம்சமான விழுமியங்கள் வளர்த்தெடுக்கப்பட்டன என்பதே முறை. எந்த மக்கள் சமணர்களாக இருந்தார்களோ அவர்களே பக்தி இயக்கத்தையும் உருவாக்கினார்கள். சமணமும் பௌத்தமும் அடிப்படையில் வணிகர்களின் மதங்கள் என்றால் பக்தியியக்கம் சூத்திரர்களின் மதம். வேள்விகளையும் தத்துவசிந்தனையையும் அடிப்படையாகக் கொண்டது பிராமண ஷத்ரியர்களின் வேதமதம். விரதங்களையும் தத்துவசிந்தனைகளையும் தியானத்தையும் அடிப்படையாகக் கொண்டது வைசியர்களின் சமண-பௌத்த மதங்கள். திருவிழாக்கள், பண்டிகைகள், கலைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது சூத்திரர்களின் பக்தி இயக்கம்.

பக்தி இயக்கம் சமண பௌத்தத்தின் சமரசம், அகிம்சைபோன்ற பல அடிப்படை மதிப்பீடுகளை முன்னெடுத்தது. சமணத்தின் சிக்கலான தத்துவ விதிகளை அது வளர்க்கவில்லை என்றாலும் அனேகாந்தவாதம் போன்ற கருத்துக்கள் பக்தி இயக்கத்திலும் ஆழமாக இருந்தன. எல்லா பார்வைகளையும் சமமாக மதிக்கும் சமரச நோக்கு பக்தி இயக்கத்தின் பெரும்பாலான ஞானிகளிடம் இருந்தது.

பக்தி இயக்கம் தமிழகத்தில் இருந்து மேலே சென்று பலநூற்றாண்டுக்காலமாக பரவி வட இந்தியாவை முழுமையாக கைப்பற்றியது. கடைசியாக சைதன்ய மகாப்பிரபு வரையில் பக்தி இயக்கத்தின் அலை நீடித்தது. கலைகளே பக்தி இயக்கத்தின் ஊடகம் என்பதனால் சைவத்தைவிட வைணவம் மேலே எழுந்தது. வட இந்தியா பெரும்பாலும் வைணவத்தைச் சார்ந்ததே.

தமிழகத்தின் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும், சைவவேளாளர்களும், சைவ முதலியார்களும் பக்தி இயக்கத்துக்கு முன்னர் சமணர்களாக இருந்து பின்னர் சைவர்களாக ஆனவர்கள் என அவர்களின் ஏராளமான சடங்குகள் ஆசாரங்கள் வழியாகச் சொல்லமுடியும். செட்டியார்களில் பதினேழாம் நூற்றாண்டில்கூட சமணர்கள் இருந்திருக்கிறார்கள். வட இந்திய வணிகர்களில் பெரும்பாலானவர்கள் வைஷ்ணவ மதத்துக்குச் சென்றார்கள். ஒருசாரார் சமணர்களாகவே நீடித்தார்கள்.

இன்றும் இந்தியாவில் சமணர்கள் முக்கியமான வணிகக்குழுவே. சமணம் அவர்களுக்கு வணிகத்தின் பகுதியாக அறம்செய்தலையும் போதித்திருக்கிறது. இந்தியாவில் மிகப்பெரும்பாலான அறநிறுவனங்கள் சமணர்கள் நிறுவி

நடத்துவனதான். தமிழகத்திலும்கூட பெரும் அறக்கொடைகள் செட்டியார்களுடையவை. பிற பண்பாடுகளில் எளிய மக்களுக்கு வணிகச்சமூகம் மீது இருக்கும் கசப்புகள் இங்கே இல்லாமல் போனது இந்த அறம்செய்யும் மனநிலையினால்தான்.

காந்தி வைஷ்ணவத்தை தழுவிய வணிக சாதியைச் சேர்ந்தவர். பனியா என்பது வாணிஜ்ய என்ற சம்ஸ்கிருதச் சொல்லின் மரூஉ. [பாணிஜ்ய, பானிய, பனியா] அது வணிகன் என்ற தமிழ்ச்சொல்லின் சம்ஸ்கிருத எடுத்தாளுகை. பனியா என்ற பொதுச்சாதி அடையாளத்துக்குள் குஜராத்தில் உள்ள 'மோத்' என்ற பிரிவைச்சார்ந்தவர் காந்தி. மோதேஸ்வரி அன்னை என்று சொல்லக்கூடிய பதினெட்டுகரங்களுடைய தாய்தெய்வத்தை வழிபடும் பிரிவு இது. இவர்கள் வாழ்ந்த பகுதி மோதேரா என்று சொல்லப்பட்டது. அதிலிருந்து இவர்களின் சாதிப்பெயர் வந்ததுமோத்திகளில் பிராமணர்களும் வைசியர்களும் சூத்திரர்களும் உண்டு. காந்தி ஒரு மோதி பனியா எனலாம்.

இங்கே ஒன்றைக் கவனிக்கவேண்டும். ஒரு மக்கள்கூட்டம் சமண மதத்துக்குள் இருக்கும்போதே குலதெய்வம்போன்ற பிற தெய்வங்களை வணங்கலாம். தமிழ்நாட்டிலும் சமணம் வலுவாக இருந்தபோதே குலதெய்வ வழிபாடும் இருந்தது. சமணம் ஓர் உயர்நிலைமதமாக அவர்களுடன் இருக்கும். இப்போது நாம் மாடசாமியையும் சிவபெருமானையும் ஒரேசமயம் வழிபடுவதுபோல. மோதிபனியாக்கள் பெரும்பாலும் சமணர்களாகவே பதினேழாம் நூற்றாண்டுவரை இருந்திருக்கிறார்கள். அகமதாபாத் அருகே உள்ள தாந்துகா [Dhandhuka] என்ற ஊரில் இவர்களின் சமணமடாலயம் உள்ளது. வாத்வான் என்ற இடத்தில் மோத் பனியாக்களால் கட்டப்பட்ட 500 சமண கோயில்கள் உள்ளன.

காந்தியின குடும்பம் வைஷ்ணவ மதத்தை தழுவியபோதிலும்கூட சமணர்களாகவும் இருந்திருக்கிறார்கள். இதை இஸ்லாமிய கிறித்தவ மதங்களுக்குச் செல்வதுபோல பார்க்கலாகாது. சமணம் பலவீனப்பட்டு பக்தி இயக்கம் மூலம் சைவமும் வைணவமும் வலுப்பெற்றபின் ஏறத்தாழ மூந்நூறாண்டுகள் கோடிக்கணக்கான மக்கள் ஒரேசமயம் சமணர்களாகவும் சைவவைணவர்களாகவும் கூடவே குலதெய்வ வழிபாடு கொண்டவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். காந்திகுடும்பம் சமண ஆசாரங்களை பேணி வந்தது. காந்தியின் அம்மா புத்லிபாய் சமணத்துறவியாப பேசாரி சுவாமி என்பவரை குருவாக வழிபட்டுவந்தார். அவரே காந்தி லண்டன் சென்றபோது சைவ உணவையும் பிற ஆசாரங்களையும் விடுவதில்லை என்று சத்தியம் வாங்கச்சொல்லி புத்லிபாய்க்கு ஆலோசனைசொன்னவர் என்று சத்திய சோதனையில் காந்தி சொல்கிறார்.

ஆகவே காந்தியை ஒரு சமணராகவும் நாம் எடுத்துக்கொள்ளவேண்டும். அவர் பல இடங்களில் சமண ஆசாரங்கள் மேல் தனக்குள்ள நம்பிக்கையைச் சொல்கிறார். இந்தியாவை ஒருங்கிணைத்த சமணக் கருத்தியலின் சமகால நீட்சியே காந்தி. அவர் சொன்ன அகிம்சை என்பது சமணத்தின் ஆதாரமான கோட்பாடுதான். காந்தியப்போராட்ட வழிமுறைகளான சத்யாக்ரகம், உண்ணாவிரதம் போன்றவை பற்பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே சமணமுனிகள் பயன்படுத்தி வெற்றிகண்டவை.

இந்திய வரலாற்றை எடுத்துப்பார்த்தால் இந்தியாவை ஒருங்கிணைத்து முன்னெடுப்பதில் இருபோக்குகள் உள்ளன என்பதைக் காணலாம். ஒன்று பிராமண-ஷத்ரிய வழிமுறை. ஒரு மையத்தை உருவாக்கி அதன்மூலம் அனைத்துப்பிரிவுர்களுடனும் விரிவான உரையாடலை நிகழ்த்தி அதற்கேற்ப தன்னை மாற்றியமைத்துக்கொண்டு தன் நெகிழ்வான கட்டமைப்புக்குள் எல்லாரையும் உள்ளிழுத்துக்கொளவ்து அதன் வழி. எல்லா பிரிவினரையும் கீழ் கீழாக அடுக்குதல் அதன் இயல்பு. அதற்கு ஞானத்தையும் ஆயுதத்தையும் ஒரே சமயம் பயன்படுத்துதல் அதன் வழிமுறை.

இரண்டாவது, சமண — பௌத்தர்களின் வழிமுறைஒரு மைய நோக்கத்தைச் சார்ந்து எல்லாரும் பங்கெடுக்கக்கூடிய ஒரு சமரசத்தை உருவாக்குதல். வன்முறையற்ற வழியில் அனைவரையும் திரட்டுதல். சமண-பௌத்த வழிமுறைகளின் இன்னொரு வடிவமே பக்தி இயக்கத்தின் வழிமுறையாகும்.

திலகர், அரவிந்தர் முதலியோர் முன்வைத்தது பிராமண-ஷத்ரிய வழிமுறையை என்பதைக் காணலாம். திலகர் அவரது எழுத்துக்களில் மிகவிரிவாகவே அதை எழுதியிருக்கிறார். அக்காலத்தில் சாத்தியமானதென அனைவருக்கும் தெரிந்திருந்த ஒரே வழிமுறை அதுவே. அதற்கு எதிராக இருந்த வழிமுறை கோகலே முன்வைத்த ஐரோப்பிய பாராளுமன்ற அரசியலின் வழிமுறை. அதற்கு இந்தியபாரம்பரியத்தில் வேர்கள் இல்லை. ஆகவே அது இங்கே வேரூன்றவும் இல்லை.

பாரதியின் பாடல்களிலேயே நாம் அதை பார்க்கலாம். 'சிவாஜி தன் படைவீரர்களுக்கு உரைத்தது' 'பாஞ்சாலிசபதம்' போன்ற கவிதைகளில் அவர் ஷத்ரிய வீரியத்தையே முன்வைக்கிறார். 'பார்த்தன்போல் விழியினால் விளக்குவாய்' என்று புதியபாரதத்தை அவர் அர்ஜுனவீரத்துடன் இணைத்துப்பார்க்கிறார். ஏனென்றால் அக்காலத்தில் மிகுந்த மன எழுச்சியை அளித்த ஒரு கருத்து அது. அது ஒன்றே வழி என கருதப்பட்டது.

காந்தி இந்திய மரபில் இருந்த, அப்போது முற்றிலும் மறக்கப்பட்டிருந்த, இரண்டாவது வெற்றிகரமான வழியை அரசியலுக்குக் கொண்டுவந்தார். அது சமணர்களின் வழி. திலகரும் அரவிந்தரும் பிராமண-ஷதிரியர்கள். காந்தி பனியா. இந்தியாவில் ஒரு சாத்வீக இணைப்பை உருவாக்கிய மாபெரும் வணிகப் பண்பாட்டின் நீட்சிதான் காந்தி. சமண-பௌத்தப் பண்பாடும் பக்தி இயக்கப் பண்பாடும் சரிவரக் கலந்த ஒரு கலவை. அவருக்குப்பின்னால் அகிம்சையை வழிமுறையாகக் கொண்ட, கல்வியையும் மருத்துவத்தையும் வழிமுறையாகக் கொண்ட, ஒரு மாபெரும் பாரம்பரியம் இருந்தது.

[மேலும்]

---

**காந்தி என்ற பனியா 2**

லாயிட் ருடால்ப் மற்றும் சூசன் ஹோபர் ருடால்ப் எழுதிய 'பின் நவீனத்துவ காந்தி மற்றும் கட்டுரைகள்' [Postmodern Gandhi and Other Essays Lloyd I. Rudolph, Susanne Hoeber Rudolph ] நூலில் ஒரு குறிப்பிடத்தக்க கட்டுரை இருக்கிறது. 'கோழைத்தனம் மீதான அச்சம்' என்ற அக்கட்டுரை இந்திய சாதிகளின் மன அமைப்பில் தீரமும் கோழைத்தனமும் எவ்வாறெல்லாம் பாரம்பரியமாக உருவாகியிருந்தது என்று அக்கால பிரிட்டிஷ் குறிப்புகளின் அடிப்படையில் ஆராய்ந்து அந்த

மனநிலைகள்மேல் காந்தியின் பங்களிப்பு என்ன என்பதை விரிவாகப்பேசுகிறது.

இந்தியாவை ஆளவந்த பிரிட்டிஷார் தங்களுக்குப் பின்னால் வருபவர்களுக்காக குறிப்புகளை எழுதி வைத்துச்சென்றார்கள். அவை பின்னர் முக்கியமான வரலாற்று ஆவணங்களாக ஆயின. உதாரணமாக மதுரா கன்டிரி மானுவல் எழுதிய ஜெ.எச்.நெல்சன் தமிழக மக்களை அவரது ஆதிக்கநோக்கில் சாதியடிப்படையில் குண இயல்புகளைக் கற்பித்துச் செல்வதைக் காணலாம்.

''போலிப்பாவனை கொண்ட பிராமணன் [Pharisaical] சட்டங்களே இல்லாத மறவன், கஞ்சத்தனமான செட்டி, சுயநலவாதியான வெள்ளாளன்,மந்தமான நாயக்கன், தந்திரமாய் பதுங்கும் கள்ளன் [skulking] நிலைகொள்ளாத குறவன், கூறுகெட்ட பறையன் [licentious] ஆகியவையே கூறிய அவதானிப்பின் மூலம் தெளிவாக பிரித்தறியத்தக்க இச்சாதிகளின் உள்ளார்ந்த இயல்புகள்'' [பாகம் I ,பக்கம் 16 . The Madura Country -A manual J.H.Nelson] என்று ஜே.எச்.நெல்சன் சொல்கிறார். இதில் இந்தியர்களைப் பற்றி அவர் கொண்டிருந்த இளக்காரமான பார்வை இருந்தாலும் இது அக்கால பிரிட்டிஷ் ஆய்வுமுறையையும் காட்டுகிறது

இந்த பதிவுகளின் நோக்கம் என்னவானாலும் இந்திய சமூகத்தின் சில இயல்புகள் அதில் காணக்கிடைக்கின்றன.சாதியமைப்பின் மூலம் இன்னாருக்கு இன்ன தொழில் என்பது நூற்றாண்டுகளாக உறுதிப்பட்டிருந்தமையால் இந்திய சாதிகளின் குணங்கள் அதற்கேற்ப அமைந்திருந்தன. இந்திய சமூகத்தில் போர்புரிவதற்கான சாதிகள் தனியாக இருந்தன. போர்க்குணம் என்பது பெரும்பாலும் அவர்களுக்குரியதாகவே இருந்தது. இதைத்தவிர பழங்குடிக்குணம் கொண்ட சில சாதிகள் பூசலிடும்தன்மை கொண்டிருந்தன.

ஆயினும் பொதுவாக இந்தியாவின் மிகப்பெரும்பாலான மக்கள் வன்முறையற்றவர்களாக சமரச நோக்கம் கொண்டவர்களாக இருந்தார்கள். இதற்குக் காரணம் இந்தியகுணத்தை நிர்ணயித்தது சமணம் என்பதே. நம்முடைய கலை, இலக்கிய, பண்பாடு அனைத்துமே அந்த சமரசச்சூழலில் நடந்த நீண்ட கருத்துப்பரிமாற்றம் மூலம் உருவாகி வந்ததுதான்.

இத்தகைய சமூகம் மீது பதொன்றாம் நூற்றாண்டுமுதல் அலையலையாக வந்து மோதிய அன்னியபப்டையெடுப்புகள் , சூறையாடல்கள் இங்கிருந்த போருக்கான அமைப்புகளை நெடுங்கால தாக்குதல்கள் வழியாக முற்றாகவே அழித்துவிட்டிருந்தன. இதன் தன்னம்பிக்கையையும் வீரத்தையும் இல்லாமலாக்கிவிட்டிருந்தன. எஞ்சிய சராசரி இந்தியனின் மனநிலை என்பது பணிந்துபோவதும் பதுங்கிவாழ்வதுமாகவே இருந்தது என அக்கால பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் கருதினார்கள்.

தங்கள் கட்டுரையில் லாயிட் ருடால்ப் மற்றும் சூசன் ஹோபர் ருடால்ப் அக்கால இந்திய நீதியாளர்களான ஜேம்ஸ் ஃபிஸ்ஜிமஸ் ஸ்டீபன் [ James Fitzjames Stephen] ஆட்சியாளர்களான கர்ஸன் பிரபு முதலியவர்கள் இந்திய சமூகத்தை ஆண்தன்மை கொண்ட சமூகங்கள் பெண்தன்மை கொண்ட சமூகங்கள் என இரண்டாகப் பிரித்துச் சொல்வதைக் குறிப்பிடுகிறார்கள். பெண்தன்மை கொண்ட சமூகங்களே இந்தியாவில் அதிகம். அவர்கள் வணிகமும் சேவகமும் செய்யக்கூடியவர்கள்.

ஆண்தன்மை கொண்ட சமூகங்கள் என அவர்கள் கருதிய சமூகங்களான இஸ்லாமியர், சீக்கியர் போன்றவர்களை அரவணைத்து தங்களுடன் சேர்த்துக்கொண்டார்கள். தமிழ்நாட்டில் தேவர்கள் முதலிய ஏராளமான ஆண்தன்மைகொண்ட சாதிகளை குற்றபரம்பரைச் சட்டம் [ Criminal Tribes Act (CTA) 1871] மூலம் ஒடுக்கினார்கள். இவ்வாறு இந்திய நிலப்பரப்பை முற்றாகவே தங்கள் பிடிக்குள் கொண்டுவந்தார்கள்.

இங்கே இன்னொரு ஆர்வமூட்டும் விஷயம் உண்டு. பிரிட்டிஷார் ஐரோப்பியசமூகங்களை ஒட்டுமொத்தமாக ஆண்தன்மை கொண்ட சமூகங்கள் என்றும் கீழை சமூகங்களை பெண்தன்மை கொண்டவை என்றும் வகுத்தார்கள். கீழைச்சமூகம் தேக்கமுற்று நின்றுவிட்ட ஒன்று, செயலூக்கம் இல்லாதது என்று எண்ணினார்கள்.

இந்திய சுதந்திரப்போராட்டம் தொடங்கும்போது இங்கே ஷத்ரிய சக்தி என்று சொல்லப்பட்ட அமைப்பு முற்றாகவே சிதறிச் செயலிழந்து கிடந்தது. பிரிட்டிஷார் இந்தியாவில் நுழைந்தது முதல் நூற்றுக்கணக்கான போர்க்களங்களில் அதை எளிதில் வென்றார்கள். அதன் கடைசி அடி என்பது 1857ல் நடந்த இந்தியா சுதந்திர எழுச்சிதான். அது அதன் உள்முரண்பாடுகளால் முழுமையாக தோற்கடிக்கப்பட்டது.

இந்திய மறுமலர்ச்சியின் தொடக்க காலம்முதலே இந்தியாவின் ஷத்ரிய வீரியத்தை மீண்டும் எழச்செய்யவேண்டுமென்ற கனவு முன்வைக்கபப்ட்டது ருடால்ஃப் தம்பதிகள் தன் நூலில் விவேகானந்தர் எப்படி 'முறுகிய தசைகளும் இரும்பாலான



நரம்புகளும் கொண்ட' இளைஞர்களுக்காக அறைகூவினார் என்பதை சுட்டிக்காட்டுகிறார். அந்த அறைகூவலையே திலகர் முன்னெடுத்தார். ஷத்ரிய ஆற்றலை மீண்டும் ஒன்றுதிரட்டவும் அதைக்கொண்டு பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான ஒரு போரை நடத்தவும்தான் திலகர் முயன்றார்.

அந்த முயற்சி வெறும் வார்த்தை இலட்சியவாதமாக இருந்ததே ஒழிய எங்குமே எந்த பெரிய பாதிப்பையும் உருவாக்கவில்லை. உதிரி பயங்கரவாதம் என்ற எல்லைக்கு அப்பால் அது செல்லவில்லை. இன்னும் சொல்லப்போனால் அது ஒரு வங்க நிகழ்வு என்பதற்கு மேல் வளரவில்லை. அந்த வழியை எவ்வகையிலும் இந்தியாவில் பயன்படுத்தியிருக்க இயலாது. முயன்ற இடங்களில் விளைவுகள் பரிதாபகரமாக இருந்தன.

மிகச்சிறந்த உதாரணம் நெல்லை எழுச்சிதான். வ.உ.சிதம்பரம்பிள்ளை,சுப்ரமணிய சிவா, நீலகண்டபிரம்மசாரி ஆகியோரின் முயற்சியால் நெல்லையில் உருவான ஆயுதப்புரட்சிக்கான ஏற்பாடுகளை இப்போது வாசிக்கும்போது அவர்களுக்கு ஆயுதப்போராட்டம் என்றால் என்னவென்றே புரிந்திருக்கவில்லை என்ற எண்ணமே உருவாகிறது. ஆயுதப்பயிற்சிபெறுவது அணிதிரள்வது அனைத்தையும் முற்றிலும் முதிரா இலட்சியவாதத்துடன்தான் அவர்கள் செய்தார்கள். அதிகபட்சம் அவர்களால் முடிந்தது ஆஷ் துரையின் கொலை மட்டுமே.

அந்த ஆயுதப்புரட்சி என்பது பெரும்பாலும் நடுத்தர வர்க்கத்துப் பிராமணர்களால் கற்பனைசெய்யப்பட்டது. அவர்கள் தங்களை ஷத்ரியர்களாக மாற்றிக்கொள்ள முயற்சி செய்தனர். திருநெல்வேலிப்பகுதியில் இருந்த ஷத்ரிய மறவர்கள் தங்கள் அறைகூவலைக் கேட்டு பொங்கி வருவார்கள் என நினைத்தனர். ஒன்றும் நடக்கவில்லை. கொசுவை அடிப்பதுபோல நெல்லைக்கலகத்தை பிரிட்டிஷ் அரசு மிகமிகக் குறைவான ராணுவ பலத்தால் அழித்தது. பின்பு சுதந்திரம் கிடைக்கும் காலம்வரை நெல்லையில் எந்தவகையான சுதந்திரப்போராட்டமும் நிகழவில்லை

என்ன தவறு நடந்தது? இந்திய ஷத்ரிய வீரம் காலாவதியாகி ஒரு நூற்றாண்டு தாண்டிவிட்டதென அந்த பிராமணர்கள் அறியவில்லை. ஷத்ரிய வீரம் என்பது நவீன அரசியல் போராட்டங்களுக்குரிய வழிமுறை அல்ல என்றும் இந்தியாவில் அரசியலுடன் தொடர்பே இல்லாமல் நூற்றாண்டுகளாக வாழும் கோடானுகோடி எளிய மக்கள் அரசியல்படுத்தப்பட்டு உரிமைப்போராட்டத்துக்கு வரும்போது மட்டுமே மாற்றங்கள் நிகழும் என்றும் அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. அவர்கள் அர்ஜுனனும்,சிவாஜியும், குருகோவிந்த சிம்மனும் வாழ்ந்த காலகட்டத்தில் வாழ்ந்தார்கள்.

இத்தகைய உதிரிக்கலகங்கள் இந்தியாவில் பல பகுதிகளில் நிகழ்ந்தன. தேசம் என்ற கருதுகோளை அன்றைய மக்களுக்கு பரவலாக எடுத்துச்செல்ல அவை பயன்பட்டன. கலகங்களின் பிரச்சார மதிப்பு மிக அதிகம். ஆனால் அவை உடனடியாக அடக்கப்படாமல் பெரிதாக நீடித்திருந்தால் பேரழிவையே உருவாக்கியிருக்கும். மிகச்சிறந்த உதாரணம் 1921ல் கேரளத்தில் நடந்த மாப்பிளா கலகம்.

காரணங்கள் இரண்டு. ஒன்று, பிரிட்டிஷார் அன்று உலகின் மிகச்சிறந்த ராணுவத்தை வைத்திருந்தார்கள். தொழிற்புரட்சி நடந்த ஒரு பேரரசின் தொழில்நுட்பத்தில் சிறந்த ராணுவம் அது. உலகம் முழுக்க இருந்து எல்லையில்லா வளங்களை தன் கையில் வைத்திருந்தது.

அந்த ராணுவத்தை இன்னொரு தொழில்நுட்ப பேரரசின் ராணுவம் மட்டுமே எதிர்கொள்ள முடியும். அப்படி இருந்தும்கூட பிரிட்டிஷாரை எவருமே தோற்கடிக்க இயலவில்லை என்பதே வரலாறு. காரணம் சக தொழில்நுட்பதேசங்களுடன் ராணுவ ஒப்பந்தங்கள் செய்துகொண்டு அச்சவாலை அது சந்தித்தது.

இரண்டாவதாக, இந்தியாவில் பிரிட்டிஷார் இங்கிருந்த கோடானுகோடி மக்களால் ஆன குடிமைச்சமூகத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையிலேயே ஆட்சி செய்தார்கள். பிரிட்டிஷார் இங்கே வரும்போது இங்கிருந்த அரசுகள் நிலப்பிரபுத்துவ அரசுகள். அவற்றுக்கு மாறாக முதலாளித்துவ அரசு ஒன்றை பிரிட்டிஷார் முன்வைத்தார்கள்.நிலப்பிரபுத்துவத்தைவிட முன்னேறிய நீதிமுறையும் நிர்வாக முறையும் முதலாளித்துவத்துக்கு உண்டு. மேலும் பிரிட்டிஷார் இந்தியாவுக்கு வந்த காலத்தில் இங்கே பேரரசுகள் சிதைந்து ஒருவரோடொருவர் போரிட்டுக்கொண்டிருந்த பலநூறு சின்னஞ்சிறு ஆட்சியாளர்கள் முற்றிலும் அராஜகநிலை ஒன்றை உருவாக்கியிருந்தார்கள்!

ஆகவே இங்குள்ள மக்கள் பிரிட்டிஷாரை ஆதரித்தார்கள். அந்த ஆதரவின்பேரிலேயே அவர்கள் இந்நாட்டை ஆண்டார்கள். மாபெரும் பிரிட்டிஷ் ராணுவம் விசுவாசம் மிக்க இந்தியவீரர்களால் ஆனதாக இருந்தது. ஜாலியன்வாலாபாக்கில் ஜெனரல் டயர் தலைமையில் இந்தியப்பொதுமக்களைச் சுட்டு வீழ்த்தியது இந்தியாவின் மகத்தான ஷத்ரிய வல்லமைகளில் ஒன்றான கூர்க்காக்களின் படைதான். பிரிட்டிஷ் ஆட்சியின் பிரம்மாண்டமான நிர்வாக அமைப்பு இந்தியர்களால் ஆனதாகவே இருந்தது.

மேலும் ஒருபேச்சுக்காக திலகரின் கனவுப்படி இந்தியாவின் ஷத்ரிய சக்தி எழுச்சிபெற்று பிரிட்டிஷ் ஆட்சியை வீழ்த்தியிருந்தாலும் அது எத்தகைய ஆட்சியை உருவாக்கியிருக்கும்?
ஒரு சிறுபான்மையினர் மொத்த சமூகத்தின்மீதும் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்திருப்பார்கள். மீண்டும் நிலப்பிரபுத்துவ ஆட்சியே

உருவாகியிருக்கும். அனைவருக்கும் அதிகாரமுள்ள ஜனநாயகத்துக்கு நாம் வந்துசேர மீண்டும் ஒரு மக்கள் எழுச்சியும் போராட்டமும் தேவைப்பட்டிருக்கும்.

அந்த வரலாற்றுச் சந்தர்ப்பத்தில்தான் காந்தி அரசியலுக்குள் நுழைகிறார். அவர் வந்த காலகட்டத்தில் காங்கிரஸ் ஏன் சோனியான ஓர் அமைப்பாக இருந்தது என்பதை மேலே சொன்ன பின்னணியில்தான் பார்க்க வேண்டும். அப்போது அரசியலுக்குள் இருந்தவர்கள் இரண்டே தரப்பினர்தான். ஐரோப்பிய பாராளுமன்றமுறையை நம்பிய உயர்மட்டத்தினர். இந்தியாவின் பிராமண-ஷத்ரிய பாரம்பரியத்தை மீட்டெடுக்க விரும்பிய மரபுவாதிகள். இருவருமே மிகச்சிறுபான்மையினர். மீதிப்பெரும்பகுதி மக்கள் அரசியலுணர்வில்லாமல் தங்களுக்கே உரிய தயக்கத்துடன் வெளியே வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

'அகிம்சைப்போராட்டத்தின் தோற்றுவாய்கள், தல்ஸ்தோயும் காந்தியும் அவர்களின் வரலாற்றுப்பின்னணியில்' என்ற நூலில் ஆய்வாளரான மார்ட்டின் கிரீன் [The Origins of Nonviolence: Tolstoy and Gandhi in Their Historical Settings: Martin Burgess Green] காந்தியின் அகிம்சைநோக்குக்கு இந்தியாவின் தொன்மையான சமணப்பாரம்பரியத்தில் உள்ள வேர்களை விரிவாக ஆராய்கிறார். வரலாறு முழுக்கவே இந்தியாவின் எளிய விவசாய மக்களிடையே அகிம்சைப்போராட்டம், அரசுக்கு சாத்வீகமான முறையில் எதிர்ப்பு தெரிவித்தல் இருந்துவந்திருக்கிறது என்று கிரீன் கூறுகிறார். அந்த போராட்டம் ஒற்றுமை மூலமும் ஆன்ம வல்லமை மூலமும் தங்கள் எதிர்ப்பை பதிவுசெய்வதாகவே இருந்து வந்துள்ளது என்கிறார். காந்தியின் தொடக்கம் அங்கிருந்துதான்.

காந்தி அந்த எளிய மக்களிடம் பேசினார். அவர் 1915ல் இந்திய தேசிய காங்கிரஸின் வருடாந்தரமாநாட்டில் பேசிய முதல்பேச்சே அதைப்பற்றித்தான். 'எங்கே பொதுமக்கள்?' என்று கேட்டார் காந்தி. அந்த கோடானுகோடி மக்களை அரசியலுக்குக் கொண்டுவர முயன்றார். அதற்கான ஆயுதம் அவரிடம்தான் இருந்தது. அது இந்தியாவின் சமணப்பாரம்பரியம். அதைத்தான் அவர் அகிம்சை என்றபேரில் முன்வைத்தார். அதுவே இந்தியாவில் மாபெரும் மக்கள் பங்கேற்புள்ள ஒரு ஜனநாயக சக்தியாக மாறியது.

காந்தியின் வருகை இந்திய மக்களுக்கு எதை அளித்தது என நேரு குறிப்பிடுவதை ரூடால்ப் தம்பதியினர் அவர்களின் நூலில் மேற்கோள் காட்டுகிறார்கள். ''அவர் [காந்தி] சொன்ன பெரும்பாலான விஷயங்கள் எங்களால் ஓரளவுக்கே ஒப்புக்கொள்ளப்பட்டன, அல்லது முற்றாக நிராகரிக்கப்பட்டன. ஆனால் இது இரண்டாம்பட்சமானதே. அவர் எங்களுக்குக் கற்பித்தவற்றின் சாரம் அச்சமின்மை, உண்மை, அவற்றுடன் தொடர்புள்ள செயலூக்கம் ஆகியவையேஸ திடீரென்று மக்களின் தோள்களின் மீதிருந்து அச்சத்தின் கரிய சுமை விலகியதுபோலத் தோன்றியது. கண்டிப்பாக முற்றிலுமாக அல்ல. ஆனால் பிரமிப்பூட்டும் அளவுக்கு! அது ஒரு உளவியல் மாற்றம். கிட்டத்தட்ட ஒரு உளவியல்நிபுணன் போல அவர் மக்களின் இறந்தகாலத்துக்குள் ஊடுருவிச்சென்று அவனுடைய உளச்சிக்கல்களின் வேர்களைக் கண்டுபிடித்து அவற்றை அவனுக்கே காட்டிக்கொடுத்து அந்தச்சுமையில் இருந்து அவனை விடுவித்தார்''

இதுதான் இந்திய அரசியலில் காந்தியின் பங்களிப்பு. அவர் இந்தியாவின் கோழையான மக்களுக்கு தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் ஊட்டி அரசியலுக்குக் கொண்டுவந்தார். நூற்றாண்டுகளாக குரலற்றுப் பதுங்கிக் கிடந்த அந்த மக்கள் ஒரு பெரும் சக்தியாகத் திரண்டு உலகின் மாபெரும் சாம்ராஜ்யத்துக்கு எதிராக அறைகூவல் விடுத்தார்கள். இந்தியப்பண்பாட்டு பாரம்பரியத்தை வைத்துப்பார்த்தால் அதை ஒரு சமணமுனிவர்தான் இந்தியாவில் செய்திருக்க முடியும். அது காந்திதான்.

ஆகவேதான் இந்தியாவின் எளிய கோண்டு இன மக்கள் சமணமுனிவரைக் குறிப்பிட அவர்கள் கையாளும் மகாத்மா என்ற சொல்லை அவருக்கு அளித்தார்கள். அவர் இந்தியாவுக்கு வந்து தன் பணியை ஆரம்பித்ததுமே அந்தச் சொல் அவர் மீது படிந்துவிட்டது . பின்னர் அந்தச் சொல்தான் அவரை இந்தியா முழுக்க எளிய மக்களிடம் கொண்டுசென்றது. வாளேந்தி படைநடத்தும் ஷத்ரியனுக்குப் பதில் மயில்பீலித்தோகையுடன் ஒரு சமணமுனி தங்களை வழிநடத்த வந்துவிட்டார் என்ற எண்ணத்தை அது இந்தியப் பண்பாட்டின் ஆழ்மனத்துக்குச் சொன்னது.

இப்படிச்சொல்லலாம், 1915 ல் இந்தியச் சுதந்திரப்போர் அதன் திருப்புமுனைப்புள்ளியை அடைந்தது. மிதவாதிகளின் போக்கில் அதிருப்தி அடைந்த காங்கிரஸை திலகர் தரப்பு கைப்பற்றும் நிலை ஏற்பட்டது. கிட்டத்தட்ட இந்தியா திலகரின் வன்முறை சார்ந்த நேரடிப்போராட்ட அரசியலுக்குள் புகக்கூடிய தருணம் அது. அப்போதுதான் காந்தி உள்ளே வந்தார்

இந்திய சுதந்திரப்போராட்டத்தில் இந்தியப் பாரம்பரியம் அளிக்கும் இரு வழிகள் திறந்திருந்தன. ஒன்று பிராமண-ஷத்ரியர்களின் இந்து வழி. இன்னொன்று வைசியர்களின் சமண வழி. முதல்வழி ரஜோ குணம் மிக்கது. உதிரப்போராட்டத்தை நோக்கிச் செல்வது. இரண்டாவது வழி, சத்வ குணம் கொண்டது. சாத்வீகப்போராட்டத்தை நோக்கிச் செல்வது. முதல்வழியில் வீரர்களுக்கே இடம். இரண்டாம் வழியில் எளியய மக்களுக்கே இடம். சமணப் பண்பாட்டில் இருந்து முளைத்து பக்தி இயக்கமாக உருவான மரபு அது. காந்தி அதன் நீட்சி. சரியான தருணத்தில் காந்தி உள்ளே வந்ததனால் மட்டுமே இரண்டாவது வழி திறக்க நேர்ந்தது. இந்தியா பேரழிவுகளில் இருந்து தப்பவும் ஒரு ஜனநாயக அமைப்பாக இன்றுவரை நீளவும் அதுவே காரணம். அதற்காகவே நாம் காந்திக்கு கடன்பட்டிருக்கிறோம்.

காந்தியின் தன் வாழ்நாள் முழுக்க எதிர்கொண்ட எதிர்ப்புகள் பெரும்பாலும் எல்லாமே இந்த இரு வழிகளுக்கு இடையேயான முரண்பாடு மூலம் உருவானவையே என்பதைக் காணலாம். ஆரம்பத்திலேயே திலகர் தரப்பு அவருக்கு கடுமையான எதிர்ப்பை

அளித்தது. பின்னர் இந்துமகாசபை அவரை இந்தியாவை கோழைத்தனத்தில் கட்டிப்போட்டவராகவே பார்த்தது. இந்துமகாசபையின் அக்கால பிரசுரங்களில் காந்தி இந்திய சமூகத்தில் 'பெண்மையை' வளர்த்தவர் என்றே [ என் நோக்கில் சரியாக!] குற்றம்சாட்டப்படுகிறார். பின்னர் சுபாஷ் சந்திரபோஸுடனும் பல்வேறு தீவிரவாத இயக்கங்களுடனும் காந்திக்கு ஏற்பட்ட முரண்பாடுகள் அனைத்துக்குமே இந்த அம்சமே முக்கியமான அடிப்படையாகும்.

இன்றுவரை காந்தி இந்தியாவின் ஷத்ரிய வீரியத்தை தடுத்துவிட்டார் என்று இந்துதீவிரவாதத் தரப்பு குற்றம் சாட்டுகிறது.பார்க்க 'இந்து தேசியத்தின் தற்காலிக மறைவு ,காந்தியும் அவரது சுதந்திரப்போராட்டமும்'. [Eclipse of the Hindu Nation: Gandhi and HIS Freedom Struggle , Radha Rajan] காந்தி பிரிட்டிஷாரின் கையாள் என்று சொல்லும் நூல் அது. அதைப்போல பல நூல்கள் உள்ளன.

காந்தி தென்னாப்ரிக்காவில் போயர் யுத்தத்தில் பிரிட்டிஷாருக்குச் சாதகமாக இருந்தமையாலும் அவரது போராட்ட முறை இந்தியாவில் வன்முறையை உருவாக்கி இந்திய பிரிட்டிஷ்குடிகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தாது என்பதனாலும்தான் பிரிட்டிஷார் இந்தியாவில் சுதந்திரப்போராட்டம் உச்சம் கொண்ட ஒரு காலகட்டத்தில் காந்தியைக் கொண்டுவந்து காங்கிரஸுக்குள் நிறுவினார்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். காந்தியை அவ்வாறு உள்ளே கொண்டுவந்தவர்கள் பிரிட்டிஷாருடன் ஒத்துழைத்த மிதவாதிகள்தான் என்கிறார்கள்.

காந்தியின் சாத்வீக வழியின் சாத்தியங்களைப் பற்றி விரிவாகவே பேசவேண்டும். அது கோடிக்கணக்கான மக்களுக்கு அவர்களுக்குச் சாத்தியமான போராட்ட முறையை அளித்தது. அவர்களை படிப்படியாக அரசியல்படுத்தியது. மூர்க்கமான போராட்டங்கள் வழியாக அவர்களை ஒடுக்குமுறை நோக்கித் தள்ளிவிடாமல் சிறிய பிராந்தியப் போராட்டங்கள் வழியாக ஆரம்ப வெற்றிகளை அளித்து உற்சாகமூட்டியது. ஒரு பெரும் மக்கள்திரளாக அவர்களை மாற்றி அதன் மூலம் தன்னம்பிக்கையை அளித்தது.

காந்தியின் போராட்டம் ஒரேசமயம் போராட்டமாகவும் சுய சீர்திருத்தமாகவும் இருந்தது. காந்தியப்போராட்டங்கள் கோடானுகோடி மக்களை ஒரு பொது இடத்துக்குக் கொண்டுவந்தன. அவர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்து உரையாட வழிவகுத்தன. சாதி,மொழி,இன,மதப் பாகுபாடுகள் கொண்ட இந்தியமக்கள் நடுவே நூற்றாண்டுக்காலமாகச் சாத்தியமில்லாமல் இருந்த பரஸ்பர உரையாடல் காந்தியின் பெரும் போராட்டங்கள் வழியாகவே நடந்தது என்பதை அக்காலகட்ட தன்வரலாறுகளை வாசித்தாலே புரிந்துகொள்ள முடியும்.

காந்தியின் போராட்டம் இந்திய மக்களுக்கு ஜனநாயகத்தை அறிமுகம் செய்தது. நிலப்பிரபுத்துவ முறையில் மன்னராட்சியில் வளர்ந்த மக்களுக்கு ஜனநாயகத்தின் அடிப்படைப் பாடங்கள் காங்கிரஸ் உருவாக்கிய ஹரிஜன இயக்கம், கதர் இயக்கம், கிராமசபை இயக்கம், மாஶ்ரீ சங்க இயக்கம் போன்ற நூற்றுக்கணக்கான அமைப்புகள் மூலமே பயிற்றுவிக்கப்பட்டன. தி.செ.சௌ.ராஜன், கோவைஅய்யாமுத்து, க.சந்தானம் போன்றவர்களின் தன்வரலாறுகள் ஜனநாயக மதிப்பீடுகளை அறியாத மக்கள்நடுவே சென்று அந்த அடிப்படைகளை அவர்களுக்குக் கற்றுக்கொடுத்து அமைப்புகளைக் கட்டுவதில் உள்ள தீராத சவால்களைப் பற்றியே பேசுகின்றன

உலகின் மிகச்சிறந்த ராணுவம் பிரிட்டிஷாருக்கு ஒருபோதும் பயன்படாத நிலையை காந்தியின் போராட்டங்கள் உருவாக்கின. அவரைப்பின்பற்றிச் சென்ற கோடானுகோடி சாமானியர்களை அவர் நன்கறிந்திருந்தார். நூற்றாண்டுகளாக போர்களில் அராஜகங்களில் கொன்று குவிக்கப்பட்டவர்கள். அடிமையாக்கப்பட்டவர்கள். அழிவை மட்டுமே வரலாறாகக் கொண்டு தப்பிப்பிழைத்தவர்கள். அந்த மக்களை ஓர் அரசியலதிகார மாற்றத்துக்காக மீண்டும் பலியாடுகளாக்க அவர் விரும்பவில்லை. பிரிட்டிஷ் ஆட்சிக்கு அடித்தளமாக இருந்த குடிமைச்சமூக ஆதரவை மட்டும் மெல்லமெல்ல கரைத்தழித்தார். அதன் மூலம் அவர் இந்த தேசத்தை விடுதலை நோக்கிக் கொண்டுசென்றார். எதிரியை அழிப்பதன்மூலம் அல்ல நம்மை தகுதிப்படுத்திக்கொள்வதன்மூலமே நாம் விடுதலை அடைய முடியும் என அவர் கற்பித்தார்.

இந்தியாவில் எந்த ஒரு அரசியலியக்கத்திலும் காந்தியின் போராட்டங்கள் அளவுக்கு பெண்களின் பங்களிப்பு இருந்ததில்லை. காந்தியின் காலகட்டத்தில் இந்தியப்பெண்களில் கல்விகற்றவர்கள் ஆயிரத்தில் ஒருவர்கூட இல்லை. பெண்களுக்கு தங்கள் வாழ்க்கையை தாங்களே தெரிவுசெய்யும் சுதந்திரமே இருந்ததில்லை. ஆனாலும் அவர் குரலைக்கேட்டு பெண்கள் வந்தார்கள். அவருக்குப்பின் இன்றுவரை இந்தியாவில் நடந்த எந்தஒரு அரசியலியக்கத்திலும் பெண்களின் பங்களிப்பு சொல்லும்படியாக இருக்கவில்லை. காரணம், அவரது இயக்கம் ஒரு 'பெண்மை'த்தன்மை கொண்டிருந்ததுதான்.

சமண மரபில் இருந்து இந்திய விடுதலைப் போருக்கு காந்தி கொண்டுவந்த இன்னொரு அம்சம் அதன் ' மிஷனரி ' அம்சம். இந்தியாவெங்கும் சமயப்பரப்புநர்களை வறுமையையும் நேர்மையையும் கொள்கையையும் மட்டுமே ஆயுதமாகக் கொண்டு அனுப்பிய சமண வழக்கத்தை காந்தி காங்கிரஸுக்குள் கொண்டுவந்தார். குடும்பத்தைத் துறந்து, அனைத்து வசதிகளையும் உதறி, பட்டினி கிடந்து கிராமம் கிராமமாகச் சென்ற மாபெரும் தொண்டர்படை ஒன்றை அவர் உருவாக்கினார்.

காந்தியின் அந்த தொண்டர்படைதான் பதினைந்தாம் நூற்றாண்டில் கபீருடன் நிறைவடைந்த பக்தி இயக்கத்துக்குப் பின்பு இந்திய சாமானிய மக்களை நோக்கிச்சென்ற அடுத்த பேரியக்கம். சொல்லப்போனால் அது பத்து பக்தி இயக்கத்துக்குச் சமம். 1921ல் காங்கிரஸ் உலக வரலாற்றிலேயே ஓர் அரசியலியக்கம் சேர்த்த மிக அதிகமான உறுப்பினர்களைச் சேர்த்தது. அவர்களுக்கு முறையான பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களை நிர்வகிக்கும் அதிகார அமைப்பும் உருவாக்கப்பட்டது. ஏறத்தாழ முப்பதுலட்சம் தொண்டர்கள் இந்திய சமூகத்தை நோக்கி இறங்கிச்சென்றார்கள்!

இன்றுவரை இந்திய வரலாற்றில் இந்த மாபெரும் மக்கள்தொடர்பியக்கம் உருவாக்கிய பாதிப்புகளைப் பற்றி எவரும் விரிவாக ஆராய்ந்ததில்லை. அக்கால இந்திய கிராமிய சமூகம் எப்படி இருந்திருக்கும். அன்று எவ்விதமான பிரபலச் செய்தி ஊடகங்களும் இல்லை. இந்திய மக்களில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் மிகச்சிலரே. தங்கள் தொழில், கிராம வட்டாரங்களுக்கு அப்பால் எதாவது அறிமுகம் உள்ளவர்களே சிலர்தான். அந்த மக்களை நோக்கி வந்த முதல் வெளியுலகத்

தொடர்பே காந்தியின் இயக்கம்தான்.

அந்த மக்களுக்கு ஜனநாயகத்தின் சாத்தியங்களை காந்திய இயக்கம் கற்றுக்கொடுத்தது. உரிமைகளுக்காகச் சேர்ந்து போராடமுடியும் என்று காட்டியது அது. கல்வி கைத்தொழில் சுகாதாரம் ஆகியவற்றின் ஆரம்பப் பாடங்களைக் கற்பித்தது. சாதி மதங்களுக்கு அப்பால் சமூகம் என்றும் தேசம் என்றும் சில உள்ளன என்று சொல்லியது. இந்திய மக்களை அரசியல்படுத்தியது. அதன்பின் வந்த எலல இயக்கங்களும் அந்த அரசியலாக்கத்தின் மீது எழுந்தவையே — காந்தியை நிராகரித்த இயக்கங்கள்கூட

இவையனைத்தும் சாத்தியமானது அவர் முன்வைத்த சமண வழிமுறைகளினால். அது அவரது பனியாப் பின்னணி அவருக்கு அளித்தது. பனியாப்பண்பாட்டின் மிகச்சிறந்த உச்சநிலையை அவர் வழியாக கண்டது இந்தியா. ஆம், எந்த மரபு போரிடும் பழங்குடிக் கும்பலாக இருந்த இந்தியசமூகத்தை சமரசம் மூலமும் கல்வி மூலமும் ஒருங்கிணைத்து ஒரு உயர்நாகரீக சமூகமாக ஆக்கியதோ அந்த மரபில் இருந்து நவீன காலகட்டத்துக்கு முளைத்தெழுந்து வந்தவர் காந்தி. இந்தியாவுக்கு தீர்த்தங்காரர்களின் பெருங்கருணை அளித்த கொடை அவர்.

ஆகவே காந்தி ஒரு பனியா என்பதை ஓர் எதிர்மறைக்கூறாக கருத வேண்டியதில்லை. காந்தி என்ற பனியா இந்த தேசத்தை தலைமை தாங்க வந்தது நமது நல்லூழ்.

[மேலும்]

---

**காந்தி என்ற பனியா 3**

மூத்த பனியா என்ன சொல்கிறார் என்பது ஒரு இளம் வணிகனுக்கு எப்போதும் முக்கியம்தான். காந்தி என்ற பனியா வணிகம்செய்யவில்லை, சமணத்துறவியும் ஆகவில்லை. மாறாக வக்கீல்தொழில் வழியாக அரசியலுக்கு வந்தார். ஆனாலும் அவரது செயல்களில் இரண்டாயிரம் வருடங்களாக இந்திய பனியாக்கள் சேர்த்த அனுபவ ஞானம் நுண்ணுணர்வுகளாகக் குடியிருந்தது. அதை அவரது எல்லா அரசியல் செயல்பாடுகளிலும் நாம் காணலாம்.

இந்திய தேசிய காங்கிரஸ் ஒரு நிறுவனம். ஒரு நிறுவனத்தை நடத்துவதென்பது இந்தியாவின் வேறெந்த சாதியைவிடவும் வெற்றிகரமாக பனியாவால்தான் சாத்தியம் என்பது அனுபவ உண்மை. காந்தி எப்படி இந்திய தேசிய காங்கிரஸை வழிநடத்தினார் என்பதில் எந்த ஒரு நிர்வாகியும் கற்றுக்கொள்ள வேண்டிய நூற்றுக்கணக்கான பாடங்கள் உள்ளன. அனைத்தையும் விவாதிப்பதென்பது நிர்வாகவியல் நிபுணர்களால் மட்டுமே இயலும். காந்தியவழியிலான நிர்வாகவியலை இன்று உலகின் பல பகுதிகளில் நிர்வாகவியல் கல்லூரிகள் பயில்கின்றன என்று கேள்விப்படுகிறேன்.

இது சார்ந்த பல நூல்களின் பெயர்களை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ராம் பிரதாப் எழுதிய 'காந்திய நிர்வாகவியல்' [Gandhian Management  Ram Pratap ] என்ற நூலை மட்டுமே நான் வாசித்திருக்கிறேன். அதன் நிர்வாகவியல் கலைச்சொற்களின் தடைகளைத் தாண்டி ஓரளவு புரிந்துகொண்டிருக்கிறேன். ஆனால் காந்தியப்போராட்டத்தைக் கூர்ந்து கவனித்தாலே சில விதிகளை உணர முடியும்.

மூத்த பனியா இளம் வணிகனுக்கு என்ன சொல்லியிருப்பார்? சில ஆதார விதிகளை நான் ஊகிக்கிறேன்.

**1. முறித்துக்கொள்ளாதீர்கள்**

காந்திய வழிமுறையின் ஆதாரமான முதல்கோட்பாடே இதுவாகத்தான் இருக்கமுடியும். ஒருபோதும் எந்தவகையான உச்சகட்ட மோதலுக்குப் பின்னும் காந்தி உறவுகளை முறித்துக்கொள்வதேயில்லை. அதை காங்கிரஸ்காரர்களே மிகுந்த கசப்புடன் பல தருணங்களில் எதிர்கொண்டிருக்கிறார்கள். காந்தியின் நம்பிக்கைகளை வைத்துப் பார்த்தால் முகமது அலி ஜின்னாவுடனான உறவை அவர் முறித்துக்கொண்டிருக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் வந்துகொண்டே இருந்தன.

குறிப்பாக முஸ்லீம்லீக் நேரடிநடவடிக்கை என்ற பேரில் இந்து முஸ்லீம் ஒற்றுமையை உடைத்து மனக்கசப்பை உருவாக்கி பாகிஸ்தான் கோரிக்கைக்கு வலுச்சேர்க்கவென்றே உருவாக்கிய வன்முறை வெறியாட்டத்துக்குப் பின்னர் அவர் அப்படிச்செய்திருந்தால் அதில் பிழை ஏதும் இல்லை. ஆனால் காந்தி அதைச் செய்யவில்லை. எப்போதுமே பேச்சுவார்த்தைக்கான இடத்தை விட்டு வைத்திருந்தார்.

இந்திய தேசியகாங்கிரஸின் வரலாற்றிலேயே விசித்திரமான பல சந்தர்ப்பங்களை நாம் காண்கிறோம். 1923 ல் காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை நடத்தி சிறைசென்றிருந்தபோது மோதிலால் நேருவும் சித்தரஞ்சந்தாஸும் காங்கிரஸைக் கைப்பற்றி வெற்றிகரமாக உடைத்து சுயராஜ்யக் கடசி என்ற தனிப்பிரிவை உருவாக்கினார்கள். காந்தி 1924 ல்



வெளியேவந்தபோது அவர் உருவாக்கிய கட்சியின் சிதைவைக் கண்டார். அதற்கு எதிரான அவர் சமரசப்போராட்டத்தை நடத்தினார்.

காங்கிரஸ் மூத்த தலைவர்களைப் புறக்கணித்து காந்தியின் தலைமைக்கு வந்தபோது அவர் அந்த மூத்த தலைவர்களை மீண்டும் கட்சிக்குள் கொண்டுவந்தார். அவர்களை வெளியே அனுப்பியிருந்தாலும் காங்கிரஸுக்கு எதுவும் ஆகியிருந்திருக்காது. ஆனால் காந்தி முற்றாக முறித்துக்கொள்ள ஒருபோதும் அவரே முன்வர மாட்டார்

**2 கள ஆய்வுசெய்யுங்கள்**

காந்தி அவரது எந்த முடிவையும் அவரது உள்ளுணர்வைச் சார்ந்தோ அல்லது ஊகத்தைச் சார்ந்தோ எடுக்கவில்லை. சில போராட்டங்களுக்கான தருணங்களும் படிமங்களும் மட்டுமே அவருக்கு அவரது உள்ளுணர்வு சார்ந்து கிடைத்தன. மற்றபடி அனைத்து விஷயங்களையும் அவரே நேரடியாக இறங்கி கள ஆய்வுசெய்துதான் அறிந்திருக்கிறார். தென்னாப்ரிக்காவில் அவர் சம உரிமைக்காகப் போராட ஆரம்பித்தபோது முதலில் தென்னாப்ரிக்காவின் இந்தியசமூகத்தை முழுக்க விரிவான பயணங்கள் மூலம் நேரடியாகப்போய்ச் சந்தித்தார். அதன் பின்னரே அவர் தன் போராட்ட உத்திகளை வகுத்துக்கொண்டார்.

இந்திய சுதந்திரப்போராட்டம் குறித்த கனவுடன் அவர் இந்தியாவுக்கு வந்தபோது ஏற்கனவே அவரிடம் பொருளியல் திட்டங்கள் இருந்தன. ஹிந்த் ஸ்வராஜ் என்ற ஆதார நூலை அவர் எழுதிவிட்டார். அரசியல் போராட்ட வடிவம் ஒன்றை வெற்றிகரமாகச் செய்துபார்த்தும் இருந்தார். இருந்தாலும் அவர் இந்தியா முழுக்க மூன்றாம் வகுப்புப் பயணியாக ரயிலில் பயணம்செய்து மக்களை நேரடியாகச் சந்தித்து ஆராய்ந்தார். அதன் வழியாக இந்தியா பற்றிய ஒரு நேரடி மனப்பதிவை அடைந்தார்.

தன் பயணங்களில் காந்தி இந்தியாவின் ஆன்மீகத்தலைவர்கள் பலரை நேரடியாகச் சென்று சந்தித்திருக்கிறார். சகோதரி நிவேதிதை முதல் நாராயணகுரு வரை. பல்வேறு அறிவியக்கவாதிகளை சந்தித்து உரையாடியிருக்கிறார். வேறு எந்த இந்தியத்தலைவரும் அத்தகைய ஒரு விரிவான நேரடி கள அனுபவத்தை திரட்டிக்கொண்டதில்லை. உதாரணமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்காக போராடிய அம்பேத்கர் ஒருமுறைகூட நாராயணகுருவை வந்து சந்திக்கவேண்டும் என எண்ணியதில்லை என்பதனுடன் நாம் காந்தியின் கள ஆய்வை ஒப்பிடவேண்டும். ஒரு 'மகாத்மா' ஆக அங்கீகரிக்கப்பட்ட பின்னரும் அத்தகைய பயணங்களை பலமுறை அவர் முகமறியாது தனியாகச் செய்து பார்த்திருக்கிறார்.

சம்பாரன் போராட்டத்துக்காக அவரை விவசாயிகள் அழைத்தபோது காந்தி அங்கேயே சென்று தங்கி அப்பகுதி மக்களுடன் நேரடியாக பழகி அந்தப்போராட்டத்தை நடத்தினார். ஒருவருடம் அங்கே அவர் இருந்தார். அதேபோல இந்திய சுதந்திரப்போராட்டத்துக்கு மேலைநாட்டு பொதுமக்கள் எவ்வகையில் எதிர்வினையாற்றுகிறார்கள் என்று அறிய அவர் 1932 ல் ஐரோப்பாவில் அவரே சுற்றுப்பயணம் செய்தார்

**3 செய்துபாருங்கள்**

காந்தி ஒருபோதும் ஒரு விஷயத்தை வெறும் கோட்பாட்டளவில் விவாதித்தவரல்ல. அவர் அதுவரை உலகசிந்தனையில் இல்லாமல் இருந்த ஒன்றை அறிமுகம் செய்தார், அகிம்சைப்போராட்டம். ஆனால் அதை அவர் கோட்பாட்டுவடிவில் முதலில் உருவாக்கிக் கொள்ளவில்லை. அதைப்பற்றி அவர் சிந்தித்துக்கொண்டிருக்கவில்லை. விவாதிக்கவில்லை. பிழையில்லாத ஒரு கோட்பாட்டுச்சித்திரத்தை முடித்துக் கொண்டு செயலாற்ற இறங்கலாமென அவர் நினைக்கவில்லை. மாறாக எடுத்த எடுப்பிலேயே செய்து பார்த்தார்!

காந்தி அவரது சத்யாக்ரக போராட்ட முறை அவர் மனதில் உதித்த சில மாதங்களில், தென்னாப்ரிக்காவில் 1906 ல் டிரான்ஸ்வால் நகரில், தன் முப்பத்தேழாவது வயதிலேயே சத்யாக்ரகப் போராட்டத்தை நடைமுறைப்படுத்திப் பார்த்துவிட்டார். அந்தப்போராட்டம் பற்றி அவர் அறிந்தவை எல்லாமே நடைமுறைச்செயல்பாடுகள் வழியாகவே. அதன் விதிகளையும் நடைமுறைகளையும் அதற்குக் கொள்ளவேண்டிய எச்சரிக்கைகளையும் எல்லாம் அந்த செயல்பாடுகள் வழியாகவே ஆராய்ந்து உருவாக்கினார். நடைமுறைக்குச் சம்பந்தமில்லாமல் சிந்தனைத்தளத்தில் அதை வரையறைசெய்ய முயன்றதேயில்லை

**4. சிறிய அளவில் தொடங்குங்கள்**

காந்தி எதையுமே தடாலடியாக பெரிய அளவில் ஆரம்பித்ததில்லை. எல்லா போராட்டங்களையும் சிறிய அலகுக்குள் செய்துபார்த்து அதன் குறைகளை கவனித்து சரிசெய்த பின்னர்தான் விரிவாக அதை நடைமுறைப்படுத்தியிருக்கிறார். ஒத்துழையாமைப்போராட்டம் உப்புசத்யாக்கிரகம் எல்லாமே அவ்வாறுதான் அறிவிக்கப்பட்டன.

**5 பிழைகளை திருத்துங்கள்.**

காந்தி அவரது மொத்த அரசியல் வாழ்க்கையிலும் பிழைகளைத் திருத்திக்கொள்ள தயங்கியதே இல்லை. தன்னுடைய அகங்காரம் காரணமாகவோ அல்லது தன் பிம்பத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்காகவோ அல்லது மிகையான தன்னம்பிக்கை காரணமாகவோ தான் நம்பிவந்த ஒன்றை மறுபரிசீலனைசெய்வதற்கு அல்லது செய்து வந்த ஒன்றை நிறுத்திக்கொள்வதற்கு அவர் தயக்கம் காட்டியதில்லை.

இரு உதாரணங்களைச் சொல்லலாம். ஒன்று காந்தி ஒரு மேலைநாட்டு ஆய்வாளனின் கோணத்தில் இந்திய சமூகத்தை ஆராய்ந்து சாதியமைப்புக்கு ஒரு சமூக,பொருளியல் பங்களிப்பு உண்டு என்று நம்பினார். ஆனால் இந்திய யதார்த்தங்களை காங்கிரஸ் செயல்பாடுகள் வழியாக அவர் அறிந்து, அவற்றை வலுவாக முன்வைத்த நாராயணகுரு,அம்பேத்கார் போன்றவர்களிடம் விவாதித்து தெளிவடைந்தபின் தன் கருத்துநிலையை முற்றாகவே மாற்றிக்கொண்டார். சாதியமைப்பின் சமூக இடம் என்னவாக இருந்தாலும் அதில் இருந்து ஏற்றதாழ்வை நீக்கமுடியாது என்றும் ஆகவே அது அகிம்சைக்கு எதிரானது என்றும் உணர்ந்தார். அந்த புதிய கருத்துநிலைக்கு ஏற்ப தன் செயல்பாடுகள் சொந்த வாழ்க்கை அனைத்தையும் முற்றாக மாற்றிக்கொண்டார்.

அதனால் அவரைப் பின்தொடர்ந்தவர்களில் ஒரு சாரார் குழப்பம் அடைந்தார்கள். அவர் மீது கொலைமுயற்சிகள் நடந்தன. அவரது அரசியல் வாழ்க்கையிலேயே கடுமையான சோதனைகளை காந்தி சந்தித்தார். ஆனால் பிழையான ஒன்று நெடுங்காலத்தில் உருவாக்கும் அழிவை விட அந்த திருத்தம் மூலம் உருவாகும் அழிவு மிகக் குறைவானதே என அவர் எண்ணினார்.

அதேபோல அவர் வழிநடத்திய ஒத்துழையாமைப் போராட்டம் வன்முறை நோக்கி திரும்பி சௌரிசௌராவில் காவல்நிலையம் தாக்கப்பட்டதுமே அவர் அப்போராட்டத்தை அதன் உச்சநிலையிலேயே விலக்கிக் கொண்டார். அகிம்சை போராட்டத்துக்கு இந்திய சிவில்சமூகம் தயாராகவில்லை என்று அவர் நினைத்தார். இந்தியாவின் பொதுமக்களை நேரடியாக போராட்டத்துக்கு கொண்டுசெல்லலாகாது என கண்டுகொண்டார்

அவ்வாறு ஒத்துழையாமை போராட்டத்தை சட்டென்று விலக்கிக்கொள்வார் என நாட்டி எவருமே எதிர்பார்க்கவில்லை. சுதந்திரம் கிடத்துவிடும் என்ற உத்வேகத்தில் இருந்தவர்கள் பெரும் மனச்சோர்வுக்கு ஆளானார்கள். அதன்பொருட்டு நேரு உட்பட காங்கிரஸ்காரர்கள் பெரும்பாலானவர்கள் காந்தி மேல் கசப்பு கொண்டார்கள். இன்றும் மக்கள் போராட்டங்களை முழுமையடைய விடாமல் பின்வாங்கச்செய்தவர் என காந்தியை குறைகூறுபவர்கள் உண்டு.

ஆனால் காந்தியைப் பொறுத்தவரை அடிப்படையில் பிழை இருக்கும்போது முன்ன்கர்வதென்பது தற்கொலைத்தனமானது. வீராப்புக்காக முன்னே செல்ல அவரால் இயலாது. காங்கிரஸில் லட்சக்கணக்கில் தொண்டர்களைச் சேர்த்து அவர்களுக்கு முறையான பயிற்சி அளித்து அவர்களை நிர்வகிக்கும் அமைப்புகளையும் உருவாக்கியபின் அவர்களைக்கொண்டே காந்தி அடுத்த கட்ட அகிம்சைப்போராட்டங்களை முன்னெடுத்தார்

**6 தொடர்பு வைத்திருங்கள்**

காந்தி பலலட்சம் உறுப்பினர்கள் ஒருபிரம்மாண்டமான அமைப்பை வழிநடத்தியவர். விரிந்த ஓர் உபகண்டம் முழுக்க பரவியிருந்தது அவ்வியக்கம். அக்காலத்தில் ஒரு எல்லையில் இருந்து இன்னொரு எல்லைக்குப் பயணம்செய்ய பதினைந்து நாள் ஆகும். கடிதம் சென்று வர ஒருமாதம் வரைக்கூட ஆகும். அத்தகைய ஒரு அமைப்பை சீராக நிர்வாகம் செய்ய அதற்கு ஒரு நிர்வாகப்படிநிலையை அவர் உருவாக்கினார். கிராமக்கமிட்டிகள், மாவட்டக் கமிட்டிகள், மாநிலக் கமிட்டிகள், மத்தியக்கமிட்டி என ஏறிச்சென்ற ஒரு பிரமிட் அமைப்பு அது.

அதன் தலைமையில் இருந்த காந்தி அதன் சாதாரண உறுப்பினர்கள் வரை நேரடியான தொடர்பு வைத்திருந்தார். அவர் மறைந்து அரை நூற்றாண்டு கடந்தபின்னரும்கூட அவர் எழுதிய கடிதங்கள் கிடைத்துக்கொண்டே இருக்கின்றன. இந்தியாவில் நடந்த எந்த ஒரு நிகழ்ச்சியையும் அவர் சம்பந்தப்பட்டவர்களிடம் நேரடியாகவே விசாரித்து அறிந்துகொண்டே இருந்திருக்கிறார். அவர் எவரிடம் எல்லாம் தொடர்பு வைத்திருக்கிறார் என்பது எவருக்குமே தெரியாது.

வட இந்தியாவில் இருந்த காந்தி தென்கோடியில் நாகர்கோயிலில் டாக்டர் எம்.வி.நாயுடுவுக்கு தொடர்ச்சியாக கடிதங்கள் எழுதிக்கொண்டிருந்திருக்கிறார். அவரது தொடர்பு வலை அத்தகையது

### 7 நிபுணர்களை கலந்தாலோசியுங்கள்

காந்தி ஒரு சந்தர்ப்பத்திலும் தன்னிச்சையாக முடிவுகள் எடுத்ததில்லை. ஒரு சிறுவிஷயத்துக்குக் கூட அவர் அந்தத்தளத்தைச் சார்ந்த நிபுணர்களை சந்தித்து விவாதித்துக்கொண்டிருந்தார். உதாரணமாக சம்பாரன் சத்யாக்ரகத்தின்போது காந்தி அகமதாபாத் சென்று ஒருவாரம் தங்கி பல்வேறு சட்ட நிபுணர்களுடன் அந்தப்போராட்டத்தின் சட்டச்சிக்கல்களை விவாதித்தார். அந்தப்போராட்டத்தின் அரசியல் சாத்தியங்களை கேட்டறிந்தார். தன் மாபெரும் மக்கள் போராட்டங்களில் காந்தி மேலைநாட்டு அரசியல் நிருபர்களின் கருத்துக்களை எப்போதுமே கேட்டறிந்தார்.

### 8 பிரச்சாரம் செய்யுங்கள்

இருபதாம் நூற்றாண்டு வணிகத்தின் முக்கியமான அம்சத்தை மூத்தபனியா மிக நன்றாக அவதானித்திருந்தார். காந்தியை ஒரு மாபெரும் விளம்பர நிபுணர் என்று சொல்பவர்கள் உண்டு. கோடானுகோடி மக்களை அவர் திரட்டவேண்டியிருந்தது. அவரது போராட்டமே பிரச்சாரத்தின் மீது கட்டமைக்கப்பட்டதுதான். அந்தப்பிரச்சாரத்தை காந்தி அளவுக்கு வெற்றிகரமாகச் செய்த இன்னொரு அரசியல்தலைவர் இல்லை.

தான் சொல்லவிரும்பியதை ஐயத்துக்கிடமில்லாமல் கோடிக்கணக்கான மக்களுக்கு சொல்லிக்கொண்டே இருந்தார் காந்தி. அவரது நடை மிக மிக எளியது. இந்தியாவின் இதழியலாளர்களில் அவரே மிகத்திறன் வாய்ந்த முன்னோடி என்று என்னிடம் ஒருமுறை எம்.கோவிந்தன் சொன்னார். இன்றைய இந்திய இதழியலின் நடை உட்பட பல விஷயங்களை காந்தி தான் உருவாக்கினார். வாழ்நாள் முழுக்க சலிக்காமல் எழுதிக்கொண்டே இருந்தார் காந்தி. இன்று காந்தியின் மொத்த படைப்புகளை பார்க்கும்போது பிரமிப்பு ஏற்படுகிறது. அன்றாட அரசியல் செயல்பாடுகளின் மலைமலையான வேலைகளுக்கு நடுவே இத்தனையையும் எழுதிக்குவித்திருக்கிறார்! அவர் இந்தியாவிடம் ஓயாமல் உரையாடிக்கொண்டிருந்தார்!

### 9 குறியீடுகளை பேசவிடுங்கள்

தன்போராட்டத்துக்கு காந்தி எப்போதுமே திறன் வாய்ந்த குறியீடுகளை உருவாக்கிக் கொண்டார். சொற்களைவிட ஆழமாக அவை பொது மக்களிடையே சென்று சேரும் என அவர் அறிந்திருந்தார். சர்க்கா அவரது சக்தி வாய்ந்த குறியீடு. அவரது அரைவேட்டி, அவருக்குப்பின்னால் சென்றுகொண்டிருந்த கழிப்பறை, உப்பு என அவரது குறியீடுகள் ஏராளமானவை.

காந்தி 1915ல் முதன்முதலாக காங்கிரஸ் மாநாட்டில் காந்தி கலந்துகொண்டபோது அவர் ஒரு குஜராத்தி விவசாயியின் தோற்றத்தில் முண்டாசும் இந்தியச் சட்டையுமாக வந்து பேசியது ஓர் உதாரணம். மேலைநாட்டு உடைகள் அணிந்த காங்கிரஸ் தலைவர்களின் கூட்டத்தில் அவர் சட்டென்று தனியாகத்தெரிந்தார். சலித்துப்போன கூட்டம் சட்டென்று அவர் என்ன சொல்கிறார் என்பதை கவனிததது

அவரது போராட்டங்களை அறிவித்த முறையிலேயே அந்த நாடகத்தன்மை எப்போதும் இருப்பதைக் காணலாம். அன்னியத்துணிகளை புறக்கணிப்பதும் சரி உப்பு சத்தியாக்கிரகமும் சரி. ஏன் லண்டனுக்கு ஆட்டுடன் சென்று இறங்கி அரையாடையுடன் சென்று பிரிட்டனின் மகாராணியைப் பார்த்தது வரை எல்லா நிகழ்வுகளிலும் திட்டவட்டமான பிரச்சார நோக்கம் உண்டு. அவர் சொல்ல எண்ணிய விஷயத்தை அந்தச்செயல்களே திட்டவட்டமாக அனைவருக்கும் தெரிவித்துவிடும்.

### 10 தவிர்க்கமுடியாதபோது மட்டுமே எதிர்த்து நில்லுங்கள்

காந்தியின் போராட்டத்தின் முக்கியமான கூறு இது. இதை அவரது சகாக்கள் பெரும்பாலும் புரிந்துகொள்ளவில்லை. எதிர் தரப்பு என்பது ஆட்டத்தின் மறுகட்சி மட்டுமே என்ற நிதானத்துடன் மட்டுமே அவர் எப்போதும் செயல்பட்டிருக்கிறார். அவர்களை எதிரிகளாக அவர் எண்ணியதில்லை. ஆகவே அவர்களின் நல்லியல்புகளை அவர் புரிந்துகொண்டார். அவர்களுடன் எங்கெல்லாம் ஒத்துப்போக முடியுமோ அங்கெல்லாம் ஒத்துப்போனார். எங்கே உறுதியாக எதிர்த்துப்போரிடவேண்டுமோ அங்கே மட்டுமே அதைச்செய்தார்

பிரிட்டிஷாரின் சட்ட அமைப்பில் காந்திக்கு நம்பிக்கை இருந்தது. அவர்களின் இதழியலிலும் அவர்களின் நாட்டில் இருந்த ஜனநாயகப்பண்புகளிலும் காந்தி ஆழமான மதிப்பு கொண்டிருந்தார். அவற்றை தன் நட்பு சக்திகளாக மட்டுமே அவர் அணுகினார். எங்கெல்லாம் பிரிட்டிஷ் அமைப்பு சாதகமாக இருக்கிறதோ அங்கெல்லாம் அவர் அதனுடன் ஒத்துழைத்தார். மூர்க்கமான ஒற்றைப்படையான எதிர்ப்பை அவர் முன்வைக்கவில்லை

ஒரு விஷயத்தில் பிரிட்டிஷ் சட்டம் என்னென்ன உரிமைகளை அளிக்கிறதோ அதையெல்லாம் அடைவதற்கே காந்தி எப்போதும் முயல்கிறார். அதன் பின் அச்சட்டத்துக்கு அப்பால் என்னென்ன சாத்தியங்கள் உள்ளன என்று பார்க்கிறார். தேவைப்பட்டால் அதற்காக போராட்டத்தை முன்னெடுக்கிறார். போராட்ட சக்தியை ஒருபோதும் வீம்புக்காக வீணடிப்பதில்லை அவர்.

### 11. சமரசத்துக்கு எப்போதுமே இடமிருக்கும் என நினைவில் வைத்திருங்கள்.

காந்தி போராட்டத்தை சமரசத்தை நோக்கிச் செல்லவேண்டிய ஒரு பயணமாகவே கண்டார். ‘கடைசிவெற்றி’வரை செல்லக்கூடிய ஒரு போராட்டம் என்று ஒன்று இல்லை. எதிரிகளை அல்லது எதிர்தரப்பை முழுமையாக அழித்தொழித்துவிட்டு ஒரு வெற்றி என்பது அனேகமாகச் சாத்தியமில்லை. நம் எதிர்தரப்புக்கும் அதற்கான இருப்பும்

நியாயங்களும் உண்டு. அவர்களுக்கும் ஆசைகளும் திட்டங்களும் இருக்கும். அவற்றுக்கும் இடம்கொடுக்கும் ஒரு முடிவே தீர்வாக இருக்க முடியும்.

ஆகவே போராட்டம் என்பது நமது தரப்பை முழுமையாக திரட்டிக்கொண்டு நம் ஆற்றலை முழுமையாக வெளிப்படுத்தி நம்முடைய கோரிக்கைகளை முன்வைக்கும் ஒரு செயல்பாடு மட்டுமே. நம் தரப்பை தவிர்க்கமுடியாது என்று நம் எதிர்தரப்பு உணர்ந்ததுமே சமரசத்துக்கான இடம் ஆரம்பமாகிறது. நம் இடத்தை எதிர்தரப்பு அங்கீகரிப்பதைப்போலவே எதிர்தரப்பை நாமும் அங்கீகரிப்பதே சமரசம். சமரசம் என்பது இருவரும் சிலவற்றை அடைந்து சிலவற்றை விட்டுக்கொடுத்து அடையும் ஒரு பொதுமுடிவு.

காந்தி அவர் உயிரென மதித்த சில விஷயங்களில் அபாரமான பிடிவாதம் கொண்டவர். ஆனால் எப்போதும் பேச்சுவார்த்தைக்கும் சமரசத்துக்கும் தயாராக இருந்தார். எப்போதும் விட்டுக்கொடுத்து இறங்கிவர சித்தமாக இருந்தார். உப்புசத்யாக்ரகத்தை ஒட்டி நடந்த பெரும் எழுச்சியின் உச்சியில் அவர் காந்தி-இர்வின் ஒப்பந்தப்படி சமரசம்செய்துகொண்டார். அதன் மூலம் தன் தரப்புக்கு ஏற்பட்ட இழப்புகளை சரிசெய்துகொண்டு தன் வலிமைகளை தொகுத்துக்கொண்டு பேச்சுவார்த்தைமேஜைமுன் அமர்ந்தார். எல்லா போராட்டத்தின் உச்சியிலும் காந்தி சமரசத்துக்கே முயன்றிருக்கிறார்.

பிற்கால மார்க்ஸிய ஆய்வாளரான அண்டோனியோ கிராம்ஷி இவ்வகை போராட்டத்தை நிலையுத்தம்[ Static war] என்று சொல்கிறார். போராட்டம் மூலம் சமரசத்துக்குச் சென்று கிடைத்த லாபங்களை தக்கவைத்துக்கொண்டு அந்த தளத்தில் தன்னை நிலைநாட்டிக்கொண்டு அடுத்த கட்ட போராட்டத்தை அடைதல். இந்நிலையில் போராட்டம் நடுவே சமரசம் மூலம் கிடைக்கும் லாபங்களே மேலும் போராடுவதற்கான ஆற்றலை அளிக்கின்றன

### 12 சின்னவிஷயங்களில் கவனம் கொள்ளுங்கள்

காந்தி ஒருமாபெரும் இயக்கத்தை நடத்தியவர். லட்சக்கணக்கில் பணம் அவர் வழியாகச் சென்று கொண்டிருந்தது இயல்பே. மிகப்பெரிய போராட்டங்களில் எப்போதும் அவர் ஈடுபட்டிருந்தார். ஆனால் எப்போதும் சின்ன விஷயங்களிலும் கூர்ந்த கவனம் கொண்டிருந்தார். பலலட்சம்பேர் சேர்ந்து செய்யும் செயலில் ஒருவர் செய்யும் சின்ன பிழை பலரால் செய்யப்பட ஆரம்பித்தால் பெரும் வீழ்ச்சியாக ஆகிவிடும் என அவர் பயந்தார்

உதாரணமாக காந்தி முதன்முதலாக 1915 ல் இந்திய தேசிய காங்கிரஸின் தேசிய மாநாட்டுக்கு சென்றபோது அவரது கண்ணில்பட்டது அங்கே இருந்த சுகாதாரக் கேடுகள்தான். சமையலறை ஒழுங்கில்லாமல் இருந்தது. கழிப்பறைகள் நாறிக்கொண்டிருந்தன. அவரது கவனம் அதில்தான் முதலில் பதிந்தது

காந்தி கடைசிவரை சில்லறைச் செலவுகளை எண்ணி எண்ணி கணக்கு வைத்திருந்தார். பிறரிடமும் அதேபோல பைசாக்கணக்கு கேட்டார். கடைசி காங்கிரஸ் தொண்டனும் ஒவ்வொரு பைசாவுக்கும் கணக்கு வைத்திருக்கவேண்டும் என அவர் எதிர்பார்த்தார். அவரது கணக்கு கேட்கும் போக்கில் மனம் வெறுத்து ‘மகாத்மாக்களை வழிபடலாம் சேர்ந்து பணியாற்ற முடியாது’ என்று கணக்குபுத்தகங்களை அவர் முன் வீசிவிட்டு ராஜாஜி வெளியேறியிருக்கிறார். ஆனால் ஒரு பைசா என்பது பல லட்சம் ரூபாயின் முதல் அலகு என காந்தி எண்ணினார்.

பழைய காகிதங்களை திரும்ப பயன்படுத்துவது, உள்ளூர் பொருட்களைக் கொண்டே குடில்கள் அமைப்பது என சின்னச் சின்ன செலவுகளை காந்தி எப்போதும் பார்த்துப் பார்த்துச் செய்தார். ஒரு விஷயத்தைச் செய்ய மிகச் செலவுகுறைந்த வழி என்ன என்பதையே எப்போதும் அவர் கவனித்தார்

### 13 ஆறப்போடுங்கள்

காந்திய வழிகளில் ஒன்று பிரச்சினைகளை ஆறப்போடுவதாகும். பல சமயம் பிரச்சினைகளை நாம் உணரும்போது அவை உச்சத்தை நோக்கி செல்ல ஆரம்பித்திருக்கும். அவற்றில் சம்பந்தப்பட்ட எல்லா தரப்புமே உச்சகட்ட கொந்தளிப்புடன் இருக்கும். அந்நிலையில் அதில் செய்யப்படும் எந்த முயற்சியும் அந்த உச்ச கட்ட மோதலில் ஒரு தரப்பாகவே ஆகிவிடும். நாமும் அந்தப்பிரச்சினையின் உணர்ச்சிக்கொந்தளிப்புகளுக்கு எதிர்வினையாற்றி நம்முடைய நிதானத்தை இழப்போம். நம்முடைய அலசி ஆராயும் திறன் இல்லாமலாகும்.

அது கொதித்துக்கொண்டிருக்கும் ஒருபொருளைக் கையாள்வது போன்றது. அல்லது நான்குதிசையிலும் நான்கு பேர் இழுக்கையில் ஒரு சரடின் மையமுடிச்சை அவிழ்க்க முற்படுவதற்குச் சமம்.

அதைச் சமாளிக்கச் சிறந்த வழி ஒத்திப்போடுவதுதான். அதன் வெப்பம் தணியும் வரை காத்திருப்பது. பெரும்பாலான விஷயங்கள் ஒத்திப்போடுவதனால் பேரிழப்புகள் எதையும் அளிக்காதவையாகவே இருக்கும். அந்நிலையில் அவை இயல்பாக அந்த உச்சநிலையை தாண்டி முறுக்கத்தை இழந்து முடிச்சு நெகிழ ஆரம்பிப்பது வரை காத்திருக்கலாம்.

ஆனால் காந்தி சொல்வது உதாசீனப்படுத்துவதை அல்ல. வேறு வேலைக்குச் சென்றுவிடுவதை அல்ல. அந்தப்பிரச்சினையை அதில் பங்குகொள்ளாமல், ஆகவே உணர்ச்சிகரமான ஈடுபாடு ஏதும் இல்லாமல், அதைக் கூர்ந்து அவதானித்துக் கொண்டிருத்தல். அது உருவாக்கும் விளைவுகளைப் பற்றி எச்சரிக்கையுடன் இருத்தல்.

இரு உதாரணங்கள். ஆங்கில அரசு காட்டிய பதவியாசை காரணமாக காங்கிரஸை பிளக்க மோதிலால் நேருவும் சித்தரஞ்சன் தாஸும் முடிவுசெய்தபோது சமரசங்கள் பயனிழந்தபோது காந்தி அந்தப் பிரச்சினையில் இருந்து விலகிக் கொண்டார். கிராமநிர்மாணப் பணிகளில் ஈடுபட்டார். 1923 முதல் 1928 வரை ஏறத்தாழ ஐந்து வருடம் பொறுமையாக காத்திருந்தார்.

ஆனால் உன்னிப்பாக நிலைமைகளைக் கவனித்துக்கொண்டிருந்தார். காங்கிரஸின் மீதான தன் கட்டுப்பாட்டை மட்டும் கையில் வைத்திருந்தார்.

நான்கே வருடங்களில் அந்தமோதல் கிட்டத்தட்ட ஒன்றுமே இல்லாமலாகியது. சரித்திரத்தின் இயல்பான பரிணாமம் பதவியாசைகொண்ட மூத்தவர்களை ஓரம்கட்டியது. காந்தி கட்சியில் சேர்த்துக்கொண்டே இருந்த இளையவர்கள், மோதிலால் நேருவின் மகனாகிய ஜவகர்லால் நேரு உட்பட, அந்த மூத்த தலைமுறையை காலாவதியாகச் செய்தார்கள். 1928ல் காந்தி மீண்டும் காங்கிரஸை வழிநடத்த வந்தபோது அப்படி ஒரு எதிர்ப்பு காங்கிரஸில் இருந்ததையே சொல்லித்தான் தெரியவேண்டியிருந்தது.

இரண்டாவது உதாரணம், 1928ல் இந்தியா நேரடியான சுதந்திரப்போரை நடத்துவதற்கான காலம் கனிந்துவிட்டது என காங்கிரஸுக்குள் இருந்த தீவிரவாதிகள் எண்ணினார்கள். பகத்சிங் போன்றவர்களின் தீவிரவாத நடவடிக்கைகள் உச்சம் கொண்டன. கட்சிக்குள்ளேயே சுபாஷ் சந்திர போஸ் முதலியவர்கள் நேரடி நடவடிக்கைகளை விரும்பினார்கள். ஆனால் காந்தி இந்தியா தயாராகவில்லை என்றே எண்ணினார். மக்களை பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஆயுதவலிமைக்கு எதிராக கிளப்பிவிட அவர் எண்ணவில்லை

ஆகவே அந்த சந்தர்ப்பத்தை அவர் ஆறப்போட்டார். இரண்டுவருட கால அவகாசம் கேட்டார். தீவிரக்குழுக்கள் ஒருவருடம் கொடுக்க ஒப்புக்கொண்டார்கள். ஒருவருடத்திற்குள் தீவிரவாதிகள் வரவிருப்பதாக நம்பிய இந்திய எழுச்சி என்பது நகரங்களின் படித்த நடுத்தர வற்கத்தில் மட்டும் நிகழ்ந்த ஒரு உணர்ச்சிக்கொந்தளிப்பு மட்டுமே என்று தெள்ளத்தெளிவாக தெரிய ஆரம்பித்தது. காந்தி அவரது அடுத்தகட்ட போராட்டமாகிய உப்புசத்யாக்ரகத்தை நோக்கிச் சென்றார்.

### 14 தற்காலிகமான தோல்விகளை ஒத்துக்கொள்ளுங்கள்

காந்தியின் போராட்டம் பலமுறை கடுமையான பின்னடைவுகளைச் சந்தித்திருக்கிறது. ஒரு செயலுக்கான விளைவு என்பது அந்தச் செயலுடன் ஒன்றுக்கு ஒன்று என்ற வகையில் நேரடியாகச் சம்பந்தப்பட்டது அல்ல. அதனைத் தீர்மானிக்கும் சக்திகள் ஏராளமானவை. எந்த ஒரு நிகழ்வும் வரலாறு என்ற பெரிய ஓட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளது. வரலாற்றின் விதிகள் அதில் நமக்கு தெரிந்தும் தெரியாமலும் இயங்குகின்றன. பலசமயம் அவ்வரலாறு நிகழும்போது அவை நம் கண்ணுக்குப் படுவதில்லை. இது எந்த ஒரு செயலுக்கும்பொருந்தும்

காந்தி பின்னடைவுகளை இயல்பானதாகவே எடுத்துக்கொண்டார். தன் வழிமுறைகளை மறுபரிசீலனைசெய்யவும் புதிய சாத்தியங்களை பற்றி யோசிக்கவும் அவற்றை பயன்படுத்திக்கொண்டார். ஒரு சந்தர்ப்பத்திலும் 'இது கட்டாயம் வெற்றிபெறும்' என்று நம்பி அவர் செயலுக்கு இறங்கியதில்லை. வெற்றி தோல்விகள் நம் புரிதலுக்கு அப்பாற்பட்டவை என அவர் நினைத்தார். ஆனால் தன் செயல்மீதான நம்பிக்கையுடன் அர்ப்பணிப்புடன் செயலாற்ற ஆரம்பித்தார். விளைவுகள் எதிர்மறையாகச் சென்றால் அதுவும் அந்த செயலின் ஒரு சாத்தியம் மட்டுமே என எடுத்துக்கொண்டார்.

காந்தியின் போராட்டங்களில் ஆகப்பெரிய தோல்வி என்றால் அது கிலாஃபத் போராட்டம்தான். முதல் இந்திய சுதந்திரப்போரான சிப்பாய் கலகத்துக்குப் பின் இஸ்லாமிய உயர்குடிகளை தன் அரவணைப்பில் வைத்திருந்தது பிரிட்டிஷ் ஆட்சி. இரட்டை வாக்குரிமை மூலம் அவர்களுக்கு சலுகை அளித்து மாகாண அரசுகளில் பதவிகளைக் கொடுத்துப் பேணியது. அவர்களுக்கு எதிராக எளிய முஸ்லீம்களை ஒருங்கிணைக்கவும் அவர்களை இந்துச் சாமானிய மக்களுடன் இணைக்கவும் கிலாபஃத் உதவும் என காந்தி நினைத்தார்.

ஆனால் கிலாஃபத் வரலாற்று நினைவுகள் பலவற்றை கிளறிவிட்டது. உலகமெங்கும் உருவாகி வந்த இஸ்லாமிய அடிப்படைவாத தேசிய உருவகங்களுடன் சென்று அது ஒட்டிக்கொண்டது. ஆனால் காந்தி அந்தத் தோல்வியால் தன் இலட்சியங்களை விட்டு வெளியேறவில்லை

### 15 கடைசிவரை விடாதீர்கள்

காந்திய வழிமுறைகளில் உச்சகட்டமானது ஒன்று உண்டு என்றால் அது கடைசிவரை தன் இலட்சியத்தை விட்டுக்கொடுக்காமலிருப்பதுதான். காந்தி உண்மையான இலக்கு என்ற ஒன்றைக் குறிவைத்தால் அதை நோக்கிச் சென்றுகொண்டே இருப்பார். எத்தனை தடைகள் வந்தாலும் எத்தனை பின்னடைவுகளைச் சந்தித்தாலும் எத்தனை காலமானாலும் அவர் அங்கே சென்று சேர்வார். 'நேர்மையான இலக்கும் அகிம்சை வழியும் சேர்ந்தால் எத்தனை காலமானாலும் வெற்றி வந்தே தீரும்' என்றார் காந்தி.

1915ல் இந்தியாவுக்குக் கிளம்பி வரும்போதே காந்தியின் மனதில் இந்தியாவின் முழுச்சுதந்திரம் ஒரு இலட்சியமாக இருந்திருக்கிறது. அதற்கான முன்வரைவை ஹிந்துசுயராஜ் என்ற நூலில் உருவாக்கிய பின்னரே அவர் வந்தார். காங்கிரஸ் மாநாட்டில் தன் முதல் உரையிலேயே காந்தி அதைத்தான் பேசினார். ஆனால் மெல்லமெல்ல அவர் தன் போராட்டமுறைகளை வடித்தெடுத்தார். அவற்றின் பிழைகளை சரிசெய்துகொண்டார்

காந்தி எதிர்பாராத பல தடைகள் வரலாற்றில் உருவாயின. ஒன்று, பிரிட்டிஷாரின் பிரித்தாளும் தந்திரம் அவர் எண்ணியதைவிட அதிக வெற்றி பெற்றது. முஸ்லீம்கள் தனிநாடுக் கோரிக்கை நோக்கிச் சென்றார்கள். ஏறத்தாழ இந்தியா முழுக்கவே பல்வேறு பிரிவினைபோக்குகள் உருவாகி வந்தன. ஆனால் அவர் நினைத்த இலக்குவரை அவர் சென்றுகொண்டே இருந்தார். அவர் உயிருடன் இருந்திருந்தால் கிராமசுயராஜ்யத்தை அடையாமல் விட்டிருக்கமாட்டார்.

### 16 நேர்மைக்கு ஒரு வணிக மதிப்பு உண்டு என உணருங்கள்

வணிகம் என்றாலே தந்திரம்தான் என்ற நம்பிக்கை எப்போதும் நம்மில் உள்ளது. தந்திரமான ஒருவர் தந்திரமானவராகவே பிறர் கண்ணுக்குப் படுவார். அக்காரணத்தாலேயே அவரை பிறர் நம்ப மாட்டார்கள். அவருடன் அவர்களும் மிக மிக தந்திரமாகவும் எச்சரிக்கையாகவும் நடந்துகொள்வார்கள். ஆகவே அவர் மேலும்மேலும் தந்திரமாக நடந்துகொள்வதிலேயே தன் வாழ்நாளைச் செலவிடவேண்டியிருக்கும். மலையைக்கெல்லி எலிபிடிப்பவராகவே அவர் இருப்பார்.

நேர்மையான ஒருவர் அனைவரிலும் நம்பகத்தன்மையை உருவாக்குகிறார். அவரது எதிரிகள்கூட அவரை நம்ப ஆரம்பிக்கிறார்கள். அதன் மூலம் அவரது வழிகள் சட்டென்று எளிமையாக ஆகிவிடுகின்றன. காந்திக்கு இந்தச் சாதக அம்சம் கடைசிவரை இருந்தது. அவரது ஆரம்பகால வழக்கறிஞர் தொழிலிலேயே அவர் நேர்மையை வலிமையான ஆயுதமாக பயன்படுத்தியிருக்கிறார். எதிர்த்தரப்புடன் நேரடியாகச் சென்று நேருக்கு நேராக தன் நேர்மையை முன்வைத்து பேச்சுவார்த்தை நடத்தி வெற்றிகளை அடைந்திருக்கிறார்

காந்தியின் அரசியல் எதிரிகளான வைஸ்ராய்கள் பெரும்பாலும் அத்தனைபேரும் அவரது நேர்மைமேல் அபாரமான மதிப்பு கொண்டிருந்ததை நாம் அவர்களின் குறிப்புகளில் இருந்து காணமுடிகிறது. குறிப்பாக ரீடிங் பிரபு, இர்வின் பிரபு போன்றவர்களுக்கு காந்திமீது ஆழமான வழிபாட்டுணர்வே இருந்திருக்கிறது. அந்த நம்பிக்கை ஒரு பெரிய ராஜபாதையை திறந்தது அவருக்கு.

### 11. உள்ளுணர்வுக்குச் செவிசாயுங்கள்

காந்தி அவரது 'அந்தராத்மாவின்' குரலை எப்போதும் கேட்டார். உப்புசத்யாக்ரகம், தனிநபர் சத்யாக்ரகம் போன்ற பல விஷயங்களை காந்தி அவரது உள்ளுணர்வின் மூலமே அடைந்தார். உள்ளுணர்வு என்று காந்தி சொல்வது தெய்வத்தின் அருள்வாக்கை அல்ல என்று அவரது எழுத்துக்களிலேயே அறியலாம். 1929ல் ஒரு பெரும்போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் என காந்தி எண்ணுகிறார். என்ன செய்வது என பல கோணங்களில் ஆராய்கிறார். அரைத்தூக்க மயக்கத்தில் இருக்கும்போது அவர் அந்த முடிவை அந்தராத்மாவின் குரலாக வந்தடைகிறார்

இங்கே கவனிக்கவேண்டிய விஷயம் காந்தி சம்பந்தமில்லாமல் ஒரு குரலைக் கேட்கவில்லை என்பதே. அவர் அந்தப்பிச்சினையின் அனைத்து பக்கங்களையும் ஆராய்ந்தார். அதன் மையத்தில் இருந்தார். அதிலேயே உழன்றார். அந்நிலையிலேயே அந்தராத்மாவின் குரலை அவர் கேட்டார். இதை அவரது ஆழ்மனத்தின் வெளிப்பாடு என்று சொல்லலாம். மனதை ஒரு புள்ளியில் குவிக்கும்போது ஆழ்மனம் அதனைச் சாராம்சப்படுத்திக்கொள்கிறது

பெரும்பாலான அறிவியல் கண்டுபிடிப்புகள், கலைப்படைப்புகள், தத்துவக் கோட்பாடுகள் கண்டடையப்பட்ட வழிமுறை இதுவே. உள்ளுணர்வு நம் தர்க்கத்தைவிட பல மடங்கு பிரம்மாண்டமானது. அது நம்மை நம் தர்க்க மனம் கொண்டுசெல்லும் தூரத்தைவிட அதிக தொலைவுக்குக் கொண்டுசெல்லும். பல அறிவியல் கண்டுபிடிப்புகள் நேரடியாகவே அக்கண்டுபிடிப்பாளரின் கனவில் நிகழ்ந்திருக்கின்றன. ஐன்ஸ்டீனின் வாழ்க்கையில் நாம் அவரது ஆழ்மனம் சட்டென்று திறந்துகொண்டு கண்டுபிடிப்புகளை உருவாக்கியதை மீண்டும் மீண்டும் காண்கிறோம்.

ஒரு கண்டுபிடிப்பு அல்லது புதியஞானம் என்பது எல்லாகாலத்திலுமே சட்டென்று திறந்து தன்னைக் காட்டுவதாகவே இருந்திருக்கிறது. ஆனால் ஆராய்ச்சி செய்யாத ஒருவருக்கு ஒருபோதும் உண்மையான கண்டுபிடிப்புகள் கிடைப்பதில்லை. அவர் அந்த விஷயத்தின் உச்சிவரை தர்க்கம் மூலம் ஏறிச்சென்றால் மட்டுமே அதற்கு அப்பால் உள்ள ஆழ்மனத்தளத்தை அடைய முடியும்.

அதேபோல உள்ளுணர்வின் மூலம் அடையப்பெற்ற ஒன்றை தெய்வ வாக்கு என எண்ணி அப்படியே செயல்படுத்துவதும் தவறு. உப்பு சத்யாக்கிரகம் காந்திக்கு அந்தராத்மாவின் குரலாகக் கிடைத்தது. ஆனால் மிக ஜாக்கிரதையாக ஒரு சிறிய எல்லைக்குள் 'சாம்பிளுக்கு' செய்து பார்த்தபின்னரே தேசிய அளவில் அதை அறிவித்தார்.

தாமஸ் வெபர் [Thomas Weber] எழுதிய உலகப்புகழ்பெற்ற நூல் 'உப்பு சத்யாக்கிரகம் காந்தியின் தண்டியாத்திரை குறித்த வரலாற்றுப்பதிவு ' [The Salt March : The Historiography of Gandhi's March to Dandi] காந்தி எபப்டி அவரது மாபெரும் போராட்டத்தை நடத்தினார் என்பதை சித்தரிக்கிறது. காந்தி மிகச்சிறிய அளவில், ஒரு நதி ஊற்றாகக் கிளம்புவதுபோல அதை ஆரம்பித்தார். ''கையில் ஒரு மூங்கில் கம்பு மட்டுமே இருந்த மெலிந்த 61 வயது மகாத்மா உலகின் மிகப்பெரிய சக்திக்கு எதிராக தன் ஆசிரமத்தைவிட்டு கிளம்பினார்'' என்று வெப்பர் சொல்கிறார்

காந்தி சபர்மதி ஆசிரமத்தை விட்டு நடக்க நடக்க மெல்லமெல்ல அவருக்குப்பின்னால் கூட்டம் சேர்ந்தது. பின் அது பிரம்மாண்டமாக ஆகியது. என்ன நடக்கும் என்று அவர் சோதனை செய்து பார்த்தார் என்பதில் ஐயமில்லை. ஒவ்வொரு கணத்திலும் என்ன நடக்கிறது என்று கவனித்து அதற்கேற்ப அவர் போராட்ட உத்திகளை உருவாக்கிக் கொண்டே இருந்தார். அதன் பின்னரே உப்புசதியாகிரகம் அந்த விதிகளின்படி இந்தியாவெங்கும் அமைக்கப்பட்டது.

அரசியலில் காந்தியத்தின் முதல் எதிரிகளில் ஒருவராக விளங்கிய கம்யூனிஸ்டுப் பெருந்தலைவர் இ.எம்.எஸ் நம்பூதிரிபபடு காந்தியின் படத்தை மட்டுமே தன் வீட்டில் வைத்திருந்தார். ஏன் என்றால் காந்தி மட்டுமே அன்றாட தனிவாழ்க்கைக்கு மிகச்சிறந்த வழிகாட்டியாக இருக்க முடியும் என்று அவர் தன் வெற்றிகரமான நெடுநாள் வாழ்க்கைமூலம் கற்றிருந்தார்.

வியாபாரம் என்பதற்கு சம்ஸ்கிருதத்தில் பரவுதல் என்றே பொருள். வணிகம் என்பது பரவுதலே. நமது மொத்த உலகியல் வாழ்க்கையையும் அவ்வகையில் ஒரு வியாபரம் என்றே எடுத்துக்கொள்ளலாம். வியாபாரத்தின் விதிகள் அன்றாட வாழ்க்கையின் எல்லா தளங்களுக்கும் முற்றிலும் பொருந்துபவையே. ஆகவே மூத்த பனியா உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு அன்றாடசெயலிலும் பெரும் வழிகாட்டியாக அமையமுடியும்.

[மேலும்]

---

### காந்தி என்ற பனியா 4

ஆனால் காந்தி ஒரு சாராசரி பனியாவா? இன்று சில தரப்புகளால் அவர் ஒரு பனியா,பனியா மட்டுமே என்று மீண்டும் மீண்டும் சொல்லப்படுகிறது. அது எந்த அளவுக்கு உண்மை?

காந்தி தன்னை ஒரு சனாதனி என்று சொல்லிக்கொண்டவர். சனாதனமான [தொன்மையான] தன் மரபில் உள்ள சிறந்தவற்றை மட்டுமே அவர் அப்போது உத்தேசித்தார். ஆனால் அவரது வாழ்க்கையைக் கவனித்தால் எப்போதுமே அவர் மரபுக்கு தன்னை ஒப்புக்கொடுத்து வாழ்ந்தவரல்ல என்பதைக் காணலாம். மிக இளம் வயதிலேயே அவர் தன் தோழரின் பேச்சை நம்பி உடல்வலிமைக்காக மாமிசம் உண்டார். அது அவரில் இருந்த மீறும் தன்மையையே காட்டுகிறது.

ஒரு சராசரி மனிதன் தனக்கு தன் மரபு என்ன கொடுத்ததோ அதை அப்படியே ஏற்றுக்கொள்பவன். சாதி என்பது அவனுக்கு அவனுடைய மாற்றமுடியாத அடையாளம். அதன் ஆசாரங்கள் அவனுடைய வாழ்க்கையை தீர்மானிப்பவை. இப்போது நாம் பொதுபேச்சுகளிலும் மேடையிலும் சாதியை மறைத்துப்பேசக் கற்றுக்கொண்டுவிட்டோம். ஆனால் நம் அந்தரங்கம் இப்போதும் அதே வழியில்தான் முன்னகர்கிறது. காந்தியின் காலகட்டத்தில் இன்றைய இடக்கரடக்கல்கள் கூட தேவையில்லை என்ற நிலை நிலவியது.

ஆனால் காந்தியின் வாழ்நாள் முழுக்க அவர் தனக்கு தன் மரபு அளித்த சாதி, மத அடையாளத்துடன் மோதிக்கொண்டே இருந்தார். சாதியை மரபு அவருக்கு அளித்த அர்த்தத்தில் ஒரு கணம் கூட அவர் ஏற்றுக்கொண்டதில்லை. அவருக்கு அதில் கடுமையான மாற்றுக்கருத்துக்கள் இருந்தன. ஏற்றத்தாழ்வுகளை அவர் ஒத்துக்கொண்டதில்லை.

அவரது வாழ்க்கையை அவர் அமைத்துக்கொள்ள ஆரம்பித்ததுமே ஒரு சராசரி இந்தியன் இன்றும்கூட நினைத்துப்பார்க்க முடியாத ஒன்றைச் செய்தார். தாழ்த்தப்பட்டவர்கள் உட்பட அனைவருமே சேர்ந்து வாழும் குடும்பம் ஒன்றை உருவாக்கினார். அதில் கழிப்பறை கழுவுவது உட்பட எல்லா வேலைகளையும் எல்லாரும் முறைவைத்து செய்யச்சொன்னார். அதில் தன் குடும்பத்தினரை ஈடுபடுத்தினார்.

அதேபோல காந்தி தன் மத அடையாளத்தையும் அப்படியே ஏற்றுக்கொள்ளவில்லை. அவரது மதம் குலதெய்வமான மோதாதேவி வழிபாடு, சமணம், வைணவம் கலந்த ஒன்று. அவர் தன் குலதெய்வ வழிபாட்டை எப்போதுமே செய்ததில்லை. சமணர்களின் இறுக்கமான ஆசாரங்கள் விரதங்களில் பெரும்பாலானவற்றை அவர் கடைப்பிடித்ததில்லை. உதாரணமாக சமணர்களுக்கு தேன்,பால், இரவில் உண்ணுவது இதெல்லாம் கடுமையாக விலக்கப்பட்டிருந்தவை. காந்தி அவற்றை விரும்பிச் செய்தார்.

விரிவான பொருளில் பிற்கால காந்தி ஒரு வைணவர். ஆனால் அவருக்கு வைணவத்தின் உருவ வழிபாட்டில் முற்றிலும் ஆர்வம் இருந்ததில்லை. அவர் கோயில்களை அசுத்தமான, நெரிசலான, அருவருப்பான இடங்களாகவே பார்த்தார். காந்திக்கு அவரது சமகாலத்து இந்து துறவிகள், மடாதிபதிகள், பக்தமகான்கள் எவர்மேலும் ஈடுபாடிருந்ததில்லை. சமூகசீர்திருத்த ஆர்வம் இல்லாத துறவிகளை அவர் சந்திக்க விரும்பியதே இல்லை.

வைணவரான காந்தி ஒரேஒருமுறைதான் பிருந்தாவன் போயிருக்கிறார், அருவருப்புடன் திரும்பிவிட்டார். காந்திக்கு வைணவபுராண நூல்கள் எதிலுமே ஆர்வமோ குறைந்த பட்ச வாசிப்போ இல்லை. அவர் பாகவதத்தை காதுகொடுத்து கேட்க முற்பட்டதில்லை. வைணவத்தின் அடையாளமான கிருஷ்ணலீலா பாடல்கள் அவரைக் கவரவில்லை. காந்திக்கும் அவர் காலத்து வைணவ மதத்தின் அமைப்புகளுக்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ எந்தத் தொடர்பும் இருக்கவில்லை.

இந்த மனவிலகலுக்கான முதற்காரணம் காந்தியின் மனம் அவரே சொன்னதுபோல ஒரு இந்தியப் பாரம்பரிய மனம் அல்ல என்பதே. அப்படி இருந்திருந்தால் அது கங்கையைப் பார்த்து அருவருப்பு கொண்டிருக்காது. காசிவிஸ்வநாதர் கோயில் மனம் கூசியிருக்காது. அவையெல்லாம் ஒரு இந்திய மனத்துக்கு பிரம்மாண்டமான ஒரு பாரம்பரியத்தின் சின்னமாகவே தோன்றியிருக்கும். அந்த மனதுக்குள் உறைந்திருக்கும் பாரம்பரியத் தன்னடையாளம் பெருமிதம் கொண்டிருக்கும். கங்கைக்கரையில் அவர் மனம் விம்மி எழுந்திருக்கும், விவேகானந்தருக்கு தோன்றியது போல.சுபாஷ் சந்திர போஸுக்கு தோன்றியது போல.

காரணம் காந்தியின் மனம் என்பது நவீன ஐரோப்பாவில் உருவான ஒன்று. ஆகவேதான் இந்தியாவில் எங்கே போனாலும் காந்திக்கு அசுத்தம் மட்டுமே கண்ணில் பட்டது. ஒரு ஐரோப்பியன் இன்றுகூட இந்திய நிலத்தில் கால் வைத்தால் அதே உணர்ச்சியைத்தான் அடைவான். காந்தி இந்தியாவின் பாரம்பரியமான எல்லாவற்றையும் ஒரு சராசரி ஐரோப்பியன் கண்களால்தான் பார்த்தார், கடைசி வரை.

இந்த நிலத்தின் இயற்கை அவரை மகிழ்ச்சியுறச் செய்தது. ஆனால் இடிபாடுகளும் பழமையும் எந்தக் கனவையும் எழுப்பவில்லை.

இக்காரணத்தால்தான் அவரைச் சந்தித்த ஐரோப்பியர்கள் பெரும்பாலானவர்கள் அவரால் கவரப்பட்டார்கள். அவருடன் அவர்கள் மிக நெருக்கமானவர்களாக உணர்ந்தார்கள். அந்த நெருக்கத்தை நேருவுடனோ சுபாஷ்சந்திர போசுடனே அவர்கள் உணரவில்லை. ஐரோப்பியர்களின் தர்க்கமொழியில்பேசாத காந்தியை புரிந்துகொள்ள அவர்களுக்கு தடையேதும் இருக்கவில்லை.

Gandhi being weighted during the 21 days' fast for Hindu-Muslim Unity, Delhi, September 1924

இரண்டாவதாக, காந்தி எல்லாவற்றையும் புறவயமாக, தர்க்க பூர்வமாக, சோதனை செய்து பார்த்தபின்னரே ஏற்றுக்கொண்டார். அந்த மன அமைப்பும் ஐரோப்பியத்தன்மை கொண்டதே. ஆகவே சாதி, மதம் எல்லாமே அவருக்கு சோதனைசெய்யப்பட வேண்டியவையாகவே பட்டன. எதையுமே அவர் மரபாகக் கிடைத்தது என்பதற்காக ஏற்றுக்கொள்ளவில்லை. வைணவத்தை அவரது குடும்பம் அவருக்கு கொடுத்த வடிவில் அவரால் ஏற்க முடியாது. அவர் அதை தன் போக்கில் பகுப்பாய்வு செய்தே ஏற்றுக்கொண்டார்.

சாதியை அவர் ஆரம்பத்தில் ஏற்றுக்கொண்டதுகூட அவரது மனம் ஐரோப்பியத்தன்மை கொண்டது என்பதனாலேயே. ஒரு இந்தியமனம் ஐரோப்பியன் சொன்னான் என்றோ, ஐரோப்பியன் என்ன நினைப்பான் என்று எண்ணியோ சாதி ஒழிக என்று தானும் சொல்லிவிடும். காந்தி ஐரோப்பிய கள ஆய்வு மனநிலையில் நின்று அது ஒரு சாதகமான அமைப்பாக இருக்கக் கூடும் என்று நம்பினார். பின்னர் அதிலிருந்து ஏற்றத்தாழ்வை பிரிக்கமுடியாதென அனுபவ பூர்வமாக உணர்ந்தபின் அந்த எண்ணத்தை நேர் எதிராக மாற்றிக்கொண்டார்.

காந்தி அவருக்கான வைணவத்தை அவரே தயாரித்துக்கொண்டார் என்றே சொல்லவேண்டும். அது பெரும்பாலும் கீதை என்ற நூலை மட்டுமே சார்ந்தது. அந்த நூலை எழுதிய ஞானாசிரியனாக மட்டுமே கிருஷ்ணனைப் பார்ப்பது. கீதையை காந்தி தன்னுடைய சொந்த வைணவத்துக்காக தன் நோக்கில் விளக்கிக் கொண்டார். 'அனாசக்தி யோகம்' என்று தன்னுடைய கீதை உரையை காந்தி அழைத்தார். கர்மயோக கோட்பாட்டை மட்டுமே கீதையிலிருந்து காந்தி எடுத்துக்கொண்டார் என்று சொல்லலாம். அதை மட்டுமே விரிவாக்கம் செய்து தன்னுடைய மதமாக ஆக்கிக்கொண்டார்.

அவர் மரபான பஜனைப்பாடல்களைக்கூட சாதாரணமாக தனக்காக மாற்றிக்கொள்வதைக் காணலாம். 'ரகுபதிராகவ ராஜாராம்' என்ற பாடலில் 'ஈஸ்வர அல்லா தேரேநாம்' என்ற வரி அவரது சொந்த வைணவத்தின் சமரச நோக்கின் இயல்பு. கைராட்டை சுற்றுவதையே ஒரு உயர்ந்த வகையான உபாசனையாக காந்தி முன்வைத்தார். காந்தியின் பக்தியில் சடங்குகளும் ஆசாரங்களும் முற்றிலும் இல்லை. பக்தி என்பது கைங்கரியமாக [சேவையாக] மட்டுமே வெளிப்படவேண்டும் என்றார்.

நரநாராயணர் [மனிதக்கடவுள்கள்] என்று அவர் சொன்ன எளியமக்களுக்கான சேவையாக வெளிப்பட்ட இறைபக்தியை மட்டுமே காந்தி அங்கீகரித்தார் என்பதைக் காணலாம். மற்ற எந்தவகையிலான கிருஷ்ணபக்தியையும் அவர் ஒரு பொருட்டாகவே கருதவில்லை. ஆகவேதான் அவர் வாழ்நாள் முழுக்க கீதையைப் பற்றிப் பேசியபோதிலும் இந்தியாவின் வைணவ அமைப்புகள் எதுவுமே அவரை பெரிதாகப் பொருட்படுத்தவில்லை!

காந்தி தனக்காக உருவாக்கிய வைணவமதத்துக்கு கபீரின் மதத்துடன் உள்ள நெருக்கமான உறவு கவனிக்கத்தக்கது. கபீரும் நெசவுசெய்தார், காந்தி நூல்நூற்றதைப்போல! அவரும் இந்து முஸ்லீம் சமரச மதம் ஒன்றை உருவாக்க முயன்றார். உருவமில்லாத கடவுளை இருவருமே வழிபட்டார்கள். சேவையையே பக்தியின் ஒரே வெளிப்பாடாக இருவருமே எண்ணினார்கள்.

மொத்தத்தில் காந்தி அவரது மரபு அவருக்களித்த மதத்தை பின்பற்றியவரல்ல. தன் மதத்தை தானே உருவாக்கிக்கொண்டவர். அதே போல காந்தி தன் மரபின் எந்த ஒரு அடையாளத்தையும் இயல்பாக ஏற்றுக்கொண்டவர் அல்ல. சாதி அடையாளத்தை அவர் கூர்ந்து ஆராய்திருக்கிறார். பின்னர் திட்டவட்டமாக தன்னை ஒரு சூத்திரன் என்று அறிவித்துக்கொண்டார். இன்றைய யுகத்தில் அனைவருமே உடலால் உழைக்கும் சூத்திரர்களாக ஆகவேண்டும் என்று அறைகூவினார். அதை தன் வாழ்க்கையில் ஒவ்வொருநாளும் செய்தார். உடலுழைப்பு இல்லாத ஒருநாள் கூட தாண்டாமல் பார்த்துக்கொண்டார் காந்தி.

தன் வாழ்நாளில் எந்த ஒரு தருணத்திலும் தன்னை காந்தி பனியாவாக உணர்ந்தவரோ வெளிப்படுத்தியவரோ அல்ல. பனியாக்களின் தலைவராக அவர் எப்போதும் இருந்ததில்லை. அவர்களுக்காக அவர் வாதாடியதுமில்லை.மூவாயிரத்துக்குமேற்பட்ட சாதிகளைச் சேர்ந்த கோடிக்கணக்கான இந்திய மக்களின் தலைவராக மட்டுமே அவர் தன் அரசியல் வாழ்க்கை முழுக்க விளங்கினார். அவர்களுக்காக மட்டுமே பேசினார்.

தாங்கள் பிறக்கநேர்ந்த சாதிக்காக மட்டுமே பேசிய தலைவர்கள், அந்தரங்கத்தில் ஒருகணம்கூட சாதியைவிட்டு வெளியேவரமுடியாதவர்கள், தங்கள் சொந்த சாதிக்கு வெளியே மக்கள் நம்பிக்கையை பெறமுடியாது போனவர்கள்தான் பெரும்பாலான சமயங்களில் காந்தியை பனியா என்கிறார்கள். காந்தி பனியாவாகப் பிறந்தார். இந்தியாவின் ஒரேதலைவராக வாழ்ந்தார்.

ஆனால் பனியாப் பண்பாட்டின் உயர்ந்த அம்சங்கள் அவரது ஆழ்மனத்தில் இருந்தன. அவை அவரது பாரம்பரியச் சொத்துக்கள். சமணமரபின் அகிம்சை மற்றும் சமரச மனப்பான்மை. பல்லாயிரம் வருடங்களாக வணிகம் மூலம் இந்த தேசத்தை இணைத்த சாதியின் பொறுமை, எல்லாவற்றையும் உலகியல் தளத்தில் வைத்தே அணுகும் நடைமுறைப்புத்தி. அந்த ஆழ்மனப்பண்புகளின் விளைச்சலே நாம் பெற்ற சுதந்திரம். நாம் இன்றும் அனுபவித்துக்கொண்டிருக்கும் ஜனநாயகம்.

Gandhi in 'Gandhi Cap' , 1920

**காந்திய தேசியம் 1**

**ஒருங்கிணைதலின் தேசியம்**

நேற்று ஒரு நண்பர் வீட்டுக்கு வந்து பேசிக்கொண்டிருக்கும்போது காந்தியைப்பற்றிய பேச்சு வந்தது. அவர் ஆர்.எஸ்.எஸ்.இயக்கத்தவர். அவ்வியக்கத்தைச் சேர்ந்த ஒரு அம்மையார் காந்தி பிரிட்டிஷாரின் கைக்கூலி என்றவகையில் ஒரு பெரிய நூல் எழுதியிருப்பதைச் சொன்னார். 'இந்து அரசின் மறைவு :காந்தியும் அவரது சுதந்திரப் போராட்டமும்' [Eclipse of the Hindu Nation: Gandhi and HIS Freedom Struggle , Radha Rajan] அந்நூலை தான் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்ன அவர் ஆனால் அப்படி எண்ணும் ஏராளமானவர்கள் இருப்பதாகச் சொன்னார். இந்நூலைப் புகழ்ந்து ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தின் அமைப்புகள் கட்டுரைகள் எழுதித்தள்ளுகின்றன. ஆர்கனைசர் போன்ற அதிகாரபூர்வ இதகளில் கூட சாதகமான மதிப்புரைகள் வருகின்றன.

அந்நூலைப்பற்றி இணையத்தில் தேடி அதன் சுருக்கத்தை தெரிந்துகொண்டேன். ஒரு சராசரி பிராமண சாதியாதிக்க மனம் எப்படிச் செயல்படும் என்பதற்கான மிகச்சிறந்த உதாரணம் இந்நூல். இன்றும் என்றும் அழியாமல் இந்திய சிந்தனையில் இருந்துகொண்டிருக்கும் கரியநிழலின் ஒரு கருத்துநிலை.

ஆனால் அதை ஒரு தரப்பாக நிறுத்திக்கொண்டுதான் நாம் இந்திய சிந்தனையை, இந்து ஞானமரபை, இந்திய அரசியலைப் பற்றிப் பேச முடியும். எப்படி ஐரோப்பிய சிந்தனையில் பாசிசம் கிரேக்கப் பண்பாட்டின் ஆரம்பம் முதலே இருந்துகொண்டிருக்கிறதோ அதேபோல இது இந்திய சிந்தனைமரபில் கலந்து என்றும் இருக்கிறது. இதையும் சேர்த்துத்தான் நாம் இந்தியப் பண்பாடு என்கிறோம்.

மதம் தேசியமாக மாறும் மந்திரம்

இந்நூலின் சாராம்சம் என்ன என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியும், ஏன் என்றால் இச்சிந்தனையின் மையத்தில்தான் நான் என் முதிரா இளமைப்பருவத்தில் சில வருடங்களைச் செலவழித்திருக்கிறேன். இதன் அடிப்படை நோக்கு என்பது சிலவகையான எளிமைப்படுத்தல்களில் இருந்து ஆரம்பிக்கிறது. அவற்றை இப்படிச் சுருக்கிச் சொல்லலாம்

1 தொல்பழங்காலம் முதல் இந்திய நிலப்பரப்பில் இருந்து வந்த பன்மைத்தன்மை கொண்ட பண்பாட்டுத்தேசிய உருவகத்தை நவீன ஐரோப்பாவில் உருவாகிவந்த ஒற்றைமைய அரசியல்தேசியமாக உருவகித்துக்கொள்வது.

2 பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கிய இந்து மதச் சீர்திருத்த இயக்கங்களையும் அதன் நீட்சியாக உருவான இந்திய மறுமலர்ச்சியுகத்தையும் எல்லாம் ஒட்டுமொத்தமாக நவீன இந்து தேசியத்தின் உருவாக்கத்தின் வளர்ச்சிக்கட்டங்களாக பார்ப்பது.

3. இந்து மதத்தை ஒற்றைமையமுள்ள ஒரு கட்டுமானமாக உருவகித்துக்கொள்வது

4. அந்த இந்து மதத்தை அப்படியே நவீன ஐரோப்பிய பாணியிலான இந்து தேசியமாக உருமாற்றி எண்ணிக்கொள்வது

5.இந்திய மக்களில் பெரும்பாலானவர்கள் இந்துக்கள் என்பதனால் அவர்கள் இந்து தேசியத்தின் மையப்படுத்தப்பட்ட அமைப்பை ஏற்கனவே ஏற்றுக்கொண்டுவிட்டார்கள் என்று எண்ணிக்கொள்வது.

இந்த 'பஞ்சபிரமை'களில் அடிப்படையில் மேற்கொண்டு ஆதாரங்களைத் 'திரட்டி' இந்தியாவில் உருவாகி வந்த இந்து தேசியத்தை காந்திதான் கெடுத்தார் என்று வாதாடுகிறார்கள். காந்தி அப்படி கெடுப்பதென்றால் அது பிரிட்டிஷ் சதியாகத்தானே இருக்க வேண்டும்? ஆகவே காந்தி பிரிட்டிஷாரால் இந்திய அரசியலுக்குள் புகுத்தப்பட்ட ஓர் ஐந்தாம் படை என்கிறார்கள். கிட்டத்தட்ட எழுபதாண்டுக்கால வரலாறுள்ள இந்த ஓடையின் வழியாகவே ராதா ராஜனும் ஒழுகிச்

செல்கிறார் என ஊகிப்பது எளிது.

இந்த ஒட்டுமொத்தச் சிந்தனையையே நான் ஒருவகை ‘பண்பாட்டுப் பண்டமாற்றுக் கொள்கை’ என்று சொல்வேன். எதை வேண்டுமானாலும் இந்து தேசியமாக மாற்றிக்கொடுக்கக் கூடிய ஒரு வங்கி இவர்களிடம் இருக்கிறது. இந்துஞான மரபை, பௌத்த-சமண மரபை, இந்தியப் பண்பாட்டை, இந்திய மறுமலர்ச்சியை, சைவத்தை, வைணவத்தை, சத்தியசாயிபாபாவை எதை வேண்டுமானாலும் கொடுங்கள் கச்சிதமாக இந்து தேசியமாக மாற்றி வெளியே நீட்டும்.

மேலே சொன்ன ஐந்துமே வரலாற்றுணர்ச்சி இல்லாத வெறும் மனப்பிரமைகள் மட்டுமே என்று ஊகிப்பதற்கு இந்திய வரலாற்றை ஒருமுறை மேலோட்டமாக வாசித்துப்பார்த்தாலே தெரியும். பழங்காலம் முதலே இந்திய நிலப்பகுதி ஒரு பண்பாட்டுத்தேசமாக உருவகிக்கப்பட்டிருக்கிறது. ‘ஆசேது ஹிமாசலம்’ என்று அதன் எல்லை வகுக்கப்பட்டிருக்கிறது. கங்கையும் காவிரியும் வரை அதன் நதிகள் அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றன. தெற்கே இருந்து காசிக்கும் வடக்கிலிருந்து கன்யாகுமரிக்கும் அதன் தீர்த்தயாத்திரைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் இது இன்றைய நவீன தேசியம் அல்ல. அரசியல்,பொருளியல் மையம் கொண்ட ஒரு உறுதியான நிர்வாக அமைப்பையே நாம் நவீனதேசியம் என்கிறோம். அது ஐரோப்பாவில் பதினாறாம் நூற்றாண்டுமுதல் மெல்ல மெல்ல உருவாகி வந்தது. இந்தியாவின் பண்பாட்டுத்தேசியத்தை ஒரே அரசியல் தேசியமாக ஆக்க எப்போதும் மன்னர்கள் முயன்றுவந்திருக்கிறார்கள். அதற்காக இந்தியாவை வென்றடக்குவதென்பது ஒவ்வொரு அரசருக்கும் கனவே. ரகு இமயத்தையும் கேரளத்தையும் வென்றான் என்று காளிதாசன் சொல்லும்போது செங்குட்டுவன் இமயத்தை வென்றான் என்று நாம் சொல்கிறோம்

அசோகர் முதல் அக்பர் வரை அந்தக்கனவுக்காக முயன்றிருக்கிறார்கள். முழுமையாக அது சாத்தியமானதே இல்லை. இந்தியாவில் இந்த சிறப்பியல்பை நாம் எப்போதும் காணலாம். ஒருபோதும் மொத்த இந்தியாவும் ஒரே அரசியல் நாடாக இருந்ததில்லை. அதேசமயம் பெரும்பாலான காலகட்டங்களில் இந்திய நிலத்தின் பெரும்பகுதியை ஆண்ட பேரரசுகள்தான் இந்தியாவில் இருந்திருக்கின்றன. இந்தியாவை முழுமையாக கட்டுப்படுத்திய பிரிட்டிஷ் அரசுகூட இந்தியாவை முழுக்க ஒரே நாடாக ஆளவில்லை .

ஆகவே எப்போதுமே ஐரோப்பிய நவீனத் தேசியம்போல ஒரு அரசியல்-பொருளியல் நிர்வாக மையம் கொண்ட தேசியம் இங்கே இருந்ததில்லை. இங்கே இந்தியாவை பெரும்பாலும் வென்று ஆண்ட அரசுகள் முதல் சிறிய அரசுகள் வரை எல்லாமே மையமில்லா அரசுகளே. கூட்டரசு என்ற அமைப்பே என்றும் இருந்தது. பிரிட்டிஷ் அரசும் அத்தகையதே. காரணம் பன்மைத்தன்மை மிக்க இந்திய சமூகத்துக்கு ஏற்றதாக உருவாகி வந்த முறை அது.

இந்தியாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் உருவாகிவந்த மதச்சீர்திருத்த இயக்கங்களின் வேர்கள் பக்தி இயக்கத்தில் உள்ளன. பத்தாம் நூற்றாண்டுமுதல் தென்னிந்தியாவில் உருவாகி பின்னர் வடக்கே பரவிய பக்தி இயக்கம் என்பது சம்பிரதாய இந்து மதநோக்குகளுக்கு முற்றிலும் எதிரானது. அது பழமையை அப்படியே தக்கவைக்கவோ மீட்டெடுக்கவோ முயலவில்லை. பௌத்தம், சமணம், இஸ்லாம் என புதிய சிந்தனைகளை உள்வாங்கிக்கொண்டு பழமையின் சாரமாக இருந்த ஆன்மீகத்தை புதுப்பிக்க முயன்றது

ஆகவே பழைமையான மத அமைப்புகளுக்கு எதிராக இருந்தது பக்தி இயக்கம். அவற்றின் காலகட்டத்தை வைத்துப் பார்த்தால் அவை சாதி, மத, இன ஆசாரங்களை மீறுபவையாக இருந்தன. பக்தி இயக்கத்தவர் பெரும்பாலும் அனைவருமே புரட்சியாளர்கள். அக்கால இந்துசமூக பழமைவாதத்தின் கடுமையான ஒறுத்தலுக்கு ஆளானவர்கள். அந்த இயக்கத்தின் நீட்சியாக அமைந்த இந்துசீர்திருத்த இயக்கங்களிலும் அந்தப்புரட்சிகரம் உண்டு.

விவேகானந்தர் போன்ற ஒருவரின் சொற்களை பார்த்தாலே அதை தெரிந்துகொள்ள முடியும். அவரது பல வரிகள் இன்றும்கூட ஆசாரமான இந்துவை உடல் எரியச்செய்பவை. இந்து மதமரபுக்கும் இந்து பக்தி மற்றும் சீர்திருத்த மரபுகளுக்கும் மகத்தான முரணியக்கம் உண்டு. அந்த உண்மையை மழுப்பியே இந்து சீர்திருத்த இயக்கத்தை சனாதனமான இந்து தேசியத்தின் மறு எழுச்சியாகச் சித்தரிக்கிறார்கள். அதற்காக விவேகானந்தரையும் காஞ்சி சந்திரசேகர சரஸ்வதியையும் ஒரே வரிசையில் அமரச்செய்கிறார்கள்.

இந்துமதம் என்றுமே ஒற்றைக்கட்டுமானமாக இருந்ததில்லை. இந்து ஞானமரபுக்குள் இருந்த ஆறுவகை மதங்களும் ஆறு தரிசனங்களும் தனித்தனியாகவே செயல்பட்டன. ஒன்றுடன் ஒன்று விவாதித்தன. அவை அனைத்தும் ஒத்துக்கொள்ளும் மையம் என ஏதும் இல்லை. அது ஒரு ஞானவிவாதக்களம் மட்டுமே. காலப்போக்கில் அவை இருமதங்களாகி பின் ஒருமதமாக கருதப்பட்ட போதும்கூட இந்துமதத்துக்குள் அந்தப்பன்மை எப்போதுமே இருந்துகொண்டிருக்கிறது. அதை ஆபிரகாமிய மதங்களைப்போல ஒற்றைமையக் கட்டுமானமாக இவர்களே உருவகித்துக்கொள்கிறார்கள்.

‘நான் நாத்திகன் ஆனால் இந்து, இதை உங்களால் மறுக்க முடியுமா?’ என்று ஒருமுறை ஜெயகாந்தன் கேட்டார். ‘நான் வேதவிரோதி, ஆனால் இந்து’ என்று ஒருவன் சொன்னால் ‘நான் கண்ணனையும், ராமனையும் ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஆனால் நான் இந்து’ என ஒருவன் சொன்னால் ‘நான் மறுபிறப்பையும், பாவபுண்ணியங்களையும், வேள்வியையும், வழிபாட்டையும், வேத இதிகாச மரபுகளையும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் நான் இந்து’ என ஒருவன் சொன்னால் இந்துமதம் என்றால் என்ன என்று அறிந்தவர் அதை மறுக்க மாட்டார். ஆனால் இவர்கள் மறுப்பார்கள். அதிகாரம் கிடைத்தால் அந்த இயல்பான பன்மையை அழிக்க நேரடி வன்முறையிலும் ஈடுபடுவார்கள்.

இந்த ஒற்றைமையமுள்ள இந்து மதம் அப்படியே இந்துதேசியமாகவும் இருக்கிறது என இவர்களே எண்ணிக்கொள்கிறார்கள். ஒருகாலத்திலும் இந்து மதத்துக்கு உறுதியான நிர்வாக அமைப்பு இருந்ததில்லை என்றும் அந்த சுதந்திரமே அதன் மகத்துவமும் வலிமையும் ஆகும் என்றும் இவர்கள் அறிவதில்லை. இந்துமதம் ஒருவருக்கு மிக அந்தரங்கமான ஞானத்தேடலையே திறந்து

வைக்கிறது. அவரை ஒரு கூட்டமாக ஆக்குவதில்லை. மேலும் மேலும் தனியனாகவே ஆக்குகிறது. அதற்கும் தேசியம் போன்ற உலகியல் விஷயங்களுக்கும் நேர்தொடர்பே இல்லை

இந்த அறியாமையில் இருந்து, ஆதிக்க நோக்கில் இருந்து, பழமைவாதத்தில் இருந்து உருவான ஒரு போக்குக்கு காந்தி துரோகியாக, ஐந்தாம்படையாக, அயோக்கியனாக தெரியவில்லை என்றால் அவரது இருப்பே அர்த்தமில்லாத ஒன்றாக ஆகிவிடும் என்று எனக்குப் படுகிறது. ராதா ராஜன் போன்றவர்களின் வாயில் இருந்து காந்திக்குக் கிடைக்கும் பாராட்டுதான் காந்திக்கு பெரும் களங்கம்.

ராதா ராஜன் ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்திருக்கும் அதே பழைய குரல்தான். அக்குரல் ஏன் காந்தியை எதிரியாகக் கருதுகிறது என்பதற்கு  வரலாற்றுக் காரணம் ஒன்று உண்டு. இந்தியாவின் உருவாக்கத்தில் தொகுப்புசக்தியாக செயல்பட்ட மூன்று கருத்தியல்கள் உண்டு. பிராமண-ஷத்ரிய கூட்டுக்கருத்தியல் முதலானது. சமண-பௌத்த கருத்தியல் இன்னொன்று. பக்தி இயக்கத்தின் கருத்தியல் மூன்றாவது.

பிராமண-ஷத்ரிய கருத்தியல் பிற அனைத்தையும் உள்ளிழுத்து சாரம்சப்படுத்தும் தன்மை கொண்டது. அதனூடாக அதிகார அடுக்கை உருவாக்குவது. வன்முறையம்சம் உடையது. இரண்டாவது, போதிக்கும் தன்மை கொண்டது, அதனால் குறைவான அளவிலேயே உள்ளிழுக்கும் தன்மை கொண்டது. அதேசமயம் உரையாடலை சார்ந்தது, அகிம்சைநெறி கொண்டது. மூன்றாவதாக,   பக்தி இயக்கம். அது ஏற்கனவே இருந்த அதிகார அடுக்கை மாற்றியமைக்கும் போக்கு கொண்டது. பெருந்திரளாக மக்களைக் கூட்டும் தன்மை கொண்டது.  அது சமண-பௌத்த கருத்தியல்களை உள்வாங்கிக்கொண்டு புதிதாக பிறந்து வந்தது. அதுவும் உரையாடல் தன்மைகொண்டதே.

இந்திய அரசியலின் ஒரு காலகட்டத்தில் பிராமண-ஷத்ரிய கூட்டுக்கருத்தியல் பாலகங்காதர திலகரின் தலைமையில் அரசியலாதிக்கத்தை கைக்கொள்ளும் நிலை இருந்தது. அந்த பிராமணா -ஷத்ரிய கருத்தியல் என்பது இவர்கள் சொல்வதுபோல இந்து மரபின் அல்லது இந்து தேசியத்தின் முழுமையான தரப்பு அல்ல. இந்திய மரபின் ஒரு சிறு தரப்பு மட்டுமே. இந்து மதம் என நாம் இன்று சொல்வதன் பெரும்பகுதி பக்தி இயக்கத்தின் சிருஷ்டியாகும்.

அந்த  பிராமண-ஷத்ரிய கூட்டுக்கருத்தியலுக்கு எதிராக சமண-பௌத்த மரபு மற்றும் பக்தி மரபின் பிரதிநிதியாக வந்தவர் காந்தி. பிராமண-ஷத்ரியக் கருத்தியலை மொத்தமாக அரசியல் தளத்தில் இருந்து ஓரம்கட்டியவர். அவர் வாழ்நாள் முழுக்க போராடியது அதனுடன்தான். கொல்லப்பட்டதும் அதனால்தான்.

மேலே சொன்ன அந்த  பிராமண-ஷத்ரியக் கருத்தியல் என்பதில் ஷத்ரியர் என்பவர்கள் நேரடியாக அனேகமாக இடம்பெறவில்லை என்பதையும் கவனிக்கவேண்டும். ஷத்ரிய வீரியம் என்ற கருத்துக்கூறு அதில் பிராமணர்களால்தான் முன்வைக்கப்பட்டது. ஆகவே அது ஷத்ரிய தர்மத்தைப்பேசும் பிராமணியக் கருத்தியலே. அது காந்தியை தன் எதிரியாகக் கருதுகிறது. இந்தியாவின் ஷத்ரிய வீரியத்தை அழித்த பனியா என அவரை நினைக்கிறது.  வெறுக்கிறது, வசைபாடுகிறது, அவதூறு செய்கிறது.

இந்து மத அமைப்புக்குள் பல நூற்றாண்டுகளாக பிராமணியக் கருத்தியலுக்கும் பிற பெரும்பான்மையினரின் கருத்தியலுக்கும் இடையே போராட்டம் நடந்து வந்துள்ளது. இதை ஒரு கருத்துப்போராட்டம் என்றே சொல்லவேண்டும். ஆகவே இது உரையாடலும் கூட. பிராமணியக் கருத்தியலில் பக்தி இயக்கம் ஆழமான மாற்றங்களை செய்தது. பக்தி இயக்கத்தை பிராமணக் கருத்தியலும் பாதித்தது.

இந்த முரணியக்கம் இல்லாத தளம் இல்லை. ஆர்.எஸ்.எஸ் போன்ற அமைப்புகளுக்குள்ளேயே கூட. ஆகவேதான் ஒருபக்கம் காந்தியை தன் பிரார்த்தனையில் மகாத்மா என்று பாடுகிற ஆர்.எஸ்.எஸ்ஸின் ஒருபிரிவே ராதா ராஜனை தூக்கிப்பிடிக்கிறது. ராதாராஜன் போராடுவது ஆர்.எஸ்.எஸ்சுக்குள் உள்ள அந்த மறு குரலுடன், காந்தி மீது மதிப்புள்ள குரலுடன், மட்டுமே.

மேலும் உள்ளவை, அரசியல் காரணங்கள். இன்று இந்தியாவில் தலித்துக்களானாலும் சரி, கம்யூனிஸ்டுக்களானாலும் சரி, திராவிட இயக்கமானாலும் சரி, தங்கள் சொந்த இயலாமைக்கும் தோல்விக்கும் காந்தியின் சதி என்று சொல்வதே வாடிக்கை. இந்திய தலித் சமூகத்தின் பன்மைத்தனமையை , பண்பாட்டு ஊடுபாவுகளை கொஞ்சமும் கணித்தறியாமல் ஒற்றைப்படையான ஓர் அரசியலியக்கமாக அவர்களை திரட்ட முயன்று தோல்வியடைந்த அம்பேத்கார் அந்தத் தோல்விக்கு காந்தியையே காரணம் காட்டினார். காந்தி இந்திய நடைமுறை அரசியலில் பழங்கதையாகி விட்ட இன்றும் அவர்களால் ஒருங்குதிரள முடியவில்லை என்ற யதார்த்தமே அவருக்குப் பதிலாக நிற்கிறது.

அதேபோல பன்மைத்தன்மை கொண்ட இந்து ஞானமரபு மனிதனை அந்தரங்கமான ஞானத்தேடல்கொண்டவனாக மட்டுமே ஆக்கும் என்ற உண்மையையும், இந்து சமூகத்தின் இயல்பான பன்மைத்தன்மையையும் புரிந்துகொள்ளாமல் மூர்க்கமான ஒற்றைமையமாக்கலை தங்கள் ஒரே செயல்திட்டமாகக் கொண்டு முக்கால் நூற்றாண்டு போராடித்தோல்வியின் விளிம்பில் நிற்கும் இந்துத்துவ இயக்கங்களும் காந்தியையே அதற்கு குறை கூறுகின்றன.

மேலும் இந்திய மக்களை காந்தியில் இருந்து பிரிக்காமல் காங்கிரஸில் இருந்து அவர்களை பிரிக்கமுடியாது என்ற அரசியல் திட்டமும் இவர்களுக்கு உள்ளது. காந்திக்கு பாதுகாப்பு அவரது சத்தியமே ஒழிய ஊழலில் மூழ்கிய காங்கிரஸ் அல்ல என்பதை இவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

தேசியத்தின் இருமைத்தன்மை

இச்சூழலில்தான் காந்தி எண்ணிய தேசிய உருவகம் என்ன என்பதைப் பார்க்க வேண்டியிருக்கிறது. அதன் வேர்கள் என்ன, அதன் எதிர்காலச் சாத்தியங்கள் என்ன? குறிப்பாக இன்றைய சூழலில் காந்திய தேசியம் எவ்வாறு பொருள்படுகிறது?

இந்தியச் சூழலில் தேசியம் குறித்த எந்த விவாதத்தையும் இரு வகையில் பிரித்து அடையாளப்படுத்தியபின்னரே முன்னெடுக்கவேண்டியிருக்கிறது. இது அந்தந்தத் தேசியக் கருதுகோள்களின் இயல்புகளை அறியவும் அவற்றை ஒப்பிடவும் இன்றியமையாதது. அவற்றை இரண்டு இருமைகளாக உருவகித்துக்கொள்ளலாம். ஒன்று, 'கூட்டுத்தேசியம் X பிரிவினைத்தேசியம்' என்ற முரண்பாடு. இரண்டு, 'பாரம்பரிய தேசியம் X இலட்சியவாத தேசியம்' என்ற முரண்பாடு.

பல்வேறு இன,மத,மொழி அடையாளங்கள் கொண்ட மக்களை ஒன்றாகத்திரட்டி அவர்கள் அனைவரும் சமமான உரிமையுடன் பங்குகொள்ளும் ஒரு தேசத்தை உருவகிப்பதே கூட்டுத்தேசியமாகும். அதற்கு நேர் எதிரான விசையாக அமைவது பிரிவினைத்தேசியம். தங்கள் சாதி மதம் இனம் மொழி அடிப்படையில் பிரிந்து செல்ல வேண்டும், தனித்துச் செயல்பட வேண்டும் என்ற நோக்கம் கொண்டது பிரிவினைத்தேசியம். பெரும்பாலான நேரங்களில் இது எதிர்மறையாகவே செயல்படுகிறது. கூட்டுத்தேசியத்தை உடைத்து தன் பங்கை எடுப்பதிலேயே இதன் செயல்முறை உள்ளது.

தேசியத்தின் வேர்களை தொன்மையில் இருந்து, பாரம்பரியத்தில் இருந்து , வரலாற்றில் இருந்து உருவகித்துக்கொள்வது பாரம்பரியத்தேசியம். இவர்களின் எல்லா தேசிய அடையாளங்களும், தேசியக் கனவுகளும் சென்றகாலத்தில் இருந்தே உருவாகின்றன. ஆகவே இவர்களுக்கு வரலாறு என்பது முக்கியமான ஆதாரம். வரலாற்றுவாதத்தை உருவாக்குதலே இவர்களின் முக்கியமான கருத்தியல் செயல்பாடு. தங்களுடைய தனித்தன்மையை, தேசிய அடையாளத்தை வரலாறு வழங்குகிறது என்பதே இந்த தேசிய உருவகத்தின் சாராம்சமான தரிசனம்.

மாறாக தேசியத்தின் எதிர்காலச் சாத்தியங்களையே அதன் நியாயங்களாக முன்வைப்பதே இலட்சியவாதத் தேசியம். எப்படி வாழ்ந்தோம் என்று பேசுவதற்குப் பதிலாக எப்படி வாழவேண்டும் என்ற கனவில் இருந்து உருவான தேசியம் அது. அதன் எல்லா தர்க்கங்களும் எதிர்காலத்தைச் சார்ந்தவை. இலட்சியவாதமே அதன் நோக்குகளை தீர்மானிக்கிறது.

*நம் சூழலில் தேசியம் குறித்து அறிவார்ந்த கோணத்தில் பேச முன்வருபவர்களேகூட தேசியம் என்பதை இவ்வாறு குண அடிப்படையில் பிரித்துப் புரிந்துகொள்ளாமல் மட்டையடியாக கருத்துச் சொல்வதைக் காண்கிறேன். கடந்த ஐம்பதாண்டுகளில் தேசியம் என்ற உருவகத்தின் பல்வேறு சாத்தியங்களைப்பற்றி மிக விரிவாகபேசும் நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றை உள்வாங்காமல் போகிறபோக்கில் கருத்துச் சொல்வதனால் எந்தப் பயனும் இல்லை.*

*மேலே சொன்ன பிரிவினைகளுக்குள் ஒரு தொடர்பு இருப்பதைக் காணலாம். கூட்டுத்தேசியம் என்பது பெரும்பாலும் இலட்சியவாத தேசியமாகவே இருக்க முடியும். இறந்தகாலத்துக்குச் சென்றால் பல்வேறு இன,மத,மொழி குழுக்கள் ஒன்றுடன் ஒன்று போரிட்டு ஆதிக்கம் செலுத்தி ஆதிக்கத்தை எதிர்த்து கொண்டிருந்த சித்திரமே கிடைக்கும். 'நாம் ஒன்றாக இருக்கவேண்டும்' என ஒரு தேசியவாதி சொன்னாரென்றால் அதற்கான காரணங்களை அவர் இறந்தகாலத்தில் தேட முடியாது, எதிர்காலத்திலேயே தேட வேண்டும்.*

*மாறாக பிரிவினைபேசும் எவருக்கும் வரலாறு கச்சிதமாகக் கைகொடுக்கும். எந்த மதமும் இனமும் மொழியும் இனக்குழுவும் தன்னை ஒரு தனித்தேசியமாக உணரும் என்றால் அதற்கான காரணங்களை வரலாற்றில் கண்டுகொள்ளலாம். காரணம் மக்கள் பிரிந்து போரிட்ட வரலாற்றால் ஆனதே மானுட பரிணாமம்.*

*பிரிவினைத்தேசியம் சார்ந்த உணர்வுகளை மக்களிடையே உருவாக்குவது எளிது. காரணம் அவை எதிர்மறை உணர்வுகள். எதிரி தூலமாக கண்ணெதிரே தெரிகிறான். அவற்றைச் சுட்டிக்காட்டி கசப்புகளை மிக எளிதில் உருவாக்கலாம். ஒரு நவீன இந்திய தேசியத்தை உருவாக்க அரைநூற்றாண்டு ஆகியது. ஐந்தே வருடங்களில் பாகிஸ்தானிய பிரிவினைத் தேசியத்தை உருவாக்க அவர்களால் முடிந்தது. 'சகமனிதன் உன் எதிரி' என்று எங்கும் எப்போதும் மனிதர்களிடம் சொல்லலாம், நம்ப வைக்கலாம்.*

*அதேபோல இறந்தகாலத்தில் வரலாற்றின் காரணங்களைக் கண்டடைவதும்  அதைப் பரப்புவதும் எளிது. இறந்தகலாம் என்றுமே ஒரு கனவுபூமி. அங்கே எல்லாவகை பிரமைகளுக்கும் இடமிருக்கிறது. பெருமிதங்களை, காழ்ப்புகளை, கசப்புகளை அங்கிருந்து எப்போது வேண்டுமானாலும் தோண்டிக்கொண்டுவரமுடியும். எப்படியும் தர்க்கப்படுத்தி முன்வைக்க முடியும்.*

*ஆனால் மக்களை அவர்களின் பேதங்களை மறந்து ஒருங்கிணைக்கச் செய்வது மிகமிகக் கடினமானது. ஏனென்றால் குழுக்களாகப் பிரிவதும் சகமனிதர்களை வெறுப்பதும் மனிதனின் இயல்புகளில் முக்கியமானவை. அவ்வியல்புக்கு எதிராக அவர்களைக் கொண்டுசெல்ல உணர்ச்சிகரமான இலட்சியவாதம் தேவை. அந்த இலட்சியவாதத்தின் சுருதி இறங்க இறங்க அதை மேலெழுப்பிக்கொண்டே இருக்கும் கடும் முயற்சி தேவை. அப்போதும்கூட எக்கணமும் அது கைநழுவிச்சென்றுவிடும் அபாயம் உள்ளது.*

*காந்தி இந்தச் சவாலை முன்னெடுத்த தலைவர். அவரது தேசியம் என்பது மகத்தான இலட்சியவாத கருத்துக்களின் அடிப்படையில் அமைந்தது. அவரது தேசியம் என்பது நேற்றில் இருந்து கிளைத்தது அல்ல. நாளைகுறித்த கனவுகளில் இருந்து கிளைத்தது. அவர் மக்களை அக்கனவின் அடிப்படையில் ஒருங்கிணைக்க முயன்றவர்*

*[மேலும்]*

---

*காந்திய தேசியம் 2*

*எப்போது அரசியலில் காந்தி நுழைகிறாரோ அப்போதே அவருக்கு எதிர்கால இந்தியா குறித்த மாபெரும் இலட்சியக்கனவு இருந்திருக்கிறது. 1909 லேயே அவர் தன்னுடைய கொள்கைவிளக்க நூலான 'ஹிந்த் ஸ்வராஜ்' ஐ எழுதிவிட்டார். அந்நூலில் நாம் காந்தி தேசம் என்றும் தேசியம் என்றும் எதை உத்தேசித்தார் என்பதை துல்லியமாகவே வாசிக்கலாம். கடைசிவரை காந்தி அந்த இலட்சியத்தில் இருந்து பின்வாங்கவில்லை.*

*அந்தோனி பாரெல் தொகுத்த 'காந்தி சுதந்திரமும் தன்னாட்சியும்' [ Gandhi, Freedom, and Self-Rule, Anthony J. Parel] என்ற நூல் காந்தியின் தேசிய உருவகம் என்ன என்பதை அறிந்துகொள்ள மிகமிக முக்கியமான ஒரு வழிகாட்டி. அந்தோனி பாரெல் ஏற்கனவே காந்தியின் ஹிந்து சுயராஜ் நூலை விரிவான குறிப்புகளுடன் பதிப்பித்தவர்[ Hind Swaraj and Other Writings] ஹிந்துசுயராஜ் குறித்த ஒரு பலமுனை அலசல் என்று காந்தி சுதந்திரமும் தன்னாட்சியும் நூலைச் சொல்லலாம். ஏறத்தாழ இந்த ஆய்வில் விவாதிக்கவிருக்கும் எல்லா விஷயங்களும் அந்நூலில் சுருக்கமாக பேசபப்ட்டுவிட்டன.*

**தேசியத்தின் வருகை**

*இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கீழைநாடுகளெங்கும் ஐரோப்பிய தேசியவாதம் ஓர் அலை போல வந்து பரவியது. ஆங்கிலம் கற்ற அனைத்து நடுத்தர வற்கத்தினரும் அந்தக் கனவால் தூக்கிச்செல்லப்பட்டார்கள். ஐரோப்பா உருவாக்கிக்கொண்ட நவீன தேசிய உருவகம் அவர்களை பிறநாடுகள் மீது அதிகாரம் செலுத்துபவர்களாகவும் செல்வ வளம் மிக்கவர்களாகவும் ஆக்குவதை அவர்கள் கண்டார்கள். ஆகவே அத்தகைய ஒரு தேசிய உருவகத்தை தாங்களும் அடைய விரும்பினார்கள்.*

*உதாரணமாக, ஹிட்லரின் மெய்ன் காம்ப் என்ற நூல் அதுவெளியான சில வருடங்களுக்குள்ளாகவே பரமசாமி என்ற தேசியவாதியால் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு மலேசியாவில் கொலாலம்பூரில் இருந்து வெளியாகியது. அன்று ஹிட்லர் சோர்ந்துகிடந்த ஒரு நாட்டுக்கு தேசியவாதம் மூல உணர்வூட்டி எழுப்பிய வீரநாயகனாகவே கருதப்பட்டார். இத்தாலிய தேசியவாதிகளான மாஜினி, கரிபால்டி போன்றவர்கள் இந்திய சிந்தனையில் ஆழமான பாதிப்பை*

உருவாக்குபவர்களாக இருந்தார்கள் அன்று.

ஐரோப்பிய தேசியவாதத்தை அதன் வெற்றிகளைக்கொண்டு மட்டுமே மதிப்பிடும்போக்கு என இதைச் சொல்லலாம். அதன் வரலாற்றுக்காரணங்களும் அதன் விளைவுகளும் ஆராயப்படவில்லை. அந்த வகையான தேசியமே ஒரே வழி என்று நம்பப்பட்டது. ஒருவகையில் அந்த நவீன ஐரோப்பிய தேசியக் கருத்தாக்கம் வழியாகத்தான் கீழைநாடுகளில் நவீன அரசியலே தோன்றியது.

இந்தியாவை எடுத்துக்கொண்டால் இங்கே இரண்டுவகையான ஆட்சிகள் இருந்தன. ஒன்று இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் நிலவிய மன்னராட்சி. இரண்டு பிற இடங்களில் பிரிட்டிஷாரின் நேரடி ஆட்சி. ஆனால் அதுவும்கூட மன்னராட்சியே. இங்கிலாந்து ராணியின் ஆட்சி. என்ன வேறுபாடு என்றால் மன்னராட்சியில் நிலப்பிரபுத்துவ மதிப்பீடுகள் ஆளும் கருத்தியலாக இருந்தன. ஆசாரங்கள் மரபுகள் மற்றும் நம்பிக்கைகளே ஆட்சியை நிறுவி காத்தன. பிரிட்டிஷ் இந்தியாவில் பிரிட்டிஷாரின் ஆயுத வலிமையும் அதன்மூலம் அவர்கள் அளித்த சட்டத்தின் ஆட்சிக்கு இந்திய நடுத்தர வர்க்கம் அளித்த ஆதரவும் அடிப்படையாக அமைந்தன.

இரு ஆட்சியிலும் உள்ள பொதுவான அம்சம் என்னவென்றால் குடிமைச்[ சிவில்] சமூகத்துக்கு அதிகாரத்தில் பங்களிப்பே இல்லை என்பதுதான். மக்கள் அரசியல்படுத்தபடவில்லை. தங்கள் சொந்த வாழ்க்கையின் மாறாத சக்கரச்சுற்றலில் அவர்கள் அப்படியே நூற்றாண்டுப்பழைய வாழ்க்கையை வாழ்ந்தனர். குடிமைச்சமூகத்தில் இருந்து கிளைத்த அரசியல்சமூகம் ஆட்சியுடன் ஒட்டிக் கொண்டு எல்லா நலன்களையும் அனுபவித்தது. பதிலுக்கு ஆட்சிக்கான அனுமதியை அது குடிமைச்சமூகத்தில் உருவாக்கி அளித்தது.

ஒருநவீன தேசியம் குடிமைச்சமூகத்தை அரசியல்படுத்தும் என்றும் அதன் மூலம் உருவாகும் அரசியல் மாற்றம் வலுவான தேசிய அரசை உருவாக்கும் என்றும் அன்றைய நடுத்தர வர்க்கத்தில் உள்ள சிலர் எண்ணியமையாலேயே ஐரோப்பிய நவீன தேசியவாதம் இங்கே கொண்டுவரப்பட்டது. அன்று உருவாகி வந்த இதழியல், பொதுக்கூட்டம் போன்ற நவீன ஊடகங்கள் அதற்கு உதவின. ஆகவே அது வேகமாக இந்தியாவில் பரவியது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்திய அச்சு ஊடகங்களில் எல்லாம் எவரேனும் நவீன ஐரோப்பிய தேசியத்துக்காக குரல்கொடுத்திருப்பதைக் காணலாம்.

அத்துடன் ஏற்கனவே நவீனமயமாதல் இந்தியாவில் சிறிய அளவில் ஆரம்பித்தாகிவிட்டிருந்தது. அதை பிரிட்டிஷார் அவர்களின் சொந்த நிர்வாக வசதிக்காக உருவாக்கினார்கள். தரப்படுத்தப்பட்ட பொதுக்கல்வி, போக்குவரத்து வசதி, தகவல்தொடர்பு வசதி ஆகியவை இந்தியாவின் பிரிட்டிஷ் பகுதிகளில் நவீனமயமான சமூகம் ஒன்றை மெல்லமெல்ல கட்ட ஆரம்பித்தன. அத்துடன் தொழிற்சாலை உற்பத்திமுறை உருவாகி தொழிலாளர்வர்க்கம் என்ற ஒருங்கிணைக்கப்பட்ட உழைப்பாளி அமைப்பு உருவாகியது. இவையனைத்துமே நவீன தேசியத்தை நோக்கி தள்ளக்கூடிய அம்சங்கள்.

**இரண்டு வகை தேசியங்கள்.**

ஐரோப்பிய நவீன தேசியத்தில் இருந்து இரண்டு வகையான தேசிய உருவகங்கள் உருவாகி வந்தன என்று சொல்லலாம். ஒன்று, தாக்கும்தன்மை கொண்டதும், ஒற்றை அதிகார மையம் கொண்டதும், ஒற்றைப்பண்பாட்டை தன் அடிப்படையாக வலியுறுத்துவதுமான மையத்தேசியம். இறுக்கமான கட்டமைப்பு கொண்ட இந்த தேசியம் தன்னை ஒரு இயந்திரமாக உருவகித்துக்கொண்டது. இந்த தேசிய உருவகமே பதினெட்டாம் நூற்றாண்டில் சமூகம் மனம் இயற்கை பிரபஞ்சம் எல்லாவற்றையுமே இயந்திர விதிகளின்படி உருவகித்த ஐரோப்பிய இயந்திரவியல் காலகட்டத்தின் சிருஷ்டி எனலாம்.

வலுவான மையமே இதன் அடிப்படை. அந்த மையத்தை வலுப்படுத்தும் கூறுகளினால் ஆனதே இதன் ஒட்டுமொத்தக் கட்டமைப்பும். இந்த தேசியம் எப்போதுமே தீவிரமான இலக்குகள் கொண்டது. உலகை வெல்லுதல் முதல் ஐரோப்பாவில் முதலிடம் பிடித்தல் வரை. அந்த இலக்குக்கு ஏற்பவே அதன் எல்லா கூறுகளும் வடிவமைக்கப்பட்டிருக்கும். அந்த இலக்குக்கு ஒவ்வாத எதுவுமே தேவையற்றவையாக கருதப்படும். எப்படி ஓர் இயந்திரம் செயலாற்றலுக்காகவே அதன் வடிவத்தை அடைந்திருக்கிறதோ அப்படி செயலாற்றும் கூறுகளினால் மட்டுமே ஆனது இது.

இதற்கு இன்று காட்டப்படும் மிகச்சிறந்த உதாரணம் ஹிட்லரே. ஆனால் ஐரோப்பாவில் எல்லா நாடுகளிலும் எப்போதும் ஏதேனும் ஓர் அளவில் இந்தவகையான தேசியம் இருந்திருக்கிறது — பிரிட்டனைத்தவிர பெரும்பான்மையான ஐரோப்பிய நாடுகளை நவீன காலகட்டத்துக்கு கொண்டுவந்தவர்கள் இந்த வகையான தேசிய உருவகத்தை மனதில் கொண்டவர்களே. உதாரணம் நெப்போலியன், பிஸ்மார்க், கரிபால்டி.

வலிமையான மையம் தேவை என்ற காரணத்தாலேயே இந்த வகையான தேசியம் சர்வாதிகார அரசமைப்பையே இயல்பாக நாடக்கூடியது. பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளில் சர்வாதிகார ஆட்சி வலுவாக இருந்திருக்கிறது. அதற்கு வாய்ப்பே இல்லாதிருந்த நாடு என்றால் பிரிட்டன் மட்டுமே. ஹிட்லரும் முசோலினியும் இந்த மையத்தேசியக் கருத்தாக்கத்தை பயன்படுத்தியே ஆட்சியை பிடித்தார்கள். இவ்விருவருடைய எழுத்துக்களிலும் இத்தகைய தேசியத்தை விளக்கக்கூடிய, அறைகூவக்கூடிய ஏராளமான வாதங்கள் குவிந்து கிடக்கின்றன.

இந்த தேசியம் மைய அரசில் வரம்பில்லா அதிகாரத்தைக் குவிக்கக்கூடியது. ஆகவேதான் சர்வாதிகாரிகளை இது உருவாக்குகிறது. ஹிட்லரும், முசோலினியும், ஸ்டாலினும், முஸ்தபா கமால் பாஷாவும் இதன் சிருஷ்டிகளே. ஹிட்லர் முதலியோர் இவ்வகை தேசியத்தை பயன்படுத்தி உருவாக்கிய பேரழிவுக்குப் பின்னரும்கூட ஐரோப்பாவில் சார்ல்ஸ் டி கால்[பிரான்ஸ்] , பிரான்ஸிஸ்கோ பிராங்கோ [ஸ்பெயின்] மார்ஷல் டிட்டோ [யூகோஸ்லாவாகியா] போன்ற சர்வாதிகாரிகள் ஆட்சியில் நீடித்தனர், புதிதாக உருவாகியும் வந்தனர். இன்று ஐரோப்பா மேல் தோற்றத்தில் இந்தவகையான தேசிய உருவகத்தைவிட்டு வெளியே நகர்ந்துவிட்டதாக தோன்றினாலும்கூட இது ஐரோப்பிய உளவியலில் மிக வலிமையாக இருந்துகொண்டிருக்கும் ஒன்றுதான்.

இந்த மையத்தேசியத்தின் முக்கியமான சிறப்பியல்பு என்னவென்றால் இது மன்னராட்சிக்கு எளிதான மாற்றாக அமைய முடியும் என்பதே. மன்னராட்சிக்கு அடிப்படையாக இருக்கும் தேசிய பெருமிதம், அது சார்ந்த பண்பாட்டுக்கூறுகள் ஆகிய அனைத்தையும் இது அப்படியே பயன்படுத்திக்கொள்ள முடியும். பலநாடுகளில் மன்னராட்சி அப்படியே நவீன மையத்தேசியமாக உருமாற்றம் பெற்றது. மிகச்சிறந்த உதாரணம் ஜப்பான்.

விரைவாக முடிவெடுக்கும் சாத்தியம், ஈவிரக்கமில்லாமல் மாற்றங்களைக் கொண்டுவரும் தன்மை, முரண்பாடுகளை அடக்குமுறை மூலமே இல்லாமல்செய்யும் போக்கு ஆகியவற்றின் மூலம் இத்தகைய தேசியம் மிக எளிதாக கண்முன் தெரியும் பல சமூகச் சிக்கல்களை மேலோட்டமாகக் களைந்து பொருளாதார முன்னேற்றத்தையும் சமூக ஒற்றுமையையும் காட்ட முடியும். அந்த சர்வாதிகாரி உண்மையான மக்கள் நலம்நாடுபவராக இருந்தால் அந்த மாற்றங்கள், அதன் அழிவுகளுடனேயே, நல்ல விளைவுகளை அளிக்க முடியும். அதற்கு இன்றும் முஸ்தபா கமால் பாஷாவே உதாரணமாகக் காட்டப்படுகிறார். துருக்கி இன்றும் இஸ்லாமிய சீரழிவுப்போக்குக்கு செல்லாமல் வளமான அமைதியான நாடாக நீடிப்பது அவர் உருவாக்கிய வலிமையான அடிப்படைகளினால்தான்.

இந்த மையத்தேசியம் தாக்கும் தன்மை கொண்டது. ஏனென்றால் இது உருவாக்கும் மையம் ஒரு செயல்நோக்கம் இல்லையேல் நீடிக்காது. அச்செயல்நோக்கம் உணர்வுபூர்வமானதாக இருக்கவேண்டுமென்றால் எளியவழி தேசிய எதிரிகளை கற்பனைசெய்து கொள்வதே. அந்த எதிரிக்கு எதிரான போரிலேயே உறுதியான மையத்தையும் அதை காத்து நிற்கும் அமைப்பையும் சாதாரணமாக உருவாக்க முடியும்.

அல்லது ‘உலகைவெல்லும்’ கனவு தேவை. தேசிய அடையாளத்தை ஊதிப்பெருக்கி, உலகின் தலைமைக்குடிகளாக ஒவ்வொருவரையும் கருதிக்கொள்ளச் செய்து, அதன் மூலம் உலகைக் கைப்பற்றும் கனவை ஒவ்வொரு மனதிலும் ஊட்டி, அதன் வழியாக அவர்களை மையம் நோக்கி திரட்ட முடியும். ஐரோப்பிய நவீன மையத்தேசியம் என்பது இவ்விரு சாத்தியங்களில் ஏதேனும் ஒன்றை அல்லது இரண்டையும் பயன்படுத்திக்கொண்டதாகவே இருக்க முடியும். ஹிட்லர் முதலில் தேசிய எதிரிகளை எதிர்கொள்வதற்காக மையத்தேசியத்தை முன்வைத்தார். பின் உலகை வெல்லும் கனவை உருவாக்கினார்.

மையத்தேசியத்தின் பிதாமகர் பிளேட்டோ. தகுதியான ஒரு உட்சமுகத்தால் தேர்வுசெய்யப்பட்டு தத்துவ வாதியால் தலைமை தாங்கப்படும் ஒரு முற்றதிகார அரசாங்கமே அறிவுபூர்வமானது என்று பிளேட்டோ என்ணினார். அவரது குடியரசு உலகம் முழுக்க உள்ள முற்றதிகார ஆட்சியாளர்கள் அனைவருக்குமே ஆதர்சமாக இருந்திருப்பதைக் காணலாம். உதாரணமாக ருஷ்யாவில் ஸ்டாலின் அனைத்ததிகார ஆட்சியின்போது ‘தத்துவ வாதியான ஆட்சியாளன்’ பிளேட்டோ கண்ட கனவு ஸ்டாலினால் நிறைவேறுகிறது என்று பிரச்சாரம்செய்யப்பட்டது.

ஸ்பெயின், பிரான்ஸ், பிரிட்டன், டென்மார்க், பெல்ஜியம் என எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் மையத்தேசியம் இருந்திருக்கிறது. அதுதான் காலனியாதிக்கமுறையை உலகம் மீது ஏற்றியது. உலக நாடுகளைச் சுரண்டி மேலும் மேலும் செல்வம் சேர்த்தது. ஐரோப்பா நவீனமயமானது இந்த மையத்தேசியங்கள் உருவாக்கிய செல்வ வளம் மூலமே. விளைவாக அங்கே கல்வி தொழில்நுட்பம் ஆகிய இரண்டும் வளர்ந்தன. அந்நாடுகளால் சுரண்டப்பட்ட நாடுகளில் உள்ள படித்த மக்கள் இந்த வெற்றிகளை மட்டுமே கண்டார்கள். இவ்வெற்றிகளுக்குக் காரணமான மையத்தேசிய உருவகத்தின் மீது ஆழமான நம்பிக்கை கொண்டார்கள்.

ஆனால் ஒரு மையத்தேசியம் பிற மையத்தேசியங்களுக்கு எதிரானதாகவே இருக்க முடியும். ஊன்உண்ணி மிருகங்கள் மந்தையாவதில்லை. ஆகவேதான் இரு உலகப்போர்கள் உருவாயின. உலக வளங்களை பங்கிடுவதில் மையத்தேசியங்கள் நடுவே உருவான பூசலே அந்த போர்களையும் பேரழிவுகளையும் உருவாக்கியது. அதை அந்த நாட்டு அறிஞர்கள் உணர்ந்தபோதிலும்கூட மையத்தேசிய கனவை சுமந்தலைந்த பிற உலக நாட்டு அறிவுஜீவிகள் அனேகமாக உணரவில்லை.

மேலும் மையத்தேசிய உருவகம் மேலும் இருபது வருடங்கள் ஐரோப்பாவில் ஆட்சி செலுத்தியது. 1960 களுக்குள் ஐரோப்பாவில் இருந்த பெரும்பாலான மையத்தேசியங்கள் சரிந்தன. உலகளாவிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்த கடைசி மையத்தேசிய அரசு ஸ்டாலினின் ருஷ்யாதான். 1954 ல் குருஷேவ் பதவிக்கு வந்து ஸ்டாலினின் கொடுமைகள் வெளியே தெரிய ஆரம்பித்ததும் அந்த கனவும் சரிந்தது. ஆனாலும் அறிவுஜீவிகளில் ஒரு சாராரிடமும் மக்களில் கணிசமானவர்களிடமும் எப்போதும் மையத்தேசியம் என்ற கனவு எப்போதும் இருந்துகொண்டுதான் இருக்கிறது.

மையத்தேசியம் சார்ந்த கனவு யாரிடம் இருக்கிரது என்று பார்த்தால் உலகமெங்கும் சில பொதுத்தன்மைகள் உள்ளன.

**1. மரபுகளை அப்படியே பேணவேண்டும் என எண்ணுகிற பாரம்பரியவாதிகள் இயல்பாகவே மையத்தேசியத்தை நோக்கிச் செல்கிறார்கள். அவர்களைப்பொறுத்தவரை மேலான வாழ்க்கை என்பது இறந்த காலத்திலேயே இருக்கிறது பழைய பெருமையை மீட்பது என்பது இவர்களில் எப்போதும் இருக்கும் கனவு அப்பெருமையை இழக்கக் காரணமான வரலாற்று எதிரிகள் அவர்கள் முன் எப்போதும் இருப்பார்கள்.**

**2தேசியத்தை அரசியல், பொருளியல் ஆதிக்கத்துக்கான கருவியாகக் காண்பவர்கள் மையத்தேசியமே அதற்குச் சிறந்தது என்று எண்ணுகிறார்கள். மையத்தேசியம் இயல்பாகவே ராணுவத்தன்மை கொண்டது. ஒரு இயந்திரம் போல விரைவானது கச்சிதமானது தாக்கும்தன்மை கொண்டது. பிறநாடுகளை வெல்லத்தேவையான சுயபெருமிதக் கருத்தியலை அதனால் எளிதில் உருவாக்கிக் கொள்ள முடியும்.**

**3. தன்னுடைய சொந்த அறிவுத்திறன் மற்றும் நிர்வாகத்திறனில் அபரிமிதமான மதிப்பு கொண்டுள்ள அறிவுஜீவிகள் மையத்தேசியத்தை விரும்புகிறார்கள். சமூகத்தில் தாங்கள் உத்தேசிக்கும் மாற்றங்களை மையத்தேசியம் அளிக்கும் முற்றதிகாரம் மூலம் மிக எளிதாக மக்களிடையே பரப்பி சமூகத்தை தலைகீழாகத்திருப்பிவிடலாமென இவர்கள் நம்புகிறார்கள்.**

**4.சமூக இயக்கம் குறித்த இயந்திரவாதப் புரிதல்கள் உள்ள கோட்பாட்டாளர்கள். இவர்கள் சமூகத்தை திட்டவட்டமாக பகுத்து பிரித்து ஆரய்ந்து உறுதியான புரிதல்களை அடைய முடியும் என நம்புகிறார்கள். ஆகவே இவர்களுக்கு பழுதில்லாத செயல்பாடுள்ள தேசிய அமைப்பு தேவைபப்டுகிறது அது மையத்தேசியமே**

ஐரோப்பாவில் உருவான இரண்டாவது வகையான தேசிய உருவகம் தாராளப்போக்குள்ள [லிபரல்] தேசியம். தாராளத்தேசியத்தின் வேர்களும் ஐரோப்பிய மறுமலர்ச்சியின்போதே உருவாகி வந்தவைதான். தாராளவாதம் என்பது ஐரோப்பிய சிந்தனையின் ஒரு முக்கியமான அடித்தளம்.

ஐரோப்பிய சிந்தனையில் ஆழமான பாதிப்பைச் செலுத்திய தனிமனித உரிமை என்ற கருதுகோளின் சிருஷ்டி இது. இன்றும் ஐரோப்பிய- அமெரிக்க சிந்தனையில் அடிப்படை இயக்க விசையாக இது உள்ளது.

தாராளவாதம் மேலைச்சிந்தனையில் அறிவொளிக்காலம் [Age of Enlightenment] முதல் ஆரம்பித்தது என்று சொல்வது மரபு. ஆனால் அதன் வேர்கள் கிரேக்க சிந்தனையில் உள்ளன. அரிஸ்டாடிலின் உலகியல்வாதம், ஞானத்தை ஒரு குறிப்பிட்டவகையான அறிதல்முறைக்குள் நிறுத்தாமல் எலலா அறிதல்களையும் தொகுத்து சிறந்ததை எடுக்கவேண்டும் என வாதிடும் தெரிவுவாதம் [ Eclecticism] பிரபஞ்சமும் இயறகையும் அளிக்கும் இயல்பான அறிவுடன் மனிதன் தன் சிந்தனையை பொருத்திக்கொள்ளவேண்டும் என வாதிடும் இயல்பறிவுவாதம் [ Stoicism] போன்றவற்றை இச்சிந்தனைகளின் அடிப்படைகளை அமைத்தவை என்கிறார்கள்.

பதினாறாம் நூற்றாண்டுவரை ஐரோப்பாவில் இருந்து வந்த இரண்டு மையக்கருத்தோட்டங்களுக்கு எதிராக அவை உருவாயின. ஒன்று பிறப்பிலேயே மன்னர்களுக்கும் பிரபுக்களுக்கும் மண்ணையும் மக்களையும் ஆளும் 'புனித உரிமை'கள் உள்ளன என்ற எண்ணம்.[ Divine Right]. இரண்டு, ஒரு மதநம்பிக்கையாளனின் ஆத்மா தேவாலயத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற கருத்து.

அவற்றை எதிர்த்து பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பிய நாடுகளில் உருவானதே அறிவொளிக்காலம் என்று சொல்லலாம். அறிவொளிக்காலம் தனிமனிதன் சுதந்திரமான ஆன்மீகத்தேடலுக்கும் , தன் ஆளுமையை முழுமைசெய்துகொள்ளுதலுக்கும் உரிமை கொண்டவன் என வாதிட்டது. ஒவ்வொரு தனிமனிதனும் கரணிய ஞானம் [Reason] கொண்டவன், அவனது செயல்களுக்கு அதன் மூலம் அவனே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும், சமூகம் என்பது அத்தகைய சுதந்திரமான தனிமனிதர்களால் ஆனதாக இருக்கவேண்டும், அரசு அவர்களின் கரணியஞானத்தின் மலர்தலுக்கு இடமளிப்பதாக இருக்கவேண்டும் என்றது.

கரணிய ஞானத்தை மானுட சாரமாக முன்வைத்தவர் இமானுவேல் காண்ட். அறிவொளிக்காலத்தின் ஒரு கட்டமாக கரணியஞானக் காலகட்டம் [Age of Reason] உருவாகி வந்தது. அதிலிருந்து பின்னர் பகுத்தறிவுக்காலகட்டம் [Age of Rationality] உருவாகியது. நவீன அறிவியல் சிந்தனைகளுக்கான தத்துவ அடிப்படையை இதுவே உருவாக்கி அளித்தது. மார்க்ஸியம் உட்பட உள்ள சமூகவியல், அரசியல் கோட்பாடுகளுக்கு விதைநிலமாக அமைந்தது.

பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவரான பிரிட்டிஷ் தத்துவசிந்தனையாளர் ஜான் லோக் [John Locke]

தாராளவாதத்தின் தந்தை என்று சொல்லப்படுகிறார். சமூகநலனால் மட்டுமே தனிமனித உரிமை எல்லை வகுக்கப்படவேண்டும் என்பதே அவரது சிந்தனையின் சாரம் எனலாம். சமூகம் என்பது சுதந்திரமான தனிமனிதர்கள் தங்கள் பொதுநன்மைக்காக உருவாக்கிக்கொள்ளும் ஓர் அமைப்பே.

தனிமனிதனின் மனத்தைப்பற்றிய லோக்கின் கருத்துக்கள் விரிவான சிந்தனைகளுக்கு தளம் அமைத்தன. எந்த தனிமனிதனும் சமூகத்தின் சிருஷ்டியே என்று லோக் சொன்னார். இன்றுவரை மேலைச்சிந்தனையின் ஒரு முக்கியமான கருத்தோட்டமாக இது உள்ளது. ஒவ்வொரு மனிதனும் 'வெற்றுத்தாளாக' [tabula rasa] பிறக்கிறான் என்றும் சூழலே அவனது எல்லா சிந்தனைகளையும் ஆளுமையின் தனித்தன்மையையும் உருவாக்குகிறது என்று அவர் சொன்னார். இது ஆதிபாவம் முதலிய கிறித்தவ சிந்தனைகளுக்கு மாற்றாக அமைந்தது.

தனிமனிதனின் ஆளுமையை முழுமையாக விரிவடையச்செய்வதாக அமையும் ஒரு சமூக அமைப்புக்காக லோக் வாதாடினார். ஆகவே சுதந்திரம் என்பதே சமூகத்தின் இலட்சியமாக இருக்கவேண்டும். ஒவ்வொரு தனிமனிதனுக்கு சமூகத்துடன் ஒரு கடமைப்பாடு உள்ளது. ஒரு சமூகமாக மனிதர்கள் கூடி வாழ்வதென்பது அச்சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களும் பொதுவாகவே கொள்ளும் ஒரு புரிந்துணர்வின் அடிப்படையிலேயே ஆகும். அதில் அச்சமூகத்தின் கூட்டுநலன்களுக்கு எதிராக இல்லாமலிருப்பத்தான் அதன் சாரம்.

அந்த கடமைப்பாட்டை மீறாதவரை அவனுடைய தனிமனித உரிமைகளை சமூகம் தடுக்கக் கூடாது. ஒவ்வொரு தனிமனிதனின் அனுமதியுடன்தான் சமூக அதிகாரமும் அரசாங்கமும் உருவாக்கப்படவேண்டும் என்று லோக் வாதிட்டார். இதை அவர் ஆளப்படுபவனின் அனுமதி [consent of the governed.] என்றார். நவீன ஜனநாயகத்தின் அடிப்படை விதி என்பது இதுவே. தனிமனிதர்கள் அளிக்கும் ஓட்டு மொத்த அனுமதியினாலேயே சமூக விதிகள் நிலைநிற்கின்றன, அவற்றுக்கு எந்த புனிதமும் இல்லை என்ற இச்சிந்தனை மேலைநாட்டு அரசியலில் மிகப்பெரிய பாதிப்புகளைச் செலுத்திய ஒன்றாகும்.

தனிமனித அடிப்படை உரிமைகள் இயற்கையே மனிதனுக்கு அளித்தவை என்று இச்சிந்தனைகள் வாதிட்டன. ஆகவே சுயமாகச் சிந்திக்கவும் தன் விருப்பபடி வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவும் அவனுக்கு உரிமை இருக்கிறது. அது பிறர் உரிமையை தடுக்காதவரை அதன் மீதான கட்டுப்பாட்டை விதிப்பது இயற்கைக்கு மாறான செயல் என்றனர் இவர்கள். இன்றுவரை இந்திய அரசியல் சட்டம் உட்பட அனைத்திலும் ஆழமான பாதிப்பைச் செலுத்தியிருக்கும் கருத்துநிலை இது. அடிப்படை உரிமைகள் என்று நம் அரசியல்சட்டம் இதையே சொல்கிறது

ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்காலம் இதுசம்பந்தமாக மிக விரிவான விவாதங்கள் நடந்துள்ளன. சிந்தனைச்சுதந்திரம், கருத்து தெரிவிக்கும் சுதந்திரம், ஆன்மீக சுதந்திரம், இன்பநாட்டத்துக்கான சுதந்திரம் ஆகியவற்றை சமூகம் தன் உறுப்பினர்களுக்கு உறுதிப்படுத்த வேண்டும் எனப்பட்டது. பிரெஞ்சுப்புரட்சியின் அடிப்படையாகக் கூறப்பட்ட சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் ஆகியவையும் சரி அமெரிக்க புரட்சியின் அடிப்படை வார்த்தைகளான பலரிலிருந்து ஒன்று [ E pluribus unum] ஆகியவை நவீன தாராளவாதச் சிந்தனைகளின் கவித்துவ வெளிப்பாடுகளே.

லோக்கின் சிந்தனைகளையே வால்ட்டேர் ரூஸோ போன்றவர்கள் பிரான்சில் வளர்த்தெடுத்தார்கள். அதுவே பிரெஞ்சுப்புரட்சிக்கும் அமெரிக்கப் புரட்சிக்கும் வழிவகுத்தது. அச்சிந்தனைகளை உலகமெங்கும் கொண்டு செல்வதற்கு பிரெஞ்சு,அமெரிக்கப் புரட்சிகளைப் பற்றிய கிளர்ச்சியூட்டும் எழுத்துக்கள் காரணமாயின.

இந்தியாவில் ஆங்கிலக் கல்வி பரவலானபோது கூடவே ஆங்கில இலக்கியம் வழியாக தாராளவாதச் சிந்தனைகளும் அறிமுகமாயின. குறிப்பாக அக்கால மாணவர்களில் ஷெல்லி உருவாக்கிய பாதிப்பு மிக ஆழமான ஒன்று. இந்தியப் பல்கலைகழகங்களில் தத்துவதில் மிக அதிகமாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர் லோக் தான் என்று சொல்லப்படுகிறது. பிரிட்டிஷ் தாராளவாதம் எந்த அளவுக்கு இந்திய சிந்தனைகளை தொடர்ந்து பாதித்தது என்பதற்கான உதாரணமாக இதைச் சொல்லால்லாம்.

லோக் ஐரோப்பாவில் நிரூபணவாதத்துக்கான அடிப்படைக்கோட்பாடுகளை அமைத்தவர். தாராளவாத நோக்கு என்பது பத்தொன்பதாம் நுற்றாண்டின் அறிவியல் நோக்காக இருந்த நிரூபணவாதத்தில் இருந்து பிரிக்க முடியாத ஒன்றாகும்.தாராளவாதம், தனிமனித உரிமை, கரணிய நோக்கு ஆகியவை ஒரே கருத்தின் மூன்று பட்டைகள் என்றும் சொல்லல்லாம்.

தாராள அரசை ஆதரிப்பவர்கள் எத்தகைய இயல்புடையவர்கள் என்பதை பொதுவாக கீழ்க்கண்டவாறு வகுக்கலாம்

**1. நிரூபண வாத அறிவியல் நோக்கில் ஆழமான நம்பிக்கை கொண்டவர்கள். எந்த ஒரு விஷயத்தையும் தெளிவாக புறவயமாக நிரூபித்தாலொழிய ஏற்க மறுப்பவர்கள். ஆகவே இவர்கள் மரபு சார்ந்த எந்த விஷயத்தையும் ஏற்பதில்லைமரபான அதிகாரத்தை உருவாக்கும் நம்பிக்கைகள் ஆசாரங்கள் படிமங்கள் எதிலும் இவர்கள் ஒன்றுவதில்லை நிரூபணவாதம் என்பது ஓர் உண்மையை பகுப்பாய்வுசெய்வதற்கான தனிமனிதனின் உரிமையைச் சார்ந்தே செயல்படுவது தனிமனித அறிவுக்கு உண்மையை பகுப்பாய்வு செய்து அறியும் ஆற்றல் உண்டு என்ற நம்பிக்கையின் அடிப்படையில் எழுவது. ஆகவே அதை தனிமனித சுதந்திரம் என்பதில் இருந்து பிரிக்க முடியாது**

**2. பன்மைத்தன்மையிலும் உரையாடலில் நம்பிக்கை கொண்ட இலட்சியவாதிகளான சிந்தனையாளர்கள். ஞானம் என்பது ஒற்றைப்படையானதல்ல என்றும் வாழ்க்கையின் எல்லா தளங்களிலும் எல்லாவகையான மக்களிடமும் ஏதோ ஓரு வகையில் ஞானம் உள்ளது என்றும் எல்லாவகையான அறிதல்களும் ஏதேனும் வகையில் முக்கியமானவையே என்றும் இவர்கள் நம்புகிறார்கள். அத்தகைய பலவகையான ஞானங்கள் ஒன்றுடன் ஒன்று உரையாடுவதன் மூலமே மானுட ஞானம் என்பது உருவாகிறது என்று நம்புகிறார்கள். அதற்கான சிறப்பான சூழல் உருவாவதற்கு தாராள அரசே உதவிகரமானது என்று இவர்கள் நினைக்கிறார்கள்.**

***3 மானுட அறிதலின் எல்லைகளைப் பற்றிய பிரக்ஞை உள்ள அறிவுஜீவிகளும் தாராள அரசையே ஏற்கிறார்கள். நாம் அறிந்தவற்றை மட்டும் வைத்து எல்லாவற்றையும் மதிப்பிட்டுவிடமுடியாது என்றும் வரலாற்றின் இயல்பான பரிணாமப்போக்குக்கு தடையாக நம் குறுகிய ஞானம் ஆகிவிடலாகாது என்றும் எண்ணுகிறார்கள். ஆகவே எல்லாவகையான சாத்தியங்களுக்கும் இடமிருக்கக் கூடிய, எது வரலாற்றின் தேவையோ அது நிகழ்வதற்கான வாய்ப்பளிக்கக்கூடிய ஓர் அரசே தேவை என இவர்கள் எண்ணுகிறார்கள்.***

***4. மனிதனின் கடைசிக்குறிக்கோள் இவ்வுலக இன்பமே என்று எண்ணுகிறவர்களுக்கும் தாராளவாத அரசே உவப்புடையதாக இருக்கிறது மனிதனை ஏதேனும் ஒரு இலட்சியத்திற்காக உருவாக்கப்பட்டவன் என்றோ ஏதேனும் ஒரு கருத்துக்காக அவன் வாழவும் சாகவும் விதிக்கப்பட்டவன் என்றும் இவர்கள் நம்புவதில்லை இன்பநாட்டம் என்பது மனிதனின் ஆதார இயல்பு அதற்கான சமூக அனுமதியை அவனுக்கு முழுமையாக அளிப்பது தாராள அரசே என்று இவர்கள் நினைக்கிறார்கள்.***

*தாராளவாத அரசு என்பது இன்று உலகமெங்கும் பரவலாக உள்ள அரசு வடிவம் எனலாம். நலம்நாடி அரசும் தாராளவாத அரசும் ஒன்றே எண்ணம் உலகமெங்கும் நிலவுகிறது. ஜனநாயகம் தாராளவாதம் இரண்டும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள் என்ற எண்ணமும் எங்கும் உள்ளது. ஆகவே நடைமுறையில் எப்படி இருந்தாலும் பெரும்பாலான அரசுகள் தங்களை தாராளவாத அரசுகளாகச் சொல்லிக்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளன.*

*அதுவே மானுடம் கண்ட அரசு வடிவங்களில் ஆகச்சிறந்தது என்ற எண்ணம் இன்று உலகம் முழுக்கவே வலுவாக உள்ளது. அந்த அரசை மேலும் தாராளமானதாக ஆக்க என்ன செய்யலாம் என்ற அளவிலேயே அரசியல் சிந்தனைகள் இன்று முன்னெடுக்கப்படுகின்றன. பிறிதொருவகையிலான அரசுக்கான தேட்டம் எங்குமே இல்லை என்றே சொல்லவேண்டும்.*

*[மேலும்]*

---

**காந்திய தேசியம் 3**

*ஐரோப்பிய சிந்தனையில் எப்படி அரசு என்ற கருத்துருவம் படிப்படியாக வளர்ந்து உருவாகி வந்ததோ அதைப்போலவே, அதற்கிணையாகவே அரசின்மை [Anarchism ] என்ற கருத்துருவமும் வளர்ந்துருவாகி வந்திருப்பதைக் காணலாம். மேலான அரசாங்கங்கள் குறித்த கனவுகளைப் போலவே அரசில்லா சமூகங்களைப்பற்றிய கனவுகளும் தொடர்ந்து பரிணாமம் கொண்டிருக்கின்றன*

*இதில் கவனிக்க வேண்டியதென்னவென்றால் அரசு என்ற கருத்துருவம் வளர்ந்து வருவதற்கு அரசின்மை என்ற கருத்துருவம் பெரும் பங்களிப்பை ஆற்றியிருக்கிறது என்பதே. அரசு என்ற கருத்தின் எல்லைகள், சாத்தியங்கள், எதிர்மறைக்கூறுகள் ஆகியவற்றை அரசின்மை என்ற கருதுகோள்தான் தொடர்ச்சியாக மறுபரிசீலனைசெய்யவைத்தது. இன்று ஐரோப்பாவில் உள்ள தாராளவாத அரசுகள் குறித்த முற்போக்கான உருவகங்கள் எல்லாமே அங்கிருந்த அரசின்மையாளர்களிடம் விவாதித்து உருவாக்கபட்டவையே .இன்று ஐரோப்பிய அரசு மறுப்புப் போராட்டங்கள் அனைத்திலும் ஆழத்தில் அரசின்மைக் கோட்பாடு உள்ளது என்பதைக் காணலாம்.*

*அரசு என்ற கருத்து எப்போது உருவானதோ அப்போதே அரசின்மை கோட்பாடுகளும் உருவாகிவிட்டன. இந்தியா அரசின்மைக்கோட்பாடுகளை அரசுக்கோட்பாடுகளை விட அதிகமாக வளர்த்த தேசம். பண்டைய கிரேக்க சிந்தனைகளில் அரசின்மை என்பது ஒரு முக்கியமான கருத்தாக வளர்ந்து வந்திருப்பதைக் காணலாம். ஒறுப்புவாதிகள் [Cynics ] கிரேக்க மரபின் அரசின்மை நோக்கை முன்னெடுத்தவர்கள். இயற்கையுடன் ஒன்றி வாழும் எளிய வாழ்க்கையையே அவர்கள் மானுடத்துக்குரியதாக சொன்னார்கள். பணம் அதிகாரம் புகழ் ஆகிய மூன்றையும் முற்றிலுமாகத்துறப்பதே அதற்கான வழி என்றார்கள்.*

*மெய்யறிவுவாதம் [Gnosticism] என்று சொல்லப்பட்ட கிரேக்க சிந்தனை மரபு மனிதர்கள் தன்னளவில் அதிதூய ஆத்மாக்கள் என்றும், லௌகீக உலகின் இழிவுகளிலும் கீழ்மைகளிலும் அவர்கள் சிக்கிக்கொண்டிருக்கிறார்கள் என்றும், உலகியலில் இருந்து விடுவித்துக்கொண்டு தங்கள் ஆன்மாவை தூய்மைப்படுத்திக்கொள்வதே மீட்பு என்றும் வாதிட்டது.மெய்யறிவுவாத*

சிந்தனைகளில் ஏராளமான பிரிவுகள் உள்ளன. இவர்களும் சமூக அமைப்பையும் அரசையும் எதிர்த்த அரசின்மைவாதிகளே.

ஐரோப்பாவில் நவீன அரசுகளைப்பற்றிய விவாதங்கள் வலுவாக உருவான பதினேழு ,பதினெட்டாம் நூற்றாண்டுகளில் அரசின்மைக் கோட்பாடுகளும் பலவகையான விரிவாக்கங்களைப் பெற்று நவீன அரசியல்தரப்புகளாக உருவாகி வந்தன. அரசின்மையாளர்களில் இன்று பல்வேறுவகையான தத்துவநிலைபாடுகள் கொண்டவர்கள் இருக்கிறார்கள். முழுமுற்றான அரசின்மைக்காக வாதிடுபவர்கள், அறிவுலகம் அரசின்மையில் செயல்படவேண்டும் என வாதிடுபவர்கள், அரசுக்கு அப்பாற்பட்ட குழுக்களுக்காக வாதிடுபவர்கள், வரம்பில்லாத வாழ்க்கைக்காக வாதிடுபவர்கள் என அவர்கள் பல ரகம்.

பதினெட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் பொதுவாக அரசு இல்லாத அமைப்புகளைப் பற்றிய ஆர்வம் ஐரோப்பாவில் தீவிரமாக இருந்திருக்கிறது. முற்றதிகாரம் கொண்ட மன்னர்களின் ஆட்சி மற்றும் கிறித்தவசபைகளின் ஆட்சி ஆகியவற்றுக்கு மாற்றாக இதைப்பற்றி சிந்தனைசெய்திருக்கிறார்கள். அரசு இல்லாமல் தங்களைத் தாங்களே ஆட்சி செய்துகொள்ளும் பல வகையான கிறித்தவ குழுக்கள் இக்காலகட்டத்தில் ஐரோப்பாவில் உதயமாயின. இவற்றை பொதுவாக மெய்யறிவுவாத கிறித்தவர்கள் என்கிறார்கள். தூய்மைவாதக் கிறித்தவர்கள் என்பதும் உண்டு.

அவர்கள் அரசதிகாரத்தை எதிர்த்தமையால் அரசாலும் கிறித்தவ பெரும்சபைகளாலும் வேட்டையாடப்பட்டார்கள். அவர்களில் கணிசமானவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் அமெரிக்கா ஆஸ்திரேலியா கனடா போன்ற புத்துலகங்களில் குடியேறினார்கள். அமெரிக்காவில் பாஸ்டன் அவ்வாறு தூய்மைவாத கிறித்தவர்கள் குடியேறிய முக்கியமான ஊர். பின்னாளில் தோரோ, எமர்சன் போன்ற அரசின்மையாளர்கள் அந்த மரபில் இருந்தே உருவானார்கள். நவீன அரசின்மைக் கோட்பாடுகளின் விளைநிலமாக பாஸ்டன் மாறியது. இன்றும் அமெரிக்காவின் அரசின்மைசிந்தனைகளின் மையமாக பாஸ்டன் இருக்கிறது.

அரசாங்கம் ஏதோ ஒருவகையில் பொருளிழந்து உதிர்ந்துவிடும் என்ற எண்ணம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சிந்தனையாளர்கள் நடுவே பிரபலமாக இருந்தது. கதே, லோக், ஹோப்ஸ், லோக், வால்டேர், ரூஸோ, ஹெகல், நீட்சே, ரஸ்கின், ஜெ.எஸ்.மில் போன்ற சிந்தனையாளர்கள் அனைவருமே எப்படி அரசின்மை சாத்தியமாக்கூடும் என்று தங்கள் நோக்கில் சிந்தனை செய்திருக்கிறார்கள். அந்த சிந்தனைப்போக்கை ஒட்டித்தான் கார்ல் மார்க்ஸ் கம்யூனிச சமூக அமைப்பின் உச்சத்தில் அரசு உதிர்ந்து போகும் என்று சொன்னார். நவீனத்தொழில்நுட்பம் உலகை ஒருங்கிணைத்து ஒரே சமூகமாக ஆக்கிவிடும் என்றும் அதன் விளைவாக அரசில்லாத புவிச்சமூகம் உருவாகும் என்றும் எண்ணினார்கள். தொழில்நுட்பத்தை நம்பிய அனைவரிடமும் அந்த நம்பிக்கை ஒருவகையில் இருந்தது.

உலகப்போர்கள் நடந்து அரசுகள் நவீன தொழில்நுட்பங்கள் மூலம் மேலும் வலுவான ராணுவக்கட்டுமானங்களாக ஆவதைக் கண்டபின்னர் இந்த எண்ணப்போக்கு நேர் தலைகீழாகத் திரும்பியது. அசாதாரணமான வல்லமை கொண்ட எதிர்கால அரசுகளைப் பற்றிய அச்சங்கள் உருவாயின. ஜார்ஜ் ஆர்வலின் '1984' இந்த எண்ணப்போக்கை மிகச்சிறப்பாக முன்வைத்த நாவல். ஆல்டஸ் ஹக்ஸ்லியின் 'துணிச்சலான புத்துலகம்' [Brave New world] இன்னொரு குறிப்பிடத்தக்க நாவல். இன்றுவரை அறிவியல் புனைகதைகளின் பிரபலமான கருவாக இருப்பது அதிநவீன தொழில்நுட்பம் மூலம் உருவாகச்சாத்தியமான முழுமுற்றதிகாரம் கொண்ட எதிர்கால அரசுகளைப்பற்றிய ஊகங்களே.

இந்த ஐயங்கள் அரசு மேல் உள்ள அவநம்பிக்கையை மேலும் பெருக்கின. முதல் உலகப்போருக்குப்பின்னர்தான் ஐரோப்பாவில் அரசின்மைவாதம் மேலும் வீச்சை பெற்றது. இன்று உலகமெங்கும் பலவகையான அரசின்மைவாதக்குழுக்கள் செயல்பட்டுவருகின்றன

இரண்டுவகை அரசின்மைகள்

பொதுவாக ஐரோப்பிய அரசின்மைவாதிகள் அனைவரையும் பொதுவாக இரு பெரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம். ஒன்று புரட்சிகர அரசின்மையாளர்கள். இரண்டு, தன்நெறி அரசின்மையாளர்கள். புரட்சிகரமான அரசின்மைவாதிகள் பொதுவாக தகர்ப்பாளர்கள். இருந்துகொண்டிருக்கும் அரசாங்க அமைப்பையும் அதற்கு அடித்தளமாக இருக்கும் மனநிலைகளையும் ஆசாரங்களையும் தகர்ப்பதே அவர்களின் இயல்பாக இருக்கிறது.

இத்தகைய சிந்தனைகளுக்கு மிகச்சிறந்த உதாரணமாக அமைபவர் இவான் துர்கனேவ் எழுதிய 'தந்தையும் தனயர்களும்' என்ற நாவலின் மையக்கதாபாத்திரமான பஸரோவ். 'நீங்கள் அனைத்தையும் தகர்ப்பது பற்றி பேசுகிறீர்கள். நீங்கள் தகர்த்தால் என்ன மிஞ்சும்? வேறெந்த அமைப்பை நீங்கள் பதிலுக்கு முன்வைக்கிறீர்கள்?' என்று பசரோவின் நண்பன் அர்க்காதியின் அப்பா கேட்கையில் பஸரோவ் முச்சுத்திணறி ஆவேசத்துடன் சொல்கிறார். ''நாங்கள் அதைப்பற்றி யோசிக்கவில்லை. இப்போது இதை தகர்த்து எறிவோம். இது பயனற்ற வெற்றுக்குப்பை. இது அழியட்டும். இடிபாடுகளில் இருந்து மானுடம் புதிதாக எதையேனும் கட்டிக்கொள்ளட்டும். அது தேவைக்குரிய உருவாக்கப்பட்டதாகவே இருக்கும்''

தன் கொள்கையைப்பற்றி பஸரோவ் சொல்கிறான், ''நான் எதிர்க்கிறேன். அனைத்தையும். அதற்கு காரணம் வேண்டுமென்பதில்லை. அவை இருக்கின்றன என்பதற்காகவே எதிர்க்கிறேன்'' இந்த நிலைபாடு மறுப்புவாதம் [Nihilism] என்று துர்கனேவால் சொல்லப்பட்டது. பின்னர் ஒரு தத்துவக்கலைச்சொல்லாகவே ஆகிவிட்டது. மறுப்புவாதிகள்தான் ஐரோப்பாவின் ஆரம்பகட்டப் புரட்சியாளர்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மதம்,அரசியல்,தத்துவம் மூன்று துறைகளிலும் புரட்சியாளர்கள் ஊடுருவினர். ஏற்கப்பட்ட அனைத்தையும் தகர்க்க முற்பட்டனர். ஒவ்வொன்றையும் தங்கள் பிடிக்குள் கொண்டுவந்துவிடலாம் என்றும் ஒவ்வொன்றையும் புதிதாக உருவாக்கிவிடலாம் என்றும் அவர்கள் கனவு கண்டார்கள். இவர்களை அன்றைய அமைப்பு மிகக்கொடுமையான அடக்குமுறைகள் மூலம் எதிர்கொண்டது. ஆனால் அவற்றையும் மீறி பல தேசங்களில் இவர்கள் அரசையும் அமைப்பையும் கைப்பற்றினார்கள்.

புரட்சிகரமான அரசின்மைவாதிகளுக்கும் தாராளஅரசுவாதிகளுக்கும் இடையே பெரும்பாலும் நல்ல புரிதல் இருந்தது. இந்த புரிதலை நாம் உலகம் முழுக்க காணலாம். தாராள அரசு வாதிகள் புரட்சிகர அரசின்மைவாதிகளை தங்களைப்போலவே மாற்றத்தை விரும்புகிறவர்களாகக் கருதினார்கள். மிகச்சிறந்த உதாரணம் என்றால் பிரெஞ்சுப்புரட்சிதான். அது தாராளவாதிகளும் புரட்சியாளர்களும் இணைந்து நடத்திய ஒன்று. தாராளவாதிகள் கையில் இருந்து புரட்சிகர அரசின்மைவாதிகள் கைக்கு அது சென்று சேர்ந்தது.

மார்க்சியம் புரட்சிகர அரசின்மைவாதத்தின் இருபதாம் நூற்றாண்டின் ஆகச்சிறந்த உதாரணம். செவ்வியல் மார்க்ஸியம் அரசின்மைக் கோட்பாட்டில் அழுத்தமாக ஊன்றிய ஒன்று. அதுவே ருஷ்யாவிலும் சீனாவிலும் உலகத்தின் மிகவும் பலம் பொருந்திய அரசுகளை அமைத்தது என்பது ஆச்சரியமானதே. மார்க்ஸின் கொள்கையின்படி தொழிலாளர்களின் முற்றதிகாரம் உருவாகும். அது ஏற்கனவே இருக்கும் அரசு மற்றும் அரசு சார்பான அமைப்புகளை தகர்த்து எறியும். அந்த வெற்றிடத்தில் மக்கள் உழைப்பாளர் குழுமங்களாக [ commune] அமைந்து தங்களைத் தாங்களே ஆண்டுகொண்டு வாழ்வார்கள். அரசு உதிர்ந்து மறையும்.

இரண்டாவது வகை அரசின்மைவாதம் தன்விலக்கம் சார்ந்தது.மைய ஓட்டமாக உள்ள பண்பாட்டையும் அதன் அரசு அமைப்பையும் நிராகரித்து விலகி தங்களுக்கு உகந்த மாற்றுச் சமூக அமைப்புகளை அமைத்துக்கொள்பவர்களை தன்விலக்க அரசின்மையாளர்கள் என்று சொல்லலாம். இந்த வகையான அரசின்மையாளர்களின் மரபுத்தொடர்ச்சி கிரேக்க ஒறுப்பியலில் உள்ளது.

மிகச்சிறந்த உதாரணம் கிரேக்க தத்துவ ஞானியான டயோனிசியஸின் கதை.[ Dionysius ] ஒரு மாட்டுவண்டி அருகே வெறுந்தெருவில் படுத்திருந்த அவரிடம் கிரேக்க மாமன்னன் அலக்ஸாண்டர் நீங்கள் ஏன் வேலைசெய்யக்கூடாது என்று கேட்டதாகவும் அவர் ஏன் வேலை செய்யவேண்டும் என்று கேட்டபோது பணம், அதிகாரம், புகழ் ஆகியவற்றுக்காக என்றான் அவன். அவை எதற்காக என்ற கேள்விக்கு மனமகிழ்ச்சிக்காக என்றான். இப்போதே எனக்கு பூரணமான மனமகிழ்ச்சி உள்ளதே என்றார் அவர். உங்களுக்கு நான் என்ன செய்யவேண்டும் என மாமன்னன் கேட்டபோது அந்த வண்டி இளவெயிலை மறைக்கிறது, சற்றே விலக்கி வைத்துவிட்டுப்போ என்றாராம் டயோனியஸ்.

கிறித்தவ மரபுக்குள் மெய்யறிவுவாத கிறித்தவம் ஒரு தனி போக்காக நெடுங்காலம் நீடித்தது . இவர்களும் தன்விலக்க அரசின்மைவாதிகளே .இக்குழுக்கள் மைய கிறித்தவ ஓட்டத்திற்கு எதிராக தங்கள் கிறித்தவ சிற்றமைப்புகளை உருவாக்கிக் கொண்டார்கள். இவர்கள் பெரிய தேவாலயங்கள், கூட்டுவழிபாடுகள் முதலியவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. சிறிய முழுக்களாக தனிச் சமூகங்களாக வாழ்ந்தனர். கடுமையான நெறிகளை கடைப்பிடித்தனர். உபவாசம், தூக்கம் தவிர்த்தல் , தவம் போன்றவற்றை தங்கள் வழியாக முன்வைத்தார்கள்.அவர்களுக்கு எதிராக கத்தோலிக்க திருச்சபை கடுமையான ஒடுக்குமுறைகளை பயன்படுத்தியது.ஆனால் பின்னர் அம்மரபுகள் கத்தோலிக்க பெருமரபுக்குள் இழுக்கப்பட்டன. ஹெர்மிட்டேஜ், அபே என்றெல்லாம் சொல்லப்பட்ட தவமடங்கள் இந்த மரபுகளின் உருவாக்கமே. புலன் ஒடுக்கம் என்பது கத்தோலிக்க மதத்திலும் ஒரு பெரும் ஆசாரமாக ஆகியது. புனித ஃப்ரான்ஸிஸ் அதற்கு வழியமைத்தார்

.நவீன ஐரோப்பா உருவாகி வந்தபோது இவ்விரு அரசின்மைகளும் இருவகையில் வளர்ந்து பல்வேறு சாத்தியக்கூறுகளை கண்டடைந்தன. ஜனநாயக சிந்தனையின் விதைகளை பரப்பியவர்கள் என்று சொல்லபப்படுகிற லோக் போன்றவர்களே பொருள்முதல்வாதத்தின் முன்னோடிகளாகவும் இருந்தார்கள். மறுப்புவாதமும் பொருள்முதல் வாதமும் கைகோர்த்துக்கொண்டன. ஏனென்றால் அக்காலகட்டத்தில் எல்லாவகையான அமைப்புகளும் கருத்துமுதல்வாதம் சார்ந்தவையாக இருந்தன. ஒரு மையக்கருத்தின் வெளிவிளக்கமாகவே அமைப்புகள் கருதப்பட்டன. அந்த மையக்கருத்து இன்றியமையாததாகவும் புனிதமானதாகவும் கருதப்பட்டது. ஆகவே பொருள்முதல்வாதம், நிரூபண வாதம் பேசியவர்களில் ஒருசாரார் கடுமையான மறுப்புவாதிகளாக ஆனார்கள். அவர்களை பத்தொன்பதாம் நூற்றாண்டின் தத்துவக் கலகக் காரர்கள் எனலாம். ஃபாயர்பாக் அவர்களில் ஒருவர்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் நடந்த தத்துவ மோதல்களை இந்த எளிமையான வகைப்பாட்டில் இருந்து மேலும் மேலும் சிக்கலாக ஆக்கியபடியே செல்லலாம். உதாரணமாக மார்க்ஸியத்தின் தத்துவப் பரிணாமத்தை இப்படிச் சொல்லலாம். ஃபாயர்பாக் முன்வைத்த தூய பொருள்முதல்வாத அரசின்மைக் கோட்பாட்டில் இருந்து மார்க்ஸ் ஆரம்பிக்கிறார். ஹெகெல் வரலாற்றின் இயக்கத்திற்கு ஒரு நோக்கமும் திசைவேகமும் உண்டு என்ற கருத்துமுதல்வாத தரப்பை முன்வைத்தார். வரலாற்று பொருள்முதல்வாதம் என்ற ஹெகலின் கோட்பாட்டின் வளர்ச்சிநிலையாகவே மார்க்ஸ் முரணியக்க வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என் தத்துவத்தை உருவாக்கினார். பொருளியல் ஆற்றல்களின் முரணியக்கத்தாலேயே வரலாற்றின் முன்னகர்வு சாத்தியமாகிறது என விளக்கினார். அதாவது பொருள்முதல்வாதச் சிந்தனைகளும் கருத்துமுதல்வாதச் சிந்தனைகளும் ஒன்றை ஒன்று உள்வாங்கி வளர்வதை நாம் இக்காலகட்டத்தில் காண்கிறோம்.




இவ்வாறு மறுப்புவாதமாக ஆரம்பித்த மார்க்ஸின் கோட்பாடு புரட்சிகர அரசின்மைவாதமாக விரிவு பெற்று தாராளவாதிகளுடன் கைகோர்த்துக்கொண்டு பல இடங்களில் ஜனநாயகக் கோரிக்கையாக செயல்பட்டது. பல இடங்களில் மையத்தேசியத்துக்கான கோரிக்கையாக விளக்கவும்பட்டது. ஆனால் லெனின் மூலம் அது மையஅதிகார அரசாங்கமாக ஆகியது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐரோப்பாவில் இருவகை அரசின்மை உருவகங்களும் ஒன்றுடன் ஒன்றுபலவகையிலும் கலந்து ஏராளமான கருத்துநிலைகளை உருவாக்கியிருந்தன. பலவகையான புரட்சிகர அரசின்மைக் குழுக்கள் செயல்பட்டுக்கொண்டிருந்தன. அவற்றில் தொழிலாளர்களின் குழுமியங்களும் [communes] அடக்கம். அத்தகைய குழுமியங்கள் எதிர்கால அரசில்லாத சமூகத்தின் மாதிரிகளாக எண்ணப்பட்டன. புருதோன்வாதிகள், ஃபேபியன் குமுகத்தினர் போன்றவர்கள் அத்தகைய சில சமூகக்குழுக்களை விரிவாக உருவாக்குவதைப் பற்றிய கனவுகளை முன்வைத்தார்கள். அவர்களுடன் விவாதித்த மார்க்ஸ் 'குழுமியவாதம்' என்று பெயர் சூட்டப் பெற்ற கம்யூனிச கோட்பாடுகளை அவற்றைச் சார்ந்தே உருவாக்கினார்.

ப்ரெஞ்சு தத்துவ சிந்தனையாளரான புருதோன் [Pierre-Joseph Proudhon]தன்னை ஒரு அரசின்மைவாதியாக அறிவித்துக்கொண்டவர். மார்க்ஸியக் கோட்பாடுகள் மேல் ஆரம்பத்தில் ஆழமான செல்வாக்கைச் செலுத்தியவர்'உடைமை என்பது திருட்டே' என்ற அவரது வரி பிரபலமானது. 'புருதோனுக்கு மறுப்பு' என்றபேரில் சோவியத் வெளியீடாக வந்துள்ல நூலில் கார்ல் மார்க்ஸ் உடைமையில்லாத சமூக குழுக்களை அமைக்கும் புருதோனின் சிந்தனைகளை மறுத்து, மேலும் விரிவான வரலாற்றுப் பார்வையில், தனியுடைமைகளே இல்லா ஒட்டுமொத்தச் சமூக அமைப்பை முன்வைக்கிறார்.

இந்தக்காலகட்டத்தின் கலைஞர்கள் சிந்தனையாளர்களில் பெரும்பாலானவர்களை அரசின்மைவாதம் கவர்ந்திருக்கிறது. அரசின்மையும், சுதந்திரமும், படைப்பூக்கமும் பிரிக்க முடியாதவையாகவே கருதபப்பட்டன. ஃபேபியன் குமுகம் ஒரு முக்கியமான கருத்தாக பேசபப்பட்ட நாட்களில் ஜார்ஜ் பெர்னாட் ஷா, வெர்ஜீனியா வுல்ஃப், போன்ற பல பிரிட்டிஷ் எழுத்தாளர்கள் அந்தக்கருத்தால் ஈர்க்கப்பட்டிருக்கிறார்கள். நெடுங்காலம் அரசின்மைக்குழுமங்களை கற்பனைசெய்த எழுத்துக்கள் அமெரிக்காவிலும் வந்துகொன்டிருந்தன.

உதாரணமாக ஜான் ஸ்டீன்பெர்க்கின் கோபத்திராட்சைகள் [The Grapes of Wrath, John Steinbeck] என்ற புகழ்பெற்ற அமெரிக்க நாவல். இது காலத்தால் பிந்தியது. என்றாலும் அது ஐரோப்பியக் கனவுகளை பின்பற்றுகிறது. இதில் கேசி [Jim Casy] என்ற ஒரு முன்னாள் பாதிரியாரின் தலைமையில் தொழிலாளர்கள் ஒரு குழுமியத்தை உருவாக்கி ஒரு 'இலட்சிய அரசின்மைச் சமூகத்தை' உருவாக்குவதன் சித்திரம் உள்ளது. கேஸிக்கு ஸ்டீன்பர்க் ஏசுகிறிஸ்துவின் சாயலை அளித்துள்ளமையும் கவனத்திற்குரியது.

அரசு இல்லாத சமூகங்களை அமைக்கும் முயற்சியின் விளைவாகவே பழங்குடிச்சமூகங்கள் மேல் தனியான கவனம் விழுந்தது. அவற்றில் எப்படி அரசு என்ற உருவத்தின் வேர்கள் உள்ளன, உருக்கொள்கின்றன என்ற ஆய்வுகள் உருவாயின.இந்தக்காலகட்டத்தை நவீன அரசதிகாரம் குறித்த மையக்கருத்துக்கள் அனைத்துமே உருவான ஒரு காலம் என்று சொல்லமுடியும் . இன்றும்கூட நவீன அரசியல் கருத்துக்களை வடிவமைத்த, அரசதிகாரம் மற்றும் குடிமையதிகாரம் குறித்த கோட்பாடுகளை உருவாக்கிய, பெரும்பாலான சிந்தனையாளர்களில் அரசின்மை கொள்கை ஆழமான செல்வாக்கைச் செலுத்திருப்பதைக் காணலாம். உதாரணம், மிஷேல் ஃபூக்கோ, நோம் சாம்ஸ்கி.

புரட்சிகர அரசின்மைவாதிகள் பெரும்பாலான இடங்களில் தாராள அரசுக்காக போராடியவர்களுடன் இணைந்து செயல்பட்டார்கள். ஆனால் ஜெர்மனியின் நாஜிக்களும் புரட்சிகர அரசின்மைவாதிகளின் பெரும்பாலான கோஷங்களை தாங்களும் எழுப்பியே முற்றதிகாரத்தைப் பிடித்தார்கள். இந்தக்கலவை ஒவ்வொரு குழுவிலும் ஒவ்வொரு வகையில் செயல்பட்டதைக் காணலாம்.

பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த 'நடையர்' ஜான் ஸ்டுவர்ட் [John "Walking" Stewart] நவீன இயற்கைவாத அரசின்மையாளர்களுக்கு முன்னுதாரணமாக அமைந்தவர். மிகசுவாரசியமான வாழ்க்கை கொண்டவர் ஜான் ஸ்டுவர்ட். இந்தியாவில் சென்னையில் பிரிட்டிஷ் அரசில் ஒரு குமாஸ்தாவாகப் பணியாற்றியவர் இந்தியாவில் சில யோகிகளால் கவரப்பட்டார். அதன் பின்னர் சென்னையிலிருந்து கிளம்பி கால்நடையாகவே பாகிஸ்தான் வழியாக ஆப்கானிஸ்தான் சென்று அரேபியாவில் நுழைந்து ஐரோப்பாவுக்குச் சென்றார். இதன் வழியாக மனிதனின் இயற்கைவாழ்க்கையைப்பற்றிய அரசினமைக் கோட்பாடு ஒன்றை உருவாக்கிக் கொண்டார். அது அக்கால பிரிட்டனில் உள்ள அரசின்மைவாதிகளை பெரிதும் கவர்ந்திருக்கிறது

ஜான் ஸ்டுவர்ட் இயற்கையில் உள்ள ஒவ்வொன்றிலும் ஒரு உட்கருத்து அவற்றின் அமைப்பிலேயெ உள்ளது என வாதிட்டார். அதைப்புரிந்துகொண்டு அதற்கேற்ப மனிதன் வாழ்க்கையை அமைத்துக்கொண்டால் மட்டுமே சிக்கல் இல்லாத சீரான வாழ்க்கை அவனுக்கு அமையும். அவரது சிந்தனைகளின் பாதிப்பு ஐரோப்பிய இயற்கை வாதிகள் அனைவரிடமும்

உண்டு. காந்தி கூட அவரது ‘நடைப்பித்தை’ ஸ்டுவர்ட்டிடம் இருந்து பெற்றுக்கொன்டிருக்கலாம் . தோரோ அவரது முன்மாதிரிடாகக் கொண்டது மில் அவர்களையே. இன்றுவரை உலகம் எங்கும் உள்ள இயற்கைவாதிகளுக்கு தோரோ முக்கியமான முன்னுதாரணம். உலக அளவில் இன்று தன்விலக்க அரசின்மைவாதம் பேசுபவர்களில் பெரும்பாலானவர்கள் இயற்கைவாதிகளே

தேசியத்தலைவர்களும் தேசிய உருவகங்களும்

இந்திய சுதந்திர்ப்போராட்டத்தின் பின்புலத்தில் ஒவ்வொரு தலைவரையும் அவர் மனதில் இருந்த தேசிய உருவகம் என்ன என்பதை வைத்தே நம் புரிந்துகொள்ள வேண்டும். இப்பிரிவினை முழுமுற்றானதாக இருக்காது என்பதையும் கணக்கில் கொள்ளவேண்டும். அவர்களின் பேச்சு செயல்பாடுகள் ஆகியவற்றைக் கொண்டு அவர்களின் அரசு உருவகம் பெரும்பாலும் இந்தத் தரப்பைச் சார்ந்தது என்று ஊகித்து வரையறைசெய்துகொள்வது அன்றைய விவாதச்சூழலைப் புரிந்துகொள்ள உதவிகரமானது என்று மட்டுமே கொள்ள வேண்டும்.

மையத்தேசியவாதத்தின் மிகச்சிறந்த உதாரணமாக அமைபவர் சாவர்க்கர். 1905-1909 வாக்கில் லண்டனில் இருந்த சாவார்க்கர் ஐரோப்பாவில் அன்று உருவாகி வந்த மையத்தேசியவாதத்தை மிகவும் கூர்ந்து கவனித்து அத்தகைய ஒன்றை இந்தியாவிலும் உருவாக்கும் கனவை வளர்த்துக்கொண்டார். இதில் ஆர்வமூட்டும் கூறு என்னவென்றால் சாவார்க்கருக்கு முன்னுதாரணமாக அமைந்தது பிரிட்டிஷ் மையத்தேசியம் உருவாக்கிய சாம்ராஜ்யமே. அதைத்தான் அவர் எதிர்த்துப் போராடினார், ஆனால் அதைத்தான் அவர் தன் தரப்பாக உருவாக்கவும் எண்ணினார் — ஓர் இந்து சாம்ராஜ்யம்! அந்தக்கனவு சாவார்க்கரில் இருந்து வளர்ந்து ராஷ்டிரிய சுயம் சேவக் சங்கமாக ஆகி இன்று வரை இந்திய அரசியலில் ஒரு மைய விசையாக நீடிக்கிறது.

இரண்டாவது தாராள தேசியவாதத்தின் மிகச்சிறந்த உதாரணமாக அமைபவர் நேருதான். நேரு தன் வாழ்நாளெல்லாம் கனவுகண்டது முழுமையான ஒரு தாராளவாத-நலம்நாடி அரசையே எனலாம். இந்திய சுதந்திரத்தின் ஆரம்ப காலங்களில் அவருக்கு இந்திய சமுகத்தின் முழுமையான ஆதரவு இருந்தது. அந்நிலையில் அவர் முற்றதிகாரம் நோக்கிச் செல்லும் உணர்வை அடைவதற்குப் பதிலாக அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு இந்தியாவின் குடியாட்சி அமைப்புகளை வலுவாக நிறுவத்தான் முயற்சி செய்தார். இந்தியக் குடியாட்சியின் மையத்தூண்களாக இன்றும் இருக்கும் தேர்தல் ஆணையம், தணிக்கைத்துறை, நீதிமன்றம், இதழியல் போன்ற பல அமைப்புகள் இன்றும் அரசியல்சட்ட பாதுகாப்புடன் சுதந்திரமாகச் செயல்படும் தளத்தை அமைத்தவர் அவரே. ஆகவே இந்தியக் குடியாட்சியின் சிற்பியும் அவரே

இந்திய அரசின்மைவாதிகளில் மறுப்புவாதம் சார்ந்த அணுகுமுறைக்கு மிகச்சிறந்த உதாரணம் என்று ஈ.வே.ராமசாமி நாயக்கர் அவர்களையே சொல்லவேண்டும். முழுமையான மறுப்பாளராகவும் கலகக்காரராகவுமே அவர் இருந்தார். எதையும் கட்டி எழுப்ப அவர் முயன்றதில்லை. பின்னர் அவர் பெயரால் கட்டி எழுப்பப்பட்ட அனைத்துக்குமே அவர் எதிரானவர் என அவரது எழுத்துக்கள் காட்டுகின்றன. ஈ.வே.ரா எல்லாவகையிலும் ஓர் அரசின்மைவாதியாகவே இருந்தார். எந்த ஒரு அரசு உருவகமும் அவரை உள்ளடக்கியதாக அமைய முடியாது. அவர் பெயரால் உருவான அரசுக்குக்கூட அவர் வெளியேதான் இருந்தார்.

ஒருங்கிணைக்கப்பட்ட எச்சிந்தனை மேலும் அவர் ஐயப்பட்டார். மரபான எதையும் அவர் ஏற்க மறுத்தார். வலியுறுத்தப்பட்ட எதையுமே முன்விளைவு பின்விளைவுகளைப் பார்க்காமல் எதிர்த்தார். அவரது முன்னுதாரணங்கள் ஐரோப்பாவில்தான் இருந்தன என்றாலும் அவரது மன அமைப்பு இந்திய சார்வாக மரபைச் சேர்ந்தது. மறுப்பே அவரது தத்துவம் என்று சொல்லலாம். ஐரோப்பிய சிந்தனையாளர்களைப்போல அவ்ரும் மறுப்புவாதத்தை பொருள்முதல்வாதச் சிந்தனைகளின் அடிப்படையில் அமைத்துக்கொண்டார். ஈ.வே.ரா அவர்கள் பகுத்தறிவுவாதம் என்று சொன்னது மறுப்பு நோக்கம் கொண்ட பொருள்முதல்வாத அமைப்பையே. அவருக்கும் அவர்காலகட்ட மார்க்ஸியர்களுக்கும் இடையே இருந்த முரண்பாடு என்பது இதுதான். அவர் மார்க்ஸியர்கள் ஐரோப்பாவில் நிராகரித்து முன்னே சென்றுவிட்டிருந்த பொருள்முதல்வாத மறுப்புவாதத்தைச் சேர்ந்தவர்.

இந்தியாவின் புரட்சிகர அரசின்மைவாதிகளில் முக்கியமான ஒரு முன்னுதாரணம் ஜெயப்பிரகாஷ் நாராயணன். கடைசிவரை அமைப்புமனிதராக மாற மறுத்து தன்னை ஒரு நிரந்தர எதிர்ப்பாளராகவே நிறுத்திக்கொண்டவர் அவர். அவரே உருவாக்கிய ஜனதா அரசுகூட அவருக்கு உவப்பானதாக அமையவில்லை. தெளிவாக விளக்கவில்லை என்றாலும் எப்போதும் ஜெயப்பிரகாஷ் நாராயணன் தீராத புரட்சிகரம் ஒன்றையே தன் அரசியலாக கொண்டிருந்தார். அதைத்தான் அவர்

'முழுப்புரட்சி' என்று எப்போதும் சொல்லிவந்தார். எல்லா தளங்களிலும் தலைகீழ் மாற்றம் என்பதே அவர் உத்தேசித்தது. அவரில் இருந்த அரசின்மையும் அதன் விளைவான கட்டுப்பாடின்மையும் அவரை எந்த அமைப்புக்குள்ளும் அடங்க மறுத்து தனிமனிதராகவே கடைசிவரை நீடிக்கச்செய்தன.

இந்திய இடதுசாரி இயக்கங்கலுக்குள் பல வகையான அரசின்மைவாதிகளை நாம் காணமுடியும். உதாரணமாக கேரள கம்யூனிஸ்டுக் கட்சியின் ஆரம்ப காலத்து தலைவரான கெ.பி.ஆர் கோபாலனைச் சொல்லலாம். அவர் நிரந்தரமான புரட்சிவாதி. அவரால் ஏற்க முடிந்த ஓர் அரசுருவகமே கிடையாது எனலாம். சோஷலிஸ்டுகளில் அப்பட்டி பலர் இருந்தார்கள். யு.ஆர்.அனந்தமூர்த்தியின் நாவலான 'அவஸ்தே' அத்தகைய ஓர் அரசின்மைவாதியின் வாழ்க்கையைப் பற்றிய வலுவான சித்தரிப்பு. ஆனால் இந்திய இடதுசாரிகளைப் பொறுத்தவரை அவர்கள் எப்போதுமே அரசின்மைக்காக போராடவில்லை. ருஷ்யாவில் வலுவான மையத்தேசியம் உருவான பிறகே இந்தியாவில் பொதுவுடைமை சிந்தனை ஆரம்பிக்கிறது. ஆகவே இங்கே அது புரட்சிகர மையத்தேசியமாகவே முன்வைக்கப்பட்டது.

இந்த நான்கு அரசுக் கருத்தியல்களில் பலவகையான கலவைகளை நாம் நம்முடைய அரசியல் முன்னோடிகளில் காணலாம். இவர்களை இவ்வாறு அவர்கள் முன்வைக்கும் அரசு மாதிரி என்ன என்று பிரித்துக்கொண்டோமென்றால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களுக்கு இடையேயான உறவுகளையும் ஒவ்வொருவரும் எடுத்த நிலைபாடுகளையும் இன்னமும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். சாவார்க்கரின் மையத்தேசிய உருவகமே இன்று வரை இந்துதேசியவாதத்தின் அடிப்படை. சியாமபிரசாத் முகர்ஜி, தீ ன்தயாள் உபாத்யாயா முதல் அத்வானி வரை அதுவே தொடர்கிறது. ஆனால் நாம் வாஜ்பாய் அவர்களின் அரசியலுரைகளை வாசிக்கையில் அவரது மனம் தாராளவாத அரசு ஒன்றையே முன்மாதிரியாகக் கொண்டிருக்கிறது என்பதைக் காணலாம்.

முன்னோடிகளில் சுபாஷ் சந்திரபோஸ் ஒரு மையத்தேசிய உருவகத்தையே மனதில் கொண்டிருந்தார். இந்தியாவின் பண்பாட்டு மேன்மை மற்றும் உலகத்தலைமை வகிக்க அதற்கிருக்கும் வரலாற்றுத்தகுதி ஆகியவற்றைப் பற்றி அவர் ஆவேசமாகப் பேசிவந்தது அதையே காட்டுகிறது.சாராம்சத்தில் சுபாஷ் காந்தியைவிட சாவார்க்கருக்கே நெருக்கமானவர்.

அதேபோல ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவராக வந்த அம்பேத்கார் இந்தியாவின் ஜனநாயக அமைப்புகளை உருவாக்குவதில் நேருவுக்கு உதவியவர். ஜனநாயகத்தில் ஆழமான நம்பிக்கை கொண்டவர். ஆனால் மையத்தேசிய அரசே அவரது மனதில் இருந்தது. அரசியல் நிர்ணயசபை விவாதங்களில் அதிகாரப்பரவலாக்கம் சார்ந்த எந்த ஒரு கருத்தையும் அவர் மறுத்து நிராகரிப்பதைக் காணலாம். மகாவீர் தியாகி போன்றவர்கள் அம்பேத்கார் இந்திய அரசியல் சட்டத்தில் காந்தியத்தை முற்றாகவே கழுவி விட்டுவிட்டார் என்று குற்றம் சாட்டினார்கள். அம்பேத்காரைப் பொறுத்தவரை முற்போக்கு எண்ணம் கொண்ட ஒரு மைய அரசு, தன் எல்லா உட்கூறுகளையும் வலுவான அதிகாரம் மூலம் வழிநடத்தும் அரசே சிறப்பானது. உட்கூறுகளுக்கு ஜனநாயக உரிமைகள் அளிக்கப்பட்டால் அது மையத்தை வலிமையிழக்கச் செய்து அதன் முன்னகர்வை தடைசெய்யும். இது சாராம்சத்தில் 'தத்துவவாதியான ஆட்சியாளன்' என்ற பிளேட்டோவின் குடியரசுக் கோட்பாட்டில் இருந்தே ஆரம்பிக்கிறது

இக்காரணத்தால் அம்பேத்காருக்கு எப்போதுமே ஹிந்துமகாசபையுடன் நல்லுறவு இருந்திருக்கிறது. ஹிந்து மகாசபையின் டாக்டர் மூஞ்சேயுடன் அவர் அரசியல் உடன்பாடுகளுக்கு வந்திருக்கிறார். இந்து மகாசபையினரின் மகாராஷ்டிரப்பற்று அவரையும் ஒரு மராட்டியப்புதல்வராக காண முற்பட்டிருக்கிறது. அம்பேத்காரின் வரலாற்றில் இந்த அம்சம் இன்று பேசப்படுவதில்லை. 1952 ல் அம்பேத்கார் கடைசியாக தேர்தலில் நின்றபோது அவருக்கு பின்னர் பாரதீய மஸ்தூர் சங்கை நிறுவிய ஆர்.எஸ்.எஸ்காரரான தத்தோபந்த் டெங்கடி தேர்தல் ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றியிருக்கிறார்.

அதேபோல பட்டேலையும் சொல்லலாம். காந்தியின் மாணவராக அரசியலில் விளங்கிய பட்டேல் ஜனநாயக நோக்கையே பிரதானமாகக் கொண்டிருந்தார். ஆனால் அவரது அகம் நாடிய அரசு என்பது மையத்தேசிய அரசே. இந்தியாவை இன்றைய உறுதியான மைய அரசாங்கமாக ஆக்கியவர் அவரே. இக்காரணத்தால் பட்டேலுக்கும் ஹிந்துமகாசபை மற்றும் ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தின்பால் ஒரு மதிப்பு இருந்தது. அவர்களின் இந்துதேசியம் என்ற கருத்தை அவர் ஏற்கவில்லை என்றாலும் பண்பாடு சார்ந்த மையத்தேசிய உருவகத்தை ஏற்றுக்கொண்டிருந்தார்.

ஆனால் நேரு கடைசிவரை இந்துதேசியவாதிகளை சற்றும் ஏற்க முடியாதவராக இருந்தார். அவரது மனச்சாய்வு புரட்சிகர அரசின்மையையும் புரட்சிவாதிகளையும் ஏற்றுக்கொள்வதாக இருந்தது. அவரது கடுமையான விமரிசகர்களாக இருந்தாலும் அவருக்கு சோஷலிஸ்டுகளிடம் பெரிய மனவேறுபாடுகள் இருக்கவில்லை. இந்திய இடதுசாரிகளுக்கு நேரு அரசியல் எதிரியாக இருந்தாலும் அவர் அவர்களுக்குப் பிடித்தவராகவே இருந்தார். அவர்கள் படேலை காங்கிரஸின் வலதுசாரிமுகமாகவும் நேருவை இடதுசாரி முகமாகவும் பார்த்தார்கள்.

ஏ.கே.கோபாலன், இ.எம்.எஸ்.ஜோதிபாஸு , சி.அச்சுதமேனன் போன்ற மார்க்ஸிய பெருந்தலைவர்களைப் பார்க்கையில் அவர்கள் மார்க்சியக் கருத்தியலின் உள்ளே இருந்தாலும் அவர்களின் அரசியல் கருத்துருவம் என்பது தாராளவாத அரசே என்பதைக் காணலாம். அவர்கள் ஜனநாயகவாதிகளாகவே கடைசிவரை இருந்திருக்கிறார்கள். ஆகவேதான் அவர்களின் ஆழத்தில் நேரு மீது ஒரு பிரியம் இருந்துகொண்டிருந்தது.

இந்தியாவின் தன்விலக்க அரசின்மைவாதிகளில் முதன்மையானவர் காந்தி. இன்றும் அரசின்மை சார்ந்த மாற்று அமைப்புகளை அல்லது குழுக்களை உருவாக்கும் அனைவரிலுமே ஏதேனும் ஒருவழியில் காந்தியின் வலுவான பாதிப்பு இருந்துகொண்டிருக்கும். காந்தி லண்டனில் இருந்தபோது அவரை மிகவும் ஆழமாகப் பாதித்தவர்கள் இயற்கைசார்ந்த தன்விலக்க அரசின்மைக் கருத்துக்களை முன்வைத்தவர்களான தல்ஸ்தோய், ரஸ்கின், தோரோ போன்றவர்கள். நடையர் ஜான் ஸ்டுவர்ட்டின் சிந்தனைகளின் நேரடிப்பாதிப்பையும் நாம் காந்தியில் காணாலாம். அதாவது காந்தி ஓர் அரசை உருவாக்க முயன்றவரல்ல. அவர் அரசுவாதியே அல்ல. அவர் அரசின்மைவாதி. 'அடிப்படையில் காந்தியம் என்பது ஓர் அராஜகம். அதை எந்த ஒரு அரசு அமைப்பும் எதிரியாகவே கருதும்' என்று அதை சரியாகவே அஷிஷ் நந்தி சுட்டிக்காட்டுகிறார்.

எதிர்கால இந்தியாவைப்பற்றிய காந்தியின் கனவு அங்கிருந்தே ஆரம்பிக்கிறது. அவரது 'ஹிந்துசுயராஜ்ய'த்தின் வேர் அந்த ஐரோப்பிய அரசின்மைவாத மரபிலேயே உள்ளது.

*[மேலும்]*

---

***காந்திய தேசியம் 4***

*இந்திய சுதந்திரப்போராட்டத்தை முன்னின்று நடத்தியபோது காந்தி கொண்டிருந்த தேசிய உருவகம் என்பது அவர் தென்னாப்ரிக்காவில் இருந்தபோதே உருவாக்கி வைத்திருந்த எதிர்காலத்திட்டங்களில் இருந்து உருவானது. அந்தத்திட்டத்துடன் தான் அவர் இந்தியாவுக்கு வந்தார். தன் வாழ்நாள் முழுக்க பல படிகளாக அதைத்தான் செயல்படுத்திக் கொண்டிருந்தார். அது அவரது கிராமசுயராஜ்யம் என்ற பெருந்திட்டமே. அது ஓர் இந்திய அரசை உருவாக்கும் திட்டம் அல்ல. முழுக்கமுழுக்க ஓர் அரசின்மையை உருவாக்கும் திட்டம் !*

*ஆகவேதான் அவர் ஒருபோதும் சுதந்திரம் பெறுவதற்காக வெள்ளையருடன் போரிடுவதை மட்டுமே தன் செயல்திட்டமாக வைத்திருக்கவில்லை. சிலசமயம் பார்க்கும்போது சுதந்திரப்போராட்டமே இரண்டாம்பட்சமானது என்ற எண்ணம் அவருக்கு இருந்ததோ என்ற எண்ணம் எழுகிறது. அவர் கிராமநிர்ம்மாணம், கதர், ஹரிஜன இயக்கம் போன்ற இயக்கங்களையே அடிப்படைச் செயல்பாடாக கருதியிருந்தார். அவரைப்பொறுத்தவரை சுதந்திரப்போராட்டம் என்பது நம்மை நாமே கட்டி எழுப்பும் பணியே ஒழிய பிறரை வெற்றிகொள்ளும் பணி அல்ல*

*காந்தி இந்தியச் சுதந்திரப்போராட்டத்தை முடிந்தவரை அதிகமாக மக்களைத்திரட்டி நடத்த எண்ணியமைக்குக் காரணமும் இதுவே. அவர் மக்களை அரசியல்படுத்தவும் அவர்களின் விதியை அவர்களே தீர்மானிக்கச்செய்யவும் விரும்பினார். அவருக்கு முன்பிருந்த எந்த சுதந்திரப்போராட்டத்தலைவருக்கும் அத்தகைய கனவு இருக்கவில்லை, அவர்கள் கல்வியும் விழிப்புணர்ச்சியும் கொண்ட சிறுபான்மையினரை திரட்டவே முயன்றார்கள். ஏன் காந்தியின் சமகாலத்து பிற தரப்பினர்கூட , மிகச்சிறந்த உதாரணம் அம்பேத்கார், வெகுமக்களை பெருமளவில் திரட்டி நடத்தும் இயக்கங்களில் ஆர்வம் கொண்டிருக்கவில்லை. காந்தியின் தேசிய உருவகம் கோடானுகோடி மக்களின் வாழ்க்கையை மொத்தமாக புதிதாகக் கட்டியெழுப்புவதாக இருந்தது.*

***காந்தியின் கனவு தேசியம்***

*இன்று இந்தியாவில் மிகச்சிலரே வாசித்திருக்கிற ஒரு நூலாக இருக்கிறது காந்தியின் ஹிந்து சுயராஜ்யம் என்ற குறிப்புடன் அந்தோனி பாரேல் அவரது ஹிந்து சுயராஜயா பதிப்பை வெளியிட்டார். உண்மைதான். அந்நூலை காந்தியர்களில் 'கடும்போக்கு' கொண்ட சிலர் ஒழிய பெரும்பாலானவர்கள் முன்வைப்பதில்லை.*

*அதற்குக் காரணம் 'நவீன' மனம் கோண்ட ஒருவருக்கு அந்நூல் மிக எதிர்மறையான ஒரு சித்திரத்தை அளித்துவிடும் என்பதே. நவீன கால நிர்வாகம்,அரசமைப்பு, உற்பத்தி-வினியோகமுறை, சமூக உறவுகள் ஆகியவற்றைப்பற்றி மட்டுமல்ல நவீன தொழில்நுட்பம் போக்குவரத்து ஆகியவற்றைப்பற்றிக்கூட எந்தப் புரிதலும் இல்லாமல் மிகவும் பழைமையான ஒரு மன உலகில் வாழ்ந்துகொண்டு உருவாக்கப்பட்ட பகற்கனவு என அந்நூல் அவனுக்குத் தோன்றக்கூடும்.*

*தென்னாப்ரிக்காவில் இருந்து வெளிவந்த 'இந்தியன் ஒப்பீனியன்' என்ற இதழில் தொடராக வெளிவந்தது இந்நூல். 1909 ல் லண்டனில் இருந்து தென்னாப்ரிக்காவுக்கு செல்லும்போது வன்முறைசார்ந்த புரட்சிதான் சமூகத்தை உருவாக்குமா என்ற வினாவுக்கு பதிலாக தனக்குத் தோன்றியதை இந்நூலில் காந்தி சொல்கிறார். இந்தியாவில் அப்போது ஒரு வன்முறைப்புரட்சியை கொண்டுவந்து பிரிட்டிஷாரை வெல்வதைப்பற்றிய நம்பிக்கை நிலவியது. அந்த வழியே தென்னாப்ரிக்காவுக்கும் உகந்தது என்றும் சொல்லப்பட்டது. காந்தி அதை நம்பவில்லை. அதற்கான பதிலை அவர் தனக்குள் தேடுகிறார்.*

*ஹிந்து சுயராஜ்யம் தன்னுடைய கொள்கைகளின் முழுவிளக்கமும் கொண்ட மையநூல் என்று காந்தி கருதினார். 1921ல் அந்நூலின் ஆங்கிலப்பதிப்புக்கு அவர் எழுதிய முன்னுரையில் ''என் கருத்தில் இந்நூலை ஒரு குழந்தைக்கும் வாசிக்கக் கொடுக்கலாம். இது வெறுப்புக்குப் பதிலாக அன்பின் நற்செய்தியை*

குழந்தைக்கு கற்பிக்கும். வன்முறையை தியாகத்தால் இடமாற்றம் செய்யும்'' என்று எழுதினார்

தன் நூலில் 'நவீன பண்பாடு' குறித்து ஆழமான கண்டனம் இருப்பதாக காந்தி சொல்கிறார். அது முதல்வாசிப்பில் ஏற்க முடியாததாக தோன்றலாம் என்றும் சொல்கிறார். ஆனால் தனக்கு தன் கருத்துக்களில் ஆழமான நம்பிக்கை இருப்பதாகவும் இன்று இந்தியா இந்நூலில் உள்ள விஷயங்களுக்காக முதிர்ச்சி கொண்டிருக்கவில்லை என்றாலும் அது சாத்தியமாகும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவிக்கிறார். தன்னுடைய தேசிய விடுதலைப்போராட்டம் என்பது இந்த கிராமசுயராஜ்யக் கனவை சாத்தியமாக்கும் நோக்கம் கொண்டதே என அவர் அம்முன்னுரையில் திட்டவட்டமாகவே சொல்கிறார்.

அந்நூலின் அரசியல் செயல்திட்டத்தில் அகிம்சையை மட்டுமே தற்போது தன்னால் சோதனைசெய்துபார்க்க முடிந்திருக்கிறது என்று சொல்லும் காந்தி அதுவும் போதிய அளவுக்கு நடைமுறை வெற்றியை அளிக்கவில்லை என்று வருந்துகிறார். இந்தியாவின் சுதந்திரப்போராட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு தன்னுடைய சொந்தப் பொருளியல் திட்டங்களை அமல்படுத்த தான் முயல்வதாகவும், அரசியலிலும் பொருளியலிலும் மதக்கருத்துக்களை புகுத்துவதாகவும், தான் செய்வது ஓர் அபாயகரமான ஆட்டம் என்றும் எழுந்த குற்றச்சாட்டுகளுக்கு தன்னுடைய திடமான அரசியல் பொருளியல் நம்பிக்கை இது என்றும், இதற்காகவே தான் அரசியலில் ஈடுபடுவதாகவும் காந்தி பதில் சொல்கிறார்.

ஹிந்து சுயராஜ்யத்தின் பொருளியல் அரசியல் கொள்கைகளை பிறிதொரு தருணத்திலேயே விரிவாகப் பேசவேண்டும். ஆனால் இன்று அந்நூலைப் படிக்கையில்கூட சாதாரண வாசகனுக்கு அதிர்ச்சியே உருவாகும். இவர் என்ன அரசாங்கம் அமைக்க வழிசொல்கிறாரா இருக்கும் அரசாங்கங்களைக் கலைத்து அராஜகம் உருவாக வழி சொல்கிறாரா என அவன் திகைப்படையக்கூடும். அதிஉணர்வாளர்களுக்கு [Excentrics] மட்டுமே உரிய ஒரு வகை கட்டற்ற எண்ணப்பாய்ச்சல் கொண்ட நூல் இது.

அன்றைய சூழலில் இந்திய அரசியல் தளத்தில் செயலாற்றிய எவருக்கும் நேருபடேல்,சுபாஷ்,அம்பேத்கார் அனைவருக்குமே, இது ஒரு அந்தரங்கமான கிறுக்குத்தனம் என்றே தோன்றியிருக்கும். இவர்கள் எவருமே அரசின்மைவாதிகள் அல்ல என்பதே முக்கியமான காரணம். இவர்கள் எண்ணிக்கொண்டிருந்தது அரசுருவங்களைப் பற்றி. இவர்கள் எவருமே அதிஉணர்வாளர்களுமல்ல. ஆகவே தங்கள் காலகட்டம் தங்களுக்கு அளிக்கும் எண்ணங்களின் இயல்கையை தாண்டிச்சென்று சிந்திக்க இவர்களால் முடியவும் இல்லை.

எனக்கு என்ன தோன்றுகிறது என்றால் பிராமணியம் தொடர்பான கசப்பு ஒரு மனப்பீடிப்பு போல ஈ.வே.ரா அவர்களை அழுத்தியிருக்காவிட்டால் அவர் காந்தி சொன்னவற்றை சட்டென்று புரிந்துகொண்டிருக்கக் கூடும் என்று. இந்திய அரசியலில் அக்காலத்தில் அவர்தான் காந்தியைப்போல அரசின்மைவாதி. எல்லா எல்லைகளுக்கும் செல்லக்கூடிய அதிஉணர்வாளர்.

காந்தி ஹிந்து சுயராஜ்யம் வழியாக முன்வைக்கக்கூடிய தேசிய உருவகத்தை சுருக்கமாக இவ்வாறு சொல்கிறேன். அதை விரிவாக நூல்கள் வழியாகவே கற்க வேண்டும். காந்தியைப் பொறுத்தவரை முதல்பெரும் விழுமியம் என்பது சுதந்திரம். சுதந்திரம் என்பது பொறுப்புடன் இணைந்தது. பொறுப்பு என்பது தனிமனித ஒழுக்கம் மற்றும் சமூக நெறிகள் ஆகியவற்றை பேணுவதே. இத்தகைய முழுமையான சுதந்திரம் சாத்தியமாகக்கூடிய ஒரு சமூக அமைப்பை அவர் கற்பனைசெய்கிறார்.

ஒரு மனிதன் தன் வாழ்க்கையை தானே தீர்மானிக்கக்கூடியவனாக இருக்க வேண்டும். அதற்கு அவன் தன் சமூகத்தை தானே தீர்மானிக்கும் உரிமையுடன் இருக்க வேண்டும். மேலைநாடுகளில் இருந்த எளிமையான வாக்குரிமையை காந்தி இங்கே முக்கியமானதாக கருதவில்லை. தன்னை அடக்கியாளவேண்டிய சக்தி எது என்பதைத் தீர்மானிக்கவே அந்த வாக்குரிமை உதவுகிறது அவனுக்கு. அவனால் புரிந்துகொள்ள முடியாத, அவனால் நேரடியாகத் தொடர்புகொள்ள முடியாத ஒரு பெரிய அமைப்பின் பிரிக்கமுடியாத  உறுப்பாக அவன் இருக்கும்போது அவனுக்கு உண்மையில் சுதந்திரம் என்பதே இல்லை.

சுதந்திரத்தைப் பறிக்கும் இன்னொரு முக்கியமான அம்சமாக காந்தி எண்ணுவது உலகியல் இன்பங்கள் மீதான பேராசை. அந்த ஆசையினால்தான் இந்தியா மேலைநாட்டினருக்கு அடிமையானது என்று காந்தி எண்ணுகிறார். நுகர்வு வெறி இயற்கையை அழிக்கிறது. பெருந்தொழில்நுட்பங்களை கொண்டுவருகிறது. பெரிய அளவில் ஆற்றலை தேவையாக்குகிறது. ஏராளமான மூலப்பொருட்கள் அதற்கு தேவையாகின்றன. ஆகவே மூலப்பொருட்களுக்கான மோதல் உருவாகிறது.

நுகர்வும் போரும் ஒன்றுடன் ஒன்று பிரிக்கமுடியாதவை என்பது காந்திய தரிசனம். அதாவது பெருமளவில் நுகர்வைக் கொண்ட ஒருசமூகம் போரிட்டபடியேதான் இருக்க முடியும். போர் பெரிய ராணுவங்களையும் அந்த ராணுவங்களை நிர்வகிக்கும் பெரிய அரசுகளையும் உருவாக்கும். அந்த அரசில் எளியமனிதன் வெறும் வரிகொடுக்கும் குடிமகனாக மட்டுமே இருக்க முடியும். அவனுக்கு சுதந்திரமும் நிறைவும் இருக்காது. நவீனப் பண்பாடு என்பது உடலை மகிழ்வித்து ஆன்மாவை அழிப்பது என்றார் காந்தி.

ஆன்ம விடுதலை என்பது காந்தியைப் பொறுத்தவரை அறிவார்ந்தது அல்ல. அதை செயல்மூலமே ஒருவர் அடைய முடியும். உடல்சார்ந்த உழைப்பை காந்தி மீளமீள வற்புறுத்துவது அதில் உள்ள படைப்பூக்கம் மனித அகத்தை விடுதலைசெய்வது என்பதனாலேயே. ஒரு மனிதனுக்கு  அறிவார்ந்த வளர்ச்சியும் தொழில்கள் மூலம் பெறும் ஆன்மீக மலர்ச்சியும் சேவை மூலம் பெறும் கருணையும் தேவைப்படுகிறது. ஆகவே பெருந்தொழில்கள் மூலம் வேலைப்பாகுபாடு நிகழ்வதை காந்தி நிராகரித்தார். அது மனிதனை சமூகத்தில் இருந்தும் உழைப்பில் இருந்தும் அன்னியப்படுத்தும் என்றார். அதன் விளைவாக செய்தொழிலில் அவனுக்கு இன்பம் இருக்காது. ஆகவே அவன் போலியான கேளிக்கைகளை நோக்கிச் செல்வான்

இவ்வாறாக மையப்படுத்தப்பட்ட அரசு,  ராணுவம் ,பெருவணிகம், போர்கள், பெருந்தொழில்நுட்பம், நுகர்வு ஆகியவற்றை ஒரே விஷயத்தின் வேறுபட்ட முகங்களாகக் காணும் காந்தி ஒட்டுமொத்தமாக இவற்றை நிராகரித்துவிட்டு ஒரு சமூக அமைப்பை உருவாக்க முடியும் என்று எண்ணுகிறார். அதுவே அவர் முன்வைத்த கிராமசுயராஜ்யம். அதையே எதிர்கால இந்தியாவின் தேச அமைப்பாக அவர் தன்னுடைய 'ஹிந்து ஸ்வராஜ்' என்ற நூலில் எழுதினார்.

காந்தி உருவகிக்கும் சமுகம் தன்னிறைவு கொண்ட சிறிய கிராமங்களை அடிப்படை அலகாகக் கொண்டது. அந்த மக்கள் தங்களுக்குத் தேவையான பொருத்தமான தொழில்நுட்பத்தை மட்டும் அங்கே பயன்படுத்திக்கொள்ளலாம். அந்த மக்களின் தேவைக்குரிய அனைத்தையும் அங்கே உருவாக்கிக் கொள்ள முடியும். அங்குள்ள பொருட்களால் வீடு கட்டலாம். அங்குள்ள நிலத்தில் உணவை உருவாக்கலாம். உடையை அவர்களே நெய்துகொள்ளலாம். ஒருவரை ஒருவர் சுரண்டுவதையும் அடக்கியாளுவதையும் அவர்கள் தவிர்த்தார்கள் என்றால் அவர்களுக்குத்தேவையான அனைத்தையுமே அவர்கள் அங்கே உருவாக்கிக் கொள்ளலாம்.

இந்த தன்னிறைவான கிராமங்கள் ஒன்றுடன் ஒன்று தேவையான அளவுக்கு மட்டும் வணிக உறவுகளை உருவாக்கிக் கொள்ளலாம். அதன் மூலம் அவை தங்களிடம் இல்லாதபொருட்களையும் அறிவையும் பிறரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். ஒரு கிராம மக்கள் கண்டிப்பாக தங்கள் கிராமத்தைப்பற்றியும், சூழலைப்பற்றியும் நன்றாக அறிந்திருக்க வேண்டும் என்று காந்தி எண்ணினார். அங்குள்ள வேளாண்மை மற்றும் தொழில்களுக்கான வாய்ப்புகளை அவர்கள் கற்றிருக்க வேண்டும். புதிய இயல்கைகளை அவர்கள் கண்டுபிடிக்கவேண்டும்.

தன் சொந்த மண்ணைப்பற்றி தெரியாமல் வாழ்வதை அறியாமை என்று காந்தி எண்ணினார். தன் மண்ணைப்பற்றி ஒருவன் உண்மையிலேயே அறிந்திருப்பான் என்றால் அவனால் தேவையான அனைத்தையும் அங்கிருந்து உருவாக்கிக் கொள்ளமுடியும். குறைந்த செலவில் நல்ல வீடுகளை கட்ட முடியும். நல்ல உடைகளை உருவாக்க முடியும். இந்த அறிதல்கள் பல்லாயிரம் வருடங்களாக பாரம்பரியமாக கைமாற்றப்பட்டு வந்தவை. அவற்றை தொழில்முறைபகுப்பான வருணாசிரமமும் சாதிமுறையும்தான் அறுபடாத தொடர்ச்சியாக நீடிக்கச் செய்தன என்று நம்பிய காந்தி ஏற்றத்தாழ்வு இல்லாத ஒரு வர்ணாசிரம முறை என்பது அறிவு தலைமுறைமாற்றத்தால் அறுபடாமல் நீடிப்பதற்கு இன்றியமையாதது என்றார்.

சிறிய தொழில்குழுக்கள் தொழில்ஞானத்தை சிறப்பாக பேணுவதை அவர் அவதானித்தார். இந்தியச் சூழலில்

தொழிற்குழுக்களே சாதியாக இருக்கின்றன என்றார். பிற்பாடு பல்லாயிரம் வருடத்து வரலாறுள்ள சாதி தன்னுடைய ஏற்றத்தாழ்வு மனநிலையை ஒருபோதும் தவறவிடாது என உணர்ந்த காந்தி சாதி அடிப்படையிலான தொழிற்குழுக்கள் தேவையில்லை என்றார். எல்லாசாதியினரும் தங்களை தொழிலாளர்களாக உருவகித்துக்கொள்ளும் ஒரு உற்பத்திமுறை தேவை என்றார்.

காந்தியின் கிராமசுயராஜ்யத்தின் சிறப்பு என்னவென்றால் அங்கே பகிர்வுப்பரவல் [வினியோகம்] மிக எளிமையாகவும் நேரடியாகவும் நடைபெறுகிறது என்பதே. உற்பத்தியும் பகிர்வுப்பரவலும் ஒரே இடத்தில் ஒரே காலத்தில் நிகழ்கின்றன. எது தேவையோ அது மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. உற்பத்திசெய்பவர்கள் நேரடியாக தேவையானவர்களுக்குக் கொடுக்கிறார்கள். ஆகவே பெரிய அளவிலான பண்டப்போக்குவரத்து தேவையில்லை. ஆகவே காந்தி பெரிய அளவிலான போக்குவரத்தை தவிர்க்கவேண்டும் என்றார். ‘உடனடியாக ரயில்கள் தேவையில்லை என்று சொல்லமாட்டேன், ஆனால் அவை இல்லாமலாகும் என்றால் அது நல்லதே’ என்றார்!

இந்த தன்னிறைவுள்ள கிராமங்கள் தங்களை தாங்களே ஆட்சிசெய்கின்றன. அவை வெளியே இருந்து அதிகமாகப் பெறுவதில்லை. ஆகவே அவை அதிகமாகக் கொடுக்கவும் வேண்டியதில்லை. அவை சேர்ந்து ஒட்டுமொத்த ஆட்சியமைப்புகளை உருவாக்கலாம். அத்தகைய ஒரு மைய அமைப்பே காந்தி உருவகித்த மத்திய அரசு. அதற்கு ராணுவமோ காவல்துறையோ உளவமைப்போ தேவையில்லை. அதற்கு பிரம்மாண்டமான ‘அரசு இயந்திரம்’ தேவை இல்லை. ஏனென்றால் அது பெரிய அளவில் எதையும் நிர்வாகம்செய்வதில்லை. ஆகவே அது முற்றிலும் அகிம்சை அரசாக இருக்கும்.

காந்தியின் இந்த கிராமசுயராஜ்யத்தை பற்றி கேட்டதுமே ஒரு ‘நவீன’ மனம் ‘‘என்ன அபத்தம் இது!’ என்றே எதிர்வினை ஆற்றும். தான் வாழ்ந்துகொண்டிருப்பது மிகுந்த தர்க்கபூர்வமான ஓர் உலகில் என்றும் காந்தி ஒரு கிறுக்குக் கனவுலகில் வாழ்ந்து அபத்தங்களைச் சொல்லிக்கொண்டிருந்தார் என்றும் எண்ணும்.

ஆனால் கிராமசுயராஜ்ய கோட்பாட்டை காந்தியப் பொருளாதாரம் என்ற தளத்தில் விரிவடையச்செய்தவரான பொருளியல் மேதை ஜே.சி.குமரப்பா ஒருமுறை சொன்னார், நவீனமனம் ஒரு போதும் தான் வாழும் உலகின் பேரபத்தங்களைப் பார்ப்பதில்லை என. உதாரணமாக பெரும்பாலான நவீன அரசுகள் ஆட்சியமைப்பை தக்கவைத்துக்கொள்ளவும் நடத்திச்செல்லவும்தான் மிகப்பெரும்பாலான பணத்தைச் செலவிடுகின்றன. அரசு இயந்திரம் எதற்காகச் செயல்படுகிறது என்றால் வரி வசூல் மற்றும் நிதி நிர்வாகத்துக்காக. அந்த வரி எதற்காக என்றால் அரசு இயந்திரத்தை செயல்படச்செய்வதற்காக! எவ்வளவு தர்க்கபூர்வமாக இருக்கிறது இல்லையா?

இன்னொரு உதாரணம், இன்றைய நவீன அரசுகள் வளர்ச்சித்திட்டங்களுக்காகச் செலவிடுவதை விட பலமடங்கு ராணுவத்துக்குச் செலவிடுகின்றன. உலகமெங்கும் ராணுவத்துக்குச் செலவிடப்படும் தொகை உலகமெங்கும் உள்ள வறுமையை ஐந்தே வருடங்களில் ஒழித்துவிடும். ஏன் ராணுவத்துக்குப் பணம் செலவிடப்படுகிறது, அமைதிக்காக! ஏன் அமைதி கெடுகிறது, வறுமையினால்!

காந்தியின் கிராமசுயராஜ்யம் என்ற கருதுகோள் வளர்ச்சி, சுதந்திரம் எல்லாவற்றையும் கீழிருந்து, சாதாரண மனிதனில் இருந்து கணக்கிட ஆரம்பிப்பதன் மூலம் உருவாவது. சோஷலிசம் உள்ளிட்ட பிற அரசமைப்புகளின் கருதுகோள்கள் அனைத்துமே வளர்ச்சி, சுதந்திரம் போன்றவற்றை மேலிருந்து, மையத்தில் இருந்து கணக்கிடுகின்றன. கன்யாகுமரி மாவட்டத்தில் ஏரியை தோண்ட டெல்லியில் பணம் அனுமதிக்கப்பட்டு பம்பாய் நிறுவனம் வரவேண்டும் என்ற நிலை யாருக்குச் சாதகமானது? கணக்குகளின்படி தேசம் முன்னேறிக்கொண்டே இருக்கும், பட்டினியும் பெருகிக்கொண்டே இருக்கும் என்பதே இதன் விளைவாகும்.

இங்கே திட்டங்கள் ஒளிவிடத்தான் செய்யும், விளைவுகள் ஒன்றுமிருக்காது. கேரள காந்தியவாதியான பேராசிரியர் எம்.பி.மன்மதன் ஒருமுறை சொன்னார் ‘‘சராசரி இரண்டடி ஆழமுள்ள ஏரியில் நாலடி உயரமுள்ள பசு மூழ்கிச்செத்தது என்றால் இந்த வளர்ச்சிவாதிகள் சண்டைக்கு வருவார்கள். புள்ளிவிவரங்களை எடுத்து வீசுவார்கள்’’

இன்றைய இந்திய தேசியமும் காந்தியும்

காந்தி அன்றைய இந்திய தேசவிடுதலைப்போரில் ஈடுபட்டவர்கள் முன்வைத்த இருவகை தேசிய உருவகத்தையும் திட்டவட்டமாக நிராகரிக்கிறார். 1909ல் காந்தி லண்டனில் வினாயக் தாமோதர் சவார்க்கரை இரண்டாம் முறையாகச் சந்தித்து விரிவான விவாதித்தார். பண்பாட்டு தேசியத்தை முன்வைத்த சாவர்க்கர் ஒரு ராணுவ மைய அரசு இந்தியாவில் அமையவேண்டும் என்ற கனவில் இருந்தார். 1909ல் லண்டனில் அரசுச்செயலர் வில்லியம் கர்ஸான் வைல் [William Curzon-Wyllie] சாவர்க்கரின் மாணவரான மதன்லால் திங்ராவால் கொல்லப்பட்டார். இந்தத் தருணத்தில் லண்டனுக்கு தென்னாப்ரிக்க போராட்டம் குறித்த பேச்சுவார்த்தைக்காக வரும் காந்தி அன்றைய பிரிட்டிஷ் அரசின் கடும் மனகசப்பைப் புறக்கணித்து கண்காணிப்புகள் நடுவே சாவார்க்கரின் நண்பர் சியாம்ஜி கிருஷ்ண வர்மாவின் அறையில் தங்க முடிவெடுத்தார்.

ஏற்கனவே 1906 சாவர்க்கரைச் சந்தித்த போது காந்தி தன்னுடைய அகிம்சைப்போராட்டத்துக்கு அவரை இழுக்க முனறு தோற்றார். 1909ல் வன்முறைப்போராட்டத்துக்கான மனநிலை உச்சநிலையில் காணப்பட்டது. இந்திய தேசிய காங்கிரஸை கைப்பற்றி நேரடிப்புரட்சிக்கு இட்டுச்செல்லும் வழிகள் பேசப்பட்டன. அச்சந்திப்புக்குப் பின்னர் தென்னாப்ரிக்காவுக்கு திரும்பும்போதுதான் கில்டொமான் கேஸில் [[Kildoman Castle] கப்பலில் பயணம் செய்யும்போது காந்தி தன்னுடைய ஹிந்து சுயராஜ்யத்தை எழுதினார். அந்நூல் திட்டவட்டமாகவே சாவர்க்கரின் ஹிந்து மையத்தேசியத்தை நிராகரிப்பது. இந்திய அரசியலில் இன்றுவரை அந்த ஹிந்துமையத்தேசியத்துக்கு எதிராக விளங்கும் அரசியல் நிலைபாடு அந்தப்பயணத்தில் காந்தி உருவாக்கி வாழ்நாள் முன்வைத்ததே. அதற்காகவே அவர் உயிர்த்தியாகமும் செய்தார்.

அதே வீச்சில் காந்தி நேருவின் தாராளவாத அரசுருவகத்தையும் நிராகரிப்பதை நாம் காணலாம். முப்பத்தெட்டு

வருடங்களுக்குப்பின்னர் இந்தியா சுதந்திரத்தை நெருங்கிக்கொண்டிருந்த போது  வருங்கால இந்தியா எப்படி

அமையவேண்டும் என்ற தன் கனவை கிராமசுயராஜ்யம் என்ற அடிப்படையிலேயே காந்தி முன்வைத்தார். காங்கிரஸின் அடுத்தகட்ட தலைவர்கள் கிட்டத்தட்ட அனைவருமே அதற்கு எதிரானவர்கள் என்று காந்தி அறிந்திருந்தார். ஜனநாயகவாதி, மதச்சார்பற்றவர், இலட்சியவாதி என்ற அடிப்படையில் காந்தி நேருவை தன் வாரிசாக முன்னிறுத்தினார். 'என் குரலில் இனி நேரு பேசுவார்' என்ற காந்தியின் வரியே பிறகு நேருவுக்கு அசைக்க முடியாத வலிமையை உருவாக்கி அளித்தது

ஆனால் நேருவுக்கு கிராமசுயராஜ்யம் என்ற திட்டத்தில் இம்மிகூட ஆர்வம் இல்லை என்பதையும் அதை அவர் ஒரு அபத்தமான, கிறுக்குத்தனமான கனவாக மட்டுமே கருதுகிறார் என்றும் காந்தி புரிந்துகொண்டிருந்தார். நேருவின் கனவு பெருந்தொழில்கள், உயர்தொழில்நுட்பம், மையநிர்வாகம் கொண்ட ஒரு தாராளவாத அரசைச் சார்ந்தவையாக இருந்தன. ஆனாலும் காந்தி தன் கிராமசுயராஜ்ய திட்டத்தை சுதந்திரத்துக்குப் பின்னால் உருவாகும் தேச நிர்மாண திட்டத்தில் சேர்ப்பதற்காக நேருவை கேட்டுக்கொண்டார். நேரடியாக விவாதிப்பதை நேரு தவிர்க்கிறார் என்று புரிந்ததும் மீண்டும் மீண்டும் காந்தி நேருவுக்கு அதுகுறித்து கடிதங்கள் அனுப்பினார்.

ஆனால் நேரு விவாதத்துக்கே வரவில்லை. அதில் விவாதிப்பதற்கே ஏதுமில்லை என்றே அவர் எண்ணினார். இந்தியாவுக்குத் தேவையானது பெருமுதலீடு, பெருந்தொழில், பெருந்திட்டங்கள் என்பதில் அவர் ஐயமற்றிருந்தார். அவர்முன் முன்னுதாரணங்களாக ஸ்டாலினின் சோவியத் ருஷ்யாவும் தியோடர் ரூஸ்வெல்ட்டின் அமெரிக்காவும் இருந்தன. காந்தி அவரது இறப்புக்குச் சிலநாட்கள் முன்னால் வரை கிராமசுயராஜ்யத்துக்காக நேருவிடம் வாதாடியதை, ஏன் மன்றாடியதை, நாம் அக்கடிதங்களில் காண்கிறோம். கிராமசுயராஜ்யம் தவிர எந்த ஒரு அமைப்பும் இந்தியாவின் எளிய விவசாயிகளை அன்னியப்படுத்தும் என்றும், அவர்களை பெருமுதலாளிகளிடம் அடிமைப்படுத்தும் என்றும் கடிதங்களில் காந்தி வாதிடுகிறார்.

காந்தி 1948ல் கொல்லப்பட்டது மிகவசதியான ஒரு திருப்பம். அஷிஸ் நந்தி அவரது கட்டுரை ஒன்றில் கோட்ஸே காந்தியை கொன்றாலும்கூட அக்காலகட்டத்தில் வாழ்ந்த பலரது ஆழ்மன விருப்பே அவர் வழியாக நிறைவேறியது என்று சொல்கிறார். நேருவுக்கு அதற்குள்ளாகவே காந்தி ஒரு பெரும்தடையாக மாறிவிட்டிருந்தார். காந்தியின் கைராட்டை, கிராமநிர்மாணம் போன்றவற்றை நேரு எப்போதுமே பெரிதாக எடுத்துக்கொண்டது இல்லை. அவை மக்களை திரட்டுவதில் ஆற்றும் மகத்தான பங்களிப்பைக் கண்டு அவற்றை சகித்துக்கொண்டார் என்றுதான் சொல்லவேண்டும்.

ஆனால் நாடு விடுதலையடையும் தருணத்தில் காந்தி அவரது கிராமசுயராஜ்ய கொள்கைகளை அவ்வளவாக முன்வைக்கமாட்டார் என நேரு நினைத்திருக்கலாம். ஆனால் காந்திக்கு அவரது வாழ்க்கையின் மையப்பணியே அதுவாகத்தான் இருந்தது. நேரு காந்தியை சமாளிக்க முடியாமல் திணறினார். பிற்பாடு கனடாவின் பிரதமராக ஆனவரும் நோபல் பரிசுபெற்ற அமைதிப்பேச்சுவார்த்தையாளருமான லெஸ்டர் பியர்ஸனிடம் [ Lester B. Pearson] நேரு காந்தியை 'கிழட்டு சுயஏமாற்றுக்காரர்' [ Old hypocrite] என்று சொன்னதாக அவர் தன் சுயசரிதையில் குறிப்பிட்டிருப்பதாக லாயிட் ரூடால்ப் அவரது பின் நவீனத்துவ காந்தி என்ற நூலில் சொல்கிறார்.

இருக்கலாம். காந்தி அவரது கடைசிக்காலத்தில் இந்தியப்பிரிவினையின்போது வெடித்துக்கிளம்பிய மாபெரும் வன்முறையைச் சமாளிக்க தன்னுடைய மொத்த கவனத்தையும் திருப்பியமையால்தான் கிராமசுயராஜ்யம் குறித்த காந்தியின் அழுத்தத்தை எதிர்கொள்ளாமல் நேரு தப்ப முடிந்தது. அரசியல் நிர்ணய சபை நடவடிக்கைகள் வலுப்பெறுவதற்குள் காந்தி கொல்லவும்பட்டார். மேலும் சிலவருடங்கள் காந்தி உயிருடன் இருந்திருந்தால் நேருவின் இந்திய உருவாக்கத்துக்கு எதிராக காந்தி உண்ணாவிரதம் இருந்திருப்பார். நேருவால் அதை சமாளிக்க முடிந்திருக்காது. காந்திக்குப் பின்னர் காந்தியப்பொருளாதாரத்தைப் பற்றிப் பேசியவர்களான ஜெ.சி.குமரப்பா போன்றவர்களை நேரு முன்னேற்றத்துக்குத் தடையாக அமையும் முட்டாள்கள், பழமைவாதிகள் என வெறுத்து ஒதுக்கினார்.

நேரு உருவாக்கிய பொருளாதார-சமூகக் கட்டமைப்பு எப்படிப்பட்டது என்பதை விரிவாகவே விவாதிக்கவேண்டும். அவரது கோட்பாடு கலப்புப் பொருளாதாரம் எனப்பட்டது. ஒருபக்கம் பிரசாந்த சந்திர மகாலனோபிஸ் [Prasanta Chandra Mahalanobis] வடிவமைத்த மையப்படுத்தப்பட்ட பொருளியல் மற்றும் சோஷலிச கனவுகள் கொண்ட நலத்திட்டப்பணிகள். மறுபக்கம் தாராளவாத நோக்குள்ள சமூக அரசியல் கட்டமைப்பு. நேருவின் குழப்ப மனநிலையை இது மிகச்சரியாகவே பிரதிநிதித்துவம் செய்தது. நேரு மன அளவில் ஒரு தாராளவாதி. தாராளவாதச் சமூகமே சிறந்த குடியாட்சிமுறையை உருவாக்கும் என நம்பினார். ஆகவே பாராளுமன்ற அரசியல், நிர்வாகம் போன்றவற்றில் தாராளவாதத்தை மேற்கொண்டார்

ஒரு சமூகம் தன்னுடைய உட்கூறுகளின் இயல்பான முரணியக்கத்தால் முன்னகர்வதே தாராளவாதப் பொருளியலின் அடிப்படை. ஆனால் நேரு நேர்மாறான சோவியத் பாணி மையப்பொருளாதார முறையை நம்பினார். மூலதனத்தை குவித்து பெருந்தொழில்களை உருவாக்கினார். அதன் பொருட்டு நேரு அதிகாரம் அனைத்தையும் மையத்தில் குவிக்கும் அரசை வடிவமைத்தார். அதன் விளைவாக அதிகார வர்க்கம் அபரிமிதமான வலிமையைப் பெற்றது. லைசன்ஸ் ராஜ் எனப்படும் அமைப்பு உருவாகியது. அது தாராளவாதத்துக்கே எதிராக அமைந்தது. ஆகவே தாராளாவாத முகம் கொண்ட அதிகாரவர்க்க அரசே அவரால் உருவாக்கப்பட்டது.

நேருவின் கொள்கைகள் காரணமாக சாதகமும் பாதகமுமான விளைவுகள் உருவாயின. இந்தியா சுதந்திரம் அடைந்தபோது மாபெரும் பஞ்சங்களின் பிடியில் இருந்தது. உணவு உற்பத்தி கொஞ்சம்கூட போதாதநிலையில் இருந்தது. நேருவின் பிரம்மாண்டமான பாசனநிர்மாணத்திட்டங்கள் வேளாண்மைநிலத்தைப் பெருக்கி உணவுற்பத்தியை இரட்டிப்பாக்கி உணவுத்தன்னிறைவை உருவாக்கின. நாடு முழுக்க சாலைகள், மின்சாரம்,செய்தித்தொடர்பு போன்ற அடிப்படைக்கட்டுமானங்கள் உருவாயின. இன்று நாம் காணும் நவீன இந்தியாவின் அடித்தளம் நேருவால் உருவாக்கப்பட்டதே.

இந்தியா இன்றும் ஜனநாயக நாடாக திகழ்வதற்கான அடிப்படைகளையும் உருவாக்கியவர் நேருவே. ஜனநாயகத்துக்கான அடிப்படை மனநிலைகளை அவர் தொடர்ச்சியாக முன்வைத்தார். அவரும் அம்பேத்காரும் உருவாக்கிய அரசியல் சட்டம் ஜனநாயகப் பாதுகாப்பு நிறுவனங்களுக்கு சட்டபூர்வமான பாதுகாப்பளித்தது. சுதந்திர இந்தியாவில் அவற்றின் பங்களிப்பு

மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

ஆனால் எதிர்விளைவுகள் பல நேருவின் கலப்புப் பொருளாதாரத்தால் உருவாயின. இந்திய இயற்கைச்செல்வம் நேருவின் காலத்திலேயே மாபெரும் கட்டுமானத்திட்டங்களால் பெருமளவு அழிக்கப்பட்டுவிட்டது. அதன் விளைவுகளை இந்தியா இன்று அனுபவிக்கிறது. கட்டுப்படுத்தப்பட்ட தொழில்துறை நெடுங்காலம் இயல்பான வளர்ச்சி இல்லாமல் தேங்கி நின்றது. விளைவாக பதுக்கல் ,கள்ளவணிகம் , முற்றுரிமை வணிகம் போன்றவை உருவாகி இந்தியப்பொருளாதாரத்தை மேலும் தேங்கச்செய்தன.

அனைத்தையும்விட முக்கியமாக, இந்தியாவில் சுதந்திரத்துக்குப் பின் உருவான அதிகாரிகள்வர்க்கம் இந்நாட்டின் மாபெரும் சாபக்கேடாக இன்றும் நீடிக்கிறது. ஒருபக்கம் அவர்களுக்கு சோஷலிசபாணியில் முற்றதிகாரங்கள் அளிக்கப்பட்டன. மறுபக்கம் அவர்கள் தாராளவாத அரசியலமைப்பில் அதன் சட்டங்களால் பாதுகாக்கப்பட்டார்கள். அதாவது எதையும் செய்யலாமென்ற அதிகாரமும் எதிலிருந்தும் தப்பிவிடலாம் என்ற சுதந்திரமும் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. அவர்கள் மேலிருந்துகொண்டு அடிமட்டம் வரை இந்தியநிர்வாகத்தை முழுமையாகச் சீரழித்து ஊழல்மயமாக்கினார்கள். இன்று இந்தியா சந்திக்கும் மாபெரும் சவாலே இந்தக் கும்பலை எப்படி அகற்றுவது என்பதுதான்.

இந்தவிஷயத்தில் நேருவை திட்டவட்டமாக எச்சரித்தவர் ராஜகோபாலாச்சாரியார். ராஜாஜி தேர்ந்த நிர்வாகி என்று பெயரெடுத்திருந்தும்கூட அதிகாரிகளைக் கட்டுப்படுத்துவதற்காக வாதிட்டார். மைய அதிகாரத்தால் கட்டுப்படுத்தப்படாத சுதந்திரச் சந்தையே அதிகாரிகளின் ஆதிக்கத்தை தடுக்கும் என்று சொன்னார். அதாவது உண்மையான தாராளவாதத்துக்காக கோரினார். அக்கோரிக்கை முற்றாக உதாசீனம் செய்யப்பட்டது.

ஆக, காந்தியின் மறைவுக்குப் பின்னர் இந்தியாவில் உருவானது காந்தி கனவு கண்ட தேசியம் அல்ல. இந்த அரசமைப்பின் வெற்றிகளுக்கும் தோல்விக்கும் நேருவும் அம்பேத்காரும் மகாலானோபிஸும் தான் காரணமானவர்கள். இன்றைய இந்தியா சரியான பொருளில் காந்தி தேசம் அல்ல. 1951ல் இந்திய அரசியல்நிர்ணயசபை அரசியல் சட்ட முன்வரைவை சமர்ப்பித்தபோது அதில் இருந்த காந்தியவாதிகள் ஆழமான அதிருப்தியை அடைந்தார்கள். மகாவீர் தியாகி போன்ற உறுதியான காந்தியவாதிகள் அது காந்தியத்துக்கு கட்டப்பட்ட சமாதி என்றே சொனனர்கள்.

ஆனால் அந்த போக்கு காந்தி இருக்கும்போதே ஆரம்பித்துவிட்டது. 1947ல் இந்திய தேசியக்கொடி வடிவமைக்கப்பட்டபோது முன்னர் இருந்த இந்திய தேசியக்கொடியில் இருந்த கைராட்டை நீக்கம்செய்யப்பட்டு அசோகச் சக்கரமாக ஆக்கப்பட்டது. அது அம்பேத்காரின் விருப்பம் என்று சொல்லப்படுகிறது. ராட்டை நீக்கம்செய்யப்பட்டது காந்தியைப் புண்படுத்தியது. அது இல்லாத கொடியை தன்னால் இந்தியதேசியக்கொடியாக ஏற்கமுடியாது என்றார் அவர். ஆனால் ராட்டையின் சக்கரம்தான் அந்த கொடியில் இருக்கிறது என்று அவரிடம் சாக்குபோக்குதான் சொன்னார்கள்.

இந்திய அரசியல் நிர்ணய சபையில் கிராமசுயராஜ்யம் குறித்த கோரிக்கை எழுந்ததுமே அம்பேத்கார் அதை தீவிரமாக நிராகரித்தார். காந்தியின் கிராமசுயராஜ்யம் என்பது தன்னிறைவு கொண்ட ஒரு நவீன அரசின்மைச் சமூகத்தின் அடிப்படை அலகாக அமையும் கிராமம். ஆனால் அம்பேத்கார் அதை பழைய நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பின் அடிப்படை அலகாக அமையும் கிராமம் என்று எடுத்துக்கொண்டார். மூடநம்பிக்கையும் சாதிவெறியும் பழமைவாதமும் கலந்து தேங்கிநாறும் ஓர் அமைப்பு என அம்பேத்கார் கிராமங்களை எண்ணினார். அவற்றை மையப்படுத்தப்பட்ட உற்பத்திமுறை மூலம் நவீனத்தொழில்நுட்பம் மூலம் உடைத்து வீசவேண்டும் என்று அறைகூவினார். அதுவே நேருவின் கருத்தும். அவர்கள் உருவாக்கிய அரசே இங்கே இன்றும் நீடிக்கிறது.

ஆனால் இந்த தேசத்தின் முகப்படையாளமாக காந்தி இன்றும் நீடிக்கிறார். ஆகவே சாமானியர்கள் இன்றுள்ள இந்திய தேசியத்தின் சிற்பி என்று காந்தியையே எண்ணுகிறார்கள். சாதாரண விவாதங்களில் இன்றுள்ள தேசக்கட்டுமானமும் அரசியல் சூழலும் ‘காந்தி வாங்கிக்கொடுத்த சுதந்திரம்’ என்று பேசபப்டுகிறது. இந்த தேசத்தின் எல்லா சரிவுகளுக்கும், குறைகளுக்கும் அவரே காரணமாக காட்டப்படுகிறார்.

இந்திய தேசியத்தையும் காந்தியையும் வேறுபடுத்திப் பார்ப்பது ஒருவகையில் சாத்தியமில்லைதான். ஆனால் காந்தி கண்ட இந்தியா இதுவல்ல. காந்தியின் இந்தியா அடித்தள மக்களில் இருந்து , நிர்வாகத்தின் கீழ்நுனியில் இருந்து மேலே செல்வதாகும். இன்றைய இந்தியா டெல்லியில் இருந்து கீழே இறங்கி வருகிறது. இந்த தலைகீழ் வேறுபாடு மிகமிக முக்கியமானது.

காந்தி சுதந்திரத்திற்குப் பின் காங்கிரஸ் அடித்தளக் கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் ஓர் அமைப்பாக தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் அரசியல்கட்சியாகச் செயலாற்றக்கூடாது என்றும் சொன்னார். இதை அவர் ‘ஒரு பேச்சுக்காகச்’ சொல்லவில்லை என்பதை வரலாற்றைப் பார்த்தால் தெரிந்துகொள்ளலாம். 1919ல் இந்திய அரசாங்க சட்டம் மூலம் இந்தியர்கள் ஆட்சியில் பங்கெடுக்கும் முறை பரிந்துரைக்கப்பட்டபோது காந்தி அதற்கு எதிராக கிராமநிர்மாண திட்டங்களுக்கு காங்கிரஸை திருப்பினார். அதேபோல 1932ல் வகுப்புவாரி அறிவிக்கைக்குப் பின் தேர்தலரசியல் முன்னேழுந்தபோது அவர் காங்கிரஸை ஹரிஜன இயக்கம் நோக்கி கொண்டுசென்றார்.

காந்தி உருவாக்க எண்ணிய இந்தியாவை தொழில்நுட்பத்துக்கு எதிரானதும் பெருமுலதனக்குவிப்புக்கு எதிரானதும் தனிமனிதர்களின் அகச்சான்றை நம்பி அமைக்கப்பட்டதுமான ஓர் பன்மைச்சமூகம் என்று சொல்லலாம். அதாவது காந்தியின் தேசிய உருவகம் என்பது வருங்காலம் சார்ந்து உருவாக்கப்பட்டது. அதன் இலட்சிய சமூகம் எதிர்காலத்தில்தான் இருந்தது. அந்த இலட்சிய சமூகத்துக்குத்தான் காந்தி ராமராஜ்யம் என்று பெயரிட்டார்.

அந்தப்பெயரை அவர் தன் வைணவ பக்தி மரபில் இருந்து எடுத்துக்கொண்டார். அது அவரது இலட்சியக்கனவின் பெயர் மட்டுமே. மற்றபடி ராமர் காலத்து சமூக அமைப்பை மீண்டும் கொண்டுவரவேண்டும் என்று அவர் சொல்லவில்லை. அச்சமூக

அமைப்பு எப்படி இருக்கும் என்றும் அவர் அறிந்திருக்கவில்லை. அவரது சமூக உருவகம் எந்த தொல்பழங்காலத்தையும் நோக்கி ஏங்குவதாக அமையவில்லை. அது மேலைநாட்டு அறிவுச்சூழலில் பிறந்த அரசின்மைவாதத்தின் அரிய கனிகளில் ஒன்று.

[மேலும்]

---

**காந்திய தேசியம் 5**

இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்தபின்னர் இந்திய அரசியலில் பலவகையான தரப்புகள் உருவாகிவந்தன. பிரிட்டிஷ் ஆட்சிககலத்தில் பிரிட்டிஷாருக்கு ஆதரவாகவும் இந்திய சுதந்திரத்துக்கு எதிராகவும் இருந்த சக்திகள் சுதந்திர இந்தியா அளித்த ஜனநாயக வாய்ப்புகளை பயன்படுத்திக்கொண்டு தேர்தலரசியலில் இறங்கின. அவர்களின் சமூகப்பிளவுவாத, தேசப்பிரிவினைவாதப் பிரச்சாரங்கள் ஜனநாயகத்தில் சிலசமயம் வெற்றியும் பெற்றன. உதாரணம் திராவிட இயக்கம், அகாலி தள் போன்றவை.

இவர்கள் சுதந்திரப்போராட்ட காலத்தில் காந்திக்கும் காங்கிரசுக்கும் எதிராக, பிரிட்டிஷாருக்கு ஆதரவாகச் சொல்லிவந்த அதே வாய்ப்பாடுகளை காங்கிரஸ் என்ற மையக்கட்சிக்கு எதிராகச் சொல்லத்தலைப்பட்டார்கள். காலப்போக்கில் இந்த நோக்கில் சுதந்திரப்போராட்டத்தைப் பற்றி திரிபுபட்ட வரலாறுகளையும் விளக்கங்களையும் எழுதினார்கள். இன்றைய இளைஞனுக்கு கிடைப்பது ஒருபக்கம் அரசாங்கத்தின் பாடப்புத்தக வரலாறு. மறுபக்கம் பிளவுவாதப் பிரச்சாரம். இவற்றுக்கு நடுவே வரலாற்றை நடுநிலையுடன் பார்ப்பதற்கான வெளியே இந்தியச் சூழலில் இல்லை.

இந்த இரு தரப்பாலும் இந்தியதேசியம் என்பது இன்றுள்ள இந்திய அரசாங்க அமைப்பின் கருத்தியலாக முன்வைக்கப்படுகிறது. இந்திய அரசாங்கம் என்பது இந்தியதேசியத்தின் மீது அமைந்திருக்கிறது என்பது உண்மை. ஆனால் இந்திய தேசியம் என்பது அது அல்ல. அது இந்த தேசத்தின் மக்களின் மனநிலையில் உள்ளது. அந்த மக்களில் பெரும்பாலானவர்களின் மனநிலையில் தேசம் என்ற கருத்து நீடிக்கும் வரை அது இருக்கும். அந்த அகவயமான கருத்துநிலையே இந்திய தேசியமாகும்.

அந்த தேசியப்பிரக்ஞையின் நேரடியான வடிவம் அல்ல இந்திய அரசு என்பது. எந்த ஒரு அரசும் அந்த மக்களின் நேரடியான பிரதிநிதி அல்ல. அந்த மக்களின் தேசியப்பிரக்ஞை அந்த அரசை உருவாக்கும் சக்திகளில் ஒன்று என்று மட்டுமே சொல்ல முடியும். அந்த மக்கள் அரசியல் பிரக்ஞையும் ஜனநாயக விழிப்புணர்வும் ஒற்றுமையும் கொண்டவர்களாக இருந்தால் மட்டுமே அந்த தேசியபிரக்ஞை அவர்களின் அரசாங்கத்தை உருவாக்குவதில் தீர்மானிக்கும் பங்களிப்பைச் செலுத்த முடியும். இல்லையேல் அது பலவீனமான ஒரு தரப்பாகவே எஞ்சும்

இந்தியாவில் உள்ள பொருளியல் அதிகார மையங்கள், பல்வேறு வெளிநாட்டுச் செல்வாக்குகள் ஆகியவற்றுடன் இந்திய

மக்களின் தேசியப்பிரக்ஞையும் பங்குபெறும் ஒரு பெரிய முரணியக்கத்தின் சமரசப்புள்ளியே இந்தியாவின் அரசமைப்பு. அது இந்திய தேசியத்தின் முகமாகக் காட்டப்படுகிறது அவ்வளவுதான். இந்திய மக்களின் மனதில் உள்ள இந்திய தேசியம் என்பது அவர்களின் எதிர்பார்ப்புகளும் கனவுகளும் கலந்த ஒன்று.

அது என்ன என்பதை இந்தியாவின் பண்பாட்டுப்பின்புலத்தில், வரலாற்றுத் தொடர்ச்சியில், இன்றைய இந்தியாவின் இலட்சியங்களில் தான் தேட வேண்டும். ஆனால் அதற்கு முன் இந்திய தேசியத்தைப்பற்றி நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் எதிர்மறைப் பிம்பங்களை பார்ப்போம்.

இந்திய தேசியம் யாருக்கு எதிரி?

இந்தியாவின் நவீனத் தேசிய உருவாக்கத்தின் வரலாற்றைப் பார்க்கும் ஒரு நடுநிலையான ஆய்வாளர் அது பல்வேறு படிநிலைகள் வழியாக வளர்ந்து வந்திருப்பதைப் பார்ப்பார். இந்திய பக்தி இயக்கத்தின் கடைசியில் அந்த இயக்கத்தின் இன்றியமையாத நீட்சியாக இந்து சீர்திருத்த/ மறுமலர்ச்சி இயக்கங்கள் உருவாகிவந்தன. தன்னுடைய கட்டுரை ஒன்றில் யூஆர்.அனந்தமூர்த்தி பக்தி இயக்கத்துக்கும் சீர்திருத்த இயக்கத்துக்கும் உள்ள உறவென்பது ராமகிருஷ்ண பரம ஹம்சருக்கும் விவேகானந்தருக்குமான உறவு என்கிறார்.

இந்துமதச் சீர்திருத்த இயக்கங்கள்தான் இந்தியா ஒரு கலாச்சாரதேசம் என்பதை தர்க்கரீதியாக முன்வைத்தவை. இந்த நாடு அரசியல்ரீதியாக பொருளியல்ரீதியாக தனிநாடுகளாக இருந்தாலும் பல்லாயிரம் வருடங்களாக ஒரே பண்பாட்டுக்கட்டமைப்பாக இருந்துவருகிறது, ஆகவே இதை ஒரு தேசியம் என்றே சொல்ல வேண்டும் என்று அவை கண்டடைந்தன. ஆரம்பகால இந்து மதச்சீர்த்திருத்தவாதிகள் அனைவருமே தங்கள் எழுத்துக்களில் அதை வலுவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அதுவல்லாமல் இன்று சிலர் கூறுவதுபோல இந்திய தேசியம் என்பது பிரிட்டிஷ்காரர்களின் உருவாக்கம் அல்ல. பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் இருந்த பல தனித்தேசங்கள் மீது ஒட்டுமொத்தமான ஒரு மேலாதிக்கமாக இருந்ததே ஒழிய நாற்பத்தேழில் இந்தியாவை விட்டுச்செல்வதுவரை பிரிட்டிஷார் இந்தியாவை ஒரே அரசியல் அமைப்பாகவோ, ஒரே பொருளாதார அமைப்பாகவோ, ஏன் ஒரே நிர்வாக அமைப்பாகவோ கூட ஆக்கவில்லை என்பது மிகச்சாதாரணமாக எவரும் வாசித்தறியக்கூடிய உண்மை. உதாரணமாக திருவிதாங்கூர் பிரிட்டிஷாருக்குக் கப்பம் கட்டியதே ஒழிய மற்றபடி ஒரு தனி அரசியல்,பொருளியல் தேசமாகவே சுதந்திரம் வரை நீடித்தது. அப்படி பற்பல சம்ஸ்தானங்கள் இருந்தன. அதைத்தவிர பிரெஞ்சு, போர்ச்சுக்கல் பகுதிகள் தனி அரசியல்தேசங்களாகவே நீடித்தன.

இந்தியாவை ஒரு தேசமாக கடைசிவரை பிரிட்டிஷார் ஒத்துக்கொள்ளவுமில்லை. பிரிட்டிஷார் காங்கிரஸுடன் நடத்திய எல்லா சர்ச்சைகளிலும் இந்தியா என்பது ஒரே தேசமல்ல, ஆகவே காங்கிரஸ் இந்திய தேசத்தை பிரதிநிதிகரிக்கவில்லை என்றே வாதிடுவதைக் காணலாம். 1947ல் பிரிட்டிஷார் இந்தியாவை விட்டுவிட்டுச் செல்லும்போதுகூட இந்தியாவை தனித்தேசங்களாகவே விட்டுச்சென்றார்கள். இந்தியாவின் எந்த ஒரு தேசத்துக்கும் தனியாகப்போகும் உரிமை உண்டு என்ற நிபந்தனையை வைத்தே அதிகாரத்தைக் கொடுத்தார்கள். இந்தியாவின் தனிநாடுகள் ஒருபோதும் ஒரு ஒற்றைத் தேசியமாக ஆக ஒத்துக்கொள்ளாது என்றும் ஆகவே இந்தியா போரிட்டு அழியும் என்றும் நினைத்தார்கள்.

ஆனால் பிரிட்டிஷாரை அதிர்ச்சி கொள்ளவைத்தபடி ஓரிரு மாதங்களில் இந்தியா ஒரே தேசமாக ஆகியது. அதற்கு பெரிய படையெடுப்புகளோ போர்களோ தேவையாக இருக்கவில்லை. இந்தியாவெங்கும் பல்வேறு சம்ஸ்தானங்களில் இருந்த மக்கள் அந்தந்த அரசர்களுக்கு எதிராகத் திரண்டு போராடி இந்தியாவை ஒரே தேசமாக ஆக்கினார்கள். ஆனால் இந்தியா ஒரே தேசமாக ஆனபின் இந்தியா என்ற தேசியத்தை நிகழ்த்தியது தாங்களே என வெள்ளையர்களின் வரலாற்றாசிரியர்கள் சொல்ல ஆரம்பித்தார்கள்.

இதேமோசடிதான் இஸ்லாமிய வரலாற்றாசிரியர்களும் செய்வது. இந்தியா ஒரே தேசமல்ல என்று அவர்கள் நாற்பத்தேழு வரை வாதிட்டார்கள். அதன் அடிப்படையிலேயே அவர்கள் தனிநாடு கோரினார்கள். ஹைதராபாத் போன்ற இஸ்லாமிய சம்ஸ்தானங்கள் தனிநாடுகள் என்றார்கள். இந்தியா பல நாடுகளாகச் சிதறும் என்று எழுதினார்கள். மாறாக இந்தியா வலுவான ஒரே நாடாக இணைந்தபோது அந்த இணைப்பை அக்பர் நடத்தினாரா, இல்லை ஷெர்ஷா நடத்தினாரா, இல்லை முகமதுகோரியே செய்துவிட்டாரா என்ற விவாதங்களில் ஈடுபடுகிறார்கள்.

இந்தியாவை பட்டேல் எப்படி ஒற்றுமைப்படுத்தினார்? ராணுவ வல்லமை மூலம் அல்ல. ஒப்புநோக்க அந்தப் பெரும்பணிக்கு மிகமிகக் குறைவாகவே படைபலம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அன்று இந்திய சம்ஸ்தானங்கள் இந்திய மைய அரசுக்கு எதிராகப் போரை தொடுத்திருக்க முடியுமா? முடியும், அந்த அரசுக்குள் இருந்த மக்கள் அந்த அரசுகளை ஆதரித்திருந்தால். தேசப்பிரிவினையின் விளைவான மதப்பிரிவினையால் அன்றைய பிரிட்டிஷ் இந்திய ராணுவம் பலவீனமாக இருந்தது. அதன் முக்கியமான வெள்ளைய தளபதிகள் வெளியேறிவிட்டிருந்தார்கள். மக்களாதரவுடன் சம்ஸ்தானங்கள் போரிட்டிருந்தால் இந்திய அரசு தாக்குபிடித்திருக்காது.

பட்டேலுக்கு உதவியப் பெரும் சக்தி அந்தந்த சம்ஸ்தானங்களில் இருந்த மக்கள்தான். அவர்கள் ஏற்கனவே காங்கிரஸால் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் ஏற்கனவே ஒரு தேசமாக இருந்தார்கள். தனிநாடு கோரிய திருவிதாங்கூர் திவான் சி.பி.ராமசாமி அய்யரை மக்களே மூக்கை வெட்டி துரத்திவிட்டார்கள். ஐதராபாதில், கோவாவில் இணைப்புக்குத் தயங்கிய எல்லா சம்ஸ்தானங்களிலும் மக்களியக்கம் எழுந்துதான் இணைப்பை சாத்தியமாக்கியது.

ஆக இந்தியாவை ஒரு தேசமாக ஆக்கிய சக்திகள் இரண்டு. ஒன்று , பல்லாயிரம் வருடங்களாக இங்கே இருந்து வந்த பண்பாட்டுத்தேசியத்தின் அடித்தளம். இரண்டு அதை அடையாளம் கண்டுகொண்டு ஒரு அகில இந்திய இயக்கமாக முன்னெடுத்த இந்து சீர்திருத்த இயக்கங்கள், அவற்றின் விளைவாக உருவான இந்திய மறுமலர்ச்சி. அவற்றில் இருந்தே காங்கிரஸ் தன்னுடைய தேசிய உருவகத்தை பெற்றுக்கொண்டது.

இந்தியாவில் இருந்த, இன்றும் இருக்கும், இந்தப் பண்பாட்டுத்தேசிய உருவகத்தை அபத்தமாக மறுக்கும் வாதங்கள் எழுதிக் குவிக்கப்படுகின்றன. மார்க்ஸிய அறிஞரான கெசச்சிதானந்தன் எனக்களித்த பேட்டியில் இதை வரலாற்று ரீதியாகவே மறுக்கிறார். 'இந்தியாவில் உருவான எந்த ஒரு இயக்கமும் இந்தியாவைத்தழுவி விரிவதாகவே இருந்தது. வைதிக மதம், சமணபௌத்த மதங்கள், பக்தி இயக்கம், இந்து சீர்திருத்த இயக்கங்கள், இந்திய தேசவிடுதலை இயக்கம். அது மட்டுமல்ல, இடதுசாரி எழுச்சி, நக்சலைட் எழுச்சி, தலித் எழுச்சி போன்றவையும் 'பான் இண்டியன்' தன்மை கொண்டவையே' என்றார் அவர்

விவேகானந்தர் நடத்திய பவிராஜக யாத்திரை இமயம் முதல் கன்யாகுமரி வரை நீண்டது. அதில் உள்ளடங்கியிருப்பது ஒரு இந்திய பண்பாட்டுத்தேசிய மனவரைபடம். அதே பயணத்தை பன்னிரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் ஆதிசங்கரர் இங்கிருந்து வடக்கே நோக்கி நடத்தினார். அந்த வரைபடம் எப்போதுமே இந்தியாவில் இருந்தது. அதை அரசியல் வரைபடமாக மாற்றியது இந்துசீர்திருத்த இயக்கங்களும் காங்கிரஸும் என்று சொல்லலாம்.

வேடிக்கை என்னவென்றால், இந்தியா எப்போதுமே ஒரு தேசமாக இருந்ததில்லை என்று சொல்பவர்கள் தமிழகம் மட்டும் ஒரு தேசமாக இருந்தது என்பார்கள்! தமிழகம் மட்டுமல்ல இந்தியாவின் எந்த மாநிலமும் உறுதியான அரசியல் தேசியமாக இருந்ததில்லை என்பதே வரலாற்று உண்மை. இந்திய அரசியல் தேசியம் உருவானதற்கான வரலாற்றுக்காரணம் ஒன்றே ஒன்றுதான். பல்லாயிரம் வருடங்களாக மக்கள் இடம்பெயர்ந்து ஒருவரொடொருவர் கலந்து இந்த நிலப்பகுதியில் வாழ்கிறார்கள். அவர்கள் ஏற்கனவே ஓர் ஒற்றைச் சமூகமாகவே இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் இணைந்து வாழ வழிவகைசெய்யும் ஒரு தேச உருவகமே மோதலைத்தடுத்து அவர்களை முன்னேற்றப்பாதையில் இட்டுச்செல்லும். .

இந்த தேசிய உருவகம் இங்குள்ள இந்த இன்றியமையாமையில் இருந்து எழுந்தது. இங்குள்ள மக்களுக்கு மேலான ஒருவாழ்க்கை தேவை என்ற பெரும் கனவில் இருந்து எழுந்தது. ஆகவே ஒற்றுமை, புரிந்துணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் அது காங்கிரஸாலும் காந்தியாலும் நவீனத்தேசியமாக உருவாக்கப்பட்டது. பட்டேலாலும் அம்பேத்காராலும் அது நிகழ்த்தப்பட்டது.

இது ஒற்றைத்தேசியமல்ல என்று விடாமல் கூறிவந்தனர் அன்றைய பிரிட்டிஷ் வரலாற்றறிஞர்களும் பிரிட்டிஷ் அரசும். இந்த தேசத்துக்குள் தேசங்களை கண்டுபிடித்து தனித்தனியே அவற்றை வளர்க்க முற்பட்டனர். முஸ்லீம்களையும் சீக்கியர்களையும் தனித்தேசங்கள் என்றனர். தலித்துக்கள் தனித்தேசம் என்றனர். கூர்க்காக்கள் தனித்தேசம் என்றனர். அந்த பிரிவினைப்போக்குகளை இந்தியாவின் கலாச்சார ஒற்றுமையை வைத்தே எதிர்கொண்டது காங்கிரஸ்.

முஸ்லீம்கள் தனித்தேசக்கொள்கையை முன்னெடுத்து இந்த நிலப்பகுதியை பிரித்தனர். ஆனால் அவர்களில் பெரும்பகுதியினர் இன்றும் இந்த நிலத்தில் இந்த தேசியத்திற்குள்தான் வாழ்கிறார்கள். ஒருவேளை நாளை ஒரு தமிழ்த்தேசியம் அமைந்தாலும் அவர்கள் அதற்குள்தான் வாழ்ந்தாகவேண்டும். இதுவே அவர்கள் ஒரு தனித்தேசியம் என்ற கோரிக்கை எத்தனை அபத்தமானது என்பதற்கான ஆதாரம். ஆனால் இன்றும்கூட முஸ்லீம் வரலாற்றாசிரியர்கள் அந்த தனித்தேசியக் கோரிக்கையில் இருந்த முட்டாள்தனத்தை ஒப்புக்கொள்வதில்லை. அதன் மூலம் நிகழ்ந்த மானுட அழிவுக்குப் பொறுப்பேற்பதில்லை. வழக்கம் போல அந்தப்பழியையும் காந்திதலையில் போட்டுவிடுகிறார்கள். எவ்வளவு அறுபுதமான தலை! பூமி மாதிரி, எதையும் தாங்கும்!

அதேபோல திராவிட இனவாதம் இங்கே ஒரு பிரிவினைத்தேசியமாக முன்வைக்கப்பட்டது. அந்த வாதத்தின் அபத்தம் சில வருடங்களுக்குள் வெளிவந்தது. திராவிடர்கள் என அவர்கள் சுட்டிய கன்னடர்களோ தெலுங்கர்களோ மலையாளிகளோ அதை இம்மியும் பொருட்படுத்தவில்லை. உடனே அது மொழித்தேசியமாக உருமாற்றம் செய்யப்பட்டது. தமிழ்பேசும் மக்கள் ஒருகோடிப்பேர் இந்தியா முழுக்க உள்ளார்கள். தமிழ்நாட்டு மக்களில் குறைந்தது நான்கு கோடிப்பேர் தமிழ் பேசுபவர்கள் அல்ல. அவர்களை அன்னியப்படுத்தமல் தமிழ்த்தேசியம் நிலைநிற்காது. ஆகவே ஒரு மாபெரும் மானுட அவலத்தையே மொழித்தேசியம் உத்தேசிக்கிறது என்பது வெளிப்படை.

இன்றைய இந்தியாவில் ஆக முற்போக்கான, ஆக நடைமுறைச் சாத்தியம் கொண்ட, ஆக மானுடநேயம் கொண்ட தேசிய உருவகம் என்பது நவீன இந்திய தேசியம்தான். அது இந்துக்கள், முஸ்லீம்கள்,சீக்கியர்கள்,கிறித்தவர்கள் உட்பட அனைவரையும் அரவணைத்துக்கொள்வதாகவே உருவகிக்கப்பட்டிருக்கிறது. எவரையும் இரண்டாம் குடிமக்களாக

ஆக்கும்படியாக அதன் கோட்பாட்டுக் கட்டமைப்பு இல்லை. எவரையும் அது மேலாகவோ கீழாகவோ நிறுத்தவில்லை. அதன் ஜனநாயக அமைப்புக்குள் தன் வலிமையைத் திரட்டிக்கொள்ளும் எந்த ஒரு சமூகமும் அதன் அதிகாரத்தை அடையமுடியும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது, மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்படுகிறது.

இதற்கு மாற்றாக முன்வைக்கப்படும் தேசியங்கள் இனவாத, மதவாத, மொழிவாத ஃபாசிஸக் கோட்பாடுகளை தங்கள்

அடிப்படைக் கட்டமைப்பாகக் கொண்டவையாகவே உள்ளன. அவை தங்களுக்குள் உள்ள ஒரு பெரும்பகுதி மக்களை 'பிறர்' ஆக பார்ப்பவை. அவர்களை இரண்டாம்குடிமக்களாக உருவகித்துக்கொள்பவை. எந்தவகையான ஜனநாயக அடிப்படையும் இல்லாதவை.

இதற்குக் காரணம் நவீன இந்திய தேசியம் என்பது காந்தியாலும் நேருவாலும் வளர்த்து இன்றைய நிலைக்கு கொண்டுவரப்பட்டது என்பதே. அவர்கள் எந்த இன, மொழி, மத அடிப்படையிலும் அந்த தேசியத்தை உருவகிக்கவில்லை. அவர்களின் ஒட்டுமொத்த எழுத்திலும் அவர்கள் 'பிறனை' உருவகிப்பதை நாம் பார்க்க முடியாது.மீண்டும் மீண்டும் ஒத்துப்போவதைப்பற்றி விட்டுக்கொடுப்பதைப்பற்றி சேர்ந்து இயங்குவதைப்பற்றி மட்டுமே அவர்கள் பேசுகிறார்கள். இறந்தகாலத்தின் கனவில் இருந்து அவர்கள் தங்கள் தேசிய உருவகத்தை அடையவில்லை வரும்காலம் குறித்த இலட்சியத்தில் இருந்து அடைந்தார்கள்.

காந்தி உருவகித்த எதிர்கால இலட்சியத்தை நேரு பெரும்பாலும் நிராகரித்தார். ஆனால் அவர் காந்தியிடம் இருந்து பெற்றுக்கொண்டது ஒற்றுமையையும் விட்டுக்கொடுத்தலையும் ஜனநாயகத்தையும் தன் அடிப்படை விதிகளாகக் கொண்ட ஒரு தேசிய உருவகத்தைத்தான். நேரு காந்தி சொன்னதற்கு மாறாக மையநிர்வாகம்கொண்ட தாராளவாத அரசு ஒன்றை அமைத்திருக்கலாம். ஆனால் அவரது அரசு அதன் எந்த நிலையிலும் ஒரு ஜனநாயக அமைப்பாக மட்டுமே இருந்தது.

இந்திய தேசபிரிவினைக்குப் பின்னர் இஸ்லாமியர் மீது இந்தியாவில் இருந்த கசப்பு வளராமல் தடுத்தவர் நேரு. இஸ்லாமியர் தங்கள் தேசப்பற்றை நிரூபிக்கவேண்டும் என்று பட்டேல் எண்ணினார், ஏனென்றால் பாகிஸ்தான் பிரிவினையை ஆதரித்து முஸ்லீம்லீகுக்கு வாக்களித்த கோடிக்கணக்கான தென்னக மக்கள் பாகிஸ்தானுக்குச் செல்லாமல் இங்கேதான் இருந்தார்கள். ஆனால் நேரு இந்தநாடு அவர்களுக்கும் உரியதே என்றார். அவர்களையும் உள்ளடக்கியதே தன்னுடைய தேச உருவகம் என்றார் அவர். இன்றும் அதுவே நீடிக்கிறது.

ஆனால் தேசத்தைப்பிளந்து ரத்த ஆறை ஓடவிட்ட சில வருடங்கள் கூட ஆகாத நிலையில் மீண்டும் தன்னை ஒருங்கிணைத்துக்கொண்ட முஸ்லீம் லீக் அமைப்பு இந்திய அரசு என்பது ஓர் இந்து அரசு, இது பார்ப்பன-பனியா தேசியம், இதற்குள் நாங்கள் இணையமுடியாது என்று மீண்டும் பேச ஆரம்பித்தது. அப்போதுகூட நேரு அவர்கள் தங்கள் நலன்களுக்காக இணைந்து போராடும் உரிமையை அளிக்கும் ஒரு நவீனத்தேசியத்தையே தான் உருவகிப்பதாகச் சொன்னார். அவர்கள் மத அடிப்படையில் திரள்வார்கள் என்றால் அதுவும்கூட தன் தேசிய உருவகத்துக்குள் ஏற்றுக்கொள்ளத்தக்கதே என்றார். அதற்கிணையான இன்னொரு முற்போக்குத்தேசியம் இந்த மண்ணில் இன்றுவரை முன்வைக்கப்படவில்லை என்பதே வரலாற்று யதார்த்தம். பதிலுக்கு அந்த நேருவை இந்துவெறியர் என்றார்கள் அவர்கள்!

நேரு உருவாக்கிய அந்த தேசியம்தான் உலகின் எந்த ஒரு நாட்டிலும் இன்றுவரை உருவானதிலேயே ஆகச்சிறந்த அணைத்துப்போகும் தன்மை கொண்டது. அமெரிக்க தேசியத்தைவிட, பிரிட்டிஷ் தேசியத்தைவிட ! சட்டபூர்வமாகவும், நடைமுறையிலும், அடிப்படை மனநிலையிலும்.ஐயமிருக்கும் எவரும் உலக வரலாற்றை மேலோட்டமாகவேனும் புரட்டிப்பார்க்கலாம். அந்த தேசியத்தை விமரிசிக்கும் பிரிவினை-பிளவுவாதச் சக்திகளே காந்தியும் நேருவும் உருவாக்கிய தேசிய உருவகத்தைப் பற்றிய அவதூறுகளைக் கிளப்புகின்றன. அவற்றின் மொழி, இன அடிப்படைவாத பிளவுக்கருத்தியலுக்கு இந்திய தேசியம் எதிரியாகத் தெரிவதில் எந்த ஐயமும் இல்லை. அவை பிளவுபடுத்த நினைப்பவற்றை இந்திய தேசியம் ஒருங்கிணைக்கிறது.

மிகச்சிறந்த ஓர் உதாரணம், கண்முன் நடந்தது. இந்தியாவில் பேசப்படும் தமிழ்த்தேசியவாதத்தின் நீட்சியே இலங்கையில் ஈழத்தேசியமாக உருவாகியது. அந்தத் தேசியம் ஒரு குறைந்தபட்ச ஆட்சியதிகாரத்தை அடைந்தபோது அதனால் இஸ்லாமியர்களை உள்ளே வைத்துக்கொள்ள முடியவில்லை. அது இஸ்லாமியரை முழுக்க ஒட்டுமொத்தமாக அகதிகளாக விரட்டி அடித்தது. அந்தச் செயலை தமிழகத்து தமிழ்த்தேசியர்கள் மிக மிக இயல்பாக, தவிர்க்கமுடியாத ஒன்றாக எடுத்துக்கொண்டார்கள் என்பதையும் நாம் கண்டோம்.

அந்த பிளவுபடுத்தும் தேசியத்திற்கும் இந்திய தேசியத்திற்கும் இடையே ஒரு எளிய ஒப்பீட்டை நடத்தினால்கூட எது முற்போக்கானது என்பது எவருக்கும் தெரியும். இன்றும் இரு பாகிஸ்தான் போர்களுக்குப் பின்பு, ஏராளமான தீவிரவாதச் செயல்பாடுகளுக்குப் பின்பு, இந்திய அரசையும் இந்திய தேசியத்தையும் அவை தங்கள் அரசும் தங்கள் தேசியமும் அல்ல என்றும் தாங்கள் ஒரு இஸ்லாமிய அரசின் கீழ் மட்டுமே வாழமுடியும் என்றும் இஸ்லாமிய அமைப்புகளில் கணிசமானவை மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டிருக்கும் நிலையிலும்கூட, இந்திய தேசிய உருவகம் என்பது இஸ்லாமியர்களை உள்ளடக்கியதாகத்தான் நீடிக்கிறது.

அந்தத் தேசிய உருவகம் முழுமையானது என்றோ, பிழைகள் அற்றது என்றோ சொல்லவில்லை. ஆனால் இதை விட மேலான, இதைவிட முற்போக்கான, இதைவிடச்சிறப்பான ஜனநாய அடிப்படையும் ஒருங்கிணைக்கும் வல்லமையும் கொண்ட ஒரு தேசிய உருவகத்தை நாம் கனவுகாணலாம், அதற்காகப் போராடலாம். ஆனால் இந்த தேசியத்துக்கு மாற்றாக இன்று முன்வைக்கப்படும் பிரிவினைத்தேசியங்கள் எல்லாமே இன்னும் பழங்காலத்தை நோக்கி திரும்பி அமர்ந்து சென்ற பொற்காலங்களைப்பற்றிய கனவுகளை அசைபோடும் பழமைவாத தேசியங்கள். நூற்றாண்டுகளாக தங்களுடன் வாழும் மக்களில் பாதியினை அன்னியப்படுத்தும் ஃபாஸிச தேசியங்கள்.

இன்னும் வேடிக்கை என்னவென்றால், இந்த ஃபாஸிச பிரிவினைத்தேசியங்கள் இந்திய தேசியத்தில் எதையெல்லாம் குறைகளாகச் சொல்கிறார்களோ அதையெல்லாம் இவர்களேதான் உருவாக்கினார்கள் என்பதே. ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் முன்வைக்கும் இந்திய தேசியத்துக்கு எதிராக அவநம்பிக்கைகளையும் எல்லைக்கசப்புகளையும் வளர்த்தவர்கள் இவர்களே. இப்போது இவர்களே அவற்றைச் சுட்டி இந்தியா ஒரு தேசமல்ல என்கிறார்கள்!

*காந்திய தேசியம் 6*

*இந்திய தேசியத்தை காந்தியின் உருவாக்கமாக முன்வைப்பவர்கள் அதை பல்வேறு வகையாக முத்திரை குத்த காந்தியை தங்களுக்கு ஏற்றாற்போல் அவதூறுசெய்கிறார்கள். இன்று இந்தியாவில் பிறந்த ஓர் இளைஞன் சாதாரணமாக காந்தியைப்பற்றியும் இந்தியாவைப்பற்றியும் இந்த அவதூறுகளையே அதிகமும் கேட்டிருப்பான். அவற்றை அவன் நம்புவதற்கான காரணம் அவன் இளைஞன் என்பதே. பள்ளிக்கூட வரலாற்றுக்கு மாற்றாக எது சொல்லிக்கொடுக்கப்பட்டாலும் அவன் நம்புவான் என்பதே. அப்போதுதானே அவன் புரட்சிக்காரன் ஆக முடியும்?*

*மிகக்குறைவானவர்களே வரலாற்றுப் பின்னணியில் அந்த அவதூறுகளை வைத்து அவற்றின் பெறுமதியை ஆராய்கிறார்கள். அதற்கு ஓர் அடிப்படை வாசிப்பும் வாழ்க்கை சார்ந்த பார்வையும் தேவை. அந்த முதிர்ச்சி நிலை வருவதற்குள் பெரும்பாலானவர்கள் வாசிப்பையும் அரசியல் விவாதங்களையும் நிறுத்திவிடுகிறார்கள். லௌகீக வாழ்க்கையில் அமைந்தும் விடுகிறார்கள். ஆனால் அந்த இளமைப்பருவ மனப்பிம்பங்களை வாழ்நாள் முழுக்கத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருப்பார்கள்.*

*பார்ப்பன-பனியா தேசியமா?*

*இந்திய சுதந்திரப்போராட்ட அரசியலில் ஒவ்வொரு தரப்பும் மறுதரப்பை அன்னிய ஆட்சியின் கைக்கூலிகள் என்று குற்றம் சாட்டியிருக்கிறது. ஹிந்துமகாசபை டாக்டர் மூஞ்சேயின் தலைமையில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஒத்துழைத்து காங்கிரஸை அழிக்கும் முயற்சிகளுக்கு உதவும் சக்தியாக நெடுங்காலம் செயல்பட்டிருக்கிறது. அதைச்சுட்டிக்காட்டும் காங்கிரஸார் சாவார்க்கர் அனுபவித்த நெடுங்காலக் கொடும் சிறைவாசத்தை மறைத்துவிடுவார்கள். சமீப காலமாக சாவார்க்கரே பிரிட்டிஷாருக்கு மன்னிப்புகடிதம் எழுதிக்கொடுத்த துரோகிதான் என இடதுசாரி அரசியல்வாதிகள் சொன்னார்கள்.*

*அதேபோல கம்யூனிஸ்டுகள் இரண்டாம் உலகப்போரில் பாசிச சக்திகள் ஒடுக்கப்படவேண்டும் என்ற சர்வதேச நோக்கில் இந்திய தேசிய காங்கிரஸின் கடைசிக்கட்டப் போராட்டங்களை எதிர்த்து பிரிட்டிஷாருடன் ஒத்துழைத்தார்கள். ஆகவே அவர்கள் தேசத்துரோகிகள் என்று கம்யூனிச எதிர்ப்பாளர்கள் பலகாலமாகச் சொல்லிவந்தார்கள். கம்யூனிஸ்டுத்தலைவர்களில் பலர் நெடுங்காலம் இந்திய சுதந்திரப்போராட்டத்தின் முன்னணி வீரர்களாக இருந்தவர்கள் என்ற உண்மை அங்கே பேசப்படவில்லை.*

*காங்கிரஸும் காந்தியும் மேலே சொன்ன இரு தரப்பாலும் இதே போல முத்திரை குத்தப்பட்டன. இந்துமகாசபை மற்றும் அதன் வழித்தோன்றல்கள் காந்தியை இந்தியாவில் உருவாகவிருந்த ஷத்ரிய புரட்சியை தவிர்ப்பதற்காக தென்னாப்ரிக்காவில் இருந்து வெள்ளையரால் கொண்டுவரப்பட்ட ஐந்தாம்படையாகச் சித்தரித்தன. இன்று அக்கருத்தில் இருந்து அவர்களில் ஒரு தரப்பினர் பின்வாங்கியிருக்கிறார்கள்.*

*அதேபோல கம்யூனிஸ்டுகள் இந்தியாவில் உருவாகவிருந்த சோஷலிச மக்கள்புரட்சியை மழுங்கடிக்க பிரிட்டிஷாருடன் இணைந்துகொண்டு ஐந்தாமபடை வேலை செய்தவர் என்று காந்தியைச் சித்தரித்தார்கள். இடதுசாரிகளின் முக்கியமான சிந்தனையாளர்கள் எவரும் இந்தவகையில் சித்தரிக்கவில்லை என்றாலும் கணிசமான பக்கங்கள் இந்நோக்கில் எழுதப்பட்டிருக்கிறது.*

*ஆனால் காந்தியைப்பற்றிய மிகக்கசப்பான விமரிசனத்தை முன்வைத்தது முஸ்லீம்லீக்தான். காந்தி உருவாக்குவது 'பார்ப்பன-பனியா' தேசியம் என்ற வரியை முதன்முதலில் உருவாக்கியவர் பாகிஸ்தான் போராட்டத்தை முன்னெடுத்த ஜின்னா. இந்த வரியை அவர் மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டிருந்தார். இன்றும் பாகிஸ்தானிய ஊடகங்கள் அவ்வரியையே ஒட்டுமொத்த இந்தியாவைப்பற்றிச் சொல்லும்போதும் குறிப்பிடுகின்றன.  அந்த வரியை அக்காலத்திலேயே தெற்கே இருந்த திராவிட இயக்கங்கள் கடன் வாங்கின. இன்றும் தமிழகத்தில் ஒருதரப்பினர் அவ்வரியை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.*

*ஏன் 'பார்ப்பன-பனியா' என்ற சொல்இணைப்பு உருவாக்கப்பட்டது? ஜின்னாவின் காலகட்டத்திலும் சரி, அதற்கு முன்பும் சரி, இந்திய தேசிய காங்கிரஸ் இந்தியாவின் எல்லா தரப்பினரும் பங்கொள்ளும் ஒரு பொதுமேடையாகவே இருந்தது. பல்லாயிரம் பேதங்கள் கொண்ட இந்தியாவை பிரதிநிதிகரிக்கும் ஓர் அமைப்பு எப்படி இருக்குமோ அப்படித்தான் அது எப்போதும் இருந்தது.  அதனுள்ளிந்தியாவின் சமூகத் தரப்புகள் அனைத்துக்கும் பிரதிநிதிகள் இருந்தனர். அவர்களுக்குள் ஓயாத போராட்டமும் பூசலும் இருந்தது. மகத்தான இணைக்கும் சக்தியாக காந்தி இருந்தபோதும் சரி, உருக்குபோன்ற சர்வாதிகாரத்துடன் இந்திரா காந்தி இருந்தபோதும் சரி ,கோஷ்டிச்சண்டை இல்லாமல் காங்கிரஸ் இல்லை. ஆகவே அது ஒரு இயல்பான வெளிப்பாடு என்றே சொல்லவேண்டியிருக்கிறது*

*இந்தியச் சுதந்திரப்போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் பிராமணர்கள். அவர்களே ஆங்கிலக் கல்விக்குள் சென்றவர்கள். நவீன உலகசிந்தனையுடனும் ஐரோப்பிய தேசியவாதத்துடனும் அறிமுகம் பெற்றவர்கள். ஆகவே இந்துமதச் சீர்திருத்தம், இந்திய கலையிலக்கிய மறுமலர்ச்சி, இந்திய தேசியப்போராட்டம் மூன்றிலும் அவர்களே முன்னோடிகள். உதாரணமாக, மலையாளம் தவிர இந்தியாவின் எந்த மொழியை எடுத்துக்கொண்டாலும் அந்த மொழியின் இலக்கிய மறுமலர்ச்சி என்பது பிராமணர்களால்தான் தொடங்கப்பட்டிருக்கும். பின்னர் இடைநிலை உயர்சாதிகள் அதில் பங்கெடுத்திருப்பார்கள் எழுபதுகளுக்குப்பின்னர் பிற்படுத்தப்பட்டவர்கள். எண்பது தொண்ணூறுகளுக்குப் பின்னர் தலித்துக்கள். இதுவே இந்திய சமூக வளர்ச்சியின் வரைபடம். காங்கிரஸ் , கம்யூனிஸ்டுக் கட்சி போன்றவற்றின் வளர்ச்சியின் வரைபடமும் இதுவே.*

காங்கிரஸின் இரண்டாம் கட்டத்தில் பிராமணரல்லாத சாதியினர் அதிகளவில் உள்ளே வந்தனர். அச்சாதிகளில் பனியாக்கள் மிகமிக குறைவு, அனேகமாக இல்லை என்றே சொல்லவேண்டும். ஆனால் மற்ற பிராமணரல்லாத சாதிகளை பொதுவாக வைசிய அந்தஸ்துள்ள சாதிகள் என்று சொல்லலாம். வணிகம் செய்பவர்களல்ல என்றாலும் படிநிலையால் இவர்களை வைசியர்கள் என்றும் ஆகவே பனியா என்றும் சொன்னோமென்றால் காங்கிரஸின் எல்லா செயல்பாடுகளையும் பார்ப்பனர்கள் X பனியாக்கள் என்றே பிரிக்கவேண்டியிருக்கும்.

காங்கிரசுக்குள் பிராமணர்களுக்கும் இரண்டாம் நிலைச்சாதியினருக்கும் இடையேயான முரணியக்கம் எப்போதுமே வலுவாக இருந்துகொண்டிருந்தது. இரு தனிப்பிரிவுகளாக வெளிப்படையாக பிரிந்து இவர்கள் மோதிக்கொள்ளவில்லை என்றாலும் எங்கும் இந்த மோதல் உறைந்திருந்தது. இதனுடன் வேறு பல பிரிவினைகளும் போட்டிகளும் கலந்துகொண்டன.

இச்சூழலில்தான் காங்கிரசுக்குள் இஸ்லாமியரின் இடத்தைப்பற்றி பார்க்க வேண்டும். 1908 முதலே முஸ்லீம்களை காங்கிரஸில் இருந்தும் ஒட்டுமொத்தமாக பிற இந்திய சமூகத்தில் இருந்தும் பிரிப்பதில் பிரிட்டிஷ் ஆட்சி வெற்றி பெற்றிருந்தது. அவர்களுக்கு தனித்தேர்தல் முறை அளிக்கப்பட்டு அவர்கள் பொதுத்தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லை. அவர்களின் தலைமையை அவர்களே தேர்வுசெய்தார்கள். அதாவது இந்தியாவின் அரசியல் போராட்டத்தில் அவர்கள் எவ்வகையிலும் பங்களிக்க வைக்கப்படவில்லை.

அன்றைய தேர்தலில் அனைவருக்கும் வாக்குரிமை இல்லை. சொத்துரிமை கொண்டவர்களுக்கே வாக்கு. ஆகவே அன்றைய பிரிட்டிஷ் ஆட்சிக்குக் கீழே இருந்த முஸ்லீம்களில் பத்து சதவீதம் பேருக்குக் கூட ஓட்டுரிமை இல்லை. பிரிட்டிஷ் ஆட்சிக்குக் கீழே வராத சம்ஸ்தானங்களில் அந்த ஓட்டுரிமையும் இல்லை. ஆகவே அன்றைய அரசியலதிகாரம் என்பது இஸ்லாமிய உயர்குடியினர் பிரிட்டிஷ் ஆட்சியின் தயவுடன் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாகவே இருந்தது. அன்றைய இஸ்லாமியத்தலைவர்களைப் பார்த்தால் அவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியுடன் ஒத்துச் செயல்பட்ட முஸ்லீம் மன்னர்கள் அல்லது பிரபுக்கள் என்பதைக் காணலாம்.

காந்தியின் காங்கிரஸ் இஸ்லாமிய எளிய மக்களை அரசியல்படுத்தி அவர்களை தன்னுள் கொண்டுவருவதை இந்த இஸ்லாமிய உயர்குடித்தலைமை அச்சத்துடன் கவனித்துக்கொண்டிருந்தது. கிலாஃபத் இயக்கம்தான் இந்தியாவில் உருவான முதல் இஸ்லாமிய வெகுமக்கள் அரசியலியக்கம். அதில் இருந்த எளிய மக்களின் பங்களிப்பு காந்தியைக் கவர்ந்திருக்கலாம். அதன்மூலம் அம்மக்களை அரசியல்படுத்தவும் இந்து முஸ்லீம் ஒற்றுமையை உருவாக்கவும் முடியும் என்று அவர் எண்ணியிருக்கலாம். ஆகவே அவர் அதனுடன் காங்கிரஸ் ஒத்துச்செயல்படச்செய்தார்.

காந்தியின் நோக்கம் நிறைவேறியிருந்தால் லட்சக்கணக்கான முஸ்லீம்கள் காங்கிரஸுக்குள் வந்திருப்பார்கள். அங்கே ஏற்கனவே இருந்த அதிகார முரணியக்கத்தில் அவர்களும் ஒரு புதிய தரப்பாக ஆகியிருப்பார்கள். ஒட்டுமொத்த அதிகாரம் அந்த முரணியக்கத்தின் சமரசப்புள்ளியாக உருவாகி வந்திருக்கும். காங்கிரஸின் அதிகாரமையத்தில் ஒரு பகுதியாக அவர்கள் இருந்திருப்பார்கள். அதுவே ஜனநாயகத்தின் இயல்பான வழிமுறை.

அது நடக்கவில்லை. கிலாஃபத் இயக்கம் இஸ்லாமிய மதத்தலைவர்களை அரசியலுக்குள் இழுத்துவந்தது. இஸ்லாமிய அரசியல் என்பது முல்லா அரசியலாக ஆகியது. எளிய முஸ்லீம்கள் புதிய அரசியல் அடையாளங்களை அடைவதற்குப் பதிலாக ஏற்கனவே இருந்த மத அடையாளத்தை எடுத்துக்கொண்டு பொதுவெளிக்கு வந்தார்கள்.

ஐயத்துடன் இந்த அடித்தள எழுச்சியை கவனித்துக்கொண்டிருந்த முஸ்லீம் மேல்தட்டு அரசியல்வாதிகள் சட்டென்று ஒரு அதிகார சூத்திரத்தைக் கண்டுகொண்டார்கள். அத்தனை எளிய மக்களையும் தங்கள் கீழ் ஆவேசமாக அணிவகுக்கச் செய்யும் மந்திரம். அதுவே இஸ்லாமிய தேசியம். கோட் சூட் அணிந்துகொண்டு, வறுத்த பன்றியுடன் ஸ்காட்ச் சாப்பிட்டு, மசூதிக்கு

போவதை ஆங்கிலத்தில் பகடி பேசி வாழ்ந்தவர்கள் அந்த இஸ்லாமியத் தலைவர்கள். ஆனால் சட்டென்று அவர்கள் மதக்காவலர்களாக உருமாறினார்கள்.

கிலாஃபத் இயக்கம் காங்கிரசுக்குள் ஏராளமான இஸ்லாமியர்களைக் கொண்டுவந்தது. கடைசிவரை காங்கிரஸின் இஸ்லாமிய பிரிவாக இருந்தவர்கள் பெரும்பாலும் அப்போது வந்தவர்களே. அவர்களை காங்கிரஸில் இருந்து அன்னியப்படுத்தவும் எளிய முஸ்லீம்களை காங்கிரஸை எதிரியாக எண்ணச்செய்யவும் ஒரு கோஷமாக உருவாக்கப்பட்டதே பார்ப்பன-பனியா தேசியம் என்ற கோஷம். திரும்பத்திரும்ப இந்த கோஷத்தைச் சொல்வதன் மூலம் தங்கள் தரப்பில் அதை ஒரு வலுவான நம்பிக்கையாக ஆக்கினார்கள்.

அந்த கோஷம் மூலம் காங்கிரசுக்குள் இருந்த ஒன்றுக்கொன்று முரண்பட்ட சக்திகளை எல்லாம் சேர்த்து ஒரே தரப்பாக மாற்றிவிட்டார்கள். இவ்வாறு ஒரு வலுவான ஒற்றை எதிரியைக் கட்டமைக்காமல் இஸ்லாமியரால் அரசியல் ரீதியாக ஒன்றுதிரள முடியாது. ஏனென்றால் காங்கிரஸுக்குள் இருந்ததை விட மிகப்பெரிய சமூகப்பிரிவினைகள், அரசியல் பிரிவினைகள், பொருளாதார ஏற்றதாழ்வுகள் முஸ்லீம்களிடம் இருந்தன. காங்கிரஸ் என்ற பார்ப்பன- பனியா இந்து சக்தி தங்களை விழுங்கிவிடும் என்ற அச்சத்தை மத அடையாளத்தை சுமந்த எளிய முஸ்லீம்களிடம் சொல்லி அவர்களை தங்கள்கீழ் திரட்ட முஸ்லீம் உயர்குடியினரால் முடிந்தது. அதுவே பாகிஸ்தான் பிரிவினைக்கு வழியமைத்தது.

காங்கிரசின் உள்முரண்பாடுகளை நாம் எளிமையாக வகுத்துக்கொள்ளவே முடியாது. ஏற்கனவே சொன்னது போல அது இந்திய உள்முரண்பாடுகளின் சரியான பிரதிநிதியாக இருந்தது. பிராமணர்- பிராமணர் அல்லாத வைசிய,சூத்திர சாதிகள் என்ற ஒரு முரணியக்கம் இருந்தது. வடக்கு- தெற்கு என்ற ஒரு முரணியக்கம் இருந்தது. இந்திபேசுவோர் -அல்லாதோர் என்ற ஒரு முரணியக்கமும் இருந்தது. காங்கிரசுக்குள் இருந்த எந்த ஒரு அரசியல் செயல்பாட்டையும் இந்த அனைத்துவகையான முரணியக்கங்களும் சிக்கலான வகையில் ஒன்றுடன் ஒன்று ஊடுருவுவதன் மூலம் நிகழ்வதாகவே எடுத்துக்கொள்ள முடியும்.

ஒரு பனியாவாக காந்தி காங்கிரசுக்குள் இருந்த பிராமணர்களின் எதிர்ப்பைச் சந்தித்துக்கொண்டே இருந்தார். அவரது உண்ணாவிரதங்கள் பல அவர்களுக்கு எதிரானவை. அதேசமயம் பிராமணரான நேருவை அவர் முன்னிறுத்தினார், அது அந்த பிராமண எதிர்ப்பை சமாளிக்கும் ஓர் உத்தி என்று சொல்பவர்கள் உண்டு. நேருவுக்கு எதிராக எழுந்த வைசியர்-சூத்திரர் தலைவரான சுபாஷ் சந்திர போஸுக்கு எதிராக காந்தியுடன் நின்றவர் முக்கியமான வைசிய -சூத்திரதலைவரான வல்லபாய் படேல். அதாவது காங்கிரசையும் சரி அதன் உள்முரண்பாடுகளையும் சரி எளிமைப்படுத்தவே முடியாது.

ஜின்னா அந்த எளிமைப்படுத்தலைச் செய்து பாகிஸ்தானை அடைந்தார். ஆனால் அந்த எளிமைப்படுத்தப்பட்ட பொது எதிரி என்ற உத்தி அதற்குமேல் ஒரு தேச உருவாக்கத்துக்குக் கைகொடுக்கவில்லை. அங்கே அவரால் ஒரு தேசிய சமூகத்தை உருவாக்க முடியவில்லை. ஜின்னாவின் முஸ்லீம் லீக் ஒரு பொதுத்தேர்தலைக்கூட சந்திக்காத செயற்கையான அரசியல் இயக்கமாகவே இருந்தது, இருக்கிறது. ஆப்கானிய எல்லைமாகாண பூசல்கள், கிழக்குபாகிஸ்தான் பிரிவினை, சிந்து கலவரங்கள், இப்போது ஸ்வாத் பள்ளத்தாக்குப் போர் என உள்நாட்டுப்போர் நடக்காத காலமே பாகிஸ்தானில் இருந்ததில்லை. இஸ்லாமியர்களில் இருந்த கோடானுகோடி அடித்தளமக்கள் இன்றும்கூட எவ்வகையிலான ஜனநாயகமயமாக்கலும் இல்லாமல் மேல்தட்டினரால் ஆளப்படுகிறார்கள்.

இன்றும்கூட பாகிஸ்தானில் செல்லுபடியாகக்கூடிய ஒரே அரசியல் இணைப்புசக்தியாக இருப்பது இந்திய எதிர்ப்பு என்ற எதிர்மறை மனநிலை மட்டுமே. அதாவது அதே பார்ப்பன -பனியா கோஷம் தான். ஆனால் அது இன்றைய நவீன உலகின் சிக்கல்களை எதிர்கொள்ள போதுமானதாக இல்லை. ஒவ்வொரு தரப்பும் தங்கள் அதிகாரத்தைக் கோருகின்றன அங்கே. வெறுப்பில் பிறந்த தேசம் அந்த வெறுப்புக்கான விலையை ஒவ்வொருநாளும் கொடுத்துக்கொண்டே இருக்கிறது.

பாகிஸ்தானியவாதிகளிடம் இருந்துதான் திராவிட இயக்கம் பார்ப்பன-பனியா கோரிக்கையைக் கடன் கொண்டது. திராவிட இயக்கத்தின் வேர்களை ஆராய்ந்தால் நாம் ஜஸ்டிஸ் கட்சிக்குச் சென்று சேர்வோம். பிரிட்டிஷ் ஆட்சியின் பதவிகளில் பங்குகோரி பிராமணர் அல்லாத உயர்சாதியினரால் உருவாக்கப்பட்ட இயக்கம் அது. இந்தியர்களுக்கு ஒருவகை போலியான பிராந்திய தன்னாட்சியை பிரிட்டிஷ் அரசு வழங்கியபோது அதை அடைவதற்காக அரசியல் கட்சியாக அது உருவாகியது. கிட்டத்தட்ட முஸ்லீம்தலைவர்களைப்போல அதுவும் பிரிட்டிஷாரை ஆதரித்த உயர்மட்ட பிரமுகர்களால் ஆனது.

கிட்டத்தட்ட முஸ்லீம் லீகின் பாணியிலேயே திராவிட இயக்கமும் நகர்வதைக் காணலாம். காங்கிரஸ் கோடிக்கணக்கான அடித்தள மக்களை அரசியல்படுத்தி தன்னுள் இழுத்துக்கொள்வதை அவர்கள் பார்க்கிறார்கள். காங்கிரஸில் இருந்து பிற்படுத்தப்பட்ட மக்களை பிரித்து தங்களுக்குக் கீழே நிறுத்திக்கொள்ள வேண்டும் என்ற ஆசையினால் காங்கிரஸை பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எதிரான சக்தி என்று எளிமைப்படுத்த பார்ப்பன-பனியா என்ற கோஷத்தை அவர்களும் முழங்க ஆரம்பித்தார்கள்.

இன்றுவரை விவாதிக்கப்படாத பல கோணங்கள் இதில் உள்ளன. வடநாட்டில் பனியாக்கள் என்ன செய்தார்களோ, எந்த சமூக இடத்தில் இருந்தார்களோ, அந்த இடத்தில் இருந்தவர்களான முதலியார்கள், செட்டியார்கள், நாயர்கள், வேளாளர்கள் போன்றவர்களே திராவிட இயக்கத்தின் முன்னோடிச்சாதிகள். இவர்கள் தங்களை வைசியர்கள் என்று சொல்லிக்கொண்டவர்கள். இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்புகளில் அவ்வாறு தங்களை அடையாளப்படுத்திக்கொள்ள இயக்கம் நடத்தியவர்கள். தமிழக வேளாளர்களும் கேரளாநாயர்களும் பிரிட்டிஷ் கணக்கெடுப்புகளில் தங்களை வைசியர்கள் என்று சொல்லிக்கொள்வதைக் காணலாம். வெள்ளக்கால் சுப்ரமணிய முதலியார், மனோன்மணியம் சுந்தரனார் போன்றவர்கள் அந்த வைசிய அடையாளக்கோரலைப்பற்றி நிறைய எழுதியிருக்கிறார்கள். அதாவது 'வட இந்திய பனியா கெட்டவன், ஆகவே பிற்படுத்தப்பட்டவர்களே வந்து தென்னிந்திய பனியாக்களாகிய எங்களின் கீழ் அணிவகுத்து நில்லுங்கள்' என்ற கோஷம்தான் திராவிட இயக்கத்தின் தொடக்கம்.

முஸ்லீம்களுக்கு மதம் என்ற ஒற்றுமைப்படுத்தும் சக்தி இருந்தது. அதேபோல இனத்தை முன்னிறுத்த முடியுமா என்ற

சோதனைதான் திராவிட இனவாதத்தின் எழுச்சிக்குக் காரணமாக அமைந்தது. ஏற்கனவே கால்டுவெல்லில் இருந்து எடுக்கப்பட்டு மனோன்மணியம் சுந்தரனார் போன்றவர்களால் ஒரு சிறிய வட்டத்துக்குள் பேசப்பட்ட கருத்து அது. ஒரு தேசிய உருவகமாக முன்வைப்பதற்கான ஆய்வடிப்படையோ தர்க்கபூர்வத்தன்மையோ அதற்கு இருக்கவில்லை. ஆனால் மதவாதம்போலவே இனவாதமும் எளிமையாக பேதங்களை உருவாக்கும் என்ற நம்பிக்கையுடன் அது தேசியக்கருத்தாக்கமாக உருவாக்கபட்டது. உருவான சில வருடங்களுக்குள்ளாகவே அது நடைமுறையில் கைவிடப்பட்டது. இனவாதம் அப்படியே மொழிவாதமாக ஆக்கப்பட்டது.

திராவிட இயக்கத்தின் பிறவிக்கான காரணமாகச் சொல்லப்படுவது வகுப்புவாரி பிரதிநிதித்துவத்துக்கான ஈ.வேரா அவர்களின் கோரிக்கை காங்கிரசால் மறுக்கப்பட்டமையே. காங்கிரஸின் தேசிய நிலைபாடுகள் அக்காலத்தில் தெளிவாகவே இருந்திருக்கின்றன. உயர்மட்டத்துக்கு மட்டுமே வாக்குரிமை அளித்து தன் ஆதிக்கத்துக்குக் கீழே வெள்ளையர் நடத்திய தேர்தல்கள், மாகாண ஆட்சி எதையுமே காங்கிரஸ் ஏற்றுக்கொண்டதில்லை. மிண்டோ மார்லி சீர்திருத்தம், மண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம், சைமன் கமிஷன் அனைத்தையும் காங்கிரஸ் நிராகரித்திருக்கிறது. பின்னர் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் பேரில் மிகமிகக் குறைவான காலம் மட்டுமே காங்கிரஸ் அவ்வாட்சியில் இருந்திருக்கிறது. காங்கிரஸ் கோரியது முழுமையான தன்னாட்சி, அனைவருக்குமான வாக்குரிமையின் அடிப்படையிலான ஜனநாயகம். அந்தப்போராட்டத்தை பிளவுபடுத்தும் கோரிக்கையாகவே அது வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை பார்த்தது.

உண்மையில் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை காங்கிரசின் போராட்ட வல்லமையை பிளக்கும் முயற்சியாக பிரிட்டிஷார்தான் கொண்டுவந்தார்கள். அவர்களின் அடிவருடிகளால்தான் அது பேசப்பட்டது. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வந்திருந்தால்கூட நில உரிமையில்லாதவர்களும் வரிகட்டாதவர்களுமான அன்றைய பிற்படுத்தப்பட்டோரில் பத்து சதவீதம்பேர்கூட வாக்களிக்க முடிந்திருக்காது என்பதும், அதன் பயன்களைப்பெற்று தமிழக வைசியர்களின் உயர்குடிகளில் சிலர் பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்குக் கீழே மாகாண சபைகளில் சென்று அமர்ந்திருப்பார்கள் என்பதும்தான் உண்மை. அப்படியானால் ஈ.வேரா கோரிய அந்த வகுப்புவாரிக்கோரிக்கை யாருடைய நலனுக்காக?

பிற்படுத்தப்பட்டோருக்கு உண்மையான ஆட்சியதிகாரம் என்பது இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்தபின்பு அரசியல் நிர்ணயசபை கூடி உருவாக்கிய அரசியல் சட்டத்தில் வயதுவந்த அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டபோதுதான் சாத்தியமாகியது. அதைச் செய்தது காங்கிரஸ். இன்று இந்தியா முழுக்க வலுவாக உருவாகியிருக்கும் பிற்படுத்தப்பட்டோர் அதிகாரம் என்பது எந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வழியாகவும் உருவானதல்ல, வயதுவந்தோர் வாக்குரிமை மூலம் மட்டுமே உருவானது. தமிழகத்து பனியாக்களின் கையில் இருந்து அதிகாரம் தமிழகத்து பிற்படுத்தப்பட்டோர் கைகளுக்குச் சென்றதும் காங்கிரஸ் அளித்த வயதுவந்தோர் வாக்குரிமை வழியாகவே.

இந்தியாவின் மக்கள்தொகையின் பெரும்பகுதி பிற்படுத்தப்பட்டவர்கள் என்றும், வயதுவந்தோர் வாக்குரிமை அவர்களுக்கே அதிகாரத்தை அளிக்கும் என்றும் தெரிந்துதான் 'பார்ப்பன-பனியா' காங்கிரஸ் அச்சட்டத்தைக் கொண்டுவந்தது. 1953ல் லக்னோவில் பேசிய நேரு அதை திட்டவட்டமாகவே சொல்கிறார், இந்தியச் சுதந்திரப்போரை வழிநடத்தியது உயர்சாதியினராக இருந்தாலும் வரும்காலத்தில் அதிகாரம் பிற்படுத்தப்பட்டோர் கைக்குச் செல்லும் என்றும் அதுவே எண்ணிக்கையடிப்படையிலான ஜனநாயகம் என்றும் அவர் சொன்னார்.

தமிழகத்தில் ஈ.வேரா அவர்கள் செய்தது போல பிற்படுத்தப்பட்டோர் உரிமைக்காக பிரிட்டிஷ்காரர்களை ஆதரிக்கும் இயக்கம் எதுவும் பிற இந்திய மாநிலங்களில் நிகழவில்லை. அங்கே காங்கிரஸ் உருவாக்கிய அனைவருக்கும் வாக்குரிமையளிக்கும் ஜனநாயகம் மூலமே பிற்படுத்தப்பட்டோருக்கான அதிகாரம் கைவந்தது. ஆகவே தமிழகத்துப் பிற்படுத்தப்பட்டோருக்கு ஈ.வேரா அரசியலதிகாரம் பெற்றுத்தந்தார் என்பதெல்லாம் வெறும் வரலாற்றுப்பிரமைகள் மட்டுமே.

ஒருபேச்சுக்காக இந்தியா முழுக்க ஈ.வேராக்கள் கிளம்பி பிரிட்டிஷ்காரர்களை ஆதரித்திருந்தால் இந்தியாவுக்கு தன்னரசும் வந்திருக்காது வயதுவந்தோர் வாக்குரிமையும் வந்திருக்காது பிற்படுத்தப்பட்டோர் அதிகாரமும் சாத்தியமாகியிருக்காது. ஈ.வேராவால் பிற்படுத்தப்பட்டோருக்கு அதிகாரம் கிடைக்கவில்லை, அவரைமீறி கிடைத்தது என்றே சொல்லவேண்டும். காங்கிரஸ் பார்ப்பன பனியா அரசியலைந் அடத்தியது என்ற வாதத்தை முன்வைப்பவர்கள் அந்த 'பார்ப்பன-பனியா தேசியம்' மூலம் தமிழகத்தில் அதிகாரத்துக்கு வந்தவர்தான் காமராஜ் என்பதை மறந்துவிடுகிறார்கள். அவர் ஜஸ்டிஸ் கட்சியாக இருந்து தமிழக அதிகாரத்தை கையாண்ட 'தமிழக பனியா'க்களை வெளியேதள்ளித்தான் அந்த அதிகாரத்தை அடைந்தார்.

பார்ப்பன-பனியா தேசியத்தையே காந்தி உருவாக்கினார் என்பது சொல்லப்பட்ட ஒரு திரிபுவாதப் பிரச்சாரம். அது தமிழகத்து பனியாக்கள் தங்கள் அரசியலதிகாரத்துக்காக பிற்படுத்தப்பட்டோரை காங்கிரஸில் இருந்து பிரிப்பதற்காக முஸ்லீம்லீகிடம் இருந்து எடுத்தாண்ட ஓர் எளிமைவாதம் அல்லது அவதூறு மட்டுமே.

Statue of Mahatma Gandhi at Gandhi National Memorial, Aga Khan Palace, Pune, India. Picture taken - 29th March. 2009.

**தரகு முதலாளித்துவ தேசியமா?**

ஐம்பதுகளில் பி.டி. ரணதிவே உருவாக்கிய சொல்லாட்சி இது. இந்திய தேசியம் உண்மையானதல்ல என்றும், இது இந்தியாவில் இருந்த முதலாளிகளின் நலனுக்காக உருவாக்கப்பட்டது என்றும் அவர் சொன்னார். காங்கிரஸ்காரர்கள் பிரிட்டிஷார் இருந்தபோது அவர்களுடன் ஒத்துழைத்து முதலாளிகளுக்கு தரகுவேலைசெய்து பொருளியல் அதிகாரத்தை அடைந்தவர்கள் என்றும், சுதந்திரம் முதலாளிகளுக்கே வாங்கிக்கொடுக்கப்பட்டது என்றும் அவர் வாதிட்டார்.

அதன்பின் இச்சொல்லாட்சியை இடதுசாரிகள் அனைவருமே மாறி மாறிப் பயன்படுத்துகிறார்கள். இந்திய தேசியத்தை தங்கள் கோட்பாட்டு நோக்கில் வரையறை செய்துகொண்டு அதை தங்களுக்கு உகந்த முறையில் மாற்றியமைக்கும்படியான போராட்டங்களில் ஈடுபடுவதற்கு இந்திய இடதுசாரிகளுக்கு அனைத்து உரிமையும் உண்டு. ஆனால் அவர்கள் முன்வைக்கும்

சித்திரம் அவர்களின் பிரச்சாரத்தரப்பு அன்றி வரலாறு அல்ல.

இவர்களால் சொல்லப்பட்ட முக்கியமான குற்றச்சாட்டு என்னவென்றால் காந்தி இந்தியாவின் பெருமுதலாளிகளுடன் நெருக்கமாக இருந்தார், அவர்களிடம் நிதி பெற்றுக்கொண்டார், அவர்கள் வீட்டில் தங்கினார், ஆகவே அவர் இந்தியப்பெருமுதலாளிகளின் ஆள், அவர் பெற்றுத்தந்த தேசியம் என்பது அவர்களின் நலனுக்கானதே என்பதுதான். இவர்களில் ஒருசாரார் அதை மேலும் உச்சபடுத்தி காந்தியை அரசியலுக்குக் கொண்டுவந்ததே அவர்கள்தான் என்கிறார்கள்.

இங்கே சொல்ல வேண்டிய விஷயம் என்னவென்றால் காந்தி தன்னை புரட்சிக்காரர் என்று சொல்லிக்கொண்டவரல்ல என்பதே. அவருக்கு மார்க்சியம் ஏற்புடையதாகவும் இருக்கவில்லை. அவர் எதையுமே ரகசியமாகச் செய்யவும் இல்லை. ஆகவே அவரது திட்டங்கள் மட்டும் ரகசியமானவை என்று சொல்வதைப்போல அபத்தம் எதுவும் இல்லை. அவரது பொருளியல் திட்டங்கள் அவராலேயே விரிவாகவே எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றை ஒட்டியே அவர் அனைத்தையும் முற்றிலும் வெளிப்படையாகச் செய்தார். அவர் என்ன எண்ணினார் என்ன செய்தார் என்பதை அவரது எழுத்துக்களையும் செயலையும் ஒட்டி முடிவுசெய்வதே முறை.

காந்தியின் சமூகப்பொருளியல் சித்தாந்தம் அவருக்குப்பின் ஜெ.சி.குமரப்பா போன்றோராலும் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. காந்தி தனியுடைமைக்கு முற்றாக எதிரானவர் அல்ல. தனியுடைமை பேராசையாக ஆக்கக்கூடாது என்று சொன்னவர் மட்டுமே. அவர் என்றுமே முதலாளிகளுக்கு எதிராக தொழிலாளர்கள் கிளர்ந்தெழவேண்டும் என்றும் முதலாளிவர்க்கத்தையே தொழிலாளர் அழிக்க வேண்டும் என்றும் சொன்னவரல்ல. மாறாக அந்த பிரிவினையை, அதில் உறைந்துள்ள வன்முறையை ஓர் அழிவுச்சக்தியாக மட்டுமே கண்டவர்.

காந்திக்கு 'தேசிய முதலாளிகள்' மீது நம்பிக்கை இருந்தது. இந்தியாவின் பொருளியல் வளர்ச்சிக்கு அவர்களால் பெரும்பங்களிப்பாற்ற முடியும் என்று அவர் நம்பினார். மக்களை ஒருங்கிணைக்கவும் அமைப்புகளை உருவாக்கி நிர்வாகம்செய்யவும் திறனுள்ள தேசிய முதலாளிகள் ஏராளமாக உருவாகி வரவேண்டும் என்று அவர் சொன்னார். அவர்கள் தொழில்நுட்பம் சார்ந்து இயங்காமல் மனிதர்களைச் சார்ந்து இயங்கவேண்டும் என்றும், அவர்களின் உபரிச் செல்வத்தை மேலும் முதலீடுகளாகவும் அறச்செயல்பாடுகளாகவும் மட்டுமே அவர்கள் ஆக்கவேண்டும் என்றும் சொன்னார்.

காந்தி முதலாளிகளுக்குச் சொன்ன வழிகாட்டல் தர்மகர்த்தா முறை எனப்படுகிறது. தங்கள் சொத்துக்களுக்கு முதலாளிகள் அறங்காவலர்களாக மட்டுமே இருக்கவேண்டும் என்றும், அந்தச் சொத்துக்களை அவர்கள் சுயலாபத்துக்காகச் வழிகளில் செலவிடலாகாது என்றும் சொன்னார். இது அப்படியே புராதன சமண சமயம் அதன் வணிகர்களுக்குச் சொன்ன அறிவுரைதான்.

முதலாளிகள் என்றாலே சமூகத்தின் தீய சக்திகள் என்ற எண்ணம் கொண்டவர்கள் தங்கள் பாணியில் போகட்டும். பிறர் காந்தி சொன்னவற்றின் நடைமுறைத்தன்மையையும் இன்றும் நீடிக்கும் அதன் பொருத்தப்பாடையும் குறித்து சிந்திக்கலாம். அவை அனைத்தும் சரி என்றும் , காந்தி காட்டிய பொன்வழி என்றும் சொல்லவரவில்லை. அது அவர் அன்றைய சூழலில் முன்வைத்த ஒரு கருத்துநிலை. அதற்கு அவர் உண்மையாக வெளிப்படையாக இருந்தார். அதுவே சிந்தனைக்கும் பரிசீலனைக்கும் உரியது.

முதலில் பேசவேண்டியது, இன்று இடதுசாரிகளின் ஒரே முன்னுதாரண தேசமான சீனா தேசியமுதலாளிகள் என்ற கோட்பாட்டை தன்னுடைய அதிகாரபூர்வ கொள்கையாகவே அறிவித்துச் செயல்பட்டு வருகிறது என்பதேமாவோவின் இடதுசாரிப்புரட்சிக்குப்பின்னர் முதலாளிகளை கொன்றே ஒழித்து, அதன்பின்னர் சிறுவணிகர்களை முழுக்கக் கொன்றொழித்து, அதன் பின் நில உடமையாளர்களைக் கொன்றொழித்து, அவ்வாறாக இன்றைய சீன அரசின் கணக்குப்படியே கிட்டத்தட்ட ஒருகோடி மானுட உயிர்களை பலிகொடுத்து சீனா அதன் பொதுவுடைமை அமைப்பை உருவாக்கிக் கொண்டது.

அது உழைப்பாளர்களும், ட்பாட்டாளர்களும் ,ஆட்சியாளர்களும் மட்டுமே அடங்கிய சமூகம். அதாவது எந்தச் சமூகத்தை உருவாக்குவதற்காக கம்யூனிஸ்டுகள் ருஷ்ய ஆதரவுடன் 1948 லும், சீன ஆதரவுடன் நக்சலைட்டுகள் 1962 லும் முயன்றார்களோ அதே சமூகம். எந்த சமூகத்தை உருவாக்கும் எண்ணத்துடன் காந்தியை தரகுமுதலாளிகளின் கையாள் என்றார்களோ அதே சமூகம். அந்தச் சமூகம் வெறும் முப்பது வருடங்களில் அரசியல் பொருளியல் தளங்களில் பரிதாபகரமான தோல்வியைத் தழுவியதுமேற்கொண்டு ஒரு அடிகூட முன்வைக்க முடியாத நிலை உருவானது.

அதன் விளைவாக டெங் ஸியாவோ பிங் காந்தி சொன்ன அதே தேசியமுதலாளிகள் என்ற கருத்தை முன்வைத்தார். தனியார் தொழில் தொடங்க ஊக்குவிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு அன்னிய முதலீடுகள் பெற்றுத்தரப்பட்டன. சீனாவில் கம்யூனிசப்படுகொலை அரசு இருந்தபோதே தேசிய முதலாளிகள் இருந்தார்கள், அவர்கள் பிராந்தியக் கம்யூனிச தலைமையின் ஆதரவுடன் மிக ரகசியமாகச் செயல்பட்டார்கள் என்பது அப்போது வெளிப்பட்டது. ஏனென்றால் அவர்கள் இல்லாமல் அந்த பொருளியலமைப்பே செயல்பட முடியாது. அவர்கள் எல்லாம் இன்று மீண்டும் பெருமுதலாளிகள் ஆகிவிட்டார்கள். சீனா அவர்களைச்சார்ந்தே இன்று இயங்கி வருகிறது. பல சீன முதலாளிகள் டாட்டாக்களை விட அம்பானிகளை விட செல்வந்தர்கள்.

இதையொட்டி இன்றைய கேரள, வங்க கம்யூனிஸ்டுகள் தங்கள் ஆட்சிக்குள்ளும் தங்களுக்குச் சாதகமான தேசிய முதலாளிகளை உருவாக்க முயன்றுகொண்டிருக்கிறார்கள். முதலீடுகளுக்காக அழைப்பு விடுக்கிறார்கள். கட்சிக்கு பெரும் நிதியை அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்கிறார்கள். முதலாளிகளைக் கொன்று சாப்பிடுவது என்ற கருத்தெல்லாம் டைனோஸர் போல கல்படிவங்களாக மாறி காலங்கள் தாண்டிவிட்டன. ஆனால் இன்றும் சீன ஆதரவு கம்யூனிசம் பேசும் கும்பல்கள் காந்தியை தரகு முதலாளித்துவ ஆதரவாளர் என்கிறார்கள். சீனாவைச் சுட்டிக்காட்டினால் சீன முதலாளிகள் சீனக் கம்யூனிச அரசுக்கு விசுவாசமானவர்கள் என்கிறார்கள். இது என்ன தர்க்கம் என்றே புரியவில்லை.

காந்தி பேசிய தர்மகர்த்தா முறை பழமைமவாத கம்யூனிச கோட்பாட்டுப்பித்து மனநிலையில் அபத்தமானதாகவே தோன்றும். ஆனால் செல்வம் என்பது ஓர் அளவுக்குமேல் அறக்கொடையாக மாறியே ஆகவேண்டும். முதலில் அது போகங்களாக இருக்கும். பின்னர் அதிகாரமாக ஆகும். அதன் பின்னர் அதற்கு பயனே இல்லை. ஆனால் அது சுழன்றாகவேண்டும். ஆகவேதான் ராக்பெல்லராக இருந்தாலும் சரி, வாரன் பப்பெட்டாக இருந்தாலும் சரி, டாட்டாவாக இருந்தாலும் சரி, அவர்கள் அறச்செயல்களுக்கு வருகிறார்கள். காந்தி அந்த மனநிலையை அவர்களின் நலனுக்காகவும் சேர்த்துத்தான் முன்வைக்கிறார்.

முதலாளிகள் தவிர்க்க முடியாதவர்கள் என்றால், அவர்களுக்கு தர்மகர்த்தா கோட்பாடு தவிர வேறு என்ன வழிமுறையை ஓர் நலம்நாடும் அரசு சொல்லமுடியும்? வேறு சாத்தியங்கள் என்ன? காந்தி சொன்னது அதைத்தான் என்பது ஒரு மாபெரும் நடைமுறை விவேகம் மட்டுமே. காந்தி அவர் நம்பிய தேசிய முதலாளிகளுடன் ஓயாத விவாதத்தில் இருந்தார். அவர்களை தன் அறச்சார்பால் தன்பக்கம் இழுக்க முயன்றார். உருவாகிவரும் இந்திய தேசியத்தின் ஆக்கபூர்வமான பங்களிப்பாளர்களாக அவர்களை ஆக்க முனைந்தார்.

இந்திய சுதந்திரப்போரில் காங்கிரஸ் பேரியக்கத்துக்குத் தேவையான நிதியை காந்தி இந்திய தேசிய முதலாளிகளிடம் இருந்தே பெற்றுக்கொண்டார். தேவைக்காக மட்டும். வெளிப்படையாக. அவற்றுக்கு பைசா பாக்கியில்லாமல் கணக்கு வைத்திருந்தார். அது ஒன்றும் லஞ்சம் அல்ல. அவர்கள் அனைவரையும் லாபவெறி மட்டுமே கொண்ட மிருகங்கள் என உருவகித்துக்கொள்ளும் வெறுப்புவாத மார்க்ஸியமே அப்படிச் சொல்ல முடியும். காந்திக்கு நிதியளித்தவர்களில் பெரும்பாலானவர்களுக்கு காந்தி மீது மதிப்பிருந்தது. பலர் சொந்த வாழ்வில் காந்திய விழுமியங்களை கடைப்பிடித்தவர்கள்.

இன்று சிலர் சொல்வதற்கு மாறாக அவர்களில் பனியாக்கள் ஒருசிலரே. பெரும்பாலானவர்கள் சிந்திகள், மார்வாரிகள், பார்ஸிகள். இந்தியாவின் நிலப்பிரபுக்கள் , மன்னர்கள் போன்றவர்களுடன் ஒப்பிடும்போது அந்த தேசியமுதலாளிகள் முற்போக்கானவர்கள். இந்தியப்பொருளாதாரத்தின் எழுச்சிக்கான அடித்தளத்தை அமைத்தவர்கள் இந்த தேசியமுதலாளிகளே.

அவர்கள் தங்கள் நலனுக்காக காந்திக்கு நிதியளித்தார்கள் என்பதை அக்காலச்சூழலை வைத்துப் பார்க்கும் எவருக்குமே அபத்தம் என்று புரிந்துகொள்ள முடியும். அவர்களின் வணிக நலன்களுக்கு பிரிட்டிஷ் அரசு என்ற முதலாளித்துவ அமைப்பு அல்லது சம்ஸ்தான மன்னர்கள் என்ற நிலப்பிரபுத்துவ அமைப்புதான் வசதியானது. நேரு பேசிக்கொண்டிருந்த சோஷலிசம் அவர்களுக்கு மிக மிக அபாயகரமானது. பஞ்சங்கள் நடந்து வறுமை ஓங்கியிருந்த இந்தியாவில் நேரு உறுதியளித்த வயதுவந்தோர் வாக்குரிமை சார்ந்த ஜனநாயகம் என்பது முதலாளிகளுக்கு முற்றிலும் நம்பமுடியாத ஒன்று. அதைவிட காந்தி பிடிவாதமாக சொல்லிக்கொண்டிருந்த கிராம சுயராஜ்யம் என்பது  அவர்களுக்கு தற்கொலைக்கு நிகரானது.

ஆனால் அதையும் மீறி  அவர்களின் தேசப்பற்றினாலேயே அவர்கள் காங்கிரசுக்கு நிதியளித்தனர். ஜாம்ஷெட்ஜி நவ்ரோஜி டாட்டா , பிர்லா, ஜம்னாலால் பஜாஜ் போன்றவர்களின்  வரலாற்றை எடுத்துப்பார்த்தால் அவர்களின் வணிக ஆர்வத்தையும் தாண்டி அவர்களிடம் அழுத்தமான ஒரு தேசப்பற்று விளங்கியதைக் காண முடிகிறது. அவர்கள் தங்கள் நோக்கில் தேசத்தின் முன்னேற்றத்தை இலக்காக்கினார்கள் என்றும் தெரிகிறது.

மிகக் கறாரான தொனியிலும் பெரும்பாலும் எதிர்மறை மனநிலையிலும் எழுதப்பட்ட கிசுகிசு நூலான எம்.ஓ.மத்தாயின் நேருயுக நினைவுகள் [    [Reminiscences of the Nehru Age M.O.Mathay] நூலில் ஜி.டி.பிர்லாவைப் பற்றி வரும் இடம் இங்கே குறிப்பிடத்தக்கது. காங்கிரஸ் ஆட்சியில் இருக்கும்போது பிர்லா நேருவை பார்க்க வருகிறார். நேருவுடன் அப்போது அவருக்கு நல்ல அறிமுகம் இல்லை. ஆகவே அவர் மத்தாயை வந்து சந்திக்கிறார்.

என்ன சிக்கல் என்றால்  ஜி.டி.தேஷ்முக் தலைமையிலான நிதியமைச்சகம் பிர்லா கடந்த முப்பதுவருடங்களில் பிர்லாவின் வணிக அமைப்புகள் அளித்த நன்கொடைகளுக்கு வரி போட்டிருந்தது. அவற்றில் பெரும்பகுதி சுதந்திரப்போராட்ட காலகட்டத்துக் காங்கிரஸுக்கு அளிக்கப்பட்ட நிதி. அதை எடுத்து சொன்னாலும் அதிகாரிகள் புரிந்துகொள்ள மறுத்தார்கள். அதிகாரிகள் அனைவருமே பிரிட்டிஷ் காலத்து ஐ.ஸி.எஸ் காரர்கள். தேஷ்முக்கேகூட முன்னாள் ஐஸிஎஸ்தான். அவருக்கும் சுதந்திரப்போராட்டத்துக்கும் சம்பந்தமில்லை.

மத்தாய் விஷயத்தை நேருவுக்குக் கொண்டுசெல்வது நல்லதல்ல என்கிறார். ஏனென்றால் நேருவுக்கும் காங்கிரஸின் நிதியாதாரங்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் இருக்கவில்லை. பிர்லா காங்கிரஸுக்கு நிதியளித்தது நேருவுக்கு புதிய செய்தியாகவே இருக்கும். ஆகவே அபுல்கலாம் ஆஸாத்தை தொடர்புகொள்ளும்படிச் சொல்கிறார். ஆஸாதை தொடர்புகொண்டு நிகழ்ந்ததை எடுத்துச் சொல்கிறார் பிர்லா. ஆசாத் அதை நேருவுக்குச் சொல்கிறார். நேரு ஆசாத் சொன்னதனால் அதை நம்புகிறார்.

ஆனால் நேரு சொல்லியும் அதைத் தேஷ்முக் ஏற்றுக்கொள்ளவில்லை. டாட்டா காங்கிரஸுக்கு அளித்த நிதியுதவிக்கும் வரிகட்டியாகவேண்டும் என்கிறார். அக்காலத்தைய ஜனநாயக மரபின்படி ஓர் அமைச்சகத்தில் இன்னொரு அமைச்சகம் தலையிட முடியாது, பிரதமர்கூட! ஆகவே நேரு அவரே தேஷ்முக்கை சென்று கண்டு விஷயங்களை விளக்குகிறார். பிர்லா அந்த பெரும் நன்கொடைகளை அளித்த காலகட்டத்தில் காங்கிரஸுக்கு நன்கொடை அளிப்பது தற்கொலைக்கு நிகரானதாக கருதப்பட்டது, அந்த நன்கொடைகளுக்கு பிரதிபலனாக எதையுமே பிர்லா அப்போதும் இப்போதும் எதிர்பார்க்கவும் இல்லை என்கிறார். மெல்ல தேஷ்முக் சம்மதிக்கிறார்.

அப்போது பிர்லா மத்தாயிடம் பேசும்போது காந்தியின் தர்ம கர்த்தா கோட்பாடு எப்படி தன்னை கவர்ந்தது என்றும் ஆகவே தன் சொத்துக்களில் பெரும்பகுதியை கல்விசார்ந்த அறநிலைகளாக மாற்றிக்கொண்டிருப்பதையும் பற்றிச் சொல்கிறார். காந்திமேல் பெரிய மரியாதை ஏதும் இல்லாத மத்தாய்  அதை ஆச்சரியத்துடன் பதிவுசெய்கிறார்.

நாட்டுக்குக் கிடைத்த சுதந்திரமே பிர்லா டாட்டாவின் காலடிகளில் கொண்டுசென்று சமர்ப்பிக்கப்பட்டது என்று நமக்கு

இடதுசாரிகளால் சொல்லப்பட்டிருக்கிறது. அதைச் சொன்னவர்கள் இன்று அதே டாட்டாக்களையும் பிர்லாக்களாயும் தங்கள் ஆட்சிசெய்யும் மாநிலங்களுக்கு வந்து முதலீடு செய்து உதவும்படி கோரிக்கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையுடன் இணைத்தே நாம் அதை சிந்திக்க வேண்டும்.

எந்த ஓர் அரசியலியக்கமும் அதைச்சார்ந்த முதலாளிகளின் பங்குடனேயே வேரூன்றியிருக்கிறது. தேசிய முதலாளிகளின் பண்பாட்டு, அரசியல் பங்களிப்பை தவிர்த்து ஒரு வரலாற்றை எவருமே எழுதிவிட முடியாது. அண்ணாமலைச் செட்டியார், அழகப்பா செட்டியார், பச்சையப்ப முதலியார் போன்றவர்களின் பங்களிப்பை எழுதாமல் இருபதாம் நூற்றாண்டின் தமிழர் வரலாற்றை எவர் எழுத முடியும்? அவர்களின் நிதி பெறாத பண்பாட்டு, அரசியல் இயக்கம் என ஏதேனும் தமிழ்நாட்டில் உண்டா என்ன? அவர்களை இயக்கியது காந்தி சொன்ன அதே தர்மகர்த்தா கோட்பாடுதான்.

ஏன் கேரளத்திலேயே முக்கியமான ஈழவத் தொழில்முனைவோரின் நிதியுதவியுடன்தான் கம்யூனிஸ்டுக் கட்சி வேரூன்றியது. அவர்கள் தங்கள் நலனுக்காக அவற்றை ஆதரித்தார்கள் என்றோ அல்லது அவ்வியக்கங்கள் அவர்களின் நலனுக்காக அவர்களால் உருவாக்கப்பட்ட டம்மி இயக்கங்கள் என்று சொல்லிவிட முடியுமா என்ன?

நேரு உருவாக்கிய சோஷலிச- அரசுமைய பொருளியல் அமைப்பு இந்தியாவின் தேசிய முதலாளிகளுக்கு முற்றிலும் எதிர்மறையானது என்பதை பொருளாதார அறிமுகம் உடைய எவருமே உணரலாம். அவரது லைசன்ஸ் ராஜை மீறியே அவர்கள் வளர்ந்தார்கள், பல அழியவும் நேரிட்டது, சிறந்த உதாரணம் நுஸ்லி வாடியா. நேரு பாணி கலப்புப்பொருளாதாரம் கைவிடப்பட்டு தாராளவாதப் பொருளாதாரம் நரசிம்மராவ் காலகட்டத்தில் புகுத்தப்பட்டதுமே இந்தியாவில் இருந்த தேசிய முதலாளிகள் பெரும்பாலும் அனைவருமே அசுரவளர்ச்சி கண்டார்கள் என்பதும் வரலாறே.

காந்தி நடத்திய சுதந்திரப்போராட்டம் மூலம் இந்தியாவுக்கு கிடைத்தது நேருவின் ஆட்சி. நேருவின் மூலம் இந்தியாவுக்குக் கிடைத்தது ஜனநாயகப்பண்புள்ள தாராளவாத அரசியல். மையப்படுத்தப்பட்ட நிர்வாக முறை. கட்டுப்படுத்தப்பட்ட தொழில்துறை மற்றும் அரசு திட்டமிடல் கொண்ட பொருளாதாரம். அதில் இந்திய பெரும் லாபங்களை அடைந்திருக்கிறது. இன்றும் இந்தியாவின் பொருளாதார முதுகெலும்பாக இருக்கும் பொதுத்துறை அரசுசார் மையப்பொருளாதாரத்தால் உருவானதே. இந்திய வேளாண்மையை மேம்படுத்தி உணவுப்பஞ்சத்தைத் தீர்த்த அணைக்கட்டுகள் அவ்வாறு உருவானவையே. இந்தியாவின் பொதுச்சேவைத்துறைகள் அவ்வாறு வேரூன்றியவையே. மையத்திட்டமும் அரசு முதலீடும் இல்லையேல் பஞ்சத்தால் காலியான பொருளாதாரம் கொண்ட சுதந்திர இந்தியா அதன் தொழில்துறைக்கான அடிப்படைக் கட்டுமானங்களை உருவாக்கியிருக்க முடியாது.

அதேசமயம் அவற்றுக்கான இழப்புகளும் உள்ளன. திட்டமிடல் அடித்தளம் வரைக்கும் செல்லவில்லை என்பது முதல்சிக்கல். முதலீட்டைவிட வழிநடத்தலை விட நிர்வாகம் அதிக அதிகாரம் கொண்டதாக ஆகியது. அதன் மூலம் ஊழல் பெருகியது. தொழில்மயமாக்கல் மூலம் சூழலழிகள் பெருகின. இவ்வாறு பலவற்றைச் சுட்டலாம். ஆனால் நேரு அளித்தது ஒரு அவர் கனவுகண்ட தேசிய கட்டுமானம், அதை மக்கள் தங்கள் விருப்பப்படி மாற்றுவதற்கான ஜனநாயக அடித்தளம். அந்த அடித்தளத்தின் மீது வசதியாக நின்றபடித்தான் அதை இழிவுசெய்கிறார்கள் இடதுசாரிகள்.

**பண்பாட்டு மறுப்புத் தேசியமா?**

சுதந்திரப்போராட்டம் நடந்துகொண்டிருந்த காலத்திலேயே இந்துமகாசபையும் அதன்பின்னர் ராஷ்டிரீய சுயம்சேவக் சங்கமும் காந்தி முன்வைத்த தேசிய உருவகம் மீது வைத்த முக்கியமான குற்றச்சாட்டு அது இந்தியப் பண்பாட்டை முழுமையாக விலக்கி மேலைநாட்டு தாராளவாத தேசியத்தை நகல் செய்து உருவாக்கப்பட்ட ஒரு தேசியம் என்பதுதான். இந்தியப்பண்பாட்டுத்தேசியம் என்பது இந்துப்பண்பாடு என்றும் அப்பண்பாட்டை முஸ்லீம்களை மகிழ்விப்பதற்காக காந்தியும் நேருவும் தங்கள் தேசகற்பிதத்தில் இருந்து அகற்றினார்கள் என்றும் குற்றம்சாட்டப்பட்டது. தேசப்பிரிவினையின் உணர்ச்சிக்கொந்தளிப்பான நாட்களில் இந்தக் குற்றச்சாட்டு பல லட்சம்பேரை காந்திக்கு எதிரான மனநிலைக்குத் திருப்பியது. அவர் கொலையுறவும் காரணமாக அமைந்தது.

அதன்பின்னர் கிட்டத்தட்ட ஐம்பதாண்டுக்காலம் இந்தக்குற்றச்சாட்டு மீண்டும் மீண்டும் முன்வைக்கப்பட்டு வந்தது. காந்தி உருவாக்கியது இந்தியப்பண்பாட்டை மறுக்கும் போலித்தேசியம் என்று நம்பும் இந்துத்துவ இயக்கத்தினர் 'விறுவிறுப்பான' 'உண்மையான' 'செயலூக்கம் கொண்ட' தேசியத்துக்கான ஒரு போராட்டமே தாங்கள் நடத்துவது என்கிறார்கள். இந்த நோக்கை கீழ்த்தளத்தில் வெறும் பூசல்தன்மையுடன் முன்வைக்கும் நூலே ராதா ராஜன் எழுதியது.

இந்திய தேசியத்தின் வேர்கள் இந்தியாவின் பண்பாட்டுப் பாரம்பரியத்தில் உள்ளன என்பது உண்மை. ஆனால் அது இவர்கள் கூறும் இந்து தேசியம் என்பது ஏற்கனவே சொல்வதுபோல ஐந்து புனிதப்பிரமைகளின் விளைவாக உருவானதே. இந்தியாவின் பண்பாட்டுப் பாரம்பரியம் என்பது சமண, பௌத்த மதங்களின் பெரும்பங்களிப்பு கொண்டதே. அனைத்தையும் தழுவிக்கொள்ளும் இணைப்புத்தன்மையே அதன் சாராம்சமான குணம். காந்தியின் பண்பாட்டு மூலம் என்பது சமணமும் பௌத்தமும் உருவாக்கிய அந்த இணைக்கும் தன்மை, சமரசத்தன்மைதான்.

மேலும் ஒரு தேசிய உருவகத்தின் காரணம் இறந்தகாலத்தில் இருக்கலாம். ஆனால் அதன் கனவு எதிர்காலத்திலேயே இருக்க முடியும். இன்றைய இந்தியாவை திருப்பி இறந்தகாலத்துக்குக் கொண்டுசெல்ல முடியாது. அதற்காக வரலாறு இந்நிலத்தில் உருவாக்கிய இன்றைய சூழலை ரத்தம் கசிய வெட்டித்திருத்துவதும் சாத்தியமல்ல. காந்தி தன்னுடைய தேசியமாக முன்வைத்தது அவரது இலட்சியக்கனவான ஓர் எதிர்காலத்திட்டத்தை. அதை அடைவதற்கு இந்திய நிலப்பகுதியில் வாழும் மக்கள் அனைவரும் தங்கள் பேதங்களை தாண்டி ஒருங்கிணையும் ஒரு அரசியல்வெளியை உருவாக்க அவர் முயன்றார். அதுவே இந்திய தேசியப் போராட்டத்தில் அவரது பங்களிப்பு.

இந்திய சமூகத்தை பேதப்படுத்தும் எந்த ஒரு கருத்தியலுக்கும் சமரசமில்லாத எதிர்த்தரப்பாகவே காந்தி இருந்தார். அவரது

பண்பாட்டு வேர் என்பது பிரிவினைக்கான அடையாளங்களில் இல்லை சமரசத்துக்கான மனநிலைகளில் இருந்தது. அவரது இந்தியா இறந்தகாலத்துக்கு திரும்பிப்போகும் முயற்சி அல்ல. பாரம்பரியத்தில் இருந்து வேர்கொண்டு எதிர்காலத்துக்காக தன்னை வளர்த்துக்கொள்ளும் ஓர் இலட்சியவாதம் அது.

**காந்தியின் தேசம் நோக்கிய**

இன்றைய இந்தியாவை காந்திய தேசியம் என்று சொல்பவர்கள் காந்தியை உணராதவர்களே. இன்றைய இந்தியாவில் அர்ப்பணிப்புள்ள எல்லா காந்தியர்களும் ஏதேனும் ஒருவகையில் இந்திய அரசையும் இந்திய சமூக அமைப்பையும் எதிர்த்துப் போராடுபவர்களாகவே இருக்கிறார்கள் என்ற உண்மை நம் கண்முன் இருக்கிறது. சமாதானமே அடையாத போராளிகளாக, கடைசிக்கணம் வரை ஓயாத கிளர்ச்சியாளர்களாக மட்டுமே அவர்கள் இருந்திருக்கிறார்கள், இருக்கிறார்கள். பாபா ஆம்தே, அண்ணா ஹசாரே, சுந்தர்லால் பகுகுணா, ஜகன்னாதன்-கிருஷ்ணம்மாள், சிவராம் காரந்த், மேதா பட்கர், வந்தனா சிவா என அந்தப்பட்டியலை நீட்டலாம். காந்திய தேசியம் என்பது இன்றிருக்கும் ஓர் அமைப்பு அல்ல அது ஒரு இலட்சியக்கனவு என்பதற்கான ஆதாரம் அதுவே.

காந்தி இந்தியாவுக்கு அளித்தது ஒரு தேசியக் கனவை. கூடவே அக்கனவைச் சாத்தியமாக்குவதற்கான ஒரு வாய்ப்பை. நம் கையில் கிடைத்தது அந்த வாய்ப்பும் கனவும்தான். நாம் நமது பேராசையால், நுகர்வுவெறியால், சாதிமத இன மொழி சார்ந்த பிளவுப்போக்கால், அரசியல் அதிகார வெறியால், அன்றாடச் சமரசங்களால் அதை இழந்துவிட்டு காந்தியைக் குறைகூறுகிறோம். தனது தோல்விக்கெல்லாம் தந்தைதான் காரணம் என்று சொல்லும் உதவாக்கரைப்பிள்ளைகளை நாம் தெருத்தெருவாகக் கண்டுகொண்டிருக்கிறோம் அல்லவா?

*[முழுமை]*



**காந்தியின் துரோகம்**

அன்புள்ள ஜெ

இந்திய அரசியலில் காந்தி செய்த முன்று துரோகங்கள் என்று சொல்லப்படுகின்றவை உங்கள் கவனத்துக்கு வந்திருக்கின்றனவா? 1. அவர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸை நியாயமற்ற முறையில் கட்சித் தேர்தலில் தோற்கடித்தார் 2. அவர் பகத் சிங் தூக்கிலேற்றப்பட்ட போது அதை ஆதரித்தார் 3. தலித்துக்களுக்கு இரட்டை வாக்குரிமையை ஆங்கில அரசு கொண்டுவந்தபோது அதை உண்ணாவிரதம் இருந்து தோற்கடித்தார்.

**இந்தக்காரணத்துக்காகவே அவர் இன்று துரோகி என்று சொல்லப்படுகிறார். இதைப்பற்றி உங்கள் கருத்து என்ன?**

'செம்மணி' அருணாச்சலம்

அன்புள்ள அருணாச்சலம்,

பொதுவாக நம்முடைய பொது அரட்டைகளில், ஆழ்ந்த வாசிப்போ வரலாற்றுப்புரிதலோ இல்லாத மேடைப்பேச்சாளர்களிடம் இருந்து பெற்றுக்கொண்டு முன்வைக்கப்படும் திரிபுகளும் அவதூறுகளும்தான் இவை.

பல லட்சம் பேரைக் கொலைசெய்த ஸ்டாலினைப்பற்றி அல்லது மாவோவைபற்றிப் பேசும் போது அவர்களின் தவறுகளை வைத்து அவர்களை மதிப்பிடக்கூடாது என்று சொல்பவர்கள்தான் காந்திமேல் இந்த 'மாபெரும்' தவறுகளைக் கண்டுபிடித்து அவரை மனிதர்களில் கடையர் என்று சொல்லவருகிறார்கள். இவ்வளவுதான் காந்தியில் அவரது மோசமான எதிரிகள் கூட கண்டுபிடிக்கக்கூடிய பிழைகள் என்றால் இதுவே காந்தியின் மேன்மைக்கான சான்றாகும்.

ஒன்று: சுபாஷ் சந்திர போஸ் காந்தியின் கொள்கைகளுக்கு முற்றிலும் எதிரானவர். அப்படி தன்னை அடையாளம் காட்டிக்கொண்டவர். பின்னாளில் சுபாஷ் எப்பரடி உருவானார் என்று பார்க்குபோது அவரை வரலாற்றுணர்வும் நிதானமும் இல்லாத கற்பனாவாதி என காந்தி மிகச்சரியாகவே புரிந்துகொண்டிருக்கிறார் என்று தெரியவருகிறது. சுபாஷை காந்தி காங்கிரஸ் தலைவராக ஆக அனுமதித்திருந்தால் காங்கிரஸை அவர் வன்முறைப்பாதைக்கு இட்டுச்சென்றிருப்பார். இந்திய மண்ணுக்குள் ஜப்பானியரை கொண்டு வந்திருப்பார். இங்கே உலகப்போர் நிகழ வைத்திருப்பார். தன் முதிராத வரலாற்றுப்பார்வையின் விலையாக கோடி மனித உயிர்களை பலிகொடுத்திருப்பார்.

ஆகவே தெள்ளத்தெளிவாக கண்முன் தெரியும் ஓர் அபாயத்தைத் தவிர்க்க தன் அனைத்து சக்திகளையும் காந்தி பயன்படுத்தியது மிக இயல்பானது. அதை அவர் செய்யாமல் விட்டிருந்தால்தான் அது மாபெரும் வரலாற்றுப்பிழை. சுபாஷ் துடிப்பான இளம்தலைவராக இருந்தார். அந்த வசீகரமே அவரது வெற்றிக்கான முதல்காரணம். அதற்கு எதிராக காந்தி தன்னுடைய வசீகரத்தை பயன்படுத்தினார்.

அதைவிட மேலான இன்னொரு காரணம் உண்டு. அன்றைய காங்கிரசில் வங்கத்துக்கு இருந்த அதிகப்படியான பங்கு. வங்க பிராந்திய உணர்வை சுபாஷ் தன் தேர்தலில் அப்பட்டமாகவே பயன்படுத்திக்கொண்டார். அதற்கு எதிராக காந்திசெய்யக்கூடுவதாக இருந்தது ஒன்றே. தென்னிந்தியப் பங்களிப்பை திரட்டுவது. பட்டாபி சீதாராமையா வழியாக அதை செய்யமுயன்றார் அவர்.

சுபாஷ் வென்றபின் காந்தி காங்கிரசில் நீடிப்பது சரியல்ல. சுபாஷை தேர்வுசெய்தது காங்கிரஸ் பொதுக்குழு. ஆனால் காங்கிரசின் உண்மையான பலம் என்பது காந்திக்கு மக்கள் மேல் இருந்த செல்வாக்கு. பொதுக்குழுவின் தேர்வை மதித்து காந்தி சுபாஷ் தலைமையிலான காங்கிரஸில் நீடித்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? காந்தியின் அகிம்சைநோக்கை நம்பி காங்கிரசுக்கு வந்த மக்களை அவர் சுபாஷின் வன்முறை நோக்குக்கு கையளிக்க வேண்டியிருக்கும். அதை அவர் செய்திருக்க வேண்டுமா என்ன?

ஆகவே அவர் தான் விலகிவிடுவதாகச் சொன்னார். அவர் விலகினால் காங்கிரஸே இல்லை. ஆகவே பொதுக்குழு பணிந்தது. காந்தி வேண்டும் காந்தியம் வேண்டாம் என்ற காங்கிரஸ் பொதுக்குழுவின் நிலைபாட்டை காந்தி ஏற்காமலிருந்ததே நியாயமானது.

பின்னர் காந்தி ஹரிஜன இயக்கம் ஆரம்பித்தபோதும் உயர்சாதிப்பித்து கொண்டிருந்த பெரும்பாலான பொதுக்குழு உறுப்பினர்கள் புருஷோத்தம்தாஸ் டாண்டன், கோவிந்த வல்லப பந்த் ஆகியோர் தலைமையில் எதிர் நிலையை எடுத்தார்கள். காங்கிரசுக்கு காந்தி வேண்டுமென்றால் காந்தியமும் வேண்டும் என்ற நிலைபாட்டையே காந்தி எடுத்தார். அவர்களை பணியவைத்தார். இறுதியில் அதே காங்கிரஸ் இட ஒதுக்கீடுவரை வந்ததற்கு அவரே காரணம். அதுவே அவரது அரசியல். அதில் என்ன பிழை இருக்கிறது?

பகத் சிங்கை தூக்கிலேற்ற காந்தி ஆதரவளித்தார் என்பது காந்திய அவதூறு செய்ய ஐமபதுகளில் கம்யூனிஸ்டுக்கட்சி தடைசெய்யபட்ட காலத்தில் எஸ்.ஆர்.டாங்கே என்ற நேர்மையற்ற இடதுசாரித் தொழிற்சங்கவாதி கிளப்பிவிட்ட பொய். இந்த ஆசாமி நெருக்கடி நிலை காலத்தில் இந்திரா அரசுடன் சேர்ந்து அடித்த சுயநலக் கூத்துக்கள் வரலாறு. அந்த அவதூறு

மிகத்தெளிவாக தவறென நிரூபிக்கப்பட்டுள்ளது. தமிழில் அ.மார்க்ஸ் போன்ற காந்திய எதிர்ப்பாளர்களே இதை விரிவாக பதிவுசெய்திருக்கிறார்கள். தீராநதி 2008 இதழ்களைப் படியுங்கள்.

காந்தி பகத்சிங்கின் வன்முறை சார்ந்த வழிகளை ஏற்றவரல்ல. வெள்ளையரைக் கொல்லுதல் அவர் நோக்கில் மாபெரும் பாவம். அவரைப்பொறுத்தவரை வெள்ளையர் ஓர் அரசியல் ஆட்டத்தில் மறுதரப்பில் இருப்பவர்கள்தான். அவர்களையும் அவர் நேசித்தார். அவர்களில் உள்ள ஏழை மக்களையும் தன்னவராகவே கண்டார். ஆகவே அவர்களுக்கும் அவர் தங்களவராக இருந்தார்.

இங்கிலாந்துக்கு வட்டமேஜை மாநாட்டுக்குச் சென்ற காந்தியை துணிதுவைக்கும் மக்கள் தங்கள் தலைவராக தங்கள் குப்பத்துக்குக் கூட்டிச்சென்றுதங்க வைத்தது அதனால்தான். வெள்ளையருடன் எந்நிலையிலும் பேச காந்தி தயாராக இருந்தார். பகத்சிங் செய்த கோலைகளை நியாயப்படுத்தியபின் அவர் எப்படி உலக மனசாட்சியுடன் பேச முடியும்? எப்படி வெள்ளையனின் அறவுணர்வை நோக்கி பேச முடியும்? அதன்பின் சத்யாக்ரகத்துக்கு என்ன மதிப்பு?

ஆகவே பகத்சிங்கை அவர் முழுக்க நிராகரித்ததே இயல்பானது. வரலாற்றுணர்வும் சமநிலையும் இல்லாத கற்பனாவாதப் புரட்சியாளராகவே பகத் சிங்கை அவரது கடிதங்கள் காட்டுகின்றன. அவர் தூக்கிலேற்றப்படவிருக்கையில் தேசமே உணர்ச்சிக்கொந்தளிப்புடன் அவருக்கு சார்பாக நின்றது. அவர் செய்ததை காங்கிரசிலேயே முக்கால்வாசிப்பேர் நியாயப்படுத்தினார்கள். அது பொதுமக்களின் மனநிலை. வீர வழிபாடும் தியாக வழிபாடும் நம் மக்களின் மனதில் ஊறியவை. காரணம் நாம் பல நூற்றாண்டுகளாக போரிடும் சமூகமாக இருந்திருக்கிறோம். அதற்கான மனநிலைகளும் படிமங்களும் விழுமியங்களும் நம் பண்பாட்டில் ஊறியிருக்கின்றன

அந்த அலையைக் கணித்துக்கொண்டு தன் கொள்கையை மறந்து பகத்சிங்கை நியாயப்படுத்தினாரென்றால்தான் காந்தி அயோக்கியர். அல்லது பகத்சிங்கை நிராகரித்துவிட்டு தன் சொந்த மகன் அதைச்செய்திருந்தால் அதை நியாயப்படுத்தியிருந்தால் அது சுயநலம். எது காந்தியமோ அதுவே காந்தி. அதில் அவர் சமரசம்செய்துகொள்ளவே இல்லை. இந்தியாவே காந்தியத்தை ஒடுமொத்தமாக நிராகரித்திருந்தாலும் அவர் தன் நோக்கில் தெளிவாகவே இருந்திருப்பார்.

ஆனால் அவர் பகத்சிங் மற்றும் தோழர்களின் விடுதலைக்காக தனிப்பட்டமுறையில் தன்னால் முடிந்ததை எல்லாம் செய்தார். வழிதவறிய மைந்தர்கள் அவர்கள் என்று பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடம் மன்றாடினார். அனைத்துக்கும் இன்று திடவட்டமான கடித ஆதாரங்கள்னாஅவணகாப்பகங்களில் உள்ளன. பகத்சிங், படுகேஷ்வர் தத் தவிர பிற புரட்சியாளர்கள் உயிர் பிழைத்தமைக்கு ஆங்கில ஆட்சியாளர்கள் காந்திமேல் கொண்டிருந்த மதிப்பும் காந்தி அவர்களால் புறக்கணிக்கப்பட முடியாத இடத்தில் இருந்தார் என்பதுமே காரணம்.

தலித் பிரச்சினையில் காந்தியின் கொள்கை வெளிப்படையானது, திட்டவட்டமானது. தலித்துக்கள் தங்கள் சமூக இழிவிலிருந்து கல்வி, தொழில் மூலம் மேலே வருவது ஒரு பக்கம். அவர்களைப்பற்றிய உயர்சாதியினரின் கண்ணோட்டத்தை மாற்றியமைப்பதும், அவர்களிடம் குற்றவுணர்வை உருவாக்குவதும் இன்னொரு பக்கம். தலித்துக்களை பிறருக்கு எதிராக நிறுத்தும் ஒரு போராட்டம் இந்திய சமூகத்தைப் பிளவுபடுத்தும் என்றும் ஒட்டுமொத்தமாக தலித்துக்களுக்கு எதிரான உணர்வுகளையே உருவாக்கும் என்றும் காந்தி உறுதியாக நினைத்தார்.

இதையே காந்தி இஸ்லாமியர் விஷயத்திலும் எண்ணினார். காந்தியின் அணுகுமுறை என்பது இந்திய சமூகத்தை முழுக்க அரசியலுக்குக் கொண்டுவருவதும், அவர்களுக்கு இடையே உள்ள வரலாற்று முரண்பாடுகளை மெல்லமெல்ல சமரசப்படுத்துவதும்தான் என்று நாம் காணலாம். எல்லா சமூக உறுப்புகளையும் ஒன்றுடன் ஒன்று உரையாட வைக்கவே அவர் முயன்றார்.

கிட்டத்தட்ட 200 வருடம் இந்தியாவை ஆண்ட பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் தலித்துக்களுக்காக எதையுமே செய்யவில்லை என்பது வரலாறு. அவர்களின் காந்தி தலித் குழந்தைகளுடன்
ஜமீந்தார்களின் கீழேதான் தலித்துக்கள் வரலாற்றிலேயே ஆகப்பெரிய கொடுமைகளை அனுபவித்தார்கள். அப்படிப்பட்ட பிரிட்டிஷ் அரசு திடீரென
சுபாஷ்சந்திர போஸுடன்
இரட்டை வாக்குரிமையை கொண்டு வருவதென்பது அப்பட்டமான பிரித்தாளும் சூழ்ச்சி என்பதை அறிய ராஜதந்திரம் ஏதும் தேவையில்லை.

அந்த இரட்டை வாக்குரிமை அப்போது ஏற்கப்பட்டிருந்தால் என்ன நடந்திருக்கும்? தலித்துக்களில் ஒருசாரார் பிரிட்டிஷ் தாசர்களாக சில்லறை அதிகாரத்தை அடைந்திருப்பார்கள். இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைக்கும் வரை இருபது வருடம் அந்த சலுகை நீடித்திருக்கும். ஆனால் அதன் விளைவாக தலித் சமூகமே பொது ஓட்டத்தில் இருந்து முற்றிலும் அன்ன்னியமாகிவிட்டிருக்கும். சுதந்திரத்துக்குப்பின் அம்பேத்கர் காங்கிரஸ் ஆதரவுடன் சட்ட அமைச்சராக ஆகி இட ஒதுக்கீட்டை 90 சதவீதம் உயர்சாதியரால் ஆன காங்கிரஸ் ஆதரவுடன் அரசியல் சட்டத்திலேயே இடம்பெறச்ச்திருக்க முடியுமா என்ன?

தன் வாழ்நாளின் இறுதியிலேனும் அம்பேத்கார் காந்தி இரட்டை வாக்குரிமைக்கு எதிராக இருந்தது எத்தனை நன்மை பயத்தது என அந்தரங்கமாக உணர்ந்திருப்பார் என்றே நினைக்கிறேன். தலித்துக்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடவேண்டும். ஆனால் ஒட்டுமொத்த இந்திய சமூகத்தில் இருந்து அன்னியப்பட்டு அவர்கள் எதை அடைய முடியும்?

காந்தி உண்ணாவிரதம் இருந்து அக்கோரிக்கையை முறியடித்தார். ஆமாம், அவர் முற்றிலும் தவறென நம்பிய ஒரு கோரிக்கையை முறியடிக்க தன் உயிரை பணயம் வைத்தார். அதுவே இயல்பான காந்திய வழி. தலித்துக்களுக்கு எதிராக பிறசாதியினரை அவர் தூண்டிவிட்டிருக்க வேண்டும் என்கிறார்களா இவர்கள்? அது மிக எளிய விஷயம். அம்பேத்கார்

அடங்கிப்போனதற்குக் காரணம் காந்தியின் மீது அவர் கொண்டிருந்த பெருமதிப்பு மட்டும் அல்ல. இன்றுபோலவே அன்றும் இந்திய தலித்துக்களில் பெரும்பான்மையினர் காந்தியையே தலைவராக எண்ணினார்கள். ஏனென்றால் வரலாற்றில் முதல்முறையாக அவர்களின் பிரச்சினையைக் கேட்ட, அவர்களை அரசியலுக்குக் கொண்டுவந்த, அவர்களின் நலன்களை பிறர் கவனிக்கச் செய்த அமைப்பு காந்தியின் காங்கிரசே.

தன் கருத்துக்களுக்கு எதிரான அனைவரையுமே கொன்றே ஒழித்த ஸ்டாலினையும் மாவோவையும் பிறரையும் தலைவர்களாகக் கொண்டாடுகிறவர்கள் தன் கொள்கைக்காக உண்ணாவிரதமிருந்து சாகத்துணிந்த காந்தியை சர்வாதிகாரி என்கிறார்கள். தான் எதிர்க்கும் ஒருவர் மேல் இம்மி கூட வெறுப்பை உமிழாமல் தன் தார்மீக வல்லமையை மட்டுமே ஆயுதமாகப் பயன்படுத்தியவரை துரோகி என்கிறார்கள்.

உண்மை என்பதுதான் எத்தனை தனியது ! எவ்வளவு வேட்டையாடபடுவது ! எத்தனை வெறுக்கப்படுவது ! இருந்தும் அது எப்படியோ வெற்றிபெற்று வருவதன் மாயம்தான் என்ன? வரலாறெங்கும் நிரம்பியிருக்கும் எளிய மக்கள் உண்மையை தங்கள் ஆத்மாவால் எப்படியோ அடையாளம் காண்கிறார்கள் என்பதுதானா?

ஜெ